

2

தமிழ் வழிக் கல்வி

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்

தமிழ் வழிக்கல்வி

[இரண்டாம் பகுதி]

முனைவர்

மு. தமிழ்க்குடிமகன், எம்.ஏ., பிஎச்.டி.,

(தமிழ் ஆட்சிமொழி - தமிழ்ப் பண்பாட்டுத் துறை

மேனாள் அமைச்சர்)

பாவாணர் ஏடகம்

புதுஎண்-142சி, பழையஎண்-56,

மேடவாக்கம் முதன்மைச் சாலை, சுரேந்தர் நகர்,

சென்னை - 600 088

நூற் குறிப்பு

நூற் பெயர்	**தமிழ் வழிக் கல்வி** [இரண்டாம் பகுதி]
ஆசிரியர்	முனைவர் மு. தமிழ்க்குடிமகன்
அட்டை வடிவமைப்பு	ஆர்.டி. வினோத் குமார்
பதிப்பாண்டு	2007 திருவள்ளுவர் ஆண்டு, 2038
மொழி	தமிழ்
பக்கங்கள்	iv+324 =328
நூல் அளவு	தெம்மி
தாளின் தன்மை	வெள்ளைத்தாள்
பொருள்	பயிற்று மொழி வரலாற்று ஆய்வு
அச்சு எழுத்து	11 புள்ளிகள்
படிகள்	1000
விலை	உரூபா.125.00
கணிப்பொறி அச்சு	தேவ் டிசைனிங்க் & பிரிண்டிங்க் வேளச்சேரி, சென்னை - 600 042 பேசி : 22591924
அச்சிட்டோர்	மாசறு திருவல்லிக்கேணி சென்னை - 600 005

நூல் கிடைக்குமிடம் :

புதிய கதவு எண்.26, குறுக்குத்தெரு,
சோசப் குடியிருப்பு, ஆதம்பாக்கம்,
சென்னை - 600 088-பேசி:22530954

பதிப்புரை

தமிழுலகம் போற்றி வரவேற்கின்ற மதிப்பு மிக்க அறிஞர்களில் தமிழ்க்குடிமகனார் முதல்வரிசையைச் சேர்ந்தவர். 'சாத்தையா' தமிழாக மாறித் தமிழருக்குச் செய்த பணிகள் அளவற்றவை. அதற்கு அடையாளங்கள் பல. அவற்றுள் இன்று வெளிவரும் **தமிழ்வழிக்கல்வி** என்னும் இந்நூலின் மூன்று பகுதிகளும் என்றும் நின்று நிலவும் சான்றாகும். **இது இரண்டாம் பகுதி.**

மேடைகளிலே அவருடைய கம்பீர முழக்கம், ஏடுகளில் அவர் எடுத்து வைத்த அசைக்க முடியாத வாதங்கள், தகர்க்க முடியாத சான்றுகள், எவரும் தடைப்படுத்த இயலாத தடந்தோள்கள், தமிழுக்கு வருகின்ற தடைக்கற்களைத் தூக்கி எறிவதில் தளராத வீரம், தறுகண்மை என்ற சொல்லுக்கே பொருளாக விளங்கிய பெருமிதம், அத்தனைக்கும் மேலாகத் தமிழ்நாட்டில் தலைநிமிர்ந்து உலவுகின்ற தமிழாக வாழ்ந்த நிகழ்ச்சிகள், ஈழத்திற்கு ஆதரவாக அவர் எழுப்பிய இடிமுழக்கம், திரட்டிக்காட்டிய வீர அணிவகுப்பு. . . இன்னும் இன்னும் சொல்லிக்கொண்டே போகலாம். அத்தனையும் மறக்கவே முடியாதவை. நினைத்தால் நெஞ்சம் நெகிழும். அந்த மாமனிதரை எண்ணி உள்ளம் உருகும்.

ஆறாவது உலகத் தமிழ் மாநாடு மலேசிய மண்ணில் நடந்தபோது அன்றைய அரசு தமிழகத்திலிருந்து தமிழறிஞர்கள் போகக்கூடாது என்று தடை விதித்திருந்தது. அந்தத் தடையை மீறிச் சென்றவர் தமிழ்க்குடிமகனார். அவரோடு சென்றவருள் **என் தந்தையார் முத்தமிழ்க் கவிஞர் முனைவர் ஆலந்தூர் கோ. மோகனரங்கன் அவர்களும் ஒருவர்.**

அந்த மாநாட்டிலே அவர் தலைமையிலே கவியரங்கம். ''அன்று அவருடைய முழக்கம் இன்னொரு பாரதிதாசனை நினைவூட்டியது'' என்று அந்தக் கவியரங்கில் அவர் தலைமையில் கவிதை பாடிய என் தந்தையார் அடிக்கடி சொல்லி மகிழ்வார்.

என் தந்தையாரின் கவிதைகளில் மிகுந்த ஈடுபாடுகொண்ட அவர் தம்முடைய முனைவர்பட்ட ஆய்வேடான **பத்தாண்டுத் தமிழ்க்**

கவிதைகள் என்னும் ஆய்வு நூலில் என் தந்தையாரின் கவிதைச் சிறப்பினைப் பதினான்கு பக்கங்களில் எடுத்துக்காட்டியிருந்தார். அவர் மதுரையில் யாதவர் கல்லூரி முதல்வராக இருந்தபோது கல்லூரியின் தமிழ் இலக்கிய மன்ற நிகழ்ச்சிக்கு என் தந்தையாரை அழைத்துப் பாராட்டினார். தம் மாணவரை என் தந்தையாரின் கவிதைகளைப் பற்றி எம்.ஃபில் பட்டத்திற்காக ஆய்வு செய்ய வழிகாட்டினார். அவரால் வளர்ந்த மாணவர்கள் எண்ணற்றவர்

மலேசியாவில் நடைபெற்ற மாநாட்டின் போது, அவரும் என் தந்தையாரும் ஒரே அறையில் தங்கியிருந்தனர். அப்போது பினாங்கில் நடைபெறும் கூட்டத்திற்கு அழைப்பு வந்தமையால் உடனே செல்ல வேண்டியவரானார். அந்த நேரத்தில் என் தந்தையார் உறங்கிக் கொண்டிருந்தார். உறங்குபவரை எழுப்பக்கூடாது என்று பக்கத்து அறையில் இருப்பவரிடம் சொல்லி, எழுந்ததும் தெரிவிக்குமாறு செய்த அவர் பண்பினை என் தந்தையார் அடிக்கடி பலரிடம் சொல்வார். எனக்கு அவர் தலைமையில் திருமணம் செய்துவைத்தார். அவர் அமைச்சராக இருந்தபோது அவரே ஒருநாள் தொலைப்பேசியில் விரும்பி அழைத்து அவருடைய நம்பிக்கைக்கு உரிய நேர்முக உதவியாளராக என்னைப் பணியமர்த்தினார். முதல்வர் கலைஞரின் பவளவிழா மலர் தொகுப்புப் பணிகளிலும் கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை அமைப்பு முயற்சிகளிலும் 1999-ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலுக்காக, முதல்வருடன் மேற்கொண்ட தேர்தல் பிரச்சார சுற்றுப்பயணங்களிலும் நாடு முழுவதும் அவர் தலைமையில் நடைபெற்ற ஆலய குடமுழுக்குத் திருப்பணிகளிலும் அவர் உடன் இருந்து அவரிடம் நான் கற்றுக்கொண்ட பாடங்கள் பல. எனக்கு அவர் சிறந்த ஆசானாகத் திகழ்ந்ததை நன்றியுடன் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்நூலினை வெளியிட வாய்ப்பளித்த மதிப்பிற்குரிய அம்மா திருமதி வெற்றிச்செல்வி தமிழ்க்குடிமகன் அவர்கள், அவருடைய மூத்த புதல்வர் மதிப்புமிகு த. மெய்ம்மொழி அவர்கள் மற்றும் திரு த. பாரி அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி. அவர் மறைவுக்குப் பிறகு இந்நூலை உருவாக்குவதில் உழைத்த அறிஞர் மதிப்புமிகு முனைவர் இரா. இளவரசு அவர்களுக்கு என்றும் நன்றி உடையேன்.

மோ. பாட்டழகன்

மேனாள் அமைச்சர்

மாண்புமிகு **தமிழ்க்குடிமகனார்** அவர்களின்

திருமகனார் மதிப்புமிகு **த.மெய்ம்மொழி**அவர்கள்

வழங்கிய **வாழ்த்துரை**

பொதுவாகத் தமிழர் பெருந்தன்மையால் பலவற்றை விட்டுக் கொடுத்துவிட்டு, இளித்தவாயர் / ஏமாளிகள் என்றே பெயர் பெற்றனர். அதே நேரம், உணர்வூட்டப்படும்பொழுது பொங்கி எழுந்து தற்காப்பு முயற்சிகளை மேற்கொள்வதும், பின்னர் ஆக்கப் பணிகளுக்கான தொடர்முயற்சிகளின்றித் தூங்கி விடுவதும் அல்லது தூங்க வைக்கப்படுவதும் வரலாறு காட்டும் பாடம்.

நினைவில் வாழும் முனைவர் தமிழ்க்குடிமகனார் வேறுபட்டு வாழ்ந்தவர். இருக்கின்ற வீட்டை இடித்துக் கட்டுவோம் என்று நடைமுறைக்கு ஒவ்வாத கற்பனையில் மிதந்தவரல்லர். மேலும் வெளிப்பூச்சு மற்றும் விளக்கு / தோரண அலங்கரிப்பிலேயே காலத்தை ஓட்டி, வீடு தாமாகவே தரைமட்டமாகட்டும் என்று விட்டுவிட விரும்பியவருமல்லர். அடித்தளத்தை வலுப்படுத்தி, கட்டடத்தைச் சீர்படுத்தி, உறுதியும் உண்மை அழகும் கொண்ட வீடாக அமைத்து அங்கே அன்பு, அமைதி, ஒழுங்கு, மகிழ்ச்சி நிலவ வேண்டும் என்ற நோக்கில் தன் பங்கை ஆற்றிச் சென்றவர்.

அறிவியல், உழவியல், பொருளியல், கலை, கல்வி, பண்பாடு என்று எல்லாத் துறைகளிலும் ஒருங்கிணைந்த மேம்பாடு அடைவதே தமிழினத்தின் உண்மையான முன்னேற்றம் என உறுதியாக எண்ணியவர். அதனால்தான் சிங்கப்பூர் தமிழ் இணைய மாநாட்டில் பங்கேற்றதன் தொடர்விளைவாகத் தமிழக அரசு தமிழ்க் கணினி விசைப்பலகைத் தரப்படுத்துதலை நிறைவேற்ற மூலமாய் இருந்தவர். இதன்மூலம் தமிழ் மென்பொருள் வணிகம் பல்லாயிரம்

கோடி ரூபாய் அளவு பல்கிப் பெருகிடக் காரணமாய் விளங்கினார். அண்ணா பல்கலைக்கழகத்தின் மூலம் தமிழ்க் கணினிக் கலைச் சொற்களை நூலாக வெளியிடவும் செய்தார்.

கவிதை, நாடகம், உரைநடை, எளிய தமிழில் தெளிவான மற்றும் சுவையான பேச்சு என்று முத்தமிழும் கலந்த மொத்த உருவமாகத் திகழ்ந்தவர். சொல்லுக்கும் செயலுக்கும் இடைவெளியில்லாத வாழ்வு வாழ்ந்தவர். மாற்றுக் கருத்துக் கொண்டோரையும் கருத்துப் பரிமாற்றத்தால் மனமாற்றம் பெறச் செய்தவர். ஒத்த கருத்துடையோரை அகந்தையுடன் புறக்கணிக்கும் செயலில் ஈடுபடாமல் அரவணைத்துச் சென்றவர். கொள்கை உறுதி, சுயமரியாதை, சோர்வில்லா உழைப்பு இவற்றுடன் தமிழ்ப்பணியையும் மக்கள் பணியையும் இரு கண்களாகப் போற்றி இறுதி மூச்சு வரை வாழ்ந்தவர்.

முடியும் என்று உணர்த்தினாலும் உணர மறுத்த விதண்டாவாதம் பேசுவோர் தூங்குவது போல் நடிப்பவர். ஆர்வம் இருந்தும் கல்வியோ, முயற்சியோ, வழிகாட்டுதலோ இன்றி வாழ்வோர் பலர். உணர மறுப்பவன் கரிக்கட்டை என்றால் உணர்வின்றி இருப்பவன் மரக்கட்டை. இவ்விரு வகையினரையும் புறந்தள்ளாமல் வெறுத்து ஒதுக்காமல் விரக்தியில் ஒதுங்காமல் நாடிச் சென்றவர்.

இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்டிருந்தாலும், தேவைதானா என்போர் தெளிவு பெறவும் தேவைதான் என்போர் பின்பற்றவும் துணையாக உதவும் வண்ணம் அவரது மூன்று படைப்புகள் அமைந்தன. அவை:-

1. தமிழில் வழிபாடு தடையென்ன நமக்கு - 1 தொகுதி

உனது கடவுளிடம் உன் குறையை உள்ளம் உருகச் சொல்ல உனது மொழி வழியே வழிபடு. உள்ள அமைதியும் நீ விரும்பும் ஒழுங்கான வாழ்வும் கிட்டும். அது சமுதாயத்துக்கும் நன்மைதரும் என்பதை உணர்த்தும் நூல்.

2. தமிழ் ஆட்சிமொழிச்செயலாக்கம் - 2 தொகுதிகள்

உனது அரசு உனக்கு என்னென்ன திட்டங்கள் மூலம் உதவிக்கு வரும், உனது அரசு உனக்காக. எப்படிச் செயல்படுகிறது என்பதை ஒவ்வொரு தமிழ்க்குடிமகனும் தெரிந்து, பயன்படுத்தி முன்னேற உன் மொழி ஆட்சிமொழியாக எப்படிச் செயல்படவேண்டும் என்று வழிகாட்டும் நூல்.

3. தமிழ்வழிக் கல்வி - 3 தொகுதிகள்

உலகெங்கும் அறிவியல் ஆய்வுப்படித் தாய்மொழிக் கல்விக்குப் பெருகி வரும் ஆதரவு, தமிழகத்தில் அதன் நிலை, தமிழ்வழிக் கல்வி உண்மையாகச் செயல்படுத்தப்பட்டால் அனைவரும் கற்றுத் தேர்ந்து உலகப் போட்டியையும் சந்திக்கலாம் - சாதிக்கலாம் என்பதை உணர்த்தும் நூல்.

'புலவன் வாக்குப் பொய்க்காது' என்பது உண்மையெனில் எல்லாத் துறைகளிலும் தமிழினத்தை முன்னேற்ற உண்மையாக நினைக்கும் எந்த இயக்கமும் எவரும் இந்த மூன்று நூல்களை வழிகாட்டிகளாகக் கொள்ள வேண்டும் என்ற நிலை ஏற்படும்.

ஏன், இந்திய அளவில் தவிர்க்க முடியாத முதன்மைச் சக்தியாகத் தமிழகத்தில் இருந்து எந்த இயக்கமும் அல்லது தலைவரும் விளங்கும் காலம் வந்தால், இந்த நூல்களின் அடிப்படையில் எல்லா மாநில மக்களின் உண்மையான முன்னேற்றத்துக்கும் அதன்மூலம் ஒட்டுமொத்த இந்தியா உயர்நிலை எய்துவதற்கும் பாடுபடவேண்டிய நிலை ஏற்படும்.

முனைவர் தமிழ்க்குடிமகனார் மறைவதற்குச் சில நாள்களுக்கு முன்னர் தமிழ்வழிக்கல்வி நூலை எழுதி முடித்தார். கணினிப் பரலையும் ஏராளமான குறிப்புகள், சான்றுகள் முதலியவற்றையும் ஒப்பிடடு, அவரது நடையும் போக்கும் மாறாமல் முழுமையாக உடல் நலிவுற்ற நிலையிலும் உள்ளன்போடு பாடுபட்ட பேராசிரியர் முனைவர் இரா. இளவரசு அவர்களுக்கும், பாவாணர் ஏடகத்தின் வாயிலாகத் தமிழர் தம் கரங்களில் தவழவிட்டுள்ள தகுதி வாய்ந்த தமிழ்த் தம்பி முனைவர் மோ.பாட்டழகன்

அவர்களுக்கும் என் நன்றிகள் பல. உண்மையைச் சொல்வதில் ஒளிவு மறைவு தயவு தாட்சண்யம் காட்டவேண்டியதில்லை என்ற தமிழ்க்குடிமகனாரின் நிலைப்பாட்டை ஒட்டி, காலமாகி விட்டாரே என்று கருணை காட்டாமல் ஆக்கப் பூர்வமான அலசலையும் அறிவுரையையும் வழங்கிடத் தமிழ் அன்பர்களை வேண்டுகிறேன்.

'இப்படியும் ஒருவன் இருந்தான்' என்ற தலைப்பை எழுதி ஒரு கோப்பினை இந்த நூல் எழுதி முடித்தவுடன் தொடங்கி வைத்தார். புலவன் வாக்கு - 'இருந்தான்' என்று இறந்த காலத்தில் இட்ட தலைப்பு சில நாள்களில் உண்மையானது. தன் வரலாறாக அவர எழுத நினைத்ததை 'மகன் தந்தைக்காற்றும் உதவி' என்னும் குறளுக்கேற்ப என்னை மேலும் தகுதிப்படுத்திக் கொண்டபிறகு தமிழினத்தின் வரலாற்றில் தமிழ்க்குடிமகனின் வரலாறு தோய்ந்ததைப் படம்பிடித்து வழங்குவேன் என்று நம்புகிறேன்.

வாழ்த்துகள் - நன்றி

அன்பன்

சா. தமிழ்க்குடிமகன் மெய்ம்மொழி

தமிழகம்
20,இராமன் தெரு
காந்திநகர், ஆவடி
சென்னை - 600 054
செல்லிடப் பேசி : 9840084277

இந்நூலைப் பெறத் தொடர்புக்கொள்ளும்
முகவரியிலேயே பிற நூல்களையும் பெறலாம்

உள்ளடக்கம்

25. மெட்ரிகுலேசன் பள்ளிகளின் அட்டூழியங்கள் - 7

26. தமிழில் பேசினால் தண்டனை - 48

27. தாய்மொழி வழிக் கல்வி

(அ) அறிஞர்களின் கருத்துகள் - 57

(ஆ) சமகால அறிஞர்களின் கருத்துகள் - 70

28. (அ) அரசியல் தலைவர்களின் ஆர்வமும் அக்கறையும் - 147

(ஆ) தமிழ் அமைப்புகளின் தளராத போராட்டங்கள் - 159

29. இதழ்களின் சார்புக் கருத்துகள்

(அ) 1995 - 1996 - 220

(ஆ) 1997 - 235

(இ) 1998 - 249

இயல் இருபத்தைந்து

மெட்ரிகுலேசன் பள்ளிகளின் அட்டூழியங்கள்

நான் பட்ட வகுப்பினையும், முதுகலை வகுப்பினையும் இரண்டு தனியார் கல்லூரிகளில்தான் படித்து முடித்தேன். இரண்டுமே தமிழகத்தின் மிகச் சிறந்த கல்லூரிகள். திருச்சி தூய வளனார் கல்லூரி, சென்னை - பச்சையப்பன் கல்லூரி - என் உயர்நிலைக் கல்வியை ஒரு தனியார் பள்ளியில் தான் பெற்றேன். அது, பெயர் பெற்ற தே.பிரித்தோ பள்ளி. என் நடுநிலைக்கல்வி உரோமன் கத்தோலிக்க நடுநிலைப்பள்ளியில் தான் பெற்றேன். தொடக்கக் கல்வியை ஒன்றியத் தொடக்கப் பள்ளியில் தான் படித்தேன்.

எங்குமே ஆரவாரமோ, ஆர்ப்பாட்டமோ இல்லை. அமைதியான, அதே நேரத்தில் தேவையான எழுச்சியோடு அருமையாக நடைபெற்றதை இன்றும் நினைத்து மகிழ்கிறேன்.

ஆனால் இன்று மெட்ரிகுலேசன் பள்ளிகளில் எத்தனை நாடகங்கள்; போலி ஆட்டங்கள்; ஆரவாரங்கள், ஆரப்பாட்டங்கள்.

காரணம், நான் முன்னே சொன்ன நிறுவனங்கள் கல்வியாளர்களால் - தொண்டு நிறுவனங்களின் சார்பில் நடத்தப்பட்டவை.

ஆனால் மெட்ரிகுலேசன் பள்ளிகளோ ‘கல்வி அள்ளல்’களால் வணிக நோக்கில் நடத்தப்படுபவை. நடத்துபவர்களில் மிகப் பலர் கல்வியாளர்கள் அல்லர்; மிகப் பலர்க்குக் கல்வியை ஒரு தொண்டாக நினைக்கவே தெரியாத நிலை.

பொதுமக்களிடம் இருக்கும் ஆங்கில மோகத்துக்கு இவர்கள் விலை நிர்ணயிக்கிறார்கள்.

இப்போது அவர்களது நிலைகளைப் பல்றே கோணங்களில் பார்ப்போம்!

அரசு கொண்டுவந்த தமிழ்வழிக் கல்வியை எதிர்த்து, ‘தமிழ்நாடு தமிழ் மற்றும் ஆங்கிலப் பள்ளிகள் சங்கம்’ கண்டன மாநாடு நடத்தியது. அதாவது

''கட்டாய தமிழ் வழிக் கல்வி
எதிர்ப்பு பேரணி மற்றும்
கண்டன மாநாடு''

இந்தச் சங்கமே 1994இல் தான் பதிவு பெற்றிருக்கிறது. அவர்களது முழக்கத்தைக் கவனியுங்கள்.

''சரித்திரம் ஒருநாள் கைகளைத் தட்டும் - நமது சங்கத்தின் சாதனைகள் இதயத்தை எட்டும்''

அவர்களது நோக்கங்களைக் கவனியுங்கள்.

* ஆங்கிலப் பள்ளிகள் சங்கத்தின் பிரதிநிதித்துவம் இல்லாத 'நீதியரசர் மோகன் அவர்களது தலைமையிலான உயர்மட்டக் குழு'வின் அறிக்கைக்கு கண்டனம் அறிவித்தல்

* 'கட்டாய தமிழ்வழிக் கல்வி அரசாணை'க்கு எதிர்ப்பு தெரிவித்தல்.

* ஆங்கிலவழிக் கல்வி பள்ளிகளுக்கு உரிய அங்கீகரிப்பை நிலைநாட்ட தமிழக அரசின் கவனத்தினை ஈர்த்தல்

* ஆங்கிலப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களது பிரச்சனைகளுக்கு அரசின் நிதியுதவியோடு தீர்வு காண முற்படுதல்

அரசே இவர்களுக்குத் தேவையில்லாதபோது பிறகு ஏன் 'அங்கீகாரம்' பெற அரசை நாடவேண்டும்?

ஆசிரியர்களின் பிரச்னைகளுக்கு அரசின் நிதியுதவியா? ஆயிரக்கணக்கில் வசூல் செய்து ஐநூறும், நாநூறும் ஆசிரியர்களுக்கு வழங்கிவிட்டு அவர்களைக் கசக்கிப்பிழியும் மெட்ரிக் முதலாளிகட்கு அரசின் நிதி உதவி எதற்கு?

இந்தப் பேரணிக்கு தலைமை தே. இராசன். இவர் தமிழக மக்கள் இயக்கத்தின் தலைவராம். மாநாட்டில் சிறப்புரை ஆற்றுபவர் சரித்திர நாயகன் பி.டி. குமாராம். இதில் கலந்து கொள்வதாக அறிவிக்கப்பட்ட அரசியல்வாதிகள். 1. திண்டிவனம் இராமமூர்த்தி, 2. பீட்டர் அல்போன்சு. இவர்கள் இருவரும் தமிழ் வழிக் கல்விக்கு எதிராகப் பேசி வருபவர்கள்தான். அருணாசலம் இறந்துபோய்விட்டார். எனவே கருத்து எதுவும் வேண்டாம். ஆனால் சு. திருநாவுக்கரசு ஏன் கலந்து கொண்டார் என்று தெரியவில்லை?

இவர்கள் நடத்தும் பேரணியும் மாநாடும் எவ்வளவு ஆர்ப்பாட்டத்தோடு நடைபெற்றன என்பதனைக் கவனத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

தமிழ்வழிக் கல்வியை எதிர்த்து, மெட்ரிகுலேசன் பள்ளிகள் கூட்டாகப் போராட்டம் நடத்தின எனினும் இப் போராட்டத்தில் பல பள்ளிகள் பங்கேற்கவில்லை. நவபாரத் மெட்ரிக் பள்ளி, அரும்பாக்கம் நேஷனல் ஸ்டார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, எம்.ஜி.ஆர். நகர் சுந்தரம் துவக்கப்பள்ளி ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

'தமிழ்வழிக் கல்வியை ஒத்த கருத்துள்ள பள்ளிகள் வரவேற்கத் தயாராகவே உள்ளனர். இந்தப் பள்ளி நிர்வாகிகள் ஓரிரு நாளில் கூடி இப்பிரச்சனை குறித்து புதிய நடவடிக்கை எடுக்க உள்ளனர்'' என்று அவர்களே அறிக்கை விட்டுள்ளனர்.

எனக்கொரு விளம்பரத்தாள் கிடைத்தது. பார்த்து அதிர்ச்சியுற்றேன்.

மாடர்ன் ஸ்கூல் **மாடர்ன் ஸ்கூல்**

4-கி, அருணாசலம் ரோடு, சாலிகிராமம் 12, மன்னார்சாமி கோயில் தெரு

வடபழனி, சென்னை - 600 093 **ராயபுரம்,** சென்னை - 600 013

நோட்டீசை தெரிந்த பெயிலானவர்களிடம் கொடுத்து உதவுங்கள்.

நாங்கள் அவர்களை மேல் வகுப்பில் சேர்த்துக் கொள்வோம்.

இவை அவர்களது முகவரிகளும், விளம்பரமும் இதோ.

6TH; 7TH. பெயிலானவர்களை

8TH. சேர்க்கிறோம்

9TH. பெயிலானவர்களை

10TH. சேர்க்கிறோம்

10TH. பெயிலானவர்களை

+1ல். சேர்க்கிறோம்

ஒரு வகுப்பில் தோல்வியுற்றவர்கள் அந்த வகுப்பில் தேர்ச்சியுறாமல், எப்படி அடுத்த வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்? என்பது தெரியவில்லை. ஏமாற்றும் 'வியாபாரம்' எப்படிச் சுடச்சுட நடக்கிறது என்பதனைப் பாருங்கள்.

(தினமணி கதிர் 23.8.1998) இதில் நிர்மலா இராசேந்திரன் என்பவர் ஒரு கட்டுரை எழுதியுள்ளார்.

'கலாசாரத்தைச் சிதைக்கும் கல்விக் கூடங்கள்' என்பது தலைப்பு. இதில் நான் எந்த வரியையும் கூட்டவோ குறைக்கவோ விரும்பவில்லை. படித்துப் பாருங்கள்.

''தமிழகத்துத் தலைநகரில் 'பிரபலப் பள்ளிகள் எனும் பெரும் பெயர் பெற்று ஆணித்தரமாக நிலைத்து விட்ட பல தனியார் பள்ளிகள் தங்கள் நற்பெயரின் போர்வையில் மறைந்து அநீதிகள் செய்யத் துவங்கி சிட்டன இவை சமுதாயத்திற்கு எப்படித் தீங்கு விளைவிக்கின்றன என்பதை அவ்வளவு எளிதாக யாரும் கண்டு கொள்ள முடியாது,

அவர்கள் மொழியில் சொன்னால் சமுதாயத்தை உயர்த்துவது (To uplift the Society) என்ற நோக்கில், சேவை மனப்பான்மையில் நிறுவப்படுகின்ற, இந்தத் தனியார் பள்ளிகள்... நமது இளைய சமுதாயத்தை எங்கே கொண்டு செல்கின்றன என்று சற்று ஆழமாகப் பார்த்தால், வேதனையோடு சில உண்மைகள் புரியும், அவர்கள் சேவை செய்வது பணம் படைத்தவர்களுக்குத் தான், அது நாடறிந்த விஷயம், தம் பிள்ளைகள் ஒரு நல்ல தரமான கல்வியைப் பெற வேண்டும் என்கிற ஆசையில் இந்தப் பள்ளிகளில் பிள்ளைகளைச் சேர்த்துவிடும் நடுத்தர வர்க்கத்துப் பெற்றோர் படும்பாடு சொல்லி மாளாது,

தமிழ் நாட்டில் வேர்விட்டு வளர்ந்து வரும் இந்தப் பள்ளிகளில் இவர்கள் கற்றுக் கொடுப்பது, அறிமுகமாக்கி வளர்ப்பது, மேலை நாட்டுக் கலாசாரத்தைத்தான், நாட்டின் மீதோ, தாய்மொழியின் மீதோ எவ்விதப் பற்றினையும் இந்தப் பிஞ்சு வயதில் மாணவ மணிகளுக்கு ஊட்டாமல், பாப் இசைப் பாடல்களையும், மேலைநாட்டு ஃபேஷன்களில் மோகத்தையும் வளர்க்கிறார்கள்.

வருடம் முழுவதும் விடியற்காலையில் எழுந்து, குளித்து, சாப்பிட்டும் சாப்பிடாமலும் மணி ஏழு, ஏழரைக்கெல்லாம் பள்ளிக்கென்று கிளம்பும் பிள்ளைகள், நாட்டின் சுதந்திர நாளன்றும், குடியரசு நாளன்றும் விடிய விடிய எட்டு மணி வரை உறங்குவார்கள்.... என்ன காரணம் என்று கேட்டால், பெரிய வகுப்புகளுக்கு மட்டு தான் கொடியேற்றம் என்று பதில் வரும்.

அப்படியில்லையென்றால், முதல் நாளே அவர்கள் பள்ளியில் பேருக்குக் கொடியேற்றிய ஒரு காட்சியைச் சொல்வார்கள்.

முன்பெல்லாம் முதல் வகுப்புப் படிக்கிற காலத்திலிருந்து 'சுதந்திர நாள்' என்றால் சுறுசுறுப்பாக எழுந்து அனைவரும் பள்ளிக்கு விரைவார்கள். அணிவகுப்பில் நின்று கொடியேற்றத்தில் பங்கு கொள்வார்கள். நாட்டுக் கொடியை முக்கியமான ஒரு நபர் ஏற்ற, அவர் கொடிக் கயிற்றின் முடிச்சை அவிழ்த்துவிடும்பொழுது, கொடியிலிருந்து வண்ணமலர்கள் பூத்து விழுவதை அதிசயமாகப் பார்ப்பார்கள். அதன் பின்னர் 'நாட்டைக் காக்கும் வீரர்கள் போல் 'சல்யூட் அடித்து உணர்ச்சியூட்டும் எழுச்சிமிக்க உரையினைக் கேட்பார்கள். இறுதியாக அன்று பள்ளியில் வழங்குகின்ற இனிப்பைப் பெற்றுக் கொண்டு மகிழ்ச்சியாக வீட்டுக்கு வருவார்கள். ஒவ்வொருவர் மனத்திலும் பதிவாகியுள்ள பசுமையான விஷயங்கள் இவை. அன்று எப்படியாவது நமக்கு, நாட்டுச் சுதந்திரத்திற்காகப் போராடியவர்களைப் பற்றிய நினைவினை ஊட்டி. . . நாட்டுப் பற்றினை நம் மனத்தில் விதைத்து விடுவார்கள்.

இந்த உணர்வையும் மகிழ்ச்சியையும் பெரிய பள்ளிகளில் படிக்கும் மேல்தட்டு வர்க்கக் குழந்தைகள் பெறுவதில்லை. அதே சமயத்தில், 'பிரபலம்' என்று பெயர் வாங்காத சிறிய பள்ளிகள் இவ்விழாக்களை உணர்வுபூர்வமாய் நடத்துகின்றன. அந்தப் பள்ளிகளிலிருந்து மகிழ்ச்சியோடு திரும்பும் பிள்ளைகளைக் கண்டு சில சமயங்களில் பெரும் பள்ளிகளின் பிள்ளைகள் ஏங்குகிறார்கள். அவர்களுக்கு இந்தத் தேசிய உணர்வு ஊட்டப்படாததால், நாடு எப்படிப் பாதிக்கப்படப் போகிறது என்பதனை, இந்தப் 'பள்ளி மேதாவிகள்' எங்கே உணரப் போகிறார்கள்?

ஆங்கில வழிக் கல்வி பயிற்றுவிக்கும் இப்பள்ளிகளில், தமிழை ஒரு பாடமாக எடுத்துப் படிக்கலாம். ஆனால் அந்தத் தமிழுக்குத் தரும் மரியாதையும் பயிற்சியும் இருக்கிறதே. . . தமிழ் நாட்டார் பெருமைப்பட்டுக் கொள்ளவேண்டியதுதான், மற்ற எல்லாப் பாடங்களுக்கும் வீட்டுப் பாடமும் பயிற்சியும், போதுமான அளவில் தினசரி அளிக்கப்படும், தமிழுக்குப் பல நாட்கள் பயிற்சி இருக்காது. திடீரென்று ஒரு நாளில் மிக அதிகமாக வீட்டுப் பாடத்தைத் திணித்து விடுவார்கள். அதைக் கண்டு சிறுவர் சிறுமியர் மலைத்துப் போய், தமிழ் என்றாலே மிகச் சிரமமான பாடம் என்கிற ஒரு கருத்தை மனதில் பதித்துக் கொள்கிறார்கள். அவர்களுடைய தமிழ்ப் புத்தகங்களையும், நோட்டுப் புத்தகங்களையும் வாங்கிப் பார்த்தால் இன்னும் அதிர்ச்சியாக இருக்கும். 'Read 3 Times', Write Opposites, Fill in the blanks' என்று ஆங்கிலத்தில் எழுதியிருப்பார்கள். இந்தத் தமிழாசிரிய, ஆசிரியைகளின் தமிழ் உணர்வை என்னவென்று சொல்வது? சாதாரணமாக

இத் தனியார் பள்ளிகளின் முதல்வர்கள் வேறு மாநில மொழி பேசுபவர்களாக இருப்பதால், இதைப் பற்றிக் கண்டு கொள்வதில்லை. தமிழ்நாட்டில் தாய்மொழிக்குக் கிடைக்கும் மரியாதை இப்படியிருக்க. . . இவர்கள் பிள்ளைகளிடம் காட்டுகின்ற பாரபட்சம் இன்னும் ஒரு படிமேலே போகிறது.

பணம் படைத்த வசதியான குடும்பத்துப் பிள்ளைகளையும் தங்களை வந்து அதிகமாகக் கண்டுகொள்ளும் பெற்றோரின் பிள்ளைகளையும் மட்டும் தட்டிக் கொடுத்து, எந்தப் போட்டி என்றாலும் தனி அங்கீகாரம் என்றாலும் அவர்களுக்கு மட்டுமே வாய்ப்புக்கொடுத்து மற்ற குழந்தைகளின் மனத்தில் தாழ்வு மனப்பான்மையை உருவாக்கி வைப்பதும் இந்தப் பள்ளிகள்தான். இப்படிப்பட்ட பள்ளிகளில் நம் கலாச்சாரத்தையே மறக்கும் அளவுக்கு மேலைநாட்டுக் கலாசாரத்தைப் புகுத்துகிறார்கள்.

பன்னாட்டு நிறுவனங்கள் அறிமுகப்படுத்தும் பாதிக்கு மேற்பட்ட பொருட்களுக்கு நுகர்வோர் சந்தையாக மாறுவது இப்பள்ளிகளின் குழந்தைகள்தான். அத்தியாவசியமான பொருட்களை விட்டுவிட்டு ஆடம்பரப் பொருட்களின் மேல் ஆசை எழுவதற்கு இப்பள்ளிகளில் ஆசிரிய, ஆசிரியைகள் உருவாக்கும் சூழ்நிலைகளும் காரணமாக இருக்கின்றன.

ஒரு கல்லூரிப் படிப்புக்கு வேண்டிய அளவு பணத்தைக் கட்டணமாகக் கொடுத்த பின்னரும், இடையிடையே இவர்கள் வசூலிக்கும் கட்டணங்கள் பெற்றோரைத் திக்குமுக்காடச் செய்கின்றன. ஆண்டின் ஆரம்பத்தில் எல்லாவற்றையும் கறந்து கொள்ளும் இப்பள்ளிகள் விளையாட்டுத் துறைக்கு ஆகும் சாதாரணச் செலவைக்கூடத் தாங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. டென்னிஸ் பயிற்சி கொடுத்தால் அதற்குரிய மட்டை, பந்து முதலியவற்றைக்கூடப் பள்ளி தரமுடியாதா? அவற்றைப் பெற்றோரே வாங்கித் தரவேண்டும். ஒவ்வொரு விளையாட்டுப் பயிற்சிக்கும் தனிக்கட்டணம் வேறு வசூலிக்கப்படுகிறது. ஆக. . . எதற்கெடுத்தாலும் பணம் கறப்பதே இவர்கள் வழக்கமாக இருக்கிறது. பள்ளிகளில் தேர்வுகள் நடத்தும்போது இன்னும் வேடிக்கையாக இருக்கும். தேர்வுத் தாள்களைக் கட்டுவதற்குரிய நூல், குண்டூசி இவற்றைப் பள்ளிகள் வழங்காது. தேர்வுக்குச் செல்லும் பரபரப்பில், இந்தச் சிறு பொருளையும் தேடிக் கண்டுபிடித்துக் கொடுத்து அனுப்புவதற்குள் பெற்றோரின் பொறுமையே போய்விடும். இதற்காகப் பாதிப்பேர் ஸ்டேப்ளர் எடுத்துக் கொண்டு போவதுமுண்டு. எந்த அரசுப் பள்ளியிலாவது அல்லது பிரபலமாகாத சிறிய பள்ளியிலாவது இது நடக்குமா?

பிரபல பள்ளிகளில் பயின்று வரும் மாணவ - மாணவியர் பெரும்பாலும் அயல்நாட்டு மோகத்தில் படித்துவிட்டு, வெளிநாடு சென்று பணிபுரிவதையே தங்கள் லட்சியங்களாகக் கொண்டு வெளிவருகின்றனர்.

இப்படிக் கண்ணுக்குத் தெரியாமல் கனிவாக நஞ்சு பாய்ச்சுகின்ற கல்வி அமைப்புகளை நம் நாட்டிற்குள் வளரவிட்டுக் கொண்டு, நாட்டுப் பற்றும் சமூகச் சிந்தனையும் இல்லாத ஒரு சமூகம் உருவாகிறதே. . . அந்தச் சமூகத்தில் பல தீமைகள் தலைகாட்டுகின்றனவே என்று அங்கலாய்ப்பதால், என்ன பயன்?''

சரியான பார்வையில் எழுதப்பட்டுள்ள இக்கட்டுரையில், நமது கலாச்சாரம் மறக்கடிக்கப்பட்டு மேல் நாட்டுக் கலாசாரம் புகுத்தப்படுவதைத் தெளிவு படுத்தியுள்ளார். 'பணம் கறக்கும்' கலையில் வல்லவர்களால் நடத்தப்படும் பள்ளிகளில் எந்த அளவுக்குச் சீர்கேடுகள் தலைவிரித்து ஆடுகின்றன என்பதை எண்ணிப் பாருங்கள்.

அக்.1998இல் வெளிவந்த 'தமிழர் கண்ணோட்டம்' எனும் இதழில் சிந்தனையாளர் பா. கல்யாணி ஒரு கட்டுரை எழுதியுள்ளார். மெட்ரிகுலேசன் பள்ளிப் பிள்ளைகள் அதிக வாய்ப்புப் பெறவும், அரசுப் பள்ளிகள் தமிழ் வழிப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பெரும்பகுதியான வாய்ப்பினை இழக்கவும் அரசே மறைமுகமாக எப்படி உதவுகிறது என்பதனை பா. கல்யாணி அருமையாக உணர்த்துகிறார். முழுவதும் படித்துப் பார்த்தால்தான் அன்றைய கல்வி அமைச்சர் க. அன்பழகன் துறையின் உண்மை நிலை தெரியும்!

மேல்நிலைக்கல்வியில் இரு ஆண்டுகளும் பொதுத் தேர்வுகள் தேவை!

மருத்துவம், பொறியியல் போன்ற தொழில் பட்டப்படிப்புகளில் சேர விரும்பும் மாணவர்களுக்காக 1999ஆம் ஆண்டில் நடைபெற உள்ள நுழைவுத் தேர்வில் 12-ஆம் வகுப்பிற்கான பாடங்களில் இருந்து மட்டுமே வினாக்கள் தயாரிக்கப்படும் என 27.09.98 அன்று தமிழக அரசு முடிவு எடுத்துள்ளதாக செய்தி வந்துள்ளது. அரசின் இம்முடிவு மெட்ரிகுலேசன் பள்ளிகள் என்ற சுயநலப் பள்ளிகளுக்கு நன்மை பயக்குமே தவிர சமூகத்தின் கல்வி நலனுக்கு பெரும் கேடு விளைவிக்கவே செய்யும்.

நடப்புக்கல்வி ஆண்டின் தொடக்கத்தில் கல்வித் துறை ஒரு முக்கிய அறிவிப்பைச் செய்தது. அதாவது 1999ஆம் ஆண்டில் நடைபெற உள்ள தொழிற்கல்வியில் இரு ஆண்டுகளுக்குரிய (11வது மற்றும் 12வது வகுப்பு) கணித, அறிவியல் பாடங்களில் இருந்தும் கேள்விகள் கேட்கப்படும் என அறிவிக்கப்பட்டது. இதற்கு மாறாகத்தான் 27.09.98 அன்று தமிழக அரசு முடிவு எடுத்துள்ளது. அதாவது அடுத்த ஆண்டு நடக்கப் போகும் நுழைவுத் தேர்விலும் ஏற்கெனவே இருந்தது போலவே 12வது வகுப்பிற்குரிய பாடங்களில்

இருந்து மட்டுமே வினாக்கள் கேட்கப்படும். வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறிய கதையாகிவிட்டது.

மெட்ரிகுலேசன் பள்ளி நிர்வாகிகள் தான் தங்களுடைய சுயநலம் கருதி 11-வது வகுப்பில் பொதுத் தேர்வு நடத்தும் முயற்சியை தொடர்ந்து தடுத்து வருகின்றனர்.

1995-96ஆம் ஆண்டு மருத்துவம் - பொறியியல் சேர்க்கை தொடர்பான கீழ்கண்ட அட்டவணை இதனை நன்கு விளக்கும்.

பயிற்று மொழி	விண்ணப்பித்த மாணவர்களின் விழுக்காடு	தொழிற்கல்விக்கு தேர்வு செய்யப்பட்டவர் விழுக்காடு
தமிழ்	80%	23%
ஆங்கிலம்	20%	77%

1982ஆம் ஆண்டில் 119 ஆக இருந்த மெட்ரிகுலேசன் பள்ளிகளின் எண்ணிக்கை 1998ம் ஆண்டில் 2037 ஆக பெருகி உள்ளது. இக்கால கட்டத்தில் மெட்ரிகுலேசன் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் எண்ணிக்கை 61,094லிருந்து 7,83,994 ஆகக் கூடியுள்ளது.

உண்மையான நிலைமையினை ஆசிரியர் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். 1998இல் கூடக் கல்வித்துறை மெட்ரிகுலேசன் பள்ளிகளின் மேம்பாட்டுக்கு உதவும் தோழனாக இருக்கிறதே தவிர அவற்றைக் கட்டுப்படுத்தும் மேலதிகாரியாகச் செயற்படவில்லை. இது அன்பழகன் காலம். ஆனால் 2003இல் பல மெட்ரிக் பள்ளிகளின் ஏற்பு இரத்தாகியுள்ளது.

'நெற்றிக்கண்' (28.4.2000) இதழில் 'இடவை வேங்கடேசன்' எழுதிய கட்டுரை இது. தலைப்பே மெட்ரிக் பள்ளிகளின் 'மேன்மை'யை உணர்த்தும்! மேலும், உள்ளே சென்றால் வரைதுறை இல்லாமல் நடக்கும் ஆட்டம் புரியும்! இதற்குப் பள்ளிக் கல்வித்துறை எப்படியெல்லாம் உறுதுணையாக இருக்கிறது என்பதும் நமக்கு விளங்கி விடும். வகுப்பில் நாற்பதுக்குப் பதிலாக எண்பது பேர் - போதுமான கழிப்பறை வசதி இன்மை - பள்ளிப் பேருந்தில்தான் கட்டாயம் பயணம் போகவேண்டும் - விளையாட்டுத் திடலுக்கு இடமே இல்லை. இந்த நிலையில் இருந்து கொண்டு கொள்ளையடித்து வரும் பள்ளிகளைப் பற்றி அவர் எழுதுகிறார். படியுங்கள்.

‘மெகா’ வசூலில் மெட்ரிகுலேஷன் பள்ளிகள்!

உங்களுக்கு சீக்கிரமே பணக்காரராக ஆசையிருக்கிறதா? உடனே நீங்கள் செய்ய வேண்டியது. உங்கள் வீட்டு மொட்டை மாடியில் ஒரு கொட்டகை போட்டு, ஏதாவது ஒரு பெயரை வைத்து மெட்ரிகுலேசன் பள்ளி என்று ஒரு விளம்பர போர்ட் வைப்பதுதான். பிறகு எண்ணிக் கொண்டே இருக்க வேண்டியதுதான் கரன்சிகளை. இப்படி தெருவுக்கு தெரு தண்டோரா போடாத குறையாக ஆகிவிட்டது மெட்ரிகுலேசன் பள்ளிகளின் நிலை. பள்ளியில் சேர்ந்த நாள் முதல் படிப்பு முடிந்து செல்லும் வரை காசு. . . காசு. . . காசுதான்!

இம்மாதிரியான மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு, தமிழக அரசின் ஆணைப்படி எந்தப் பகுதிகளில் இப்பள்ளிகள் அமைந்திருக்கிறதோ அந்தப் பகுதிகளில் உள்ள நகராட்சி, சொத்து வரியிலிருந்து பூரணவரிவிலக்கு உண்டாம்.

அத்தோடு மத்திய அரசும் வருமான வரித்துறை மூலம் பிரிவு 12(ஏ)-ன்படி வருமான வரிவிலக்கும் அளித்துள்ளது.

இவ்வளவு சலுகைகளையும் மாணவர்களின் ஏழ்மை நிலைமை கருத்தில் கொண்டே மத்திய, மாநில அரசுகள் வழங்கி வருகின்றன.

ஆனால், அவ்வளவு சலுகைகளையும் அனுபவிக்கும் பள்ளி நிர்வாகம் வருடத்திற்கு ரூபாய் 6,000/- முதல் 14,000/- வரை கட்டணம் என்ற பெயரில் வசூல் மேளாவே நடத்துகின்றனர்.

இதை ஒழுங்குபடுத்த வேண்டிய கல்வித்துறை அதிகாரிகளோ ஒரு பக்கம் தூங்கி வழிகின்றனர். புற்றீசல் போல தமிழகத்தில் அதிகம் இருந்தாலும் உதாரணத்திற்கு சென்னை குரோம்பேட்டை, பல்லாவரம் பகுதிகளில் இன்று நடத்தப்படும் பள்ளிகளின் எண்ணிக்கையே மொத்தம் பதினைந்து. (அவை தனியாக பெட்டிச் செய்தியில் சொல்லப்பட்டுள்ளது).

சாதாரணமாக ஒரு வகுப்பில் முப்பது முதல் நாற்பது மாணவர்களை மட்டும்தான் சேர்க்க வேண்டும். இது அரசு விதி. ஆனால், மேற்படி பள்ளிகளில் கிட்டத்தட்ட எண்பது பேர் வரை சேர்த்து விடுகின்றனர்.

மாணவர்கள் விளையாட விளையாட்டுத் திடலும் இல்லை, தாகத்திற்கு குடிக்க நல்ல தண்ணீர் வசதியும் கிடையாது. மாணவ மாணவிகளுக்கென தனித்தனி கழிப்பிடமும் இல்லை. அது மட்டுமின்றி இங்கு படிக்கும் மாணவ மாணவிகள் கண்டிப்பாக பள்ளி பேருந்தில்தான்

செல்ல வேண்டுமாம். இதற்காக பல மடங்கு அதிகமான கட்டணமும் வசூலிக்கப்படுகிறது.

மேற்சொன்ன எந்த பள்ளிகளிலும் பெற்றோர் ஆசிரியர் சங்க அமைப்பே கிடையாது என்பதுதான் உச்சகட்ட கொடுமை. இந்த படுபாதக வசூல் கொள்ளை தெரிந்தும் எந்த நடவடிக்கையுமே எடுக்காமல் கையை கட்டிக் கொண்டு வேடிக்கை பார்க்கிறது பள்ளி கல்வி இயக்குநரகம்.

தமிழக அரசு தனியார் பொறியியற் கல்லூரி, பாலி டெக்னிக், மருத்துவ கல்லூரிகளின் கட்டணங்களை தமிழகம் முழுவதும் சீர் செய்தது போல, மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கும் எல்.கே.ஜி. முதல் +2 வரை கட்டணங்களை வரையறை செய்து ஆணை பிறப்பிக்க வேண்டும்.

இதுவே, பல ஏழை தாய்மார்களின் கண்ணீரை துடைக்கும் வழியாகும். தமிழக அரசு செய்யுமா?

'வசூல்' பள்ளிகள்!

* ராபர்ட் மெட்ரிகுலேஷன்பள்ளி- ராதாநகர்.
* செயின்ட் மார்க்ஸ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி - ராதாநகர்.
* நீலாராம் மெட்ரிகுலேஷன் பள்ளி - கணபதிபுரம்.
* செயிண்ட் பவுல் மெட்ரிகுலேஷன் பள்ளி - பாரதிபுரம்.
* செயிண்ட் சேவியர்ஸ் ஜீஸஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி - அஸ்தினாபுரம்.
* இராமகிருஷ்ணா வித்யாலயா பள்ளி - அஸ்தினாபுரம்.
* மகேஸ்வரி மெட்ரிகுலேஷன் பள்ளி - அஸ்தினாபுரம்.
* என்.எஸ்.என். மெட்ரிகுலேஷன் பள்ளி - நேருநகர்.
* ப்ரியா மெட்ரிகுலேஷன் பள்ளி - நேருநகர்.
* ஸ்ரீ சங்கர வித்யாலயா பள்ளி - நேருநகர்.
* சுந்தரவள்ளி மெட்ரிகுலேஷன் பள்ளி - லெட்சுமிபுரம்.
* ஹில்டன் மெட்ரிகுலேஷன் பள்ளி - நியூ காலனி.
* விவேகானந்தா மெட்ரிகுலேஷன் பள்ளி - நேரு நகர்.
* ஹோலி மெட்ரிகுலேஷன், மேரிஸ் மெட்ரிகுலேஷன் பள்ளி - ராஜாஜி நகர் - பல்லாவரம்.

நேருநகர் எனும் ஒரு பகுதியில் மட்டும் நான்கு பள்ளிகள். அஸ்தினாபுரத்தில் மூன்று பள்ளிகள் - எவ்வளவு 'விரிவாக' 'வசூல்' நடக்கிறது என்பதனைப் பாருங்கள்!

1.6.2002இல் 'தினமலர்' இதழில் 'இது உங்கள் இடம்' இடம் பெற்ற மடல் இது. சென்னையைச் சேர்ந்த க. மைதிலி எழுதுகிறார். படியுங்கள்

''மெட்ரிக் பள்ளிகள் மிகவும் அவலநிலையில் இருப்பதற்கும், அவைகளின் செயல்பாடுகள் மோசமாகவும், தரமற்றதாக இருப்பதற்கும், அரசியல்வாதிகளும், கல்வித்துறை அதிகாரிகளுமே காரணம்.

டீக்கடை, ஒண்டு குடித்தன வீடு என்று எங்கு வேண்டுமானாலும் மெட்ரிக் பள்ளிகள் துவங்க லஞ்சம் வாங்கிக் கொண்டு அனுமதிக்கப்பட்டது. சட்ட திட்டங்களை ஒதுக்கிவிட்டு, மெட்ரிக் பள்ளிகளை திறக்க அனுமதித்ததற்கு லஞ்சமே காரணம்.

இது நகர்ப்புறங்களில் மட்டுமல்லாமல் கிராமப்புறங்களிலும் பரவிவிட்ட பெரும் வியாதி.

சட்ட திட்டங்களுக்கு உட்படாத பல பொறியியல் கல்லூரிகள், கலைக் கல்லூரிகள் மற்றும் பாலிடெக்னிக்குகள் மூடப்படும்போது, தவறான முறையில் துவங்கி நடைபெறும் மெட்ரிக் பள்ளிகளை ஏன் மூடக் கூடாது?

தரமில்லாத, சட்ட திட்டத்திற்கு உட்படாத மெட்ரிக் பள்ளிகளை தயவு தாட்சண்யமின்றி உடனே மூட உத்தரவு பிறப்பிக்க வேண்டும், இனியும் இப்பள்ளிகள் மீது கருணை காட்டக் கூடாது.

புதிய பள்ளிகளைத் துவக்க, தற்போதுள்ள சட்ட திட்டங்களை முழுமையாகக் கடைப்பிடித்த பின்னரே அனுமதி வழங்க வேண்டும்.''

'மெட்ரிக் பள்ளிகளைத் திறக்க அனுமதித்தற்கு லஞ்சமே காரணம்'

'தவறான முறையில் துவங்கி நடைபெறும் மெட்ரிக் பள்ளிகளை ஏன் மூடக் கூடாது?'

க. மைதிலி எழுப்பும் கேள்விகள் பொருளுள்ளவை; உண்மையானவை? நமக்கு மகிழ்ச்சியெல்லாம் சில பள்ளிகளை இழுத்து மூட வேண்டிய சூழ்நிலையும் நம் கண்முன்னாலேயே நிகழ்ந்தது என்பதுதான்!

ஏராளமான மெட்ரிக் பள்ளிகளுக்கு அனுமதி வாங்கித்தரும் 'ஆற்றல்' பெற்ற பெருமகன் - பள்ளிக் கல்வி இயக்குநர் அரங்க. தெய்வமணியின் அனுசரனையுடன் ஆணைகளை அள்ளிக்கொண்டு போன ஒருவர் - கல்வி அமைச்சர் அன்பழகனின் காலத்திலேயே சாதித்த ஒருவர்.

தற்போதைய ஆட்சியில் சிட்டிபாபு குழு உண்மை நிலைகளை அறிந்து சில பரிந்துரைகளைச் செய்தால் அதை ஏற்கமாட்டார்களாம்!

இவர்களே எல்லாத் தவறுகளையும் செய்வார்களாம்! ஆனால் அரசு தட்டிக் கேட்டால் ஒப்புக் கொள்ள மாட்டார்களாம்!

இவர்கள் அரசிடம் வைத்த கோரிக்கைகளை இக்கட்டுரையில் முதல்பக்கத்திலேயே பார்க்கலாம்!

எவ்வளவு முரண்பாடுகள்!

அவரது கூற்றை முதலில் படியுங்கள்.

1.6.2002 'தினமலர்' இதழில் உள்ள செய்தி இது.

'மெட்ரிகுலேஷன் பள்ளிகள் குறித்து சிட்டிபாபு கமிஷன் பாதகமான அறிக்கை தந்தால் ஏற்கமாட்டோம் என்று தமிழ்நாடு தமிழ் மற்றும் ஆங்கில பள்ளிகள் சங்க மாநில பொதுசெயலாளர் குமார் தெரிவித்துள்ளார்.

மதுரையில் இந்த அமைப்பின் மண்டல ஆலோசனை கூட்டம் மாநில பொதுசெயலாளர் குமார் தலைமையில் நடந்தது. பின்னர் குமார் நிருபர்களிடம் கூறியதாவது: மெட்ரிகுலேஷன் பள்ளிகள் குறித்து தமிழகத்தில் தவறான தகவல்க பரப்பப்படுகிறது. இது கண்டனத்திற்குரியது. இந்த பள்ளிகள் அரசின் பொருளாதார சுமையை பகிர்ந்து கொள்வதோடு, அரசுக்கு ஏற்படும் இழப்பை ஏற்று சொந்த செலவில் நடத்தப்படுகிறது. இந்த பள்ளிகளால் அரசுக்கு எந்தவித இழப்பும் இல்லை. தமிழகத்தில் சுமார் 3 ஆயிரம் அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகள் உள்ளன. சுமார் ஆயிரம் பள்ளிகள் அங்கீகாரம் பெறாமல் அனுமதிக்காக விண்ணப்பித்துள்ள நிலையில் உள்ளன. மெட்ரிக் பள்ளிகள் குறித்து சிட்டிபாபு கமிஷன் ஆராய்கிறது. அவர்களிடம் நாங்கள் 20 அம்ச கோரிக்கையை முன்வைத்தோம். அந்த கோரிக்கையின் உண்மை நிலையை அவர்கள் அரசிடம் இன்னும் கூறவில்லை.

இந்நிலையில் தமிழக அரசு மெட்ரிக் பள்ளிகள் துவக்குவது குறித்து புதிய விதிமுறைகள், நிபந்தனைகள் விதித்துள்ளது. 5 ஏக்கர் நிலம் வேண்டும், வகுப்பறை கட்டடம், மைதானம் என்று பல விதிமுறைகள் உள்ளன. இந்த நிபந்தனைகளை இப்போது அமல்படுத்த முடியாது. அதற்கு இன்னும் 5 ஆண்டுகள் கால அவகாசம் தேவை. தமிழகத்தில் உள்ள மெட்ரிக் பள்ளிகளின் ஆய்வாளர்கள் இந்த பள்ளிகள் குறித்து தவறான தகவல்களை அரசுக்கு தருகின்றனர். அவர்கள் பள்ளி நிர்வாகத்தினரை மிரட்டி வருகின்றனர். மெட்ரிக் பள்ளிகளின் உண்மை நிலையை அரசுக்கு எடுத்துக் கூறுவதுதான் அவர்களது கடமை. அதனை விடுத்து தவறான கருத்துக்களை பரப்புவது கண்டிக்கத்தக்கது. இந்த நிலை தொடருமேயானால் அவர்கள் மீது மானநஷ்ட வழக்கு தொடருவோம். சிட்டி பாபு கமிஷன் அரசுக்கு மெட்ரிக் பள்ளிகள்

குறித்து அறிக்கை சமர்ப்பிக்க உள்ளது. அறிக்கை சமர்ப்பிக்கும்போது அது எங்களுக்கு பாதகமானதாக இருந்தால் அதனை நாங்கள் ஏற்கபோவதில்லை. மெட்ரிக. பள்ளிகளில் பணம் அதிகம் வாங்குவதாக புகார் உள்ளது. ஆனால் நிலைமை அப்படி இல்லை. **அவரவர் வசதிக்கேற்ப வாங்கப்படுகிறது.** பிற பள்ளிகளோடு ஒப்பிடும்போது இந்த தொகை மிகவும் குறைவுதான். எங்கள் சங்கத்தை சேர்ந்த பள்ளிகள் அப்படி அதிகமான தொகை வாங்குவதாக கூறினால் நாங்கள் தார்மீக பொறுப்பேற்றுக் கொள்கிறோம். மெட்ரிக் பள்ளிகள் பல இப்போது மூடப்பட்டுவிடும் என்று பெற்றோர் பலர் பீதியடைகின்றனர். இந்த பள்ளிகள் எப்போதும் போல இயங்கும். இந்த பள்ளிகளில் கல்வி, ஒழுக்கம் நன்கு கற்றுத்தரப்படுகிறது. எனவே பெற்றோர் எங்கள் பள்ளிகளை தேடி வருகின்றனர். அந்த வாய்ப்பை ஏன் கெடுக்க வேண்டும். இந்த பள்ளிகள் பிசினஸ் நடத்தவில்லை. கல்வி ஒழுக்கத்தை வளர்க்கும் விதமாக செயல்படுகின்றன''.

மீண்டும் கவனியுங்கள்

'அரசு விதிக்கும் நிபந்தனைகளை நிறைவேற்ற 5 ஆண்டுகள் கால அவகாசம் வேண்டும்' என்கிறார்கள். மேற்கண்ட நிபந்தனைகளைக் காட்டியே அதற்குள் கொஞ்சம் வாங்கிக் குவித்துவிடலாம் என்பதுதான் திட்டம்.

'அவரவர் வசதிக்கேற்ப வாங்கப்படுகிறது' என்கிறார். 'பிற பள்ளிகளோடு . . . உண்மை எங்காவது ஒளிர்ந்து கொண்டுத்தானே இருக்கும்! 'பிற பள்ளிகள்' என்றால் எவை? கோடம்பாக்கம் அரசினர் மேல் நிலைப்பள்ளியா? இல்லை ஏற்கெனவே இயங்கிவரும், அரசு உதவிபெறும் தமிழ் வழிப் பள்ளிகளா? 'இவர்களை விடக் கூட வசூல் செய்யும் பள்ளிகள் இருக்கின்றன' என்பதனை அவரே ஒப்புக் கொள்வதைக் கவனிக்கவும்.

'தினமலர்' (5.6.2002) இதழில் வெளிவந்த செய்திகளைக் கவனியுங்கள்.

''மெட்ரிக் பள்ளிகள் எப்படியெல்லாம் நடக்க வேண்டும், எவ்வளவு கட்டணம் வசூலிக்க வேண்டும் என்பது பற்றி ஒரு மாதத்தில் தெரியவரும். மெட்ரிக் பள்ளிகள் குறித்து விசாரித்து வரும் கமிஷன் தனது அறிக்கையை தீவிரமாக பரிசீலித்து வருகிறது.

''மெட்ரிக் பள்ளி குறித்த ஆய்வு அறிக்கை ஒரு மாதத்திற்குள் அரசுக்கு தாக்கல் செய்யப்படும்,'' என்று மெட்ரிக் பள்ளி ஆய்வு கமிஷன் தலைவர் சிட்டிபாபு தெரிவித்தார்.

மெட்ரிக் பள்ளிகளின் நிலை குறித்து பல புகார்கள் வந்த வண்ணம் உள்ளன. கண்டபடி கட்டணம் வாங்குகின்றனர். பள்ளிகளில் ஒரு வசதியும்

இல்லை. அங்கீகாரமும் வாங்காமல் மாணவர்களை அலைக்கழிக்கின்றனர். இப்படி புகார்கள் வந்ததை அடுத்து, முறையற்று பள்ளிகள் நடந்து வருவது குறித்து தமிழக அரசு ஒரு கமிஷன் போட்டு விசாரிக்க உத்தரவிட்டது. முன்னாள் துணைவேந்தர் சிட்டிபாபு தலைமையில் குழு விசாரணை நடத்தி வந்தது. தமிழகத்தில் பல மாவட்டங்களுக்கும் சென்று விசாரணை நடத்தி வருகிறது. இந்த நிலையில் மெட்ரிக் பள்ளிகளில் கட்டணம் பல மடங்கு வசூலிப்பதற்கு தடை வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இது தொடர்பாக கமிஷனின் அறிக்கை வந்தால் தான் அரசு நடவடிக்கை எடுக்க முடியும். இது தொடர்பாக சிட்டிபாபு குழு தீவிரமாக பரீசீலித்து வருகிறது. மெட்ரிக் பள்ளிகள் குறித்த புகார்களை விசாரித்து சில முக்கிய சிபாரிசுகளை செய்ய இருக்கிறது. இன்னும் ஒரு மாதத்தில் அதன் அறிக்கை அரசிடம் தாக்கல் செய்யப்படும் என்று தெரிகிறது.

சேலத்தில் சிட்டிபாபு, நிருபர்களிடம் கூறியதாவது :

பள்ளி நிர்வாகங்களுக்கு மெட்ரிக் பள்ளி ஆய்வு கமிஷன் அனுப்பிய கேள்விகளுக்கு தேனி மாவட்டத்திலிருந்து 140 பள்ளிகளில் மட்டும் பதில் வந்துள்ளது. அனைத்து பள்ளிகளில் இருநதும் பதில் வந்த பின்னர் தான் அறிக்கையை முழுமையாக தயார் செய்ய முடியும். அறிக்கையில், மெட்ரிக் பள்ளி ஆசிரியர் ஊதியச் சீரமைப்பு, கட்டணம் உட்பட நிர்வாக சீரமைப்பு, பள்ளி மேம்பாடு, கல்வி தர மேம்பாடு போன்றவை இடம் பெறும்.

முதல் வகுப்பில் இருந்து ஐந்தாம் வரை நர்சரி பள்ளி துவக்க சில ஆண்டுகளாக அனுமதி இல்லாமல் இருந்தது. இனி இந்த தடை கிடையாது, விதிமுறைகளில் உள்ள தகுதிகளுடன், முறையாக விண்ணப்பித்தால் அனுமதி அளிக்கப்படும்.

மெட்ரிகுலேஷன் பள்ளி ஆசிரியர்கள் தங்களுக்கு அரசு பள்ளி ஆசிரியர்களுக்கு இணையான தகுதி, அனுபவம் இருந்தும் ஒதுக்கப்படுவதாக புகார் செய்கின்றனர். பள்ளி நிர்வாகம் தங்கள் பள்ளியில் பணிபுரியும் அனுபவம் வாய்ந்த திறமையான ஆசிரியர்களின் பட்டியலை மெட்ரிக் இயக்குனருக்கு அனுப்பினால் தேர்வு வினாத்தாள் தயார் செய்யும் குழுவிற்கு பரிந்துரை செய்யப்படும்.

தற்போது மூன்று மாவட்டங்களுக்கு ஒரு மெட்ரிக் பள்ளி ஆய்வாளர் உள்ளனர். மாவட்டத்திற்கு ஒரு ஆய்வாளர் உள்ளனர். மாவட்டத்திற்கு ஒரு ஆய்வாளரை நியமனம் செய்ய அறிக்கையில் பரிந்துரை செய்வோம். சேலம், நாமக்கல், தர்மபுரி ஆய்வுக்கு பிறகு, இம்மாதத்திற்குள் திருச்சி, மதுரை,

திருநெல்வேலி மாவட்டங்களில் ஆய்வு நடக்கும். அதிகபட்சம் ஒரு மாதத்திற்குள் ஆய்வறிக்கை அரசிடம் சமர்ப்பிக்கப்படும்.''

மெட்ரிகுலேஷன் பள்ளிகள் குறித்து ஒப்பிடப்பட்ட புகார்கள் எல்லாம் வந்துள்ளன என்பதனைச் சிட்டிபாபு சுட்டிக் காட்டுகிறார். மெட்ரிக் புள்ளி ஆசிரியர்களின் மனக்குறையும் இதில் புலப்படுத்தப் பட்டுள்ளது. பள்ளி நிர்வாகிகள் தவிர மற்றவர்கள் தாங்கள் ஒதுக்கப்படுவதாகவும், அலைக்கழிக்கப் படுவதாகவும் தெரிவித்துள்ளனர். சிட்டிபாபுவின் கூற்றுகளிலிருந்தே இவற்றை உணரமுடியும்.

மெட்ரிக் பள்ளி நிர்வாகிகளிடம் பேசிய பிறகு சிட்டிபாபு தொடுக்கும் சில வினாக்களைக் கவனியுங்கள் அவர்தரும் அறிவுரையையும் கவனியுங்கள், பெற்றோர்களுக்கு இதைவிட யார் தெளிவாகச் சொல்ல முடியும்?

அவருடைய நேர்காணலில் தெறித்து விழுந்த தொடர்கள் இவை

1. 'ஏதாவது கிடைக்குமா' என்று மெட்ரிக் பள்ளிகளைத் துவக்கியவர்களைக் களை எடுப்பது அரசின் கடமை.

2. பள்ளியை எப்படி வேண்டுமானாலும் நடத்திக் கொள்வோம். எங்களை யாரும் கேள்வி கேட்கக் கூடாதென நினைக்கிறீர்கள்.

3. காளான்கள் போல மெட்ரிக் பள்ளிகள் முளைத்துவிட்டன.

4. யாரும் கேட்க மாட்டார்கள்; பள்ளிக்கூடம் ஆரம்பிக்கலாம் என்ற எண்ணம் எப்படி வந்தது? பெற்றோர்களின் அறியாமையை பயன்படுத்திக் கொள்கிறீர்கள்.

5. கல்வியின் உண்மையான நோக்கம், நுணுக்கங்கள், லட்சியம், குறிக்கோள் இப்படி எதைப்பற்றியும் தெரியாதவர்கள் தயவு செய்து மெட்ரிக் பள்ளிகளை துவக்காதீர்கள். கல்வியின் அடிப்படை நோக்கம் தெரியாமல் 'ஏதாவது கிடைக்குமா' என்று மெட்ரிக் பள்ளி ஆரம்பித்தவர்களை களையெடுப்பது அரசின் கடமை.

6. இப்போதே உங்களால் முடியாதபோது, இன்னும் 5 ஆண்டுகளில் என்ன சாதீப்பீர்கள்?

7. சில மெட்ரிக் பள்ளிகள் தரமான கல்வி அளிப்பதில்லை. கலப்பட உணவு பொருட்கள் மீது நுகர்வோர் குற்றம் சொல்ல எப்படி உரிமை உள்ளதோ அது போல இனி குழந்தைக்கு படிப்பு வராவிட்டால் பள்ளி மீது குற்றம் சொல்லும் நிலையும் வந்து விடும். அப்போதுதான் தகுதியற்ற பள்ளிகள் காணாமல் போகும்.

8. மெட்ரிக் பள்ளிகளின் உண்மையான அடையாளங்களை அங்குலம் அங்குலமாக அளந்து காட்டுகிறார் நா.அருணாசலம். (தமிழ்ச் சான்றோர் பேரவையின் நிறுவனர் இவர்.) பேரவையின் சார்பில் வெளியிடப்படும் 'செய்தி மடலில்' இவரது விரிவான கட்டுரை இடம் பெற்றுள்ளது. படியுங்கள்.

நமது மண்ணும் மொழியும் இனப் பகைவர்களிடன் வேட்டைக் காடாக மாறி நீண்ட காலமாகிவிட்டது. வந்த எவரையும் வரவேற்று வளமாக வாழவைத்துவிட்டுச் சீரழிந்து கொண்டிருக்கிறது தமிழ் இனம்.

தமிழ் இனத்திற்கும் மொழிக்கும் இதுவரை பல்வேறுவிதமான சீர்கேடுகளும் சிதைவுகளும் நேர்ந்துள்ளன. நிகழ்காலத் தமிழகத்தின் தலையாய சீர்கேடு எது எனக் கேட்டால் அனைவருமே ஒருமித்த குரலில் சொல்லலாம் 'மெட்ரிக் பள்ளிகள்' என்று. ஏனெனில் பல்லாயிரக் கணக்கில் முளைத்துச் செழித்து வளர்ந்திருக்கும் மெட்ரிக் பள்ளிகள், தனக்கென ஒரு தகுதிவாய்ந்த மொழியைக் கொண்ட ஒரு மாபெரும் இனத்தின் இளம் தலைமுறையை குறிப்பாகக் குழந்தைகளை அவர்களின் இனிய பருவத்தை இன்னொரு மொழியால் சீரழித்துச் சிதைத்து வருகின்றன.

மற்ற எந்தச் சீர்கேட்டையும்விட இந்தச் சீர்கேடு மிகவும் ஆபத்தானது. ஏனெனில் பல இலட்சக் கணக்கான குழந்தைகள் ஆண்டுதோறும் இம் மண்ணிலிருந்தும் மொழியிலிருந்தும் அந்நியப்படுத்தப்படுகிறார்கள். தமிழ்நாட்டில் நூற்றுக்கும் குறைவான மெட்ரிக் பள்ளிகள் இருந்தது ஒரு காலம். இப்போது நிலைமையே வேறு. குடிசையாக முளைத்து கோட்டைகளாக வளர்ந்து அசைக்க முடியாது என்று சவால் விடுகிற அளவுக்கு அவை நிறுவனங்களாக நிலைபெற்று விட்டன. ஒரு நாட்டு மக்களை அடிமைப்படுத்துகிற வேலையை நிறுவனங்களே சரியாகச் செய்யும். கிழக்கிந்தியக் கம்பெனி முதற்கொண்டு எத்தனையோ எடுத்துக்காட்டுகள் இதற்கு உண்டு..

தமிழ் நாட்டில் உள்ள அனைத்து வகையான பள்ளிகளின் மொத்த எண்ணிக்கை 47,198 ஆகும்.

ஆங்கிலோ இந்தியன் பள்ளிகள்	-	41
மெட்ரிகுலேசன் பள்ளிகள் (தி.மு.க. ஆட்சியில் 1,464)	-	3,450
மத்திய அரசு நடத்தும் பள்ளிகள்	-	139

3,450 மெட்ரிக் பள்ளிகளில் ஆங்கிலமே பயிற்றுமொழியாக இருக்கிறது. இத்தனை மெட்ரிக் பள்ளிகளில் 23 விழுக்காடு பள்ளிகள். அரசு

அங்கீகாரம் பெறாதவைகளாக இருந்து 'பாடம்' புகட்டிக் கொண்டிருக்கின்றன. அரசு அங்கீகாரம் பெற்றிருந்தாலும் இல்லை யென்றாலும் மெட்ரிக் பள்ளிகள் தமிழுக்கும், தமிழருக்கும் எதிரானவை என்பதில் இரு வேறு கருத்துகள் கிடையாது.

எவ்வகையில் பார்த்தாலும் மெட்ரிக் பள்ளிகளே ஆங்கிலவழிக் கல்வியின் தூண்களாக இருந்து செயலாற்றுகின்றன. சேவை, இன்றைய காலக்கட்டத்தின் தேவை என்கிற போர்வைகளில் மொட்டை மாடிகளில் கீற்றுக் கொட்டைகளில் தொடங்கப்படும் இப்பள்ளிகள் பெற்றோர்களின் பணத்தில் பல்கிப் பெருகிச் செழித்து வளர்ந்துவிட்டன. சேவை, தேவை என்பவெல்லாம் மறக்கப்பட்டு முழுக்க முழுக்க வணிகமாக மாறிப் பின்னர் வணிகப் போட்டியாக பரிணாமம் பெற்று இன்று பெற்றோர்களுக்கும் மாணவர்களுக்கும் எசமானர்களாகவும் மாறிவிட்டிருக்கும் இப்பள்ளிகளில் கறாரான கல்வி எனும் பெயரில் தனி அரசாட்சி நடத்தி மாணவர்களின் இயல்பான அறிவாற்றலைக் கசக்கிப் பிழிந்தெடுக்கும் பணியைச் செய்து வருகின்றன.

தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் 35 விழுக்காட்டினர் (18 வயதுக்கு உட்பட்ட) குழந்தைகள், அதாவது 2 கோடியே 10 இலட்சம் குழந்தைகளை நாம் பெற்றிருக்கிறோம். இவர்களில் எவ்வளவு பேர் எங்கெங்கு படிக்கிறார்கள். படிப்பு மறுக்கப்பட்டு எவ்வளவு பேர் உழைக்கிறார்கள் என்கிற துயரமெல்லாம் ஒரு புறமிருக்க கல்வி எனும் பெயரில் வேறு ஒரு மொழியில் அழுக்கப்பட்டு அவர்கள் மூச்சுத் திணறிக் கொண்டிருக்கிற மெட்ரிக் கலாச்சாரத் துயரமும் இம்மண்ணில் மேலோங்கியிருக்கிறது.

மெட்ரிக் பள்ளிகள் மக்களுக்குள்ள அறிவியல் அடிப்படையற்ற ஆங்கில மோகத்தைப் பயன்படுத்திக் கொண்டு கொழுத்து வருவது கண்கூடான காட்சியாக இருக்கிறது. கல்வி வணிகப் போட்டியில் பள்ளிகளின், மிகக் குறிப்பாக மெட்ரிக் பள்ளிகளின் வகுப்பறைகள் எப்படிப் பட்ட வன்முறைக் கூடங்களாக மாறுகின்றன என்பதை செய்தித்தாள்களில் நிறையவே காணமுடிகிறது. குழந்தைகளின் உளவியல் தெரியாத வணிகர்களின் வளாகங்களில் கல்வி அடைபட்டிருப்பதால் பல இலட்சக் கணக்கான மாணவர்களும், பெற்றோர்களும் வெளியில் தெரியாத விபரீதமான மனக் காயங்களுக்கு ஆளாகியிருக்கிறார்கள். கண்டிப்பான கல்வி என்கிற பெயரில் வகுப்பறைகளில் விதம்விதமான மிரட்டல்களுக்கும் உடல்ரீதியான சித்திரவதைகளுக்கும் ஆளாகிய மாணவர்கள் சோர்ந்துபோய் வீட்டிற்கு வந்தவுடன் படித்தாயா, வீட்டுப் பாடம் செய்தாயா? என்று கேட்டுப்

பெற்றோர்களும் பிரம்பெடுத்து விடுகிறார்கள். இது போதாதென்று திரைப்படங்களும், தொலைக்காட்சிகளின் 24 மணி நேரச் சீர்குலைவும் சத்தங்களும் மாணவர்களின் மனநிலையை மேலும் மோசமாக்குகின்றன. பள்ளிக் கூடத்தில் பெற்றோர்களிடம் பணம் வாங்கிக் கொண்டு மாணவர்களை அடிக்கிறார்கள். பணத்தை ஆயிரம் ஆயிரமாகக் கொட்டிக் கொடுக்கிறோமே ஒழுங்காகப் படிக்கக் கூடாதா? என்று கேட்டு தம் பிள்ளைகளைப் பெற்றோர்கள் அடிக்கிறார்கள்.

பல பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்க்கப் போனால் பெற்றோர்கள் பட்டப் படிப்பு படித்திருக்கிறார்களா? என்கிற கேள்வியையே முதல் கேள்வியாகக் கேட்டிருக்கிறார்கள். பெற்றோர்கள் படித்திருந்தால்தான் பிள்ளைக்கு வீட்டில் சொல்லித் தருவார்கள் என்பது அவர்கள் கணக்கு. வீட்டில் நாங்கள் சொல்லித் தர வேண்டுமானால், நீ எதற்குப் பள்ளி நடத்துகிறாய்? என்று கேட்க நினைத்தாலும் பெற்றோர்களால் அது முடிவதில்லை. ஏனென்றால் தமது மகன் இன்ன இடத்தில், இன்ன மொழியில் படிக்கிறான் என்று சொல்லிக் கொள்வதுதான் அவர்களுக்குப் பெருமையாக இருக்கிறது. பெற்றோர் பட்டப் படிப்பு படித்திருக்கிறார்களா? என்று சில பள்ளி நிருவாகங்கள் கேட்பதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. மாணவனுக்குப் பாடம் புகட்டுகிற பணி சுலபமாக இருக்கும் என்பது ஒன்று. படிக்க வாய்ப்பற்றுப் போன பரம்பரை யொன்றில் பிறந்த பிள்ளைக்கு நாம் எதற்கு மெனக்கெட வேண்டும் என்பது இன்னொன்று. இதுதான் உண்மை.

சில பள்ளிகளில் வகுப்பறைகளில் சகமாணவனுடன் தமிழில் பேசிய மாணவர்களைப் பள்ளி வளாகத்தில் குப்பை பொறுக்க வைத்துத் தண்டிக்கிறார்கள். 'SSHHH. . . . . English' என்று மெட்ரிக் பள்ளிகளின் அலுவலகத்தில் எழுதி வைத்திருக்கிறார்கள்.

மெட்ரிக் பள்ளிகள் பட்டதாரிகளை உருவாக்கிய அளவிற்கு பண்புதாரிகளை உருவாக்கவில்லை.

புதுச்சேரியில் உள்ள ஒரு பள்ளியில் ஜார்ஜ் வில்லியம்ஸ் என்கிற ஆசிரியர் ஒருவர் ஐந்தாம் வகுப்பு மாணவன் சதீஷைக் குரூரமாகத் தாக்கி உடல் முழுவதும் காயப்படுத்தினார். தன் தந்தையுடன் சென்று கல்வி அமைச்சரிடமே தன் சிதைந்த உடலைக் காட்டி அழுதான் அந்த மாணவன். இப்போது அந்த ஆசிரியர் கைது செய்யப்பட்டுச் சிறையில் இருக்கிறார். அடியாத மாடு படியாது என்பது மாணவர்களுக்கு மட்டுமல்ல மாடுகளுக்கே பொருந்தாது. ஆசிரியரிடமே அடிபட்டு அவமானப்படுகிற மாணவன் படியமாட்டான். மனத்தளவில் படுத்துக் கொள்வான். அல்லது சூழ்நிலை அமைந்துவிட்டால் போக்கிரியாகிப் போவான்.

நூறு சதவிகிதத் தேர்ச்சி என்று சுவரொட்டி அடித்து ஊர் முழுக்க ஒட்டுகிற அளவுக்கு மெட்ரிக் பள்ளிகளுக்கிடையே வணிக வெறி கொடிகட்டிப் பறக்கிறது. கோப்பையை நிரப்பிக் காட்டி பொதுமக்களிடம் கொள்ளையடிப்பதற்காக மாணவர்களை எப்படி வேண்டுமானாலும் கசக்கிப் பிழிந்து சாறு எடுக்கிற தொழிலை மெட்ரிக் பள்ளிகள் குரூரமாகச் செய்து வருகின்றன.

மேலை நாடுகளில் பெற்றோர்கள் தமது பிள்ளையின் மீது ஆத்திரப்பட்டு கை வைத்துவிட்டால் கைது செய்யப்படுகிறார்கள். இங்கே யாரோ பெற்ற பிள்ளைகளை ஆசிரியன் என்ற போர்வையில் எவனோ ஒருவன் பிய்த்து எடுத்துவிடுகிறான். படி படி என்று ஆசிரியர்களும், பெற்றோர்களும் நச்சரித்துக்கொண்டும், வற்புறுத்திக் கொண்டும் மிரட்டிக் கொண்டுமிருப்பதால் வீட்டைவிட்டு ஓடிப் போகிற மாணவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டேயிருக்கிறது. இதை நாம் சொல்லவில்லை. இந்தியத் துணைக் கண்டத்திலேயே முதன் முதலாகத் தமிழ்நாட்டில் தோற்றுவிக்கப்பட்டிருக்கிற காணாமல் போன குழந்தைகளைக் கண்டுபிடித்துத் தரும் அமைப்பின் ஆய்வு முடிவுகள் சொல்கின்றன. அரசின் சமூகப் பாதுகாப்புத் துறையின் கீழ் தற்போது சென்னை, கோவை, மதுரை ஆகிய மூன்று நகரங்களில் மட்டும் இயங்கிவரும் இந்த அமைப்பு இரண்டு ஆண்டுகளில் (2000-2002) சென்னையில் மட்டும் பெற்ற 185 புகார்களை ஆய்வு செய்ததில் 39 குழந்தைகள் ஆசிரியருக்கும், பெற்றோருக்கும், இந்த இரு தரப்பும் சேர்ந்து வலியுறுத்தும் படிப்புக்கும் பயந்து வீட்டை விட்டு ஓடியிருப்பது தெரிய வந்திருக்கிறது. மற்ற நகரங்களிலும் இதே நிலைதான்.

சுயசிந்தனையற்றவர்களை உருவாக்குவதில் ஆங்கில வழிக் கல்வி மெட்ரிக் பள்ளிகள் பெரும் சாதனை படைக்கலாம். ஆனால் தமிழ்ச் சமூகத்திற்கு அது தலையாய வேதனையாக இருக்கும்.

9. தினமலரில் (1.8.2003) வந்த செய்தியைப் படியுங்கள். தலைப்புகள்

மெட்ரிக் பள்ளி நிர்வாகங்கள் சூப்பர் முறைகேடு
ஒரு பள்ளி பெயரில் அங்கீகாரம் பெற்று கிளைப்பள்ளிகள் நடத்தி வசூல் வேட்டை

ஒரு மெட்ரிகுலேஷன் பள்ளிக்கு அங்கீகாரம் பெற்றுக்கொண்டு அதே பெயரில் பல பள்ளிகளை துவக்கி நடத்துவது காஞ்சிபுரத்தில் அதிகரித்து வருகிறது. இது பெற்றோரிடையே கடும் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளது.

காஞ்சிபுரத்தில் பெருகி வரும் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் மக்களிடையே பெரும் குழப்பத்தை ஏற்படுத்தி உள்ளன. பள்ளி துவங்க

வேண்டிய அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் பள்ளிகளை துவக்கி மாணவர்களிடம் வசூல் வேட்டை நடத்தி வருகின்றனர் என்ற குற்றச்சாட்டு பெற்றோரிடையே உள்ளது. மெட்ரிகுலேஷன் பள்ளி அறக்கட்டளை அல்லது குறிப்பிட்ட சங்கத்தால நிர்வகிக்கப்பட்ட அறக்கட்டளை அல்லது சங்கம் அரசால் பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும். பள்ளி சொத்துக்கள் அனைத்தும் அறக்கட்டளை அல்லது சங்கத்தின் பெயரில் இருக்கவேண்டும். தனிப்பட்ட நபரின் பெயரில் இருக்கக்கூடாது. ஊரகப் பகுதிகளில் மெட்ரிகுலேஷன் பள்ளி அல்லது மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளிதுவக்க குறைந்தது 5 ஏக்கர் நிலம் இருக்க வேண்டும். மாநகராட்சி அல்லது நகராட்சிப் பகுதியாக இருந்தால் குறைந்தது 55 சென்ட் நிலம் அல்லது 10 கிரவுண்ட் நிலம் இருக்கவேண்டும். அந்த நிலம் அறக்கட்டளை அல்லது சங்கத்தின் பெயரில் இருக்க வேண்டும். 50 வருட குத்தையாக இருந்தால் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.

ஒரு பள்ளி அமைக்கப்படும் இடத்திலிருந்து ஒரு கிலோமீட்டர் தூரத்திற்குள் வேறொரு பள்ளி இருக்கக் கூடாது. புதிய பள்ளி துவக்கப்படும் இடத்தின் அருகே அரசு அனுமதி பெற்ற வேறொரு பள்ளி இருந்தால் அந்த பள்ளி நிர்வாகத்திடமிருந்து தடையில்லா சான்றுபெறவேண்டும். ஊரகப்பகுதியில் 8 கிலோமீடடர் தூரம் வரை விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. பள்ளியின் கட்டடம், விளையாட்டு மைதானம் அனைத்தும் ஒரே வளாகத்தில் இடம் பெற வேண்டும். விளையாட்டு மைதானம் பள்ளி வளாகத்தில் இடம் பெற்றிருக்கவேண்டும். விளையாடும் தகுதியுடன் மைதானம் இருக்க வேண்டும்.

குடியிருப்புப் பகுதியில் பள்ளிகள் இருக்கக் கூடாது. பள்ளியில் வகுப்பறைகள் தனித்தனியே இருக்க வேண்டும். முதல்வர் அறை, விளையாட்டு அறை, ஆசிரியர்கள் அறை, மூன்று பரிசோதனைக் கூடங்கள், தேவையான கழிப்பிடம், குடிநீர் வசதி போன்றவை இருக்கவேண்டும். முதலில் பள்ளி துவங்க அனுமதி பெறவேண்டும். அதன்பின் அங்கீகாரத்திற்கு விண்ணப்பிக்கவேண்டும். அங்கீகாரம் கிடைத்த பின் மாணவர்களை சேர்க்கவேண்டும். அங்கீகாரம் கிடைத்த இரண்டு மாதத்திற்குள் பள்ளியை துவக்க வேண்டும்.

முதலில் எல்.கே.ஜி., முதல் 6ம் வகுப்பு வரை துவக்க வேண்டும். அடுத்த ஆண்டு உயர் வகுப்புகளை துவக்க வேண்டும். இதன்மூலம் 5 வருடங்களில் பள்ளி முழுமைப் பெறும். மெட்ரிகுலேஷன் பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும் போது முதல் வருடத்தில் 11ம் வகுப்பு துவக்க வேண்டும். இரண்டாவது வருடத்தில் 12ம் வகுப்பை துவக்க

வேண்டும். பள்ளிக் கட்டடத்திற்கு அனுமதி பெற்றிருக்க வேண்டும். தாசில்தாரிடம் கட்டட உரிமைச்சான்று பெறவேண்டும். சுகாதார அலுவலரிடம் கழிப்பிடம் குறித்து சான்றிதழ் பெற வேண்டும்.

இவ்வாறு மெட்ரிகுலேஷன் பள்ளிகள் துவக்க அரசு விதிமுறைகளை வகுத்துள்ளது. இந்த விதிகளை எந்த மெட்ரிகுலேஷன் பள்ளிகளும் பின்பற்றவில்லை. காஞ்சிபுரத்தில் பெரும்பாலரின் பள்ளிகள் குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ளன. ஒரு பள்ளிக்கு அங்கீகாரம் பெற்றுவிட்டு பல கிளைப் பள்ளிகளை அங்கீகாரம் பெறாமல் நடத்தி வருகின்றன பல நிர்வாகங்கள். காஞ்சிபுரம் விளக்கடிகோயில் தெருவில் ஒரு மெட்ரிகுலேஷன் பள்ளி உள்ளது. இது அரசு அங்கீகாரம் பெற்றது. இந்தப்பள்ளி பெயரில் வரதராஜப் பெருமாள் கோயில் சன்னதி தெரு, முனுசாமி அவின்யூ, சப்பாணி பிள்ளையார் கோயில் தெரு, வணிகர் வீதி, எல்லப்பா நகர், ஓரிக்கை ஆகியப் பகுதிகளில் கிளைப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன.

நெல்லுக்காரத்தெரு, ஆலடிப் பிள்ளையார் கோயில் தெரு, களக்காட்டூர் ஆகிய பகுதிகளில் ஒரு பள்ளி கிளைகளை அமைத்துள்ளது. பல பள்ளிகளில் விளையாட்டு மைதானம் கிடையாது. மாணவர்கள் விளையாட்டு என்றால் என்ன என்றே தெரியாமல் வளர்ந்து வருகின்றனர். சில பள்ளிகளில் அடிப்படை வசதிகள் எதுவும் கிடையாது. மாணவர்களை கூண்டுக்குள் அடைத்து வைப்பதுபோல் ஒரே அறையில் அடைத்து வைக்கின்றனர். மாணவர்களிடமிருந்து அளவுக்கு அதிகமாக பணம் வசூலிக்கும் பள்ளி நிர்வாகம் அவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுக்க தயக்கம் காட்டுகிறது என்று பெற்றோர் குற்றம் சாட்டுகின்றனர்.

மெட்ரிக் பள்ளி இயக்குனர் மெட்ரிக் பள்ளிகள் ஒரே கட்டடத்தில் இயங்க வேண்டும். கிளைப் பள்ளிகள் நடத்தக் கூடாது. நடத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஓர் உத்தரவைப் பிறப்பித்தார். ஆனால் காஞ்சிபுரத்தில் பெரும்பாலான பள்ளிகள் கிளைப் பள்ளிகளை நடத்தி வருகின்றன. இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அடிப்படை வசதிகள் இல்லாமல் நடத்தப்படும் கிளைப்பள்ளிகளை ஒழிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனப்பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.''

இந்தச் செய்தியில் தொனிக்கும் காட்டமான பகுதிகளை மீண்டும் நினைவிற் கொள்வோம்.

''ஒரு பள்ளி பெயரில் அங்கீகாரம் பெற்று கிளைப் பள்ளிகள் நடத்தி வசூல் வேட்டை''

''இந்த விதிகளை எந்த மெட்ரிகுலேஷன் பள்ளிகளும் பின்பற்றவில்லை.''

''மாணவர்கள் விளையாட்டு என்றால் என்ன என்றே தெரியாமல் வளர்ந்து வருகின்றனர். சில பள்ளிகளில் அடிப்படை வசதிகள் எதுவும் கிடையாது.''

''அடிப்படை வசதிகள் இல்லாமல் நடத்தப்படும் கிளைப்பள்ளிகளை ஒழிக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்''

மெட்ரிக் பள்ளிகளின் போலித்தனங்களையும், வசதி எதுவும் செய்து கொடுக்காமலேயே பணத்தை வாரிக் குவிக்கும் கொடுமைகளையும் இப்போதாவது உணர முடியும் எனறு கருதுகிறேன்.

10. 19.10.2003ஆம் நாளிட்ட 'தினமலரில்' மெட்ரிக் . . பள்ளிகளின் இயக்குநர் நாராயணசாமி கூறியிருப்பதைக் கவனியுங்கள்.

''தற்போதுள்ள, மெட்ரிக், பள்ளிகள் சிறப்பாக இயங்கி வருகின்றன. ஆனால், இது போதாது. இன்னும் சிறப்பாக தரமான கல்வியை தரும் நோக்கில் மெட்ரிக., பள்ளிகள் செயல்படவேண்டும். தமிழகத்தில கல்வி புரட்சி ஏற்பட்டுள்ளது. இதனை தக்க வைத்துக்கொள்ள வேண்டும். வருங்காலங்களில் தரமான பள்ளிகள் மட்டுமே நிலைத்து நிற்கும். தரமில்லாத பள்ளிகள் தானாகவே அழிந்து விடும். நாங்கள் அழிக்க வேண்டியதில்லை.

தமிழகத்தில் 3 ஆயிரத்து, 200 மெட்ரிக், மற்றும் மெட்ரிக், மேல்நிலைப்பள்ளிகள் உள்ளன. பள்ளிகளுக்கு போதிய வசதிகளை ஏற்படுத்தி அங்கீகாரத்தை பெற வேண்டும் என்று நாங்கள் பல முறை வலியுறுத்தி வருகிறோம். ஆனாலும், சில பள்ளிகள் இதைப்பற்றி கவலைப்படவில்லை. இதன் காரணமாக அங்கீகாரம் இல்லாமல் 140 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இதுபோன்ற பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் வரும் பொதுத்தேர்வை எழுதமுடியாது. நாங்கள் அனுமதிக்கவும் மாட்டோம் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

கல்வித்துறைக்கு சம்பந்தமே இல்லாத விவசாயிகள், நகைக்கடை நடத்துபவர்கள் போன்றவர்கள் எல்லாம் கூட பள்ளிகளை நடத்தி வருகின்றனர். இவர்களுக்கு கல்வித்துறையை பற்றிய போதிய விவரம் இல்லாத போதிலும் சிறப்பாகவே நடத்தி வருகின்றனர். எனினும் ஒரு பள்ளியை எப்படி நடத்த வேண்டும் என்று பல பேருக்கு தெரிவதே இல்லை. எங்களுடைய வழிமுறைகளையும், விதிமுறைகளையும் கடைபிடிப்பதும் இல்லை. இதன் காரணமாக ஒரு தேக்க நிலை ஏற்படுகிறது. போதுமான உள் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தி சரியான முறையில் கற்பித்தால் மெட்ரிக் பள்ளிகளின் தரம் மேலும் உயரும்.

மெட்ரிக் பள்ளிகள் தரமாக இயங்கினால்தான் சங்கமும் இருக்கும். நானும் இருப்பேன். பள்ளியை சிறப்பாக நடத்துவது குறித்து மெட்ரிக், பள்ளி முதல்வர்கள் மற்றும் தலைமை ஆசிரியர்களுக்கு நாங்கள் இரண்டு நாள் பயிற்சி கொடுக்க திட்டமிட்டுள்ளோம். இதில் பல்வேறு விஷயங்கள் குறித்து அவர்களுக்கு பயிற்சி தரப்படும்.''

இவ்வளவு எடுத்துச் சொல்லியும் 140 பள்ளிகள் இன்னும் அரசின் ஏற்புப் பெறாமலேயே இயங்குகின்றன. அந்தப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் தேர்வு எழுதமுடியாமல் போகுமானால் அதற்கு யார் பொறுப்பு?

ஒரு தேர்வு எழுத முடியாமல் போனாலும் அந்த அடி மாணவர்களுக்குத்தானே! எண்ணிப் பார்த்தார்களா இவர்கள்!

சரியான அடிப்படை வசதிகளும் இல்லாமல், கல்வித்துறையின் விதிமுறைகளையும் சரியாகக் கடைப்பிடிக்காமல், சரியான அங்கீகாரம் பெறாமல் இந்தப் பள்ளிகளை நடத்தவேண்டிய தேவை என்ன? வள்ளல் அழகப்பரை, வள்ளல் பச்சையப்பரை, அண்ணாமலை அரசரைப் போல் கல்விக் கோமான்கள் ஆகவேண்டும் என்ற துடிப்போ?

இருக்க முடியாது என்பதைத்தான் இந்த 'கல்வி அறுவடை'யாளர்களின் தவறான அணுகுமுறைகள் நமக்குக் காட்டி விடுகின்றனவே!

எனவே இவர்கள் கல்வியை வளர்க்கப் பள்ளி தொடங்கவில்லை; மாணவர்களை உருவாக்கி அவர்களை மாண்புமிகு மாணவர்கள் ஆக்கும் எண்ணத்தில் இந்த நிறுவனங்களை நடத்தவில்லை!

காசு! காசு! எப்படியும் அள்ளிவிட வேண்டும்.

பெற்றோர்களின் அறியாமையும், பிள்ளைகளின் தெரியாத் தனமும் இருக்கும் வரை இவர்கள் கடை நடக்கும்! அன்பழகனும் அரங்க தெய்வ மணியும் இருக்கும்வரை இவர்கள் கடை நடக்கும்! அங்கீகாரம் இல்லாத பள்ளிகட்கு ஓர் அடி கொடுத்தால் தான் உண்மை ஊருக்கு விளங்கும்!

11. பாடங்களை முன்கூட்டியே நடத்துதல். தினமலர் (6.11.2003)

அரசு தலையிட்டு ஓர் ஆணை பிறப்பிக்க வேண்டிய தேவை ஏற்பட்டு விட்டது. ஏன் என்று தெரிந்தால் நீங்கள் வியப்படைவீர்கள். ஆனால் மாணவர்கள் பயன் அடைகிறார்களா? இல்லை. 'சுமை கூடுகிறது. நினைவாற்றல் தடுமாறுகிறது. நிலைமைதனை எண்ணிப் பாருங்கள். இதோ செய்தி:

மெட்ரிக், பள்ளிகளுக்கு தமிழக அரசு'செக்!'

எஸ்.எஸ்.எல்.சி., ப்ளஸ் 2 பாடங்களை முன்கூட்டியே நடத்தினால் அங்கீகாரம் ரத்து

''தமிழகத்தில் அரசு பொதுத் தேர்வு என்றாலே மெட்ரிக், மற்றும் மெட்ரிக், மேல்நிலைப் பள்ளிகள் சாதனை நிகழ்த்தி வருகின்றன. பெரும்பாலான பள்ளிகளின் நோக்கமே, தங்கள் பள்ளி மாநில 'ரேங்க்' பெற வேண்டும் என்பதுதான். அதிலும், 100 சதவீத தேர்ச்சிக்கு போட்டா போட்டி நிலவுகிறது.

இதற்காக, எஸ்.எஸ்.எல்.சி., பாடங்களை ஒன்பதாம் வகுப்பிலும், ப்ளஸ் 2 வகுப்பிற்கான பாடங்களை ப்ளஸ் 1 வகுப்பிலும் மெட்ரிக், பள்ளிகளில் கற்பிக்கப்பட்டு வருகிறது.

சில பள்ளிகளில் ஒன்பதாம் வகுப்பிலேயே எஸ்.எஸ்.எல்.சி., பாடமும், ப்ளஸ் 1 வகுப்பிலேயே ப்ளஸ் 2 பாடங்களும் முடிக்கப்பட்டு விடுகின்றன. ஒன்பது மற்றும் ப்ளஸ் 1 வகுப்பின் ஆண்டு இறுதி தேர்வு, எஸ்.எஸ்.எல்.சி., மற்றும் ப்ளஸ் 2 அரசு பொதுத் தேர்வு போலவே நடத்தப்படுகிறது.

கிட்டத்தட்ட, மெட்ரிக், பள்ளி மாணவ, மாணவியர் எஸ்.எஸ்.எல்.சி., மற்றும் ப்ளஸ் 2 வகுப்பில் நுழையும் போதே, அந்த வகுப்பிற்கான அனைத்து பாடங்களையும் முடித்துள்ளனர். எஸ்.எஸ்.எல்.சி., மற்றும் ப்ளஸ் 2 வகுப்புகளில் திரும்ப தேர்வுகள் நடத்தப்பட்டு, அரசு பொதுத் தேர்விற்கு தயாராகின்றனர்.

இதனால் மாணவ, மாணவியர் பெரும் துயரத்திற்கு ஆளாகின்றனர். குறிப்பாக நினைவாற்றல் பாதிப்பு, அதிக வேலை பளு காரணமாக தூக்கமின்மை போன்ற காரணங்களால் அவதிப்படுகின்றனர்.

அதிலும், ஒன்பதாம் வகுப்பில் எஸ்.எஸ்.எல்.சி., பாடத்திலும், ப்ளஸ் 1 வகுப்பில் ப்ளஸ் 2 பாடத்திலும் தேர்ச்சியடையாத மாணவ, மாணவியர் பலர், அடுத்த ஆண்டு எஸ்.எஸ்.எல்.சி., வகுப்பிலும், ப்ளஸ் 2விலும் சேர அனுமதியும் மறுக்கப்பட்டது.

இதனால், ஒரு கல்வியாண்டை முழுமையாக இழக்கும் பரிதாபத்தையும் மாணவர்கள் அனுபவித்தனர்.

இதுகுறித்து மாணவ, மாணவியரின் பெற்றோர், சமூக நல அமைப்புகள், மனோதத்துவ டாக்டர்கள், கல்வியியல் ஆலோசகர்கள், மெட்ரிக், பள்ளிகளில் பாடங்களை முன்கூட்டியே நடத்துவதற்கு தடைவிதிக்க' என்று கோரிக்கை விடுத்தனர்.

இவர்களின் கோரிக்கையை பரிசீலித்த தமிழக அரசு அதிரடி உத்தரவை பிறப்பித்துள்ளது.

அரசு உத்தரவு விபரம் :

* எஸ்.எஸ்.எல்.சி., மற்றும் ப்ளஸ் 2 பாடங்களை முறையே ஒன்பது மற்றும் ப்ளஸ் 1 வகுப்புகளில் நடத்துவது முற்றிலும் தவறு. இதனால் மாணவ, மாணவியரின் உடல் நலம் பாதிக்கப்படுகிறது.

* எனவே, அந்தந்த ஆண்டின் பாடங்களை மட்டுமே அந்தந்த வகுப்புகளில் கற்பிக்க வேண்டும்.

* அரசு உத்தரவை மதிக்காமல், மெட்ரிக், பள்ளிகளில் எஸ்.எஸ்.எல்.சி., மற்றும் ப்ளஸ் 2 பாடங்களை முன்கூட்டியே கற்பிப்பது கண்டுபிடிக்கப்பட்டால், சம்மந்தப்பட்ட பள்ளியின் அங்கீகாரம் ரத்து செய்யப்படும்.

* அரசு உத்தரவை மீறும் பள்ளி நிர்வாகிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

* ஒன்பது மற்றும் ப்ளஸ் 1 வகுப்புகளின் பாடங்களை உடனடியாக முடித்து விட்டு, அதன் பிறகு எஸ்.எஸ்.எல்.சி., மெட்ரிக், மற்றும் ப்ளஸ் 2 பாடங்களை கற்பிப்பதும் கூடாது.

* ஒன்பது மற்றும் ப்ளஸ் 1 வகுப்பின் இறுதியாண்டு தேர்வு முடியும் முன்னும் அந்த வகுப்பில் எஸ்.எஸ்.எல்.சி., மற்றும் ப்ளஸ் 2 பாடங்களை கற்பிக்கக் கூடாது.

இவ்வாறு அரசு உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.''

தங்கள் பள்ளிதான் சிறந்த பள்ளி என்று காட்டுவதற்காகவும், வெற்றி விழுக்காட்டினை உயர்த்துவதற்காகவும் மெட்ரிக் எப்படி போட்டி போட்டு வேலை செய்கின்றன என்பதை மட்டுமல்ல, மாணவர்களை எவ்வளவு பிழிந்து எடுக்கின்றன, கொஞ்சம் பின்தங்கும் மாணவர்களைக் கூட எப்படி இவை ஈவு இரக்கமில்லாமல் வெளியே துரத்துகின்றன என்பதனை இந்தச் செய்திகள் மூலம் உணரமுடியும். தேபிரித்தோ பள்ளியில் ஒரு மாணவர் மூன்றாண்டுகளாக ஒரே வகுப்பில் இருந்தார். ஆனால் அவரை விரட்டவில்லையே பள்ளி நிர்வாகம் (1956) அடிப்படை வசதியில்லாமை, வகுப்பறைகள் போதாமை, ஆசிரியர் பற்றாக்குறை ஆகியவற்றில்தான் அரசினர் உயர்நிலை, மேல்நிலைப்பள்ளிகளின் குறைபாடு இருக்குமே தவிர மெட்ரிக் பள்ளிகளில் இருக்கும் பல்வேறு குற்றச் செயல்கள் வழிப்பறிக் கொள்ளைகள் எங்கும்

இருப்பதில்லை. கல்வி யார் யார் கையிலோ மாட்டிக் கொண்டு எப்படி 'அலங்கோலத்துக்கு' ஆளாகின்றது என்பதை உணருங்கள். ஆனால் இவர்களது ஆர்ப்பாட்டமும் துள்ளலும் மட்டும் கொஞ்சமா?

12. மழலையர் பள்ளிகள், மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் எப்படிக் கொள்கை அடிக்கின்றன என்பதனை எல்லாரும் சொல்லி வருகிறார்கள். தினமலர் (10.6.2000) இதழில் வந்த செய்திகள் இவை :

''தனியாரால் நடத்தப்படும் மருத்துவம் மற்றும் பொறியியல் கல்லூரிகளின் கட்டணத்தை நிர்ணயம் செய்யும் அரசு, அதே போல எல்.கே.ஜி., யு.கே.,ஜி., போன்ற 'உயர் படிப்புகளுக்கான' கட்டணத்தையும் நிர்ணயம் செய்ய வேண்டும் என்று பாதிக்கப்பட்ட பெற்றோர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

என்ன, வியப்பாக இருக்கிறதா? உண்மைதான். இந்த அளவுக்கு நிலைமை மோசமாக ஆகிவிட்டது. இந்த அடிப்படை படிப்புகளில் சேர்க்க பல ஆயிரங்களை பெற்றோர் இழக்க வேண்டியுள்ளது.

கடந்த பல ஆண்டுகளாக புதிய பள்ளிக்கூடங்களை அரசு நிறுவவில்லை. ஏற்கெனவே இருக்கும் அரசு பள்ளிகளின் வசதிகளை மேம்படுத்தவும் இல்லை. அதே சமயம் பள்ளிகளை தனியார்கள் திறந்து நடத்த அரசு ஊக்கம் அளித்து வந்தது. இதை பயன்படுத்திக் கொண்டு முதலில் சில தொண்டு நிறுவனங்கள் பள்ளிக் கூடங்களை நிறுவினர். ஆனால், பள்ளிக் கூடம் நடத்துவதால் கிடைக்கக்கூடிய பெரும் வருமானத்தையும், சமூக செல்வாக்கையும் உணர்ந்துக் கொண்ட பல வியாபாரிகள் தங்கள் பணத்தை பள்ளி ஆரம்பிப்பதில் முதலீடு செய்தனர்.

இரண்டு அறைகளில் எல்.கே.ஜி., மற்றும் யு.கே.ஜி., வகுப்புகளுடன் தொடங்கப் படும் தனியார் பள்ளிகள், சில ஆண்டுகளிலேயே மிகப்பெரும் கட்டடங்களுடன் பனிரெண்டாம் வகுப்பு வரையுள்ள பள்ளியாக மாறுகிறது. முதலில் ஒரு அறையில் எல்.கே.ஜி., யு.கே.ஜி., வகுப்புகளையும் மற்றொரு அறையில் 1 முதல் 3ம் வகுப்பு வரை நடத்துகின்றனர். சம்பந்தப்பட்ட அரசு அலுவலர்களை நன்றாக 'கவனித்து' அரசின் அங்கீகாரத்தைப் பெறுகின்றனர். இவ்வாறு பெற முடியாவிட்டால், அரசியல்வாதிகளை கவனித்துவிட்டு அவர்கள் ஆசியுடன் அரசு அங்கீகாரம் பெற்று விடுகின்றனர்.

பள்ளிக்கு வருமானம் வரத் தொடங்கியவுடனேயே சொந்தமாக ஒரு நிலத்தையோ கட்டடத்தையோ வாங்கி விடுகின்றனர். பிறகு பெற்றோர்களிடமிருந்து பணத்தை பறித்தே அனைத்து வசதிகளையும் உருவாக்குகின்றனர். பெற்றோர்களிடமிருந்து வசூலிக்கப்படும் பணத்துக்கு

பல தனியார் பள்ளிகள் முறையாக ரசீது அளிப்பதே கிடையாது. அப்படி கொடுத்தாலும் கணிசமான தொகையை வாங்கிக்கொண்டு சொற்ப பணத்துக்கே ரசீது கொடுக்கின்றனர். அங்கீகாரம் பெற்ற பின்னரும், கழிப்பறை, குடிநீர் வசரிகளை தனியார் பள்ளிகள் உருவாக்குவதே கிடையாது.

பல தனியார் பள்ளிகள், குழந்தைகளை சேர்க்கும் போது 'டெவலப்மென்ட் பீஸ்', 'பில்டிங் பீஸ்', 'டொனேஷன்' என்ற பெயர்களில் 3 ஆயிரம் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை வாங்குகின்றனர். சென்னை அண்ணா நகர் மேற்கு பஸ் நிலையத்துக்கு அருகேயுள்ள புகழ்பெற்ற மெட்ரிகுலேஷன் உயர்நிலைப் பள்ளியில் குழந்தைகளை சேர்க்க வரும் பெற்றோர்களிடம் கேட்கப்படும் முதல் கேள்வியே, பெற்றோர்கள் இருவரும் பட்டதாரிகளா என்பதே. இரண்டு பெற்றோர்களும் பட்டதாரிகளாக இல்லாத பட்சத்தில், அவர்களின் குழந்தைக்கு சீட் மறுக்கப்படுகிறது. பெற்றோர்களின் வசதியைப பொருத்து ரூ.10ஆயிரம் முதல் ரூ.15 ஆயிரம் வரை பள்ளி நிர்வாகம் டொனேஷனாக பெற்றுக் கொள்கிறது. இதே நடைமுறையை சென்னையில் பல பள்ளிகள் பின்பற்றுகின்றன.

இதுதவிர, எல்.கே.ஜி., வகுப்பிற்கே ஆண்டுக்கு 6 ஆயிரம் ரூபாய் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. சென்னையில் உள்ள பெரிய பள்ளிகள் பலவற்றிலும் எல்.கே.ஜி., வகுப்புக்கான கட்டணம் 4 ஆயிரம் ரூபாய் முதல் 6 ஆயிரம் ரூபாய் வரை வசூலிக்கப்படுகிறது. 'டொனேஷன்' வாங்காத சில பள்ளிகளில் கூட சேர்க்கை கட்டணமாக ஆயிரம் ரூபாய் வரை வசூலிக்கப்படுகிறது.

மேலும் பள்ளிகள் பலவும் அனைத்து குழந்தைகளும், பள்ளியில் விற்கப்படும் அல்லது சிபாரிசு செய்யும் கடைகளில் தான் பள்ளிச் சீருடை வாங்க வேண்டும் என்ற கட்டாயத்துக்கு ஆளாக்கப்படுகின்றனர். சீருடையை தைப்பதற்கு பள்ளியே டெய்லர்களை ஏற்பாடு செய்கிறது. இதுபோன்ற பள்ளிக் குழந்தைகளின் தேவைகளை வைத்தும் நன்கு லாபம் ஈட்டுகின்றனர். திருவான்மியூரில் உள்ள ஒரு பிரபல பள்ளியில் ஆண்டுக் கட்டணமாக 7 ஆயிரம் ரூபாய் வரை வசூவிக்கப்படுகிறது.

சீருடை வியாபாரம் பல தனியார் பள்ளிகளிலும் ஜோராக நடக்கிறது. பத்து ரூபாய் பெறுமானமுள்ள பள்ளிக் குழந்தைகளுக்கான 'டை' 30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. 'பேட்ஜ்' என்ற பெயரில் தகரத்தாலான ஒன்றை கொடுத்துவிட்டு 25ரூபாய் வசூலிக்கின்றனர். மட்டமான தகரத்தால் தயாரிக்கப்படும் அந்த 'பேட்ஜில்' உள்ள பின்கள் சீக்கிரமாகவே துருப்பிடித்து விடுகிறது. இதனால் சட்டை பாழாவதுடன், துருப்பிடித்த பின், குழந்தைகளின் உடலில் குத்துவன் மூலம் தேவையற்ற பிரச்னைகளும் ஏற்படுகிறது.

அதேபோல குறைந்தபட்சமாக ஆயிரம் ரூபாய்க்கான புத்தகங்களையும், நோட்டுப் புத்தகங்களையும் ஒவ்வொரு மாணவர் தலையிலும் கட்டிவிடுகின்றர். பத்து பக்கம் மட்டுமே எழுதிய பழைய நோட்டை பயன்படுத்தக்கூடாது என்றும் நிபந்தனை விதிக்கின்றனர்.

கடைகளில் விற்கும் விலையை விட அதிக விலைக்கு தனியார் பள்ளிகள் நோட்டுப் புத்தகங்களை விற்கின்றன. அதிக விலை கொடுத்து வாங்கிய போதும் அந்த நோட்டுப் புத்தகங்களின் தரம் மிகவும் மட்டரகமாக இருப்பது மேலும் ஏமாற்றம் அளிக்கக்கூடியதாகும்.

பள்ளி மாணவர்கள் பயன்படுத்தும் 'ஸ்கூல் பேக்', புத்தகங்களுக்குப் போடும் அட்டை ஆகியவற்றையும் பள்ளி நிர்வாகமே விற்கின்றன. இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல அண்ணாநகரில் உள்ள ஒரு பள்ளி, ஆண்டுதோறும் பட்டாசுகளை பள்ளி மாணவர்களுக்கு விற்கிறது. பள்ளி மாணவர்களைப் பயன்படுத்தி எந்தெந்த வகையில் லாபம் சம்பாதிக்க முடியும் என பார்த்து அனைத்து வழிகளிலும் பள்ளி நிர்வாகத்தினர் லாபம் சம்பாதித்து வருகின்றனர்.

இதைவிட கொடுமையாக பல தனியார் பள்ளிகளில் சுதந்திர தினம், குடியரசு தினம், பள்ளி ஆண்டு விழா போன்றவற்றை கோலாகலமாக கொண்டாடுவதாக சிறப்பு வசூல்வேட்டை நடத்துகின்றனர். இதைத்தவிர, கார்கில், ஒரிசா புயல், ராஜஸ்தான் பஞ்சம் ஆகியவற்றுக்கும் போட்டி போட்டுக் கொண்டு நிதி வசூல் செய்து பெற்றோர்களின் பணத்தில் பள்ளிக்கு இலவசமாக விளம்பரம் தேடிக் கொள்கின்றனர். பணம் உரிய இடத்திற்கு போய்ச் சேருகிறதா? என்பது அவர்களுக்கே வெளிச்சம். யு.கே.ஜி., யிலிருந்து 1 ம் வகுப்பு போகும் ஐந்து வயது குழந்தைக்கு 'சம்மர் கம்ப்யூட்டர் கோர்ஸ்' என்ற பெயரில் தேவைப்படாத ஒன்றை கற்றுக் கொடுப்பதாக சொல்லிக் கொண்டு பணம் சம்பாதிக்கின்றனர்.

'ஸ்போர்ட்ஸ் டே' வந்து விட்டால் கேட்கவே வேண்டாம். 'டி.சர்ட்', 'காப்', ஒரு குளிர்பானம் மற்றும் சில தின்பண்டங்கள் வழங்க 500 ரூபாய் வரை வசூலிக்கின்றனர். பணம் வசூலிப்பதற்காகவே, 'டீச்சர்ஸ் டே', 'ஸ்டூடன்ட்ஸ் டே' போன்ற தினங்களை பள்ளி நிர்வாகத்தினரே கண்டுபிடித்து நடத்துகின்றனர். இதுதவிர பஸ், வேன், ஆட்டோ, போன்றவற்றைக் கொண்டு குழந்தைகளின் போக்குவரத்துக்கு ஏற்பாடு செய்து பணம் சம்பாதிக்கின்றனர். 'ஸ்கூல் பஸ்' சும்மா இருக்கும் நேரத்தில் சுற்றுலா அழைத்துச் செல்வதாக சொல்லிக் கொண்டு சம்பாதிக்கின்றனர். பள்ளி விடுமுறை தினங்களில் தனியாருக்கு பஸ்சை வாடகைக்கு அனுப்பியும் பணம் சம்பாதிக்கின்றனர்.

தரமான கல்வி அளிக்கவும், தங்கள் பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு நல்ல சம்பளம் வழங்குவதற்காகவும்தான் அதிக அளவு பணத்தை வசூலிப்பதாக தனியார் பள்ளி நிர்வாகிகள் கூறுகின்றனர். விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சில பள்ளிகளை தவிர பெரும்பாலான பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கு மிகக் குறைந்த சம்பளமே தரப்படுகிறது. அரசுக்கு இணையாக சம்பளம் தருவதாக கூறும் பள்ளிகளில் கூட அரசு தரும் படிகள் வழங்கப்படுவதில்லை. பெற்றோர்களின் வசதிக் கேற்ப, அவர்களின் குழந்தைகளை பள்ளி முடிந்தவுடன் அதே வகுப்பில், அதே ஆசிரியரால் நடத்தப்படும் 'டியூஷன் கிளாசில்' சேர்த்துக் கொள்கின்றனர். பள்ளியில் கட்டுப் பாட்டை கொண்டுவருவதாக கூறி தங்கள் இஷ்டத்துக்கு 'பைன்' போடுகின்றனர். அவர்கள் நடத்தும் வசூல் வேட்டையில் இதுவும் ஒரு ரகம்

பள்ளிகளில் நடத்தும் பாடத்தை மட்டும் படித்தால் 'பர்சனாலிட்டி டெவலப்பாகாது' என்று இப்பள்ளி நிர்வாகிகள் பெற்றோர்களிடம் கூறுகின்றனர். 'பர்சனாலிட்டியை டெவலப்' செய்கிறோம் என்று கராத்தே, டான்ஸ், மியூசிக் ஆகிய ஏதாவதொன்றை கற்கும்படி கூறுகின்றனர். அதையும் குறிப்பிட்ட இடத்தில் கற்றால் மாணவர்களின் 'பர்சனாலிட்டி வேகமாக டெவலப்'பாகும் என்று கூறி தங்களை வளப்படுத்திக் கொள்கின்றனர்.

அரசுப் பள்ளிகளில் குழந்தைகளை சேர்க்கும் பெற்றோர்களை 'பொறுப்பற்ற பெறறோர்களாக' பார்க்கும் நிலை மத்திய தட்டுமக்களிடம் இருப்பது வெளிப்படையான உண்மை. இந்த சிந்தனையை தனியார் பள்ளிகள் நன்கு பயன்படுத்திக் கொண்டு கொள்ளையடிக்க துவங்கி விடுவதாக கல்வியாளர்கள் கருதுகின்றனர்.

ஏழை மக்கள் கூட நாம் தான் வறுமையில் இருக்கிறோம் நமது குழந்தைகளாவது படித்து முன்னேறட்டும் என்று நினைத்து தங்களின் கஷ்டத்தை பொருட்படுத்தாமல் தங்கள் குழந்தைகளை தனியார் பள்ளியில சேர்க்கின்றனர். இப்பள்ளிகள் கேட்கும் கட்டணத்தை தொடர்ந்து கட்டுவதற்காகவும், மற்ற பிள்ளைகளைப் போல தங்கள் பிள்ளைகளும் உடையணிய வேண்டும் என்பதற்காகவும் ஏழை பெற்றோர்கள் படும்பாடு சொல்லி மாளாது.

''தமிழைப் பயன்படுத்தி திராவிடக் கட்சிகள் வாழ்வும் வளமும் பெற்றன. மக்களிடம் தற்போதுள்ள ஆங்கில மோகத்தைப் பயன்படுத்தி நாங்களும் எங்களை வளப்படுத்திக் கொள்கிறோம்,'' என்று மெட்ரிகுலேஷன் பள்ளி நிர்வாகிகள் சங்கத்தைச் சேர்ந்த ஒருவரே வெளிப்படையாக கூறும்

நிலை நீடிக்கிறது. பொறியியல் கல்லூரிகளின் கட்டண விகிதங்களை அரசு கட்டுப்படுத்துவது போல் பள்ளிகளின் கட்டண விகிதங்களையும் கட்டுப்படுத்த வேண்டும் என்பது ஒருசாராரின் வாதமாக இருந்து வருகிறது.

தனியார் பள்ளிகள் அடிக்கும் பகல் கொள்ளையை தடுக்க அரசு இப்போதாவது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட பெற்றோர்கள் புலம்புகின்றனர். பள்ளி இருக்கும் இடம், வசதிகளுக்கு ஏற்ப தனியார் பள்ளிகளை தரம் பிரித்து அரசு கட்டணம் நிர்ணயிக்க வேண்டும். 'டொனேஷன்' வாங்குவதை சட்ட விரோதமாக அறிவிக்க வேண்டும் என்று பெற்றோர்கள் கூறுகின்றனர்.

இப்பள்ளிகளில் வேலைபார்க்கும் ஆசிரியர்களோ எங்களுக்கு குறைந்தபட்ச சம்பளத்தையும், ஓய்வையும் அரசு உறுதி செய்ய வேண்டும் என்கின்றனர்.

அறிவுப் புரட்சி நடக்கும் இந்த 21ம் நூற்றாண்டில் கல்வியின் தேவையை அனைத்துப் பெற்றோர்களும் உணர்ந்துள்ளனர். அதனால் குழந்தைகளுக்கு கிடைக்கும் கல்வியின் தரத்தை விட்டுக் கொடுக்க எந்தப் பெற்றோரும் தயாராக இல்லை.

இந்நிலையில் குறைந்தபட்சம் தனியார் பள்ளிகள் வசூலிக்கும் கட்டணத்தை அரசே நிர்ணயம் செய்ய வேண்டும். அதன்பிறகும் பள்ளிகள் தவறு செய்தால் அப்பள்ளிகளின் அங்கீகாரத்தை ரத்து செய்து கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே பெரும்பாலான பெற்றோர்களின் எதிர்பார்ப்பாக இருந்து வருகிறது.''

13. ஓர் அரசினர் உயர் நிலைப்பள்ளியிலோ ஓர் அரசினர் மேல்நிலைப்பள்ளியிலோ ஒரேநாளில் 16 இலட்சம் உருபா சேருவதற்கு வாய்ப்பு உள்ளதா? இல்லை; அந்த வாய்ப்பு அறவே இல்லை. காரணம் அவை பெற்றோர்களைக் கறப்பதில்லை

ஆனால் ஒரு மெட்ரிகுலேசன் பள்ளியின் ஒரே நாளில் 10 இலட்சம் திரள்கிறது. அதுவும் பணம் கட்டக் கடைசிநாள் என்றால் பணம் குவிகிறது. ஒரு பள்ளியில் என்ன நடந்தது என்று பாருங்கள் (கதிரவன், 11.5.2000)

குரோம்பேட்டையில்
பள்ளிக்கூடத்தில் புகுந்து ரூ. 10 லட்சம் கொள்ளை
கத்திமுனையில் சின்னமாரி கும்பல் துணிகர கைவரிசை

‘‘குரோம்பேட்டை பள்ளியில் ரூ.10 லட்சம் சின்னமாரி கும்பலால் கத்திமுனையில் கொள்ளை அடிக்கப்பட்டது. இதுபற்றி போலீஸ் தரப்பில் கூறப்படுவதாவது:-

குரோம்பேட்டை பஸ் டெப்போ பின்புறம் விவேகானந்தா வித்யாலாய மெட்ரிகுலேசன் பள்ளி உள்ளது. 12-ம் வகுப்பு வரை உள்ள இந்த பள்ளியில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவ - மாணவிகள் படித்து வருகிறார்கள். இப்பள்ளியில் நேற்று, ஆண்டு தொடக்க படிப்பு கட்டணம் கட்ட கடைசி நாளாகும். எனவே முண்டியடித்துக் கொண்டு பிள்ளைகளின் பெற்றோர்கள் பணம் கட்டினார்கள். மதியம் வரை வசூலான பணத்தை சேர்த்து வங்கியில் போட அப்பள்ளி ஊழியர்கள் ஏற்பாடு செய்து கொண்டிருந்தனர்.

அப்போது 4 பேர் பள்ளியில் நுழைந்தனர். வசூலான பணம் அனைத்தையும் தர வேண்டும் என்று கத்திமுனையில் மிரட்டினார்கள். இதனால் செய்வதறியாது திகைத்த பள்ளி ஊழியர்கள் உயிருக்கு பயந்து பணத்தை ஒப்படைத்தனர்.

பின்னர் அந்த 4 பேரும் பணத்துடன் அங்கிருந்து தப்பி விட்டனர். இதுகுறித்து சிட்லபாக்கம் போலீசில் புகார் செய்யப்பட்டது. பள்ளி தாளாளர் அன்பழகன் புகார் கொடுத்தார். அதில் ரூ.5லட்சத்து 25 ஆயிரம் ரொக்கமாகவும் சுமார் 5 லட்சம் மதிப்புள்ள காசோலையும் கொள்ளையடிக்கப்பட்டதாக தெரிவித்தார்.

இந்த துணிகர கொள்ளையில் ஈடுபட்ட 4 பேரும் வாலிபர்கள் என்று தெரிகிறது. பள்ளியோடு தொடர்புடைய நபர்கள்தான் இந்த துணிகர சம்பவத்தில் ஈடுபட்டிருக்கலாம் என்று போலீசார் சந்தேகிக்கின்றனர்.’’

14. மெட்ரிகுலேசன் பள்ளிகளின் அட்டூழியங்கட்கு அளவே கிடையாது. மாணவர்களைச் சேர்ப்பதற்காக, பெற்றோர்களை ஒட்டக் கறந்து விடும் நிர்வாகத்தினர், சேர்த்தபிறகாவது, அந்த மாணவர்களை ஒழுங்காக நடத்துகிறார்களா என்றால் இல்லை.

பிப்ரவரி மாதம் நெருங்கும்போது படிப்பில் பலவீனமான மாணவர்களைக் கண்டறிந்து அவர்களை வேரோடு பிடுங்கி வெளியே எறிந்து விடுகின்றன. அந்தக் கொடுமை எப்படி நடக்கிறது என்று பாருங்கள்.

‘மனம் போல’ மாணவர்களை வீட்டுக்கு அனுப்புவதா?
பள்ளிகளுக்குக் கிடுக்கிப் பிடி; தேர்வுத்துறை அதிரடி!

''பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வு நெருங்க உள்ள நிலையில், மாநிலம் முழுவதும் உள்ள மெட்ரிக், பள்ளிகள் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களுக்கு பொதுத்தேர்வு எழுதுவதில் இருந்து திடீர் 'கல்தா' கொடுத்து மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. 'வீக்'கான மாணவர்கள் பொதுத்தேர்வு எழுதி தோல்வியடைந்தால் தங்களது பள்ளிகளுக்கு உள்ள 'நூறு சதவீத தேர்ச்சி' என்ற 'இமேஜ்' குலைந்துவிடும் என்ற எண்ணத்தில் இதுபோன்ற சட்டத்திற்கு புறம்பான செயல்களை செய்துள்ளன. ஆனால், தேர்வுத்துறையின் அதிரடி 'ரெய்டு' காரணமாக அனைத்துப் பள்ளிகளும் சிக்கியுள்ளன.

தேர்வெழுதும் பட்டியலில் இருந்து திடீரென மாணவர்களை நீக்கியது ஏன் என்று கேள்வி யெழுப்பி தேர்வுத்துறை இயக்குனர் தீவிர விசாரணை நடத்தி வருகிறார். இந்த விசாரணையின் பலனாக பல மாணவர்கள் மீண்டும் தேர்வெழுதும் பட்டியலில் சேர்த்து தேர்வுத்துறை இயக்குனர் உத்தரவிட்டுள்ளார்.

மாநிலம் முழுவதும் 3 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மெட்ரிக், பள்ளிகள் இயங்கிவருகின்றன. இவற்றில் பெரும்பாலான பள்ளிகள் கல்வி சேவை செய்வதற்கு பதிலாக 'பணங்காய்ச்சி' மரங்களாகவே செயல்பட்டு வருகின்றன. தங்களது பள்ளிகளின் புகழை தொடர்ந்து பாதுகாக்க சட்டத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபடுவதற்கும் சில பள்ளிகள் தயங்குவதில்லை.

அந்த வகையில் ஆண்டுதோறும் பொதுத்தேர்வு நடைபெறும்போது மெட்ரிக், பள்ளிகளில் இருந்து தேர்வெழுதும் மாணவர்கள் பட்டியலை தேர்வுத்துறை கேட்டு பெறுவது வழக்கம். சில ஆண்டுகளுக்கு முன்பு வரை தேர்வு நெருங்கும்போதுதான் தேர்வெழுதுபவர்கள் பட்டியலை தேர்வுத்துறை தயார் செய்யும். இதைப் பயன்படுத்தி பல மெட்ரிக், பள்ளிகள் முறைகேடான செயல்களில் ஈடுபட்டு வந்தன. அதாவது, படிப்பில் 'வீக்'காக இருக்கும் மாணவர்களைக் கடைசி நேரத்தில் அடையாளம் கண்டு அவர்களைப் பொதுத்தேர்வு எழுதும் பட்டியலில் இருந்தே நீக்கி விடுவது, அல்லது 'ஸ்டேட்போர்டு' திட்டத்தில் சேர்த்துவிடுவது, அப்படியும் இல்லையெனில் தனித்தேர்வு மாணவராக தேர்வெழுதவைப்பது போன்ற முறைகேடான செயல்களில் ஈடுபட்டு வந்தன. ஒரு மாணவர் மெட்ரிக், பள்ளியில் பத்தாம் வகுப்பில் காலடி எடுத்து வைத்து விட்டாலே அம்மாணவர் பொதுத்தேர்வு எழுதுவதற்கு உரிய தகுதியை பெற்றுவிடுகிறார். கட்டண விவாரத்தை பொறுத்த மட்டில் பெற்றோர்கள் எந்தவித பாக்கியும் வைப்பது கிடையாது. கடன் வாங்கியாவது கட்டணத்தைக் கட்டிவிடுகின்றனர்.

ஆனால், பெற்றோர்கள் இப்படிச் சிரமப்பட்டு மாணவர்களை மெட்ரிக், பள்ளிகளில் சேர்த்து படிக்கும் வைக்கும்போது தேர்வெழுதும் கடைசி காலகட்டத்தில் சில பள்ளிகள் முறைகேட்டில் ஈடுபட்டு மாணவர்களையும், பெற்றோர்களையும் ஏமாற்றி வந்தன. பள்ளிகளின் இந்த முறைகேட்டை தடுத்து நிறுத்துவதற்கு அரசு தேர்வுத்துறை சில ஆண்டுகளாக தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது. அப்படியிருந்தும் பள்ளிகளின் விதிமீறல்கள் நின்றபாடில்லை. எப்படியாவது அதிகாரிகளின் கண்களில் 'மண்ணை'த் தூவி விட்டு முறைகேட்டில் ஈடுபடுகின்றனர்.

இந்நிலையில் வரும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் நடைபெற உள்ள பத்தாம் வகுப்புப் பொதுத்தேர்வை எழுதும் மாணவர்கள் பட்டியலை தேர்வுத்துறை தயார் செய்தது. இந்தப் பட்டியலை அதிகாரிகள் தீவிர ஆய்வு செய்தபோது ஏற்கெனவே பெறப்பட்ட பட்டியலுக்கும் வித்தியாசம் இருந்ததைக் கண்டுபிடித்தனர். ஏறக்குறைய நூறு மாணவர்களை பொதுத்தேர்வு எழுதும் பட்டியலில் இருந்து பள்ளி நிர்வாகங்கள் நீக்கியதைத் தேர்வுத்துறை கண்டுபிடித்துள்ளது. பள்ளிகளின் முறைகேட்டை பார்த்த தேர்வுத்துறை மிகவும் அதிர்ச்சியடைந்துள்ளது.

மெட்ரிக் பள்ளிகளிடம் இருந்து கடைசி நேரத்தில் தேர்வெழுதும் மாணவர்கள் பட்டியலை பெற்றால் முறைகேடுகள் நடக்கும் என்பதால், இந்த ஆண்டு முன்கூட்டியே அதாவது பள்ளி தொடங்கிய ஜூன் மாதமே ஒரு பட்டியலை தேர்வுத்துறை வாங்கியுள்ளது. இந்த பட்டியலில் ஏதாவது திருத்தங்கள் இருந்தால் தெரிவிக்குமாறு சம்பந்தபட்ட பள்ளிகளுக்கு சமீபத்தில் பட்டியலை அனுப்பி திரும்ப பெற்றபோது அதில்தான் மாணவர்கள் நீக்கம் பற்றிய முறைகேடுகளை தேர்வுத்துறை கண்டுபிடித்தது. இரண்டாவதாகப் பெற்ற பட்டியலில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்களை நீக்கிப் பள்ளி நிர்வாகங்கள் அறிவித்திருந்தன.

பள்ளியில் பத்தாம் வகுப்பில் சேர்ந்த மாணவர்களை தேர்வெழுதும் பட்டியலில் இருந்து நீக்குவதற்குப் பள்ளி நிர்வாகங்களுக்கு அதிகாரம் கிடையாது. இதுமுறை கேடான செயல். எதுவாக இருந்தாலும் தேர்வுத்துறையிடம் தெரிவிக்க வேண்டும். ஆனால், அப்படி எதுவும் செய்யாமல் அவர்கள் விருப்பத்திற்கு படிப்பில் 'வீக்'காக உள்ள மாணவர்களைத் தேர்வெழுதுவோர் பட்டியலில் இருந்து நீக்கியுள்ளனர்'' என்கிறார் தேர்வுத்துறை இயக்குநர்.

15. இரெ. நாராயணசாமி இன்று மெட்ரிக் பள்ளிகளின் இயக்குநராக உள்ளார். நான அமைச்சராக இருந்த காலத்தில் இவரது சிறப்பான

செயற்பாடுகளை நான் நன்கு அறிவேன். அவர் இப்போது மெட்ரிக் பள்ளிகள் மீது அதிரடி நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்.

''அடுக்குமாடி குடியிருப்புகள், மொட்டை மாடி, கூரைக் கொட்டகைகளில் மெட்ரிகுலேஷன் பள்ளிகளை நடத்தி வரும் பள்ளி நிர்வாகங்கள் இனி இதே நிலையில் காலம் தள்ள முடியாது என்ற நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளது. எந்த விதிமுறைகளும் இல்லாமல் மெட்ரிகுலேஷன் பள்ளிகளை நடத்திய காலம் மலையேறப் போகிறது.''

மூவாயிரத்திற்கும் மேற்பட்ட மெட்ரிக் பள்ளிகள் இருந்தாலும் அவற்றில் 500 பள்ளிகள் வரை அங்கீகாரம் பெறாமலேயே நடைபெறுகின்றன. மதுக்கடைகளை ஒட்டி அமைந்த சாக்னா கடைகள் போலத்தான் இவை. ஏற்கெனவே 'ஆங்கில போதை'யில் தள்ளாடி வரும் கூட்டத்துக்கு வயிறு நிறைய ஏதாவது திணிக்க வேண்டாமா? 'கோழி' என்று சொல்லி காக்கைக் கறியைப் போடும் கடைகளும் இருக்கின்றனவே! இந்த நிலையில் தான் பல மெட்ரிக் பள்ளிகள் உள்ளன. இவ்வளவு முறைகேடுகளையும் செய்து காசு பறிக்கும் இவர்கள் தான் 'ஆங்கில மேதை'களை உருவாக்கப் போகிறார்களாம்!

''மெட்ரிகுலேஷன் பள்ளி நடத்த 'தற்காலிக அனுமதி' மட்டுமே பெற்ற நிலையில், பல ஆண்டுகளாக அனுமதியைப் புதுப்பிக்காமல் பல பள்ளிகள் நடந்து வருகின்றன. மெட்ரிகுலேஷன் பள்ளிகளை வரையறைப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளிலும் அரசு இறங்கியுள்ளது. மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கு அடிப்படையாக குறைந்தபட்ச நிலம் இருக்க வேண்டும். 10 கிரவுண்டு முதல் 5 ஏக்கர் வரை நிலை வரையறை கொண்டு வர திட்டமிடப்பட்டுள்ளது. ஊராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியம், நகராட்சி, மாநகராட்சி என தனித்தனி அளவுகோல்களின் அடிப்படையில் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் குறைந்தபட்ச இடத்தைக் கொண்டிருக்க வேண்டும் என்ற விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று, மெட்ரிகுலேஷன் பள்ளிகள் மாணவர்களிடம் கல்விக் கட்டணமாக எவ்வளவு வசூலிக்கலாம், ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டிய சம்பளம் எவ்வளவு போன்ற வரையறைகள் வகுக்கப்பட்டுள்ளது. சிட்டிபாபு கமிட்டி அளித்துள்ள பரிந்துரையின் அடிப்படையில், பல்வேறு திருத்தங்களுடன் அரசின் பரிசீலனைக்கு விதிமுறைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. அதிகாரிகள் மட்டத்தில் மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கான விதிமுறைகள் இறுதி செய்யப்பட்டு முதல்வரின் ஒப்புதலுக்காக காத்திருக்கிறது. விரைவில் இதில் இறுதி முடிவு வெளியாகும் என்று பள்ளிக் கல்வித்துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையே, மெட்ரிகுலேஷன் பள்ளி இயக்குனரகம் பல்வேறு கட்டுப்பாடுகளை விதிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இயக்குனர் நாராயணசாமி, பள்ளி முதல்வர்களுக்கு அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் பல்வேறு அதிரடி உத்தரவுகளை பிறப்பித்துள்ளார். பள்ளி நிர்வாகங்கள் பெற்றோர் - ஆசிரியர் கூட்டங்களை அடிக்கடி நடத்த வேண்டும். பள்ளி மாணவர்களை ஏற்றிச் செல்லும் வேன், பஸ்களின் சீரான நிலை ஆகியவற்றை கண்காணிக்க வேண்டும். தகுதியான டிரைவர்கள் வண்டிகளை ஓட்டுகிறார்களா என்பதையும் கண்காணிக்க வேண்டும். மாணவர்களை அடைத்துக் கொண்டு செல்ல அனுமதிக்கக் கூடாது'' என்ற பல செய்திகளைத் 'தினமலர்' வெளியிட்டுள்ளது.

16. இயக்குநர் நாராயணசாமி போட்ட பிற அதிரடிகளையும் கவனியுங்கள்.

''மெட்ரிக், பள்ளிகள் ஒரே கட்டடத்தில் தான் இயங்க வேண்டும். கிளைகள் அமைத்துக் கொண்டு செயல்படக் கூடாது. இதுகுறித்து தகவல் கூறினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். சில பள்ளிகள் அனுமதி மட்டும் பெற்று பிளஸ் 2 வரை மாணவரை சேர்த்து அதற்கு பின்னர் அங்கீகாரம் கேட்கின்றனர். அங்கீகாரம் இல்லாத பள்ளிகளில் மாணவர்கள் படித்து வந்தால் அவர்களை வேறு பள்ளிக்கு அனுப்பிவிட வேண்டும். ஒரு பள்ளி எந்த வகுப்பு வரை அங்கீகாரம் பெற்றுள்ளதோ அது வரைதான் மாணவர்களை சேர்க்க வேண்டும். அதற்கு மேல் மாணவர்களை சேர்த்தால் அவர்களை மெட்ரிக், தேர்வை எழுத விடமாட்டோம்.

சான்றிதழில் கல்வி அதிகாரியின் கையெழுத்து, சீல் இருக்க வேண்டும். சில பள்ளிகளில் 8வது வகுப்பில் தோல்வியடைந்த மாணவர்களை பாஸ் என்று சான்று வழங்கி வேறு பள்ளிக்கு அனுப்பி விடுகின்றனர். சிலர் தோல்வி என்று சான்று வழங்கினாலும் அதனை திருத்தி பாஸ் ஆனதாக காட்டி அடுத்த வகுப்பில் மாணவர்களை சேர்த்துக் கொள்கின்றனர். இவ்வாறு திருத்தம் செய்திருந்தாலும், அந்த மாணவரை சேர்த்த பள்ளி முதல்வரே பொறுப்பாவார்.

முறைகேட்டை அனுமதிக்க மாட்டோம் : வருகிற ஜூலை முதல் அனைத்து பள்ளிகளிலும் கட்டணம், மாணவர்கள் சேர்க்கை குறித்து ஆய்வு செய்ய உள்ளோம். அப்போது முறைகேடுகளை அனுமதிக்க மாட்டோம்.

எக்ஸ்ட்ரா பாடத்திட்டம்: இதுதவிர பல பள்ளிகளில் துவக்க நிலை வகுப்புகளில் கூட பொது அறிவு, கம்யூட்டர் பாடங்களில் தோல்வியடைந்தால் அவர்களை பெயிலாக்கி விடுகின்றனர். இது தவறு. மெட்ரிக், பள்ளிகள் தங்கள் இஷ்டத்திற்கு பாடங்களை வைத்துக் கொள்ளக் கூடாது.

வேண்டுமானால் இப்பாடங்களை எக்ஸ்ட்ரா பாடத்திட்டத்தில் வைத்துக் கொள்ளலாம்.''

இப்படிப்பட்ட அதிரடிகளால் பல பள்ளிகள் அங்கீகாரத்தை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

நாங்கள் ஆட்சிக்கு வந்த புதிதில் - அதுவும் நாங்கள் மெட்ரிகுலேசன் பள்ளிகள் மீது பார்வை செலுத்தத் தொடங்கியவுடன் 'தினமலர்' எழுதிய செய்தியைக் கவனியுங்கள்.

''பல மெட்ரிகுலேஷன் பள்ளிகள் மாட்டுக் கொட்டகைகளிலும், கூரைக் கொட்டகைகளிலும் நடந்து வருவது குறித்து இயக்குனரகத்துக்கு சரமாரியாக புகார்கள் வந்தவண்ணம் உள்ளன. அங்கீகாரம் பெறாத பள்ளிகள் மாணவர்களை சேர்த்து விட்டு நட்டாற்றில் விடும் நிலையை ஏற்படுத்தி வருகின்றன. பல பள்ளிகளில் அறிவியல் ஆய்வக வசதிகள் இல்லாத நிலை குறித்தும், தரமற்ற கட்டடங்கள் குறித்தும் புகார்கள் குவிந்தவண்ணம் உள்ளன.

இவையனைத்தையும் வரைமுறைப்படுத்தும் நோக்கத்துடனும் எக்காரணம் கொண்டும் மாணவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்ற கருத்தை அடிப்படையாகக் கொண்டும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கு பல்வேறு விதிமுறைகள் வகுக்கப் பட்டுள்ளது. அங்கீகாரம் இல்லாத பள்ளிகளில் படிக்கும் மாணவர்களை வேறு பள்ளிகள் சேர்க்கக் கூடாது என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்கு இந்த ஆண்டு மட்டும் விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. அடுத்த ஆண்டு முதல் அங்கீகாரம் இல்லாமல் எந்தப் பள்ளியும் இயங்க முடியாது என்ற சூழ்நிலை உருவாகி உள்ளது. அரசின் அதிரடி முடிவுகள் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்தினாலும், பெற்றோர் மத்தியில் பெரும் வரவேற்பை ஏற்படுத்தியுள்ளது.''

எல்லாம் நன்றாகத் தொடங்கியதுபோல்தான் வெளியுலகத்துக்குத் தெரிந்தது. ஆனால் 'தமிழ் வழி'யில் ஆணைக்கு பள்ளிக் கல்வித்துறையிலேயே 'வெந்நீர் கொதித்துக் கொண்டிருந்தது' என்பது மட்டும் பலருக்குத் தெரியாமலேயே போய்விட்டது.

17. நாராயணசாமி இதுவரை அங்கீகாரம் பெற்ற பள்ளிகளின் பட்டியலை நூலாகவே வெளியிட்டுள்ளார். இன்றைய நிலையில் 3244 பள்ளிகள்தான் அரசின் ஏற்புப் பெற்றவை. ஏற்புப் பெறாத 146 பள்ளிகள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளன. காஞ்சிபுரம் மாவட்டத்திலும், இதற்குள் அடங்கும் சென்னைப் புறநகரிலும் உள்ள பள்ளிகள் பற்றி முதல் இயலிலேயே சுட்டிக்காட்டியுள்ளேன். 233 மெட்ரிகுலேசன் பள்ளிகளில் நிரந்தர அங்கீகாரம்

பெற்றவை 8 மட்டும்தான். உண்மை நிலையை அன்பர்கள் தெரிந்து, தெளிவு பெறுவது நல்லது. நிரந்தர அங்கீகாரம் பெறமுடியாமல் எப்படிப் பிற மெட்ரிக் பள்ளிகள் இயங்குகின்றன?

20. நாராயணசாமி கண்டிப்பாகக் கூறிய செய்திகளை இங்கே நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

''தமிழகத்தில் தற்போது 3400 மெட்ரிகுலேசன் பள்ளிகள் உள்ளன. பள்ளிகளை அரசும் உருவாக்கி வருகிறது. தனியார் சுயநிதி மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு தரம் மிகவும் முக்கியம். தரம் இல்லை என்றால் உங்களை யாரும் காப்பாற்ற முடியாது. இன்றைய சூழ்நிலையில் யார் வேண்டுமானாலும் கல்வி நிலையங்களை தொடங்கலாம் என்று இருப்பதால் தரமுள்ள பள்ளிகள்தான் தங்கும், நிலைக்கும். அரசாங்கமே எல்லா பள்ளிகளையும் பராமரிக்கவோ, வளர்க்கவோ முடியாது. இது மிகப்பெரிய சக்தி. ஆங்கிலேயர் காலத்தில் மெக்காலே கொண்டு வந்த கல்வித் திட்டம்தான் இது. 1842ல் இந்தியா முழுவதுமே 52 பள்ளிகள்தான் இருந்தன. இப்போது தமிழகத்தில் மட்டும் 3400 மெட்ரிக் பள்ளிகள் உள்ளன. அவற்றில் 3260 பள்ளிகள் அங்கீகாரம் பெற்று விட்டன. மேலும் 140 பள்ளிகள் அங்கீகாரம் பெற வேண்டும் அங்கீகாரம் பெறாத பள்ளிகள் மாணவர்களை பொதுத் தேர்வுக்கு அனுப்ப முடியாது. கண்டிப்பாக அதற்கு அனுமதிக்க மாட்டோம். எனவே அவை விரைவில் அங்கீகாரம் பெற வேண்டும்.

விவசாயம் சம்பந்தப்பட்டவர்களும், நகைக் கடைக்காரர்களும் கூட பள்ளிகளை நடத்துகிறார்கள். பள்ளிகளில் நல்ல கல்வி அளிக்க 2 விஷயம் முக்கியம். ஒன்று அடிப்படை உள் கட்டமைப்பு வசதிகள் வேண்டும், அடுத்து கற்றுக் கொடுக்கிற முறை நன்றாக இருக்க வேண்டும்.''

இந்தக் கண்டிப்புகட்கெல்லாம் கட்டுப்பட்டு நடந்தால்தான் பள்ளிகளை அனுமதிக்க முடியும் என்று இயக்குநர் கூறியுள்ளார்.

இவர் 146 பள்ளிகளின் அங்கீகாரத்தை இரத்துச் செய்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

எனவே வாணிகம் செய்வதற்கு வழி வகுத்துள்ள 'கல்வி' இன்று பெரும் வியாபாரமாகவே ஆகிவிட்டது என்பதனை மேற்கண்ட செய்திகளிலிருந்து அனைவரும் தெளிவாக உணர முடியும்.

தமிழ்வழியிலும் பாடம் நடத்த...

1முதல் 5வரை தமிழ் வழியில் பாடம் நடத்திட வேண்டும் என அரசு அறிவித்தபின், மெட்ரிக் சங்கத்தினர் பேசி முடிவு செய்து அதனைக்

கோரிக்கையாக எங்கள் முன்னர் வைத்தனர். அதாவது ஆங்கிலப் பயிற்று மொழி வகுப்புகளையும் நடத்துவது என்பதுதான் அவர்கள் கோரிக்கை (Parallel Medium).

தங்கள் பள்ளி நிலைமை மாறாமலும் வருமானம் குறையாமலும் அதே நேரத்தில் தமிழ் வழியிலும் நடத்திட அரசிடம் ஒத்துப்போவது போல் இதுதோன்றும். அப்போதும் ஆங்கில வழியில் படிப்போர் எண்ணிக்கை அப்படியே தொடரும் என்பதுதான் உண்மை. அவர்கள் உள்நோக்கத்தைப் புரிந்து கொண்டதால் அரசு அவர்கள் கோரிக்கைகளை ஏற்கவில்லை.

இவர்கள் இப்படியென்றால் உண்மையிலேயே தமிழ் வழியில் மெட்ரிகுலேசன் பள்ளிகளை நடத்த வேண்டுமென்று விரும்பிக் கேட்பவர்கள் சிலர்.

1. கடலூர் மாவட்டம் விருத்தாசலத்தில் உள்ள இன்பென்ட் மெட்ரிகுலேசன் பள்ளியில் 1 முதல் 5 வரை தமிழ் வழியிலும் 6 முதல் 10 வகுப்புவரை தமிழ் மற்றும் ஆங்கில மொழி வழியிலும் நடத்திட இசைவு கேட்டுள்ளனர்.

2. இராசிபுரம் திருவபட்டி எம். ரேவதி என்பார் தமிழ் வழியிலேயே மெட்ரிகுலேசன் பள்ளி ஒன்றினை நடத்திட இசைவு வேண்டி விண்ணப்பித்துள்ளார்.

பொள்ளாச்சியில் திரு. நா. மகாலிங்கம் அவர்கள் தமிழ் வழியிலேயே திருமதி ருக்மணியம்மாள் மெட்ரிகுலேசன் பள்ளியை நடத்தி வருகிறார். அதன் தாளாளர் நா. பெருமாள் எழுதுவதைக் கவனியுங்கள்.

‘‘தமிழ்நாட்டில் மெட்ரிகுலேசன் பள்ளிகள் பலவற்றில் தமிழ் மொழியே கற்பிக்கப்படாத பல பள்ளிகள் உள்ளன. அங்கு ஆங்கிலத்துடன் இந்தி, பிரெஞ்ச் போன்ற மொழிகள் கற்பிக்கப்படுகின்றன. தமிழகத்தில் இந்தநிலை மாறி, அங்கும், தமிழ்மொழி ஓர் கட்டாயப் பாடமாகக் கற்பிக்கப்பட வேண்டும்.

மெட்ரிகுலேசன் பள்ளிகளில் ஆங்கிலம் பயிற்று மொழியாக இருப்பதாலேயே, தமிழ் மீது வெறுப்பும், ஆங்கிலம் மீது மோகமும் கொண்டு மாணவர்களும், ஆசிரியர்களும் அப்பள்ளிகளில் இருப்பது உங்களுக்குத் தெரியாததில்லை. எனவே மெட்ரிகுலேசன் பள்ளிகள் சிலவற்றில் தமிழ் மட்டும் பயிற்றுமொழியாக உள்ளவற்றை அரசு ஊக்குவிக்க வேண்டுகிறோம்.

தமிழை உளமார வளர்த்துவரும் அருட்செல்வர் டாக்டர். நா. மகாலிங்கம் அய்யா அவர்கள், தமிழ் மட்டும் பயிற்று மொழியாக உள்ள இரண்டு

மெட்ரிகுலேசன் பள்ளிகள் - பொள்ளாச்சியில் ஒன்று, கோவையில் ஒன்று - ஆரம்பித்து நஷ்டமானாலும் பரவாயில்லை என பல ஆண்டுகளாக நடத்தி வருகிறார்கள். இதுபோன்ற பள்ளிகளுக்கு தனி ஆதரவு கொடுக்க வேண்டும்.''

மேற்கண்டவாறு எழுதியுள்ளார். இச் செய்திகள் நமக்கு மகிழ்ச்சியைத் தருகின்றன.

16.7.2004 கும்பகோணம் பள்ளியில் பெரும் தீவிபத்து ஏற்பட்டது. அதில் 94 இளஞ்சிறார்கள் கருகி மடிந்தனர். அதன்பின், சிட்டிபாபு குழு அறிக்கையின் பரிந்துரைகளைச் செயற்படுத்திட ஆணை பிறப்பித்துள்ளது. அதனை அப்படியே பார்க்கலாம்.

விமோசனம் (தினமலர் 6.8.2004)

''புற்றீசல் போல் பெருகி வரும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளை ஒழுங்குபடுத்த அதிரடி உத்தரவுகளை அரசு பிறப்பித்துள்ளது. அரசின் இந்த உத்தரவை அடுத்து பாதுகாப்பான, காற்றோட்டமான இட வசதி, குடிநீர் வசதி போன்றவை இருந்தால் மட்டுமே இனி மெட்ரிகுலேஷன் பள்ளிகள் செயல்பட முடியும். கும்பகோணம் தீ விபத்து சம்பவத்தையடுத்து சிட்டிபாபு கமிட்டி பரிந்துரை அறிக்கையை தீவிரமாக பரிசீலனை செய்து அதிரடி உத்தரவுகளை அரசு பிறப்பித்துள்ளது. இதன் மூலம் மெட்ரிகுலேசன் பள்ளிகளின் கொட்டத்திற்கு விடிவு காலம் ஏற்பட்டுள்ளது.''

ஒன்றைக் கவனியுங்கள்.

''கடந்த 2001ஆம் ஆண்டுக்கு முன்பு வரை மெட்ரிக் பள்ளிகள் தனி ராஜ்ஜியத்தை தமிழகத்தில் நடத்தி வந்தன. சுரண்டும் மெட்ரிக், பள்ளிகளுக்கு ஒரு முடிவு வராதா என்று பெற்றோர்கள் பெருமூச்சு விட்டனர். 2001ல் அ.தி.மு.க., ஆட்சி பொறுப் பேற்றதும் மெட்ரிக், பள்ளிகளை 'களை' எடுப்பதற்கு முதல்வர் ஜெயலலிதா உத்தரவிட்டார்.''

'புண்ணியவான் அன்பழகன் காலத்தில் மெட்ரிக் பள்ளிகள் ஆட்டம் போட்டன. புரட்சித் தலைவி காலத்தில் அவர்களது ஆட்டம் ஒடுக்கப்பட்டது' என்று நான் சொன்னால் ஏற இறங்கப் பார்ப்பீர்கள். ஆனால், 'தினமலர்' சிறப்புச் செய்தியாளர் அல்லவா சொல்கிறார்!

சாகித்ய அகாதெமி விருதுபெற்ற எழுத்தாளர் பொன்னீலன் மெட்ரிகுலேசன் பள்ளிகளை எப்படிப்படம் பிடிக்கிறார் என்று பாருங்கள்!

''வெட்கக்கேடு! தமிழ்நாட்டில் தமிழன் வாழும் தெருக்களில், தமிழ் மொழியைப் பயிற்று மொழி ஆக்காதே! தமிழ்மொழி வேண்டாம்! ஆங்கிலம்

வேண்டும்! அதுவும் எல்கேஜியிலிருந்தே வேண்டும்! என்று வேற்று மொழிக்காரர்கள் அல்ல, தமிழர்களே கோஷம் போட்டுக்கொண்டு ஊர்வலம் போகிறார்கள்! வேறு எந்த நாட்டிலாவது நடக்குமா இந்த விபரீதம்? இத்தனைக்கும் ஐந்தாம் வகுப்பு வரைத்தான் தமிழில் சொல்லிக் கொடுக்கச் சொல்லுகிறது தமிழக அரசு, அதாவது மாணவனுடைய பத்தாவது வயது வரை. பத்து வயது வரைத் தமிழும், தமிழ்ப்பண்பாடும் குழந்தையுள் நுழைந்து அதைத் தமிழ்ப்படுத்த முடியவில்லை என்றால், அது அன்னியமாகிப்போய் விடாதா? அறம் செய்ய விரும்பு என்பதற்குப் பதிலாக, பா பா ப்ளாக் ஷிப் என்று சொல்லிக் கொடுத்தால் அது தன் இன அடையாளத்தை இழந்துவிடாதா? தமிழ்நாட்டிலேயே தமிழ்வழி படித்த ஏழைக் குழந்தைகள் என்றும், ஆங்கில வழி படித்த வசதியுள்ள குழந்தைகள் என்றும் இரண்டு வகையாக வளர்ந்தால், இந்தப்போக்கு எதிர்காலத்தமிழ் உலகத்தை எட்ட முடியாத ஏற்றத்தாழ்வு உணர்வுள்ள இரு கூறுகளாகப் பிளவுபடுத்திவிடாதா? சமூக நலம் சீரழியாதா? ஆங்கில வழி படித்த அலுவலராக வருபவர்கள் தமிழ்வழிபடித்தவர்களையும், தமிழர்களையும் கீழ்நிலையாகக் கருதமாட்டார்கள்? சமூகத்தின் சமத்துவப் பண்பாடு சிதையாதா? ''வெள்ளைக்காரத் தமிழனின்'' திமிராட்சி சாதாத் தமிழன் தலையை நசுக்காதா? அடிமைத்தனம் அல்லவா இது?

மெட்ரிகுலேசன் பள்ளிகள் கல்வியைத் தொண்டாகவா செய்கின்றன? கட்டணம் என்ற பெயரில் பெற்றோர்களிடம் ஆயிரக்கணக்கில் வாங்கிக் குவிக்கிறார்களே. தொண்டு செய்வதற்காகவா? கல்வியை வியாபாரமாக்கியதுதானே இவர்களின் சாதனை! தரமான கல்வியைத் தருகிறோம். உங்கள் குழந்தையைக் கருப்பு ஆங்கிலேயனாகத் திருத்தி அமைக்கிறோம். வேலை வாய்ப்புக்கான வழிகளைத் திறக்கிறோம். மக்களை ஆங்கில வழியில் படிக்க வைக்கிற உயர் நிலைப் பெற்றோர்கள் என்ற உயர் விருதை உங்களுக்கு அளிக்கிறோம். இப்படி ஆசை காட்டித்தானே உங்களைக் கொள்ளை அடிக்கிறார்கள்! நெஞ்சைத் தொட்டுச் சொல்லுங்கள். அரசாங்க ஆஸ்பத்திரிக்குப் போவது, சத்துணவு சாப்பிடுவது. இவற்றிற்குச் சமமான தாழ்வான விசயமாகத் தமிழ் வழிப்பள்ளிக்கூடத்துக்குப் போவதையும் கருதித்தானே உங்கள் பிள்ளைகளை ஆங்கில வழிப்பள்ளிக்கு அனுப்புகிறீர்கள். எல்லாச் சிரமங்களையும் சகித்துக்கொள்கிறீர்கள். பள்ளியின் நிர்வாகம் நடத்தும் எல்லாச் சுரண்டல்களுக்கும் உடன்படுகிறார்கள். சுரண்டலா அது. கொள்ளையல்லவா? சேர்க்கும் போது நன்கொடை, மாசாமாசம் கட்டணம். புத்தக வியாபாரம். சீருடை வியாபாரம். போக்குவரத்து வியாபாரம் என்று பள்ளிக்குள்ளேயே எத்தனை வியாபாரம். ஓய்வு ஒழிச்சலின்றி வேலை செய்யும் ஆசிரியர்களுக்குக் கால் சம்பளமும், அரைச் சம்பளமும் கொடுத்துவிட்டு, மற்ற எல்லாம் நிர்வாகத்தால் விழுங்கப்படுகின்றதே. இதற்காகத் தானே கொடுக்கிறீர்கள்! விழாக்கள் என்றும், கட்டிட நன்கொடை என்றும், எத்தனை எத்தனை விதமாகக்

கொள்ளைகள் நடைபெறுகின்றன. கொடி நாளுக்கென்று ஒரு ரூபாய் கேட்கும் அரசுப்பள்ளி ஆசிரியர்களைக் கொள்ளைக்காரர்களாகக் காட்டி, தட்டிப்போர்டு எழுதி வைக்கும் சமூகத் தொண்டர்களே. இந்தக் கொடும் சுரண்டல்களை என்றாவது நீங்கள் கண்டு கொண்டது உண்டா? எதற்கு எடுத்தாலும் போராடுகின்ற ஆசிரியப் பேரியக்கங்களே. ஆங்கில வழிப்பள்ளிகளில் கசக்கிப் பிழியப்படும் உங்கள் சகோதரர்களுக்காக நீங்கள் என்றாவது குரல் கொடுத்தது உண்டா?'' என்று கேட்கிறார். நூலைப் படிப்பவர்களுக்கு மெட்ரிக் பள்ளிகளின் அட்டூழியங்கள் விளங்கியிருக்கும் என்றே நம்புகிறேன்.

குடந்தைத் துயர நிகழ்ச்சிகட்குப் பின்னால் சிட்டிபாபு அறிக்கையில் சில பகுதிகள் வெளியிடப்பட்டன. அவற்றைக் கவனியுங்கள் உண்மையான நிலை தெரியும்.

''அதற்கு 1635 பள்ளிகள் மட்டுமே பதில் அனுப்பியிருந்தன. அவற்றில் 1,223 மெட்ரிக் பள்ளிகள் அங்கீகரிக்கப்பட்டவை. அவற்றிலும் 671 பள்ளிகள் நகர்ப்புறங்களில் இயங்குகின்றன.

அங்கீகரிக்கப்படாத 384 பள்ளிகளில் 191 பள்ளிகள் நகர்ப்புறங்களில் இயங்குகின்றன. இவை தவிர 28 பள்ளிகள் தாங்கள் அங்கீகாரம் பெற்றவையா, இல்லையா என்ற தகவலை வெளிப்படுத்தவில்லை.

மொத்தமுள்ள 2,983 மெட்ரிக் பள்ளிகளில் மொத்தம் 13 லட்சத்து 56 ஆயிரம் மாணவர்கள் படிக்கின்றனர். இது மாநிலம் முழுவதும் உளள உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளின் மாணவர்களில் 35 சதவீதம் பள்ளிகளின் கட்டடங்கள் மோசமாக இருக்கின்றன. 43 சதவீதம் பள்ளிகளுக்குத்தான் நல்ல கட்டடங்கள் இருக்கின்றன.

ஆசிரியர் எண்ணிக்கை: பதிலளித்த பள்ளிகள் எல்லாவற்றிலும் சேர்த்து 15,014 ஆசிரியர்கள்தான் பணியாற்றுகின்றனர்.

அதாவது, ஒரு பள்ளிக்குச் சராசரியாக 10 ஆசிரியர்கள் கூட இல்லை.

பணியில் அமர்த்தப்பட்ட ஆசிரியர்களில் 57 சதவீதம் பேர் பயிற்சி பெறாதவர்கள். 71 சதவீதம் பேர் பட்ட மேற்படிப்பு படித்தவர்கள். 60 சதவீதம் பேர் இரண்டு ஆண்டுகளுக்கும் குறைவான அனுபவம் மிக்கவர்.

67 சதவீதம் பேர் மாதம் ரூ.2,000 ஊதியம் பெறுகின்றனர். மிகச் சிலர்தான் கணிசமான ஊதியத்தைப் பெறுகின்றனர்.

'படித்தவர்களைச் சுரண்டும் போக்கு இது' என்று சிட்டிபாபு கமிட்டி அறிக்கை தெரிவிக்கிறது.

இயல் இருபத்தாறு

தமிழில் பேசினால் தண்டனை

தமிழில் பேசினால் தண்டனையா? ஏன்? எந்த நாட்டில் இந்த நிலை? எந்த நாட்டிலும் இல்லை, இந்தியாவிற்கு வெளியே வாழும் 1 கோடித் தமிழர்க்கும் தமிழில் பேசி - அதுவும் நல்ல தமிழில் பேசி - அதவும் தமிழில் பேசுவதையே மகிழ்ச்சியாகக் கருதி வாழ்ந்து வருகிறார்கள். அந்தந்த நாடுகளில் அரசின் பாடத்திட்டத்துக்குள் இணைந்தோ அல்லது தனிப்பட்ட முறையிலோ தமிழைப் படித்து, விவரங்கள் தெரிந்து வளர்ந்து, இதற்கெனத் தமிழ் நாட்டில் உள்ள வாய்ப்புகளையும் பயன்படுத்திக்கொண்டு தமிழ்க் கல்வியில் மேம்பாடு அடைகின்றார்கள். உலகெங்கும் வாழும் தமிழர்கள் தமிழில் பேசுவதையே பேரின்பமாகக் கருதுவதைக் கண்டு மகிழ்ந்தவன் நான். சீன வானொலியில் தமிழ்ப் பிரிவில் பணியாற்றும் சீனர்கள் அனைவரும் நல்ல தமிழில் பேசி என்னை 'அசத்தி' விட்டார்கள்! தமிழ்க்குடிமகனுக்கே அது ஒரு வியப்புத்தான்!

அப்படியானால் தமிழில் பேசினால் தண்டனை - எங்கே? இந்தியாவின் வேறு ஏதாவதொரு மாநிலத்தில் இந்த நிலையா! மொழிவெறி உள்ள வேறு எவரேனும் தமிழில் பேசிய தமிழர்களைத் தண்டித்து விட்டார்களா?

இல்லை; அப்படியெல்லாம் இல்லை. தமிழர்கள் தமிழில் பேசி மகிழ்வதற்கு எங்கும் தடையில்லை.

அப்படியானால் எங்கேதான் இந்தக் கொடுமை நடக்கிறது: வேறெங்கே? தமிழ் நாட்டில் தான். தமிழ்நாட்டுக்குள் இயங்கி வரும் சில பள்ளிகளில்தான்.

இப்போது சொல்லுங்கள்; தமிழ்நாட்டுக்குள் ஏதாவதொரு கோளாறு கொடி கட்டிப் பறக்கிறது என்றுதானே பொருள்!

ஆம்! தமிழ் நாட்டில் சில பள்ளிகளில் 'பள்ளி வளாகத்துக்குள் மாணவர்கள் எவரேனும் தமிழில் பேசினால் தண்டனை தரப்படுகிறது. இது நெடுநாளாக நடக்கிறது.

ஒருநாள் - 1994ஆம் ஆண்டில் ஒருநாள் - சூனியர் விகடன் இதழில் ஒரு செய்தி வந்தது.

சென்னையில் அடையாறு - காந்தி நகர்ப் பகுதியில் உள்ள தூய பேட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் தமிழில் பேசியதற்காகத் தண்டனை கொடுத்துள்ளார்கள் என்று செய்தி வந்தது.

''கெடல் எங்கே தமிழின் நலம்
அங்கெல்லாம் தலையிட்டுக்
கிளர்ச்சிச் செய்க !''

எனும் வரிகள் என்றென்றும் எங்கள் முன்னே மின்னிக் கொண்டிருக்கின்றன. எனவே கொதித்தெழுந்தோம். அப்போது நான் தி.மு.க.வில் மாநில இலக்கிய அணித் தலைவராக இருந்தேன். தொடர்புடைய தமிழறிஞர்கள் ஓரிருவரையும் இயக்கத் தோழர் சிலரையும் திரட்டினேன். ஏறத்தாழ 30பேர் கூடினோம். இனி, 'சூனியர் விகடன்' தந்த செய்திகளைப் படியுங்கள் (7.12.1994)

தமிழுக்காக தி.மு.க. நடத்திய போராட்டம்!

சென்ற வார ஜூ.வி.யில் 'தமிழ் பேசினால் தண்டனை!' என்ற தலைப்பில் அடையாறு செயின்ட் பேட்ரிக் பள்ளிக்கூடம் பற்றிக் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தோம்.

இதைத் தொடர்ந்து கடந்த வெள்ளிக்கிழமையன்று அந்தப் பள்ளிக்கூடம் முன்பு தி.மு.க.வின் இளைஞரணிப் பட்டாளத்தோடு ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியிருக்கிறார், டாக்டர் தமிழ்க்குடிமகன்.

அவர் சொன்னார் :

''பள்ளி வளாகத்தில் மாணவர்கள் தமிழே பேசக்கூடாது என்று கண்டிப்பது பெரிய கொடுமை! தமிழகம் முழுக்கவே இந்தக் கொடுமை பரவி வருவது வருந்தத்தக்க விஷயம்! நான் கல்லூரி முதல்வராக இருந்தவன். என்னோடு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட சிலம்பொலி செல்லப்பன் தலைமை ஆசிரியராக இருந்தவர். அதனால் பக்குவமாகவே அந்தப் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியரிடம் 'இந்தக் கண்டிப்பு கூடாது' என்று சொல்லிவிட்டு வந்தோம். இனியும் இந்தக் கண்டிப்பு தொடர்ந்தால் 'கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும்' என்றும் எச்சரித்தோம்!''

'முரசொலி' தரும் செய்தி இது: (3.12.1994)

ஆர்ப்பாட்டம்

இதைத் தொடர்ந்து சட்டப்பேரவை முன்னாள் தலைவர் முனைவர் தமிழ்க்குடிமகன் தலைமையில் சிலம்பொலி செல்லப்பன், வா.மு.சேதுராமன்,

அப்துல்லா அடியார், ஆ. சந்திரன், ந.பூ. இராமஜெயம், வி.எம். தண்டபாணி, ஜெகநாதன், ராமதாஸ், தசரதன், குணசேகரன், செல்வி, க. ரவி மற்றும் புரட்சிகர இளைஞரணியைச் சேர்ந்த இளஞ்சித்திரன், தேன்மொழி உள்ளிட்ட ஏராளமானவர்கள் திரண்டு காந்தி நகர் 'தூய பாட்ரிக் மேல் நிலைப் பள்ளி' முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

பிறகு அனைவரும் தலைமை ஆசிரியையிடம் சென்று ''பத்திரிகையில் வந்துள்ள செய்தி உண்மையா?'' என்று கேட்டனர். அதற்குத் தலைமை ஆசிரியை ''அப்படி எல்லாம் கிடையாது'' என்று பதிலளித்தார்.

தொடர்ந்து தமிழ்க்குடிமகன் ''உங்கள் பள்ளிக் கூட வளாகத்தில் 'அப்பா நலமா?' என்று கேட்டால் தண்டனையா? இது கடுமையான எச்சரிக்கைக்குரியது'' என்றார்.

அப்போது தலைமை ஆசிரியை ''அப்படியெல்லாம் கிடையாது. இங்கு தமிழ் பேச எந்தத் தடையும் இல்லை'' என்று கூறினார்.''

தினத் தந்தியும் (3.12.1994) இச் செய்தியைப் பெரிதாக வெளியிட்டது

தலைப்பே இதுதான்.

பள்ளிக்கூடத்திற்குள்
தமிழில் பேசினால் தண்டனையா?
கடும் விளைவுகள் ஏற்படும்
தமிழ் அன்பர்கள் எச்சரிக்கை

எங்கள் அறிக்கையை அப்படியே வெளியிட்டிருந்தது. இதோ அதில் சில சில பகுதிகள்:

''தமிழில் பேசினால் தண்டனையா?

அடையாறு காந்தி நகரில் உள்ள புனித பாட்ரிக் உயர் நிலைப் பள்ளியில், பள்ளி வளாகத்துக்குள் மாணவர்கள் தமிழில் பேசினால் தண்டனை வழங்குகிறார்கள் என்று அண்மையில் ஒரு பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. விசாரித்த வகையில் அது உண்மையே என்று தெரியவந்தது.

எனவே நாங்களும் மற்றும் தோழர்களுமாக 30 பேர் வரை சென்று தலைமையாசிரியரைக் கண்டு பேசினோம். புரட்சி இளைஞர்

முன்னணியினைச் சேர்ந்த இளஞ்சித்திரன், தேன்மொழி ஆகியோரும் வந்த தலைமையாசிரியரிடம் விவாதித்தனர்.

கடும் விளைவுகள் ஏற்படும்

தலைமையாசிரியர் அப்படி ஏதும் நடைபெறவில்லை என்று மறுத்தாலும், நடப்பது உண்மைதான் என்பதை உறுதிப்பட கடுமையாக எடுத்துச் சொன்னோம். வகுப்பறையில் ஆசிரியர், மாணவர் உரையாடல், வகுப்பறைப்பாடம் என்ற வகையில் ஆங்கிலம் பயன்படுத்தலாம்.

ஆனால் பள்ளி வளாகத்துக்குள் தமிழ் மாணவர்கள் தமிழில் ஒரு சொல் பேசினாலும் தண்டனை எனும் நிலை இனி நேர்ந்தால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டி வரும் என்று எச்சரித்தோம்.

இந்தப் பள்ளியில் மட்டுமின்றி தமிழகத்தின் எந்தப்பகுதியில் இது நடந்தாலும் நேரடி நடவடிக்கையில் இறங்குவோம் என்றும் தெரிவித்துக்கொள்கிறோம்.''

தினமணி (3.12.1994) இதழும் இதே செய்தியைச் சிறப்பாக வெளியிட்டிருந்தது. (தலைப்பு மட்டும்)

'தமிழில் பேசிய மாணவனுக்கு தண்டனை'

இதற்குப்பின் 1996இல் நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற பின், தனி அமைச்சகம் இயங்கத் தொடங்கிய பின், அது தொடர்பான 'தமிழ் அலை' நாடெங்கும் பரவியிருந்த நிலையில் இதுபோன்ற குற்றக்குறிப்புகள் எவையும் எங்களுக்கு வரவில்லை.

ஆனால் 1999இல் ஒரு நிகழ்ச்சி

இது தொடர்பாக, வழக்கறிஞர் பொ. வே. பக்தவத்சலம் 'செவன்த்டே' அட்வெண்டிஸ்ட் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி நிர்வாகத்துக்கு 'வழக்கறிஞர் அறிக்கை' அனுப்பியிருந்தார்.

"Therefore we have further instruction from our client to call upon you to use your good offices and inititute appropriate action against the said teacher Mr. Adam John and intimate the same to us or to our client within a reasonable period i.e., 15 days failing which please take notice that our client will be forced to seek remedy in other forums i.e., Civil, Criminal and Consumer Forum, etc., and you will be vicariously liable

along with Mr. Adam John for all the costs, damages and compensation for our client and the expenses incurred there by our client."

அரக்கோணத்தைச் சார்ந்த திருமதி. மேரி ஆனந்த் என்பவருடைய பையன்தான் இதில் பாதிக்கப்பட்ட ஆனந்த் எனும் மாணவன். சென்னை வேப்பேரியில் உள்ள பள்ளியில் பத்தாம் வகுப்புப் பயில்பவன்.

இப்பள்ளியில் முதல் வகுப்பிலிருந்தே படித்து வருபவன். சிறப்பாகப் படித்துப் பரிசுகளும் பாராட்டுகளும் பெற்றவன். ஆனால் மிகவும் மென்மையான இயல்புகள் படைத்தவன். (Sensitive, godfearing and timid in nature) இவ்வளவுக்கும் இந்த மாணவன் எடுத்துப் படித்த இரண்டாவது மொழி இந்தி.

பள்ளி நேரத்தில் எவரேனும் தமிழில் ஒரு சொல் பேசினாலும் அவனுக்குப் பத்து உருபா வரை தண்டம் விதிக்கப்பட்டு வந்தது. இதுதான் பள்ளியின் நிலை.

20.6.96இல் பைபிள் வகுப்பு நடப்பதற்கு முன் ஆதம் ஜான் எனும் ஆசிரியர் வகுப்புக்குள் வரும்போது சில மாணவர்கள் தமிழில் உரையாடிக் கொண்டிருந்தனர். இதில் ஆனந்தும் ஒருவன். தமிழில் பேசியதற்குத் தண்டனையாக அந்த மாணவர்களை காலை 11 மணிமுதல் 11.45 வரை வெயிலில் நிறுத்தி வைத்து விட்டார் அந்த ஆசிரியர்.

இந்த நேரத்தில்தான் ஆனந்த் மயங்கி விழுந்து விட்டான். பிறகு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டான். இந்த நிலைக்குக் காரணமாக ஆசிரியர் ஆதம் ஜான் மீது நடவடிக்கை எடுக்கக் கோரித்தான் இந்த வழக்கு.

இந்தச் செய்தி தமிழ்நாடெங்கும் பரவிவிட்டது. மேலும், சட்டமன்றத்திலேயே இது தொடர்பான வினா எழுப்பப்பட்டது.

செய்தி பரபரப்பானதும் கதிர்த் தொலைக்காட்சி (Sun T.V.) ஒரு நேர்காணல் நடத்தியது. என் கருத்துகள்தான் தெரிவிக்கப்பட்டன. இதனைப் பலரும் கேட்டனர். அரக்கோணம் வட்டம், மூதூரில் இருந்து இராசா என்பவர் ஒரு மடல் எழுதினார். அதிலேயே விளக்கம் உள்ளது.

''3.7.96 - உங்களுடைய நேர்காணலை சன் தொலைக்காட்சி செய்தியின் போது பார்த்தேன் (2.7.96). மேலும் தாங்கள் எடுத்துவரும் பல நடவடிக்கைகள் தமிழ் மேல் பற்று கொண்ட அனைவருக்கும் பெரு மகிழ்ச்சி அளிப்பதாகவும், உயர்தனி செம்மொழியாம் தமிழ் அரியாசனத்தில் ஏறும் நாள் வெகு தொலைவில் இல்லை என்பதையும் காட்டுகிறது. ஆனால் நம்முடைய

முயற்சியெல்லாம் விழலுக்கு இறைத்த நீராய் போகும் அபாயமும் உள்ளது. தாங்கள் நேர்காணலில் சுட்டிக்காட்டிய படி பெரும்பாலான ஆங்கில பள்ளிக்கூடங்களில் தமிழில் பேசுவதையே மாணவர்கள் பெரும்தவறு செய்தது போல் எடுத்துக்கொள்ளும் நிலை உள்ளது. ஒரு படி மேலே போய் தமிழ் வகுப்பு தவிர பிற வகுப்பு நேரங்களில் தமிழில் பேசினாலே அபராதம் போடும் பள்ளிகளும் உண்டு. அத்தகைய பள்ளிகளைப் பற்றி தெரிவித்தால் தக்க நடவடிக்கை எடுப்பதாக தாங்கள் நேர்காணலில் கூறினீர்கள். ஆகவேதான் இந்த கடிதத்தை உங்களுக்கு எழுதுகிறேன். சென்னை வடபழனியில் உள்ள ஜானகி ராமச்சந்திரன் கலாலய (J.R.K.) பள்ளியில் ஏழாம் வகுப்பில் சில பிரிவு வகுப்புகளில் இவ்வாறு அபராதம் போடுவதாக சில மாணவர்கள் மூலம் அறிந்தேன். ஒருமுறை தமிழில் பேசினால் ரூ.5/-ம், மீண்டும் பேசினால் ரூ.10/-ம், இவ்வாறு அபராத தொகை அதிகரித்துக் கொண்டே செல்கிறது. அபராத தொகை வசூலிக்கப்படுகிறதா என்பது ஒருபுறமிருக்க இத்தகைய செயல்கள் மொழிப்பற்றையே குழிதோண்டி புதைத்து அன்னிய மொழி மயக்கத்தில் அல்லவா மாணவர்களை ஆழ்த்திவிடும். தாய் மொழியின் பால் அவர்களுடைய மதிப்பை அல்லவா குலைத்து விடும். மேலும் படிப்பது வேறு மொழியிலாயினும் சந்தேகங்களையும், புரியாத விளக்கங்களையும் தாய்மொழியில் கேட்டால்தானே மாணவர்களுக்கு விளங்கும். தமிழ் நாட்டில் தமிழ் பேசினால் அபராதம் என்பது எவ்வளவு வருத்தத்திற்குரியது. ஆகவே இதை தங்களுக்கு தெரிவிப்பதன் மூலம் தாங்கள் நிலைமையை நன்கு உணர்ந்து தேவையான நடவடிக்கைகளை எடுக்க உதவியாக இருக்கும் என்ற காரணத்தால் இக்கடிதத்தை அனுப்பி வைக்கிறேன்'' என்று எழுதியுள்ளார்.

உடனே தொலைபேசியில் அப்பள்ளிக்குத் தெரிவிக்கப்பட்டது. முதன்மைக் கல்வி அலுவலர்க்கும் தெரிவிக்கப்பட்டது. என்னுடைய தொலைக்காட்சி நேர்காணல் பலர்க்குத் தெரிந்திருக்கிறது. சிலரைச் செயற்படவும் வைத்திருக்கிறது. அதில் உடுமலைப் பேட்டையிலிருந்து கா. திருநாவுக்கரசு எழுதிய மடல் முக்கியமானது.

''சன் தொலைக்காட்சி நேர்காணலில் தாங்கள் குறிப்பிட்டது போல் பல ஆங்கிலப் பள்ளிகளில் மாணவர்கள் தமிழில் பேசக்கூடாது என்ற அவல நிலை இன்று இருந்து வருகிறது.

கோவை மாவட்டம் உடுமலைப் பேட்டையில் உள்ள ஸ்டெல்லா மேரீஸ் மேல்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு வழங்கப்படும் நாட்குறிப்பேட்டில் முக்கியக் குறிப்பாக "ONLY ENGLISH SHOLDBE SPOKEN IN THE PREMISES OF THE SCHOOL" என்று குறிப்பிட்டுள்ளார்கள். அத்துடன், அதை கடுமையாக அமல்படுத்தியும் வருகிறார்கள்.''

இது மிகவும் மோசமான நிலைதான். எழுதப்படாமல் வாய்மொழி மூலமாகவே 'தமிழில் பேசினால் தண்டனை' என்று மிரட்டப்பட்டதுபோக, பள்ளிக் குறிப்பேட்டிலேயே 'Only English should be spoken in the premises' என்று போட்டிருப்பது, படுபாதகமாமன செயலாகும். உள்ளபடியே இது என் துறைக்குள் வருவதாக இருந்தால் சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுத்துக் கதிகலங்க வைத்திருப்பேன். என் செய்வது இது கல்வித்துறை அல்லவா?

அதேபோல சில மாணவிகள் எனக்கு ஒரு மடலை எழுதிவிட்டு, எங்கள் பெயர்களை வெளிப்படுத்த வேண்டாம் என்று கேட்டுக் கொண்டுள்ளார்கள். இவர்களும் தொலைக்காட்சி நேர்காணலைக் கேட்டவர்கள்.

மேட்டூர் அணையில் உள்ள 'புனித மரியன்னை மகளிர் மேல் நிலைப்பள்ளி' குறித்த குற்றக் குறிப்புத்தான் இது.

'இங்கே தமிழில் பேசக் கூடாது என்று மிகவும் கண்டிக்கிறார்கள்' என்று குமுறுகிறார்கள் அந்த மாணவிகள்.

எனக்கேற்பட்ட வியப்பு இதுதான்:

நான் 6ஆம் வகுப்பு முதல் பி.எசி. இறுதியாண்டு வரை 10 ஆண்டு காலம் கிறித்துவ நிறுவனத்திலேயே படித்து வந்தவன். அங்கெல்லாம் (1951-60 வரை) இப்படி ஒரு நிலையே இல்லையே! என்போன்றவர்களின் தமிழ் ஆர்வமும், பேச்சுத் திறனும் வளர உறுதுணையாக இருந்தவை இந்த நிறுவனங்கள்தாம்!

அப்படியிருக்கும்போது, இப்போது அதே போன்ற - அதே சமயம் சார்ந்த நிறுவனங்களில் ஏன் இந்த இழிநிலை.

1. தூய பேட்ரிக் மேல் நிலைப்பள்ளி, அடையாறு
2. செவன்த்டே அட்வெண்டிஸ்ட் மேல்நிலைப்பள்ளி, வேப்பேரி
3. ஸ்டெல்லா மேரி மேல்நிலைப்பள்ளி, உடுமலைப்பேட்டை
4. புனித மரியன்னை மேல் நிலைப்பள்ளி, மேட்டூர் அணை

ஒன்றே ஒன்றுதான் மாறுபட்டது.

ஜானகி இராமச்சந்திரன் (J.R.K.) மேல்நிலைப்பள்ளி, சென்னை. வாழ்நாள் எல்லாம். தமிழ் உணர்வோம், உள்ளத்தோடும் வாழ்ந்தவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவரால் பிறப்பிக்கப்பட்ட அரசாணைகள் இன்றும் பாராட்டுக்குரியவை.

அவர் பெயரும் இணைந்த பள்ளியிலா இந்த இழிநிலை? மேலும், கிறித்தவ நிறுவனங்கள் சிலவற்றில் ஏன் இந்த நிலை? இந்த நிறுவனங்கள் எல்லாம் அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளிடமெல்லாம் ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளனவா?

இங்கிருக்கிற மாணவர்களை எல்லாம் ஆங்கிலத்தில் முழுத்தேர்ச்சி பெற வைத்து அவர்கள் கல்வி முடித்ததும் ஒப்பந்தப்படி கப்பலேற்றி அனுப்பப் போகிறீர்களா? இதுவரை (7 ஆண்டுகள்) அவர்கள் அப்படித்தான் அனுப்பியிருக்கிறார்களா? இவர்கள் தான் அதற்கு மொத்தக் குத்தகைதாரர்களா?

இவர்களாக ஏன் ஒரு மாயப் போர்வையைப் போர்த்திக் கொண்டிருக்கிறார்கள்?

தயாரிக்கிறதுதான் தயாரிக்கிறோம்; கலப்படமில்லாத 'ஆங்கிலக் குஞ்சு'களாகவே தயாரிப்போம் என்று இறங்கிவிட்டார்களா?

தமிழ்நாட்டுக்குள் இப்படியோர் தகாத போக்கினை யார் மேற்கொண்டாலும் என்றாவது ஒருநாள் தெருவிற்குக் கொண்டு வந்து நார் நாராக உரிக்க நாங்கள் எப்போதும் தயாராகவே இருக்கிறோம்!

1.12.2000 அன்று 'தமிழ்ச் சான்றோர் பேரவை' சார்பில் ஓர் அறிக்கை வெளியிடப்பட்டது. அது இதுதான்.

''வெட்கக்கேடு தொடர்கிறது

சென்னை அடையாறில் உள்ள ஒரு ஆங்கிலவழிப் பள்ளியில் 1995இல் பள்ளி வளாகத்தில் தமிழில் பேசினால் குப்பை பொறுக்க வேண்டும் என்றும், நாய்க்கு அட்டை கட்டி விடுவதுபோல ''பள்ளி வளாகத்தில் தமிழில் பேசிய குற்றத்திற்காக தண்டனையை அனுபவிக்கிறேன்'' என்று மாணவன் கழுத்தில் தொங்கவிட்ட கொடுமையைக் கண்டுதான் தமிழ்ச் சான்றோர் பேரவை உருவானது.

இந்தச் செய்தியைக் கேட்ட, அப்போது ஆளுங்கட்சியாக இல்லாத நிலையிலும் தி.மு.க. மூத்த தலைவர்களில் ஒருவரான, இப்போதைய தமிழ் வளர்ச்சி - பண்பாட்டுத் துறை அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் தலைமையில் குழுவாகச் சென்று அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் இந்தத தவற்றைத் திருத்திக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொண்டதோடு அல்லாமல், மிரட்டிவிட்டும் வந்தார் என்பதுதான் உண்மை.

இப்போதும் நிலைமை அப்படியேதான் தொடர்கிறது. அச்சப்பட்டுள்ள பெற்றோர்கள் உண்மையை வெளிக்கொணர அஞ்சினாலும் இன்று நமக்குக் கிடைத்துள்ள தகவல் இந்த வெட்கக்கேடு தமிழ் மண்ணில் தொடர்கிறது என்பது நிரூபணமாகிறது. 31.10.2000 நாளிட்டு முதல்வர் சித்ரா மேனன் என்பவர் என்.எஸ்.என். மெட்ரிகுலேசன் மேல்நிலைப் பள்ளி, குரோம்பேட்டை, சென்னை-44, வெளியிட்டுள்ள பெற்றோர்களுக்கான ஒரு சுற்றறிக்கையில் பள்ளி வளாகத்தில் ஆங்கிலமல்லாத மொழி பேசினால் பெற்றோருக்கு ரூ.5/- அபராதம் என்றும், மாணவனின் இந்த தண்டனை பள்ளிக் கையேட்டில் பதிவு செய்யப்படும் என்றும் தெரிவித்துள்ளனர்.

காலில் முள் குத்தினால் கூட 'அம்மா' என்று அலற ஒரு தமிழ்ப் பிள்ளைக்குத் தமிழ்நாட்டில் இடமில்லை. தமிழாய்ந்த தமிழ் அறிஞர்களே! இந்த மண்ணையும், இந்த மக்களையும், இந்த மொழியையும் நீங்கள் எப்படிக் காப்பாற்றப் போகிறீர்கள்? அறிவு சீவிகளும் இது குறித்துச் சிந்திக்க வேண்டும்.''

எந்த மேல் நிலைப்பள்ளியை எதிர்த்து என் தலைமையில் போராட்டம் நடந்ததோ (திசம்பர் 1994) அதே கொதிப்போடும் உணர்வோடும்தான் 'தமிழ்ச் சான்றோர் பேரவை' முகிழ்த்தது என்பது வரலாறு.

எனக்குத் தெரிய, இவ்வளவு தவறுகள் நடந்தும் கல்வி அமைச்சர் ஒரு நாளாவது சட்டமன்றத்தில் இந்தப் பள்ளிகளுக்கு எச்சரிக்கை செய்யும் அளவில் பேசினாரா என்றால், இல்லை என்றே சொல்லமுடியும். 'பள்ளிகளை' மேய்ப்பவர் நம்மை ஏய்க்கிறார். துள்ளுகின்ற நாம்தான் அவ்வப்போது புலம்புகிறோம்.

இயல் இருபத்தேழு - அ

தாய்மொழி வழிக் கல்வி
(அ)
அறிஞர்கள் கருத்து

கல்வி வல்லுநர் ஒருவரின் கருத்தினை 'Times of India' எனும் இதழ் வெளியிட்டுள்ளது (27.1.2000). அதனை முழுமையாகப் பார்ப்பதே நல்லது.

தாய்மொழியில் பயின்ற பின்னரே ஆங்கிலம் பயில்வது எளிதானது

கல்வி வல்லுநர் கருத்து

தாய்மொழியில் கற்ற பின்னர் ஆங்கிலத்தை படிக்க முற்படுவதுதான் எளிதாக இருக்கும் என்று நிபுணர் ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார். இது குறித்து 'டைம்ஸ் ஆப் இந்தியா'வில் வெளியான செய்தி வருமாறு:-

முதலில் தாய்மொழி கற்பிப்பதில் அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்; பின்னால் ஆங்கிலத்தை கற்க அது எளிதான வழியாக இருக்கும் என்கிறார் மக்கான் லால் டிக்கு என்கிற கல்வி நிபுணர். இவர் ஐதராபாத்தில் உள்ள ஆங்கிலம் மற்றும் அந்நிய மொழிகளுக்கான மையப் பயிலகத்தின் தேசிய ஆங்கில மொழி பயிற்சிப் பிரிவுத் தலைவராக உள்ளார்.

ஐந்தாம் வகுப்பிலிருந்து ஆங்கிலம் பயிலும் மாணவர்கள் நல்ல நிலையில் திகழ்வதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. ஏனென்றால் அப்போதுதான் அவர்கள் தாய்மொழியையும் அதன் இலக்கணத்தையும் நன்கு கற்றவர்களாக ஆகிறார்கள் என்றும் அவர் தெரிவிக்கிறார்

முதல் வகுப்பு மாணவர்கள் வேகமாக உச்சரிக்கக் கற்றுக் கொள்வார்கள். ஆனால் மொழியை அவர்களால் கற்றுக் கொள்ள முடியாது. சற்று வயதான மாணவர்கள்தான் இன்னொரு மொழியைக் கற்றுக்கொள்ளும் திறனை நன்கு பெற்றவர்களாக இருக்கிறார்கள்.

பல மாநிலங்களில் உள்ள அரசுகள், அரசியல்வாதிகளின் வற்புறுத்தலால், முதல் வகுப்பிலிருந்து ஆங்கிலத்தை கற்பிக்க முற்படுவதாக

டிக்கு குறிப்பிடுகிறார். இன்னும் சொல்லப் போனால், கம்யூனிஸ்டுகள் ஆளும் மேற்கு வங்க அரசுகூட 3 ஆவது வகுப்பிலிருந்து ஆங்கிலத்தைக் கற்றுத்தரும் நிர்பந்தத்திற்கு ஆளாகியுள்ளது.

1970ஆம் ஆண்டில் ஆந்திர மாநில கல்வி அமைச்சராக இருந்த பி.வி. நரசிம்மராவ் கூட ஆங்கிலத்தை வலியுறுத்தும் கட்டாயத்திற்கு ஆளானார். ஆனால் நல்ல வேளையாக, ஆங்கிலம் மற்றும் அந்நிய மொழிகளின் மத்திய பயிலகத்துடன் நடத்திய ஆலோசனைக்குப் பின்னர் அதனைக் கைவிட்டு விட்டார்.

மொழிப் பிரச்சினையைக் கையாளும் விதம் காரணமாக மாணவர்கள், தங்கள் தாய்மொழியையும் ஒழுங்காகக் கற்பதில்லை; ஆங்கிலத்தையும் கற்றுக் கொள்வதில்லை என்று 'டைம்ஸ் ஆப் இந்தியா' செய்தியாளரிடம் பேசுகையில் டிக்கு தெரிவித்தார்.

கண்ணை மூடிக்கொண்டு ஆங்கிலத்தை கற்றுத் தருவதால், மாணவர்கள், சொன்னதைச் சொல்லும் கிளிப்பிள்ளைகளாகவும் இரண்டாம் தரத்தினராகவும்தான் வளர்கிறார்கள்.

மேற்கத்திய நாடுகள் உற்பத்தி செய்யும் அறிவை - அப்படியே நுகர்பவர்களாக நாம் மாறுகிறோமே தவிர அறிவை உற்பத்தி செய்பவர்களாக நாம் மாறுவதில்லை என்று தெரிவிக்கும் அவர், கடந்த பல ஆண்டுகளாக இங்கிலாந்துதான் ஆரம்பக் கல்வியைப் பொறுத்த வரையில் முதலிடத்தில் இருந்து வருகிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

தாய்மொழியில் நன்கு எழுதும் வல்லமை பெற்றவர்கள் மற்ற மொழிகளிலும் அவ்வாறு எழுதும் திறன் கொண்டிருக்க வேண்டும் என்பதையும் அவர் வலியுறுத்தினார்.

1950ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் ஆறாவது வகுப்பிற்குப் பதில் மூன்றாவது வகுப்பிலேயே ஆங்கிலம் அறிமுகம் செய்யப்பட்டது. துவக்க காலத்தில் மூளை நன்கு திறனுடன் விளங்கும் என்பதன் அடிப்படையில் அப்போது அவ்வாறு நடைமுறை மேற்கொள்ளப்பட்டது.

பிரிட்டிஷ் கவுன்சில் உதவியுடன் சென்னை ஆங்கில மொழி ஆசிரியர்கள் பயிற்சிப் படிப்பு துவக்கப்பட்டது. ஆனால் அது எடுபடவில்லை என்று டிக்கு தெரிவித்தார்.

ஆங்கிலத்தில் இளங்கலை, முதுகலை பட்டம் பெற்றவர்கள் கூட ஆங்கில மொழியை கற்பிக்கும் வல்லமை பெற்றவர்களாக இல்லை என்பதே

இதுநாள் வரையிலான தமக்குள்ள நீண்ட கால அனுபவம் என்று தெரிவிக்கும் டிக்கு, அங்கீகரிக்கப்பட்ட பள்ளிப் புத்தகங்களைக் கூட முதுகலைப் பட்டம் பெற்றவர்கள் படிக்க இயலாதவர்களாக உள்ளனர் என்றும் குறிப்பிடுகிறார்.

''இப்போதோ மகாராஷ்டிராவில் உள்ள மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் முதல் வகுப்பிலிருந்து ஆங்கிலத்தை கற்றுத் தர, கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். தேர்வு முடிவு என்னவாக இருக்கும் என்பதை நீங்களே கற்பனை செய்து கொள்ளுங்கள்'' என்றும் குறிப்பிடுகிறார் அவர், பெருநகர மையங்களில் வேண்டுமானால் அதற்கான வசதிகள் இருக்கலாம்; ஆனால் ஊரகப் பகுதிகளில் நிச்சயம் அதற்கான வசதிகள் இல்லை என்று ஆணித்தரமாக கூறினார்.

படிப்பறிவற்ற பெற்றோர்கள் கூட தங்களது பிள்ளைகள் ஆங்கிலப் பள்ளிகளில் பயில்வதையே விரும்புகிறார்கள். அவர்களது கவலை நியாயமானவையாகவும் இருந்தாலும் அவ்வாறு பயிலுவதற்கான முறை வரையறுக்கப்படவில்லை.

அந்நிய மொழியைவிட தாய்மொழியில் நன்கு கற்கும் மாணவர்கள்தான் சிறந்தவர்களாக விளங்குகிறார்கள் என்ற நிலைதான் ஆராய்ச்சியில் திரும்பத் திரும்பத் தெரியவந்துள்ளது.

1948ஆம் ஆண்டுகளில் அமைக்கப்பட்ட முன்னாள் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் தலைமையிலான கல்விக் குழு முதற்கொண்டு அமைந்த பல்வேறு கல்விக் குழுக்களும் தாய் மொழியில் கற்பதன் அவசியத்தையே வலியுறுத்தியுள்ளன.

துரதிருஷ்டவசமாக, அக்கருத்துக்களுக்கு எதிராகத்தான் அரசு செயல்படுகிறது. மாநில மொழிகளில் அவை அதிக கவனம் செலுத்துவதில்லை. ஆங்கிலம் மற்றும் அந்நிய மொழிகளுக்கான மத்தியப் பயிலகத்திற்கு பல்கலைக் கழக அந்தஸ்து வழங்கப் பட்டுள்ளதே தவிர மைசூரில் உள்ள இந்திய மொழிப் பயிலகம் மற்றும் ஆக்ராவில் உள்ள இந்திப் பயிலகம் ஆகியவைகளுக்கு உள்ள தகுதிகள் அதற்கு கிடையாது என்றும் அவர் தெரிவிக்கிறார்.

ஒரு மொழியில் உள்ள தகவல் திறமைகளை மட்டும் அறிந்து கொள்வது என்பது போதுமானதல்ல. இலக்கணம் என்பத முக்கியமானதல்ல என்கிற ஒரு போக்கு நிலவுவது துரதிருஷ்டமானது. தகவல் பெறுவது என்பது மட்டுமல்ல. அறிவையும் கலாச்சாரத்தையும் பெறுவதற்கும் அதிக வலியுறுத்தல் அவசியமாகும் என்றும் டிக்கு குறிப்பிட்டார்.

இவ்வாறு 'டைம்ஸ் ஆப் இந்தியா' ஆங்கில ஏட்டில் செய்தி வெளியாகியுள்ளது.''

இந்த நேரத்தில் நமது நாட்டின் தந்தையாகிய காந்தியடிகள் தன் ''சத்திய சோதனை'' நூலில் தந்த கருத்து எண்ணிப் பார்ப்பதற்கு உரியது.

''ஆங்கிலத்திலேயே சிந்தித்து, ஆங்கிலத்திலேயே பேசுமாறு தங்கள் குழந்தைகளுக்குப் பயிற்சியளிக்கும் இந்தியப் பெற்றோர், தங்கள் குழந்தைகளுக்கும் நாட்டுக்கும் துரோகம் செய்தவர்கள் ஆவார்கள் என்பது எப்பொழுதுமே என் திடமான கருத்தாக இருந்து வந்திருக்கிறது'' என்கிறார் அவர்.

அவரது பல கட்டுரைகளும் உரைகளும் தொகுக்கப்பட்டுள்ளன. 'மாணவருக்கு' எனும் தலைப்பிலான அவரது நூலிலிருந்து அவருடைய கருத்துகளை அப்படியே தருகிறோம். தாய்மொழியைப புறக்கணித்துவிட்டு, ஆங்கில மோகம் கொண்டு அலைபவர்கட்குக் காந்தியடிகள் என்ன மருந்து தருகிறார் என்பதனை விளங்கிக் கொள்ள பயன்படும். இனி, அவரது கருத்துகள்:

''ஆங்கிலக் கல்வியினால நாம் நன்மை அடைந்துள்ளோம் என்று வேண்டுமென்றே கண்மூடித்தனமாக எண்ணிக் கொண்டிரிக்கிறோம். வடிகட்டின கேடாய் ஆங்கிலக் கல்வி முறை இருந்து வருகிறது. ஆங்கிலேயர் இந்நாட்டிற்கு வராமலிருந்தாலும் மற்ற நாடுகளுக்குச் சமமாக நமது நாடும் முன்னேற்றம் அடைந்திருக்கும். இப்போதுள்ள கல்வி முறை நம்மை அடிமைப் படுத்தியிருக்கிறது.'' 'சத்தியசோதனை'யில் உள்ள அவரது கருத்து இது.

''இப்போது இருக்கும் ஆட்சியை ஒழித்துவிட வேண்டுமென்று சொல்லுவதனால், ஆங்கில மொழியையே ஒழித்துவிட வேண்டும் என்று நான் சொல்லவில்லை. தேசப்பற்றுள்ள ஒரு இந்தியன் ஆங்கிலத்தை எவ்விதம் பயில்வானோ, அவ்விதம் பயில்வதையே நான் விரும்புகிறேன்.

ஆங்கிலப் படிப்பில் நமக்கு ஏதோ ஒருவித மோகம் இருக்கிறது. அதனால் ஏற்படும் நன்மை தீமைகளை ஆராய்ந்து பாருங்கள். ஆங்கிலக் கல்வி காரணமாக நமது ஆண்மையை இழந்துவிட்டோம், நமது அறிவு குன்றி விட்டது. இக்கல்விமுறை காரணமாக, நாம் பேடிகளாகிவிட்டோம். சுதந்திரம் என்ற தென்றலிலே நாம் உலவ விரும்புகிறோம். ஆனால், ஆங்கிலக் கல்விமுறை அடிமைத்தனத்தைத்தான் உணடாக்கி விட்டது. இதனால், நமது சமுதாயம் ஆண்மையை இழந்துகொண்டு வருகிறது.

மாணவர்கள் படித்துப் படித்துச் சோர்வடைந்து போனார்கள். சுயமாக எதுவும் செய்யத் தெரியாமல், மற்றவர்களைப் பார்த்துச் செய்கிற வழக்கமே

நமக்குள் அதிகமாகிவிட்டது. இதுவே, ஆங்கிலக் கல்வியின் பயனைப்பற்றி நான் கொண்டுள்ள அபிப்பிராயம்.

கல்வி புகட்டுவதில் நமது தாய்மொழியை உபயோகிக்கக் கூடா தென்று விலக்கிவைத்திருப்பது மிகக் கேடான தொன்றாகும்.

ஆங்கில நூல்களைக் கற்று அவர்களது அறிவு விருத்தியாயிற்று; சந்தேகம் இல்லை. ஆனால், அத்தனை விஷயங்களையும் தாய் மொழி மூலமாக அடைவதற்கு வசதி இருந்திருக்க வேண்டும்.

நாம் இப்போது கேவலமான அடிமை நிலையில் இருக்கிறோம். இதைவிட்டுச் சம அந்தஸ்தை அடைகிறவரையிலும் - அதாவது, அன்னிய ஆட்சியிலிருந்து விடுபட்டு, நம் காரியங்களை நாமே சாதித்துக் கொள்ளும் நிலைமை ஏற்படுகிறவரையிலும் - ஆங்கிலம் படிப்பதை நிறுத்திவிட வேண்டும் என்று மாணவர்களுக்குப் போதித்து வந்திருக்கிறேன்.

மேலைநாட்டாரின் இலக்கியம், சயன்ஸ், சிந்தனைகள் ஆகியவற்றில் காணப்படும் சிறந்த அம்சங்களை ஆங்கிலத்தின் மூலமாக நாம் அறிந்து கொள்ளலாம். இப்படி ஆங்கிலத்தை உபயோகிப்பது தான் நியாயமான முறை. ஆனால், நமது தாய்மொழி நம் இதயத்தில் வகித்துவந்த உன்னதமான ஸ்தானத்தை ஆங்கில மொழி கவர்ந்து கொண்டு, தாய்மொழியை அது வெளியே துரத்திவிட்டது. ஆங்கிலேயரும் நாமும் சம நிலையில் மேலான நிலையை ஆங்கில மொழிக்கு நாம் கொடுத்துவிட்டோம். எவ்வளவு நுணுக்க மான விஷயத்தையும் ஆங்கிலப் பயிற்சி இன்றியே ஆராயும் திறன் இந்தியர்களுக்கு இருக்க வேண்டும்.

ஆங்கிலப் பயிற்சியின்றி, இந்திய சுதந்திரம் சாத்தியமில்லை என்று நூற்றுக்கணக்கான இளைஞர்கள் நம்புகிறார்கள். இக்கொடிய நோயானது, கல்வி என்றால் ஆங்கிலம் படிப்பதுதான் என்கிற அளவுக்குப் பரவி, சமூகத்தின் உடலையே அரித்துவிட்டது. இவை யாவும், நமது அடிமைத்தனத்தையும் இழிந்த நிலையையுமே எடுத்துக் காட்டுகின்றன வென்பது வெளிப்படை. நமது தாய்மொழிகளைப் படுத்திவைக்கிற பாட்டையும், அவற்றை வளரவொட்டாமல் நசுக்கி வைத்திருக்கிற நிலையையும் நோக்கும்போது, 'என் உள்ளம் பதைக்கிறது. பிள்ளைகளுக்குப் பெற்றோர் எழுதும்போதும், மனைவியருக்குக் கணவன்மார் எழுதும்போதும், தாய்மொழியில் எழுதாமல், ஆங்கிலத்தில் எழுதுவதைச் சிறிதிகூட என்னால் சகிக்க முடியவில்லை.

என்னுடைய வீட்டில் யாரும் நுழையாதபடி சுற்றிச் சுவரெழுப்பவேண்டு மென்றோ, சன்னல்களில் காற்றுப் புகாதபடி, சாமான்களைத் திணித்து அடைத்துவிட வேண்டு மென்றோ நான்

விரும்புவதில்லை. உலகத்திலுள்ள பல்வேறு கலைகளும் நாகரிகமும் யாதொரு தடங்கலுமின்றி, என்னைச் சுற்றி வழங்கிவர வேண்டு மென்றே நான் விரும்புகிறேன். ஆனால் என்க்குச் சொந்தமான கலையுணர்ச்சியையும் பண்பாட்டையும் மற்றொன்று வந்து அழித்துவிடுவதை நான் பார்த்துக்கொண்டிருக்க முடியாது.

இலக்கிய உணர்ச்சியில் ஈடுபட்ட நமது இளைஞர்களும் இளம் பெண்களும், ஆங்கில மொழியையும் உலகிலுள்ள வேறு மொழிகளையும் எவ்வளவு வேண்டுமானாலும் படிக்கட்டும்; படித்து, படித்ததன் பயனை இந்தியாவுக்கும் உலகுக்கும் பயன்படும் முறையில், ஜகதீஸ் சந்திர போஸ் போலவும், பி.ஸி.ரே. போலவும், தாகூர்போலவும் அள்ளி வழங்கட்டும். இந்த நிலைமையையே நான் மனப்பூர்வமாக விரும்புகிறேன்.

ஆனால் சிலர் தாய்மொழியை மறந்து, அதைப் புறக்கணிப்பதோடு நில்லாமல், 'இந்த மொழிக்குரிய சமூகத்தில் நாம் பிறந்தோமே!' என்று வெட்கப்படவும் செய்கிறார்கள். சிறந்த கருத்துக்களைத் தாய் மொழியிலேயே சிந்தனை செய்யவும், சிந்தித்தவற்றை வெளியிடவும் முடியா தென்று நினைக்கிறார்கள். இப்படி நினைப்பது சரியே அல்ல.

அன்னிய ஆட்சியால் நம் நாட்டிற்கு விளைந்த - கேடுகள் பல. அவற்றில், அன்னிய மொழியாகிய ஆங்கில மொழியை வலிந்து புகுத்தி, நமது இளைஞர்கள் இரிந்த நிலை யடைய வேண்டுமென்ற நோக்கத்தோடு அவர்களை ஆங்கிலம் படிக்கச் செய்திருப்பதும் ஒன்று. அன்னிய ஆட்சியின் பயனாய் இந்தியாவில் விளைந்துள்ள மிகப் பெரிய கேடுகளில் இதையும் ஒன்றகச் சரித்திரம சொல்லப் போகிறது.

மேலைநாட்டுப் பண்பாடு நல்லதா கெட்டதா வென்பது பற்றி இங்கே நாம் ஆராயவில்லை. எந்த மொழியிலே கல்வி கற்பிக்க வேண்டும் என்பதே கவனிக்க வேண்டிய விஷயம். இப்போது நமக்கு, கல்வி என்று சொல்லக்கூடிய தெல்லாம் உயர்தரப் படிப்புத்தான். அதை ஆங்கில மொழியின் மூலமாகவே நமக்குப் போதித்து வருகிறார்கள். இதுதான் இப்போதுள்ள குறை. ஒரு நாட்டு மக்கள் அந்த நாட்டுக்குரிய உயர்ந்த பண்புகளுடன் விளங்க வேண்டுமானால், அந்த நாட்டு இளைஞர்களுக்கு உயர்தரக் கல்வி மட்டுமின்றி எல்லாக் கல்வியையும் தாய்மொழி மூலமாகவே கற்பிக்க வேண்டும். அனைவரும் அறிந்த உண்மை இது. ஆனால், நமக்கு ஆங்கில மொழி மூலமாகவே கல்வி கற்பிக்கப்படுவதால், இதை இவ்வளவு தூரம் விரித்துச் சொல்ல நேர்ந்தது. பொதுமக்களுடன் இளைஞர்கள் நேருக்கு நேராக நெருங்கிப் பழக வேண்டுமானால், பொது ஜனங்களுக்குத் தெரிந்துள்ள பாஷையிலேயே கல்வி பயின்று, தங்கள் அறிவைப் பெருக்கியிருக்க வேண்டும்; இல்லை என்றால்,

பொதுஜனங்களுடன் தொடர்புகொள்ள முடியாது; இது கண்கூடான உண்மை. தாய்மொழியையும் அதிலுள்ள இலக்கியச் செல்வத்தையும் படியாமல் அசட்டை செய்துவிட்டு, வேறொரு அன்னிய பாஷையைப் படித்து, அந்த பாஷையிலும் அதனுடைய பேச்சு வழக்கிலும் நிபுணராக எண்ணி, நமது இளைஞர்கள் எத்தனையோ ஆண்டுகளை வீணாக்கி வருகிறார்கள். இப்படி வீணாக்கியும், தினசரி வாழ்க்கையில் அதனால் எந்தப் பயனும் அவர்களுக்குக் கிட்டுவதாயில்லை. இவ்வாறு இளைஞர்கள் வீணாகத் தங்கள் சக்தியை விரையம் பண்ணுவது, நாட்டுக்கு அளவிடமுடியாத நஷ்டமாகும். இந்த நஷ்டத்தை யாராலே கணக்கிட்டுச் சொல்லமுடியும்? குறித்த ஒரு மொழியில் சயன்ஸ் சம்பந்தமான கருத்துக்களையும் வேறு பல நுணுக்கமான விஷயங்களையும் தெளிவாக எடுத்துச் சொல்ல முடியாதென்றும், அந்த மொழியில் வளர்ச்சிக்கு இடமில்லையென்றும் சிலர் சொல்லியிருக்கிறார்கள். இதைவிடப் பெரிய மூட நம்பிக்கை வேறு கிடையாது. பேசுகிறவர்களுடைய நடை, உடை, பாவனைகளையும் வளர்ச்சியையும் அப்படியே பிரதிபலித்துக் காட்டுவதே மொழியாகும்.

படித்த இந்தியர்கள் ஆங்கில பாஷையின்மீது வைத்திருக்கிற மோகத்தை எவ்வளவு விரைவிலே உதறித் தள்ளுகிறார்களோ, அவ்வளவுக்கு, அவர்களுக்கு மட்டுமன்றி, பொதுவாக இந்தியர்கள், அனைவருக்குமே அதனால் நன்மையுண்டு.''

காந்தியடிகள் இப்படிச் சொன்னதெல்லாம் நாம் விடுதலை அடைவதற்கு முன்னாலிருந்த நிலை. இப்போது கி.பி.2000த்தில் ஆங்கிலக் கல்வி நமக்குத் தேவைப்படுகிறதே என்று பலர் கூற முன் வரலாம். கல்வியின் தேவை - உலகத் தொடர்புக்கோ, இந்தியத் தொடர்புக்கோ ஆங்கிலம் தேவைதான். ஆங்கிலத்தில் பேசி, எழுதிக் காட்டும் திறன் நமக்குத் தேவை என்பதில் எனக்கு மாறுபட்ட கருத்தே கிடையாது.

ஆனால் அதே நேரத்தில் 'தாய்மொழி வழியிலான கல்வி பற்றியும், அதன் வாயிலாக நமது கலாசாரம் பண்பாடும் பாதுகாக்கப்படவேண்டும் என்றும் காந்தியடிகள் கூறியிரப்பதனை யாராலும் மறுக்க முடியாது; நாம் பேடிகளாகவும், ஆண்மையற்றவர்களாகவும் ஆகிவிட்டோம் என்பதனை 'மகாத்மா'வே கூறியிருப்பதை ஆங்கிலக் கல்வியை வைத்துப் பிழைப்பு நடத்தும் **ஆஸ்துமாக்கள்** உணர்வார்களா?

மைசூரில் உள்ள 'இந்திய மொழிகள் மையம்' திரு.வ.அய். சு. வழியாக எங்கட்குச் சில செய்திகளை வழங்கியுள்ளது.

1. வில்லியம் இ. புல் (Bull) எழுதிய 'கல்வியில் வட்டார மொழியின் பங்கு' பற்றிய குறிப்பும் 2) அவர் எழுதிய நூலைப் பற்றிய திறனாய்வும்

3) 1951இல் 'யுனெஸ்கோ'வில் கூடிய வல்லுநர்கள் தந்த கருத்துகளும் இங்கே தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றில் சில பகுதிகளை மட்டும் தந்துள்ளேன்.

THE USE OF VERNACULAR LANGUAGES IN EDUCATION: THE REPORT OF THE UNESCO MEETING OF SPECIALISTS, 1951

The language problem in education is world-wide and therefore a proper field of investigation for the educational agency of the United Nations.

Since therefore the question of the medium of instruction is a recurrent problem in fundamental education and in the development of adequate systems of schooling in so many countries, the General Conference of Unesco at its Fifth Session in 1951 recommended that that it should be made a subject for separate study on a world-wide scale. This decision was strengthened by a resolution previously passed by the General Assembly of the United Nations, asking Unesco to take action.

Towards the end of 1951, specialists from all parts of the globe met at Unesco House, Paris, to discuss in particular the use of vernacular languages. The meeting considered its main task to be the provision of some answer to two important questions: under what circumstances is the use of the vernacular possible in education; and what measures might be taken to facilitate and encourage its use? The meeting recorded its findings in a draft report, which is now published in the pages that follow.

It is through his mother tongue that every human being first learns to formulate and express his ideas about himself and about the world in which he lives.

Every child is born into a cultural environment; the language is both a part of, and an expression of, that environment. Thus the acquiring of this language (his "mother tongue") is a part of the process by which a child absorbs the cultural environment; it can, then, be said that this language plays an important part in moulding the child's early concepts. He will, therefore, find it difficult to grasp any new concept which is so alien to his cultural environment that it cannot readily find expression in his mother tongue.

In learning any foreign language a child may find difficulty in mastering the alien vocabulary and syntax sufficiently to express his ideas in it. Where the foreign language belongs to a wholly alien culture he is

faced with the added and much greater difficulties: to interpret to himself the new ideas in terms of his own medium of thought – his mother tongue – and to express his own ideas and thoughts through the new modes of the alien tongue. Ideas which have been formulated in one language are so difficult to express through the modes of another, that a person habitually faced with this task can readily lose his facility to express himself. A child, faced with this task at an age when his powers of self-expression even in his mother tongue are but incompletely developed, may possibly never achieve adequate self-expression.

For these reasons it is important that every effort should be made to provide education in the mother tongue.

In particular, pupils should begin their schooling through the medium of the mother tongue, because they understand best and because to begin their school life in the mother tongue will make the break between home and school as small as possible.

The young child passes from being one of a few children under his mother's eye to being one of a large group under a teacher. Instead of running about and playing and shouting he is usually expected to sit still and be quiet; to concentrate, to do what he is told instead of what he wants to do, to listen and learn and answer questions. New information and ideas are presented to him as fast as he can possibly absorb them, and he is expected to show evidence that he has absorbed them. Almost everything is different from home and it is not surprising that many children find difficulty in adjusting themselves to their new surroundings. If the language in which all these bewildering new communications are made is also different from.

He will find a lesson in geography or almost any other subject easier if he is taught it in his mother tongue. To expect him to deal with new information or ideas presented to him in an unfamiliar language is to impose on him a double burden, and he will make slower progress.

The use of the mother tongue will promote better understanding between the home and the school when the child is taught in the language of the home. What he learns can easily be expressed or applied in the home. Moreover, the parents will be in a better position to understand the problems of the school and in some measure to help the school in the education of the child.

They should, for example, be taught by teachers who speak their mother tongue, and their task of passing to the new medium should take priority over other tasks.

"The child already knows his mother tongue." The second objection is that the child already knows his own language before he comes to school, and that there is no need for the school to teach it to him. There are two replies to this. In the first place, he has not completely learnt it before coming to school. He has learnt it enough for his own childish purposes, but he will still need to develop his knowledge of it as he grows older. The English or French child devotes a great part of his time throughout his school career to studying his mother tongue. In the second place, the school is not merely teaching the child his mother tongue; it is using his mother tongue as the most effective means of teaching him other things.

Recent experience in many places proves that an equal or better command of the second language can be imparted if the school beings command of the second language can be imparted if the school begins with the mother tongue as the medium of instruction, subsequently introducing the second language as a subject of instruction.

We think all children should at least begin their schooling in their mother tongue, and that they will benefit from being taught in their mother tongue as long as possible.

The mother tongue should be used in the early stages of education, even when another language must be used for further training. The early training in the mother tongue should serve as a bridge for learning the second language.

For students who are not following a course leading to university education, more stress may be placed proportionately on learning useful things through the mother tongue;

SUMMARY

1. The mother tongue is a person's natural means of self-expression, and one of his first needs is to develop his power of self-expression to the full.

2. Every pupil should begin his formal education in his mother tongue.

3. If the mother tongue is adequate in all respects to serve as the vehicle of university and higher technical education, it should be so used.

4. In other cases, the mother tongue should be used as far as the supply of books and materials permits.

5. If a child's mother tongue is not the official language of his country, or is not a world language, he needs to learn a second language.

6. It is possible to acquire a good knowledge of a second language without using it as the medium of instruction for general subject.

யுனெஸ்கோ எனும் உலக நிறுவனம் தாய்மொழி வழிக்கல்வி குறித்து எவ்வளவு தெளிவான பார்வையைக் கொண்டுள்ளது என்பதனை நாம் உணரவேண்டும்.

அடுத்து, நமக்குத் 'தேசிய கீதத்தை' வழங்கி ஒவ்வோர் இந்தியனின் உள்ளத்திலும் வாழ்ந்து கொண்டிருக்கும் கவிஞர் இரவீந்திரநாத தாகூரின் கருத்துகளைக் காண்போம்.

பல்கலைக்கழகத்தில் பயிற்றுமொழி எனும் தலைப்பில் அவர் கூறுகிறார். 'As a general rule the mother tongue if it be one of the leading vernaculars of India, should be made the medium of instruction'

'இந்தியாவில் முன்னணியில் இருக்கும் வட்டார மொழியாக இருக்குமானால், அம்மொழியே - அத்தகையதாய் மொழியே பல்கலைக் கழகங்களில் பாடமொழியாக இருக்க வேண்டும்' என்கிறார்.

ஆனால் அதே நேரத்தில் ஆங்கிலத்தின் இன்றியமையாமையை நமக்குப் புரியும்படி, தெளிவுபடுத்தியுள்ளன. "English should be universally taught as a second, but compulsory language". ஆங்கிலம் கட்டாயம் கற்பிக்கப்பட வேண்டும்; ஆனால் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படவேண்டும்; அப்படியானால் முதன்மொழி? தாய்மொழிதான்.

'Open Letters, speeches, Tributes' எனும் நூல் தொகுப்பிலிருந்து இச் செய்திகள் திரட்டப்பட்டுள்ளன. 'மகளிர்க்கான கல்வி' என்ற தலைப்பில் 'The courses that have such an aim can be best given in the vernacular' என்கிறார்.

'Vernacular' எனும் சொல்லாட்சி தாகூர காலத்தில் பெருவழக்காக இருந்தது. அதன்பின் 'வட்டார மொழி' (Regional language) தாய்மொழி

(Mother tongue) எனும் வழக்குகள் வேரூன்றன. இப்போது 'Vernacular' எனும் வழக்கு பெரும்பாலும் மறைந்து விட்டது.

'Primary and secondary Education' எனும் தலைப்பில் அவர் கூறிய கருத்து இதுதான்.

"The Mother - tongue should be the medium of instruction. The fewer the text-books he better in the Primary and the Lower Secondary stage. In the High school stage vernacular text-books for all subjects should be prepared, without any further delay".

தொடக்க மற்றும் உயர் நிலைக்கல்வியில் 'தாய்மொழிதான் பயிற்று மொழியாக இருக்கவேண்டும்' என அடித்துச் சொல்கிறார் தாகூர்.

மற்றொரு செய்தி:

திருப்பராய்த் துறையிலிருந்து வெளிவரும் தர்மசக்கரம் எனும் இதழில் வெளிவந்த நாடகம் 'சகோதரி நிவேதிதை' இதோ, கவிதாகூரே அவரை அறிமுகப் படுத்துகிறார்:

''இவர் பிறந்தது இங்கிலாந்தில். இந்தியத் தத்தவக் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டுச் சுவாமி விவேகாநந்தரின் சிஷ்யை ஆகியுள்ளார். நம் மக்களுக்குச் சேவை செய்ய வந்துள்ளார்''

நமது முக்கியமான செய்தியே அடுத்ததுதான்.

தாகூருக்கும் நிவேதிதைக்கும் இடையில் நடந்த உரையாடல்:

''ரவீந்திரநாததாகூர்: என் மகள் ம்ருணாளினி 4 வயது சிறுமி. அவளுக்கு நீங்கள் ஆங்கிலம் கற்பிக்க வேண்டும். ஆங்கிலத்தைத் தாய்மொழியாக உடைய சொல்வன்மை படைத்த உங்களிடம் இந்தச் சிறுவயதில் அவள் ஆங்கிலம் கற்றுக் கொண்டால் பின்னாளில் அவள் அதைச் பேசுவதிலும், எழுதுவதிலும் சிறந்து விளங்குவாள் என்பதில் சந்தேகமில்லை. மேலும், எல்லாப் பாடங்களையும் அவளுக்கு நீங்கள் தான் சிறப்பு ஆசிரியையாக இருந்து ஆங்கிலத்தில் போதிக்கவேண்டும்.

நிவேதிதை: நண்பரே! என்னால் உங்கள் வேண்டுகோளை நிறைவேற்ற முடியாது. மன்னிக்கவும்.

ரவீந்திரநாததாகூர்: (பதட்டத்துடன்) ஏன் அப்படிச் சொல்லிவிட்டீர்கள்? என் மகளுக்கு ஆங்கிலம் கற்பிப்பதில் உங்களுக்கு ஏதேனும் சிரமம் உள்ளதா?

நிவேதிதை: தாய்மொழிக் கல்விதான் சிறுவர்களுடைய மன வளர்ச்சிக்கு உறு துணையாகும். சின்னஞ்சிறு வயதில் பிற மொழிப் போதனை சிந்தனா சக்தியைத் தடைசெய்யும். நான் வந்துள்ளதன் நோக்கம் பாரத நாட்டுக்கு நான் என்ன செய்யமுடியும் என்பதே. என்னை உங்களில் ஒருவளாக நினையுங்கள்.''

இங்கிலாந்திலிருந்து வந்த சகோதரி நிவேதிதையே 'தாய்மொழிக் கல்விதான் சிறுவர்களுடைய மன வளர்ச்சிக்கு உறுதுணையாகும்' என்று சொல்கிறார். இங்குள்ள 'ஆங்கில மேதிகள்' இதனை உணர்வார்களா?

திருத்தணியிலிருந்து வரும் 'தமிழ் இன்பம்' இதழில் (செப்.2000) ஒரு செய்தி: கவிஞர் தாகூரின் கருத்துகளை ஏற்கெனவே அவரது படைப்புகளில் இருந்தே பார்த்துள்ளோம். மீண்டும் தாகூரின் தாய்மொழி சார்ந்த நடவடிக்கைகளைக் கவனியுங்கள்:

''இலக்கியத்துக்கு இந்தியாவில் நோபல் பரிசு பெற்ற கலைஞர் கவிஞர் தாகூர். அவர் அப்பரிசுக்கு உரிய கீதாஞ்சலியைத் தம் தாய்மொழியாகிய வங்காளத்திலேயே எழுதினார். வங்காள நாடு வங்க மொழியாலேயே வாழும் எனக் கண்டார். அவர்தம் மொழிப்பற்று இன்றைய தமிழகத்தில் வாழ்பவர் அறிந்து உணர்ந்து பின்பற்றத்தக்கது.

வங்காள மக்களுக்கு இருந்த ஆங்கில மோகத்தைப் போக்கியதில் கவிஞர் பெருந்தொண்டு ஆற்றினார் என்று கூறவேண்டும். பள்ளிக்கூடங்களில் ஆங்கிலத்தின வாயிலாகப் பாடங்களைக் கற்பித்தலை மிக மிக வன்மையாகக் கண்டித்தவர் அவர். தாய்மொழியின் வாயிலாகவே அறிவை வளர்க்க வேண்டும் என்பதை அவர் மிக உறுதியாக எடுத்துரைத்து வந்தார். கூட்டங்களில் ஆங்கிலத்தில் பேசும் பழக்கங்களை விடவேண்டும் என்றார். தாமே முதலில் முன்வந்து வங்காளியில் பேசி, தாய்மொழியில் பேசப் பெருமை கொள்ள வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாச்சொற்பொழிவுகளை ஆங்கிலத்தில் உயர்ந்த நாகரிகமாக இருந்து வந்தது. பல்கலைக்கழகம் அவரை அழைத்துப் பட்டமளிப்புப் பேச்சு நிகழ்த்தக் கேட்டபோது, வங்காளியிலேயே பேசினார்.''

''தமிழா ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக் கூடங்கள் போக்கு, ஐரோப்பிய சாத்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக் கொடுக்க ஏற்பாடு செய்'' என்றார் பாரதியார். அவரது கருத்தினை எண்ணிப் பாருங்கள்.

இயல் இருபத்தேழு - ஆ

சமகால அறிஞர்களின் கருத்துகள்

'தாய்' என்றால என்ன பொருள் என்றோ, தாயின் சிறப்புகள் குறித்தோ நான் சொல்லவேண்டியதில்லை. ஆனால், தாயின் பெருமையை உணர்ந்தவர்களும் இருக்கிறார்கள்; தாயின் பெருமையை உணராத தறுதலைகளும் இருக்கிறார்கள். நண்பர்களிடத்தில் வேறுசில பெரும்புள்ளிகள் முன்னிலையிலும் ''இவள்தான் என்தாய்'' என்று பெருமையோடு அறிமுகப் படுத்திக் கொள்ளக் கூச்சப்படும் சிறுமதியாளர்களும் உண்டு.

இதற்கு மேல் 'தாய்மொழி' பற்றி நாம் சிந்திக்க வேண்டும். 'தமிழ் வழிக்கல்வி' பற்றிய நடவடிக்கைகளை - வரலாற்றுக் குறிப்புகளைப் பார்க்கு முன் அறிஞர்கள் சிலர் தாய்மொழி பற்றி எப்படியெல்லாம் சிந்தித்து நமக்குச் சொல்லியிருக்கிறார்கள் என்பதையும் மனத்திற் கொள்ள வேண்டும்.

அதன்பின், நம் சமகால அறிஞர்கள் (Contemporaries) என்ன கருதினார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும்.

13.5.96இல் நாங்கள் ஆட்சிக்கு வருமுன் 25.3.1995 ஆம் நாளைய தினமணிச் சுடரில் ஒரு கட்டுரை. 33 ஆண்டுகள் தில்லியில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த இந்திரா பார்த்தசாரதி எழுதியது. எங்களைக் குறிவைத்து எழுதவில்லை; ஆனால் எங்களுக்காக எழுதப்பட்டதாகவே எடுத்துக் கொள்கிறேன். அதுவும் தஞ்சை உலகத் தமிழ் மாநாடு நடந்து முடிந்தவுடன் எழுதப்பட்ட கட்டுரை இது.

முதலில் கட்டுரைப் பார்ப்போம்.

''அண்மையில்தான் எனக்குத் தெரிந்தது, தமிழ் நாட்டிலிருக்கும் தனியார் பள்ளிகளில் தமிழ்மொழி கற்காமலேயே மாணவர்களால் தேர்ச்சி அடைய முடியுமென்று. மழலை வகுப்புகளில் ஆங்கிலம் கட்டாயம், தமிழ் அல்லது ஹிந்தி இரண்டாவது மொழி. சில பள்ளிகளில் சமஸ்கிருதம் அல்லது பிரெஞ்சு இரண்டாவது மொழியென்று அறிகிறேன்.திதிய

தாய்மொழியைக் கட்டாயமாக்காத ஒரு பிராந்தியம் உலகில் இருக்குமானால் அது தமிழ்நாடாகத்தான் இருக்கவேண்டும். ' இன்றும் தமிழ், என்றும் தமிழ்' என்பது வோட்டுச் சோற்றுக்காக உருவாக்கப்பட்ட அரசியல்

கோஷம். மானமிகு தமிழர்களும் இதை ஏற்றுக்கொண்டிருப்பதுதான் இன்றைய தமிழனை நன்கு அடையாளப்படுத்திக் காட்டுகிறது என்று சொல்ல வேண்டும்.

நாம் பேசும் மொழியை நாமே மதிக்கக் கற்றுக் கொண்டால்தான் மற்றவர்கள் நம் மொழிக்கும் மரியாதை தருவார்கள். வங்காளி, மலையாளம் ஆகிய மொழிகளுக்கு அகில இந்திய ரீதியாக நிலவிவரும் அங்கீகாரத்துக் காரணம் இந்த மொழி பேசுகின்றவர்கள், எந்தவிதமான மனத் தடையுமில்லாமல் இவற்றைத் தாய் மொழியாகக் கொண்டிருப்பது பற்றிப் பெருமைகொண்டிருப்பதுதான். தில்லி மாநிலத்தில் தனியார் பள்ளிகளிலும் ஹிந்தி கட்டாயமாகக் கற்பிக்கப்பட வேண்டும். இதைத் தவிர தாய்மொழியைக் கற்க வசதியுமுண்டு. முப்பத்திமூன்றாண்டுகள் தில்லியிலிருந்துவிட்டு வந்த எனக்குத் தமிழ் நாட்டில், தமிழ்மொழியை எழுதப்படிக்கத் தெரியாமலேயே தமிழ் மாணவர்கள் பள்ளிப் படிப்பை முடித்துவிட முடியுமென்று கேட்டதும் அதிர்ச்சியாக இருந்தது. தமிழ் மீது சத்தியம் செய்து இருபத்தெட்டு ஆண்டுகளாக பதவியிலிருந்து வரும் திராவிடக் கட்சிகளின் இரட்டைவேடத்தை என்னால் புரிந்துகொள்ள முடியவில்லை.

போலந்து நாடு 120 ஆண்டுகள் ஐரோப்பிய வரைபடத்திலேயே இல்லை. ரஷ்யா, ப்ரஷ்யா (ஜெர்மனி) ஆஸ்திரிய - ஹங்கேரிய ஏகாதிபத்தியம், ஆகிய மூன்று வல்லரசுகளும் அந் நாட்டை மூன்றாகக் கூறுபோட்டு 1797லிருந்து 1917 வரை ஆண்டு வந்தன. ஆனால் போலந்து என்ற தேசம், போலந்து மக்கள் மனத்தினின்று மறையவேயில்லை. காரணம், அவர்கள் தாங்கள் பேசிவந்த போலிஷ் மொழியை மறக்கவில்லை என்பதுதான். அதனால்தான் இன்று விஞ்ஞான உயர்கல்வி போலிஷ் மொழியில் சாத்தியமாக இருக்கிறது. போலந்து அடிமைப்பட்டிருந்த காலத்திலேயே மேடம் க்யூரி இரண்டு தடவை நோபல் பரிசு பெற்றபோதும், யாரும் ஆச்சரியப்பட வில்லை.

முதலில் தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருப்பது பற்றிய நம் அடிமனத்துத் தாழ்வு மனப்பான்மையை நாம் அகற்றியாக வேண்டும். அண்மையில் ஓர் ஆங்கிலச் செய்தித்தாளில் கார்ப்பரேஷன் பள்ளிக்கூடங்களைப் பற்றி ஒரு கட்டுரை பிரசுரமாகியிருந்தது. கார்ப்பரேஷன் பள்ளிக்கூடங்களில் ஆங்கிலம் பயிற்று மொழியாக இல்லாத காரணத்தால், ஏழை மாணவர்கள் கூட அப்பள்ளிகளை நாடுவதில்லை என்ற குறிப்பு காணப்பட்டது. தனியார் பள்ளிகளில் சேருவதற்கான பணவசதி இல்லாவிட்டாலும், மிகவும் கஷ்டப்பட்டு இவ்வேழைகள் தங்கள் குழந்தைகளை ஆங்கிலத்தில் பாடம் கற்பதற்காக இத்தனியார் பள்ளிகளுக்கு அனுப்புகிறார்கள் என்பதுதான் அந்நிருபரின் செய்தி.

அப்படியானால், இருபத்தெட்டாண்டுகளாக அரசியல் மேடைகளில் நம் செவிப்பறைகளைத் துளைக்கும் 'தமிழ் முழக்கம்' செயல்பாட்டளவில் வெறும் ஏமாற்றுவித்தை என்பதை இந்த ஏழை மக்கள் உணர்ந்துகொண்டு விட்டார்கள் என்பது அர்த்தமா? ஆங்கிலம் தெரிந்த சிறுபான்மையரிடத்து அதிகாரம் இருக்கும்போது இரண்டாம் தர குடிமகனாக இருக்க யார்தான் சம்மதிப்பார்கள்?

இதுதான் இந்நாட்டு அவல நிலை. தாய்மொழி குறித்து நம் அடிமனத்திலே அழிக்க முடியாத அளவுக்கு உருவாகிவிட்ட தாழ்வு மனப்பான்மை தில்லியில் பள்ளிகளில் கற்கும் பெரும்பான்மையான தமிழ் மாணவர்கள் தங்களுக்குத் தமிழ் அவ்வளவாகத் தெரியாது, ஹிந்தி தான் நன்றாகத் தெரியுமென்று சொல்லிக் கொள்வதில் பெருமை கொள்கிறார்கள் என்று நாம் ஒரு காலத்தில் குறைப்பட்டுக் கொண்டதுண்டு, காரணம், பெரும்பான்மையான கலாசாரச் சூழ்நிலையிலே, சிறுபான்மையர் என்று சொல்லிக்கொள்ள விரும்பாத தாழ்வு மனப்பான்மை ஆனால் கடந்த சில ஆண்டுகளாகத் தமிழ் நாட்டிலிருக்கும் எனக்குத் தமிழ்நாட்டு தமிழ் மாணவர்கள் தங்களை மேல்தட்டினராக அடையாளம் காட்டிக்கொள்ளும் ஆசையில் (மேல் தட்டு என்பது அரசியல் கலாசார ரீதியாக பரவலாக அறியிப்பட்ட அர்த்தத் தமிழைப் பொருத்த வரையில் ஒரு போஷக மனப்பான்மை தான்). 'Patronising attitude' இருந்து வருகிறது. உதட்டளவில் ஆங்கிலம் பேசுவது போல் தமிழையும் அத உச்சரிப்பில் பேசும் 'நவ நாகரீக' யுவதிகளை நாம் தனியார் தொலைக்காட்சி ஸ்தாபனங்களில் (சன் டி.வி. உள்பட) நிகழ்ச்சிகளை அறிமுகப்படுத்தும் பெண்களாக (anchor woman) தினசரி சந்திக்கின்றோம். இந்த மாதிரி செயற்கையான உச்சரிப்பு இருந்தால் பி.பி.ஸி.யிலோ அமெரிக்கத் தொலைக்காட்சி ஸ்தாபனங்களிலோ ஒருநாள் கூட வைத்திருக்க மாட்டார்கள். இதுவும் நம் தாழ்வு மனப்பான்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

தமிழ்மொழியைப் பற்றி, சமூக, அரசியல் அளவில், இப்படியொரு இரட்டை முக அளவுகோல், முரண்பாடு என்று கூட அறியப்படாத நிலையில், வாழ்க்கை முறைமையாக இருந்து வரும்போது, இம்மொழியின் இக்கால இலக்கியத்துக்கு உரிய அங்கீகாரம், அகில இந்திய அளவில் ஏற்பட வில்லை என்று வருத்தப்படுவதில் என்ன நியாயமிருக்கிறது? தமிழ் அறிவுஜீவிகளாகத் தங்களைச் சொல்லிக் கொள்வதில் பெருமை கொள்கின்றவர்கள் தங்களைத் தாங்களே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி இது.''

தனியார் பள்ளிகளில் தமிழ்மொழி கற்காமலேயே மாணவர்களால் தேர்ச்சி அடைய முடியும். இதில் குறிப்பாக சிபிஎஸ்சி பள்ளிகள் 194 -

சிறுபான்மையர் நடத்தும் பள்ளிகள் 1008 - இவற்றில்தான் தமிழ் அறவே இல்லாத நிலை. இவற்றை நமக்கு உணர்த்துகிறார்.

''தாய்மொழியைக் கட்டாயமாக்காத ஒரு பிராந்தியம் உலகில் இருக்குமானால் அது தமிழ் நாடாகத்தான் இருக்கவேண்டும்'' என்கிறார்.

உண்மைதான்; அதனால்தான் 1 முதல் 5 வகுப்பு வரை அனைவரும் தமிழ் படித்தாக வேண்டும் என்றும் தமிழை ஒரு பாடமாக (as a subject) கற்றாகவேண்டும் என்றும் 1999இல் ஆணைப்பிறப்பித்தோம். விளைவு என்ன ஆயிற்று என்றுதான் தெரியுமே!

'இன்றும் தமிழ் என்றும் தமிழ்' என்பது ஓட்டுச் சோற்றுக்காக உருவாக்கப்பட்ட அரசியல் முழக்கம் என்கிறார். இதில் உண்மை இருப்பதை நான் ஒப்புக்கொண்டாலும் என்போன்றவர்கள் இதற்கு அப்பால் உணர்ச்சி பூர்வமாக நின்று எப்படிப் போராடினோம் என்பதை இந்திரா பார்த்தசாரதியும் அறிவார்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள்தான் வங்காளியரைவிட, மலையாளிகளை விட அதிகம் ஒருமைப் பட்டுக்கொள்ளவேண்டியவர்கள். ஆனால் நடைமுறை அப்படியில்லை! அவரே சொல்வதைப்போல, தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டிருப்பது பற்றிய நமது அடிமனத்துத் தாழ்வு மனப்பான்மை தான் நம்மைத் தாழ்த்துகிறது; இழிவுபடுத்துகிறது. பிறர் நம் தலையில் ஏறி மிதிக்க இடம் கொடுக்கிறது.

'திராவிடக் கட்சியின் இரட்டைவேடம்' என்கிறார் இந்திரா பார்த்தசாரதி. திராவிடக் கட்சிகளில் இருக்கும் ஒவ்வொருவரும் நெஞ்சில் கைவைத்து எண்ணிப் பார்த்துக் கொள்ள வேண்டிய இடம்.

இயல்பான ஈடுபாட்டோடு இருக்கிறோமா
இரட்டை வேடம் போடுகிறோமோ
என்பதை முடிவு செய்யவேண்டும் நாம்.

ஆங்கிலம் தெரிந்த சிறுபான்மையரிடத்தில், அதிகாரம் குவியாமல், தமிழ்ப் பற்றாளர்களிடம், தமிழுக்கு முன்னுரிமை - முழு உரிமை கொடுத்து வாழ்பவர்களிடம் ஆட்சி அதிகாரம் இருக்கவேண்டும். அந்தச் சூழல் உறுதியாகிவிட்டால் மக்கள் மனநிலை மாறும் என்கிறார் இந்திரா பார்த்தசாரதி.

தொலைக் காட்சியில் அறிவிப்பாளர்களாக வரும் மகளிர் தொடுக்கும் மொழிக் கொலை பற்றி எண்ணிப் பாருங்கள்.

'தமிழ்மொழியைப் பற்றி, சமூக, அரசியல் அளவில், இப்படியொரு இரட்டை முக அளவுகோல், முரண்பாடு என்று கூட அறியப்படாத நிலையில், வாழ்க்கை முறைமையாக இருந்து வரும்போது, இம்மொழியின் இக்கால இலக்கியத்துக்கு உரிய அங்கீகாரம், அகில இந்திய அளவில் ஏற்பட வில்லை என்று வருத்தப்படுவதில் என்ன நியாயமிருக்கிறது? தமிழ் அறிவு ஜீவிகளாகத் தங்களைச் சொல்லிக் கொள்வதில் பெருமை கொள்கின்றவர்கள் தங்களைத் தாங்களே கேட்டுக்கொள்ள வேண்டிய கேள்வி இது'

இந்தக் கேள்வியை நானும் எழுப்பி, அதற்கு விடை காண முய்லுகின்றேன்.

''அன்னிய மொழியில் பாடங்கள் சொல்லிக் கொடுக்கப்படுவதால் நமது குழந்தைகளுக்கு அளவுக்கு மீறிய நிர்பந்தத்தை விளைவித்திருக்கிறது. எல்லாவற்றையும் மனப்பாடம் பண்ணுபவர்களாகவும், சுயமாகச் சிந்திக்கவோ, செயல்படவோ தகுதி அற்றவர்களாகவும் செய்துவிட்டது. தாம்பெறும் அறிவை மக்களுக்கோ, தம் குடும்பத்தினருக்கோ திருப்பிச் சொல்லிக் கொடுக்க முடியாதபடியும செய்துவிட்டது. அன்னிய போதனா மொழி காரணமாக நமது குழந்தைகள் தம் சொந்த நாட்டிலேயே அன்னியர்கள் போலாகி விட்டனர்'' - அண்ணல் காந்தி அடிகளின் (யங் இந்தியா, 01.09.1921). இந்த வருத்தத்திற்குப் பவள விழா கடந்தாயிற்று. அடிமைத் தளையறுத்தும், நம் நாட்டினர் தம் அடிமை மனோபாவம் அறவே மறைந்தபாடில்லை.

''பிரதேச மொழிகளில் பாடம் கற்பித்த போதும்கூட இப்போதைக்கு மாணவர்களும், ஆசிரியர்களும் ஆங்கில மொழியில் எழுதப்பட்ட பாட புத்தகங்களை உபயோகிக்கும்படிச் சொல்லலாம். ஆனால், பள்ளிக்கூடத்தில் சொல்லித் தருவது பிரதேச மொழியிலேயே இருக்கவேண்டும். . . . . இந்தத் திட்டத்தைப் பின்பற்றினால் பிரதேச மொழியில் கலைச் சொற்கள் விரைவில் தாமாக உண்டாகும். போதனையில் அன்றாடம் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் இந்தக் கலைச்சொற்களை எளிதில் தேடி எடுத்து வழக்கத்திற்குக் கொண்டுவரமுடியும்'' என்று இராசாசி 1939இல் கூறியுள்ளார்.

''தாய்மொழியையும் தாய்மொழி இலக்கியத்தையும் போற்றத் தவறியவர்கள் உலகிலேயே தமிழர்களைத்தவிர வேறு யாருமில்லை'' என்று ரவிந்திரநாத் தாகூரின் மொழிகளையும்,

''தமிழகத்தில் தாய்மொழியின் புதைகுழியில் - சமாதியில் ஆங்கிலம் வீற்றிருநது அரசாளக் காண்கிறேன்'' என்று காந்தியடிகளன் மொழிகளையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

அண்ணா ஆட்சிக்கு வருவதற்கு முன்பே, சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோதே, கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டுவர அன்றைய கல்வியமைச்சர் சி. சுப்பிரமணியம் முயற்சி மேற்கொண்டதைப் பாராட்டி -

''உண்மையில் இந்தத் தலைமுறையில் ஆங்கிலம் படித்தவர்களே அறிவாளிகள் என்ற மூடப் பழக்கத்தையும், ஆங்கிலத்திலேதான் அறிவைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றிருக்கிற வைதீகத்தையும் போக்கிட தமிழ்மொழி மூலம் எல்லாத் துறைகளிலும் நன்கு நிர்வாகம் நடத்த முடியுமென்று எடுத்துக்காட்டும் பொறுப்பு நமது சர்க்காருக்கு ஏற்பட்டிருக்கிறது. அக் காரியத்தைச் சாதிக்கும் வாய்ப்பு நமது கனம் கல்வி அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது. அத்துறையில் கனம் கல்வி அமைச்சர் அவர்கள் எடுத்துக் கொள்கிற எல்லா முயற்சிகளுக்கும் நானும் என் கட்சியும் அவருக்குத் துணையாக நிற்போம் என்று இங்கு நான் எடுத்துக் கூற விரும்புகிறேன்'' என்று 17.7.1957அன்று அண்ணா சட்டமன்றத்தில் பேசினார்.

என்றாலும், தான் முதலமைச்சராக இருந்த காலத்தில் அண்ணா கொண்டுவந்த இரு மொழித் திட்டத்தில் ஆங்கிலம் என்று தெளிவாகக் குறிப்பிட்டதைப் போல தமிழ் என்று தெளிவாகக் குறிப்பிடாமல், ஆங்கிலம், தாய்மொழி அல்லது வட்டார மொழி என்று குறிப்பிட்டுச் சட்டமாக்கியதால், ஆங்கிலம் ஒரு மொழித் திட்டமாகவே கொண்டு அதிகாரிகள் அதைச் செயற்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். இதனால் -

- 1948இல் 8ஆம் வகுப்பிலிருந்தும்,

  1950இல் 6ஆம் வகுப்பிலிருந்தும்,

  1963இல் (பாழாய்ப் போன பக்தவத்சலத்தால்) 3 ஆம் வகுப்பிலிருந்தும்

  1985இல் 1ஆம் வகுப்பிலிருந்தும் ஆங்கிலம் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டு வந்தது போக,

தற்போது 1ஆம் வகுப்புக்கு முந்திய ப்ரீகேஜி, யூ.கே.ஜி., எல்கே.ஜி. முதற்கொண்டே ஆங்கிலத்தையும் ஒரு பாடமாக அல்ல, ஆங்கில வழியிலேயே கற்பிக்கும் கொடுமை வந்து விட்டது.

ஆனால், காங்கிரசு இயக்கமும் சரி, திராவிட இயக்கமும் சரி; மக்கள் இயக்கமாக வளர்ந்ததே தாய்மொழி வழியில்தான் என்பதை ஏனோ இந்த மகானுபாவர்கள் மறந்து விடுகின்றனர்.

தாய்மொழி மூலம்தான் தாய்நாட்டு விடுதலையைச் சாதிக்க முடியும் என்று தெரிந்து கொண்டதாலேயே காந்தியார் -

''எனக்கு ஒரு சர்வாதிகாரியின் அதிகாரம் இருக்குமானால், நான் இன்றே பிள்ளைகள் அந்நிய மொழி மூலம் கல்வி கற்பதை நிறுத்திவிடுவேன். தாய்மொழி மூலம் கற்பிக்கும்படிக் கட்டளையிடுவேன். இம்மாற்றத்தை எதிர்ப்பவர்களை உடனே வேலையிலிருந்து நீக்கிவிடுவேன்'' என்று 22-6-1947லேயே தனது 'ஹரிஜன்' இதழில் எழுதினார்.

இன்றைக்கு உலக மயம், தாராளமயம் என்ற பெயரில் ஒரு புதிய ஏகாதிபத்தியம் உருவாகி, ஒவ்வொரு மொழிவழிப்பட்ட தேசிய இனத்தையும் அடிமையாக்கிவரும் சூழ்நிலையில், ஏற்கெனவே பெரும்பாலும் கூலிகளாகவே குலைந்து வரும் தமிழர்கள் உருப்பட வேண்டுமானால் தமிழ்வழிக் கல்வி இன்றியிமையாததாகும் என்று தமிழ்ச் சான்றோர் பேரவை அடித்துக் கூறுகிறது.

1971ஆம் ஆண்டிலேயே கோவை, சிந்தனைப் பேரவை ஒரு நூலை வெளியிட்டுள்ளது. 14 அறிஞர் பெருமக்களின் கருத்துகள் இதில் அடங்கியுள்ளன. அந்தக் கருத்துகளை ஒரு பார்வை பாருங்கள்.

''பலர் புரிந்துகொள்ளும் முயற்சியை விடுத்து மனப்பாடம் செய்யும் எந்திரங்களாக (உருப் போடும் பொறிகளாக) மாறி விடுகின்றனர். இவ்வாறு மனப்பாடம் செய்தலின் மூலம் மட்டுமே கற்பதால், படிப்பும கசந்துவிடுகிறது.

ஆனால், தாய்மொழி கற்கும்போதோ, புரிதற்கு எளிதாகிறது. சிந்தனை தூண்டப்படுகிறது; பாடத்தில் கவனம் செல்கிறது; ஆர்வம் மிகுகிறது; பல நூல்களை மேலும் படிக்க விருப்பமும் ஏற்படுகிறது. இஃது உள நூல் முடிவு மட்டுமன்று; தாய்மொழியைப் பயிற்று மொழியாகக் கொண்ட நாடுகள் நேரே கண்டறிந்த உண்மை.

சோவியத்து ஒன்றியக் குடியரசு ஏற்பட்ட பின்பு, ஒரு சிறிதும் வளர்ச்சி அடையாத, வரிவடிவமே (எழுத்தே) இல்லாத மொழிகளுக்கும், வரிவடிவம் கொடுத்துப் பல்கலைக் கழகப் பயிற்று மொழிகளாக ஆக்கப்பட்டதால், சோவியத்து நாட்டில் இன்று அறிவும் ஆராய்ச்சியும் ஓங்கி வளர்ந்துள்ளன. இறந்த மொழியாகக் கருதப்பட்ட யூதர்களின் தாய்மொழியாகிய எபிரேய மொழியைப் பயிற்றுமொழியாக்கி, அதன்மூலம் அறிவியல் துறையில் இசரேல் மிக வேகமாக வளர்ந்துள்ளது. சப்பான், சீனா முதலிய நாடுகளில் அம்மக்களின் தாயமொழிகளையே பயிற்றுமொழிகளாக்கியதால் அந்நாடுகள் மிகப் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது.

தமிழ் பயிற்றுமொழியாக ஆக்கப்படின், தமிழ் நூல்களுக்கு மேலுந் தேவை பெரிதும் அதிகரிக்கும், அந்த நிலையில் பல தரமான நூல்கள் தமிழில் கட்டாயம் வெளிவரும். இன்று நூல் எழுத வல்லவர்கள் பலர் இருந்தும், அந்நூல்களுக்குத் தேவையின்மையால் அவர்கள் எழுதாது வாளாவுள்ளனர். இப்படிப்பட்டோரின் செய்பணித் தறங்களைத் தக்காங்கு பயன் படுத்தக்கொண்டால், மாணவர், ஆசிரியர், ஆராய்ச்சியாளர் ஆகியோரின் அறிவுப் பசியைப் போக்கும் அளவிற்கு நூல்கள் தமிழிலும் பல்கிப் பெருகும் என்பதில் ஐயமில்லை.

நம் நாட்டில் இன்று சப்பான், சுவிட்சர்லாந்து, செக்கசுலொவாக்கிய, உருசியா, செருமன் முதலான பல்நாட்டு அறிஞர்களும் பணிபுரிகின்றனர். இவர்களை நம் நாட்டிற்கு நாம் வரவழைத்ததன் காரணம் அவர்களுக்கு நம் நாட்டு மொழிகள் தெரியும் என்பதாலோ அல்லது ஆங்கிலம் தெரியும் என்பதாலோ அல்லது நமக்குத் தேவையான துறைகளில் அவர்கள் நல்ல பயிற்சியும், தேர்ச்சியும் பெற்றிருப்பதாலேயே நாம் அவர்களை துணையினை நாடியுள்ளோம். அஃதே போல் நாமும் நல்ல தேர்ச்சியும் பயிற்சியும் உடையவர்களாயிருப்பின் நம்மையும் வெளிநாடுகளிலும் வெளி மாநிலங்களிலும் ஏற்று வரவழைப்பர் என்பது திண்ணம். நாம் எந்த நாட்டிற்கு அல்லது எந்த மாநிலத்திற்குச் செல்கிறோமோ, அந்தப் பகுதியினரின் மொழியை நாம், தேவையான அளவிற்குக் குறுகிய காலத்தில் பயின்று கொள்ள முடியும். மொழியியல் (Linguistics) நன்கு வளர்ந்துள்ள இக் காலத்தில் அயல் மொழிகளைக் கற்றல் மிக எளிமையான ஒன்றே.

'அந்தந்த மாநிலத்தார்க்குத்தான் அந்தந்த மாநிலங்களில் வேலை கொடுத்தல் வேண்டும், வேற்றுமாநிலத்தவர்க்குக் கொடுக்கலாகாது' என்ற கோட்பாடு (sons of the soil theory) பரவிவரும் இக் காலத்தில், வெளிமாநில வேலை வாய்ப்பை எதிர்நோக்கி நிற்பது அறிவுடைமையாகாது. வெளிநாட்டு வேலை வாய்ப்பிற்கும் இஃது ஏற்கும்.

குசராத்தி, இந்தி, மராத்தி, வங்காளி, பஞ்சாபி முதலாய இம் மாநில மொழிகளின் மூலம் உயர்கல்வி இயலுமெனின், தமிழின் மூலம் மட்டும் இயலாதென்பது எங்ஙனம் ஏற்புடைத்தாக்கும்?

தமிழைப் பயிற்று மொழியாக்குவதால ஆங்கில மொழிக் கல்வி அறவே நீக்கப்பட்டுவிடும் எனக் கூறுவது, வேண்டுமென்றே சில தன்னலங்கொள்ளிகள் பிறரை மயக்கித் தம்வயப்படுத்தும் பொருட்டு அச்சுறுத்தி மிரட்டும் பெட்டை மிரட்டாகும். உண்மையில் மூன்றாம் வகுப்பிலிருந்தே ஆங்கிலம் மொழிப்பாடமாக இருந்து வருகிறது; இனிமேலும் தொடர்ந்து இருந்துவரும். பட்டக்கல்வி பயில்வோர் 12 ஆண்டுகள்

ஆங்கிலத்தை ஒரு மொழிப்பாடமாகப் பயில்கின்றார்கள் என்பதை மறந்துவிடலாகாது.

தமிழ் பயிற்றுமொழியாவதை எதிர்ப்போர் மூவகையினர். 1) தாய்மொழி பயிற்றுமொழியாக இல்லாத இன்றைய நிலையைப் பயன்படுத்தி சீரும் சிறப்புமாக வாழும் தன்னலத்தார்களான (vested interests) மேட்டுக்குடியினர் சிலர். 2) இவர்களது போலி வாதங்களை நன்கு சிந்திக்காமல் நம்பி, எதிர்காலத்தைப் பற்றி உண்மையான அச்சம்கொண்டுள்ள பலர். 3) இந்தச் சூழலைப் பயன்படுத்தி அரசியல் இலாபமும், ஆதிக்கமும் பெற விரும்பும் சந்தர்ப்பவாதிகள்.

தாய்மொழியே பயிற்றுமொழியாகுமானால் இத்தகைய வேறுபாடுகள் விரைந்து நொறுங்கிவிடும். எனவே தான் இந்த மேட்டுக்குடியினர் சூழ்ச்சிகள் பல செய்தும், பொய்வாதங்கள் புரியும், வீண் அச்சங்களைக் கிளறியும் தாய்மொழியைப் பயிற்று மொழியாக்கும் திட்டத்தை எதிர்க்கின்றனர்.

தன்னம்பிக்கையும், சுயமரியாதையும் சமுதாய மேன்மைக்கு உயிரூட்டும் அடிப்படைப் பண்புகளாகும். தாய்மொழியைப் பயிற்று மொழியாக ஏற்பதால் மட்டுமே மேற்கண்ட இரு இயல்புகளையும் நாம் பெறமுடியும். அயல் மொழியைப் பயிற்றுமொழியாகக் கொண்டு தாய்மொழியாக இரண்டாந்தர இடத்தை மட்டும் தருவதால் - அடிமை உள்ளமும், தாழ்வு மனப்பான்மையும்தான் வளரும், தாழ்வகற்றி மேன்மையுறத் தமிழ் பயிற்றுமொழியாக வேண்டும்.

1971இல் கலைஞர் கல்லூரிகளில் தமிழ் வழியில் பாடங்கள் நடத்திட ஏற்பாடு செய்தார். அந்த நேரத்தில்தான் இந்த அறிஞர்கள் மேற்கண்ட கருத்துகளை வெளியிட்டுள்ளனர். எனினும் இன்று அரசினர் கல்லூரிகளில் 67இலும் அறிவியல் பாடங்களும் தமிழில் பயிற்றுவிக்கப் படுகின்றன எனும் உணமையை மறந்து விடக்கூடாது.

1988 சமகால அறிஞர்களின் கருத்து

தமிழ் எழுத்துச்சீர்திருத்தம் தேவைதானா? என்றொரு நூலை அறிஞர் வ.சுப. மாணிக்கம் வெளியிட்டள்ளார். அவருடைய தருக்கங்கள் சரியாகவே உள்ளன. வேறுகோணத்தில் அவர் கேட்கிறார்.

''தமிழ் எதனையும் சுருங்கச் சொல்ல வல்ல தன்னாற்றலிற் குறைபாடு உடையதன்று; தமிழைப் பள்ளியும் கல்லூரியும் பல்கலைக் கழகமும் தீண்டா மொழியாக வைத்திருக்கும் நாமே பிறப்பிற் குறையுடையோம்.''

ஆம்! பள்ளி, கல்லூரி, பல்கலைக் கழகத்தில் தமிழ் வழியில் படிக்க முன் வராத நாம் எழுத்துச் சீர்திருத்தம் செய்து செயற்படுத்தி விட்டால இவையெல்லாம் மளமளவென்று வந்துவிடுமா? என்று கேட்கிறார்.

1976 வரை தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் 19 துறைகளில் 737 நூல்களைப் பட்டப்படிப்பில் தமிழ் வழியில் பயன்படுத்தத் தோதாக வெளியிட்டது. ஆனால் பிந்திவந்த கல்வி அமைச்சர்கள் எவரும் இதில் கருத்துச் செலுத்தவில்லை. அன்றே அந்தத் தமிழ்வழி நூல்கள் சரியாக விற்பனையாகவில்லை எனும் மன வருத்தத்தோடு ஒவ்வொரு கல்லூரிக்கும் இலவசமாக நூற்றுக்கு மேற்பட்ட நூல்களைச் சரக்குந்தில் அனுப்பி வைத்தார்கள்.

பல்கலைக் கழகத்தில் தமிழ்ப் பயிற்றுமொழி பற்றிக் கூறும் வ.சுப. மாணிக்கனாரே அதற்கான கருத்துருவை உருவாக்கவுமில்லை; கருத்தரங்கை நடத்தவுமில்லை; எங்களைப் போன்றவர்களின் துணையை நாடவுமில்லை. கல்விப் பேரவை, ஆட்சிப் பேரவையில் இதற்கான தீர்மானத்தைக் கொண்டு வரவுமில்லை.

ஆனால் தமிழ்ப் பயிற்றுமொழியை வலியுறுத்தி ஓர் ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நடத்தினார். அதன் விரிவை மற்றோர் இடத்தில் காண்போம்.

இதேபோலத் தமிழ்நாடு முழுவதும நான்கைந்து இடங்களில் ஊர்வலங்கள் நடத்தப்பட்டன. அந்த அளவோடு அவற்றின் வேகம் அடங்கிவிட்டது.

அவரே கூறுகிறார் பாருங்கள்:

‘‘தமிழ் பலதுறையிலும் பல்கலைக் கழகம் வரை பயிற்றுமொழியாக வைக்கப்படாமையினால், இதுவரை ஆக்கிய பல இலட்சம் சொற்கட்குக்கூட வழங்கும் வாய்ப்பில்லையே. உள்ளதற்கே வாய்ப்பில்லாதபோது, மேல் வளர்ச்சி எங்கே வரும்? யாரும் வளரவேண்டுமேல், எதுவும் வளரவேண்டுமேல் பயில வாய்ப்பு வழங்க வேண்டும் என்பது இயற்கைவிதி.

உலகத் தமிழ் மாநாடுகள் கண்டு வரும் இயற்கைத் தமிழ் மொழியைப் பள்ளிக்குள் பயிற்று மொழியாக நுழைய விடாது தடுக்கும் அறிஞர்களின் முதுபேதைமையும் கடுஞ்சட்டத்தால் ஒழிக்கப்படும். இது பாரதி மேலாணை’’ என்று அடித்துச் சொல்கிறார்.

எனினும் இந்த முழக்கங்களோ, இயக்கமோ பெரும் முடிவு எடுக்கவில்லை.

அந்தக் கால கட்டத்தில் அவரால் தொடங்கப்பட்டு 'தமிழ் வழிக்கல்வியியக்கம் நான்கு தீர்மானங்களை வெளியிட்டிருக்கிறது.

அவை :

1. தமிழ் ஒன்றே டயிற்று மொழி. மழலைப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை எல்லாத் துறைகளிலும் தமிழுக்கே முதலிடம். தமிழுக்கு அடுத்து எவ்வளவு பிற மொழிகளையும் விருப்பம்போல் துணை மொழிகளாகக் கற்கலாம்.

2. தமிழில் சிறுமழலை பெருமழலைப் பள்ளிகளை ஊர்தோறும் அரசே தொடங்க வேண்டும். அப்போதுதான் குழந்தைகளின் பிஞ்சுச் செவி பிழையற்ற தமிழ்மொழியாகப் பண்படும்.

3. இந்திய நாட்டுப்பற்றுக்கும், தமிழ்க் காப்பு வளர்ச்சிக்கும், உயர் கல்வித் தரத்துக்கும், சொந்தச் சிந்தனையூற்றுக்கும் பாதகமான ஆங்கிலப் பள்ளி அடிமைக் கடைகள் அனைத்தும் அகற்றப்பட வேண்டும்; அல்லது தமிழ்வழியாக மாற்றப்பட வேண்டும்.

4. இவையெல்லாம் 1988 ஆம் ஆண்டு முதல் நடைமுறைக்கு வர வேண்டும் என்று தமிழக அரசினைப் பணிவோடு கேட்டுக் கொள்கின்றோம்.

இந்த இயக்கத்தினை அவர் உள்ளார்வு உணர்வுடன் வழி நடத்திச் சென்றனர் என்பதைக் குறிப்பிட்டே ஆகவேண்டும்.

தமிழ் வழிக் கல்வி இயக்கமும் தஞ்சையில் இரண்டு நாட்கள் மாநாட்டினை நடத்தியது.

''8.9.90; 9.9.90 ஆகிய இரு நாட்களில் தஞ்சையில் தமிழ் வழிக் கல்வி மாநாடு நடைபெற்றது''.

இந்த மாநாட்டில் முனைவர் இரா. இளவரசு, பேரா. விருத்தாசலம், கு. தங்க முத்து (அ.இ.அ.தி.மு.க.), பெ. மணியரசன் (தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி), தஞ்சை இராமமூர்த்தி (சனதாதளம்), பேரா.மு.இளமுருகன், பேரா.பா. கல்யாணி, செந்தலை ந. கவுதமன், பேரா.அ. மார்க்சு ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர்.

''மருத்துவத்தைத் தாய்மொழி வழியே கற்பிக்க இயலும் என்பது மட்டுமல்ல, நம் சூழல் வாய்ப்புகள், தேவைகளை நோக்கத் தாய்மொழி வழியாகக்

கற்பிப்பதே ஏற்றது எனவும் தெளிவுபடுத்தினார் மருத்துவர் சு. நரேந்திரன் அவர்கள். தமிழ் வழிப் பொறியியற் கல்விக்குரிய கலைச்சொல் சிக்கல்களாகக் கூறப்படுவன ஆங்கிலத்துக்கும் கூடப் பொருந்தும் என்பதை எடுத்துக்காட்டித் தம் பட்டறிவால் தமிழ் வழிப் பொறியியல் கற்பிக்க முடியுமென நிறுவினார் பேராசிரியர் ச. சம்பத்து. புலவர் இரா. இளங்குமரனார் தமிழ்ச் சொல் வளம் பற்றி விளக்கித் தமிழால் இயலாதில்லை என்பதைப் புலப்படுத்தினார்.''

இரண்டாம் நாளில் வேலா. அரசமாணிக்கம், துணைவேந்தர் முனைவர் ச. முத்துக்குமரன், பேரா. இரா. சுந்தரம், கவிஞர் கோவை. இளஞ்சேரன், கதிர். தமிழ்வாணன் ஆகியோர் விரிவாக உரையாற்றினார்.

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் சில.

* இந்தியா அரசியல் விடுதலை பெற்று நாற்பத்துமூன்று ஆண்டுகள் ஆகியும், இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் பதினான்கு வயது வரை அனைவருக்கும் கட்டாயக் கல்வி வழங்க வேண்டும் என்று அறிவித்திருந்தும் இதுவரை அது நிறைவேற்றப்பட முடியாத நிலையைக் காண்கிறோம். தாய் மொழிவழிக் கல்வி கற்பிக்கப் பெற்றிருந்தால் இந்த அவல நிலை துடைக்கப்பெற்றிருக்கும் என்றும், இந்த இழிநிலையைப் போக்கிட அனைவருக்கும் கட்டாயக் கல்வியைத் தாய் மொழி வழி அளித்திட வேண்டும் என்றும் இம்மாநாடு தமிழக அரசை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

* கலை, தொழில், பொருளாதாரம் முதலியவற்றில் மிகவும் முன்னேறியுள்ள ஐரோப்பிய நாடுகளில் முதல் ஐந்து வகுப்புகளில் தாய்மொழியில் மட்டுமே பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. ஆறாம் வகுப்பில் தான் இரண்டாவது மொழி ஒன்று கற்றுத் தரப்படுகின்றது. அதுபோலவே நம் நாட்டிலும் 1961வரை ஆறாம் வகுப்பில்தான் ஆங்கிலம் கற்பிக்கப்பட்டது. சில ஆண்டுகளுக்கு முன்பு மூன்றாம் வகுப்பில் கற்பிக்கத் தொடங்கிப் பின்னர் முதல் வகுப்பிலேயே ஆங்கிலம் கற்பிக்கும் முயற்சி செய்யப்பட்டுத் தற்காலிகமாக அது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இந்தக் கேடுகளுக் கெல்லாம் பெருங்கேடாகப் பால்மணம் மாறாப் பச்சிளங் குழந்தைகள் பயிலும் மழலையர் பள்ளிகளில் - எல்.கே.ஜி., யூ.கே.ஜி. வகுப்புகளிலேயே ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது.

இந்த நிலை மிகவும் வருந்தத்தக்கது; கேடானது. தமிழ்நாட்டிலேயே தமிழையும் தமிழினத்தையும் அழித்து நாசமாக்கக் கூடியது. எனவே, அனைத்து நிலைகளிலும் தமிழைக் கல்வி மொழியாக்கி ஆங்கில அடிமைமோகத்தை அடியோடு விட்டொழிக்குமாறு தமிழக மக்களையும், கல்வி நிறுவனங்களை நடத்துபவர்களையும், அரசியல் கட்சிகளையும், தமிழக அரசையும் இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

* தமிழ்ப் பல்கலைக்கழகம் மருத்துவம், பொறியியல் ஆகிய பட்டப் படிப்புகளில் முதல் இரண்டு ஆண்டுகளுக்குத் தேவையான பாடநூல்கள் அனைத்தையும் ஏழு ஆண்டுகளுக்கு முன்பே எழுதியும் அச்சிடப் பணமில்லாததால் வெளியிடமால் வைத்துள்ளது. தமிழக அரசு நிதியுதவி செய்தால், மூன்று மாதங்களில் அந்த 27 நூல்களும் வெளிவந்து விடும். மருத்துவக் கல்விக்காக ஆண்டு தோறும் 100 கோடி ரூபாய் செலவு செய்யும் தமிழக அரசுக்குத் தமிழில் மருத்துவ நூல்களையும் பொறியியல் நூல்களையும் வெளியிட ஆகும் ரூபாய் பத்துலட்சம் ஒரு பெரிய செலவன்று. எனவே, தேவையான தொகையை உடனே தந்து நூல்களை வெளியிடத் தமிழக அரசு ஆவன செய்ய வேண்டும் என்று இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

* கலை, அறிவியல் கல்லூரிகளில் தமிழ்ப் பயிற்றுமொழிப் பிரிவுகளில் பயிலும் மாணவர்களுக்குத் தேவையான பாடநூல்களை முன்பு தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் அச்சிட்டு வெளியிட்டது. அந்த நூல்களைக் கடந்த இருபதாண்டுகளாக மறுபதிப்புச் செய்து வெளியிடாததால் மாணவர்களுக்குத் தேவையான பாடநூல்கள் கிடைக்கவில்லை. எனவே, தமிழ்ப் பயிற்றுமொழிப் பிரிவில் பயிலும் மாணவர்களுக்குத் தேவையான தமிழ்வழிப் பாடநூல்கள் அனைத்தையும் மறுபதிப்புச் செய்தும் புதிதாக எழுதி அச்சிட்டும் இலவசமாக வழங்கவேண்டும் என்று தமிழக அரசை இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

* தமிழை ஒரு பாடமாகக் கூடப் படிக்காமல் தமிழ் நாட்டில் ஒரு மாணவன் மழலையர் பள்ளி முதல் பட்ட மேற்படிப்பு வரை படித்துப் பட்டம் பெறமுடியும் என்னும் அவலநிலை உள்ளது.

இது வன்மையாகக் கண்டிக்கத் தக்கது. இதனை மாற்றித் தமிழ் நாட்டில் படிக்கும் மாணவர்களை அனைவரும் தமிழைக் கட்டாயமாகப் படிக்கக்கூடிய வகையில் பாடத் திட்டத்தில் தேவையான மாறுதல்களைச் செய்ய வேண்டும் என்று இம்மாநாடு தமிழக அரசையும், பல்கலைக் கழகங்களையும் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

1990ஆம் ஆண்டிலேயே இந்த மாநாட்டுத் தீர்மானங்கள் எல்லாம் நிறைவேற்றப் பட்டிருந்தாலும், 1995ஆம் ஆண்டில்தான் இதற்கெனச் சில குழுக்கள் அமைக்கப்பட்டன.

மாரிமைந்தன் 'தமிழ் வழிக்கல்வி' தொடர்பாக ஒரு நூலை எழுதியுள்ளார் (1994) அதில் அவரது கருத்துகள் கவனிக்கத்தக்கவை.

அணிந்துரை எழுதிய இராசமாணிக்கம் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

''இதைக்கண்டு, களைய வேண்டியவர்களே தமிழுக்கும், தமிழர்களுக்கும் களையாகப் போய்விட்டார்களே! கோட்டை நாற்காலியில் உட்கார்ந்து கொண்டு கேட்டை விளைவித்துக் கொண்டிருப்போர் என்று மடிவாரோ என்ற ஏக்கமே எழுகிறது மனத்தில்'' என்கிறார்.

இது தமிழ்க்குடிமகன் குரல் அன்று; 1994இல் வெளியான குரல். இனி நூலில் உள்ள கருத்துகளைப் பார்க்கலாம்.

* கடந்த பத்து, பதினைந்து ஆண்டுகளில் தமிழகம் மொழிச் சிக்கலில் கோணலான முடிவெடுத்து இந்திய அரங்கில் வேகமாகவும், உலக அரங்கில் மிக வேகமாகவும் பின்னோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதை அக்கறையோடும், துயரத்தோடும், சினத்தோடும் எடுத்து விளக்குவதே இக்கட்டுரை

* 'மொழி' என்பது முழுக்க முழுக்க 'அரசியல் ஊதியம் (or) லாபம்?' என்கிற நிலை, தொடக்க நிலையிலேயே தோன்றிவிட்டது தான் மிகப் பெரிய கொடுமை.

* தாய் மொழிக் கல்விக்கு வந்த கேடு, நம் தமிழை மெதுவாகச் சாகும் கொடிய நிலைக்கும் தள்ளிவிட்டது

மொழிப் போராட்டம் எதற்காகத் தொடங்கப்பட்டதோ, அது அரசியல் கோமாளிகளால் தடம் புரண்டு போராட்டத்தின் நோக்கம் திசை மாறிப் போய்விட்டது. இந்திக்குப் பதில்

ஆங்கிலம் அரசாட்சியில் அமர்ந்து கொண்டது. மொழிப் போராட்டம், மொழி மாறாட்டம் ஆகிப்போனது.

இந்திக்கு ஊழியம் பார்க்க மாட்டோம் என்று வீராப்பு பேசிய நாம், ஆங்கிலத்திற்கு அடிமையாகும் அவலம் நேர்ந்து விட்டது. கல்விச் சூழலே தூய்மையற்றதாக (Polluted) ஆகிவிட்டது.

மொழிப்போராட்டம், மொழி மாறாட்டம் ஆகிவிட்டது என்பதை உணர்த்துகிறார்.

* கல்வி தொடர்பான உலகளாவிய அமைப்பான யுனெஸ்கோ (UNESCO) தாய் மொழியில்தான் கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்று உறுதியாகக் கூறுகிறது. கோத்தாரிக் கல்விக் குழு, அடிப்படைக் கல்வி முதல் பல்கலைக் கழகக் கல்வி வரை, பயிற்று மொழி தாய் மொழியாகத்தான் இருக்க வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளது.

  தாய் மொழி கூட எப்படி இருக்க வேண்டும் என்று கல்வியாளர்கள் கருதுகிறார்கள் தெரியுமா?

  'வட்டார வழக்கில்தான் முதலில் கல்வி கற்பிக்கப்படவேண்டும். மேல் வகுப்பிற்கு வர வர வட்டார வழக்கிலிருந்து பொது வழக்கிற்கு மாறி விடவேண்டும்.'

யுனெஸ்கோ என்ன சொல்கிறது என்பதனை 1994ஆம் ஆண்டிலேயே உணர்ந்திருந்தும் 2000த்தில் தமிழக அரசு சார்பில் வாதிட்ட நமது வழக்கறிஞர்கள் இதனை வலியுறுத்தி எடுத்துச் சொல்ல வில்லையே!

* இதனை ஏற்றுக் கொண்ட உத்திரபிரதேசத்திலும், மத்திய பிரதேசத்திலும், அரியானாவிலும், கோவாவிலும் ஆங்கிலத்தை ஒதுக்கிவிட்டு, தங்கள் தாய் மொழியை ஆட்சி மொழியாகவும், பயிற்று மொழியாகவும் ஆக்கிக் கொண்டுள்ளார்கள். கர்நாடக மாநிலத்தில் ஆரம்பக் கல்வியின் பயிற்று மொழியாகக் கன்னடம் அரியணை ஏறியுள்ளது.

தோழியர் அருள்மொழியின் நேர்காணலை இங்கு மேற்கோள் காட்டுகிறார்.

* நம் குழந்தைகள் முட்டாள்களானாலும் பரவாயில்லை. ஆங்கிலம் பேசும் முட்டாள்களாக இருக்கட்டும் என்று விரும்புகிறார்கள், தமிழ்ப் பெற்றோர்கள். தாய் மொழியில் கடிதம் எழுதி ஆங்கிலத்தில் கையெழுத்துப் போடும் முட்டாள்களாக

தமிழர்கள் மாறிவிட்டார்கள். தன் பெயரைத் தமிழிலும், தகப்பன் தலை எழுத்தை (Initial) ஆங்கிலத்திலும் எழுதும் இருமொழிப் புலமையும் தமிழருக்குத் தான் உண்டு!

உலகிலேயே தன் மொழிக்காக தன்னையே எரித்துக் கொண்டவர்களும் தமிழ் நாட்டில் தான் இருக்கிறார்கள். தாய்மொழிப் பற்றற்றவர்களும் தமிழ்நாட்டில் தான் இருக்கிறார்கள் என்கிறார் அருள்மொழி.

* மழலையர் பள்ளிகளின் அளவற்ற வளர்ச்சிக்கு நம் தமிழ்ப் பெற்றோர்களின் மனநிலைகளே முதற் காரணமாக உள்ளன.

* ஊதியம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட நிர்வாகம், குறைந்த சம்பளத்தில் கிடைக்கும் பயிற்சியும் திறமையும் இல்லாத கொத்தடிமைகளைக் கொண்டு, வசதியும், காற்றோட்டமும் இல்லாத மாட்டுத் தொழுவத்திலெல்லாம் பள்ளிகளைத் தொடங்கி விட்டது. குறைந்த முதலீட்டில் அதிகம் சம்பாதிப்பதற்குப் பொருத்தமான சரியான வணிகத் தளமாக இப்பள்ளிக்கூடங்கள் ஆகிவிட்டன.

நான் ஏற்கெனவே எடுத்துக்காட்டிய பகுதிகள்தாம் என்றாலும் மீண்டும் நினைவூட்டிக் கொள்வோம்.

* இம்மாதிரியான ஆங்கில வழிப் பள்ளிகளைத் தமிழ்ப் பற்று மிக்க நமது தமிழக அரசுகளும், ஆள வந்த தமிழினக் காவலரும், புரட்சித் தலைவரும், ஆளும் புரட்சித் தலைவியும் தடை செய்யாமல் வளர்த்து விட்டதும் - விடுவதும் மிகப் பெரிய இனத்துரோகமே.

இதுதான் நெத்தியடி என்பது.

* ஆக, கல்வித் தரமில்லாத பள்ளி, நேரிடையாகப் புரியாத மொழியில் கற்பிப்பு, பணம் ஒன்றே வெற்றியை உருவாக்கும் கல்விமுறை, நாடு எக்கேடு கெட்டோ போகட்டும் என்கிற அரசாங்கம் ஆகியனவே ஒரு வருங்கால இந்தியனின் அடிப்படைக் கல்வியை நிலை நிறுத்துகின்றன.

* தமிழ் நாட்டில் மட்டும்தான், ஆங்கில மோகம் தலை விரித்தாடிக் கொண்டிருக்கிறது. ஆங்கில வழிக் கல்வி என்றால் தான தரமான கல்வி என்றால், ஆங்கிலத்தையே தாய்மொழியாகக்

கொண்டு ஆங்கிலத்தில் படிக்கும் ஆங்கிலோ இந்தியர்கள் எல்லா துறைகளிலும் முன்னணியில் அல்லவா இருந்திருக்க வேண்டும்?

* உருசியா, சப்பான், பிரெஞ்சு நாடுகளில் மிக உயர்ந்த விஞ்ஞானிகளுக்கும் பிற கலைத்துறை வல்லுநர்களுக்கும் ஆங்கில மொழியின் அரிச்சுவடி கூடத் தெரிந்திருப்ப தில்லை. ஆனால் அவர்கள்தான் மிக உயர்ந்த அறிஞர் பெருமக்களாகவும், கண்டுபிடிப்பாளர்களாகவும் உயர்வடைகிறார்கள்.

* அரசு கலைக் கல்லூரிகளில் தமிழ் வழிக் கல்வியைக் கற்பிக்கும் ஆசிரியர்கள் மட்டுமே தாய்மொழிக் கல்வியின் சிறப்பை நேருக்கு நேர் பட்டறிவு வழி உணர்ந்து உள்ளனர். மற்றவர்கள் தாய்மொழிக் கல்வியின் பெருஞ்சிறப்பை உணர வாய்ப்பில்லாதவர்கள்.

அவர்கள் தான் ஆங்கில வழிக் கல்வி சிறந்தது எனக் கூச்சலிடுகின்றனர். அவர்கள் பெரும்பான்மையாக இருப்பதால் இந்தக் கூப்பாட்டின் ஒலி ஓங்கி ஒலிக்கிறது.

* ஆனால் உண்மையில் தாய்மொழிக் கல்வியின் ஆற்றலை உணர்ந்த ஆசிரியர்கள் பெரிய வியப்பில் இருக்கிறார்கள். அதனாலே தான் பல கல்லூரிகளில் ஆங்கிலக் கல்வி பயிலும் மாணாக்கர்கூட தமிழில் தேர்வு எழுதி வெற்றி வாகை சூடுவது ஆண்டுதோறும் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

(கல்லூரி முதல்வராக இருந்ததால்தான் எனும் முறையில் இதனைச் சான்றுகளுடன் உறுதி செய்ய முடியும்)

* தாய்மொழிக் கல்வியே தரமானது என்று உலகநாடுகளெல்லாம் தாய்மொழிக் கல்வியில் பயின்று சிறந்தோங்கிக் கொண்டிருக்கிற வேளையில் தமிழர்கள் மட்டும் திக்குத் தெரியாமல் திசைமாறிப் போய்க் கொண்டிருக்கிறார்கள்.

* அண்மையில் கர்நாடக மாநிலத்தில், டாக்டர் சித்தானந்த மூர்த்தியின் காலவரையற்ற உண்ணாவிரதத்தைத் தொடர்ந்து, அங்கு அரசு மனமிறங்கி, கன்னட மொழியை ஒன்று முதல் நான்கு வகுப்புகள் வரை கட்டாயமாக்கியுள்ளது.

* தலைநகரான டில்லியில் ஆளும் பாரதீய ஜனதா அரசு, நர்சரி பள்ளிகளின் நச்சு வளர்ச்சியை ஒரேயடியாக வீழ்த்தி அழிக்கும்

வகையில் அப்பள்ளிகளை தடைசெய்தே விட்டது. ஆனால் தமிழகத்தில் . . . . .?

நல்ல நோக்கத்தில் தெளிவாகச் சொல்லப்பட்ட கருத்துகள் இவை.

மேனாள் துணைவேந்தர் ச. முத்துக்குமரன் 1995, சனவரி, 30இல் வரைந்த கட்டுரை ஒன்று. (University News)

1. Forty seven years after attaining independence and thirty eight years after the formation of the linguistic states, is it right for the governments and the universities to deny education through the language of the state.

2. Any number of languages may be taught in the schools. Examinations may be held in them. But a pass in any language other than the state language shall not be necessary for pursuing higher education.

3. A pass in the state language must be mandatory for pursuing higher education, as the medium of instruction would be the state language.

இவை இவரது கருத்துகள்.

இவரே மற்றொரு கட்டுரையில் குறிப்பிடுகின்றார். மொழி வாரி மாநிலப் பிரிவினைக் கெல்லாம் பின்னால் தமிழ்மொழி வாயிலாய் பயில்வோர் எண்ணிக்கை அதிகமாகவே இருந்தது. ஆனால், மெல்ல மெல்ல அந்த எண்ணிக்கை குறையத் தொடங்கியது.

தமிழ் நாட்டில் பயிற்றுமொழி

உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் இருந்த விழுக்காடு

ஆண்டு	மாநிலப் பள்ளிகளில்	மெட்ரிக், ஆங்கிலோ-இந்தியன் சிபிஎசுஇ பள்ளியில்
80-81	92.2	7.8
90-91	87.6	12.4
94-95	85.00	15.00

இதே நிலை தொடர்ந்தால் 2000 - 2001 இல் தமிழ் வழிப் பயில்பவர்களின் எண்ணிக்கை குறைந்துதானே இருக்கும்!

இந்தச் சூழலுக்கான முக்கியமான காரணங்கள் சில.

1. தொழிற் கல்வி தரும் நிறுவனங்களில் முற்றிலும் ஆங்கிலப் பயிற்றுமொழியே உள்ளது. வேளாண்மையும் இந்திய மருத்துவமும் கூட ஆங்கிலத்தில் பயிற்றுவிக்கப் பட்டன. எனவே மாநில மொழியில் - கீழே பயின்றவர்கள், மேலே வரும்போதே சில இடர்களைச் சந்திக்க நேர்ந்தது.

2. படைத்துறை போன்ற உயர் கல்வி தரும் நடுவண் அரசு நிறுவனங்களும் முற்றிலும் ஆங்கிலப் பயிற்றுமொழியில்தான். எனவே அதில் இடம்பெற ஆங்கிலப் பயிற்றுமொழி மட்டுமே தேவைப்பட்டது.

3. தொழில் தொடர்பான அனைத்திந்திய நிறுவனங்கள் அனைத்தும் தங்கள் நிகழ்ச்சிகளை நடத்தவும், இதழ்களில் வெளியிடவும், ஆங்கிலத்தையே பயன்படுத்து கின்றன. இந்தியை இதற்கு மாற்றாகப் புகுத்த முயற்சி நடந்தாலும், மாநில மொழியில் பள்ளிக்கல்வி பெற்றவர்கள் சற்றுப் பின்னடைவே அடைய வேண்டியுள்ளது.

4. சட்டங்களைப் பொறுத்தவரையில் ஆங்கிலத் தொடர்கள் தான் அதிகார பூர்வமானவை (authentic) பல சட்டக் கல்லூரிகள் மாநிலமொழிகளில் சொல்லப்பட்டாலும் அவை உயர்நீதி மன்றங்களிலும் உச்சநீதிமன்றத்திலும் ஏற்கப் படுவதில்லை. எனவே சட்டப்படிப்பை ஆங்கில வழியில் படிக்கவேண்டிய நிலையும் நேர்ந்து விடுகிறது.

5. இ.ஆ.ப., இ.கா.ப. தேர்வுகளைத் தவிர நடுவண் அரசின் பிற பணிகட்கும், நடுவண் அரசு நிறுவனங்களில் வேலைவாய்ப்புக்கும், தேசிய மயமாக்கப்பட்ட வங்கிகட்கும் நடைபெறும் தேர்வுகளில் ஆங்கிலம் (அ) இந்தியே தேவைப்படுகிறது. எனவே, இங்கே ஆங்கிலப் பயிற்றுமொழியில் பயின்றவர்கள் கூடுதல் வாய்ப்பைப் பெறுகிறார்கள்.

6. பெரும் தொழில் நிறுவனங்களும், பிறநாட்டுத் தொடர்புடைய நிறுவனங்களும் அவர்களது நிர்வாகத்தை ஆங்கிலத்திலேயே நடத்துகின்றன.

7. மாநில அரசுகளும், மாநில அரசுப் பணிகளில் சேர்ந்திட ஆங்கிலத்தில் ஓர குறிப்பிட்ட அளவு மதிப்பெண்கள் எடுத்திட வேண்டும் என விதி வகுத்துள்ளனர்.

இதுபோன்ற சில காரணங்களாலும் பெற்றோர் சிலர் தங்கள் பிள்ளைகளை எல்.கே.ஜி. முதலோ அல்லது முதல் வகுப்பிலிருந்தோ ஆங்கிலப் பயிற்றுமொழிப் பள்ளிகளில் சேர்க்கின்றனர்.

இவற்றைக் கூறிய பேராசிரியர் நடுவண் அரசு சார்ந்த அனைத்துப் பணிகட்கும் அந்தந்த மாநில மொழியிலும் நடவடிக்கைகளை மேற்கொண்டாலே போதும் என்று கூறி விரிவன பட்டியலையும் தருகிறார்.

அப்படியில்லாமல் பெற்றோருடைய மனப்போக்கு ஏற்பத் தொடர்ந்து ஆங்கில மொழியிலேயே கல்வி அமையுமானால் 'இந்த நாட்டின் உயிர்ப்பு - ஆன்மா, அயலகப் பயிற்றுமொழியால் கொள்ளையடிக்கப்பட்டு விடும்' என்கிறார்.

தமிழ்நாட்டின் குழந்தைகள் பராமரிப்புச் சேவைக்கான கூட்டமைப்பு (FORCES) ஓர் அறிக்கை தந்துள்ளது. (எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளையுடன இணைந்தது)

அதில் ''மழலையருக்குத் தாய்மொழி வழிக் கல்வியினைச் செயற்படுத்த வேண்டும்'' என்று தெளிவாகத் தந்துள்ளார்கள்.

16.9.96 அன்று 'தினமணி' இதழ் ஒரு 'துணை உரை' (Sub-editorial) எழுதியது.

'நர்சரிகளில் தமிழ்' எனும் தலைப்பில் தன் கருத்தினை ஆணித் தரமாகத் தந்துள்ளது.

முனைவர் மு.ஆனந்த கிருட்டிணன் ஒரு சில கருத்துகளை ஆணித்தரமாகக் கூறுகிறார். (தினமணி: 16.9.96)

''கருத்துகளைத் தெளிவுபட எடுத்துரைக்கவும், பரிமாறிக் கொள்ளவும் பயன்படுவது பயிற்றுமொழி. இந்த மனத்தொடர்பு சாசனத்தைத் திறம்படப் பயன்படுத்த வேண்டுமெனில், அந்தப் பயிற்றுமொழி, மாணவனின் அன்றாட வழக்கு மொழியாகத் தான் இருக்கவேண்டும். காது கேளாதவரின் பயிற்றுமொழி தொடுமொழியாக (Braille) இருப்பது போலவும், மாணவரின் மொரித் திறமையைச் சார்ந்தே பயிற்று மொழி அமையவேண்டும்.

இன்றைய தமிழக மேல்நிலைப் பள்ளி மாணவர்களிடையே தமிழ்தான் பெருமளவிற்கு வழக்குமொழியாக உள்ளது. கடந்த பத்து ஆண்டுகளில் பள்ளிகளில் படித்து வந்த இம்மாணவர்களில் 6.7 விழுக்காடு மாணவர்கள் மட்டுமே தமிழே படிக்காதவர்கள். 13 விழுக்காடு மாணவர்கள் தமிழை ஒரு பாடமாகவும், மற்ற அனைத்தப் பாடங்களையும் ஆங்கிலமொழி வாயிலாகவும் கற்றவர்கள். இருப்பினும் இவர்களிடையேயும பெரும்பாலும் தமிழே வழக்கு மொழியாக உள்ளது. மீதமுள்ள 80.3 விழுக்காடு மாணவர்கள் தமிழ் வாயிலாகப் படித்தவர்கள். இவ்வகையில் மொத்த மாணவர்களில் 93.3. விழுக்காடு மாணவர்களின் வழக்குமொழி தமிழாகத்தான் இருந்தது எனலாம்.

இம்மாணவர்கள் கல்லூரியில் சேரும் போது இதற்கு நேர்மாறான நிலை உள்ளது. இன்றைய நிலையில் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களில் 8.3 விழுக்காட மட்டுமே தமிழில் பயில்கிறார்கள். இவர்கள் கலைத்

துறைகளிலும், அறிவியல் துறைகளிலும் பல்வேறு துறைகளிலும் பயில்கிறார்கள். இதற்கேற்ப பாட நூல்களும் ஆசிரியர்களும் உள்ளனர் என்று எடுத்துக் கொள்ளலாம். ஆனால் மருத்துவம், வேளாண்மை, கால்நடை, பொறியியல் மற்றும் தொழில் நுட்பம் போன்ற துறைகளில் அறவே தமிழ் பயன்படுத்தப்படுவதில்லை.

நகரங்களில் அமைந்துள்ள கல்விக்கூடங்களில் உள்ள வசதிகள் மாநிலத்தில் பரவலாக உள்ள அனைத்துக் கல்விக் கூடங்களிலும் இருப்பது அரிது. நடைமுறையில் பெரும்பாலான ஆசிரியர்கள் கலைத்துறைகளிலும், அறிவியல் துறைகளிலும் உயர்ந்த பட்டதாரிகளாக இருப்பினும், ஆங்கிலத்தில் எளிதாக, பிழையின்றி உரையாடும் வல்லமை பெற்றவர்களாக இருப்பதில்லை. மாணவர்களும் ஆரம்பத்தில் ஆங்கிலச் சொற்களின் பொருளறிவிதற்கே அகராதிகளை வைத்துக் கொண்டு அவதிப்படுவதால், அவர்களுடைய பொன்னான காலம் விரயமாகிறது. கல்லூரிகளில், ஆங்கிலத்தோடு போராடுவதால் முதலாண்டில் ஏற்படுமை கால விரயம், பின்வரும் ஆண்டுகளில் மாணவர்களின் கற்றலில் ஏற்படும் தரக்குறைவுக்கு அடிப்படைக் காரமாகிறது.

பெரும்பான்மை மாணவர்கள் தமிழில் கற்கும் திறமை பெற்றிருந்தும், மிகக் குறைந்த அளவில் தமிழ் மொழி வழியாகப் பாடம் கற்பிப்பதன் காரணங்கள் பல. கலைத்துறை, அறிவியல் துறை, வணிகவியல் துறைகளில் ஓரளவுக்குத் தமிழில் பாடநூல்கள் எளிதாகக் கிடைக்கின்றன. ஆயின் பெரும்பாலும், இந்நூல்கள் புலமை சான்ற மொழிநடையிலேயே எழுதப்படுகின்றன. இதனால் பலர் ஆங்கில நூல்களின் மூலமாகக் கற்க முயலுகிறார்கள். படிப்படியாக எளிய மொழி நடையில் இந்நூல்கள் வெளிவர ஊக்கமளிக்க வேண்டும். இதற்கிடையில், கற்பிக்கும் போத எளிய மொழி நடையில் உரையாடும் வழக்கத்தை ஆசிரியர்களிடம் வலியுறுத்த வேண்டும்.

சில பாடங்களில் தகுந்த அளவுக்குத் தமிழ்ப் பாடநூல்கள் இல்லையெனில் ஆங்கிலப் பாட நூல்களையே பயன்படுத்தி, வகுப்புகளில் தமிழில் பாடம் நடத்தி, தேர்வுகளைத் தமிழில் நடத்தலாம். இந்த நிலையில் தாற்காலிகமாக, தகுதியுள்ள ஆங்கில நூல்களைத் தமிழில் மொழி பெயர்க்க உடனடி நடவடிக்கைகள் எடுக்க வேண்டியிருக்கும். தற்போது கலையியல், அறிவியல், வணிகவியல் போன்ற துறைகளில் இருக்கும் எல்லா நூல்களையும் விரிவாகக் கண்டறிந்து, பட்டியலிட்டு, அவற்றின் திறன், தகுதிகளைச் சீர் தூக்கிப் பார்க்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

தொழில் நுட்பக் கல்லூரிகளில் தமிழைப் பயிற்று மொழியாக்குவதில் பல சிக்கல்களை எதிர்பார்க்கலாம். இதில் ஒன்று பொதுமக்களின் மனப் பாங்கு. தொழில் நுட்பப் பாடங்களைத் தமிழில் கற்பவர்களின் திறமையும்,

தரமும் குறைவாக மதிக்கப்படும் என்ற ஓர் எண்ணம் மக்கள் மனதில் ஆழப்பதிந்துள்ளது. இதனைப் படிப்படியாகத் தான் மாற்ற வேண்டும். இத்துறையில் தகுதி வாய்ந்த நூல்களின் தட்டுப்பாடு ஒரு காரணமாகக் காட்டப்படுகிறது. 1982-ம் ஆண்டு தொடங்கி, பல அறிஞர்களின் முயற்சியால் பல பொறியியல் நூல்களும், மருத்துவ நூல்களும் எழுதப்பட்டு நுண்ணாய்வு செய்யப் பெற்று, இவற்றில் ஒரு சில மட்டுமே அச்சிடப்பட்டு வெளியாகியுள்ளன. நூல்கள் யாவும் தமிழில் வேண்டிய அளவுக்குத் தயாராக இருந்தால் மட்டுமே தொழில் துறைகளில் தமிழ் வழிப் பாடம் நடத்தத் தொடங்க முடியும் என்று நினைத்தால், தமிழ் பயிற்றுமொழியாகும் நிலை என்றுமே வர வாய்ப்பில்லை.

தொழில் சார்ந்த கல்லூரிகளில் ஆங்கில நூல்களைப் பயன்படுத்தி தமிழில் கற்பிக்க வேண்டும். தேர்வுகளைத் தமிழிலேயே நடத்த வேண்டும் என்ற உறுதியும், நடத்த முடியும் என்ற துணிவுமு இல்லாவிடில் இக்கொள்கை வெற்றி பெறாது. கூடவே ஆங்கில நூல்களைத் தமிழாக்கவும், அவற்றைத் தழுவிய தமிழ் நூல்களை வெளியிடவும் வழி வகுக்க வேண்டும். அறிவியல், தொழில நுட்பச் சொற்களை ஆங்கிலத்திலேயே பயன்படுத்த வேண்டியிருக்கும். இத்திட்டத்தைச் செயல்படுத்தும் கல்லூரிகளுக்கு மிக உயர்ந்த, கவனத்தை ஈர்க்கத்தக்க, கல்வி வசதிகளைச் செய்து தர முதலீடு செய்ய முன்வர வேண்டும்.

இரண்டாவதாக தமிழ் வழிப்பயிற்சிக்கான இது போன்ற பாடநூல் நிர்ணய முயற்சிகளோடு கூட, பள்ளிகள், கல்லூரிகளின் அமைப்பு முறைகளில் சில அடிப்படை மாற்றங்களையும் செய்ய வேண்டும். விவாதித்து முடிவு காண வேண்டிய வகையில் அமையும் அத்தகைய ஒரு முறையைக் காண்போம்.

அறவே தமிழோ அல்லது தமிழ் வழியிலோ கற்பிக்காத பள்ளிகள் தனிமைப் படுத்தப்பட்டு அவற்றில் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை மாநில அளவில் 10 விழுக்காட்டுக்கு மேல் செல்லாத சூழ்நிலை உருவாகும் கொள்கைகளைக் கடைப்பிடிக்கலாம். ஒரே பள்ளியில் தமிழ்ப் பிரிவு, தமிழல்லாத பிரிவு என இருவகைப் பிரிவுகள் இருப்பதைத் தவிர்க்கலாம். அடுத்த ஐந்தாண்டுகளில் இக் கொள்கை முழுதாகச் செயல்பட வழி செய்யலாம்.

இத்தகைய கொள்கை கல்லூரிகளிலும், செயல்படுவதில் அதிக சிக்கல்களுக்கு வாய்ப்பு உள்ளதால், இதை ஒரு பத்தாண்டு கால கட்டத்தில் செயல்படுத்த முய்லலாம். உதாரணமாக முதலில் கலை, அறிவியல் கல்லூரிகளில் முதல் பட்டப்படிப்பு வகுப்புகளில் சேர்பவர்களில், பள்ளியில்

தமிழ் வாயிலாகப் பயின்றவர்களை, தமிழ் வழியில் கற்பிக்கும் கல்லூரிகளிலேயே சேர்க்கலாம். படிப்படியாக ஆங்கிலத்தை மட்டுமே பயிற்சி மொழியாகக் கொண்ட கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கைகளை மாற்றி, பத்தாண்டுகளில் ஆங்கிலம் மூலம் பயிற்சி 10 விழுக்காடு மாணவர்களுக்கும், தமிழ் வழிப் பயிற்சி 90 விழுக்காடு மாணவர்களுக்கும் கிடைக்கும்மாறு மாற்றங்கள் செய்யும் வழிகளை உருவாக்கலாம்.

மூன்றாவதாக, தமிழ் வளர்ச்சியில் கணிப்பொறியின் பங்கு இன்றியிமையாதது. பள்ளி முதல் கல்லூரி வரை எல்லாத் துறைகளில் பயில்வோரும் கணிப்பொறியில் பயிற்சி பெறவேண்டிய ஒரு நிலை உருவாகியுள்ளது. தற்போது கணிப்பொறியைச் சார்ந்த எல்லாச் செயல்பாடுகளும் ஆங்கிலத்திலேயே உள்ளன. பொதுவாக மக்களிடையே ஆங்கில மொழித்திறமை குறைந்து வருவதாலும் ஒரு சிலர் மட்டுமே ஆங்கிலத்தில் திறமை பெற்றிருப்பதாலும் கணிபொறியின் முழு ஆற்றலையும், பயனையும் பெரும்பாலோர் அடைய முடியாத நிலை ஏற்படும். பெரும்பான்மையோருக்கு போதிய அளவுக்கு ஆங்கில மொழிப் பயிற்சி அளிக்க முடியாத சூழ்நிலையில் உள்ள சீனா, ஜப்பான், கொரியா போன்ற நாடுகள் 15 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தத்தம் மொழிகளைக் கணிப்பொறியில் பயன்படுத்த முயற்சி எடுத்து வெற்றி கண்டிருக்கின்றன. தமிழைப் பொறுத்தவரை, தமிழ் நாட்டை விட அமெரிக்கா, கனட, சுவிட்சர்லாந்து, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் உள்ள தமிழர்களே தமிழைக் கணிப்பொறிகளில் செயல்படுத்த பல முயற்சிகளை எடுத்து வருகிறார்கள். இதன் விளைவாக நூற்றுக் கணக்கான எழுத்து வடிவங்களும், கணிப்பொறி பயன்முறைகளும் கிடைத்திருக்கின்றன. ஆனால், ஒவ்வொருவருடைய முறையும், மற்றவர்களின் முறைகளோடு பல வகைகளில் வேறுபடுகின்றது. இதனால் ஒருவருடைய முறையைக் கற்றவர்கள் மற்றவர்களின் அமைப்பைப் பயன்படுத்துவதில் சிரமங்கள் உணடாகின்றன. இதற்கு அடிப்படைக் காரணம் கணிப்பொறி விசைப் பலகையின் தமிழ் எழுத்துகளின் வேறுபட்ட வரிசைக் கிரமங்களாகும். இன்னும் பல நூற்றுக் கணக்கான தமிழமைப்புகள் கணிப்பொறிகளில் தன்னிச்சையாக உருவாகும் மன், அதிரடியாக தமிழ் விசைப்பலகையில் எழுத்துகளின் வரிசை முறையை நிர்ணயிக்க வேண்டும். இம் முயற்சியில் காலங்கடத்தப்பட்டால், பிறகு விசைப்பலகையின் சீரமைப்பில் தோன்றும் சிக்கல்களைக் கண்டு மலைத்து, ஆங்கிலமே இருந்து விட்டுப் போகட்டுமே என்ற விரக்தி உண்டாகிவிடும். அந்நிலையில் கணிப்பொறியில் தமிழ் என்பது ஒரு வேடிக்கை விளையாட்டாகவே நிற்கும். தமிழிலும் கணிப்பொறியிலும் தகுதி வாய்ந்த ஒரு

வல்லுநர் குழு அமைத்து ஓராண்டுக்குள் தமிழ் விசைப் பலகையின் வரிசை முறையைப் பற்றி முடிவெடுக்கத் தமிழன்பர்கள் முயல வேண்டும்.

கடைசியாக தமிழில் பயிலும் மாணவர்களின் ஆங்கிலத்தையும் தனியாக, பள்ளி நிலையில் தொடங்கி மிக உயர்ந்த நிலைவரையில் சிறந்த முறையில் தொடர்ந்து பயில, தேவையான வசதிகளையும் செய்து தரவேண்டும். எவ்வளவு சீரிய முறையில் தமிழில் கற்பித்தாலும், அம் மாணவர்கள், மேற்கொண்டு தமது துறை தொடர்புடைய ஆங்கில நூல்களையும் ஆய்வுக் கட்டுரைகளையும், இதழ்களையும் படித்துத் தெளிவு பெற இது பயன்படும். அதேபோல அவர்கள் இந்தி மொழியையும் சிறப்பாகக் கற்க வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவேண்டும். தமிழில் பயின்றிருந்தால் கூட, நம் நாட்டில் எந்த ஒரு இடத்திலும் தன்னம்பிக்கையோடு தொழில் புரிய இத்திறமை கைகொடுக்கும்.

தமிழ் பயிற்றுமொழியாவதை எதிர்ப்பவர்களெல்லாம் தமிழைப் பற்றியி தாழ்வு மனப்பான்மையால் மட்டுமே அவ்வாறு செய்கிறார்கள் என நினைத்தல் கூடாது; நடைமுறையில் பிற்காலத்தில் நம் மாணவர்கள் இன்னல்படக் கூடாது என்ற எண்ணத்தாலும், நமது கல்வித் தரம் உலகளாவிய நிலைக்கு முன்னேறுவதில் இடைஞ்சல்கள் வரும் என்ற அச்சத்தாலுமே இவர்கள் தயங்குகிறார்கள். இந்த அச்சங்களைப் போக்கும் வழிமுறைகளை வகுத்துக் காட்டும்போது ஓரளவுக்கு அனைவருடைய ஒப்புதலையும் ஒத்துழைப்பையும் பெற வாய்ப்புள்ளது''.

கடந்த 10 ஆண்டுகளில் பள்ளியில் 80.3 விழுக்காடு மாணவர்கள் தமிழ் வழியில் பயின்றவர்கள். 13% தமிழை ஒரு பாடமாகப் பயின்றவர்கள். தமிழை படிக்காதவர்கள் 6.7% தான் என்கிறார் அவர். ஆனால் கலைக் கல்லூரிகளில் 8.3% மட்டுமே தமிழ் வழியில் பயில்பவர்கள். மீதியெல்லாம் ஆங்கில வழியில்தான் என்கிறார் அவர்.

இந்தக் கருத்தினையும் நாம் மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். தமிழண்ணல் ஒரு கட்டுரையில் பின் வரும் கருத்தினைத் தெரிவித்துள்ளார் (தினமணி 12.3.97)

''இன்று ஆங்கில வழியில் படித்த பலர் ஜப்பானுக்கும் ரஷியாவுக்கும் அந்தந்த மொழியை ஓராண்டு - ஈராண்டு படித்துவிட்டுப் போவதைக் காண்கிறோமல்லவா? தமிழ் வழிக் கல்வி நிலைபெறும் பள்ளி, கல்லூரி, தொழிற்படிப்பு அனைத்திலும் ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாகக் கட்டாயம் இடம் பெற வேண்டும்.

அதற்காக 'மழலையர் - முன்மழலையர் - இள மழலையர்' வகுப்பிலேயே ஆங்கிலம் வேண்டுமா? இந்தப் பிஞ்சுக் குழந்தைகள் அ, ஆ படிக்காமல் ABCD மட்டும் படிப்பது சரிதானா? ஒன்று, இரண்டு, மூன்று படிக்காமல் ஒன், டூ, த்ரீ படிக்க வேண்டுமா? தமிழ் வாய்பாடு, எண் சுவடி கற்காமல் - அதைத் தாழ்வாக எண்ணிப் புறக்கணிக்க வேண்டுமா? காந்தியடிகளைப் போற்றுகிறீர்களே - தாகூருக்கு அஞ்சலி செலுத்துகிறீர்களே - பாரதி எம்மவர் என்று விம்மிதமடைகிறீர்களே?

இவர்களை எல்லாம் சொல்ல, பாராட்ட உங்கள் நா கூசவில்லையா? முழுப் பூசணிக்காயைச் சோற்றில் மறைக்கிறீர்களே? 'இரட்டை மனப்பான்மை' கொண்டு, நெஞ்சில் வஞ்சம் செய்யலமா? 'படித்தவன் சூதும் வாதும் செய்தால், போவான்' ஐயோன்னு போவான்' என்ற பாரதியின் முழக்கம் நினைவில்லையா?'' என்று கேட்கிறார்.

இந்த இரட்டை நிலைதான் தமிழர்களிடையே அவர்களது தாய்மொழியாகிய தமிழே தாழ்நிலையுற்றதற்குக் காரணம்.

ஆட்சி அமைந்து 10 மாதங்கள் கழித்துத் தெரிவிக்கப்பட்ட கருத்து இது. நான் இதனைப் படித்து, எடுத்து வெட்டிவைத்து, இன்று உங்களுக்குச் சொல்வது போல் கல்வி அமைச்சரும் இதைப் படித்திருப்பார். உயர்கல்வியிலும், பள்ளிக் கல்வியிலும் தமிழ் வழிப் பயிலும் சூழலை உருவாக்க வேண்டியது அவர் பொறுப்பு அல்லவா! செய்தாரா என்பதுதான் கேள்வி.

இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்தேன். வேறுவகையான தமிழ்ப் பணிகள் நடைபெறுகின்றன. ஆனால் கல்வித்துறையில் ஒரு மாற்றமும் வரவில்லையே!

6.5.97 அன்று (சரியாக ஓராண்டு கழித்து) நான் எழுதிய குறிப்பு இது; குறிப்பு மட்டுமன்று - குமுறல்.

ஒரு போராட்டம்

எதிர்க் கட்சியாக இருக்கும்போதே தலைவர், பேராசிரியர், முரசொலி மாறன் ஆகியோரோடு பேசி 'தமிழ் படிக்காமல் தமிழ்நாட்டில் ஒருவர் பட்டம் பெற முடியாது' என்ற நிலை ஏற்படும் வண்ணம் செயற்பட வேண்டும் என்று வலியுறுத்தியவன் நான். அதனாலேயே முரசொலி மாறன் என்னைப் 'பைத்தியக்காரன்' என்று அழைக்கத் தொடங்கி விட்டார். அமைச்சரவை அமைந்த போது முறையே இல்லாமல் 'பொன்முடிக்கு அடுத்து என்னை உட்கார வைத்தவரும் முரசொலி மாறன்தான். தமிழுக்காகப் பொறுத்துக் கொண்டேன்.

1996 தேர்தல் அறிக்கையில் '1முதல் 5வரை பாடம்1- தமிழ் - கட்டாயப் பாடம்' என்று இடம் பெறச் செய்தேன். பின் இரண்டாவது வரவு செலவுத் திட்டத்தில் தலைவர் அறிவிப்பில் இடம் பெறவும் ஆவன செய்தேன். இதைச் செயற்படுத்த வேண்டியது கல்வித்துறை. ஆனால் அதன் செயலாளர் கௌரி சங்கர், இ.ஆ.ப. தமிழுக்கு எதிரி. அவர் சொல்வதைக் கேட்டு, பேராசிரியரும் தமிழ் விருப்பப் பாடமாக இருந்தால் போதும் என்ற அளவுக்கு வந்து விட்டார். நான் விடவில்லை. ஆற்காடு வீராசாமி என் விடாப்பிடியை உணர்ந்து தக்க தீர்வு சொன்னார்.

வகுப்பு 1, 2 - தமிழ் - அவரவர் தாய்மொழி இரண்டும் கட்டாயம். வகுப்பு 3,4,5- தமிழ் - அவரவர் தாய்மொழி இரண்டும் கட்டாயம். ஆங்கிலம் விருப்பப்பாடம் என்றவாறு அமைக்க முடிவெடுக்கப்பட்டது. பேராசிரியர் என்றும் பார்க்காமல் நான் கடுமையாகவே போரிட வேண்டியிருந்ததது.

பகலில் தலைவருடன் ஆர்க்காடு வீராசாமியும் நானும் மகிழுந்தில் வரும்போது தலைவரே குறிப்பிட்டார். 'என்ன வீராசாமி! பேராசிரியர் இப்படிப் பேசுகிறார்! அவரே தமிழுக்கு ஆதரவாய் பேசுவதாகத் தெரியவில்லையே! என்றார்.

உள்ளபடியே சொல்கிறேன்: தலைவர் மட்டும் முதல்வராக இல்லாவிட்டால் தமிழைப் பாதுகாக்கவே முடியாது. கல்வியமைச்சர் கையில்தான் பெரும்பகுதி உள்ளது அவரே முட்டுக் கட்டையாகி விடுவார்.

வேதனையுடன் இதனை எழுதுகிறேன்.

'பேசுவது தமிழ் மானம்; ஆனால் பேணுவது ஆங்கில வாடை' என் செய்வது?

பலதரப்பிலிருந்து ஆதரவுக் குரல்கள் எழுந்தன. திருவரங்கம் அருட்டிரு ஆண்டவன் சுவாமிகள் கொடுத்த நேர்காணலில் சில செய்திகள் உள்ளன. (தினமணி 18.6.97) அவற்றை மட்டும் தொடுத்துத் தருகின்றேன்.

தாய்மொழி கல்விக்கு வரவேற்பு

தமிழில் பெயர்ப் பலகைகள் வைக்க வேண்டும் என்பதற்காக அரசு எடுத்துவரும் முயற்சிகளை வரவேற்கிறேன். மருத்துவ, பொறியியல் படிப்புகளைத் தாய்மொழியிலேயே படிக்கலாம். தவறில்லை. தாய்மொழியில் கற்பதால் நன்கு ஊன்றிக் கவனித்துப் படிக்கமுடியும். ஆனால் தாய் மொழி அறிவோடு மட்டும் நின்றுவிடக் கூடாது. பெரும்பான்மை மக்களால் பரவலாகப் பேசப்படும் மொழியை இணைப்பு மொழியாகப் பயன்படுத்தலாம். இந்தியா

போன்ற பல மொழிகள் பேசப்படும் ஒரு நாட்டில் இணைப்பு மொழி அவசியம். தாய்மொழியில் கல்வி கற்பதால் அயல் நாடுகளில் கிடைக்கவேண்டிய வேலைவாய்ப்புகள் பறிபோகும் என்பதெல்லாம் வீண் விவாதம்.

பொறியியல் படிப்பைத் தமிழில் கற்பிக்கும். அரசின் முயற்சி வரவேற்கக் கூடியதுதான். இதன் பலன் இன்னும் சில ஆண்டுகளில் தெரிந்துவிடும். இது தமிழைத் திணிப்பது போலாகது. மக்களுக்கு தமிழுணர்வை வளர்க்க அரசு செய்யும் முயற்சி இது. குழந்தை தானாக சாப்பிடத் துவங்கும் வரை நாம்தானே பால்சாதத்தைப் பிசைந்து ஊட்ட வேண்டியுள்ளது.

கோயில்களில் தமிழில் அர்ச்சனை செய்யப்டுவதில்லை என்ற புகார் எழுந்துள்ளது. தமிழில் அர்ச்சனை என்பது பக்தர்களுக்கு அர்ச்சகர்கள் தரும் வாய்ப்பு. போகப்போக முழுக்க முழுக்க தமிழிலேயே அர்ச்சனை செய்யப்படும் நிலையும் வரலாம்.

முதல் வகுப்பு தொடங்கி 5ஆம் வகுப்பு வரை தமிழ் கட்டாயப் பாடம்

1968ஆம் ஆண்டில் அறிஞர் அண்ணா அவர்களால் இருமொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதில் ஆங்கிலம் பாகம்-2 ஆகி கட்டாயப் பாடமானது. சிறுபான்மையரையும் மனத்திற்கொண்டு தீட்டப்பட்ட திட்டமாதலின் பாகம் 1 - வட்டாரமொழி அல்லது தாய்மொழி என்றானது. இதன் விளைவாக தெலுங்கு, மலையாளம், கன்னடம், உருது போன்றவற்றைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழுக்குப் பதிலாகத் தங்கள் தாய்மொழியைப் பாடமாகப் படித்தனர். அவர்கள் தமிழ் படிக்கவேண்டிய தேவையே இல்லாமல் போனது. தமிழகத்தின் கல்வியமைப்பு காரணமாக, சிலர் தமிழ் படிக்காமலேயே பட்டதாரியாகிவிடலாம் எனும் நிலை வளர்ந்துவிட்டது. இதுகுறித்துத் தமிழ் அறிஞர்கள் பெருங்குரல் எழுப்பினர். அவர்களது குரலை மதித்து, கலைஞர் அவர்கள் 1997-98ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்திலேயே கீழ்க்கண்டவாறு அறிவித்தார்.

''ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முதல் பாகமாக (PART - I) தமிழ் கட்டாயப் பாடமாகவும், 2-வது பாகமாக (PART - II) ஆங்கிலம் கட்டாயப் பாடமாகவும் இருக்கும். மொழிச் சிறுபான்மையர் தங்கள் தாய்மொழியைக் கற்க விரும்பும் நிலையில் 15 மாணவர்களுக்கு மேற்பட்டவர்கள் இருந்தால் அதற்குரிய மொழி ஆசிரியரை நியமிக்க வழிவகை செய்யப்படும்.

இதனால் சிறுபான்மையரது மொழி நலம் காக்கப்படுவதுடன் தமிழைப் படிக்காமலேயே தமிழ் நாட்டில் ஒருவர் பட்டம்பெற முடியும் எனும் நிலையும் நீங்கும்.''

அரசுப் பள்ளிகளில் படிப்பதாலோ, தமிழ் வழியில் படிப்பதாலோ யாரும் வீணாகி விடுவதில்லை. உண்மையான படிப்பார்வமும், விடாமுயற்சியும் இருந்தால் யார் வேண்டுமானாலும் உயரலாம். அதற்கு, தமிழி வழிக்கல்வி ஒரு தடையே இல்லை என்பதை இ.ஆ.ப. தேர்வில் வெற்றி பெற்ற இரண்டு மாணவர்கள் மெய்ப்பித்துள்ளனர்.

''தமிழ் வழி கல்விபெறும் மாணவர்கள் ஐ.ஏ.எஸ். தேர்வில் வெற்றி பெறலாம்''

என்ற தலைப்புகள் தினமலர் **(23.6.97)** செய்தியை வெளியிட்டிருந்தது. அந்தச் செய்தியில் உள்ள கருத்தையும், அந்த மாணவர்களின் நேர்காணலில் நாம் காணவேண்டிய செய்திகளையும் இங்கே தந்துள்ளேன்.

''சிவில் சர்வீஸ் தேர்வில் வெற்றி பெறும் தமிழக மாணவர்களில் 95 சதவீதம் பேர் கிராமப்புற மாணவர்கள். கிராமப்புறங்களில் தமிழ் வழியில் தான் கல்வி கற்கின்றனர். எனவே, இனிவரும் காலங்களில் தமிழ் வழியில் தேர்வு எழுதுபவர்கள் தான் சிவில் சர்வீஸ் தேர்வில் வெற்றி பெற முடியும என்ற நிலை உருவாகி வருகிறது'' என இவ்வாண்டு சிவில் சர்வீஸ் தேர்வில் வெற்றி பெற்ற சிங்காரவேலு, ராஜசேகரன் ஆகியோர் கூறினர்.

சிங்காரவேலு

இவர்களில் சிங்காரவேலு எம்.காம் பட்டதாரி. இவரது சொந்த ஊர் விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை அருகே உள்ள தென்மங்கலம் கிராமம். துவக்கக் கல்வியை தென்மங்களலம் அரசு பள்ளியிலும், அருள்நகரில் உள்ள அருட்கொடிப் பள்ளியிலும் படித்த சிங்காரவேலு, திருவெண்ணை நல்லூர் காந்தி நினைவு மேல்நிலைப் பள்ளியில் பிளஸ்-2 முடித்தார்.

பின்னர், விழுப்புரம் அரசு கலைக்கல்லூரியி வணிகவியல் பட்டப்படிப்பு படித்தார். தற்போது தமிழக கூட்டுறவுத்துறையில் இளநிலை கூடடுறவு தணிக்கையாளராக சென்னையில் பணிபுரிந்த வருகிறார். கடந்த 1992ல் இருநதே சிவில் சர்வீஸ் தேர்வு எழுதத் துவங்கிய இவர், ஐந்தாவது முறையாக இவ்வாண்டு தேர்வு எழுதியதில் தான் வெற்றியைப் பெற முடிந்தது.

முதல் முயற்சியின்போது, முதல்நிலைத் தேர்விலேயே வழுக்கி விழுந்தார். அதற்கு அடுத்த ஆண்டும் இதே நிலையைத் தான் சந்தித்தார். இருப்பினும் மனம் தளரவில்லை. 1994ல் மூன்றாவது முறையாக தேர்வு எழுதி

முதல்நிலைத் தேர்வில் வெற்றி கண்ட இவரால், முதன்மைத் தேர்வில் வெற்றி காண முடியவில்லை.

இருப்பினும், விடாமுயற்சியுடன் அதற்கு அடுத்த ஆண்டு (1995) நடந்த சிவில் சர்வீஸ் தேர்வில் முதல்நிலைத் தேர்வு, முதன்மைத் தேர்வு ஆகிய இரண்டிலும் வெற்றி பெற்றார். ஆனால், இந்த முறை நேர்காணல் தேர்வில் தோல்வியைச் சந்திக்க வேண்டிய நிலை இவருக்கு ஏற்பட்டது.

இருந்தபோதிலும், இவரது தன்னம்பிக்கையின் காரணமாக, இவ்வாண்ட நடந்த சிவில் சர்வீஸ் தேர்வில் மூன்று கட்ட தேர்வுத் தடைகளையும் வெற்றிகிரமாக தகர்த்தெறிந்து சாதனை நிகழ்த்தி காட்டினார் சிங்காரவேலு. தோல்வி மேல் தோல்வியை கண்ட இவர், தனது வெற்றிக்குப் பின் உணர்ந்து கொண்டது, 'தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும் இருந்தால் எதனையும் சாதித்துக் காட்ட முடியும்,' என்பதைத்தான்.

ராஜசேகரன்

இவர் சித்த மருத்துவ பட்டதாரி. பி.எஸ்.எம்.எஸ். படித்துள்ளார். இவரது சொந்த ஊர் மன்னார்குடி. தகப்பனார் எம். ராஜமாணிக்கம். சென்னையில் தபால்துறை உதவி கண்காணிப்பாளராக பணிபுரிகிறார். தாயார் இந்திராணி. ஐந்தாம் வகுப்புவரை மயிலாடுதுறை சித்தர்காடு பள்ளியில் படித்தார். ஒன்பதாம் வகுப்பு ஈரோடு நகராட்சிப் பள்ளியில் படித்தார். 10ம் வகுப்பு முதல் பிளஸ்-2 வரை காட்பாடி அரசு மேல்நிலைப் பள்ளியில் படித்து முடித்தார். அதன்பிறகு, பாளையங்கோட்டை சித்த மருத்துவக் கல்லூரியில் பட்டப்படிப்பு படித்தார். ஆரம்பக்கல்வி முதல் பட்டப்படிப்புவரை தமிழ் வழிக் கல்வியையே பயின்று வந்த இவர், சிவில் சர்வீஸ் தேர்வையும் தமிழிலேயே எழுதி வெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவில் சர்வீஸ் தேர்வில் முதல் முயற்சியில் தோல்வியடைந்த இவர், விடாமுயற்சியுடன் இரண்டாவது முறையாக தேர்வு எழுதி வெற்றி பெற்றார். முதல் முயற்சியின்போது முதல்நிலைத் தேர்வில் இவரால் வெற்றி பெற முடிந்த போதிலும், முதன்மைத் தேர்வில் வெற்றி பெற முடியவில்லை. அதன்பிறகு இரண்டாவது முறையாக, இவ்வாண்டு நடந்த தேர்வில் முதல்நிலை, முதன்மை மற்றும் நேர்காணல் ஆகிய மூன்றுக்கட்ட தேர்விலும் வெற்றி பெற்று சாதனை புரிந்து காட்டினார்.

'சிவில் சர்வீஸ் தேர்வு எழுதி வெற்றியடைந்ததற்கு காரணமாக இருந்தவர்கள் தனது நண்பர்கள் ஜெயராமன், வீரமணி ஆகியோர் அளித்த ஊக்கம் தான்,' என கூறிய ராஜசேகரன், 'சித்த மருத்துவ மாணவர் ஒருவர்

சிவில் சர்வீஸ் தேர்வு எழுதி முதன்முறையாக வெற்றி பெற்றது நான்தான்,' என பெருமிதத்துடன் கூறினார்.

இது தொடர்பாக சாதனையாளர்கள் சிங்காரவேலு, ராஜசேகரன் இருவரும் நமது நிருபரிடம் கூறியதாவது:

நாங்கள் இருவரும் சிவில் சர்வீஸ் தேர்வில் தமிழ் இலக்கியம் மற்றும் வரலாறு ஆகிய இருபாடங்களை விருப்பப் பாடங்களாக தேர்வு செய்து படித்தோம். தேர்வு எழுதினோம். இருவரும் வெவ்றேறு பட்டப்படிப்புகளை படித்திருந்தபோதிலும் எங்களுடைய பாடங்களை விருப்பப் பாடங்களாக தேர்வு செய்யாமல், இந்த இரண்டு பாடங்களையும் தேர்வு செய்தற்கு காரணம் இந்த பாடங்களுக்கான நூல்கள் தான் தமிழ் மொழியில் அதிகமாக கிடைக்கின்றன.

தமிழ் இலக்கியத்தில் அதிக மதிப்பெண்கள் பெற முடியும். சிவில் சர்வீஸ் தேர்வுக்கான மற்ற விருப்பப் பாடங்களை காட்டிலும் தமிழ் இலக்கியத்தில் பாடத்திட்டம் குறைவாக உள்ளது. மற்றொரு காரணம், தமிழ் தாய் மொழியாக இருப்பதால் சரளமாகவும், வேகமாகவும் கருத்துக்களை குறித்த நேரத்தில் வெளியிட முடியும். இதேபோல், வரலாறு பாடத்திற்கும் தமிழில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்ட புத்தகங்கள் ஓரளவிற்கு கிடைக்கின்றன. எனவே தான், தமிழ் வழியில் சிவில் சர்வீஸ் தேர்வு எழுதுபவர்கள் இந்த இரு பாடங்களை விருப்பப்பாடங்களாக தேர்வு செய்கின்றனர். அத்துடன் பொது அறிவு தேர்வுத்தாளிலும் 100 மதிப்பெண்களுக்கு வரலாறு பாடத்தில் கேள்விகள் கேட்கப்படுகின்றன. வரலாறு பாடத்தை விருப்பப் பாடமாக எடுத்துப் படிப்பவர்களுக்கு அந்த 100 மதிப்பெண்களை பெறுவதும் எளிதாக உள்ளது.

தமிழில் தேர்வு எழுதினால் சிலர் கேவலமாக நினைக்கின்றனர். தாய்மொழியில் தேர்வு எழுதுவதில் ஏன் வெட்கப்பட வேண்டும். இந்தி மொழியை தாய் மொழியாக கொண்டுள்ள மற்ற மாநிலத்தினர் வெட்கப்படாமல் அந்த மொழியில் தேர்வு எழுதி வெற்றி பெறுகின்றனர். அதே போல, நாம் தமிழில் தேர்வு எழுதி வெற்றி பெற நினைப்பதில் என்ன கேவலம் உள்ளது? தமிழில் தேர்வு எழுதினால் சிலர் குறைாக மதிப்பெண்கள் கொடுக்கின்றனர். இது கவலைக்குரிய விஷயமாகும்.

இந்திய அரசியலமைப்பு சட்டப்படி பதினெட்டு மொழிகள் ஆட்சி மொழிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஆனால், சிவில் சர்வீஸ் தேர்வில் ஆங்கிலத்திலும், இந்தியிலும் தான் கேள்விகள் கேட்கப்படுகின்றன. இந்தி தெரியாதவர்கள் ஆங்கிலத்தில் உள்ள கேள்விகளை படித்து புரிந்துகொண்டு அவற்றிற்கு பதில் எழுதுகின்றனர். இருப்பினும் சில கேள்விகள் ஆங்கிலத்தில்

எளிதாக புரிந்தகொள்ள இயலாதவாறு கேட்கப்படுகின்றன. பள்ளி, கல்லூரி படிப்புகளை தமிழிலேயே படித்து வரும் மாணவர்களுக்கு இது சிரமமாக அமைந்து விடுகிறது. கேள்வியை தவறாக புரிந்துகொண்டு பதில் அளித்தால் வெற்றி வாய்ப்பு பறிபோய் விடும். இந்நிலையை மாற்றுவதற்கு அந்தந்த மாநில மாணவர்களுக்கு கேள்வித் தாள்களை ஆங்கிலம், இந்தி ஆகிய இருமொழிகளிலும், அந்த மாநில மொழியிலும் தயாரித்து வினியோகிக்க வேண்டும்.

சென்னை அண்ணாநகரில் உள்ள தனிப் பயிற்சி மையங்களில் பாடம் நடத்தும் கல்லூரி ஆசிரியர்கள் கல்லூரி பாடத்திட்ட முறைப்படியே கற்பிக்கின்றனர். யுபிஎஸ்சி பாடத்திட்டப்படி நடத்துவது கிடையாது. எனவே, கல்லூரி ஆசிரியர்களுக்கு தனி பயிற்சி அளிக்க வேண்டும். வடஇந்தியாவில் உள்ள ஜவர்ஹர்லால் நேரு பல்கலைக்கழகம், டில்லி பல்கலைக்காகம் போன்றவற்றின்கீழ் இயங்கும் கல்லூரிகளில் மாணவர்களுக்கு யுபிஎஸ்சி பாடத்திட்டப்படியே படிப்படிப்பு பாடங்கள் நடத்தப் படுகின்றன. இதனால், அங்கு படிக்கும் மாணவர்கள் எளிதாக யுபிஎஸ்சி தேர்வில் வெற்றி முடிகிறது. ஆனால் நம் தமிழ்நாட்டில் வெவ்வேறு பாடத்திட்டமாக உள்ளன. இவற்றை மாற்ற வேண்டும்.

கடந்த சில ஆண்டுகளாக ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வுகளை அறிவு ஜீவிகள் தான் எழுத முடியும். ஆங்கிலத்தில் புலமை பெற்றவர்கள்தான் எழுத முடியும். உயர் அதிகாரிகளின் பிள்ளைகள் தான் எழுத முடியும். கிராமப்புற மாணவர்களாலும், சராசரி மதிப்பெண்கள் பெற்ற மாணவர்களாலும் சிவில் சர்வீஸ் தேர்வு எழுத முடியாது என்பது போன்ற மாயை இருந்து வந்தது. ஆனால், இதனை பொய்யாக்கி கடந்த மூன்றாண்டுகளாக கிராமப்புற மாணவர்கள் சாதனைபுரிந்து வருகின்றனர். இதுவே தமிழகத்தில் கிராமப்புற மாவணர்கள் மத்தியில் ஓரளவிற்கு விழிப்புணர்வு ஏற்பட்டுள்ளது என்பதைத் தான் சுட்டிக்கட்டுகிறது. கிராமப் புற மாணவர்கள் தமிழ் வழியில் பயின்று பள்ளிகளில் தேர்வு எழுதுவதால், இனிவரும் காலங்களிலும் ஐஏஎஸ், ஐபிஎஸ் தேர்வுகளிலும் தமிழ் வழித் தேர்வு எழுதுபவர்கள் தான் அதிகமாக வெற்றி பெறுவார்கள் என்ற நிலை உருவாகி வருகிறது.

சிவில் சர்வீஸ் தேர்விற்கான பயிற்சி அளிக்க டில்லியில் நல்ல தனியார் பயிற்சி மையங்கள் உள்ளன. டில்லியில் வேண்டிய புத்தகங்கள் எளிதாக கிடைக்கின்றன. இது அங்கும் படிக்கும் மாணவர்களுக்கு சாதகமாக அமைந்துள்ளது. தற்போது தமிழகத்தில் சிவில் சர்வீஸ் தேர்வில் முதல் நிலை மற்றும் முதன்மைத் தேர்வு ஆகியவற்றில் தேர்வு பெற்ற மாணவர்களுக்கு மட்டும் டில்லியில் நடைபெறும் நேர்காணல் தேர்விற்கு அங்குள்ள தனியார் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற தமிழக அரசு உதவுகிறது.

இவ்வாண்டு சுமார் 45 பேர் தமிழகத்தில் இருந்து நேர்காணல் தேர்விற்கு சென்றோம். நம்முடைய மாநிலத்தில் இருந்துதான் அதிகமானோர் தேர்வுக்க வந்துள்ளனர் என நாங்கள் ஆரம்பத்தில் பெருமைப்பட்டுக் கொண்டோம். ஆனால், நேர்காணல் தேர்வின்போது பார்த்தால், உதாரணமாக ஆந்திராவின் தலைநகரான ஐதராபாத்தில் இருந்து மட்டும் 150 மாணவர்களும், பீகாரிலிருந்து 300 மாணவர்களும் வந்திருந்தனர். இவ்வளவு மாணவர்கள் நேர்காணல் தேர்விற்கு வர முடிந்ததற்கு அவர்கள் படித்திருந்த இந்தி மொழி தான்.

தமிழக மாணவர்களுக்கு மாநில அரசு அளித்துள்ள சலுகைகளைக் கூட முழுமையாக பயன்படுத்திக் கொள்ள முடியவில்லை. டில்லியில் நடைபெறும் நேர்காணல் தேர்விற்.கு செல்ல ரயில் டிக்கெட் கிடைக்காமல் போய்விடும் என்ற பயத்தின் காரணமாக பத்து, பதினைந்து நாட்களுக்கு முனனதாகவே சென்னையிலிருந்து மாணவர்கள் டில்லிக்கு சென்று விடுகின்றனர். ஆனால் மாணவர்கள் அங்குள்ள தமிழ்நாடு ஹவுசில் வாடகை கட்டணச் சலுகையில் பத்து நாட்களுக்கு மட்டும் தான் தங்குவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். அதுவும், நான்கு, ஐந்து மாணவர்கள் ஒரே அறையில் ஆடு, மாடுகளை அடைத்து வைப்பதுபோல, கட்டாயமாக தங்க வைக்கின்றனர். படிப்பதற்கு அமைதியான சுற்றுப்புறச் சூழ்நிலைதான் முக்கியம். தமிழகத்திற்கு பெருமையை தேடித்தரும் சிவில் சர்வீஸ் தேர்வுக்கு செல்லும் மாணவர்களுக்கு அங்கு சரியான மரியாதையும், ஒத்துழைப்பும் கிடைப்பதில்லை. இத வேதனைக்குரிய விஷயமாகும்.

டில்லியில் தான் இந்த பிரச்னை என்றால், சென்னையில் பிரச்னைகள் ஏராளமாக உள்ளன. அண்ணா நகர் பயிற்சி மையங்களில் உள்ள நூலகங்களுக்கு தனி நூலகர் கிடையாது. வேண்டிய நேரத்தில் புத்தகங்கள் கிடைப்பதில்லை. அவை மூடியே கிடக்கின்றன. அங்குள்ள பியூன்தான் நூலகத்திற்கு பொறுப்பாளராக செயல்படுகிறார். அவரை தேடிப்பிடித்து வேண்டிய புத்தகத்தை வாங்கிச் செல்ல வேண்டியுள்ளது. இதேபோல, சிவில் சர்வீஸ் தேர்விற்காக சென்னையில் தேர்வு செய்யப்படும் தேர்வு மையங்களும் மோசமாக செயல்படுகின்றன. இவ்வாண்டு முதன்மை தேர்வு செய்யப்பட்ட மையத்தில் சரியான டெஸ்க் வசதி கிடையாது. மின்விளக்கு வசதி இல்லை. அமைதியான சுற்றுப்புறச் சூழ்நிலை கொண்ட மையமாமகவும் இல்லை. இதனால், மாணவர்கள் தேர்வு எழுதுவதற்கு மிகவும் சிறமப்பட்டனர். இத்தகைய குறைகளை எல்லாம் மாநில அரசு இனிவரும் காலங்களில் களைய வேண்டும். தமிழில் சிவில் சர்வீஸ் தேர்வு எழுதும் மாணவர்களுக்கு உள்ள பிரச்னைகளை தீர்ப்பதற்காக அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்யும்

பொறுப்பை தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் கவனிக்க வேண்டும். சிவில் சர்வீஸ் தேர்வு எழுதும் மாணவர்களின் குறைகளை கண்டறிந்து பிரச்னைகளை தீரக்க தனி குழு ஒன்று அமைக்க வேண்டும்.''

இதில் எனக்கும் ஒரு வேண்டு கோள் வைக்கப்பட்டுள்ளது. நான் அதை மறப்பேனா? என் மாணவனும், என் மகனும் இ.ஆ.ப. தேர்வைத் தமிழில் எழுதி வெற்றி பெற்றவர்கள் அல்லவா!

எனவே, தமிழ் மொழி இலக்கிய வரலாற்றைப் பாடமாக எடுத்துப் படிப்பவர்கட்குத் துணை செய்யும் வகையில் நிதி ஒதுக்கீடு (உருபா 3 இலட்சம்) பெற்று, முதல் கட்டமாக 'தமிழ் மொழி வரலாறு' எனும் நூலை வெளியிட்டோம். தமிழ் பாடங்களைப் படிக்காமல் பாடத்தைத் தேர்ந்தெடுப்பவர்கட்கு இந்த நூல் பெரிய வாய்ப்பாகவும், சிறந்த தொகுப்பாகவும் அமைந்தது.

இவர்களுக்கெல்லாம் முன்னாலேயே தமிழ் இலக்கிய மாணவனாக இருந்து தமிழ் வழியில் இ.ஆ.ப. தேர்வில் வென்ற ரெ. பாலகிருட்டிணன் தரும் நேர்காணல் இது. (தினமணி 3.2.99)

''தாய்மொழிக் கல்வியே இயல்பானது. தாய்மொழி என்பது தாய்ப்பாலைப் போன்றது' என்று தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் ஆணையத்தின் இயக்குநர் ரெ. பாலருகிருட்டிணன் தெரிவித்தார்.

என்னால் தமிழைப் போலவே ஆங்கிலத்திலும் மேடையிலே நீண்ட நேரம பேசமுடியும். திருக்குறளை ஒரிய மொழியில் மொழி பெயர்க்கும் பணியில் பங்காற்றியவன் என்கிற அளவிற்கு ஒரிய மொழி தெரியும். பல்வேறு ஆய்வுகள் மேற்கொண்டிருப்பவன்.

இத்தனை தகுதிகளைக் காட்டிலும் ஒரு தமிழ் இலக்கிய மாணவன் என்பதிலேயே பெருமை கொள்கிறேன் என்றார் அவர்.''

'தமிழ்வழி உயர்கல்விக்கு முன்னோடி' எனும் தலைப்பில் கட்டுரையொன்று எழுதினார் (தினமணி 3.7., 4.7.97) அதில் மருத்துவர் சவரிராயன் ஏசுதாசன் என்பவரைப் பற்றிய குறிப்புகளைப் பாருங்கள்.

''அறுபது ஆண்டுகளுக்கு முன்பே, ''மருத்துவம், பொறியியல், அறிவியல், கலையியல் ஆகிய அனைத்துத் துறைகளிலும் தாய்மொழியாம் தமிழ்தான் பாடமொழியாக இருக்கவேண்டும். இந்தியர்கள் அனைவரும் தத்தம் தாய்மொழிக்கு முக்கியத்துவம் தரவேண்டும்; இன்றேல் நம் பண்பாடு அழிந்துபடும்,'' என ஒருவர் எழுதினார். இதற்கு எதிராகக் கூறப்பட்ட ஒவ்வொரு காரணத்தையும் தக்கவாறு மறுத்து விளக்கித் தம் கருத்தை

நிலைநாட்டினார். இரண நூல், வைத்திய விஞ்ஞானம் என மருத்துவத் துறையில் உயர்கல்விக்குப் பயன்படுமாறு தமிழில் நூலெழுதித் தாமே வரிகாட்டினார்; இவ்வியல்பான அறிவுடைமைக்குத் தடையாயிருந்த ஆங்கிலம் படித்த மேதைகளைச் சாடுசாடென்று சாடினார்.

அவர் யார் என்று நினைக்கிறீர்கள்?

இங்கு இப்போது நம்மிடையே ஆங்கிலத்தில் புலமை பெற்ற பலதுறைப் பேரறிஞர்கள் பலருள்ளனர். அவர்கள் மனத்தின் உட்புகுந்து தேடினால், அங்கு தாய்மொழியாம் தமிழ் பற்றிய தாழ்வுமனப்பான்மை குடிகொண்டிருப்பதைக் காணலாம். அவர்களுக்கு எல்லாம் பாடம் கற்பிக்கத் தக்கவராக விளங்கினார், 'பெரியண்ணன்' என்று அன்போடு மக்களால் அழைக்கப்பட்ட டாக்டர் சவரிராயன் ஏசுதாசன், F.R.C.S.E.,

பாளையங்கோட்டையில், 31.8.1882-ல் யோவான் தேவசகாய சவரிராய பிள்ளைக்கும் மிக்கேல் அம்மாளுக்கும் திருமகனாகப் பிறந்தார். மகாகவி பாரதியார் பிறந்த அதே ஆண்டில் பிறந்தார் என்பதனால், அன்றிருந்த சுதந்திரப் போராட்டச் சூழல் இவரையும் பாதித்துளது. 87 ஆண்டுகள் வாழ்ந்து, 1969 ஏப்ரல் 19 அன்று இறையடி நீழல் எய்தினார். வாழ்நாள் முழுவதும் துறவியாய்ப் பணி செய்த தூயவர் இவர்.

பாளையங்கோட்டையிலும் சென்னையிலும் பயின்ற காலை, ஆங்கிலேயர்களிடமே படிக்க நேர்ந்தது.

இங்கு ஆங்கிலங் கற்றதனாலேயே தம்மை இழந்துவிட்ட 'அறிஞர்கள்' 'உயர் பதவியாளர்கள்' 'கல்வி வல்லுநர்கள்' மீது இவருக்கு அருவருப்பும் வெறுப்பும் சீற்றமும் ஏற்பட்டது.

''இந்தியாவில் உயர்கல்வி என்பது ஆங்கிலத்தில் பேசிக்கொள்வதையே மதிப்பிள்கும் மரியாதைக்கும் உரியதென்று கருதுகிறார்கள். மிகவும் படித்த மேதைகள் விஞ்ஞானம், கலை பண்பாட்டுச் சிறப்புடையவற்றை இங்ஙனம் ஆங்கிலத்திலேயே பேசிக் கொள்வதால் சாதாரண மக்கள் அதுதான் கல்வி என எடுத்துக் கொள்ள நேர்கிறது. கடைத் தெருவில், இரயிலில், பொது இடங்களில் எல்லாம் இப்படியே ஆங்கில உரையாடல்களே நடப்பதால், ஏழைமக்கள் உயர் அறிவு பெறுவதை இழக்கிறார்கள்.''

இவ்வாறு டாக்டர் ஏசுதாசன், தமது தமிழ் வைத்திய விஞ்ஞான நூலின், ஆங்கில முன்னுரையில் குறிப்பிடுகிறார். தமிழில் நூலெழுதியதாலேயே இந்த டாக்டருக்கு ஆங்கிலத்தில் எழுதும் திறனில்லை போலும் என எண்ணக் கூடியவர்கள் நிரம்பிய நாடாதலின், சவரிராயன்

ஏசுதாசன் முன்னுரையை ஆங்கிலத்தில், அழுத்தம் திருத்தமாக எழுதியுள்ளார். "ஒருவன் தன் தாய்மொழியைப் புறக்கணிப்பது தனது சுயமரியாதையை இழப்பதாகும்." என்றும் சிலர் பல்கலைக்கழகப் பாடமொழியாகத் தம் வட்டார மொழி மொழி வருவதை எதிர்ப்பதற்குக் காரணம் அவர்கள் தாய்மொழியில் செவ்விதாக எடுத்துக் கூறும் ஆற்றலை இழந்தமையாலேயாம் என்றும் தெளிவுபடக் கூறுகிறார்.

இந்நூலுக்கு மதிப்புரை எழுதிய, முன்பு காங்கிரஸ் ஆட்சியில் நல்வாழ்வுத்துறை அமைச்சராயிருந்த டாக்டர் தி.சே.செள.ராஜன், டாக்டர் ஏசுதாசனைப் பற்றிப் பாராட்டியரைப்பன மனங்கொளத்தக்கன.

எட்டாம் வகுப்புவரை படித்த நமது நாட்டுப் பெண்களுக்கு, மருத்துவ செவிலியராகப் பயிற்சி தர அன்றைய அரசு ஏற்பாடு செய்த பொழுது, டாக்டர்கள் அது முடியாதென்று கூறிவிட்டார்களாம். ''தமிழ் நாட்டிலே தமிழர்களுக்கெனத் தொண்டு புரிவதற்காக அவர்கள் நியமிக்கப் பட்டிருந்த போதிலும், நடைமுறைத் தமிழைக்கூட அதிகம் கற்கவேண்டிய அவசியமில்லாமலே அவர்கள் சென்னை ஆஸ்பத்திரிகளில் வேலை பார்த்து வருகிறார்கள். இது அடிமைநாட்டு விநோதங்களில் ஒன்று. இந்நாட்டில் பிறந்த தமிழ் டாக்டர்கள் தமிழில் நமது சகோதரிகளுக்குப் பாடஞ்சொல்ல முடியாதென்று சொன்னபோதுதான் எனக்கு ஆச்சாரியமாக இருந்தது.'' இவ்வாறு 1962-ல் 'வைத்திய விஞ்ஞான' நூலின் மதிப்புரையில் குறிப்பிடும் டாக்டர் ராஜன் ''தமிழும் தமிழரும் உயர்ந்தோங்கும் காலம் சமீபத்திலிருக்கிறது. அப்பொழுது இந்த நூலும் இதன் ஆசிரியரும் தமிழ் நாட்டிற்குச் செய்துள்ள தொண்டின் மகிமை நன்கு புலப்படும்'' என்று முடித்துள்ளார். அவர் கூற்று நனவாகி வருகிறது.

யாழ்ப்பாணத்தில் நூறு ஆண்டுகளுக்கு முன்பே, அறுவை மருத்துவம் பற்றிய ஒரு தமிழ்வழிப் பாடநூல், அங்கிருந்த மருத்துவ மிஷனரிகளால், அந்நாட்டில் பணியாற்றிய மருத்துவர்களுக்குப் பயிற்சி தருவதற்காக அச்சிட்டு வெளியிடப் பட்டிருந்ததாகவும் அதன் பிரதி ஒன்று தம்மிடமிருப்பதாகவும் தாம் தமிழில் 'இரண நூல்' எழுத அது மிகவும் துணையாக இருந்ததெனவும் பெரியண்ணன் ஏசுதாசன் தம் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

''1867-ம் ஆண்டில், யாழ்ப்பாணத்தில் தமிழ் மொழியிலேயே வைத்தியர்கள் பயிற்சி செய்யப் பிரசுரிக்கப்பட்டிருந்த தமிழ் இரண வைத்திய நூல் ஒன்றை, வைத்தியராயிருந்த என் தமையனார் திரு எட்வர்ட் ஞானப்பிரகாசம் வீட்டில் தற்செயலாகக் கண்டுபிடித்தேன். பல மருத்துவப் பதக்கங்கள் தமிழில் உபயோகிக்க இது எனக்கு நல்ல உதவியே....

யாழ்ப்பாணம், தமிழ்த்தாய்க்குப் பெரும் சேவை செய்திருக்கும் உத்தமப் பெரியோர்களாகிய ஆறுமுக நாவலர், ஞானப்பிரகாச சாதியார் போன்ற அரிய தமிழ்ப் புலவர்களை ஈன்ற தமிழ்நாட்டின் ஒரு அங்கம் அல்லவோ?''

இவ்வாறு யாழ்ப்பாணத்தில் தமிழ்வழிக் கல்வி தோன்றிக் கால் கொண்ட விதத்தை அறிகிறோம்.

மத்திய - மாநில அரசுக் கல்வித்துறைகளுக்கும் கல்லூரித் தலைவர்களுக்கும் டாக்டர் ஏசுதாசன் தமது தமிழ் 'இரண நூலை' அனுப்பியுள்ளார். பலர் வந்து சேர்ந்ததாகவே எழுதவில்லையாம். குசராத்தில் பல்கலைக் கழகத் துணைவேந்தர் ஒருவர் மட்டுமே, இம் முயற்சியை ஊக்கப்படுத்தும் வகையில் பதில் எழுதியிருந்தாராம். ''இப்படி நான் தமிழில் எழுதத் துணிந்ததற்குக் காரணம் எனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதினால்தான் என்று எண்ணினர் போலும்'', என மனம் நொந்து எழுதுகிறார் ஏசுதாசன்!

அன்றும் இன்றும் பெரும்பான்மையும் தமிழ்ப் புலவர்களே தமிழ்வழி உயர்கல்விக்கும், மழலையர் கல்விக்கும் வாதாடும் நிலை இருக்கிறது. இதனால் தமிழக அரசுகள் தமிழறிஞர்களைக் கண்டாலே வெறுக்கும்படியான வீண்பழி ஏற்பட்டுள்ளது. உயர்கல்வியாளர்கள் பலர் நேரே மறுக்கமாட்டாமல் தமிழில் கலைச்சொல் இல்லை; தரப்படுத்தவில்லை, நூல் இல்லை, தமிழ் எழுத்துக்களைச் சுருக்கவில்லை என்று ஏதாவது சொல்லி, தமிழ்வழியில் உயர்கல்வி வருவதைக் கூடியமட்டும் தள்ளிப் போட ஆவன அனைத்தும் செய்கிறார்கள். தமிழக அரசும் இவ் உயர் கல்வியாளர்களை மீறிப் போக முடியாமல் அடிமேல் அடிஎடுத்துவைத்து நகரவேண்டியிருக்கிறது.

அன்று மேதகு பக்தவத்சலமும் துணைவேந்தர் ஆ. இலட்சுமணசாமி முதலியாரும் கடும் எதிர்ப்புத் தெரிவித்தும் 'தமிழ்வழிக் கல்வி' தொடங்க வேண்டுமென பேராசிரியர் இலக்குவனார் வற்புறுத்தினார். மதுரையிலிருந்து சென்னை வரை பெருநடைப்பயணம் தொடங்கினார். அதனால் பேராசிரியர் வேலையை இழந்தார். நல்ல காலமாக அறிஞர் அண்ணா ஆட்சிக்கு வந்தார். அவரை மாநிலக் கல்லூரிப் பேராசிரியராக்கி வாழ்வு தந்தார். மூதறிஞர் வ.சுப. மாணிக்கம் தமிழ்வழிக் கல்வியை வலியுறுத்தி, 'ஆங்கிலமே வெளியேறு; அன்னைத் தமிழே அரியணை ஏறு' என காந்தியடிகள் பாணியில் ஊர்வலம் நடத்தி இயக்கமாகச் செயற்பட்டார். ஆனால் இவர்கள் இருவரும் தமிழ்ப்புலவர்கள். தமிழ்ப் புலவர்களுக்கு மட்டும் தானா தமிழ் சொந்தம்? டாக்டர் தி.சே. சௌ. ராஜன் குறிப்பிட்டிருப்பது போல, 'இது அடிமை நாட்டு விநோதங்களில் ஒன்றுதான்'! டாக்டர் சவரிராயன் ஏசுதாசன் ஆங்கிலம் கற்று, வெளிநாடெல்லாம் சென்று மருத்துவத்தில் உயர் கல்வி கற்று, வெளிநாட்டிலும்

உள்நாட்டிலும் வெற்றிகரமாக மருத்துவப் பணி செய்து, தமிழ் வழிக் கல்விக்கு வாதிட்டதும் - தமிழில் நூலெழுதி வழிகாட்டியதும் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க செய்திகளன்றோ? இங்ஙனம் அறிவியல் அறிஞர்களனைவரும் முன்வந்தாலல்லவா? தமிழ் வளரும்? தமிழ்வழிக் கல்வி ஏன் என்பதற்கு உரிய காரணங்களை அடுக்கிக் கூறிய பெருந்தகை சவரிராயன் ஏசுதாசனது சிந்தனைகளையும் அடுத்துக் காண்பது இன்றைய சூழ்நிலையில் மிகவும் பயன்படும்.''

''பெரியண்ணன் டாக்டர் சவரிராயன் ஏசுதாசன் அடிமைக்கால இந்தியாவில் வாழ்ந்த ஓர சுதந்திரக் குடிமகன்! தமிழ்வழியிலேயே மருத்துவம், பொறியியல், வேளாண்மை, அறிவியல் ஆகிய உயர் தொழிற்கல்வி அனைத்தையும் கற்க வேண்டுமென்று வாதாடிய தமிழ்மகன்!

சுதந்திர இந்தியாவில் அடிமைமனக்காரர்களே நம்மைச் சுற்றிலும் வாழக் காண்கிறோம். உயர்ந்த படிப்பாளிகளும் இம்மாயையிலிருந்து விடுபடவில்லை. தமிழ்க்குழந்தைகட்கு முற்றிலும் அன்னியப்பட்ட ஒரு மொழியை, பிழைப்பு வாய்ப்பு என்ற ஒன்றையே கூறி, சின்னஞ்சிறு மூன்று வயதுப் பிஞ்சு நெஞ்சங்களில் திணிக்கும் முயற்சி பல நூறாயிரம் பள்ளிகளில் நடந்தவண்ணமிருக்கிறது.

இச்சூழலில், டாக்டர் ஏசுதாசன், இன்றைக்கு அரைநூற்றாண்டுக்கு முன்பே தமிழ்வழி உயர்கல்வி பற்றிப் பேசி, நூலெழுதி வாதாடிய பாங்கு வியப்பைத் தருகிறது.

இலண்டனிலும் எளியவர்களுக்கென்றே மருத்துவம் செய்து புகழ் பெற்றவர். இலங்கையில் பணிசெய்தபோது தோட்டத் தொழிலாளர்களுக் கென்று அரும்பாடுபட்டார். இந்தியாவில், பிளேக்கு நோய் பரவிய புனாவில், அதைத் தடுத்து நீக்க விரைந்து சென்று பணி செய்தார். தம் நண்பரான பேட்டன் எனும் 'சின்னண்ணனுடன்' சேர்ந்து 1915-ல் அங்கு சொந்தமாக மருத்துவமனை அமைத்தார். ஏழைகளுக்கு உதவ என்றே சிறிதி மராத்தி மொழியும் கற்றார். வடஆர்க்காடு திருப்பத்தூரில், இரயில் விபத்து ஒன்றில் சிக்கித் தவித்தவர்களுக்கு உதவச் சென்ற அவர், அந்த இடம் தமக்குப் பிடித்துப் போனதால் 1921-ல் அங்கு 'கிறிஸ்துகுல ஆசிரமம்' அமைத்து, சின்னண்ணனுடன் சேர்ந்து மருத்துவப்பணி ஆற்றினார். 50 ஆண்டுகள், தம் வாழ்நாளின் இறுதிவரை உழைத்தார். இவர் சிறந்த கண் மருத்துவருமாவார். அன்றே இலவசக் கண் மருத்துவ முகாம்களை நடத்தினார். குற்றாலத்தில் மழலையர் இல்லம் ஒன்றைத் தொடங்கினார். இவர் கிராமங்களைப் புறக்கணிக்கூடாது என்ற கருத்துடையவர். 'வாழ்க கிராமவாசிகள்' என இவர் பாடல் பல புனைந்துள்ளார்.

டாக்டர் சவரிராயன் ஏசுதாசனின் கல்விச் சிந்தனைகள் மிக நுட்பமானவை. அவர் தமிழ் மொழிக்காக, ஒரு வழக்கறிஞர் போல், கற்றவர் நடுவே வாதிடுகிறார்.

1. தமிழ்வழிக் கல்வி வெற்றி பெறவில்லை; மாணவர் விரும்பிச் சேரவில்லை என்று, தமிழ்த் தாயை அவமானப் படுத்துகின்றனர்.

தமிழ்வழிக் கல்வி என்பது மேலே உயர்கல்வியிலிருந்து தொடங்க வேண்டும். உயர்கல்வியை ஆங்கிலத்தில் வைத்து விட்டு, கீழே தமிழில் படி என்பதால் பயனில்லை. ''நமது கல்வி நிலையங்களில் பத்தாவது வகுப்பு மட்டும் பல சாத்திரங்களையும் தமிழிலே கற்றுக் கொடுக்க வேண்டுமென்ற சட்டம் வந்துவிட்டது. எனினும் இப்படி நாட்டு மொழியில் சாத்திரங்களைக் கற்ற மாணவர்கள் உயர்தரக் கல்லூரிகளுக்குப் போகும்போது அந்நிய மொழியில் அதைக் கற்க வேண்டுமென்ற சட்டம் மாற்றப்படாமலிருப்பது ஒரு பெரிய இடைஞ்சலே.'' இதனால் பலர் ஆங்கில வழிப் பள்ளிகளையே தேடி ஓட நேர்கிறது. தமிழில் எவ்வித மேற்கல்வியும், ஆய்வுப் பட்டமும் பெறலாமென்ற நிலை வர வேண்டும்.

2. ஏழை, எளிய மக்கள் இந்த அறிவியல், பொறியியல், மேலாண்மை இயலெல்லாம் கற்பது எப்போது? ''அந்நிய மொழியிலே கற்றுக் கொள்வதினால், அப்படிக் கற்றவர்களுக்கும, பாமர மக்களுக்கும் இடையே பெரும் பிளவு ஏற்பட்டுவிட்டது.'' ஏழை மக்களுக்கும், தமது நோய் என்ன, அதற்கான மருந்து எது, ஏன் என்ற விவரமெல்லாம் தெரிய வேண்டும் என்றார் பெரியண்ணன். தாய் மொழி மூலமே கற்பிக்கும் காலம் வந்தால்தான் இது எளிதிற் கைகூடும்.

3. தமிழ்மொழி மதிக்கப்படவில்லை. அம் மொழி மீது மக்களுக்கு நம்பிக்கை ஏற்படவில்லை. அதனால் பொதுமக்கள் யாரும் தம் பிள்ளைகளைத் தமிழை ஒரு மொழியாகக் கூடப் படிக்கவிடவில்லை. ஏன்?

''சாதாரணமாக மக்கள் தங்கள் பிழைப்புக்கும், லாபத்திற்கும் உயர்பதவி அடைவதற்கு அனுகூலமான மொழியையே மிகவும் மதிப்பார்கள். அந்த மதிப்பு, நாம் அரசியலில் சுதந்திரம் அடைந்து விட்டாலும் கூட, உயர் பதவிக்கு உதவியாயிருக்கும் ஆங்கில மொழிக்கே இன்னும் உரியதாய் இருக்கிறது.'' தாய்மொழி வாழ்க்கைக்குப் பயன்பட வேண்டும். தமிழால் வாழ முடியும். வேலை கிடைக்கும், பிழைப்பு நடக்கும், இலாபம் உண்டாகும், உயர் பதவி பெறலாம் என்ற நம்பிக்கைகளை எவ்வாறேனும் உண்டாக்க வேண்டும். நம்பிக்கை ஏற்படுத்தாவிட்டால், தாய்மொழி அவமதிப்புக்கு ஆளாக நேரும்.

4. புதிய புதிய அறிவியல் தொடர்பான அறிவுப் பரவல் அன்னிய மொழிக் கல்வியால் தடைப்படகிறது. தாய்மொழி மூலம் கல்வியிருந்தால்

வீட்டில் பெற்றோருடனும், தெருவில் நண்பர்களுடனும், பல முக்கிய சமயங்களில் அறிஞர்களுடனும் பழகும் பொழுது இந்த அறிவியல், கலையியல் பற்றியவை எல்லாம் அனைவருக்கும் புரியும்படியான தாய் மொழியில் பேசப்படும். அவ்வாறு பேசப்பட பேசப்பட ஒருவகையில் எளிதான அறிவுப் பரவலுக்கு வாய்ப்புண்டு.

5. அறிவியல் பரவலால் புதிய பண்பாடும் பரவுகிறது. தமிழ் வழியில் படித்தால் மட்டுமே நமக்கேற்றவாறு இப் பண்பாட்டு முன்னேற்றம் அமையும். ஏழை, எளிய மக்களிடம் ஊடுருவும் 'பண்பாட்டு வளர்ச்சியே' ஒரு நாட்டு முன்னேற்றமாக உருவாகும். அன்னிய மொழிக் கல்வியால் அமையும் அறிவியல் பண்பாடு நமக்கு உகந்ததாகாது. இந் நுட்பமான கருத்தை ஒவ்வொருவரும் நன்கு தீரச் சிந்திக்க வேண்டும்.

6. வெளி மாநிலங்களிலும், நாடுகளிலும் வேலை கிடைக்காது என்று கூறுபவர்களைப் பார்த்து, நமது பெரியண்ணனுக்குச் சீற்றமே தோன்றுகிறது. ஒரு சிலரின் சொந்த நலத்திற்காகவா கல்வி? பணம் பதவி என்று ஆசைப்படுபவர்கள், கல்வி நிறுவனங்களை முற்றுகையிட்டு நாசப்படுத்துகின்றனர். அறிவு துலங்கவே கல்வி, வேலை வாய்ப்பு அவசியமே. எனினும் அதற்கு இரண்டாவது இடமே, மானம் பெரிதா? உயிர் பெரிதா? எத்தனை விழுக்காடு வெளிநாடு செல்கின்றனர்? அவர்கள் தாம்தாம் போகும் நாடுகளில் வழங்கும் மொழியைக் கற்றுக் கொள்ள எவ்வளவு காலமாகும்?

7. வெளிநாட்டில் போய் உயர்கல்வி பெறத் தடையாகுமே? அங்கு போய், தம் துறையில் மேலாய்வு செய்ய, தமிழ்வழிக் கல்வி உதவுமா? ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாகத் தொடர்ந்து படிக்கத் தானே - அதுவும் மிக அழுத்தமாக நன்முறையில் படிகக்த்தானே போகிறோம்? மேலும் இத்தகைய தொழிற் கல்வி படித்து மேலே தங்கள் சிறப்புத் துறையில் உயர்கல்வி பெற விழைபவர்கள் அதற்கேற்ற அன்னிய மொழிகளை நன்கு கற்றுக் கொண்டுவிடுவார்கள். இத்தாலிய நாட்டு பெஸ்கியும் ஆங்கில நாட்டு போப்பும் கால்டுவெல்லும் தமிழை மிக நன்றாகக் கற்றுக் கொள்ளவில்லையா? தமிழ் மீடியம் படித்துவிட்டா இங்கே வந்தார்கள்?

8. இனி உயர் படிப்புக்கு ஆங்கிலம் மட்டுமே உதவும் என்பத முட்டாள்தனம் என்று கூறுகிறார் அவர். வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு அறிவியல், கலையியல், மெய்யியல் பிரிவுகள் தலை சிறந்து விளங்குவதால், அவ்வவற்றில் மேலறிவு பெற அவ்வந் நாட்டிற்குச் செல்லவும், அவ்வம் மொழியைக் கற்கவும் வேண்டும். பெரியண்ணன் கூறுவதைப் பாருங்கள். ''மருத்துவம், இசையில் ஆய்வு செய்ய செருமன் மொழி, மின்னியலுக்கு ஸ்வீடிஷ் மொழி, கலைக்கு சப்பானிய மொழி, சிற்பத்துக்கு இத்தாலிய மொழி,

அரசியலுக்கும் வணிகவியலுக்கும் ஆங்கில மொழி. மேலும் இவ்வாறு கற்பதும், வேலை தேடுவதும் ஆர்வமுடைய ஒரு சிலருக்கு மட்டுமே. அதனை அனைவருக்குமுரிய பொதுவிதி ஆக்கலாகாது.

9. ஆங்கிலத்திற்கு நான் எதிர்ப்புக் கூறவில்லை; என்னைத் தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள் என்று கூறும் டாக்டர் ஏசுதாசன், அதை ஒரு மொழிப்பாடமாக மட்டுமே கற்க வேண்டுமெனத் திரும்பத் திரும்ப வற்புறுத்துகின்றார்.

10. தமிழில் கலைச்சொல் இல்லை. நூலில்லை என்ற வாதங்களை அவர் ஏற்க வில்லை. ''தேவையை முதலில் உணடாக்குங்கள்; அனைத்தும் தொடர்ந்து உருவாகும்'' என்பது அவரது வாக்கு.

11. ஐரோப்பாவில் டென்மார்க்கு, நார்வே போலும் சிறிய நாடுகள் கூட தாய்மொழிக் கல்வியால் முன்னேறியிருபபதை இவர் சுட்டிக் காட்டுகிறார்.

12. தாய்மொழி வழிக் கல்வி தவிர, வேறு எந்த மொழிவழியிலும் கல்வி அமையவே கூடாது என்பதை இவர் மிகமிக அழுத்தமாக வற்புறுத்துகிறார். சுதந்திர இந்திய மொழிகள் எவ்வாறிருக்க வேண்டும்? கல்வி மொழியாகவும் ஆட்சி அந்தந்த மாநிலத்தில் விளங்குதலும் சுதந்திரமாய் பற்றுதலோடும் ஒருங்கிணைந்து வாழ்தலுமே சுதந்திர இந்திய மாநிலங்களின் குறிக்கோளாய் இருக்க வேண்டும். நம் மூளையில் இச் சீரிய சிந்தனைகள் ஏறுவது எக்காலம்?

டாக்டர் சவரிராயன் ஏசுதாசன் தொடங்கிய குறிக்கோள் கனவைத் தமிழக அரசும், கிறித்துவ சமயக் கல்வி நிறுவனங்களும் நிறைவேற்ற வேண்டும்.''

தமிழ் வழியில் கல்வி கற்பது எந்த அளவுக்குத் தேவை என்பதை ச. ஏசுதாசன் மிக அருமையாக நமக்கு உணர்த்தியிருக்கிறார். காசுக்காகக் 'கல்வி'யை வணிகமாக்குபவர்கள் இவற்றை எண்ணியாவது பார்ப்பார்களா! அல்லது ஏழைப் பெற்றோர்கள் கொண்டு வந்து குவித்த காசை மட்டுமே எண்ணிப் பார்ப்பார்களா?

''பணம், பதவி என்று ஆசைப்படுபவர்கள், கல்வி நிறுவனங்களை முற்றுகையிட்டு நாசப்படுத்துகின்றனர்'' என்று அவர் கொதிப்புடன் கூறியதையும் கவனிப்போம்.

மற்றொரு மறை தமிழண்ணல் ஒரு கட்டுரை எழுதினார். அதில், தமிழ் வழிக் கல்விக்காக அறிவுபூர்வமாக விவாதித்துள்ளார். இந்த உணர்ச்சியும் வேகமும்தான் இப்போது தேவை என்பதால் நீங்களும் பயன் பெறும் பொருட்டு அந்தக் கட்டுரையின் சில பகுதிகளைத் தந்துள்ளேன். (தினமணி 11.7.98)

''தமிழ்வழிக் கல்வியை வற்புறுத்துகிறவர்கள் ஆங்கில மொழி எதிர்ப்பாளர்கள் அல்லர். ஆங்கில மொழி வெறுப்போ, மறுப்போ இம்மியளவும் இல்லை. தமிழன் தன் கருத்தை ஒரு தேசியக் கருத்தரங்கில், ஓர் உலகப் பேரவையில் எடுத்துச் சொல்லும் வல்லமை பெற வேண்டும், ஆங்கில மொழியில் ஆழ்ந்த, தேர்ந்த புலமை பெற வேண்டுமென்பதில், அவர்கள் பிறரினும் கூடுதலான ஆர்வமுடையவர்களே.

தமிழ்வழிக் கல்வியை வற்புறுத்துகிறவர்களை ஆங்கிலம் அறியாதவர்கள் போலவும், தமிழனை உலக அளவில் முன்னேறவிடாமல் தடுப்பவர்கள் போலவும், கிணற்றுத் தவளைகள் என்றும் எண்ணிப் பேசி, இழிவுபடுத்துவது உண்மையுள்ளம் படைத்தவர்கள் நெஞ்சை நோகடிக்கிறது.

தமிழ்வழிக் கல்வியும் ஆங்கில மொழிக் கல்வியும் ஒன்றுக்கு ஒன்று முர்ண்பாடு ஆகவே ஆகாது. பாரதியார் பாடியது போல், இதை ஆயிரம் கோயில்களின் முன்னின்று 'சத்தியம்' செய்து கூறுவோம்.-

'கல்வி' என்பதுதான். என்ன? கல்வியாளர்கள் அனைவரும் சற்றே நிதானமாக, அமைதியாக, நடுவுநிலைமையோடு சிந்தித்தால் உணமை விளங்காமற் போகாது.

சின்னஞ்சிறு பிஞ்சு உளளங்கொண்ட மழலையர் பள்ளி முதலாகவே ஆங்கிலம் வேண்டுமென்பதா, ஆங்கிலப் பற்றுக்கு அறிகுறி? அல்லாதவர்கள் எல்லாம் ஆங்கிலப் பகையாகிவிடுவார்கள?

பிள்ளை கருவிலிருக்கும் காலம் முதல், ஓர் அயல் மொழிக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பது, ஒரு சுதந்திர நாட்டுக்கு அழகாகுமா?

ஆங்கிலத்தை மட்டுமே பயன்படும் மொழியாக, வருமானம் தரும் மொழியாக, உத்தியோகம் தரும் மொழியாக வைத்துக் கொண்டு 'மக்கள் எல்லோரும் ஆங்கிலத்தையே விரும்புகிறார்கள். நாங்கள் என்ன செய்வது' என்று ஓர் அரசு சொல்லலாமா? கல்வியாளர்கள், தாங்கள் பெறும் பட்டம் பதவி கருதியோ பிறவாறோ அரசுக்குத் தவறான வழிகாட்டலாமா?

மனிதனை அடையாளம் காட்டுவது, அவனுடைய பண்பாடு; அப் பண்பாட்டைத் தரவதும் காப்பதும் அவன் பேசும் மொழி! தனி மனிதன் என்றால முகவரி வேண்டுமே; அடையாளம் வேண்டுமே? இந்தக் கல்வியாளர்கள் தம் முகவரியை, அடையாளத்தை இழக்கச் சம்மதிப்பார்களா?

தமிழன் உலகளாவிய நிலையில் உயர வேண்டும்; ஒப்புக் கொள்கிறோம். தமிான் நோபல் பரிசும் பெறுபவனாக ஆக வேண்டும்; கரை கடந்த மகிழ்ச்சி நமக்கு! ஆனால் தன் மொழியை இழந்து விட்டு, தன்

பண்பாட்டை இழந்துவிட்டு இவற்றை அடைந்து பயன் என்ன? அடையத்தான் முடியுமா?

வங்கப் பெருங்கவிஞர் தாகூர் முதலில் எதையும் - கீதாஞ்சலியுட் பட வங்காளத்தில் எழுதியது ஏன்? பிறகு ஆங்கிலத்தில் படைத்து, அவர் நோபல் பரிசு பெறவில்லையா? இன்றைய 'சாந்தி நிகேதனை' இக் கல்வியாளர்கள் ஒருமுறை போய்ப் பார்க்கக் கூடாதா?

ஆங்கிலமொழிக்கு எந்த வகுப்பு முதல், எந்த அளவு, எவ்வெவ்வாறு இடம்தர வேண்டுமோ, அந்தப்படி தந்தாலே, உலக அரங்கில் நாம் ஆங்கில வல்லுநர்களாகிவிட முடியுமே?

தமிழ் வழியில் படிக்க வேண்டும்; தமிழ் வழியில் படித்தவர்க்கே தமிழால் ஆட்சி செய்யும் அரசு வேலை தர வேண்டும் என்பத எப்படி ஆங்கிலத்திற்கு மாறாகும்?

மழலையர் பள்ளி முதல் தமிழ் அறவே இல்லாமலும் அல்லது அரைகுறையாகவும் கற்றுத்தருவதால், தமிழ் என்ற வேர் அழுத்தமாகப் பற்றவில்லையே! தமிழ்ச் சொற்களே பழக்கமாகவில்லையே! ஒரு மொழியில் நல்ல புலமை பெற்றவனே, பிறிதொரு மொழியில் மிகச் சிறந்த வல்லுநனாக முடியும் என்பத சாதாரண உண்மையல்லவா? தாய்மொழியில் மிக வலுவான அடித்தளம் அமைத்துவிட்டு, அயல்மொழியைக் கற்றுத்தருக என்பது எவ்வாறு தவறாகும்?

மறைமலையடிகள் தாய்மொழியில் குறைவறக் கற்றிருந்ததால் அல்லவா, அவரது வடமொழி, ஆங்கிலக் கல்விகள் பயன்பட்டன? தாய்மொழி அறிவு இல்லாதிருந்தால், அவரது அறிவு நமக்கும் தமிழுக்கும் பயன்பட்டிருக்குமா?

காந்தியடிகள் பாரிஸ்டர் படிப்புப் படித்தவர். ஆங்கிலத்தில் நிகரற்ற புலமை படைத்தவர். ஆனால் அவரது தாய்மொழி அறிவன்றோ, அவர்தம் அறிவுடைமைக் கெல்லாம் அடித்தளமாயிருந்தது? இந்தியைப் பொது மொழி என்று வற்புறுத்திய அவர், தமது 'சத்திய சோதனையை' முதன்முதல் குஜராத்தியில் எழுதினாரே. அந்த அளவு தாய்மொழி அறிவும் பற்றும் இருந்ததால் அல்லவா, அவரால் உலக உத்தமராக முடிந்தது.

ஆங்கிலம் படிக்கலாம்; ஆயிரம் மொழிகளும் படிக்கலாம்! தாய் மொழியை விட்டுவிட்டா? என்பதுதான் நம் கேள்வி. தாய்மொழிப் பாடம் இன்றியே, ஒருவன் பட்டக்கல்வி வரை பெறலாமென்பது, ஒரு சுதந்திர நாட்டின் அடிமைச் சின்னமாகாதா?

ஒரு மாதத்திற்குள் முன்னாள் ஆங்கில நாளிதழில், 'தாய்மொழி வழிக் கல்வி' பற்றி எழுதிய கட்டுரை, நினைவுகூர வேண்டியது. தாய்மொழி வழிக் கல்விக்கு ராஜாஜி எடுத்த முயற்சிகளை அந்தக் கட்டுரை சுட்டிக்காட்டியது. தமது பட்டமளிப்பு விழா உரை முதலாக, அவர் தாய்மொழிவழிக் கல்வியை வற்புறுத்தியதை அக்கட்டுரை மேற்கோள் காட்டியது. ராஜாஜி இந்தியைப் புகுத்தினார் என்று கோபப்படும் நாம், சற்றே நிதானமாக, அவர் தாய்மொழிக் கல்வியை வற்புறுத்தியதையும் எண்ணிப் பார்க்கக் கூடாதா?

மருத்துவம், பொறியியல் உட்பட அரசுப் பணித் தேர்வுகள் அனைத்திலும் இந்தி இடம்பெற்றுக் கால் நூற்றாண்டுக்கு மேல் ஆகிறது. இவ்வாறு இந்தி எல்லாவகையிலும் தன்னைத் தகுதிப் படைத்தக் கொண்டே போகிறது. அந்த அளவு - குஜராத்தி, மராத்தி, வங்காளி போலத் தமிழும் தன்னைத் தகுதியாக்கிக் கொள்ளாவிட்டால் ஆங்கில முள்ள இடத்தில் இந்திதான் வந்து அமரும். இன்று பொறியியலில், தமிழ் வழிக்கு அனைத்திந்திய அளவிலான மேலாண்மையினர் இசைவு தர மறுப்பது அதற்காகத்தான். இந்தியப் பெருமொழிகள், தத்தமது மொழியை எவ்வாறு கல்வித்துறையில் அடிமுதல் முடிவரை பயன்படுத்துகின்றன என்பதை ஒரு குழு அமைத்துக் கண்டறியுங்கள். பிறகு நமக்கு ஏற்றபடி, தாய்மொழிக் கல்விக்கும் தாய்மொழிவழிக் கல்விக்கும் உரிய இடம் அளியுங்கள்!

நாற்பதாண்டுகளுக்கு முன்னால் தமிழ்ப் பேரறிஞர் கா. அப்பாத்துரையார் 'வங்கம் போல வளர்ப்பீர் தாய்மொழி' என்ற ஒரு முழக்க வாசகத்தை வெளியிட்டார். அது இன்றளவும் உண்மையாயிருக்கிறது. வங்காளி, குஜராத்தி, மராத்தி, கன்னடம், தெலுங்கு மொழியாளர்கள் இந்தியை எதிர்க்காமலே, தாய்மொழிக்கு உரிய இடம் அளித்து வருகின்றனர். அவர்கள் இந்திக்கு அடிமையாகிவிடவில்லை. நாம் வாயளவில் மட்டும் இந்தி எதிர்ப்பாளராக உள்ளோம்.

நம் மாணவர்களில் பெரும்பான்மையினர் வெளிநாட்டிற்குப் போவது இயலாது. வெளிநாடுகள் எல்லாவற்றிலும் ஆங்கிலமே பயன்படும் என்றும் தோன்றவில்லை. ரஷிய நாட்டிற்கு அம்மொழியறிவும் ஜப்பானுக்கு அந்த மொழியறிவும் மிகமிகத் தேவைப் படுகின்றன. அங்கு போகின்றவர்கள் அந்தந்த மொழிகளைப் பல மாதங்கள் கற்றுக் கொண்ட பிறகே அங்கு போக முடிகிறது.

அவரைப் பார்; இவரைப் பார் என்பதைவிட நம்மை நாமே பார்த்துக் கொள்வது நல்லது. நமக்கு ஆங்கில மொழியறிவு மிக மிக முக்கியமே. அதற்காக மழலையர் பள்ளி முதலே ஆங்கிலம் வேண்டுமென்பதில்லை. ஏழை

எளிய மக்களும் ஆங்கிலத்தை நாடக் காரணம், அதனால் பயனுண்டு; வாழ்வுண்டு என்பதாலே யாம்.

தமிழை வாழ்வு தரும் மொழியாக, வருமானம் தரும் மொழியாக, வேலைவாய்ப்புத் தரும் மொழியாக ஆக்கினாலன்றி அதன் மதிப்பு உயராது. அது இன்று இலக்கிய மொழியாகக் கூட வளரவில்லை. தமிழ் நூல்களை, நாவல்களை, கதைகளை வாசிக்கும் பழக்கம் மிகமிகக் குறைந்த வருகிறது.

நாம் இடும் கூக்குரல் எல்லாம் காட்டில் கூவிய ஓசையாய்ப் பயனின்றிக் கழிகின்றன. தமிழகத்தில் தமிழில்தான் முழுவதும் ஆட்சி நடக்க வேண்டுமென்றால், ஊன்றிய ஆழமான திறமைமிக்க தாய்மொழியறிவின்றி அது எவ்வாறு கைகூடும்?

நமது தேர்வாணையத் தேர்வுகள் எல்லாம், தமிழை ஆட்சி மொழியாக வெற்றிபெறச் செய்வதற்கு ஏற்ப மாற வேண்டாமா? மழலையர் பள்ளி முதல், தமிழில் அழுத்தமான புலமை பெற்றாலன்றி, ஆங்கில மொழியறிவு எவ்வாறு முழுமை பெறும்?

இதுவுமின்றி, அதுவுமின்றித் தமிழைக் கலப்படமாக்கவே இன்றைய கல்வி பயன்படும். இவை நாம் தொலைநோக்குடன் கூறுவன. நோய்நாடி நோய்முதல் நாடிக் கூறுவன. அடிப்படைச் சிக்கலான இதைத் திசை திருப்பி, அரசுக்குத் தவறான வழிகாட்டுபவர்கள், 'தம்மை அறியாது, தமிழுக்குக் கொடுமை செய்தவர்கள்' ஆவார்கள் அல்லவா?''

அவர் எழுப்பியுள்ள வினாக்களில் எந்தத் தவறும் இல்லை.

இதற்கிடையில் 'தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்' பற்றிப் பரவலாகப் பேச்சு எழுந்தது. அதிலும் மனைவர் வா.செ. கு. இதனைத் தொடர்ந்து வலியுறுத்தி வரலரானார். இந்த நிலையில் தமிழகத்தில் தொடக்கப்பள்ளிகளில் தமிழ் வழியில் அனைவரும் பயில வேண்டுமென்பதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த நிலையில்தான் தமிழண்ணல் 'எது முந்திச் செயத்தக்கது!' என்பதை குறிப்பிட்டுச் சில கருத்துகளைத் தெரிவித்துள்ளார். (தினமலர் : 11.9.98)

''எழுத்தை அறிவித்தவன் இறைவனாகும். நம் தமிழகத்தில் இன்று தொர்டடிற்பிள்ளை நடக்கத் தெரிந்ததும், பள்ளிக்கு அனுப்பப்படுகிறது. அங்கு கி, ஙி,சி,ஞி யும் ஒன், டூ, த்ரீயும் தான் தொடக்கப் பாடம். பிற்பாடு அரைகுறையாக வேனும் தமிழ் எழுத்தைக் கற்பிக்காத, கற்பிப்பதை இழிவென்று கருதுகிற, தெரியாத்தனமாகத் தமிழ் எழுத்தையோ, சொல்லையோ கூறிவிட்டால் தண்டிக்கிற பள்ளிகளே இன்று மிகச் சிறந்த

பள்ளிகள். நூற்றுக்கு எண்பது பள்ளிகள் இதே நிலையினவாகும். இது கிராமங்களிலும் ஊடுருவியுள்ளது.

பத்தாம் வகுப்புப் பிள்ளையைத் தமிழில் பத்து வரி எழுதச் சொல்லுங்கள். அதில் இருபத பிழைகள் காணப்படும். குறில் நெடில் தெரியாது. ழகர, ளகர, லகரம் தெரியாது. அவற்றை வேறுபடுத்தி உச்சரிக்க வராது. நமது தூர்தர்சன் அறிவிப்பாளரே, ''இந்நிகல்ச்சியை வளங்கியவர்கள்'' என்று தமிழில் பெரிய கல்லைத் தூக்கிஅடிக்கடி போடுகிறார். இதிலிருந்து தமிழ் தப்பிப் பிழைக்குமா என்று பெருங்கவலையாக இருக்கிறது. நெஞ்சம் நெகிழ்கிறது. உண்மை உள்ளம் படைத்தவர்களுக்கு கண்ணீர் அரும்புகிறது.

பேரறிஞர்களையும் அரசையும் தாள்பணிந்து கேட்டுக் கொள்கிறோம். முப்பது நாற்பது ஆண்டுகளாகப் பள்ளி முதல் கல்லூரி, பல்கலைக் கழகம் வரை தமிழ் கற்பித்த தமிழாசிரியர்களையும், தமிழையும் சிறிதேனும் மதியுங்கள்! அவர்கள் நாட்பட்ட அனுபவத்தால் சொல்லும் கருத்துக்களுக்குச் செவிசாயுங்கள்! சத்தியமாய்ச் சொல்கிறோம். இன்று நம் சிறார்களில் தொண்ணூறு சதவீதம் பேருக்குத் தமிழ் எழுத்தே தெரியாது; அல்லது அரைகுறையாகத் தெரியும்; எந்தவீட்டிலும் ஒரு பத்த வயதுச் சிறாரிடம் தமிழில் தொலைபேசி எண்ணைச் சொல்லிப் பாருங்கள், பரக்கப்பரக்க விழிப்பது தெரியும். கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கே பெரும்பாலும் தெரியாது. இதனால் மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சியடைந்த பிறகும், தமிழ் ''எழுத்தறிவில்லா''த் தமிழ் படித்தவர்களே உருவாக்கி வருகிறோம்!

'மெல்லத் தமிழினிச் சாகும்' என்று பாரதி பாடவில்லை. யாரோ ஒரு பேதை உரைத்தானாம். 'புத்தம் புதிய கலைகைள் மெத்த வளருது மேற்கே, அந்த மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை. அதனால் மெல்லத் தமிழ் இனிச்சாகும்' என்று அந்தப் பேதை உரைத்தானாம். தமிழ்த் தாயே பேசுவதாக அப்பாடல் உளது. அந்தப் பேதை, அந்த வார்த்தையைச் சொல்லும்போது நெஞ்சம் பதைக்கிறதாம்!

'இன்று ஒரு சொல்லினைக் கேட்டேன் - இனி
ஏது செய்வேன்? எனது ஆருயிர் மக்காள்!
கொன்றிடல் போலொரு வார்த்தை - இங்கு
கூறத் தகாதவன் கூறினின் கண்டீர்!

புத்தம் புதிய கலைகள் மேலை நாட்டில் வளர்வதால் அதைச் சொல்லும் திறமை தமிழ்மொழிக்கு இல்லை என்பதாகக் கருதி, அந்த மேற்கு மொரிகளே இனிப் புவிமிசை ஓங்கும், மெல்லத் தமிழினிச்சாகும் என்று அவன் பிதற்றினானாம்.

தமிழ்த்தாய் இதைக் கேட்டுப் பதைபதைத்தச் சொல்வதாகப் பாரதியார் பாடுகிறார்.

என்றந்தப் பேதை உரைத்தான் - ஆ!
இந்த வசை எனக்கு எய்திடலாமோ?
சென்றிடுவீர் எட்டுத் திக்கும் கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்

தந்தை அருள்வலியாலும் - இன்று
சார்ந்த புலவர் தவவலியாலும்
இந்தப் பெரும்பழி தீரும் - புகழ்
ஏறிப் புவிமிசை என்றும் இருப்பேன்

தமிழ்த்தாய் வாக்கில், பாரதி சொன்னபடி 'பழிதீரும்; தமிழ்த்தாய் என்றும் இருப்பாள்' என்பதே உறுதி. தமிழர்களாகிய நாம் ஒரு பாடலையோ, நூலையோ, முழுமையாகப் பார்ப்பதே இல்லை. மேலும் ஒருவர் சொல்லி விட்டால் போதும். எல்லோரும் கண்ணை மூடிக்கொண்டு அதே தொடரை ஒப்பிப்பதே பழக்கம். நாமும் புத்தகத்தை எடுத்து அப்பாடலைப் பார்த்துவிட்டுச் சொல்வோம் என்ற பழக்கமே இல்லை. இதனால் மேடை தோறும் 'மெல்லத் தமிழ் இனிச்சாகும் எனப் பாரதி பாடிவிட்டதுபோல், தொனிக்குமாறு பலர் பேசுவதைக் கேட்கும்போது நெஞ்சம் பதைக்கிறது. சிலர் இந்த நிலை வரவேண்டுமென்று உள்ளூர எண்ணுகிறார்களோ என்றும் உள்ளம் நோகிறது. இச் சூழலில்தான் தமிழகம் மட்டிமன்றி தமிழ் வழங்கும் தேயமெல்லாம் தமிழ் எழுத்தே தெரியாத மக்கள் கோடிக்கணக்கில் இருக்கும் போது இன்னும் ஒரு எழுத்துச் சீர்திருத்தம் இப்போது தேவையா என்ற வினா எழுகிறது.

இன்று கல்வியாளர்கள் அனைவரும் மழலையர் பள்ளி, தொடக்கப் பள்ளி, இறுதி வகுப்புப் பள்ளிகளில் தமிழின் நிலைபற்றியே முதற்கவனமும் முழுக்கவனமும் செலுத்த வேண்டும். சுதந்திரம் பெற்ற சூழலில், ராஜாஜி, அவினாசிலிங்கனார், சி.சுப்பிரமணியம் போல்வாரால் பள்ளிப் படிப்பு முழுவதும் தமிழ்வழிக் கல்வியாக மாறியது. இன்று அரசுப் பள்ளிகள், அரசுசார் மாநகராட்சிப் பள்ளிகள் போல்வன பெரும்பாலும் சரிவர இயங்காததால், தனியார் நடத்தும் பள்ளிகளிலேயே திறமையுள்ள, வசதியுள்ள பிள்ளைகள் எல்லாம் பெரும் செலவில் சேர்க்கப்படுகின்றனர். அங்கு இந்தி, பிரெஞ்சு, சம்ஸ்கிருதம் என எடுத்துப் படித்துத் தமிழை ஒரு பாடமாகக்கூடப் படிக்காத நிலை இன்னும் நீடிக்கிறது. இவற்றையெல்லாம் மாற்ற அல்லவா இப்போது திட்டமிட வேண்டும்; செயற்பட வேண்டும். தமிழ் எழுத்தறிவே இல்லாமல் தமிழ்க் குழந்தைகளை வளரவிட்டுவிட்டு, எழுத்துச் சீரமைப்புப் பற்றிப் பேசுவது

தகுமா? குழியிலே விழுந்து எழுந்திருக்க முடியாமல் தவிப்பவனுக்குக் கைகொடுக்காமல், ஏறெடுத்தும் பாராமல் அவன் போட்டிருக்கும் சட்டை பொருத்தமாக இல்லை; இந்த அளவில் இந்த நிறச்சட்டை போட்டால் நன்றாக இருக்கும் என்று விவாதிப்பது 'அறிவியல்' முறை ஆகுமா?

தமிழகத்தில் எதிர்க்கட்சிகள் நாளும் பெருகி வருகின்றன. ஒரு கட்சியாவது, தங்கள் வீட்டிற்குள் - தங்கள் பேரன் பேத்திகள்-தங்கள் எதிர்வீட்டில், தெருவில், ஊரில் தமிழைப் புறக்கணிக்கும் பழக்கமும் பள்ளிகளும் பெருகி வருவதை நேரே பார்த்துக் கொண்டிருந்தும் பேசாமல் இருக்கலாமா? எதற்கெல்லாமோ பேரணி, மறியல் நடத்துபவர்கள் இதில் அமைதி காப்பது ஏன்? தமிழ்த்தாயிடம் பணப்பெட்டியும் வாக்குவங்கியும் இருந்தால் இப்படி மௌனம் சாதிப்பார்களா? சாதிக்காகப் பேரணி நடத்துபவர்கள், தமிழுக்காக ஒரு பேரணி நடத்தினால் ஆகாதா? தமிழ் இவர்களுக்கு உரிமை இல்லையா? தமிழைத் தாய் என்று இவர்கள் சொல்லிக் கொள்ள என்ன தகுதி இருக்கிறது?

முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தலைவர்கள் சொல்வது போல், வளரும் பிள்ளைகளிடம் 'தமிழ் வாசிப்பு'க் குறைந்து வருகிறது. தமிழ்க் கதை நூல்கள்கூட, இன்னும் இருபதாண்டுகளில் குப்பைத் தொட்டியில் போடப்படக்கூடும். தமிழில் பேசினால் அன்று விளங்கிக் கொள்வோர் மிக அருகிப் போதல் கூடும். இந்த அரசியல் தலைவர்கள் அன்று ஆங்கிலத்தில் பேசி - அல்லது ஆங்கிலம் கலந்த கொச்சைத் தமிழில் பேசி வாக்குச் சேகரிப்பார்களா?

வருமுன் காப்பதல்லவா அறிவுடைமை? அதனால்தான் மீண்டும் மீண்டும் சொல்கிறோம். நம் கல்வியாளரும் அரசியலாரும் முதலில் கருத்துச் செலுத்த வேண்டியது மழலையர் பள்ளி முதல் பள்ளிகள் அனைத்திலும் தமிழைக் கட்டாயப் பாடம் ஆக்குவது - தமிழையே பாடமொழி ஆக்குவது - தமிழ்க் குழந்தைகள் அனைத்தையும் உலகளாவிய நிலையில் தமிழ் எழுத்தறிவு உடையவர்களாக்குவது, தமிழ் எண்ணறிவு உடையவர்களாக்குவது, தமிழைத் திருத்தமாக உச்சரிக்கும் பழக்கமுடையவர்களாக ஆக்குவது; தமிழில் அடிப்படை இலக்கண அறிவுடையவர்களாக்குவது; இதுவே இப்பொழுது நம் முதற்கடமை; முழுக்கடமை.

தமிழ் எழுத்தைச் சீர்திருத்தாததால்தான் தமிழ்க் கல்வி வளரவில்லை என்று சொல்ல முடியாது; தமிழ் எழுத்தைச் சீரமைக்காததால்தான் தமிழில் அறிவியல் வளரிவில்லை என்று கூறுதலும் இயலாது.

ஆங்கிலத்தில் பட்டம் பதவி செல்வம் செல்வாக்கு எல்லாம் கிடைக்கும் என்ற மோகமே தமிழை அறவே புறக்கணிக்கத் தூண்டுகிறது.

தமிழை உயர்கல்வி கற்கும் மொழியாக ஆக்காததால்தான், தமிழில் அறிவியல் வளராமல் தடுமாறுகிறது. இதைக் காரண காரியத்தோடு விளக்கிக் கூறலாம்.

இப்பொழுது எகர, ஊகார வரிசைகளே பலவாறுள்ளன. ஆனால் இவை இடச்சுருக்கமுள்ளவை என்றும், கணினி வந்த பிற்பாடு இடச்சுருக்கமே முதன்மைப் படுகிறது என்றும் கூறப்படும் கருத்துக்கள் சிந்தித்தற்குரியன.

நாம் அன்போடும் பரிவோடும் அனைவரிடமும் வேண்டுவது, தமிழைக் குழந்தைகள் படிக்க வைத்து, தமிழ் எழுத்தறிவை உண்டாக்குவதுதான்! "அவளே இல்லையாம்; பிள்ளை ஐந்தாறாம்" என்பார்கள். முதலில் தமிழைக் காப்பாற்றுவோம்; பிறகு சீர்திருத்துவோம்.''

''முதலில் தமிழைக் காப்பாற்றுவோம்; பிறகு சீர்திருத்துவோம்'' என்பது அழுத்தம் திருத்தமான கருத்து.

இந்தக் கருத்தில் முற்றிலும் உடன்பாடுடையவன் நான். எனவே தமிர் எழுத்துச் சீர்திருத்தம் பற்றி தமிழ் வழக்காடு மன்றத்தில் தருக்கம் நிகழ்ந்தபோதும் வா.செ.கு. அதனைத் தொடர்ந்து வலியுறுத்தியபோதும் தலைமை ஏற்றிருந்த நான் பல கஷ்டங்களில் அவரது கருத்துக்கு உடனே ஒரு முடிவு செய்யமுடியாமல், 'எண்ணிச் செய்வோம்' என்றே தள்ளிப் போட நேர்ந்தது. கலைஞர், பேராசிரியர் கருத்தும் இதுதான் என்பதை நன்கு அறிந்தவன் நான்.

தமிழண்ணல் கருத்து இதை உரக்கச் சொல்கிறது.

தொழிலதிபர் மகாலிங்கம் திருச்சியில் பேசும்போது சில கருத்துகளைக் குறிப்பிட்டார். அவர் கூறுகிறார் (தினமலர் 20.10.98)

''சுதந்திர இந்தியாவில் பள்ளிகள் எப்படி இருக்கவேண்டும் என்று 1937ல் கிருபளானி, ஜாகீர் உசேன் ஆகியோர் முடிவு செய்தனர். ஆரம்பக்கல்வியைத் தாய்மொழியிலும், மற்றதைத் தேசிய மொழியிலும் படிக்கவேண்டும் என்று குறிப்பிட்டனர்.

தமிழை படிக்கவில்லை எற்ால் நம் குழந்தைகள் பாரம்பரியம் இழந்தவர்களாக போய்விடுவார்கள். நாட்டின் கலாச்சாரம் - பாரம்பரியமான கருத்துக்கள், தமிழில் உள்ள இலக்கியங்கள், திருப்புகழ், பிரபஞ்சங்கள், சைவ சித்தாந்தம் ஆகியவற்றில்தான் உள்ளன'' என்று கூறி ''பள்ளிகளில் தமிழ் கட்டாயப் பாடம் ஆக்கவேண்டும்'' என்று வலியுறுத்தியுள்ளார். இதில் கிருபளானி, ஜாகீர் உசேன் ஆகியோர்களின் கருத்துகளையும் தெரிந்து கொள்கிறோம்.

சிற்பி பாலசுப்பிரமணியம் சில நல்ல கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார். அவை (தினமலர் 15.12.98)

''நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்திடுதல் நன்றோ?'' என்ற மகாகவியின் கேள்விக்கு விடை தேடிக் கொண்டிருக்கின்ற தமிழர்கள் நாம்.

அண்மையில் தமிழ் மொழியைக் கல்வி மொழியாக்குகின்ற திசைநோக்கித் தமிழக அரசு அடியெடுத்து வைத்திருப்பது பாராட்டுக்குரிய நல்ல அறிகுறியாகும்.

தாய்த் தமிழ்ப் பள்ளிகளை உருவாக்கிப் பிடிவாதமாய் நடத்தி வரும் இயக்கங்களுக்கு எல்லா உதவிகளையும், ஒத்துழைப்பையும் தமிழ் மக்கள் தரவேண்டிய பொன்னான தருணம் இது.

எட்டாம் வகுப்பு வரை (அறிவியல் தவிர பிற) பாடங்கள் தமிழில் நடத்தப் பெறவேண்டும் என்ற கொள்கை அறிவிப்பு மிகமிகக் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இந்தக் கொள்கையை அடுத்த ஆண்டே முழுமையாகச் செயல்படுத்துவதற்கு ஏற்ற வகையில் ஆசிரியர்களுக்குப் புத்தொளிப் பயிற்சியைக் கல்வித் துறை ஏற்பாடு செய்யவேண்டும். இப் பயிற்சியின் போது கலைச்சொற்கள் பட்டியல் ஒன்றும் உருவாக்கப்பெற்று, அந்த அந்தப் பாடங்களுக்கு உரிய கலைச்சொற்களை வரன் முறைப்படுத்துதல் இன்றியமையாதது.

''யானை வரும் பின்ன, மணி ஓசை வரும் முன்னே'' என்பதுபோல், மாபெரும் மாற்றங்களுக்கான ஒத்திகையே இன்றைய அறிவிப்புகள் என்ற கருத்து, அலுவலர்களுக்குள் ஆழமாக ஊன்றப்படவேண்டும்.

வரும் கல்வியாண்டு முதல் (1999-2000) தமிழ்வழிப் பள்ளிகளுக்கே அனுமதி என்ற மற்றொரு புரட்சி அறிவிப்பையும் அரசு வெளியிட்டுள்ளது. இதன் குறிப்புப் பொருள் ஏற்கெனவே ஆங்கில வழிக் கல்வியில் ஈடுபட்டுள்ள பள்ளிகளிலும் மாற்றத்தின் விதைகளைத் தூவுகிற வகையில் அமைகிறத. அகர முதல் னகர வரை, இந்த அரசு தமிழ்வழிக் கல்விக்கெனத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டிருக்கிறது என்ற உணர்வு பரவப் பரவ ஆங்கிலவழிக் கல்வி ஆர்வம் படிப்படியாகக் குறைய வாய்ப்பு உண்டாகும்.

அரசு அங்கீகாரம் கிடைக்கும் என்ற நம்பிக்கையோட செயல்பட்டுக் கொண்டிருக்கும் (அங்கீகாரம் பெறாத) பள்ளிகளைப் பொருத்த வரையில், அரசு கடுமையாக நடந்துகொள்வது வரவேற்புக்குரியது. இனி அவை தமிழ்வழிக் கல்விக்கு இடம் பெயர்தலே அவற்றின் வாழ்வுக்கு வழி என்ற நிலை உருவாக்கப்படுதல் நல்லது.

தமிழ் நாட்டுப் பெற்றோர்கள் பலருக்கு ஆங்கிலவழிப் பள்ளிகளின் மீது மாறாத காதலும், தீராத மோகமும் நிலவுகின்றன. அவர்களின் மனப்பாங்குக்குக் காரணங்கள் சில உண்டு. அவற்றை அலட்சியப்படுத்த முடியாது. பிள்ளைகளின் எதிர்காலமும் வேலைவாய்ப்பும், ஆங்கிலத்தில் கல்வி என்ற நடைமுறை மாறினால் அழிந்து போகும் என்பது அவர்களது கவலை. இந்தியாவின் பிற மாநிலங்களில் அல்லது மத்திய அரசில் பணிபுரியும் வாய்ப்புக்குத் தடைகள் நேரும் என்பது அவர்களின் இன்னொரு கவலை. 'பூலோக சொர்க்க'மான அமெரிக்காவுக்குப் போகும் வாசல் அடைபட்டுப் போகுமோ என்பது அடுத்த கவலை. இந்த எண்ணங்கள் ஆங்கிலவழிப் போதனைக்கு ஊக்கம் தருகின்ற அரசின் கொள்கை காரணமாகவே வளர்ந்திருக்கின்றன என்பது தெளிவு. ஆயினும், இந்தக் கவலைகளில நியாயம் உண்டு என்பதை மறுக்க முடியாது.

இந்த ஆதங்கத்தையும், கவலையையும் நீக்குவதற்கு இரு வகை முயற்சிகளை மேற்கொள்ளுதல் அவசியம். முதலாவதாக, தமிழ் வழிக் கற்றோர்தான், தன் செல்லப் பிள்ளைகள் என்ற கருத்துருவாக்கத்துக்குத் தமிழக அரசு இடம் நல்க வேண்டும். வேலை வாய்ப்பில் தனிச் சலுகை, தொற்கல்வி அனுமதியில் வாய்ப்புச் சலுகை (Favoured status), பிரெஞ்சு முதலான மொழி படித்தவர்களைக் காட்டிலும், மாநில முதல் மொழி கற்றோருக்குச் சிறப்பிடம் ஆகியவற்றைச் சட்டச் சிக்கல் இல்லாத வகையில் தமிழ்வழிக் கல்வியாளருக்கு வழங்க முன்வர வேண்டும்.

இரண்டாவதாக, அறிஞர்களின் முழுமையான ஆதரவு திரட்டப்படுதல் வேண்டும். தமிழறிஞர்கள் ஆதரிக்கவே செய்வர். அதனால் விளையும் பயனைவிட, பிற துறை வல்லுநர்கள், மேதைகளின் ஆதரவு மிகுதியான பயனை நல்கும். அறிவியல், பொறியியல் முதலிய பல்துறை விற்பன்னர்கள், துணைவேந்தர்கள், கல்வியாளர்கள் தமிழ்வழிக் கல்வியின் அவசியத்தை எடுத்துரைக்கும்போது, பொதுமக்களின் மனமாற்றம் விரைந்த சாத்தியமாகும்.

தொலை மருத்துவம் (Tele-Medicine) போன்ற புதிய, கற்பனைக்கும் எட்டாத அறிவியல் தொழில் நுட்ப வெற்றிகளை, மனித சமுதாயம் அறுவடை செய்யவிருக்கும் காலம் இது. இந்த ஒட்டப் பந்தயத்தில் தன்னைத் தகுதிப்படுத்திக் கொள்ளும் வாய்ப்பை நம் தாய்மொழி எக் காரணத்தாலும் தவறவிட இடம் தரலாகாது.

இதோ ஒரு நல்ல தொடக்கம் நிகர்ந்திருக்கிறது. இந்த வாய்ப்பை நழுவவிடலாகாது. தடைக் கற்கள் நிச்சயம் வரும். ஆனால் எந்தப் புதுமையையும் வாங்கிக் கொள்ளவும், தாங்கிக் கொள்ளவும் தமிழ் மொழிக்குத் தடந் தோள்கள் உண்டு.''

இவற்றுள் சிற்பியின் கருத்துகள் எல்லாமே நமக்கு உடன்பாடானவை தாம். 'இந்த வாய்ப்பை நழுவவிடலாகாது' என்கிறார் அவர்.

வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டோமா? நழுவ விட்டோமா? தமிழக அரசு எடுத்த முடிவு இன்று டில்லி பாதுகாக்களின் கல்லறை அருகில் காத்திருக்கிறதே! உயிருடன் மீளுமா? டில்லியிலேயே அதைப் புதைக்க நேருமா?

எண்ணி முடிவு செய்யுங்கள்.

இந்தியக் குழந்தைகள் மருத்துவர் சங்கத்தின் சார்பில் 'மழலை 97 ஆய்வரங்கம்' ஈரோட்டில் நடைபெற்றது. அவர்கள் பரிந்தரையே இதுதான்.

''மழலையர் கல்வி தாய்மொழியில் போதிக்க ஒத்துழைப்புத் தரவேண்டும்'' என்று பெற்றோர்களுக்கு வேண்டுகோள் வைக்கின்றனர்.

தமிழ அரசு தமிழ் வழிக் கல்விக்கான முயற்சிகளை மேற்கொண்டபோது மருத்துவர் இரா. விருதகிரி முதல்வர்க்கும் எங்களுக்கும் ஒரு மடல் எழுதினார். அதில்,

''ஆரம்பக் கல்வி தாய்மொழியின் வாயிலாகத் தான் பயிற்றுவிக்கப்பட வேண்டும் என்று தமிழக அரசு எடுத்துள்ள முடிவிற்கு இந்திய குழந்தைகள் மருத்துவ கழகத்தின் சார்பில் எங்கள் பாராட்டினை தெரிவித்துக் கொள்கிறோம்.

இதனால் மழலையர் மீது சுமத்தப்பட்டுள்ள அவசியமற்ற அன்னிய மொழிச் சுமை குறையும்.

மேலும், மழலையரின் புத்தகச் சுமையையும் குறைப்பது நன்று. புத்தகச் சுமையை குறைக்குமாறு உங்களிடம் முன்பு (ஆகஸ்ட்டு 7,8,9 Pedicon '98 Conference) விண்ணப்பித்துள்ளோம். அதன் ஆங்கில நகல் இத்துடன் இணைக்கப் பட்டுள்ளது.

குழந்தைகளின் நலன் கருதி தாங்கள் எடுக்கின்ற ஆக்கபூர்வமான அனைத்து முடிவுகளுக்கும், இந்திய குழந்தைகள் மருத்துவ கழகம் முழு ஆதரவினை அளிக்கும் என்பதை தமிழக பிரிவின் தலைமை பொறுப்பினை வகிக்கும் நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

இவற்றையெல்லாம் கணக்கில் கொள்ளாமல்தான் உயர்நீதி மன்றம் தீர்ப்பளித்துள்ளது என்பதை நினைவிற் கொள்ளுங்கள்.

'காந்தளகம்' சென்னையில் சிறந்த நூல்களை வெளியிடும் அமைப்பு. ஈழத்தமிழர்களின் உணர்வோடு தமிழுக்கு உழைக்கும் அமைப்பு இது. அதன் நிறுவனர் சச்சிதானந்தம் எழுதிய மடல் இது:

''வகுப்பு 1-5 வரை தமிழ் உட்பட்ட தாய்மொழிக் கல்விக்கு அரசாணை பிறப்பித்த தமிழக அரசின் கொள்கை போற்றுதற்குரியது.

இம்முயற்சியில் அவர்களின் பங்களிப்பும் அயரா உழைப்பும் வரலாற்றுச் சிறப்புடையது.

உறுதியுடன் நீங்கள் இருந்ததால் இக்கொள்கை அரசாணை வடிவம் பெற்றது.

உளம் நிறைந்த பாராட்டுகள். தொடர்ந்து 6ஆம் வகுப்புக்கும் அதற்கு மேலும் உங்கள் முயற்சியாலும் உறுதியாலும் தமிழ் மாணவர் தமிழிலேயேயும் ஏனையோர் தத்தம் தாய்மொழியிலும் பயிலும் காலம் வரும்.

தமிழ்த்தாயின் தவப்புதல்வர்களுள் நீங்களும் ஒருவர்'' என்கிறார் சச்சிதானந்தம்

கல்வியாளர் எஸ்.எஸ். இராஜகோபாலன் 'தினமணி'யில் ஒரு கட்டுரை எழுதியிருந்தார் (14.5.99). விளக்கம் ஏதும் நான் தாராமல், அவரது கருத்துகளை அப்படியே தந்துள்ளேன்.

''ஆங்கில ஆட்சியின்போது, தேசிய உணர்வு உள்ளவர்கள் தாய்மொழிவழிப் பள்ளிகள் நடத்தி வந்தனர். விடுதலைப் போரின் ஒரு பகுதியாகத் தேசியக் கல்வியும் கருதப்பட்டது. லாலா லஜபதி ராய், கோகலே, திலகர், தாகூர், பாரதியார், திரு.வி.க., விவேகானந்தர் போன்ற பலரும் தாய்மொழிவழிக் கல்வியே ஒர மனிதனின் சிந்தனை ஆற்றலை வளர்க்கும் எனவும் மொழி உணர்வே நாட்டுப் பற்றுக்கு வித்திடும் என்றும் தேசியக் கல்வியின் அடிப்படையாகத் தாய்மொழிவழிக் கல்வியை வற்புறுத்தினர். ஒரு முன்னோடியாகத் திகழ்ந்த பரோடா சமஸ்தான அரசர் சாயாஜி ராவ், தமது எல்லைக்கு உட்பட்ட எல்லாப் பள்ளிகளிலும் குஜராத்தி மொழி வழிக்கல்வி அளிக்க ஆணையிட்டார். இன்றும் கல்லூரிக் கல்விகூட குஜராத்தி மொழியில் பெறக் கூடிய நிலையைக் காணலாம்.

1937-ம் ஆண்டில் ராஜாஜி முதலமைச்சராகவும் யாகூப் உசைன் கல்வி அமைச்சராகவும் இருந்தபோது, தாய் மொழி அல்லது வட்டார மொழிவழியே பள்ளிக் கல்வி அளிக்கப்பட ஆணை பிறப்பிக்கப்பட்டது. 1947-ம் ஆண்டில் கல்வி அமைச்சர் தி.சு. அவிநாசிலிங்கம் வட்டார மொழியை முதல்மொழி ஆக்கியும் ஆங்கிலவழி வகுப்புகளில் சேர்க்கைக்குக்

கட்டுப்பாடுகளை விதித்தும் ஒரு புதிய கல்விக் கொள்கையைச் செயல்படுத்தினார்.

தங்கள் மேலாண்மையில் உள்ள தொடக்க, உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளையும் உதவி பெறும் பள்ளிகளையும் நன்முறையில் இயக்கிடத் தவறி ஆங்கிலவழிப் பள்ளிகளின் வளர்ச்சிக்கு மறைமுகமாக அரசும் கல்வித்துறையும் உதவியது மட்டுமின்றி இன்றைய தமிழ்வழிக் கல்வி சீரழிவுக்கு காரணமாக அமைந்தது.

பெற்றோருக்கும் சிறுபான்மையினருக்கும் அரசியல் சட்டம் அளிக்காத உரிமைகளை அவர்களுக்கு உள்ள உரிமைகளாக அரசு கருதுவது வேடிக்கை. பாடத் திட்டங்கள் உருவாக்குவது அரசின் முழுப் பொறுப்பாகும். என்னென்ன பாடங்கள் கற்பிக்கப்படவேண்டும் என்று அரசுதான் முடிவு செய்கின்றது. இருமொழிக் கொள்கையும் அரசின் முடிவே தவிர பெற்றோர்களின் விருப்பங்களைக் கொண்டு உருவாக்கப்பட்டது அல்ல. இதுபோலவே, தாய்மொழி அல்லது வட்டார மொழி வழியே கல்வி அளிக்கப்படுவதை எப் பெற்றோரும் மறுக்க உரிமையில்லை. ஆங்கில வழியிலேதான் கல்வி கோரவும் இயலாது. அந்த உரிமை இருப்பதாகக் கருதினால் விளையாட்டு போன்றவைப் பாடத் திட்டத்தில் வேண்டாமென்றும் ஏன் எங்கள் பையனுக்கு கணக்கு கூட வேண்டாமென்றும் பொருளாதாரம் போன்ற பாடங்களை 6-ம் வகுப்பிலேயே கற்பிக்க வேண்டும் என்றும் - இவற்றைப் போல கேலிக்குரிய பல கோரிக்கைகளுக்கும் இடமளிக்கும். உலக அளவில் காணப்படாத ஒரு புதுமையை நமது தமிழ்நாட்டிலேதான் உருவாக்கியுள்ளோம். பெற்றோரது உரிமை தமது மக்கட்கு சீரிய நல்ல கல்வி அளிக்கப்படவேண்டும் என்பதுதான். அதனை அளிக்க வேண்டிய கடமை அரசினுடையது.

ஜமீன்தாரி ஒழிப்பு, மன்னர் மானியம் ஒழிப்பு, விவசாயக் கடன் ரத்து, இன்சூரன்ஸ் மற்றும் வங்கிகள் அரசுகடமையாக்கல் ஆகியவை அரசியல் உறுதி காரணமாக செயல்படுத்தப்பட்டன. அதே உறுதியைத் தமிழ்வழிக் கல்விக்கும் தமிழக அரசு காட்டவேண்டும்.

ஆங்கில வழி வகுப்புகளுக்கோ ஆங்கில வழிப் பள்ளிகளுக்கோ புதியதாக அனுமதி வழங்கக்கூடாது

தனிப் படிப்பு சேர்க்கையை முழுமையாகத்தடை செய்ய வேண்டும். அங்கீகாரம் பெறாத பள்ளிகள் வளர்ச்சிக்கு இதுவே உதவுகின்றது. (தனிப்படிப்பு பற்றிய அவரது கருத்தைக் கவனியுங்கள்)

சிற்பி பாலசுப்பிரமணியம் 'தினமணி'யில் எழுதிய கட்டுரை (9.4.99) அவரது கருத்துகள்.

''காட்டுத் தீயைப்போல் கொழுந்து விட்டு வளர்கிற ஆங்கிலவழிப் பள்ளிகளின் எண்ணிக்கை கொஞ்சம் நஞ்சம் மிச்சம் மீதி இருக்கிற குழந்தைகளின் தமிழ்மொழிப் பழக்கத்தைப் பூண்டோடு எரித்து அழித்துத் துடைத்து வருகிறது.

தாய்மொழியின் எளிய சொற்களை அறிமுகம் செய்து கொள்கிற இளமைப் பருவத்தில் - பள்ளி வயதில் மாணவர்கள் சொந்த மொழியிலிருந்து வெகுவேகமாய் விலகி வருகின்றனர்.

ஆனால் தாய்த் தமிழைப் பிழையின்றி உச்சரிக்காவிட்டால் ஒரு பேய்த் தமிழ் உருவாகிவிடும் என்ற அச்சம் இதழியலாரிடமோ, ஆசிரியச் சமூகத்திடமோ, கல்வியாளர்களிடமோ, எழுத்தாளர்களிடமோ எழாதது வியப்பாக இருக்கிறது; வேதனை தருகிறது.

தங்கள் மாநில மொழி அறியாதவர்கள் மைய அரசுப் பணிக்குக் கூட வரக்கூடாது என்ற கர்நாடகத்து மக்களின் போக்கைப் பார்க்கவில்லையா? பேருந்துப் பயணச் சீட்டு முதல் நிறுவனங்களின் கடிதம் முகவரிவரை தங்கள் தாய் மொழியிலேயே வெளியிடுகிற பிற மாநிலத்தாரின் மொழிப் பற்றைக் குறித்தும், விலைப் பட்டியலில் கூடத் தங்கள் மொழி சார்ந்த எண்களையே எழுதும் வடமாநிலத்தார் இயல்பினைக் குறித்தும் இந்தக் கட்டுரையாளர்களுக்குத் தெரியாதா?

மிளகாய் அரைப்பதற்கு வாய்த்த தலைகள் தமிழ்நாட்டில்தான் இருக்கின்றன என்பதால்தான் இந்த ஆங்கில ஆதரவுப் பிரசாரம் இங்கு செழிப்பாக நடைபெறுகிறது.''

(இங்கு இவ்வளவு வேகமாகக் கருத்துகள் வெடிக்கின்றன. ஆனால் பள்ளிக் கல்வித்துறையிலோ வேகம் வேகமாக மெட்ரிகுலேசன் பள்ளிகட்கு அனுமதி வழங்கப்படுகிறது - கவனியுங்கள்)

* * *

தமிழண்ணல் 'தினமணி'யில் எழுதிய கட்டுரையிலிருந்து (27.11.99) சில கருத்துகள்.

''தமிழக அரசும், தான் பிறப்பிக்கின்ற ஆணைகளை, யாரும் உடைப்பில் போட்டு விடாமல் தடுக்க, ஆவன செய்யவேண்டும். இன்றேல் இம் முயற்சிகள் வெறும் கண்துடைப்பாகிப் பழைய நிலையே நீடிக்கும்.

தனிப் படிப்பு மூலம் படித்து ஆறாம் வகுப்பில் சேர்க்கலாம் என்றுள்ள, இன்றைய விதியைப் பல பள்ளிகள் தவறாகப் பயன்படுத்துகின்றன.

கர்நாடக அரசு, இவ்வாறு தனிப்படிப்பு மூலம் வருபவர்கள் ஒன்று வெளி மாநிலத்திலிருந்து இடம் மாறுதலாகிவரும் அதிகாரிகளின் பிள்ளைகளாக இருக்க வேண்டும்; அல்லது கல்வி வசதியே இல்லாத சிறு கிராமப் பகுதிகளிலிருந்து வருபவர்களாக இருக்கவேண்டும்; அவ்வாறு வருகிறவர்கள் அதற்கான சான்றிதழுடன் வந்தால் மட்டுமே தனிப்படிப்பு மூலம் வந்தவரென மேல் வகுப்புக்களில் அனுமதிக்கப் படுவர் என்று ஆணையை நடைமுறைப்படுத்தி வருகிறது. அங்கு யாரும் பள்ளிகள் நடத்தி, தனிப்படிப்பு விதிப்படி சேர்ப்பதாகக் கூறி, அரசை ஏமாற்ற முடியாது. தமிழக அரசும் இதில் ஏமாறக்கூடாது என்பதே நமது வேண்டுகோளாகும்.''

கி.ஆ,பெ. விசுவநாதம் 'முத்தமிழ்க் காவலர்' எனும் அடைமொழி பெற்றவர். 1960 ஆம் ஆண்டில் ச. சோமசுந்தர பாரதியார், மு.வ., பாவேந்தர் ஆகிய அனைத்து அறிஞர்களையும் உள்ளடக்கிய 'புலவர் குழு'வினை நிறுவியர். தந்தை பெரியாரின் தளபதியாக, அறிஞர் அண்ணாவின் தோழராக இயங்கியவர்; 'தமிழ்நாடு' காண விரும்பியவர். அவர் தன் கடைசிக் காலத்தில் மருத்துவமனையில் இருந்தபோது விடுத்த அறிக்கை இது.

கட்டாயப் பாடமொழி

''தமிழகத்தில் இப்போதுள்ள இருமொழித் திட்டத்தை நாம்தான் கொண்டு வந்தோம். அப்போது அந்தத் திட்டத்தின் படி, தமிழக மக்கள் தமிழும் ஆங்கிலமும் தான் கட்டாயமாகப் படிப்பார்கள் என்று தோன்றியத அப்படியே நம்பினோம்.

இப்போது நடப்பது என்ன என்றால் இரு மொழித்திட்டத்தில் ஒரு மொழியாக ஆங்கிலம் கட்டாயமாகவும் இன்னொரு மொழியாகத் தமிழைத் தவிர வேறு ஏதோ ஒரு மொழி கெட்டியாகப் பிடித்துக் கொண்டது என்றாலும், இப்போதுள்ள அந்த இரு மொழித் திட்டத்திலேயே தமிழ் மொழியைக் கட்டாயப் பாட மொழியாக ஆக்க முடியுமானால் நான் மகிழ்ச்சியோடு சாவேன். எனவே இதில் இருந்து நான் இப்போதுள்ள இருமொழித் திட்டத்தை எதிர்க்க வில்லை என்பது நன்கு விளங்கும்.

முடியவில்லையே ஏன்?

இப்போதுள்ள இரு மொழித் திட்டத்தையே தொடர்ந்து ஆதரிக்க வேண்டும் என்று எண்ணுபவர்கள் இன்று வரை தமிழைக் கட்டாயமாக ஆக்க முடியவில்லையே அது ஏன்?

இதை இப்போதாவது நாம் சிந்தித்து முடிவு செய்ய வேண்டாமா?

இப்போதுள்ள இரு மொழித்திட்ட அரசு ஆணையில் இருப்பது பிரதேச மொழியோ அல்லது அவரவர் தாய்மொழியோ படிக்க வேண்டுமென்றே, தமிழைக் கட்டாயமாகப் படிக்க வேண்டும் என்று இல்லை. இதனால்தான் அண்ணாவுக்குப்பின் வந்த அரசுகள் அனைத்தும் தமிழைக் கட்டாய மொழியாக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றன.

பாதகம் எங்கே?

ஆட்சி மொழித் திட்டம் என்பது வேறு, கல்வி மொழித் திட்டம் என்பது வேறு. ஆட்சிக்குத் தமிழ், கல்விக்கும் தமிழும் ஆங்கிலமும் வேண்டும். இப்படித் தமிழைக் கட்டாயமாக்க வேண்டுமானால் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் தங்களது தாய் மொழியை, அவர்கள் விருப்பப்படி விருப்பப்பாடமாக அனுமதிப்பதுதான் புதிய 3-ஆவது மொழித்திட்டம் இதில் எங்கே இருமொழித் திட்டத்துக்குப் பாதகம் இருக்கிறது.

தமிழைக் கட்டாயமாக்குவதற்குச் செய்யும் ஏற்பாடுதான் இந்த 3-ஆவது மொழியை கல்வியில் மட்டும் சிறுபான்மையினருக்கு விருப்பப்பாடமாக ஆக்குவது.

மேற்சொன்னபடி இல்லாமல், இப்போதுள்ள இரு மொழித் திட்டத்திலேயே தமிழைக் கட்டாயப்பாட மொழியாக ஆக்க முடியுமானால் நான் மன நிறைவோடும் மகிழ்ச்சியோடும் சாவேன்.''

இருமொழித் திட்ட அடிப்படையில் அறிஞர் அண்ணா காலத்தில் (1968) பிறப்பிக்கப்பட்ட ஆணையில் தமிழ் எனும் சொல்லே இடம் பெறவில்லை. அரசு அலுவலர்கள் எப்படிச் 'சொற்சிலம்பம்' ஆடியிருக்கிறார்கள் என்பதற்கான எடுத்துக் காட்டு இது. 1999 இல் தான் 'தமிழ் அல்லது தாய்மொழி' என அந்த ஆணை திருத்தப்பட்டது. கி.ஆ.பெ.வி. குறிப்பிடுவது இதனைத்தான்.

தமிழையும் ஆங்கிலத்தையும் கட்டாயம் படிக்கும் பிறமொழியாளர்கள் அவரவர் தாய்மொழியையும் படித்துக் கொள்ள வகை செய்து கொடுக்க வேண்டும். இதைத்தான் இவர் குறிப்பிடுகிறார். இதில் தவறே இல்லை. எங்களுக்குத் தமிழைச் சொல்லிக் கொடுங்கள் என்று கேட்பவர்களுக்குத் தமிழ் படிக்க வாய்ப்பளிப்பதோ, அல்லது கி.ஆ.பெ.வி. கூறியதுபோல வாய்ப்பளிப்பதோ நமது இருமொழித் திட்டத்துக்கு எதிரானது அன்று.

என் போன்றவர்கள் எவ்வளவோ முயன்றும் கல்வி அமைச்சர் அதைக் கொச்சைப்படுத்திச் சொதப்பி விட்டார். இது குறித்து மற்றோர் இடத்தில் பேசுவோம்.

எப்படியிருந்தாலும் 'தமிழைக் கட்டாய்ப் பாடமொழியாக்க' வேண்டுமென்பதே அவரது கருத்து. தமிழன்பர்கள் இதனை மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

'குறளியம்' (1.6.99) இதழில் புலவர் இரா. இளங்குமரன் ஓர் ஆசிரியவுரை எழுதியுள்ளார். அதனைப் படியுங்கள்.

அன்னை ஆணை

''இனிய தமிழன்னை தமிழ் வழிக் கல்விக் குழுவை நெஞ்சார வாழ்த்துகிறாள்.

எய்தற்கு அரிய வாய்ப்பு இக்குழுவுக்கு ஏற்பட்டுள்ளது. ''நாங்கள் என்ன செய்யவேண்டும்? ஆணை இடுங்கள்; அரசு நிறைவேற்றும்'' எனப் பெருந்தக்க வகையல் ஆளவையிலே முதல்வர் ஆணைவழியில் கல்வியமைச்சர் அறிவித்துள்ளார். நீங்கள் செய்தற்கு அரிய செய்யுங்கள்! இடை நாளில் ஏற்பட்ட தடைகளையெல்லாம் உடைத்துப் பீடு நடையிட்டு நாடுநலம் பெறும் வழிவகைகளை - உறுதியாக - உடனடியாக நிறைவேற்றுங்கள்.

என் தமிழ்மக்களே, உங்களுக்கு எந்த மொழிமீதும் பகையில்லை. எந்த மொழியும் அவரவர்க்குச் சொந்த மொழியே. ஆனால், அந்த மொழியைக் காட்டி இந்த மண்ணின் மொழியை- வாழ்வும் வளமும் பதவியும் பாராட்டும் வழிவழி உரிமையும் வழங்கும் இந்த மொழியைப் புறக்ணிக்கக் கூடாது. புறக்கணிக்க நினைப்பது வல்லாண்மை. மண்ணையும் மண்ணின் மொழியையும் மண்ணின் மைந்தரையும் இழிமைப்படுத்துவது. ஆதலால், இம்மண்ணின் மொழியைக் கல்லாமல் வாழ்வதே வாழ்வு எனச் சொல்ல நினைப்பதே பாவம். அதனைச் செயற்படுத்தி வந்தது பெரும்பாவம். சிறுபான்மையினர் நலம் என்னும் போர்வையில் பெரும்பான்மையரைப் புறக்கணிக்க எந்த உரிமையும் இல்லை. அவர்க்கு மட்டுமில்லை; ஆள்வோர்க்கும் இல்லை.

அண்ணன், தங்கை, அம்மான், அத்தை, அரிசி, பருப்பு, வாழை, பலா, அவரை, துவரை என ஆயிரம் ஆயிரம் சொற்களஞ்சியத்திற்குச் சொந்தமாக வாழும் அந்த மழலைச் செல்வங்கள், அறிந்த சொற்களஞ்சியங்களையெல்லாம் அறவே வாய் மறந்தும் சொல்லாமல் தடுப்பதா பள்ளியின் கடமை! கொத்தடிமை ஆக்குவதற்கும் சுமக்க வைப்பதற்கும் பயிற்சி நிலையமா பள்ளி?

எந்த நாட்டில் தாய்மொழி வழிக் கல்வி இல்லையோ அந்த நாடு உய்யாது. தாய்மொழி வழியாகக் கற்பதே குழந்தைக்குத் தாய்ப்பால் உணவு போன்றது என எந்தச் சான்றோர் கூறவில்லை? அறிவர் கூறவில்லை?

அயல் மொழியைத் திணித்துவிட்டால் சிந்தனை சிறக்குமா? செயலாக்கம் பெருகுமா? ஒப்பிக்கும் போலிகளை உருவாக்கவா பள்ளிக்கூடங்கள் வேண்டும்? உலகமெல்லாம் பாருங்கள்! எந்த நாட்டிலாவது தாய்மொழியைத் தாமே அழித்து அயன்மொழிக்கு முடிசூட்டும் கொடுமை உண்டா?

இந்நாட்டை ஆளும் பெருமைமிகு முதல்வரும் கல்வியமைச்சரும் பண்பாட்டுத் துறை அமைச்சரும் பிறர் பிறரும் ஆங்கில வழியில் கற்றவர்கள்தாமா?

கோவை துரைசாமியார் கண்டுபிடிப்புகள் எவ்வளவு அரியவை. அவர் பள்ளிப் படிப்பா - ஆங்கிலக் கல்வியா அவற்றின் மூலம்?

அணு ஆய்வு வல்ல அப்துல்கலாம் ஆங்கிலவழியிலா கற்றார்?

தாய்மொழி வழிக்கல்வியைக் காலமெல்லாம் வலியுறுத்திய இந்தியத் தந்தை காந்தியார், நோபெல் பரிசு பெற்ற அறிஞர் தாகூர் பெரு மக்கள் திலகர், கோகலே முதலானோர் எவ்வளவு வலியுறுத்தியுளர். தாய்மொழி வழிக் கல்வியை. கொள்கையை ஏற்காமல் கொண்டாடுவதா கொண்டாட்டம்? இலெனினார் போலத் தாய்மொழி வழிக் கல்வியைப் போற்றிய ஒருவர் உலகில் உளரா? சப்பானியரைப் போலவும் செருமானியரைப் போலவும் கண்டுபிடிப்பாளர்கள் உலகில் அரியர் அல்லரோ? ஆங்கிலக் கல்வியா அவர்களுக்கு மூலம்?

பள்ளிக்கல்வி, வீட்டிலும் தெருவிலும் பயின்று நடையிடவேண்டும் என்றால் தாய்மொழிவழிக் கல்விதானே இதனைச் செய்யும். அயல்மொழி வழிக்கல்வி ஒட்டுமா, உறவு ஆகுமா?

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்தில் கூட இல்லாத அளவு அயன்மொழி, மழலைப்பள்ளி முன்னிலை வகுப்புக்குக்கூட வந்துவிட்டதே! சான்றோர் இதனை ஒப்பலாமா? பெரியோர் இதனை ஏற்கலாமா? ஆணையிட்டதே 1956இல். அவினாசிலிங்கனார் கல்வியமைச்சராக இருந்தநாளில் ஐந்து வகுப்புவரை அயன்மொழிப் பாடமும் இடம் பெறல் ஆகாது என்று. அரசு ஒப்பியதை மாற்றலாமா? நல்ல நடைமுறையைத் தளர்த்தலாமா? அனைத்துக் கட்சியினரும் ஒருமனத்தால் அண்ணா தலைமையில் முடிவெடுத்ததுதானே, ஐந்தாம் வகுப்பு தாய்மொழி வழிக் கல்வியை இருத்தல் வேண்டும் என. அதனை ஏன் சறுக்கலாக்க வேண்டும்.

அண்டைக் கன்னடநாடு நடைப்படுத்துகிறதே. வங்கம் போற்றுகிறதே. உ.பி; ம.பி; பீகார் மாநிலங்களெல்லாம் 10-ஆம் வகுப்புவரை

கூடத் தம் தாய்மொழியை அன்றிப் பிறிதொரு மொழியைக் கற்பது இல்லையே! இதனைக் கருதிச் செயலாற்ற வேண்டாமா?

பிறப்பால் தமிழர்-வாழ்வால் அயலார் ஆகவா கல்விப்பணி நிகழ வேண்டும்?

பிறந்து வளரும் மண்ணிலேயே அயன்மொழி மாந்தராகவா தமிழர் வாழவேண்டும்?

தமிழினம் தமிழை இழந்து, அயல்நாடுகளில் பேச்சும் அற்று எழுத்தும் அற்று அயன்மையாய் வாழ்வது போலத் தாய்த் தமிழகமும் ஆகிவிடவா இந்த அயன்மொழிக் கல்வி?

நீங்கள் எவர்க்கும் விலக்கின்றி உறுதியான முடிவெடுத்து ஆக வேண்டும்.

தமிழே வேலி! தண்தமிழ்வேலித் தமிழ்நாட்டகம் என்பது பரிபாடல். தமிழ்வேலியை எதற்காகவும் எவர்க்காகவும் அகற்றாமல் அகற்ற விடாமல் உறுதி நடவடிக்கை எடத்து ஆள்வோர்க்குப் பெருமையும், மக்களுக்கு நன்மையும் எனக்குப் பேறும் நல்குங்கள். இந்நாள் உங்கள் தலைக்கடன் இது!''

அன்னை உரைக்கும் ஆணை மொழியை நிறைவேற்றுவோம். நலம் சேர்ப்போம்'' என்கிறார் அவர். அரசு அமைத்த குழுவில் இவரும் உறுப்பினராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது கருத்தினை எண்ணிப் பாருங்கள்!

'தி டைம்ஸ் ஆஃப் இந்தியா' (16.12.98) இதழில் வெளிவந்த கருத்து!

தாய்மொழியின் பெருமை குறித்து 'யுனெசுகோ' தெரிவித்த கருத்து கீழ்க்கண்டவாறு:-

''Experts are unanimous that a child learns best in his mother tongue. A child's mother tongue is more than a mere means of communication; it is his essential identity in that it plays an important role in his cognitive development, concept formation and acts of socialisation. UNESCO underlines the importance of the mother tongue at the early stage of education. ''Mother tongue is still the principal means by which any human being fits in his society and culture, it is the basis of his intellectual faculties."

அரசியல் சட்டத்தின் 350 அ, ஆ பிரிவுகள் சொல்லும் கருத்து இதுதான்.

''The Indian Constitution also provide for education through the mother tongue at the early stage. Articles 350A and 350B make clear the obligation of every state to provide adequate facilities for instruction in the mother tongue to primary school children belonging to linguistic minority groups. In other words, every child has the right to learn in his own mother tongue even if he is in a minority of one.''

ஆனால், இந்த இதழ் நாம் எடுத்துள்ள முயற்சியைத் தவறாகத் திசை திருப்பித் தவறாகப் புரிந்துகொண்டு கருத்து சொல்கிறது. ''For any government to make learning compulsory in the language of the majority is both unethical and unconstitutional.'' - என்று எழுதுகிறது.

நாம் மொழிச் சிறுபான்மையினரின் 1008 பள்ளிகளிலும் ஆங்கிலத்தையும் அவரவர் தாய்மொழியையும் முழுமையாகப் படிக்க வாய்ப்பளித்துள்ளோம். அதற்கு மேல் அவர்கள் தமிழையும் படிக்க வேண்டும் என்று கூடுதலான வாய்ப்புதான் அளிக்கப்பட்டுள்ளது. நாம் வெளியிட்ட ஐந்தாவது அறிவிப்பும் அதைத்தான் குறிப்பிடுகிறது. எத்தனையோ அமைப்புகள் இதனை வரவேற்றுப் பாராட்டியுள்ளன.

அவர்களே அதில் தெளிவாக இருக்கும்போது, யாரோ ஒருசிலர் திசை திருப்புவதைக் கொண்டு நாம் திகைப்படையத் தேவையில்லை. மேலும், தமிழகத்தில் இப்போது 6 கோடி 21 இலட்சம் மக்கள் இருக்கின்றார்கள். 1971 மக்கள்தொகை கணக்கின்படி, பிற மொழியினர்களின் எண்ணிக்கை இதுதான்.

தெலுங்கு	....	33.6 இலட்சம்
கன்னடம்		9 ''
மலையாளம்		4
குசராத்தி		1

இவர்களில் இப்போது வேண்டுமானால் 50 இலட்சம் என்பது 60 இலட்சமாக இருக்கலாம். இந்த 60 இலட்சம் பேருக்குரிய பாதுகாப்பைக் கொடுத்துவிட்டுத்தான் மீதியுள்ள ஐந்தேகால் (5¼) கோடி தமிழர்களுக்கான கல்வித்திட்டம் ஒதுக்கப்படுகிறது. இதில் புலம்புவதற்கு என்ன இருக்கிறது என்று தெரியவில்லை.

31.1.2000 அன்று 'The Times of India' எனும் இதழில் வெளிவந்த ஒரு செய்தி. அப்படியே தருகின்றேன்.

Mother Tongue must be given priority over English: Expert

"MUMBAI: The Maharashtra government's decision to introduce teaching of English from the first standard is not correct. Priority should be given to strengthening the learning of the mother tongue.

This would facilitate the study of English, says Makhan Lal Tickoo, chairperson of the national English language testing service at the Central Institute of English and Foreign Language (CIEFL), Hyderabad.

Research has showed that students starting to read English from the fifth standard, do better because by then they have learnt the mother tongue and its grammar, Mr Tickoo said. A child at the first standard level picks up sounds fast but not the language. An older child is better equipped to learn another language.

Mr. Tickoo said governments in several states were under pressure from politicians to begin teaching English from the first standard. Even the Communist-led government in West Bengal had to bow to pressure from Mamata Banerjee and others to begin the teaching from class three.

P.V. Narasimha Rao, when he was the education minister of Andhra Pradesh in 1970, too had come under similar pressure but gave up the idea after consultations with the CIEFL.

Mr. Tickoo said while talking to The Times of India News Service, the way the language issue was being handled, students learnt neither their mother tongue well nor English. 'By teaching English mindlessly, we are only creating parrots and second-rate minds. We are becoming mere consumers of knowledge produced by the West, not producers of knowledge. England, he said, had a first-rate system of primary education built over several years.

Those writing well in their mother tongue also have the necessary skills to write in another language.

Tamil Nadu had introduced the teaching of English from the third standard instead of standard six way back in the 50s under the influence of a theory that the brain is more elastic at an early age. The help of the British Council was taken and a Madras language teachers' course (MELT) was launched. The experiment melted out. It just did not work, Mr. Tickoo said.

Mr. Tickoo said his long experience in the field showed that even graduates and post-graduates in English in the country were not properly equipped to teach the language. Way back in 1963 when V.K. Gokak, noted Kannada writer was the director of the then Central Institute of English, a book was prepared for teaching English at the primary level.

It was found that after 30 days of training based on the book, a graduate teacher spoke incorrect English. Post-graduate students do not read the prescribed text-books, he said. He gave a student Bradley's Shakespearen Tragedy. The student did not read it or any other book but one day came to him with a box of sweets, saying he had passed M.A.

மேனாள் துணைவேந்தர் ச. முத்துக்குமரன் பல செய்திகளை எழுதியுள்ளார். அவற்றுள் குறிப்பிடத்தக்கது இது:

''ஆங்கிலேயர்கள் ஆட்சியின் போது கூட தொடக்கப் பள்ளிகளில் ஐந்தாம் வகுப்புவரை ஆங்கிலத்தில் கல்வி இல்லை. அவ்வளவு ஏன்? ஆங்கிலமே கற்பிக்கப்படவில்லை.''

இது குறித்து நாம் ஏற்கெனவே வேறு அறிஞர்கள் சொன்ன கருத்துகளையும் பார்த்துள்ளோம்'.

ஓர் இதழில் வந்த செய்தி; அதனை அப்படியே தருகின்றேன்:

''அமெரிக்காவின் புகழ் பெற்ற கணினி நிறுவனங்களில் ஒன்று அமெரிக்கன் மெகா டிரண்ட்ஸ் (American Mega Trends). இதன் அதிபர் தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு. சங்கர். ஜப்பான், ஹாங்காங், இத்தாலி, இங்கிலாந்து மற்றும் கிளைகள் இந்த நிறுவனத்துக்கு உண்டு. கோடீசுவரர் ஆன சங்கரின் மனைவி லட்சுமி தமிழ் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். அட்லாண்டா நகரில் தமிழ் அமைப்புகளுடன் தொடர்பு கொண்டவர்.

அட்லாண்டாவில் ஏராளமான தமிழ் குடும்பங்கள் வாழ்கின்றன. இந்த தமிழ் குழந்தைகள் தமிழை மறக்கின்ற சூழ்நிலை.

திருமதி. லட்சுமி வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமைகளில் தமிழ்க் குழந்தைகளை அழைத்து இலவசமாக தமிழ் கற்றுத் தருகிறார். இதற்காக சிங்கப்பூர், மலேசியாவில் இருந்து தமிழ் பாடப் புத்தகங்களையும் வரவழைத்து இருக்கிறார். சென்னையில் இருப்போர் மம்மி, டாடி என்றாலும் அமெரிக்காவில் தமிழ்க் குழந்தைகள் அம்மா, அப்பா என்று படிக்க வைக்கிறார்.

அமெரிக்காவில் அப்பா, அம்மா!

தமிழ்நாட்டில் மம்மி, டாடி!

இது யாருக்காக? ஏன் இந்தக் கொடுமை?

மெகாலே போன நூற்றாண்டில் ஆங்கிலத்தைக் கல்விமொழி ஆக்கியதால்தான் நாம் தொடர்ந்து அடிமைகளாகவே இருக்கிறோம் என்று பலர் சொல்வதுண்டு. ஆனால் ஆங்கிலம், சமற்கிருத ஆதிக்கத்தைத் தடுத்து, அறிவாழ மிக்க கல்வியை அனைவருக்கும் தர உதவியது என்பதுதான் உண்மை. இதுகுறித்து கு.வெ.கி. ஆசான் கூறுவதைக் கவனியுங்கள்:

1. ''மனித நேய நோக்கங் கொண்டவர்கள் மாற்றத்தை விரும்பினர். இவர்களிடையே, பகுத்தறிவு நெறியில் சீர்திருத்தம் செய்து இந்திய மக்களை முன்னேற்ற முடியும் என்ற நோக்கினராக மகாலே திகழ்ந்தார். அறியாமை, மூடநம்பிக்கை, கொடிய பழக்கங்கள், வருண-சாதி ஏற்றத் தாழ்வுகள் ஆகிய மல்கியிருந்த அந்தக் காலக்கட்டத்தில், இந்தியர்கள் விடுதலை வாழ்விற்கு உரியவர் அல்லர் எனினும், எதிர்காலத்தில் அவர்கள் அதற்கு உரிய தகுதியைப் பெற முடியும் என நம்பினார்.

2. தீர்க்க முடியாத கருத்து வேறுபாடு இருந்ததால், கல்விச் செயற்பாடு தேக்கமடைந்திருந்தது. சமற்கிருதம், பாரசீகம், அரேபியும் ஆகிய மொழிகளைக் கற்பிப்பதற்கு உதவித்தொகை கொடுத்தாற்போதும் என அய்ந்துபேர் கூறினர். தொடக்கக் கல்வியை இந்திய மக்களின் புழக்கத்தில் உள்ள மொழிகளிலும், உயர்கல்வியை ஆங்கிலத்திலும் கற்பிக்கவேண்டுமென மீதமிருந்த அய்ந்துபேர் வலியுறுத்தினர். இந்நிலையில் மகாலேயின் கருத்தைக் கோரினர். 1835 பிப்ரவரி 2இல் அவர் தமது புகழ்வாய்ந்த கருத்து வரைவை (minute) அளித்தார்: ''நிகழ் காலத்தில் (இன்றுள்ள நிலையில்) தங்கள் தாய்மொழிகளின் வழியே கற்க முடியாத மக்களுக்கு நாம் கல்வியை அளிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஏதேனும் அந்நிய மொழியை அவர்களுக்குக் கட்டாயம் நாம் கற்பிக்க வேண்டும். நமது (ஆங்கில) மொழியின் தகுதியைக் குறித்து நான் நினைவுகூரத் தேவையில்லை. மேற்கத்திய மொழிகளிடையே அது முதன்மையானதாக இருக்கிறது....''

3. ஆங்கிலம் இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கு ஆக்கம் தரும் எனக் கருத்துரைத்தார்.

4. புராணங்களைக் கற்பதைவிட, ஆங்கிலத்தின் மூலம், தொன்மைக் காலம் முதல் அண்மைக் காலம் வரையில் வளர்த்தெடுக்கப்பட்ட அறிவுத் தெளிவைக் கொடுத்து இந்தியர்க்ளை முன்னேற்ற விழைத்தார். குருதியால் இந்தியர், ஆனால் அறிவில் அய்ரோப்பியர் (Indian in blood, but European in intellect) என்ற அவருடைய கூற்றை இந்த நோக்கில் நினைக்கவேண்டும்.

5. 1823இல், சமற்கிருதக் கல்வியை எதிர்த்தும் மேல்நாட்டுப் பாடபோதனையை ஆதரித்தும், அப்பொழுது பொது ஆளுநராக இருந்த ஆமெர்ஸ்டு பிரபுவுக்கு, ராஜா ராம்மோகன் ராய் எழுதிய மடலின் உள்ளடக்கத்தைக் கவனிக்கக் கடமைப்பட்டுள்ளோம்: ''இந்த நாட்டை இருளில் வைத்திருக்க உதவும் மிகச் சரியான ஒன்றாகச் சமற்கிருதக் கல்விமுறை அமையும்.'' (The Sanskrit system of education would be the best calculated to keep this country in darkness.)

6. பொதுமக்களின் மொழிகள் செல்வாக்குப்பெறுவதைப் பார்ப்பனர்கள் விரும்பவில்லை; தங்களுடைய மேலாண்மை தகர்ந்துவிடும் என அஞ்சினர். மதக் காரியத்திற்கான தெய்விகமொழியெனவும், இந்துக்களின் சொந்த (personal) சட்டங்களை உள்ளடக்கிய தர்மசாத்திரங்களின் மொழியெனவும் கூறிச் சமற்கிருதக் கல்விக்குத் தனி மதிப்புப்பெற்றனர்.

7. வேதநாயகர் வாழ்ந்த பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில், தமிழுக்கு மாற்றாகச் சமற்கிருதம் பயிலலாம் என ஆக்கிக்கொண்டனர். இன்று, இந்தி, ஃபிரன்சு, உருது, மலையாளம், தெலுங்கு முதலியன மாற்று மொழிகள். ஆக, இருபதாம் நூற்றாண்டு முடியும் தருணத்தில் நமது நிலையென்ன? தமிழ் பயிலாமலேயே இந்நாட்டில் ஒருவர் எந்நிலைக்கு வேண்டுமானாலும் உயரலாம்! தமிழர் தாழ்வதற்கும் மற்றவர் ஆள்வதற்கும் வேறு ஏற்பாடு வேண்டுமா? இது மகாலேயின் திட்டம் அல்லவே!

8. கல்வி மொழி என்ற வகையில் அறிவை விரிவும் ஆழமும் உள்ளதாக ஆக்க ஆங்கிலம் உதவிற்று; விழிப்புணர்வையும் உண்டாக்கிற்று; அடிமை எண்ணத்தை உண்டாக்கவில்லை. ஆனால், நிருவாக நிலையில் ஆதிக்கம் செலுத்திற்று. இன்று நமது கடமை என்ன? ஆங்கிலத்தை ஆதிக்க நிலையில் இருந்து அகற்றி, அதை உதவி செய்யும் ஒன்றாக, பணிமொழியாக, ஆக்கிக் கொள்ளவேண்டும். கல்வி உள்ளிட்ட அனைத்துத் துறைகளிலும் மட்டங்களிலும் தமிழ் முதன்மை பெறவேண்டும். அது வெற்றியடைய வேண்டுமானால், மக்கள் பெருமளவில் அதில் ஆர்வம் காட்ட வேண்டுமானால்,

மய்ய - மாநில அரசுகள் அனைத்து நிருவாக மட்டத்திலும், எல்லாத் துறைகளிலும், அந்தந்த மாநிலங்களில் அவ்வவற்றின் மொழிகளை முற்றிலுமாகப் பயன்படுத்தவேண்டும். தமிழ் நாட்டில் அவ்வாறு செய்தால், கல்வியில் முதன்மையிடத்தை நமது மொழி இயல்பாகப் பெற்றுவிடும். தமிழ்ப் பற்று சிலரின் உணர்வாக இல்லாமல் அனைவரின் வாழ்வோடு ஒன்றிவிடும்.''

'தாய்மொழி'யின் பெருமையை நாம் பேசி மகிழ்கிறோம்; பல அறிஞர்கள் சொன்னதையெல்லாம் தொகுத்துத் தந்துள்ளோம்.

இவற்றை யெல்லாம் மனத்திற் கொண்டுதான் அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டன.

23.1.2000 அன்று கூறிய ''நர்சரி, பிரைமரி & மெட்ரிகுலேசன் பள்ளிகளின் நிர்வாகிகள்'' எனும் பெயரில் சில தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளனர்.

1. ''தமிழ்நாடு அரசின் ஒப்புதல் படி நர்சரி, மெட்ரிகுலேசன் பள்ளிகளை நசுக்க தமிழ் வளர்ச்சிப் போர்வை போர்த்திய நயவஞ்சக அரசாணைகள் எண் 06. நாள் 13.01.1999, 325 நாள் 19.11.1999 ஆகியவைகளை உடனடியாக ரத்து செய்ய வேண்டும்.

2. ரத்து செய்யத் தவறினால் தமிழ்நாடு முழுவதும் அங்கீகாரம் பெறாமலும், புதுப்பித்தல் பெறாமலும் பிரைவேட் ஸ்டடி சட்டப்படி முன்போல் பள்ளி நடத்துவது

3. கூடுதலாக தாய்மொழித் தமிழ் வகுப்புக்கள் நடத்துவது

4. ஒரு மொழிக் கொள்கையால் பாதிப்பு ஏற்பட்டால் பள்ளி நிர்வாகமும், பணியிழந்த ஆசிரியர்களும் இதரப்பணியாளர்களும் அரசிடம் நஷ்ட ஈடு கேட்டு வழக்குத் தொடர்வது, வசூலிப்பது.

5. வகுப்புக்கள் 1 முதல் 5 வரை இலவசமாக அரசு கொடுக்க இருக்கும் நர்சரி, மெட்ரிக் பள்ளிகளின் தரம் குறைந்த புத்தகங்களை ஏற்க மறுப்பது. ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.''

கதை எப்படிப் போகிறது பார்த்தீர்களா? அறிஞர்கள் நமக்குக் கருத்துகளை வழங்குகிறார்கள். கல்வி வணிகர்கள் எப்படித் துள்ளுகிறார்கள் என்று பாருங்கள்!

ஐந்தாவது வகுப்புவரை தமிழ் வழியில் படித்துவிட்டு ஆறாம் வகுப்பிலிருந்து ஆங்கில வழியில் படிப்பது கடினமானது என்று போலித்தனமாகப் புலம்புகிறார்கள். இதை எழுதுபவனோ 11ஆம் வகுப்பு வரை தமிழ் வழியில் படித்துவிட்டு, அதன்பின் பி.எசி, எம்.ஏ., பிஎச்.டி பாடங்கள் பெற்றவன். நான் ஒன்றும் ஆங்கிலத்துக்கு அஞ்சி ஓடி விடவில்லையே!

முனைவர் பு. இராசதுரையும் இதனை வலியுறுத்தும் பல செய்திகளைச் சொல்லுகிறார்.

''உயர்நிலைப் பள்ளியில் எல்லாப் பாடங்களையும் தமிழில் படித்த எங்களுக்குக் கல்லூரியில் எல்லாப் பாடங்களையும் ஆங்கிலத்தில் கற்க முனைந்தபோது எவ்விதத் தடங்கலோ திகைப்போ ஏற்பட்டதில்லை. எங்களுக்கு மட்டுமன்று, தமிழ்நாட்டில் இருந்த எல்லாக் கல்லூரிகளில் இவ்வாறு பயின்ற எவருக்கும் தடங்கல் ஏற்பட்டதில்லை. எல்லாரும் எங்கள் கல்லூரியில் பயின்றவர்களும் வேறு எல்லாக் கல்லூரிகளில் பயின்ற எல்லா மாணவர்களும் எத்தகைய இடையூறுமின்றி ஆங்கிலத்தில் கற்றோம்; வென்றோம்.

அவர்களிற் பெரும்பாலோர் சிற்றூர் மாணவர்கள். தத்தம் ஊர்களில் தமிழில் பயின்றுவிட்டுக் கல்லூரியில் ஆங்கிலவழியில் படிக்க வந்தவர்கள்; படித்து வென்றார்கள். ஆங்கிலத்தில் படிக்க முடியாது என்று எவரும் கல்லூரியை விட்டு ஓடிடவில்லை. எந்தக் கல்லூரியிலிருந்தும் எந்த மாணவரும் ஓடவில்லை. இப்போதும் அதேமுறையில் தான் எல்லாக் கல்லூரிகளிலும் மாணவர்கள் பயில்கிறார்கள்.

பள்ளி இறுதி வகுப்பு வரை தமிழில் படித்துவிட்டுக் கல்லூரியில் ஆங்கில வழியில் படித்தவர்கள் திறனற்றுப் போய்விடவில்லை. பட்டங்களைப் பெற்றுப் பெரிய பெரிய பொறுப்புகளில் பணியாற்றிச் சுடர்வீசிக் கொண்டிருக்கிறார்கள்; இனியும் சுடர் வீசுவார்கள்.

ஆறாம் வகுப்பிலிருந்து ஆங்கிலவழியில் பயில்வதற்காக வரும் மாணவர்களில் பலர் ஒன்று முதல் அய்ந்தாம் வகுப்பு வரை தமிழில் படித்தவர்களே. இவர்களையும் மொழிச்சிக்கல் தீண்டவில்லை.

உண்மை இவ்வாறிருக்க அய்ந்தாம் வகுப்பு வரை தமிழில் படித்துவிட்டு ஆறாம் வகுப்பிலிருந்து ஆங்கிலவழியில் பயில முடியாது என்று கூறுவது திறன்மிக்க மேல்நிலைப் பள்ளிகட்கு விடும் பொருளற்ற சவாலாகும்.

பள்ளிப் படிப்பு முழுவதையும் தமிழில் படித்துவிட்டுக் கல்லூரிப் படிப்பை ஆங்கில வழியில் பெறுதல் ஆண்டாண்ட காலமாக வழக்கத்தில் இருப்பதுதான்.

அதேபோன்று அய்ந்தாம் வகுப்பு முடியத் தமிழில் படித்துவிட்டு ஆறாம் வகுப்பிலிருந்து ஆங்கிலத்தில் படிப்பது ஒன்றும் அதிசயமானதோ ஆபத்தானதோ இயலாததோ இல்லை.

பிறகு ஏன் சிலர் அய்ந்தாம் வகுப்புவரை தமிழில் படித்துவிட்டு ஆறாம் வகுப்பு முதல் ஆங்கிலத்தின் வழி படிப்பது இயலாதது என்று அறிக்கை விடுகிறார்கள்?

ஏனென்றால் அவர்கள் கல்வி கற்பித்த அனுபவம் இல்லாதவர்கள்; கல்வி கற்பித்த முறை குறித்த வரலாறு அறியாதவர்கள்; அவர்கள் தமிழின் பகைவர்கள்; அதனால்தான் அப்படி அறிக்கை விடுகிறார்கள்.''

அனுபவம் மிக்கவர்கள், பட்டங்களையும், பதவிகளையும் பார்த்தவர்கள் சொல்கிறார்கள் எந்த இடரும் இல்லை என்று. ஆனால் இயலாது என்று புலம்புவர்கள் யார்?

''ஏனென்றால் அவர்கள் கல்வி கற்பித்த அனுபவம் இல்லாதவர்கள்; கல்வி கற்பித்த முறை குறித்த வரலாறு அறியாதவர்கள்; அவர்கள் தமிழின் பகைவர்கள்; அதனால்தான் அப்படி அறிக்கை விடுகிறார்கள்'' என்கிறார் இராசதுரை.

சிறந்த கல்வியாளராகிய திரு.எஸ்.எஸ். இராசகோபாலன் எனக்கொரு மடல் எழுதியிருந்தார். அது இதுதான்.

''பன்மொழி அறிஞர் பேராசிரியர் பட்நாயக் அவர்களது சொற்பொழிவின் சுருக்கத்தினை இணைத்துள்ளேன். தங்கட்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

தமிழ் வழிக் கல்வி கல்லூரி வரை செல்லவேண்டும். இங்கு, தொடக்க நிலையிலேயே தமிழ் வழிக்கல்விக்கு எதிர்ப்பு இருப்பதன் ஒரு காரணம் பேரா. பட்நாயக் அவர்கள் குறிப்பிட்டுள்ள பண்பாட்டுப் பற்றின்மையே. தங்கள் முயற்சி வெற்றிபெற என்றும் உங்களுடன் இருப்பேன்'' என்று எழுதியிருந்தார். நானும் அவருடைய முயற்சியையும் ஆர்வத்தையும் பாராட்டி விடை எழுதினேன்.

'இந்திய மொழிகளுக்கான மத்திய நிறுவனத்தின் நிறுவனமும் இயக்குநருமாகிய முனைவர் டி.பி. பட்டநாயக் எந்த அளவுக்கு அந்தந்த மொழிகள் முக்கியத்துவம் பெறவேண்டும் என்பதையும் அதுதான் பண்பாட்டைப் பேணுதற்குச் சரியான வழி என்பதையும் கூறுகிறார். அவரது கருத்துகள் நமக்கு உரம் சேர்ப்பன. இன்று ஆங்கில மோகம் கொண்டு அலைபவர்கட்கும்; அலைபவர்தனை மடக்கிப் போட்டுத் தங்கள் மடி நிரப்பிக்

கொள்ளும் கல்வி வணிகர்கட்கும் பண்பாட்டுச் சீரழிவு பற்றி எந்தக் கவலையுமில்லை. எனவே பட்நாயக் கருத்தினைப் படித்தபின் முடிவுக்கு வருவோம்.

"Dr. D.P. Pattanayak, today stressed the need for recognising languages in order to recognise culture. Languages were expressions of cultures.

Dr. Pattanayak observed and questioned how people could affirm and enrich cultural identities when their languages were endangered and were on the verge of dying.

Dr. Pattanayak said the Third World countries were debating economics as a "reality" and culture as a "dream".

He said there was great reluctance to accept Indian languages as medium of instruction. "Wherever Indian languages were accepted as medium of instruction, science and technology are taught in English medium and social siences and humanities are taught in Indian languages".

Pointing out that there were 62 tribal groups in Orissa, but only 22 tribal languages, Dr. Pattanayak said the remaining tribal languages had joined the mainstream. "In fact, joining the mainstream and national integration have been slogans for assimilation of smaller languages and cultures", he said.

GLOBALISATION: Dr. Patnayak said globalisation was meaningless without localisation. "If a person cannot live in peace with the immediate environment, how can the person cope with the global environment"? If one recieves an all-English education in India from birth and has no words in the mother tongue or in English to name the plants and trees, the fruits and flowers, the birds and animals, the soils and the rocks, and the changing faces of nature, how the person be expected to liv in unison with the global environment?"

இவை தாம் அவரது கருத்துகள். தமிழில் படியுங்கள்.

''மாநாட்டில் பேசும்போது பட்டநாயக் பண்பாட்டினை அடையாளம் காட்டி அறிந்து கொள்ள வேண்டுமென்றால், மொழிகளை அங்கீகரித்தே ஆகவேண்டும் என்பதன் தேவையை வலியுறுத்தினார்.

மேலும் மொழிகள் என்பவை பண்பாட்டின் வெளிப்பாடுகள் என்றார்.

தங்களுடைய மொழிகள் சாவின் விளிம்புக்குப் போகக் கூடிய நிலை இருக்குமானால், தங்கள் மொழிகள் பெரும் விபத்துக்களாகும் நிலை ஏற்படுமானால் மக்கள் தங்கள் பண்பாட்டு அடையாளங்களை வளப்படுத்திக் கொள்ளமுடியுமா? மற்றும் எப்படி அவர்கள் தங்கள் பண்பாட்டு அடையாளங்களை உறுதி செய்து கொள்ள முடியும்?

மூன்றாம் உலக நாடுகள் எல்லாம் ஏதோ 'பொருளாதாரம்' ஒன்றுதான் உண்மையானது என்றும் 'பண்பாடு' என்பது ஒரு 'கனவு' என்றும் தருக்கமிட்டுக் கொண்டுள்ளன.

இந்திய மொழிகளைப் பயிற்றுமொழிகளாகக் கொள்வதற்கு மிகவும் தயக்கம் காட்டப்படுகிறது. இந்திய மொழிகள் பயிற்றுமொழிகளாக ஏற்கப்பட்டிருக்கும் நிலையில் கூட அறிவியலும் தொழில் நுட்பமும் ஆங்கில வழியிலும், சமூகவியலும் கலையியற் பாடங்களும் இந்திய மொழிகள் வாயிலாகவும் கற்பிக்கப் படுகின்றன.

ஒரிசாவில் 62 மலைவாழ் மக்கள் குழுக்கள் இருந்தன. ஆனால் மொழிகள் மட்டும் 22 மலைவாழ்மக்களின் மொழிகள்தாம் எஞ்சியுள்ள மலைவாழ் மக்களின் மொழிகள் எல்லாம் முக்கிய மொழிகளோடு சேர்ந்து கரைந்துவிட்டன. உண்மையில் சொல்லப் போனால் முக்கிய மொழிகளோடு சேர்ந்து விடுங்கள் என்பதும் தேசிய ஒருமைப்பாடு என்பதும் சிறியமொழிகளையும் பண்பாடுகளையும் மெல்லமெல்ல வீழ்த்துவதற்கான முழக்கங்கள் ஆகிவிட்டன.

டாக்டர் பட்டநாயக் மேலும் கூறினார். உள்ளூர்மயமாக்குதல் என்பது இல்லாமல் உலகமயமாக்குதல் என்பது பொருளற்றதாகும். தன்னைச் சுற்றியுள்ள புறச் சூழலில் ஒருவன் அமைதியாக வாழ முடியவில்லை என்றால் உலகச் சூழலில் ஒருவன் நிம்மதியாக வாழ்ந்துவிட முடியும் என்பது எப்படி முடியும்? இந்தியாவில் ஒருவர் பிறப்பிலிருந்தே அனைத்துக் கல்வியையும் ஆங்கிலத்திலேயே பெற்றுவருவானானால், செடிகளையும் மரங்களையும் குறிக்க, பழங்களையும் மலர்களையும் குறிக்க, பறவைகளையும் விலங்குகளையும் குறிக்க மண் வகைகளையும், பாறைகளையும் குறிக்க / இயற்கையில் ஏற்படும் கால மாறுதலைக் கவனிக்க ஒருவனது தாய் மொழிச் சொற்கள் எவையும் ஒருவனுக்குத் தெரியவில்லை என்றால் அந்த மனிதன் உலகச் சுற்றுச் சூழலில் ஒளிமயமாக வாழ்ந்து விடுவான் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?''

மொத்தத்தில் பேரா. பட்டநாயக் 'தாய்மொழிகளின் வாயிலாகத் தான் ஒருவன் தன் பண்பாட்டை அடையாளப் படுத்த முடியும்' என்பதை அழுத்தமாக வலியுறுத்துகிறார்.

பேரா. அ. சக்கரவர்த்தி நல்ல ஆய்வு நோக்கில் தமிழ் வழிக் கல்வியின் தேவையை எடுத்து வைக்கிறார். அவரே பலரை மேற்கோள் காட்டியிருக்கிறார். அவர் தந்த கருத்துகளில் சில.

''மொழி மக்களை இணைக்கும் பாலமாகக் கருதப்படுகிறது. மனிதன் அறிவோடும் ஆற்றலோடும் உலகை அறிந்துகொள்ள அம்மொழியின் வழி பெறுகின்ற கல்வி இன்றியமையாத் தேவையாகிறது. விலங்கு நிலையில் உழன்றுகொண்டிருக்கும் மனிதனைப் பண்படுத்தி நன்னெறிக்கு இட்டுச் செல்வது கல்வி'' என்று கல்விக்கும் மொழிக்கும் உள்ள தொடர்பை விளக்குகிறார்.

மேலும், ''மனிதன் மனிதனாக இயங்க, கல்வியறிவு இன்றியமையாத் தேவையாகிறது. அத்தகைய கல்வியறிவு மனிதனுக்குத் தாம் வாழும் குறுகிய காலத்தில் முழுமையான, தெளிவான, எளிதாக விளங்குகின்ற வகையில் கிடைக்க வேண்டுமானால் தாய்மொழி வழியில் அளிப்பதே சிறந்ததாகும்'' என்றும் வலியுறுத்துகிறார்.

''மனிதன் தன் தேவை கருதிப் பலமொழிகளைக் கற்றிருந்தாலும்; தான் கற்ற எல்லா மொழிகளைக் காட்டிலும் தாய்மொழியின் மீது அளவிலாப் பற்று வைத்திருக்கின்றான். அம்மொழியைப் போற்றி உயிராக மதிக்கின்றான். இந்நிகழ்வு இயற்கையானது. மனிதன் பிறந்தது முதல் தன்னை ஆளாக்கி உலகுக்கு அறிமுகப்படுத்துவது வரை தாய்மொழியின் பங்கு அளப்பரிது. தாய்மொழியை வெறும் கருவி என்ற அளவில் மட்டும் கருதாது அதை, பல படிகள் மேலானதாகக் கருத இடமிருக்கிறது'' என்றும் கூறுகிறார்.

''தாயின் வயிற்றில் கருவுற்ற குழந்தை ஒரு சில திங்களிலேயே தாயின் உணர்வுகளை, உடல் அசைவுகளை, ஒலி அதிர்வுகளை உணரத் தலைப்படுகிறது. பிறந்தது முதல் தாயின் மொழியைக் கூர்ந்து அறிகிறது. அக்குழந்தை, அம்மொழியைப் பற்றிய உணர்வுகளால் நாளும் உந்தப்படுகிறது; தாக்கப்படுகிறது; தூண்டப்படுகிறது. ஆகவே அம்மொழியின் வாயிலாக உலக அறிவைப் பெறுவது அக்குழந்தைக்கு இயற்கையான ஒன்றாக, இன்றியமையாத ஒன்றாக அமைகிறது'' என்பது அவர் கருத்தாகும்.

''ஒரு நாட்டு மக்கள் அந்த நாட்டுக்குரிய உயர்ந்த பண்புகளுடன் விளங்க வேண்டுமானால் அந்த நாட்டு இளைஞர்களுக்கு உயர்தரக் கல்வி மட்டுமின்றி எல்லாக் கல்வியையும் தாய்மொழி மூலமாகவே கற்பிக்க வேண்டும்

என்பார் காந்தியடிகள். மேலும் 'தாய்மொழியில் பாடங்களை நடத்தவதே நல்லது' என்பது மொழி அறிஞர்களின் கருத்துமட்டுமல்ல உளநூற் புலவர்களின் கருத்துமாகும். இக்கூற்றுகளை மையமாகக் கொண்ட உலக நாடுகள் பல தங்கள் தாய்மொழி வழியிலே கல்வி முதலானவற்றை மக்களுக்கு அளித்து அவர்களை வளம்பெறச் செய்கின்றன. 'தாய்மொழி மூலந்தான் குழந்தைகளுக்கு கல்வியூட்ட வேண்டுமென்பது ஐக்கிய நாடுகள் சங்கத்தின் கல்வி கலாச்சார பகுதியினர் கண்டுள்ள தீர்க்கமான முடிபாகும்'' என்கிறார். இதில் காந்தியடிகள், கி.ஆ.பெ. விசுவநாதம், இராச அரியரத்தினம் ஆகியோர் கருத்துகள் மேற்கோள் காட்டப்பட்டுள்ளன.'

''உலகில் எந்தெந்த நாடு சமூகப் பொருளாதாரத் துறையில் முன்னணியில் இருக்கிறதோ அந்தந்த நாடு ஒவ்வொன்றும் அந்தந்த மண்ணுக்குரிய தாய்மொழியைத் தத்தம் பள்ளிமொழியாகவும் பல்கலைக்கழக மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் கொண்டிருக்கிறது. எல்லாத் துறைகளிலும் முன்னேறியுள்ள ஜப்பானில் ஜப்பான் மொழிதான் அனைத்து மட்டத்திலும் கல்வி மொழியாக இருக்கிறது. இவ்வாறே சீனாவில், ஐரோப்பிய முதலாளித்துவ மற்றும் கம்யூனிச நாடுகளில், அமெரிக்காவில், கனடாவில், ஆக வளர்ந்த, ஓரளவு வளர்ந்த நாடுகளிலும் (முன்னாள் காலனி நாடுகள் தவிர) அவரவர்களின் தாய்மொழியே கல்வி மொழியாக இருக்கிறது. செக்கோசுலோவாகியா, அல்பேனியா, இசுரேல், தைவான் ஆகிய மிகச் சின்னஞ்சிறு நாடுகளில் கூட சில இலட்சம் மக்களே பேசும் அவரவர் தாய்மொழி கல்விமொழியாக இருப்பது குறிப்பிட்டுச் சுட்டிக் காட்டத்தக்கது'' என்பது க.ப. அறவாணன் கூறும் செய்தியாகும்.

என்னைப் போலவே, தமிழகத்தின் இன்றைய நிலைமையினையும் உடைத்துச் சொல்கிறார்.

''ஆனால் தமிழ்நாட்டில் நிலைமையே வேறு. தாய்மொழியைத் தவிர வேற்றுமொழிகளில் உரையாடுவது, எழுதுவது, பாடுவது, வழிபாடு நடத்துவது போன்ற செயல்கள் வழிவழியாகப் பின்பற்றப்படுகின்றன. பிறமொழியாளருக்கும் காலனி வல்லாண்மைக்கும் அடிமைப்பட்டுக் கிடந்தமையினால் இத்தகைய நிலை உருவானது என்பதை மறுக்க முடியாது. ஆனால் விடுதலை பெற்று மக்களாட்சி மலர்ந்தும் கல்விக் கொள்கை புதிய வழிகாட்டியும் அதே நிலைமை நீடிப்பது மக்களின் மொழி உணர்வற்ற, பொறுப்பற்ற இயலாமைச் செயலையே வெளிப்படுத்துகிறது.''

மேலும் ''ஆங்கிலேயரின் இத்தகைய ஆதிக்கக் கல்விமுறை ஆங்கிலக் கம்பெனிகளுக்குக் குமாஸ்தாக்களை (எழுத்தர், எடுபிடிகள்) உருவாக்க முனைந்ததே தவிர இந்திய நாட்டின் மொழியையோ பண்பாட்டையோ வளர்க்கவில்லை'' என்று அடித்துச் சொல்லும் அவர்,

''இந்திய விடுதலைக்கு முன்பும் பின்பும் தொடக்கக் கல்வி முதல் பல்கலைக் கழகக் கல்வி வரையில் பல்வேறு நிலைகளில் குழுக்கள் அமைத்துக் கல்விக் கொள்கைகளை வரையறை செய்தனர். எல்லாக் கல்விக் குழுக்களும் பரிந்துரை செய்த ஒருமித்த முடிவு, தாய்மொழிக்கல்வி பயிற்றல் ஆகும்'' என்பதனையும் தெளிவுபடுத்துகிறார்.

நாம் ''விடுதலை அடைந்த தருவாயில் இராதாகிருஷ்ணன் குழுவும் ஒருமனதாகப் பல்கலைக்கழக நிலையிலும் தாய்மொழி அல்லது பிரதேசமொழி மூலம்தான் கல்வி நடைபெற வேண்டுமென்று கூறியுள்ளது'' என்ற மேற்கோளையும் இங்குச் சுட்டுகிறார். நாவலர் ச. சோமசுந்தரபாரதியார் கருத்தும் இங்கு ஆழ்ந்து கவனிக்கத்தக்கது.

''கல்வியைத் தாய்மொழியாகிய தமிழில் பயில்வதே தெளிவும் திட்பமும் எளிதில் உதவும். பிறிதொரு மொழியால் அறிவுபெற வேண்டின் தாய்மொழிப் பயிற்சி தானே குறையும்; பிறமொழிக் கல்வியும் பெருகி வளராது.... எந்த நாட்டிலும் எக்காலத்திலும் எல்லாரிடையிலும் அவரவர் தாய்மொழிக் கல்வியே தழையக் காண்போம். இந்தியாவிற்கு வந்த அயலார்க்கு அடிமைப்பட்டதால் ஆங்கிலம் ஆதிக்கம் பெற்றது. தாய்மொழிக் கல்வி ஆதரவு இன்றித் தளர நேர்ந்தது. அடிப்படை, இடைநிலை, உயர்கல்விகள் எல்லாம் ஆங்கிலப் பயிற்சியால் ஓங்கிய நிலையில் தாய்மொழிப் பயிற்சி ஓய்ந்து தேய்ந்தது. உயர்கல்வி தாய்மொழிகளில் இனி இயலுமோ என ஐயுறுவாரோடு கூடாது என்று கூறுபவர் எண்ணிக்கை நம்மிடையே நாளும் வளரக் காண்கிறோம்''. இந்த நேரத்தில் க.ப. அறவாணன் தாய்மொழி வழிக்கல்வி எப்படித் திசை திரும்பிவிட்டது என்பதனை விளக்குகிறார்.

''தமிழ்நாட்டில் விடுதலைக்குப் பின் பள்ளி மொழியாக ஆங்கிலம் இருந்தது. அது அகற்றப்பட்டு காந்திய நெறிக்கு இணங்க அந்தந்த வட்டாரத் தாய்மொழி கல்விமொழியாக அறிமுகம் பெற்றது. கல்லூரி அளவில் தாய்மொழி இடம்பெறாவிடினும் கிட்டத்தட்ட தொடக்கப்பள்ளி உயர்நிலைப்பள்ளிகளில் தாய்மொழி பீடம் ஏறியது. இதன் மூலம் ஏழை எளிய மக்கள் அஞ்சாமல் பள்ளிக் கல்வியைக் கற்க வழி ஏற்பட்டது. ஆனால் அண்மைக் காலமாகக் கல்லூரி, பல்கலைக்கழகம், தொழிற்கல்விக்கூடங்கள் ஆகியவற்றுள் தொடர்ந்து தாய்மொழி கல்விமொழியாக இடம்பெற வேண்டியதற்குப் பதிலாக முன்பே தாய்மொழி இடம்பெற்றிருந்த உயர்நிலைப் பள்ளிகளும் தொடக்கப்பள்ளிகளும் காலனி ஆட்சிக்கால ஆங்கிலக் கல்வி முறைக்குத் திருப்பிவிடப்பட்டிருக்கின்றன''. தன் உண்மையான கவலையை சக்கரவர்த்தி புலப்படுத்துகிறார்.

''மாணவர்களுக்குச் சமவாய்ப்பளிக்க அரசின் கல்விக் கொள்கை வழிகோலுகிறது. ஆனால் ஆங்கில வழிக் கல்விக் கூடங்கள் அதன்வழி ஏற்படும் பண்பாட்டுச் சீரழிவு, ஏழைகள் ஏழைகளாகவும் செல்வர்கள் செல்வர்களாகவுமே வழி ஏற்படுத்திட வாய்ப்பிருக்கிறது'' என்கிறார்.

மேலும் ''இலவச தாய்மொழிக் கல்வியைப் பள்ளிகளில் பெறாமல் ஆங்கில மோகத்தால் பணம் பறிக்கும் தனியார் ஆங்கில வழிப் பள்ளிகளில் தங்கள் குழந்தைகளைப் பெற்றோர்கள் சேர்த்து அவர்கள் கல்வியில் வாழ்வைச் சீரழிக்கின்றனர்'' என்றும் குமுறுகிறார்.

க.ப. அறவாணன் கருத்து இங்கே நம்மால் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியது.

''மேலை நாடுகளில் ஏழு வயதுக்கு முன்பு வரை குழந்தைத் தோட்டங்களிலேயே குழந்தைகள் விளையாட விடப்படுகின்றனர். இந்தியாவில் குறிப்பாகத் தமிழ்நாட்டில் குழந்தைப்பள்ளி என்ற பெயரில் கொள்ளைக் கூடங்கள் பெருமையோடு நடத்தப்படுகின்றன. குழந்தைகள் பலமணி நேரங்கள் சுகாதார வசதியற்ற இடத்தில் சிறைப்படுத்தப்பட்டு, சின்ன வயதிலேயே எழுத்தையும் படிப்பையும் வெறுக்கப் பழக்கப்படுத்துகிறார்கள். அதனோடு கூடத் தாய் மொழியைப் புறக்கணித்துவிட்டு ஆங்கிலத்தில் பயிற்றுவிப்பது இப்பள்ளிகளின் நடைமுறை. எனவே சின்ன வயதிலேயே தன் தாய்மொழி பற்றிய தாழ்வுணர்ச்சி குழந்தைகளின் நெஞ்சில் குடியேற்றப்படுகிறது''.

பேராசிரியர் சக்கரவர்த்தி தன் கருத்தாகவும், பிறரது கருத்துகளை மேற்கோளாகக் காட்டியும் நமக்கொரு தெளிவை உண்டாக்கியிருக்கிறார். பாராட்டவேண்டும்.

அண்மையில் தமிழக அரசு முதல் வகுப்பிலிருந்தே ஆங்கிலத்தை ஒரு பாடமாகச் சொல்லி கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறது. இதனையொட்டி கல்வியாளர் எஸ்.எஸ். இராஜகோபாலன் என்ன சொல்கிறார் என்று பாருங்கள்.

''ஆங்கிலத்திற்கு முதலிடம் கொடுப்பது மொழி மற்றும் கலாச்சாரச் சிதைவை உருவாக்கும். ஒரு மொழிக்கே உரிய நாட்டுக் கலைகள் அழியும். தாய்மொழியே முதன்மொழி. அதில் நல்ல பாண்டித்தியம் பெறும் வரையில் அன்னிய மொழியினை, முக்கியமாக ஆங்கிலத்தை அறிமுகப்படுத்தக் கூடாது. உலகளவில் 218 மொழிகள் மறைந்ததற்கு ஆங்கில மோகமே காரணம்''என்று அடித்துச் சொல்கிறார்.

* * *

அறிஞர் வா.செ. குழந்தைசாமி

''தாய்மொழிவழிக் கல்வியின்றி வறுமை ஒழியாது! என்று அடித்துச் சொல்கிறார்.

அவர் கூற்று இதுதான்.

''தாய்மொழியில் இல்லாத அறிவியல், தொழில் நுட்ப அறிவு மக்களைச் சென்றடையாது. எனவே தாய் மொழியில் கல்வி இல்லாத நாட்டில் கல்வியின் பயனை மக்கள் முழுமையாகப் பெற இயலாது. கல்வியில் பெறத்தக்க பயிற்சியை, படிப்பினையை மேம்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் பயன்படுத்த இயலாது.

நமது அண்டை நாடுகளான இலங்கை, மலேசியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் போன்றவை நாம் சுதந்திரம் பெற்ற காலப்பகுதியில் பொருளாதார வளர்ச்சியில் நம்மையொத்த நிலையில் இருந்தவை. இன்று அவை கணிசமாக முன்னேறியுள்ளன. அவை அறிவியல் தொழில் நுட்பத் துறையில் இன்றும் நம் நிலைக்கு வளர்ந்தவை அல்ல. ஆனால் அவர்கட்கு இரண்டு வலிமைகள் இருந்தன; இருக்கின்றன. மேம்பாட்டு முயற்சியில் மக்கள் அனைவரும் நெருக்கமாகப் பங்கேற்க வேண்டும் என்பதுதான். ஒவ்வொரு தொழிலாளியின் உற்பத்தித் திறனும் பன்மடங்கு பெருக வேண்டும். வளர்ந்துள்ள அறிவியல் தொழில் நுட்பம் எல்லாத் துறையிலும் மக்களால் பயன்படுத்தப்படவேண்டும். இது நாம் முன்பு குறிப்பிட்ட நாடுகட்குச் சாத்தியமாயிற்று. நம்நாட்டில் இது ஒன்றும் சாத்தியமாகவில்லை. நமது நாட்டில் உயர் கல்வி, குறிப்பாக வேளாண்மை, மருத்துவம், பொறியியல், மேலாண்மை போன்ற துறைகளில் கல்வி தாய்மொழியில் இல்லை. தொழில் சார்ந்த பயிற்சிப் படிப்பும் தாய்மொழியில் இல்லை. எனவே அறிவியல், தொழில் நுட்ப அறிவு மக்களிடையே பரவவில்லை. அறிவியல் தொழில் நுட்பம் சார்ந்த பயிற்சிகளைப் பொறுத்தவரை நமது மக்களில் பெரும்பாலோர் இன்னும் தற்குறிகள்.

எனவே நம் நாட்டின் வறுமை ஒழிய வேண்டுமானால் கல்வி தாய்மொழியில் அமைய வேண்டும். தாய்மொழிவழிக் கல்வி இன்றி வறுமை ஒழியாது.''

தாய்மொழிக் கல்விதான் மக்களின் வறுமையைப் போக்கும் வாயில் என்று விரிவாக எடுத்துச் சொல்லியுள்ளார் முனைவர் வ.அய். சுப்பிரமணியன்.

1999ஆம் ஆண்டில் அப்போதைய முதல்வர் கலைஞரின் பவளவிழா. அதனையொட்டி 'தினமணி கதிர்' 75 பேரிடம் கருத்துரைகள் பெற்று வெளியிட்டது. அவற்றை முதலில் பாருங்கள்.

1) ராஜம் கிருஷ்ணன், எழுத்தாளர்:

அனைத்து மழலைத் துவக்கப் பள்ளிகளிலும் கட்டாயப் பாடமாக தாய்மொழியே பயிற்று மொழியாக்கப்பட வேண்டும்.

2) தோப்பில் முஹம்மது மீரான், எழுத்தாளர்:

மழலையர் பள்ளி முதல் கல்லூரி வரை தாய்மொழி தமிழ் வழிக் கல்வியைக் கட்டாயமாக்க வேண்டும்.

3) எம். எஸ். உதயமூர்த்தி, மக்கள் சக்தி இயக்கம்:

சுய சிந்தனை வளர குறைந்தபட்சம் பத்தாவது வகுப்பு வரை தாய்மொழிக் கல்வி தேவை.

4) எஸ். எஸ். ராஜகோபாலன், கல்வியாளர்:

அனைத்துப் பள்ளிகளிலும் முதன் மொழியாகத் தமிழைக் கற்பிக்க முதற்படியாகத் தொடக்கக் கல்வியைத் தமிழிலேயே தர வேண்டும்.

5) இந்திரா பார்த்தசாரதி, எழுத்தாளர்:

எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளும் ஆரம்பப் பள்ளி முதல் கட்டாயப் பாடமாக இருக்க வேண்டும். பள்ளி, பல்கலைக்கழகம் ஆகிய எல்லா நிலைகளிலும் தமிழ் பயிற்று மொழியாக உறுதி செய்யப்பட வேண்டும்.

6) சிற்பி பாலசுப்பிரமணியம், கவிஞர்:

என்ன விலை கொடுத்தேனும் மழலைக் கல்வி முதல் பல்கலைக்கழகக் கல்வி வரை தாய்மொழி வழிக் கற்பிக்க சட்டம் இயற்ற வேண்டும். பொறியியல், மருத்துவத் துறைகளில் அனைத்திந்திய அமைப்புகள் தமிழை அங்கீகரிக்க மறுக்குமானால் அரசு அவர்களோடு விவாதித்து ஏற்கும்படி செய்தல் வேண்டும்.

7) தமிழண்ணல்:

தாய்மொழியின் எதிர்காலம் இன்றைய கல்வி முறையில் இருக்கிறது. மழலையர் நாவில் முழுவது தாய்மொழியே தவழ வேண்டும். முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழே இடம்பெற வேண்டும். தமிழ் பாடமாகக்கூட இல்லாமல், பள்ளிகள் ஆயிரக்கணக்கில் நடப்பது கொடுமையிலும் கொடுமை. தாய்மொழிக் கல்வி அடித்தளமாக அமைந்த பின், எத்தனை மொழிகளைப் படித்தாலும் வளரும் மாணவர்களிடம் மொழிச் சிதைவு ஏற்படாது. மாணவர்களுக்கு ஆர்வம் ஏற்பட, உயர்கல்வி அனைத்திலும் தமிழுக்குரிய சிறப்பிடத்தை உடனே வழங்கத் தலைப்பட வேண்டும். ஆட்சிமொழி வெற்றியும் அதில்தான் அடங்கியிருக்கிறது. மிகத்

திறமையான முதல்வர் கருணாநிதியால் இது முடியாமல் போகாது.

27.7.1967இல் சென்னை சைதாப்பேட்டையில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி.ில் 'தமிழ் வழி வகுப்புகளைத்' தொடங்கி வைத்து அறிஞர் அண்ணா ஆற்றிய தலைமை உரை இது:

தமிழில் பாடமொழி இருக்கவேண்டும் என்பது என்று சொல்வது இந்த நாட்டில்தான் தேவைப்படுகிறது. ஆங்கிலநாட்டில் ஆங்கிலந்தான் பாடமொழி என்று சொல்ல வேண்டிய தேவை ஏற்படவில்லை. எந்த நாட்டிலும் இல்லாத விந்தை இங்கேதான் இருக்கிறது.

''தமிழில் கற்பிக்கலாமா?'' என்னுங் கேள்வியும், ''முடியுமா?'' என்னும் எதிர்ப்பும், ''பார்க்கலாம்'' என்னும் சந்தேகமும், தமிழ்மொழிப் பயிற்சி பெறுபவர்கள் என்ன ஆவார்கள்? இதுவரை பெற்றவர்கள் என்ன ஆனார்கள்?'' என்று இந்தநாட்டிலேதான் பேசப்படுகிறது.

தமிழால் முடியும் என்னும் நிலை ஏற்படுவதற்குக் காரணம் நாம் அதற்கான முயற்சியில் ஈடுபட்டு விட்டோம்; முன்னேறி வருகிறோம். தமிழால் முடியும் என்று காட்டுவோம், அதற்குரிய நம்பிக்கை நிரம்ப ஏற்பட்டிருக்கிறது. இதிலே வெற்றி பெறுவதற்கு இப்போது இல்லாத அளவிற்கு நமக்கு ஆங்கில மொழியில் தொடர்பு வேண்டும். இரும்பு இல்லாமல் கருவிகள் இல்லை. தமிழ் இருப்பதால் மட்டும் காரியம் முடிந்து விடாது.

இன்னும் பத்துப் பதினைந்து ஆண்டுகளில் வழக்கறிஞர்கள் தமிழில் வாதாடுவதை நாம் பார்க்க முடியும்.

தமிழில்தானே கண்ணகி வாதாடினாள். அவள் கூறிய வாதங்களை ஆங்கில மொழியாலும் அளிக்க முடியாது. அரசர் ஆணைகளைத் தமிழில்தானே பிறப்பித்தார்கள்.''

தமிழ், கல்விக்கூடங்களில் பயிற்றுமொழியாகவேண்டும் எனும் கொள்கையில் **சி.சு.** மிகத் தெளிவாக இருந்தார்.

தமிழ்ச்சிந்தனைதான் தமிழனின் திறமையை வெளிப்படுத்தும். அதற்குத் தேவை தமிழ் வழிக் கல்வி.

இதோ அவர் கருத்து.

''தாய்மொழிக் கல்வி அவசியம்: சி.எஸ்.

பள்ளிகளில், தாய்மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என மகாராஷ்டிர மாநில முன்னாள் ஆளுநரான சி. சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

ஈரோட்டில் நிருபர்களிடம் சி. சுப்பிரமணியம் தெரிவித்ததாவது:

'ஆங்கிலம் அவசியம்தான். ஆனால், பயிற்று மொழியாக இருப்பது சரியல்ல. தாய்மொழிதான் இருக்க வேண்டும். மற்ற மொழிகளைக் கற்பதில் தவறில்லை. முதல் ஐந்து ஆண்டுகளுக்குத் தாய்மொழி வழியில்தான் கல்வி என சட்டம் கூட இயற்றலாம்.

கல்வி இப்போது சேவையாக இல்லை. நன்கொடை என்ற பெயரில் பணம் வசூலிக்கும் வியாபாரமாக்கிவிட்டார்கள். வசதியுள்ளவர்களுக்குத்தான் கல்வி என்று மாற்றிவிட்டார்கள். இந்த நிலை மாறவேண்டும் என்று சி. சுப்பிரமணியம் கருத்துத் தெரிவித்தார்.''

எல்லா மட்டங்களிலும் தமிழ் பயிற்றுமொழியாக இருக்கவேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். (தினமலர் 22.6.97)

மாநிலக் கல்வியமைச்சராக மட்டுமின்றி, நடுவண் அரசின் அமைச்சராகவும் (Cabinet Minister) மாநில ஆளுநராகவும் இருந்த சி.சு. கடைசி வரை தன் கருத்தில் உறுதியாக இருந்தார்.

ஆனால் நடுவண் அரசு அமைச்சராக இருக்கும் முரசொலி மாறன் இவற்றை ஒழிப்பதில் கவனமாக இருந்தார். நாம் தோல்வியடைந்த போதெல்லாம், மகிழ்ந்து துள்ளி ஆடியவர் முரசொலிமாறன்.

இயல் இருபத்தெட்டு - அ

அரசியல் தலைவர்களின் ஆர்வமும் அக்கறையும்

தமிழ் வழிக் கல்வியை ஏற்றும், ஆணையை வரவேற்றும் எல்லா அரசியல் கட்சித் தலைவர்களும் அறிக்கைகள் விட்டார்கள். அ.தி.மு.க. பொதுச் செயலாளர் புரட்சித்தலைவியின் அறிக்கை மட்டும் மாறுபட்டிருந்தது. அதற்கும் பிற அரசியல் கட்சித் தலைவர்கள் மறுப்புத் தெரிவித்திருந்தனர்.

பிப்ரவரி 14, 1997 அன்று நடைபெற்ற 'அக்னி' அமைப்பின் விழாவில் 'இதுவரை தமிழ்' எனும் தலைப்பில் உரையாற்றினேன். எனக்கு முன் பேசிய எழுத்தாளர் இராசம் கிருட்டிணன் அவர்கள் 'ஒன்று முதல் ஐந்து வகுப்புவரை தமிழைக் கட்டாயப் பயிற்றுமொழி ஆக்குங்கள்' என்று பேசினார். நானும் ஆவன செய்வதாக உறுதியளித்தேன். இந்த விழாவில் பேசிய த.மா.க. தலைவர் கருப்பையா மூப்பனார் அவர்களும் இந்தக் கருத்தை வலியுறுத்தினார்.

தமிழக அரசு ஆணை பிறப்பித்தபின் தமிழக பா.ஜ.க. பொதுச் செயலாளர் இல.கணேசன் இதனை வரவேற்று ஓர் அறிக்கை விடுத்தார் (மாலைமுரசு 17.11.98) அவர் கருத்து:

''எனக்கு தமிழே பேச வராது. எனக்கு தமிழ் படிக்க வராது என்பதை பெருமையாக கூறிக் கொள்ளும் ஒரு தலைமுறை தமிழகத்தில் உருவாகிவிட்டது. தமிழகத்தைச் சேர்ந்த ஒரு பெற்றோர்களின் வாரிசுகள் தமிழே படிக்காமல் முதுநிலை பட்டம் கூட பெறக்கூடிய வாய்ப்புகள் வந்து விட்டன.

தமிழை கற்றுத் தரும் வாய்ப்புள்ள பள்ளிகள் இருந்தாலும் ஆங்கில போதன மொழி பள்ளிகளுக்கே ஆதரவு தரும் நிலையில் தமிழகம் உள்ளது என்பதும் வேதனை த்ரும் விஷயம். தெரிந்ததில் இருந்து தெரியாததை தெரிந்து கொள்வதே இயற்கை. தாய்மொழி மூலம் ஏனைய மொழிகளை கற்பதே இயற்கை. மற்றவை இயற்கைக்கு விரோதமானது.

ஒருவன் தாய்மொழியில் விஞ்ஞானத்தையும், வரலாற்றையும் கற்கும்போது அவன் நேரிடையாக விஷயங்களை கற்கலாம். வேற்று மொழி மூலம் கற்கும் போது அவன் மொழியையும் கற்று, கருத்துக்களையும் புரிந்து கொள்ள வேண்டும்.

முதுநிலை பட்டப்படிப்பு படிக்கும் ஒருவன் தேர்வுக்கு முன்பு உரக்க ஆங்கில வார்த்தைக்கு ஸ்பெல்லிங்கை மனப்பாடம் செய்யும் காட்சியை சகஜமாக காண முடிகிறது. இது தேவையற்ற சுமை.

வளர்ந்து முன்னேறிய நாடுகள் தாய்மொழியிலேயே படித்து முன்னேறியுள்ளார்கள். வழக்கொழிந்த ஹீப்ரு மொழியை இஸ்ரேல் உருவானவுடன் ஆட்சி பீடத்தில் அமர்த்திவிட்டார்கள்.

மெல்லத்தமிழ் இனிச்சாகும் என்றும் தமிழ் அருங்காட்சியகத்துக்கு சென்றுவிடும் என்றும் எண்ணி எண்ணி வேதனையால் இதயத்துள் ரத்தம் சிந்துபவர் ஏராளமானோர். மழலையர் பள்ளிகளில் தமிழ் பாடமாகும் என்பது ஆறுதலான விஷயம். எதிர்ப்புகள் வரலாம். சிலர் நீதிமன்றம் செல்லலாம். ஆனால் அரசு உறுதியுடன் இருந்து இதை அமல்படுத்த வேண்டும்.

தமிழ் போதனா மொழி பள்ளிகளை ஆதரிக்க தமிழர்களிடையே தீவிர பிரசாரம் தேவைப்படுகிறது. தமிழ்வழி பள்ளிகளுக்கு அரசு அங்கீகாரம் பெற முன்னுரிமைகளும் சலுகைகளும் வழங்கப்பட வேண்டும்.

தமிழ்வழி பள்ளியில் பயிலும் மாணவர்களுக்கு விசேஷ இடஒதுக்கீடு அல்லது முன்னுரிமை கல்வி நிலையத்திலும் வேலை வாய்ப்பிலும் தரப்படுதல் வேண்டும். இந்த வகையில் தாமதமாக பிறப்பிக்கப்பட்டிருந்தாலும் கூட தேவையான ஆணை என்கின்ற வகையில் வரவேற்கின்றேன் என்று கூறியிருந்தார்''.

தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் கோவை செழியன் ஓர் அறிக்கை வெளியிட்டார். அவரது ஆதரவுக் குரல் இது. (தினபூமி 18.11.98)

''மழலையர் தொடக்கப் பள்ளிகளில் தமிழ் வழியில்தான் கற்பிக்கப்பட வேண்டும் என்று தமிழக அரசு ஆணையை அறிவித்தது கேட்டு மிகவும் மகிழ்ச்சியடைந்து தமிழக முதல்வரையும் கல்வி அமைச்சர் அன்பழகன், தமிழ்க்குடிமகன் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனைவரையும் தமிழ் தேசிய கட்சியின் சார்பில் மனமார பாராட்டுகிறேன்.

தமிழக அரசு ஆணைப்படி தமிழை ஒரு பாடமாக சொல்லித் தரும் பள்ளிகளுக்குத்தான் அங்கீகாரம் அளிக்கப்படும் என்றும் அடுத்த கல்வியாண்டில் இருந்து பூகோள வரலாறு, கணிதம், சமூக அறிவியல் போன்ற பாடங்களை தமிழில்தான் கற்பிக்க வேண்டுமென்று ஆணையிடப்பட்டுள்ளது. தமிழ் மொழி வழியில் இயங்கி வரும் மழலையர் பள்ளிகளுக்கு நிறைய சலுகைகள் தரப்படுகின்றது. தமிழகத்தில் தமிழ் படிக்கலாம். இடையே

ஆங்கிலத்தோடு தங்கள் தாய் மொழியை மட்டுமே படிக்கும் ஆரம்ப, தொடக்க பள்ளிகள் மொத்தம் ஆயிரத்து எட்டும் இனிமேல் தமிழும் கற்க வேண்டுமென்று முடிவெடுத்திருப்பது பாராட்டுக்குரியது'' என்கிறார் அவர்.

கருப்பையா மூப்பனார் புதுக்கல்லூரி மாணவர் பேரவையைத் தொடங்கி வைத்துப் பேசும்போது அரசின் ஆணை குறித்தும் பேசியுள்ளார். (தினகரன் 10.12.98)

''தமிழ்மொழிக்கு முன்னுரிமை கொடுப்பதில் மாற்று கருத்து இல்லை. அதேநேரத்தில் தொடர்பு மொழியாக இருக்கும் ஆங்கிலத்தை நாம் முற்றிலுமாக புறக்கணித்து விடக்கூடாது'' என்று கூறினார் அவர். மேலும், பேசும்போது,

''தமிழக அரசுக்கு ஒரு கோரிக்கை விடுக்க விரும்புகிறேன் எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்பதில் எனக்கு கருத்து வேறுபாடு இல்லை. அதே நேரத்தில் ஆங்கிலத்தை நாம் புறக்கணித்து விடக்கூடாது.

தமிழ்நாட்டில் நாம் இந்தி மொழியை ஏற்றுக்கொள்வது இல்லை. எனவே நாம் தமிழ் நாட்டில் மட்டும் வசிப்பவர்கள் அல்ல. வேறு மாநிலங்களுக்கும் செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். தொடர்பு கொள்கிறோம். எனவே நமக்கு தொடர்பு மொழி அவசியம் இந்தியை ஏற்காதபோது ஆங்கிலம் தொடர்பு மொழியாக இருந்து வருகிறது. ஆகவே நாம் ஆங்கிலத்தை முற்றிலுமாக புறக்கணித்து விடக்கூடாது. இதை தமிழக அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்''

ஒருமொழிக் கொள்கையே உகந்தது என்று கூறுபவர்களுக்கு மூப்பனார் விளக்கம் வேப்பங்காயாக இருக்கும். ஆனால், ஒரு மாநிலமாக அமைந்துள்ள தமிழ்நாட்டுக்கு இதுவே வழி என்பதும் உண்மை. ஆனால் அதற்காக ஆங்கிலம் வல்லாண்மை செலுத்த விடுவோம் என்பது என்றும் இல்லை. தமிழுக்குரிய இடத்தை எந்த மொழி கவர்ந்தாலும் தடுக்கவும், ஒடுக்கவும் வேண்டியதே நம் கடமையாகும்.

மதுரை மாவட்ட எம்.ஜி.ஆர். கழகத்தின் சார்பில் கருணைதாசன் தலைமையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (மாலைமுரசு 9.12.99) இது முற்றிலும் வேறுபட்ட கோணத்தில் உள்ளது.

அந்தத் தீர்மானம் இதுதான்:

''தமிழ் வழிக்கல்வி சம்பந்தமாக 1 முதல் 5-ம் வகுப்பு வரை தமிழ்வழி கற்றுக் கொடுக்க வேண்டும் என்ற ஆணையை எதிர்த்து நீதிமன்றம் செல்லும்

மெட்ரிக்குலேசன் பள்ளிகள் நடத்தும் உடைமையாளர்களின், மேல் விசாரணை கமிஷன் அமைத்து இவர்களின் ஆரம்பகால நிலை, இவர்களின் அசையும் சொத்து அசையா சொத்துக்களின் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது''

சரியான கருத்து இது; பணம் புரட்டும் வணிகர்களாகி. கல்வியைக் காசுக்கு விற்கும் ஒரு கூட்டத்தின் அடிப்படையை ஆராய்ந்தால் உண்மை விளங்கிவிடும், கருணைதாசன் தீர்மானம் பாராட்டுக்குரியது.

இந்தக் காலகட்டத்தில் தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி சென்னையில் (முரசொலி 7.12.98) நடத்திய நான்காம் உலகத் தமிழாசிரியர் மாநாட்டில் மாநகராட்சித் துணை ஆணையர் கரிகால்வளவன் ஒரு செய்தியைக் குறிப்பிட்டார்.

''எட்டாம் வகுப்பு வரை தமிழ்தான் பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்ற தமிழக அரசின் மொழிக் கொள்கைதான் சென்னை மாநகராட்சி மழலையர் பள்ளிகளில் பின்பற்றப்படும்.

வீட்டில் உள்ள ஒவ்வொருவருக்கும் சிறு வயது முதலே தாய்மொழிப் பற்றினை ஊட்டி வளர்க்க வேண்டும். அப்போதுதான் பிற்காலத்தில் தாய்மொழியின் மீது அவர்களுக்குப் பிடிப்பு இருக்கும்'' என்றார் அவர்.

இந்த மாநாட்டில் பேசிய காங்கிரசுக் கட்சியின் மேனாள் தலைவர் குமரி அனந்தன் பேசியது:

''இப்போது அரசாங்கம் எட்டாம் வகுப்பு வரை சில பாடங்களுக்காகவாவது தமிழை பயிற்று மொழி என்று அறிவிப்பதை வரவேற்கிறேன். வெள்ளையன் ஆண்டு கொண்டிருந்த நாட்களில் கூட எட்டாம் வகுப்பு வரை தாய்மொழியில்தான் நடந்தன. அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கே இத்தனை ஆண்டுகாலம் ஆகிவிட்டது. தமிழ் நெஞ்சமுடைய தமிழக முதலமைச்சர் எதைப் பற்றியும் கவலைப்படாமல் தமிழ்ப்பயிற்று மொழித் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். இதைத் தொடக்கமாகக் கொண்டு பயிற்று மொழி தமிழ் என்பதை கலைஞர் நிலைநாட்டமுடியும். தமிழைக் கட்டாயப் பாடமாகவும், எந்த மொழியைப் படிக்க விரும்பினாலும் மொழி என்ற வகையில் அவரவர் தாய் மொழியில் படிப்பதற்கு வாய்ப்பளிப்பதுவுமான திட்டத்தை கலைஞர் நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்'' என்றார் அவர்.

அரசாணைக்கு எதிர்ப்புத் தெரிவித்து மெட்ரிகுலேசன் பள்ளிகள் நடவடிக்கை மேற்கொண்டபோது குமரிஅனந்தன் மற்றோர் அறிக்கை விட்டார். (கதிரவன் 24.2.2000)

''அண்ணல் காந்தி மகான் மயிலாடுதுறைக்குச் சென்ற போது அங்கே ஆங்கிலத்தில் வரவேற்புரை படித்துக் கொடுக்கப்பட்டது. அதை அவர் வரவேற்கவில்லை. மாறாக நீங்கள் தமிழிலே எழுதித் தந்திருக்கலாம் என்று பதில் கூறினார். அது மட்டுமின்றி பயிற்சி மொழி தாய்மொழியாக இருக்க வேண்டும் என்பதே அவர் கருத்து. தமிழர்களிடம் சத்தியாக்கிரகக் கருத்தைப் பரப்புவதற்குத் தென் ஆப்பிரிக்காவிலேயே தமிழில் ஏடு நடத்தினார் காந்தி.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்' என்று ஆங்கிலத்தில் பெரும் புலமை பெற்றிருந்த பாரதி, தமிழ் மொழியிலேயே கற்றுக் கொடுக்க வேண்டும் என்றார். அதோடு அ...ன் என்று எழுதி இக்குறியீட்டுக்கு அ முதல் ன் வரை எல்லாம் தமிழிலேயே நடக்க வேண்டுமென்பது பொருள் என்று ஆணித்தரமாக எழுதுகிறார். ஸ்லேட், பென்சில் என்று கூறக்கூடாது, பலகை, குச்சி என்றுதான் கூற வேண்டும் என்றார் பாரதி.

மலேசிய நாட்டில் ஆறாவது வகுப்பு வரை அனைத்துப் பாடங்களுக்கும் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்ட 548 பள்ளிகள் அரசு மான்யத்தோடு நடக்கின்றன. மேற்படிப்பிலும், எந்த வகுப்பிலும் 15 பேர். தமிழ் மொழியைப் படிக்க விரும்பினால் அதற்கு ஆசிரியரை நியமித்துக் கொடக்கிறது அங்குள்ள அரசு.

பயிற்று மொழி தமிழே என்ற கருத்தரங்கை எண்பதுகளிலேயே நடத்தி பேரருளாளர்கள், அறிஞர்கள் கருத்தை ஆதரவாகத் திரட்டியவன் நான்.

இப்போதோ காலம் கடந்து விட்டது என்ற ஏக்கம் நம் நெஞ்சில் நிழலாடும் போது முதல் படியையே தாண்ட விடமாட்டோம் என்பது போல் சிலர் நடந்து கொள்வது வேதனைக்குரியது.

பாராளுமன்றத்திலேயே தமிழிலும் மற்ற தாய்மொழிகளிலும் வினா தொடுக்கும் உரிமை வேண்டும் என்று போராடி வெற்றி வெற்றவன் என்ற முறையிலும் பண விடைத்தாளில் தமிழ் இடம் பெற்றே தீர வேண்டும் என்பதில் உறுதியாக நின்று போராடியவன் என்ற வகையிலும் தமிழகத்தில் தமிழ் முதற்கட்டமாக ஐந்தாவது வகுப்பு வரை பயிற்று மொழியாவதை காந்திப் பேரவையின் சார்பில் வரவேற்கிறேன்'' என்றார் அவர்.

ஆனால் இது காங்கிரசுக் கட்சியின் கருத்தன்று. இதே கட்சியைச் சேர்ந்த திண்டிவனம் இராமமூர்த்தியும் பீட்டர் அல்போன்சும் தமிழ்வழிக் கல்விக்கு எதிரான கருத்தினைத் தெரிவித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

19.11.99இல் வெளியிடப்பட்ட அரசாணையை வரவேற்று ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. ஓர் அறிக்கை வெளியிட்டார் (தினமணி 30.11.99)

''வரும் நூற்றாண்டில் தமிழ்வழிக் கல்வி அதன் இலக்கை எட்டும் என்ற நம்பிக்கை இந்த ஆணையின் மூலம் எல்லோருக்கும் பிறந்துள்ளது.

அண்டை மாநிலமான கர்நாடகத்தில் தாய்மொழியான கன்னடத்தைப் பயிற்றுமொழியாக கர்நாடக அரசு அறிவித்துள்ளதை அனைவரும் அறிவர். அதேபோல் இப்பணி தமிழக முதல்வரின் சீரிய முயற்சிக்கு நிச்சயம் வெற்றி பெற்றே தீரும்.

உயர்கல்வி வரை தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்டு படித்துவிட்டு, அதன் பிறகு ஆங்கிலவழிக் கல்வி கற்றவர்கள் அரசியலில் - அறிவியலில் - இலக்கியத்தில் வித்தகர்களாக விளங்குகின்றனர் என்பதற்கு ஓராயிரம் எடுத்துக்காட்டுகளைப் பட்டியலிட முடியும்.

வானம் பார்த்த பூமியில் - ராமேசுவரத்தில் - அரசு திண்ணைப் பள்ளிக்கூடத்தில் கல்வி கற்ற அப்துல்கலாம் இன்று அகிலத்தில் சிறந்த விஞ்ஞானி.

தாய்மொழியில் பலமான அடித்தளம் அமைந்தால்தான் அயல்மொழி அறிவு வசப்படும்.

மேற்கு வங்கம், மகாராஷ்டிரம், கர்நாடகம், குஜராத் மாநிலங்களில் தாய்மொழியே உயர்கல்வி வரை பயிற்றுமொழியாக இருக்கின்றது.

இதுகாலத்தின் கட்டாயம் என்பதைக் கருத்திற் கொண்டு, நர்சரி மற்றும் மெட்ரிக் பள்ளி நடத்துகின்றவர்கள் அரசாணையைப் பின்பற்றி ஒத்துழைக்க வேண்டும்.

தமிழ் எல்லா நிலையிலும் ஆட்சிமொழி ஆவதற்கான சூழ்நிலை இந்த அரசாணையின் மூலம் கனியத் தொடங்கியுள்ளது.

தமிழ் அமைப்புகளின் நீண்ட நாள் கோரிக்கை இந்த ஆணையின் மூலம் நிறைவேறப் போகிறது.

இதற்காகத் தொடர்ந்து போராடி வந்த தமிழ்ச் சான்றோர்க்கும் தமிழறிஞர்களுக்கும் பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் ம.தி.மு.க. தெரிவித்துக் கொள்கிறது.

தனது செயல்திட்டத்திலேயே 1996 டிசம்பரிலிருந்து தமிழ் பயிற்று மொழியை ம.தி.மு.க. தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

புதிய நூற்றாண்டில் தமிழன்னை புதிய பொலிவுடன் துலங்க மேற்கொள்ளப்படும் தமிழக அரசின் முயற்சிக்கு அனைவரும் துணை நிற்கவேண்டும்'' என்று வற்புறுத்தியுள்ளார் வை.கோ.

அரசு முடிவை எதிர்க்கும் தனியார் பள்ளிகளைக் கண்டித்து பா.ம.க. நிறுவனத் தலைவர் மருத்துவர் இராமதாசு ஓர் அறிக்கை வெளியிட்டார் (தினகரன் 30.11.99)

''ஆரம்பப் பள்ளிகளில் தமிழை பயிற்று மொழியாக்க தமிழக அரசு எடுத்துள்ள முடிவுக்கு சில தனியார் பள்ளிகளின் நிர்வாகம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. வன்மையாக கண்டிக்கத்தக்கது. தமிழை அன்னிய மொழியாகவும், ஆங்கிலத்தை தாய்மொழியாகவும் நினைத்து ஆங்கில கல்வியை அளிக்கவேண்டும் என்ற வாதம் மன்னிக்க முடியாத குற்றமாகும்.

தமிழை பயிற்று மொழியாக்க வேண்டும் என்ற தமிழக அரசின் முடிவு வரவேற்கத்தக்கது. பாட்டாளி மக்கள் கட்சி இம்முடிவுக்காக தமிழக அரசை பாராட்டுவதோடு இதனை நிறைவேற்ற அனைத்து ஆதரவையும் அளிக்க தயாராக இருக்கிறது.

அறிவு, ஆற்றல், குணநலன் மற்றும் புரிந்துகொள்ளும் - திறமை ஆகியவற்றை பெறுவதற்கு ஆரம்ப பள்ளிகளில்தான் அடிப்படை அமைக்கப்படுகிறது. இளமைக் கல்விதான் சிறந்த மனிதனை உருவாக்குகிறது. இக்கல்வி தாய்மொழியில் அமைந்தால் சமூக வளர்ச்சிக்கு உதவும். தாய்மொழிக் கல்வி மனித திறமையும் ஆற்றலையும் உருவாக்கி ஊக்குவிக்கிறது. ஜப்பான், ஜெர்மனி, பிரான்சு, ரஷியா போன்ற நாடுகளின் அனுபவங்கள் தாய்மொழிக் கல்வியின் மூலம் சமுதாயத்திற்குத் தேவையான அறிவாளிகளையும், அறிஞர்களையும், விஞ்ஞானிகளையும், நல்ல குடி மக்களையும் உருவாக்க முடியும் என்ற உண்மையை உணர்த்துகிறது.

அன்னிய மொழிக்கல்வி, குறிப்பாக ஆங்கில கல்வி மூலம் ஒரு குழந்தையின் வரப்படுத்தும் மனசக்தியை - மட்டும்தான் ஊக்குவிக்க முடியுமே தவிர, சமுதாயத்தை புரிந்கொள்ளும் ஆற்றலை வளர்க்க முடியாது. இக்கல்வி

குழந்தைகளுக்கு தேவையில்லாத பல விவரங்களையும் அளித்த அவர்கள் மீது கடும் பாரத்தை சுமத்துகிறது. தமிழ் கலாச்சாரம், பண்பு வரலாறு, தேசப்பற்று ஆகியவற்றை புரிந்து நல்ல குடிமகன்களாக மாறுவதற்கு இக்கல்வி வாய்ப்பளிப்பது இல்லை என்பதை கடந்தகால இந்திய அனுபவம் நமக்கு உணர்த்தியுள்ளது.

தமிழக அரசினால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு தாய்மொழிக் கல்வியின் மூலம் விளையும் நன்மைகளை ஆராய்ந்து தமிழக மக்களுக்கும் தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கும் உகந்த இக்கல்வி முறையை பரிந்துரைத்துள்ளது. ஆரம்ப பள்ளிகளில் தாய்மொழிக் கல்வியை அறிமுகப்படுத்த தமிழக அரசு எடுத்துள்ள தைரியமான நடவடிக்கைக்கு தமிழக மக்கள் அனைவரும் ஆதரவு தர வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறது'' என்று கூறியிருந்தார் அவர்.

சிறிது காலம் சென்றபின் புரட்சித் தலைவியின் அறிக்கைக்குக்குப் பின் திருவள்ளூரில் நடைபெற்ற தொகுதி மாநாட்டில் இராமதாசு பேசியுள்ளார். (தினபூமி 2.3.2000)

''தமிழிலே படிக்க சொல்லணும். சிலர் ஆங்கிலத்திலே படிக்க வைக்க கான்வெண்டிற்கு அனுப்புகிறார்கள். உலக அறிஞர்கள் என்ன சொல்கிறார்கள். தாய்மொழியில் படிக்க சொல்கிறார்கள். ஜப்பான், சீனா, இத்தாலி போன்ற நாடுகளில் அந்தந்த நாட்டு தாய் மொழியிலே படிக்கின்றார்கள். விருப்பப்பட்டால் ஆங்கிலத்திலே படிக்கலாம். 1965-ல் இந்திப்போர் நடைப்பெற்றது. இந்தியை கொண்டுவந்ததை மாணவர்கள் எதிர்த்தார்கள். காங்கிரஸ்காரன் 3 மொழி படிக்க சொன்னான். திராவிட கட்சிகள் தமிழ், ஆங்கிலம் என்றார்கள். நாம் சொல்கிறோம் ஒரு மொழி மட்டும் படிக்க வேண்டும் என்று சொல்கின்றோம். ஆங்கிலத்தை பாடமொழியாக படிக்கலாம். என்ன நடக்குது? எங்கே பார்த்தாலும் கான்வென்ட், கிராம புறங்களிலே கூட தான் கான்வென்ட் விளம்பரம் நடக்குது? அங்குள்ள ஆசிரியருக்கு ஆங்கிலம் தெரியாது. இனி அம்மா, அப்பா என்று சொல்லி கொடுக்க மாட்டார்கள். மம்மி, டாடி என்று சொல்லிக் கொடுப்பார்கள். நர்சரி பள்ளிகளிலே ஏமாற்றுகின்றார்கள். வித்யா மந்திர் என்று சொல்கிறார்கள். அங்கு நம் மொழி நீசமொழி என்று கூறுகிறார்கள். முதலமைச்சர் 5-ம் வகுப்பு வரை எல்லா பள்ளி கூடங்களிலும் தாய் மொழியில் படிக்க வைக்க வேண்டும் என்று உத்தரவு போட்டார். ஆங்கிலத்திலே பாட மொழி பயிற்சிமொழி உள்ளது. இதனை தமிழில் படிக்கின்றார்கள். தமிழுக்கு தீங்கு நடைபெற்றால் அதனை தடுத்தி நிறுத்தி பாடுபடும் இயக்கம் பா.ம.க. இங்கே கூறுவதை போல

கர்நாடகத்திலே போய்கூற முடியுமா? பஸ் ஏறி வரமுடியுமா? ரவுடி வாட்டாள் நாகராஜ் சும்மா இருப்பானா? கேரளா, மேற்கு வங்காளத்திலே போய் சொல்லி விட்டு வரமுடியுமா? கான்வெண்ட்காரர்கள் கோர்ட்டுக்கு போய்விடுகிறார்கள்'' என்று கருத்துரை வழங்கியுள்ளார்.

ஒரு நூல் வெளியீட்டு விழாவில் இந்தியப் பொதுவுடைமைக் கட்சித் தலைவர் (CPI) திரு. நல்லகண்ணு பேசியுள்ளார் (தினமணி 11.1.2000)

''நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ் நாட்டில் கல்வி அமைச்சராக இருந்த சி. சுப்பிரமணியம், கல்லூரிகளில் தமிழ்வழிக் கல்வியை அறிமுகப்படுத்திய போது தமிழில் முடியுமா என்ற வினா எழுப்பப்பட்டது. அப்போது மருத்துவம், தொழில் நுட்பம் உள்ளிட்ட அனைத்துப் பாடங்களையும் கற்பிக்க தமிழால் முடியும் என்று பல துறை அறிஞர்களைக் கொண்டு நா.வானமாமலை தலைமையில் கருத்தரங்கம் நடத்தப் பட்டது. இதில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் நூலாகவும் வெளியிடப்பட்டன.

ஆனால், இன்றும் தமிழால் முடியாது என்று கூறுவது புதிராக உள்ளது. தாய்மொழியில் படித்து, சிந்தித்து, தாய்மொழியிலேயே எழுதினால்தான் உண்மையான அறிவுப்பெருக்கம் ஏற்படும்'' என்று பேசியுள்ளார்.

மேலும் நேரடியாக அவர், தமிழ்வழிக் கல்விக்குத் தன் ஆதரவைத் தெரிவித்துள்ளார். (கதிரவன் 24.2.2000) அவர் அளித்த நேர்காணல் இது:

''தமிழ்நாட்டில் 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை தமிழ் தான் பயிற்று மொழியாக இருக்கும் என்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளதை முழுமனதோடு வரவேற்கிறேன்.

ஜப்பான், ஜெர்மனி போன்ற நாடுகளில் கல்வி நிலையங்களில் அவர்களது தாய் மொழி தான் பயிற்று மொழியாக இருக்கிறது.

தமிழை அறிவியல் தமிழாக மாற்றும் முயற்சிக்கு தமிழ் பயிற்சி மொழித் திட்டம் மிகவும் உதவிகரமாக இருக்கும்'' என்று கூறியுள்ளார்.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் விடுத்த அறிக்கை இது. (தினகரன் 24.2.2000)

''தமிழ்நாட்டில் வரும் கல்வி ஆண்டிலிருந்து 1-ம் வகுப்பு முதல் 5-ம் வகுப்பு வரை தமிழ் வழிக் கல்வித் திட்டம் அமுல்படுத்தப்படும் என தமிழக அரசு ஆணை பிறப்பித்து உள்ளது.

ஆனால் ஆங்கில வழிக்கல்வி என்ற பெயரில் கல்வியை வணிகமாக்கி சுரண்டி வரும் ஒரு சிறு கூட்டம் அரசின் இந்த ஆணையை எதிர்த்து போராடப்போவதாக அறிவித்துள்ளது.

இவர்களுக்கு அ.தி.மு.க. பொது செயலாளர் ஜெயலலிதா துணை போயிருக்கிறார். இதன் மூலம் தமிழுக்கு எதிரானவராக தன்னை அடையாளம் காட்டிக் கொண்டிருக்கிறார். ஆங்கிலத்தை அகற்றிவிட்டால் அந்த இடத்தில் இந்தி வந்து புகுந்துவிடும் என்பது புளித்து போன வாதம் ஆகும். ஆங்கிலம் இருக்கும் இடத்தில் தமிழை அமர்த்திவிட்டால இந்தியோ, அல்லது வேறு எந்த மொழியோ புகுத்தப் படுவதற்கு வழி இருக்காது.

ஆளுங்கட்சியை எதிர்ப்பதற்கு ஒரு கருவியாக இதை அவர் பயன்படுத்த முயலுகிறார். தமிழ்வழிக் கல்விப் பிரச்சினையை அரசியல் ஆக்க முயல்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களது முயற்சிகளை முறியடிக்க வேண்டிய கடமை அனைத்து தமிழர்களுக்கும் உண்டு. அந்த கடமையை ஒன்று பட்டு செய்ய முன் வருமாறு அனைத்து தமிழர்களையும் வேண்டிக் கொள்கிறேன்'' என்று தெளிவுபடத் தன் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

தமிழ் மாநில தேசிய லீக் சார்பில் அதன் அமைப்பாளர் கமுதி பஷீர் வெளியிட்ட அறிக்கை இது: (முரசொலி 25.2.2000)

''எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்ற குறிக்கோளை இன்பத்தமிழகத்தில் முழுமையாக எய்திட முனைப்போடு செயல்பட்டு வரும் தமிழக அரசின் பாராட்டுக்குரிய திட்டங்களில் ஒன்றுதான் தமிழகத்தின் அனைத்து கல்விச் சாலைகளிலும் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ்ப் பயிற்று மொழி திட்டமாகும்.

தாய்மொழியிலேயே கல்வி நெறியை வளர்த்துக்கொண்ட ஜப்பான், கொரியா, சீனா போன்ற நாடுகள் விஞ்ஞான உலகத்தில் முதன்மை பெற்றிருப்பதை யாரும் மறுக்கவோ - மறக்கவோ முடியாது.

ஜெயலலிதாவின் தமிழ் மொழி எதிர்ப்புக் கொள்கையை முறியடிக்கத் தமிழர்கள் அனைவரும் தமிழர்களின் தலைவர் தமிழக முதல்வர் கலைஞர் அவர்களின் சீரிய தலைமையில் ஒன்றுபட்டு அணிவகுப்போம் வெற்றி பெறுவோம்.''

வலம்புரிஜான் ஓர்அறிக்கை விடுத்துள்ளார் (தினகரன் 25.2.2000) அது இதுதான்:

''பணம் சம்பாதிப்பதற்கு பத்து வழிகள், அதில் ஒரு வழி ஆங்கிலப் பள்ளி, அவ்வளவு தானே. மாஸ்கோவிற்கு மருத்துவம் படிக்க போகிற நமது

மாணவர்கள் ரஷ்ய மொழியை ஒரே ஆண்டில் கற்றுக்கொண்டு மருத்துவம் பயிலுகிறார்கள். அப்படி இருக்கும்போது 1-ம் வகுப்பிலிருந்தே ஆங்கிலத்திலே அழ வேண்டும் என்கிறார்களே, இது அறியாமைதானே.

ஆங்கிலத்தை முற்ற முழுக்க அறிந்த அறிஞர்கள் தமிழ்நாட்டில் பத்து பேராவது இருப்பார்கள். அவர்களை கொண்ட குழு ஆங்கில வழிக் கல்வி நடத்துகிற பள்ளிகளின் தாளாளர்களை, தலைமை ஆசிரியர்களை நேரில் அழைக்கட்டும். அவர்களில் எத்தனைபேர்கள் ஆங்கிலம் அறிந்திருக்கிறார்கள், அவர்கள் அறிந்திருப்பதற்கு பெயர் ஆங்கிலமா என்பதற்கு முதலில் அந்த வல்லுனர் குழு விடை சொல்லட்டும்.

90 விழுக்காடு பள்ளிகளை நடத்துகிறவர்கள் ஆங்கிலம் அறியாதவர்கள் என்பதுதான் உண்மை. இவர்கள் நடத்துகிற ஆங்கிலத்தை வைத்துக் கொண்டு அமெரிக்காவில் வேலை தேடலாம் என்பது எட்டாத வானத்தில் கிட்டாத நிலவை எடுத்து வந்து எல்லோருக்கும் நெற்றிப் பொட்டாக்க போகிறேன் என்று சொல்லுவது போல இருக்கிறது. உண்மைகள் கசப்பானவை. உணர்த்தி காட்டுவது என் சமுதாய கடமை.

உலக அறிவின் திறவுகோலே ஆங்கிலத்திடம் இருக்கிறது என்று நம்புவது அறியாமை என்றார். இந்தியாவின் கல்வி அமைச்சராக இருந்த எம்.சி. சுக்லா, அறிஞர் ராதா கிருஷ்ணனும், லட்சுமணசாமி முதலியாரும், டி.சி.கோத்தாரி போன்ற கல்வியாளர்களும் மழலைப் பருவத்தில் தாய்மொழியில்தான் படிக்கவேண்டும் என்பதற்கு தங்கள் கல்வி அறிக்கைகளில் காரணம் காட்டியிருக்கிறார்கள். காந்தியடிகளும், கவியரசர் தாகூரும் தாய்மொழி கல்வி தான் சிறந்தது என்கிறார்கள்.

தாய்மொழி மதிக்கப்படாவிட்டால் அதை பேசுகிற மக்கள் மதிக்கப்படவில்லை என்று பொருள். ஒரு நீதிமன்றத்தில் நீதிபதி தமிழர், வழக்கறிஞர் தமிழர். குற்றம் சாட்டப்பட்டவர் தமிழர். குற்றம் சாட்டப்பட்ட தமிழருக்கு எதிராக ஆறு ஆண்டுகள் வழக்கு நடைபெற்றும் தன்னை சுற்றி என்ன நடக்கிறது என்று அந்த தமிழ் மகனால் அறிந்த கொள்ள இயலவில்லை. இதை ஒரு நாகரிகமான நாடு என்று அழைப்பது எவ்வளவு கேவலமானது.

சிறு நீதிமன்றங்களில் இப்போதுதானே இந்த அவலமே நீங்கி வருகிறது. இப்படி தாய் மொழி கொஞ்சம் கொஞ்சமாக விடுதலை பெற்று வருகிற காலத்தில் சொந்த நாட்டில் தாய் மொழியை சிறையிடுகிறவர்கள் இந்த மாநிலத்திலிருந்தே அப்புறப்படுத்தப்பட வேண்டியவர்கள். இது உணர்ச்சி வழிப்பட்ட என் கூக்குரல் அல்ல. ஆராய்ந்து அறிந்த பின் வெளிவருகிற என்

கருத்து'' என வாதிட்டிருக்கிறார். ஆங்கிலம் பற்றி அவர் சொல்லியிருப்பது உண்மை. ஆங்கிலப் பள்ளி ஆசிரியர்கள் பலரின் தகுதி பற்றி நானே ஓர் அறிக்கையில் தெளிவுபடுத்தியிருக்கிறேன்.

புரட்சித்தலைவியின் அறிக்கையைக் கண்டித்து நாடெங்கும் பொதுக் கூட்டங்கள் நடத்தப்படவேண்டும் என தி.மு.க. தலைமை அறிவித்தது. மொழித்துறை அமைச்சராகிய நான் காஞ்சிபுரத்தில் கலந்து கொண்டு பேசினேன்.

சென்னையில் 26.2.2000 அன்று மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அனைத்துக் கட்சித் தலைவர்களும் பேசினார்கள். கலைஞர், மருத்துவர் இராமதாசு, எல். கணேசன், வாழப்பாடி இராமமூர்த்தி, இல. கணேசன், இராம. வீரப்பன், ச. திருநாவுக்கரசு, இளையபெருமாள் என்று எல்லாக் கட்சித் தலைவர்களும் தமிழ்வழிக் கல்விக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தனர்.

21.6.2000 அன்று மதுரையில் தமிழ் ஆட்சிமொழிக் கருத்தரங்கம் நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு பேசிய சட்டப் பேரவைத் தலைவர் பொ.தி.ரா. பழனிவேல்ராசன் பின் வருமாறு பேசினார்.

''தமிழ் மொழி வளர்ச்சிக்காக அரசு எதைச் செய்தாலும் அதை நான் வரவேற்கிறேன். ஒரு நாட்டில் தாய் மொழி ஆட்சிமொழி ஆவதை ஆதரித்தும், எதிர்த்தும் கருத்துக்கள் சொல்வது தவறு. இன்றைய சூழ்நிலையில் ஆங்கில மோகம் இருப்பது உண்மை. ஒரு சாதாரண தொழிலாளி கூட தனது குழந்தைகளை ஆங்கிலக் கல்வி வழி பயிற்றுவிக்க விரும்புகிறான் ஆங்கிலக் கல்வியை போதிக்கும் கல்வி நிறுவனங்கள் நல்ல வருமானம் பெறுகின்றன. எனவே ஆங்கில வழிக்கல்விக்கு அரசு சல்லிக்காசு கூட செலவிடக் கூடாது'' என்று தெளிவுபடுத்தினார்.

தமிழகத்தின் குறிப்பிடத்தக்க - செல்வாக்குள்ள - அரசியல் பலமுள்ள எதிர்க் கட்சிகளின் கருத்தினை ஒன்று திரட்டி இங்கே தந்ததற்குக் காரணம் காந்தியடிகளும் தாகூரும் பாரதியாரும் வரவேற்கிறார்கள் - சமகால அறிஞர்கள் வரவேற்கிறார்கள் - அரசியல் கட்சிகள் வரவேற்கின்றன - தமிழ் அமைப்புகள் போட்டிபோட்டுக் கொண்டு வரவேற்கின்றன.

பின், எப்படி தமிழ் வழிக்கல்வித் திட்டம் தோல்வி அடைய முடியும்?

இதுதான் நம் கேள்வி

விடைக்கு வரும்போது வேறு செய்திகளுடனும் பேசுவோம்.

இயல் இருபத்தெட்டு - ஆ

தமிழ் அமைப்புகளின் தளராத போராட்டங்கள்

1995 சனவரித் திங்கள் முதற்கிழமையில் தஞ்சையில் 'உலகத் தமிழ் மாநாடு' நடைபெற்றது. அந்தக் கால கட்டத்தில் தமிழ் அமைப்புகள் பல கூடி, தமிழ் ஆட்சிமொழி, 1 முதல் 5 வரை தமிழ்ப் பயிற்றுமொழி ஆகியவற்றை வலியுறுத்தி உலகத் தமிழ் மாநாட்டு முன்பு உண்ணா நோன்பு மேற்கொண்டனர்.

20 தமிழ் அமைப்புகள் இதில் பங்கேற்றன. உலகத் தமிழின முன்னேற்றக் கழகச் சார்பில் பாவலர் பெருஞ்சித்திரனார் கலந்து கொண்டார். தமிழகத் தமிழாசிரியர் கழக அன்பர்கள் மற்றும் தலைநகர்த் தமிழ்ச் சங்கம் உள்ளிட்ட பல அமைப்புகள் கலந்து கொண்டன.

இவர்கள் அனைவரும் சிறை செய்யப்பட்டு? திருச்சி நடுவண் சிறையில் அடைக்கப்பட்டனர். இந்நிலையில் தி.மு.க. தலைவர் ஒப்புதலுடன் நான் திருச்சிச் சிறைக்குச் சென்று அனைவரையும் கண்டு நிலை வினாவி, ஆறுதல் தெரிவித்து மீண்டேன்.

அதன்பின் தமிழக அரசின் (அ.தி.மு.க. அரசின்) சார்பில் சில குழுக்கள் அமைக்கப்பட்டு இவற்றை ஆய்வு செய்திடுமாறு பணிக்கப்பட்டன.

அவை : 1. வா.செ. குழந்தைசாமி தலைமையில் 'தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்'

2. முத்துக்கண்ணப்பர் தலைமையில் 'தமிழ் ஆட்சிமொழி'

3. அ.மு. பரமசிவானந்தம் தலையில் ' தமிழ் வழிக் கல்வி'

அவை அறிக்கை தந்த காலகட்டத்தில் ஆட்சிக் காலம் முடியும் தறுவாயில் இருந்தது. அறிக்கைகள் மட்டும் வாங்கி வைக்கப்பட்டிருந்தன.

13.5.1996இல் புதிய ஆட்சி - தி.மு.க. ஆட்சி அமைந்தது. தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை, கல்வித்துறையிலிருந்து பிரிக்கப்பட்டு, தனி அமைச்சகமாக இயங்கத் தொடங்கியது. அதற்குரிய அமைச்சராக எனக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது.

இதே நாளில் பச்சையப்பன் கல்லூரியில் என் தமிழ்ப் பேராசிரியர் அ.மு. பரம சிவானந்தம் அவர்கள் ஒரு மடல் எழுதியிருந்தார். அதில் அவர் தன் உள்ளக் கிடக்கையில் புலப்படுத்தியிருந்தார்.

''நீங்கள் தமிழக அமைச்சர் அவையில் சிறப்புறத் தமிழ் வளர்க்கும் பண்பாட்டு நலத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்றமை அறிந்து மகிழ்ந்தேன். உங்கள் கருத்துக்கு ஒத்த துறை அமைந்துள்ளது. பலவகையில் தமிழ் நாட்டில் தமிழை வாழ வைக்க - வளர வைக்க - வளம் பெறச் செய்ய வழிகாண வேண்டிய நிலையில் நாமுள்ளோம். உலக மொழியாக ஓங்க வேண்டிய தமிழ் தன் சொந்த வீட்டிலேயே தலைகுனிந்து, தவிக்க வேண்டிய நிலையில் உள்ளது. ஆங்கிலம், பள்ளி, கல்லூரிகளில் அனைவரும் பயில வேண்டும். ஆனால் தமிழோ சமஸ்கிருதம், பிரஞ்சு, சர்மன் போன்ற பல்வேறு பதினான்கு மொழிகளில் ஒன்றாகக் கல்வித்துறையில் பேசப்பெறுகின்றது. தமிழ் அறியாமலேயே தமிழ்நாட்டில் உயர்ந்த கல்விப்பட்டம் பெறலாம். இது பிற மாநிலங்களில் - பிற நாடுகளில் காணமுடியாத கொடிய செயல். எனவே தாங்கள் அன்னைத் தமிழை அரியாசனத்தில் இருக்கவைத்து, எல்லாத்துறையிலும் எல்லா வகையிலும் தமிழ்நாட்டில் தமிழ்தான் என்ற நிலையினை உறுதியாகச் செயல்படுத்த வேண்டும். விரைந்து செயல்படுங்கள் அன்னைத் தமிழை அரங்கேற்ற அனைத்தும் ஆட்சி செயக் காணுங்கள்'' என்று வாழ்த்தியதோடு அன்புக் கட்டளையும் இட்டிருந்தார்.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தபடி இவர் ஒரு குழுவின் தலைவர். 15.3.96இல் அரசாணை (உலகத் தமிழ்மாநாடு முடிந்து ஓராண்டுக்குப்பின்) 8.4.96இல் குழுக் கூட்டம். அதில் ந. சுப்புரெட்டியார் ஒர் உறுப்பினர். மற்ற உறுப்பினர்கள் தமிழண்ணலும், புலவர் இரா. இளங்குமரனும் ஆவர். இந்த இருவரும்தான் தமிழக அரசு அமைத்த, நீதியரசர் மோகன் குழுவில் இடம் பெற்ற உறுப்பினர்கள். அந்தக் குழு தந்த பரிந்துரைகளைப் பாருங்கள். மழலையர் பள்ளி முதல் உயர்கல்வி வரை தமிழில் படித்தாகவேண்டும் எனும் தெளிவான பரிந்துரைகளை அவர்கள் செய்துள்ளார்கள்.

1. ''மழலையர் பள்ளிகளுக்கெனத் தனியே இயக்ககம் (Directorate of Nursery Schools) ஒன்று அமைக்கப் பெறவேண்டும்; மழலையர் பள்ளிகளில் தமிழைப் பாடமாகப் பயிற்றுவிப்பதுடன் தமிழ் வழிக் கல்வியும் கற்பிக்கப் படவேண்டும்; மொழிச் சிறுபான்மையரைப் பொறுத்த வரையில், அவரவர் மொழியினைக் கற்கத் தமிழைப் புறக்கணிக்காமல் வாய்ப்பு அளிக்கப்பெறலாம்.

2. தமிழ்நாட்டுக் கல்வி நிலையங்களில் முதல் மொழியாகத் தமிழ் கட்டாயமாக அமைதல் வேண்டும். இரண்டாம் மொழியாக ஆங்கிலம் அல்லது பிறமொழிகள் எதுவும் இருக்கலாம்.

பயிற்றுமொழி : - முதல் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை தமிழே பயிற்று மொழியாக அமைதல் வேண்டும். மழலையர் பள்ளி முதல் உயர் கல்வி வரை மொழிச் சிறுபான்மையரைப் பொறுத்த வரையில் தமிழைப் புறக்கணிக்காமல் அவரவர் மொழியினைக் கற்க வாய்ப்பு அளிக்கலாம்.

3. 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை முதன் மொழியாகத் தமிழ் (முதல் பிரிவு) (அ) - அனைவரும் கட்டாயமாகப் பயில வேண்டும்; தமிழ் இரண்டாம் பிரிவு (ஆ) அல்லத பிற ஏதேனுமொரு இந்திய மொழி - (இப்பிரிவில் அவரவர் விருப்பப்படி எந்த ஒரு மொழியையும் பயிலலாம்)

4. **பாட நூல்கள்:** பாடநூல்கள் கூடுமான வரையில் நல்ல தமிழில் அமைய வேண்டும். அறிவியல் பெயர்கள், மக்கள், ஊர்ப்பெயர்கள் போன்ற முக்கிய கூறுகள் தவிர அனைத்தும் தமிழில் அமையப் பெறவேண்டும்.

5. கல்லூரிகளில் அறிவியல் பாடங்கள் உட்பட பாடநூல்களைத் தமிழிலும் வெளியிட ஆவன செய்ய வேண்டும்.''

இந்த ஐந்தாவது பரிந்துரை பற்றி ஒரு குறிப்பு:

ஏற்கெனவே 1974 காலகட்டத்திலிருந்தே அரசினர் கல்லூரிகளில் அனைத்திலும் எல்லாப் பாடங்களும் தமிழ் வழியில் கற்பிக்கப்படுகின்றன. எனவே வரலாறு, **புவியியல்,** பொருளியல், கணிதம், இயற்பியல், வேதியியல், உயிரியல் பாட நூல்கள் அனைத்தும் தமிழில் உள்ளன என்பதனைக் கருத்தில் கொள்ளவேண்டும்.

6. ''தமிழ் நாட்டிலுள்ள பல்கலைக் கழகங்களில், தமிழ் பயிற்றுமொழியாக அமைதல் வேண்டும். அஞ்சல் வழிக் கல்வித் திட்டம் அமைந்துள்ள பல்கலைக் கழகங்களிலும் எந்த ஒரு பாடமும் தமிழில் கற்பிக்கப்படவேண்டும் என்பதுடன் தேர்வும் தமிழில் நடத்தப்பெற வேண்டும்.

7. புதிதாகத் தொடங்கவிருக்கின்ற அரசுக் கல்லூரிகள் உட்பட அனைத்துக் கல்லூரிகளிலும் பொறியியல், மருத்துவம், சட்டம், தொழில் நுட்பவியல் போன்ற உயர் கல்விப் பாடங்கள் தமிழ் வழியாகவும் கற்பிக்கப்பெற ஆவன செய்ய வேண்டும்.

8. பொறியியல், மருத்துவம் போன்ற தொழிற்கல்விப் படிப்பில் சேருவதற்கு நடத்தப்பெறும் நுழைவுத் தேர்வுகளில் தகுதியை அனுமதியிட +2 தேர்வில் மொழிப் பாடங்களில் பெறப்படும் மதிப்பெண்களும் கணக்கில் கொள்ளப்படவேண்டும்.

9. மழலையர் பள்ளி முதல் உயர்நிலைப் பள்ளி வரை நன்கு தமிழில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களைக் கொண்டு தமிழ் கற்பிக்கப்படவேண்டும்.''

குழுவின் அறிக்கை வந்த நேரத்தில் பொதுத் தேர்தல் அதில் குழு அமைத்த கட்சி தோற்று, தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்றது.

இங்கேயே ஓர் உண்மையைச் சொல்லிவிடவேண்டும். என் துறையில் எனக்குள்ள வரம்பு அரசு அலுவலகங்களில் தமிழை முழுமையான ஆட்சிமொழியாக்குவது. அதற்குமேல், மேற்கண்ட குழு தந்த ஒன்பது பரிந்துரைகளையும் செயற்படுத்த வேண்டிய பொறுப்பும், முழு அதிகாரமும் பள்ளிக் கல்வித்துறையையும், உயர் கல்வித்துறையையும் ஒரு சேரக் கையில் வைத்திருந்த பேரா. அன்பழகன் அவர்களுக்கே உண்டு. சிலவற்றை மனத்தில் வைத்துக் கொண்டால்தான் என் செயற்பாடுகள் குறித்தும் என் முயற்சிகள் குறித்தும், பல நேரங்களில் நான் வரம்பு மீறிக் குதிக்க வேண்டிய தேவை ஏன் நேர்ந்தது என்பது குறித்தும் உங்களுக்கு ஒரு தெளிவான முடிவு கிடைக்கும்.

இந்த அறிக்கை கல்வி அமைச்சர்க்கும் அனுப்பப்பட்டிருந்தது. அ.மு.ப.வே இதனைக் குறிப்பிட்டுள்ளார். அதிலும் கல்வி அமைச்சரும் அ.மு.ப.வும் ஒரே நேரத்தில், பச்சையப்பன் கல்லூரியில் பணியாற்றியவர்கள்.

இந்தத் தீர்மானங்களை நிறைவேற்றிட, கல்வித்துறை என்ன முயற்சிகளை எடுத்தது என்பதை அறிந்திடும் பொறுப்பினை உங்களுக்கே விட்டுவிடுகின்றேன்.

பின், வரவு செலவுத் திட்டக் கூட்டம் நடைபெற்றது. பேராசிரியர் கவனிக்க வேண்டிய பகுதிகள் என்றாலும் நானும் சட்டமன்றத்தில் சில செய்திகளைப் பேசினேன். இது குறித்து 18.9.96 அன்று தமிழ் வழிப் பயிலும் மாநிலக் கல்லூரி மாணவர்கள் எனக்கு எழுதியிருந்தனர்.

''தமிழ் வழியில் படிக்கும் மாணவர்களைத் தாங்கள் ஊக்குவிக்கும் வகையில் சட்டமன்றத்தில் அறிவித்தது மகிழ்ச்சி அளிக்கிறது; வேலை வாய்ப்பில் முன்னுரிமை போன்ற முற்போக்கான திட்டங்களைத் தாங்கள் அமுல்படுத்த உள்ளீர் என அறிந்து மகிழ்கிறோம்'' - இவை அவர்களின் வரிகள்.

19.10.96 அன்று தமிழகப் புலவர் குழுவின் 83 ஆவது சிறப்புக் கூட்டம் சிதம்பரத்தில் நடைபெற்றது. இதன் உறுப்பினர் எனும் முறையிலும், அமைச்சர்

எனும் முறையிலும் நான் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டேன். புலவர் குழுச் சார்பில் என் தலைமையில் 'தமிழ் வழிக்கல்வி' என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. மூத்த தமிழறிஞர்களும், சிதம்பரம் வாழ் பெருமக்களும் கலந்துகொண்ட இக் கூட்டம் 'தமிழ் வழிக் கல்வி'யை வற்புறுத்திப் பல கருத்துகளை வெளியிட்டது என்பது குறிப்பிடத்தக்கது. ச. முத்துக்குமரன் போன்றவர்கள் பேசினர். அவருடைய கருத்து, மற்றோர் இடத்தில் தரப்பட்டுள்ளது.

''இந்தப் போக்கு தொடர்ந்தால் பத்துப் பதினைந்து ஆண்டுகளில் நமது பள்ளிகளில் படிக்கும் மாணவர்களில் பெரும்பாலானவர்கள் ஆங்கிலம் வழி படிப்பார்கள். 1940இல் இருந்த நிலைக்கு நாம் திரும்பிவிடுவோம். மேலும் கி.பி.2010இல் ஆங்கில வழி படிக்கும் மாணவர் எண்ணிக்கை குறைந்தது. 1940இல் ஆங்கில வழி படித்தவர்களைப் போல பத்து மடங்கு இருக்கக்கூடும்'' என்று தன் கவலையை அவர் தெரிவித்தார்.

1.11.96 வாக்கில் தலைநகர்த் தமிழ்ச்சங்கம் ஒரு சில கருத்துகளை வெளியிட்டது.

''தமிழக அரசு நர்சரி பள்ளிகளில் தமிழையும் பயிற்று மொழியாக்க விரும்புகிறதா? ஒரு பாட மொழியாக்க விரும்புகிறதா? என்பது தெளிவுபடுத்தப்படாமல் உள்ளது.''

''மழலைப்பள்ளிகளில் தமிழைப் பயிற்றுமொழியாக்க வேண்டும் என்று தலைநகர்த் தமிழ்ச்சங்கம் வழக்குத் தொடர்ந்துள்ளது. இந்த வழக்கிற்குப் பதில் சொல்லும் பொறுப்பு தமிழக அரசுக்கும் - கல்வி அமைச்சருக்கும் உண்டு.

''கல்வி அமைச்சர் ஆங்கிலப் பள்ளிகளில் தமிழை கட்டாயப் பாடமாக்குவோம் என்கிறார். தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் கர்நாடகத்தில் ஐந்தாம் வகுப்பு வரை கன்னடம் கட்டாயம் பயிற்று மொழி என்பது போல் தமிழ் நாட்டிலும் ஐந்தாம் வகுப்பு வரை தமிழைக் கட்டாயப்பாடம் ஆக்குவோம் என்கிறார்.

இவற்றிலிருந்து நமக்குத் தெரிவது ஒன்றுதான். கல்வித்துறை இன்றும் கவனம் செலுத்தவில்லை; அசைந்து நடைபோட்டுக் கொண்டிருக்கிறது என்பதுதான் அந்தத் தெளிவு.

''தமிழக அரசு மழலைப்பள்ளிகளில் கூடத் தமிழை பயிற்று மொழியாக்க மனமில்லாது பட்டிமன்றம் நடத்திக் கொண்டிருப்பது வேதனை

தருகிறது'' என்றும் அவர்கள் கூறுவதற்குக் கல்வித் துறையின் மெத்தனம் தான் காரணம்.

இந்தியக் குழந்தைகள் மருந்து சங்கத்தின் (Indian Academy of Pediatrics) ஈரோட்டுக் கிளைப் பொறுப்பாளர்கள் மணிவண்ணன், செல்வன், இராசேந்திரன் ஆகியோர் குழந்தைகள் நல மருத்துவர்கள். அவர்கள் சில பரிந்துரைகளை (24.1.97) எங்கட்கு அனுப்பியிருந்தனர்.

1. தங்களது உணர்வுகள், உள்ளக் கிடக்கைகளை வெளிப்படுத்த, தாய்மொழியே சிறந்ததாகையால் பயிற்றுமொழி தாய் மொழியாக இருக்கவேண்டும் என்று அக்குழு பரிந்துரைத்தது. குழந்தைகள் நலம் உணரும் மருத்துவர்கள் இப்படித் தெரிவிக்கிறார்கள். ஆனால் கல்வி வணிகர்களோ 'காசிலேயே' குறியாக இருந்துகொண்டு ஆட்டம் போடுகிறார்கள்.

29.1.97 அன்று தலைநகர்த் தமிழ்ச் சங்கம் ஆங்கில மழலையர் பள்ளிகளைத் தடைசெய்யக் கோரிப் பட்டினிப் போராட்டம் நடத்தியது. தமிழண்ணல், சிலம்பொலி, க. இராசாராம், இளவரசு போன்ற பலர் பங்கேற்பதாக அறிவிப்பு. இதில் 46 தமிழ் அமைப்புகள் பங்கேற்பதாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது.

அவர்களது முகாமையான கோரிக்கை இதுதான்.

''முன் மழலையர் பள்ளி, இளம் மழலையர் பள்ளி. மழலையர் பள்ளி மூன்றிலும், பாட மொழியாகவும், பயிற்று மொழியாகவும் தமிழ் ஒன்றே கற்பிக்கப்படவேண்டும். இதற்கு இசையாத மழலையர் பள்ளிகளை மூடிவிட வேண்டும். இந்த ஏற்பாட்டிற்குத் தனியார் கல்வி நிறுவனங்கள் தடையாக இருந்தால் அவசர ஆணையின் மூலம் தனியார் பள்ளி, கல்வி நிலையங்கள் அனைத்தையும் நாட்டுடைமையாக்க வேண்டும். தமிழகப் பள்ளிகள் அனைத்திலும் எட்டாம் வகுப்பிற்கு மேல் வேறு சில மாநிலங்களில் நடைபெறுவது போல் ஆங்கிலத்தையும் அவரவர் தாய் மொழியையும் ஒரு மொழிப் பாடமாக மட்டும் கற்பித்தல் வேண்டும்.''

இன்னும் பல கோரிக்கைகள் உண்டென்றாலும் இதுவே முதற் கோரிக்கை.

இலங்கையில் உள்ள மகாத்மா காந்தி நினைவுப் பூங்கா அறக்கட்டளை சார்பில் (1.2.97) நேதாசி விழாக் கொண்டாடப்பட்டது.

அதில் ஒரு மேற்கோள் தரப்பட்டிருந்தது

''நேதாசி தலைமையில் தான் காங்கிரசுக் கட்சி கல்வியைப் பற்றி 1938இல் ஒரு தீர்மானத்தை ஏற்படுத்தியது. பயிற்று மொழி தாய் மொழியாகத்தான் இருக்க வேண்டும்; கல்வி வாழ்க்கைக்குப் பயன் உடையதாக இருக்க வேண்டும் என்ற தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன'' என்று உள்ளது. 1938இல் காங்கிரசுக் கட்சியின் நிலை என்ன என்பதை உணர முடிகின்றது. இந்த மேற்கோளை பேரா. மா.சு. அண்ணாமலை எழுதிய ''இந்திய தேசிய இராணுவம் - தமிழர் பங்கு'' எனும் நூலிலிருந்து எடுத்துக் காட்டியிருந்தார்கள். தமிழக அரசு தமிழ் வழிக் கல்வியை வலியுறுத்தும் இக்கால கட்டத்தில் சுதர்சன நாச்சியப்பன் போன்றவர்கள் உள்ள இந்த அமைப்பு தாய்மொழி வழிக் கல்வியை வலியுறுத்தியுள்ளது என்பது கவனிக்கத்தகுந்தது.


1997 மார்ச்சு 24 வாக்கில் 'தமிழ் மேம்பாட்டு' மாநாடு நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டது.

''ஆங்கிலமே வெளியேறு; அன்னைத் தமிழே - வேலை பெறு'' என்பது அவர்கள் முழக்கமாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. ஆங்கில மழலையர் பள்ளிகளைத் தமிழ் வழிப் பள்ளிகளாக மாற்றுதல் அவர்களது முதற் கோரிக்கை

எனக்கோர் கருத்து வேறுபாடு : அதை இந்த நேரத்தில் சொல்லியாகவேண்டும். ஆங்கிலத்தை ஒரு பாடமாகக் கட்டாயம் படிக்கவேண்டும்; 6ஆம் வகுப்புக்கு மேல் விரும்புபவர்கள் ஆங்கிலப் பயிற்றுமொழியில் படிக்கலாம். ஆங்கிலத்திலும் தரமான புலமை பெறவேண்டும் என்பதுதான் நம் கருத்து. இந்தியாவுக்குள் ஒரு மாநிலமாக இருந்துகொண்டு, நமக்கு உகந்த தொடர்பு மொழியாக இருக்கும் ஆங்கிலத்தை வெளியேற்றி விடுவோம் என்று பேசுவது நம் ஒருமித்த குரலில் ஏதோ பிசிறு இருப்பதை உணர்த்துகிறது. எனவே ''ஆங்கிலமே வெளியேறு'' என்பதும் 'வெள்ளையனே வெளியேறு' என்று சொல்வதுபோன்றதுதானா! ஆங்கிலேயரை வெளியேற்றி விட்டோம்; அது சரி. ஆனால் ஆங்கிலத்தை வெளியேற்ற வேண்டுமா? இதுதான் தமிழறிஞர்கள் கொள்கையா? இதுதான் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டிய கொள்கையா? அன்பர்கள் சிந்தித்துப் பார்க்கட்டும். 'ஆங்கில வல்லாண்மையைக் கட்டுப்படுத்து' என்றால் சரி; 'ஆங்கிலத்தை வெளியேற்று' என்பது சரியா?

இந்த மாநாட்டில் கல்வி அமைச்சரும், நானும் கலந்து கொண்டோம். இதில் பேசிய பேச்சு 'தமிழ் ஆட்சிமொழிச் செயலாக்கம்' நூலில் இடம் பெற்றுள்ளது.

மழலையர் பள்ளிகளை ஒழுங்கு செய்யவும், தமிழ் கற்றுக் கொடுக்கவும் நாங்கள் நடவடிக்கை எடுக்க விருக்கிறோம் எனும் செய்தி நாடெங்கிலும் பரவியிருந்தது. இதனை மனத்திற் கொண்டு பெரம்பலூர் மாவட்டம் செந்துறையில் உள்ள ஸ்ரீராம் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளியிலிருந்து எனக்கு 47 மடல்கள் ஒரே கட்டாக வந்தன. அதில் ஒவ்வொரு மாணவ, மாணவியும் தனித் தனியாக மடல் எழுதியுள்ளனர் (9.4.97) ஒரு மடலை மட்டும் அப்படியே தருகிறேன்.


மாண்புமிகு அமைச்சர்

எங்களது அன்பான தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகள்

நீங்கள் பள்ளியை நன்றாகவும் தமிழை நன்றாகவும் கற்றுத் தருகிறார்கள் எனக்கு தமிழ் எழுத படிக்கத் தெரியும்.

இப்படிக்கு
அபர்ணா
இரண்டாம் வகுப்பு

அதாவது, மழலையர் பள்ளிகள் தமிழை எந்த வகையிலும் புறக்கணிக்கவில்லை என்றும், முறையாகத் தமிழைச் சொல்லிக் கொடுத்து வருகிறோம் என்றும் எனக்குத் தெரிவிக்கிறார்கள்.

மகிழ்ச்சிதான். தமிழை ஒரு பாடமாகச் சொல்லித் தருகிறார்கள் என்பது உண்மைதானே! எங்கள் முன் உள்ள வினாவே பிற பாடங்களை தமிழ் வழியில் சொல்லித் தருகிறார்களா என்பதுதானே!

தமிழக வரலாற்றை, சேர, சோழ, பாண்டியர் வரலாற்றை 10 அகவைக்குட்பட்ட தமிழ் மாணவன் ஆங்கிலத்தில்தான் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டுமா?

தஞ்சாவூர்த் தமிழ்ப் பேரவை (31.12.97)

‘‘எட்டாம் வகுப்பு வரை கட்டாயம் தமிழ்வழியில் என்ற அறிவிப்பில், தமிழ் வழியில் அறிவியலும் அளிக்கமுடியும் என்பதால், ‘‘அறிவியல் பாடமும்

தமிழ் வழியில்'' என அறிவிக்க வேண்டுகிறோம்'' எனும் வேண்டுகோளுடன் எங்கள் முயற்சிக்கு ஊக்கம் தந்து மடல் எழுதியது.

அறிவியல் பாடத்தைப் பின்னர் தமிழில் கற்பிக்கலாமென்றும், தற்போது பூகோளம், வரலாறு போன்றவற்றை மட்டும் தமிழில் கற்பிக்கலாம் என்றும் அரசு அறிவித்த ஒரு 'பிற்போக்கான' அறிவிப்பின் விளைவு இது.

இவ்வேளையில் (26.1.98) தஞ்சையில் உள்ள தமிழியக்கம் (எங்களால் நிறுவப்பெற்ற இயக்கம்) ஓர் அறிக்கைவிட்டிருந்தது. அதில் உள்ள சில மேற்கோள்கள்:

1. ''அயல் மொழியில் கல்வி பயில்வது சொந்த நாட்டு மக்களைச் சுரண்டுவதற்கே, மக்களுக்கு புரியாத மொழியில் பேசினால் எதுவேண்டுமானாலும் பேசிக்கொண்டே போகலாம், எல்லோரும் புரிந்து கொள்ளக் கூடிய மொழியில் பேசினால் மக்களை ஏமாற்ற முடியாது'' - காமராசர்

2. ''அயல்மொழி இந்தியோ, ஆங்கிலமோ ஆதிக்கமோ ஆட்சிமொழியோ ஆனால் தமிழர்கள் கண்ணிருந்தும் குருடர்களாவோம்'' - அறிஞர் அண்ணா

''இடிவிழுந்த பனைமரம் தளிர்த்தாலும் தளிர்க்கும் (தாய்) மொழி அழிந்த நாடு தழைக்கவே தழைக்காது'' - அண்ணா

3. ''இன்று தமிழர்கள் தமிழை மறந்து ஆங்கிலத்தை தூக்கி தலையில் வைத்து கூத்தாடுவது தற்கொலைக்கு சமமாகும் - போலந்தில் 12 மொழி அறிந்த - கெர்மன்

''தமிழன் நலம்பெற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்'' - பாரதியார்

4. ''தமிழா! நம்மிடம் நாமே பிறமொழியில் பேசுவது அடிமை உணர்வு என்று எல்லா நாட்டினரும் சொல்லியும் இனியாவது தமிழில் பேசிக் கொள்வோமாக, தன் மானம் பெறுவோமாக''

இதிலும் தமிழ்க் கல்வி வலியுறுத்தப்பட்டுள்ளது.

தலைநகர்த் தமிழ்ச்சங்கம் ஓர் இயக்கம் என்பதை ஒப்புக் கொள்ளலாமே தவிர அதை ஒரு பேரியக்கமாகவோ பெரும்படையாகவே கருத முடியாது.

பல இடங்களில் தெரு முனைக்கூட்டங்கள் நடத்தி அறிவிப்புச் செய்தனர். 23.4.98 இல் குறளகம் முன்பு நடத்திய கூட்டத்தில் 13 பேர் மட்டுமே இருந்தனர்.

இவர்கள் 52 அமைப்புகளின் உறுதுணையோடு தமிழ் வழிக் கல்வியை வலியுறுத்தி 24.4.98 அன்று முதல்வரை முற்றுகையிடும் போராட்டம் நடத்தினர். அது எந்த அளவுக்கு நடந்திருக்கும் என்பதை உங்கள் ஊகத்திற்கே விட்டுவிடுகிறேன். 100 பேர் சிறைப்படுத்தப்பட்டு மாலையில் விடுவிக்கப்பட்டனர். அவர்கள் பிடித்திருந்த பதாகையில் ஒன்று.

''ஆங்கிலப் பள்ளிகளை அடியோடு ஒழிப்போம்'' என்பது இதுவரையிலும் இவர்கள் ஏதாவதொரு ஆங்கிலப் பள்ளியையாவது ஒழித்திருக்கிறார்களா என்பதுதான் என் கேள்வி.

ஏதோ இவர்களது இந்த உணர்வுகளை வெளிப்படுத்துகிறார்களே என்று பாராட்டலாமே தவிர, வேறு எதுவும் இவர்கள் செய்ய முடியாது, செய்ய முடியவில்லை என்பதுதான் உண்மை.

இதற்கிடையில் கல்வி அமைச்சர் ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தார். அது தமிழ் அன்பர்களிடையே ஒரு வகையான பரபரப்பை உண்டாக்கிவிட்டது. அவர் கூற்று இதுதான்.

''தமிழ்நாடு தனிநாடாக ஆனால்தான் தமிழ்வழிக் கல்வி இயலும்'' என்பதுதான். கல்வி அமைச்சரின் மனப்போக்கு எத்தகையதாக உள்ளது என்பதையும்; இந்தக் கருத்துடையவர் 'தமிழ் வழிக்கல்வி' யை எப்படியும் கொண்டு வந்து விடவேண்டும் என்று முனைப்புக் காட்டியிருப்பாரா என்பதையும் அன்பர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

20.5.98 அன்று தஞ்சையில் 9 தமிழ் அமைப்புகள் திரண்டு ஊர்வலம் நடத்தின. அதன்பின் அவர்களே தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்பியிருந்தனர். அவை:

1. தமிழ்வழிக்கல்வி என்பது தமிழ்நாடு தனிநாடாக ஆனால்தான் இயலும் என்று தமிழகக்கல்வி அமைச்சர் பேசியுள்ளதைக் கண்டிக்கிறோம்.

2. இந்தியாவில் நாட்டுப்பற்றுள்ள அனைவரும் ஆங்கிலப்பயிற்றுமொழியை அகற்றி மாநிலமொழிகளில்தான் கல்வி கற்க வேண்டும் என்று காந்தியடிகள், தாகூர், பாரதியார், திரு.வி.க., அறிஞர் அண்ணா, பெரியார், பாரதிதாசன், குன்றக்குடி அடிகளார், வ.சுப. மாணிக்கம் முதலியோர் கூறியுள்ளனர்.

3. மழலையர் பள்ளி முதல் உயர்கல்வி/ஆய்வு வரை தமிழ்வழியில்தான் இருக்க வேண்டும்.

4. எனவே, முதற்கட்டமாக - சென்ற ஆண்டு தொடங்குவதாகச் சொல்லிக் கைவிட்ட பொறியியற்கல்லூரித் தமிழ்வழி வகுப்புகளை இந்தக் கல்வி ஆண்டிலேயே (1998 - 99) தொடங்க வேண்டுகிறோம்.

அவர்கள் தந்த அறிக்கையில் ஒரு குறிப்பையும் தந்திருந்தனர்,

''வேலை வாய்ப்பைக் காரணம் காட்டியும் இந்தியை எதிர்ப்பதாகச் சொல்லியும் ஆங்கிலத்தை வளர்த்துத் தாய்த்தமிழைப் புறக்கணிக்கும் நிலை உள்ளது. தமிழர்கள் மூன்றாந்தர குடிமக்களாகும் நிலை ஏற்பட்டுவிட்டது. எனவே தமிழக அரசு தமிழ்வழிக் கல்வியை மழலையர்பள்ளி முதல் உயர் தொழில்நுட்பக் கல்விவரை தருதல் வேண்டும்'' என்று தெளிவு படுத்தியிருந்தனர்.

11.7.98 இல் தமிழ் மேம்பாட்டுக் கூட்டமைப்பின் சார்பில் பேரணி ஏற்பாடு செய்யப்பட்டது. இதுதொடர்பாக, தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் ஓர் அறிக்கை வெளியிட்டது அதில் ''ஐந்தாம் வகுப்பு வரை முதற்கட்டமாகத் தமிழே பாடமொழியாக இருக்க வேண்டும்'' என்று வலியுறுத்தியிருந்தனர்.

நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இது;

மாநில அரசே!

மருத்துவம் - பொறியியல் - கணினியியல் போன்ற தொழில்நுட்பப் படிப்புகளைத் தமிழில் தருக.

முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் மொழி மட்டுமே பயிற்று மொழியாகவும் பாட மொழியாகவும் இருந்திடல் வேண்டும். பாலர் பள்ளி முதல் பல்கலைப்பட்ட படிப்பு வரை தமிழே பயிலாமல் தமிழ்நாட்டில் பட்டப்படிப்பு வரை பயிலலாம் என்ற நிலையை நீக்க தமிழைக் கட்டாயப் பாடமாக கற்க அரசு ஆணை வழங்குக.

இந்தக் கூட்டமைப்பில் 31 தமிழ்மன்றங்கள் இணைந்துள்ளன இதை முன்னின்று நடத்தியவர்கள் ச. செந்தில்நாதனும் 'முகம்' மாமணியும் ஆவர். பிசிறற்ற தமிழ் ஆர்வலர்கள் இவர்கள்.

இந்தப் பேரணி குறித்துத் திறனாய்வுச் செய்தி வெளியிட்ட 'நந்ஹன்' இதழ் இரண்டு கருத்துகளை வெளியிட்டது.

1. ''தணிப்பரிதாம் துன்பமிது, தமிழகத்தின் தமிழ்த் தெருவில் தமிழ்தான் இல்லை, தமிழாய்ந்த தமிழன் தமிழ்நாட்டின் முதலமைச்சாய் பலமுறை வந்த பின்பும் தொடர்வதுதான் துன்பம்.

தமிழ் ஆட்சிமொழி, பண்பாட்டிற்கெனத் தனி அமைச்சர் நியமித்துள்ளபோதும் எந்த மாற்றமும் இல்லை'' என்கிறார் நந்தன் எழுத்தாளர்.

ஒரு முதல்வர் நினைக்கிறார் - ஆனால் செயல்வடிவம் பெறவில்லை.

தமிழ்க்குடிமகன் முயல்கிறார். ஆனால் ஓர் எல்லைக்குமேல் அவரால் தாண்ட முடியவில்லை. காரணம் என்ன?

இடையில், தமிழ்வழிக்கல்வியைச் செயற்படுத்த வேண்டிய பேராசிரியர் இருக்கிறாரே அவரைப் பற்றியல்லவா 'நந்தன்' எழுதியிருக்க வேண்டும். அவர் ஏற்பாடு செய்தால் முதல்வர் ஒப்புதல் அளித்து விடுவார்; தமிழ்க்குடிமகன் தூண்டலாம், துணை செய்யலாம்: பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் கையில் அல்லவா அனைத்தும் உள்ளன.

எனவே கல்வி அமைச்சர் மனது வைத்தால்தான் நடக்கும். அதுவரை எந்த மாற்றமும் இராது என்பதே உண்மை.

தமிழகத் தமிழாசிரியர் கழகம் எல்லா மாவட்டங்களிலும் 10.10.98 அன்று தமிழ் எழுச்சிக் கோரிக்கைப் பேரணியை நடத்தியது. அதன் தீர்மானப் படிகள் எங்கட்கு அனுப்பப்பட்டன.

''தமிழ் வளர்ச்சிப் பண்பாட்டுத்துறை என்று புதிய அமைச்சகம் ஒன்றை உருவாக்கித் தகுதிவாய்ந்த ஒருவரை அத்துறைக்கு அமைச்சராக்கிய பின்பும் உரிய மாற்றம் பெரியதாக ஒன்றும் ஏற்பட்டுவிடவில்லை என்பது தான் உண்மை'' என்று ஓங்கி அடித்துள்ளார்கள். தமிழ் ஆட்சிமொழி தவிரப் பிற அனைத்தும் பிற துறைகளில் உள்ளன. அந்த உண்மையைத் தான் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள்.

''தமிழகத்தின் கள்ளி, கற்றாழைகளாய்ப் பெருகி வரும் ஆங்கில வழிப் பள்ளிகளின் அரசு ஏற்புகளை விலக்கிக் கொள்ளவேண்டும்'' என்பது அவர்களது கோரிக்கைகளுள் ஒன்று.

சென்னைப் பேரணியில் இரா. இளவரசு, கி.த. பச்சையப்பன், செந்தில்நாதன் முதலான பலர் பேசியுள்ளனர்.

மேலும்,

''எட்டாம் வகுப்பு வரைத் தமிழ் வழியில் கற்பிக்கப்படும் என்ற முத்தான அறிவிப்பை வெளியிட்ட தமிழக முதல்வர் கருணாநிதிக்கும், கல்வி அமைச்சர் அன்பழகனுக்கும் தமிழ் ஆட்சிமொழி பண்பாட்டுத்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகனுக்கும் தமிழகத் தமிழாசிரியர் கழகம் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்து உள்ளது.''

மாநிலத் தலைவர் தில்லைவாணன், பொதுச் செயலர் சு. நஞ்சப்பன் ஆகியோர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளனர்.

எங்கள் முயற்சிகளை தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி வரவேற்றுள்ளது.

''தமிழ் ஒரு பாடமாக சொல்லித்தரும் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளி களுக்கு மட்டுமே இனி அங்கீகாரம் மற்றும் சலுகைகள் வழங்கப்படும் என்ற முதலமைச்சரின் அறிவிப்பும், தமிழ்நாடு அரசு எடுத்துள்ள முடிவும் மிகவும் பாராட்டத் தக்கது; வரவேற்கத்தக்கது'' என்றும்,

''தமிழ்நாடு அரசின் முடிவை மிகச் சரியாக கல்வித்துறை நடைமுறைப்படுத்த வேண்டும். தற்போது கல்வியை வியாபாரமாக்கியுள்ள சுயநலவாதிகளால் ஏற்படக் கூடிய எந்தச் சூழ்நிலையையும் தமிழ்நாடு அரசும், முதல்வர் கலைஞர் அவர்களும் ஒரு சவாலாக ஏற்று, தொடக்கக் கல்வியில் தமிழை அரியணை ஏற்றும் முயற்சியில் நடைமுறைப்படுத்த வேண்டும்'' என்றும் அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

தமிழ்நாடு சத்துணவு அமைப்பாளர் நலச்சங்கத்தின் சார்பில் மாநிலத் தலைவர் வீர. முருகன் வாழ்த்தியுள்ளார்.

''வரும் கல்வி ஆண்டு முதல் (1999-2000) ஒன்றாம் வகுப்பு முதல் எட்டாம் வகுப்பு வரை தமிழை முதன்மையாக கொண்டும், தமிழ் மொழி வாயிலாக அனைத்து பாடங்களையும், நடத்த வேண்டும் என்றும், அந்த பள்ளிகளுக்கு இலவச பாடப்புத்தகங்களை வழங்கவும் ஆணை பிறப்பித்த தங்களுக்கும், தமிழ்நாடு அரசிற்கும் எங்கள் சங்கத்தின் சார்பில் வாழ்த்துக்களை மகிழ்வுடன் தெரிவித்து கொள்கிறேன்'' என்று மொழி உணர்வுடன் தெரிவித்துள்ளார்.

கோவை மாநகராட்சி நடுநிலைப்பள்ளி பட்டதாரி தலைமை ஆசிரியர்கள் சங்கம் (18.11.98)

''இது ஒரு நல்ல தொடக்கம். காலம் கடந்ததாக இருந்தாலும் சரியான நேரத்தில் இந்த உத்தரவினை பிறப்பித்ததற்கு மனமார்ந்த பாராட்டுகள். தமிழே தெரியாமல் பட்டப்படிப்பு வரை தமிழ்நாட்டில் படிக்கலாம் என்ற அவலநிலை இதன்மூலம் நீக்கப்படுகிறது'' என்று கூறிப் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

'TN. FORCES' எனும் அமைப்பின் அமைப்பாளர் முனைவர் சண்முகவேலாயுதம் (18.11.98) பாராட்டி வரவேற்றுள்ளார்.

''தமிழை ஒரு பாடமாகச் சொல்லித் தரும் மழலையர் பள்ளிகளுக்குத் தான் அரசு அனுமதி மற்றும் சலுகைகள் வழங்கப்படும் என்ற தமிழக அரசின் அறிவிப்பு பாராட்டுதலுக்குரியது.

மேலும், தமிழ் மொழி வாயிலாகப் பாடம் கற்பிக்கும் மழலையர் பள்ளிகளுக்கு அரசு அறிவித்துள்ள சலுகைகள்,

(அ) ஏற்பு கட்டணம் குறைக்கப்படுதல்

(ஆ) இப்பள்ளிகளுக்கு அரசின் பாட நூல்கள் இலவசமாக வழங்குதல் ஆகிய செயல்களுக்கு தமிழ் நாடு குழந்தைகள் பராமரிப்புச் சேவைக்கான கூட்டமைப்பு பாராட்டுதல்களை தெரிவிக்கிறது,

1.1.98 அன்று வெளியிட்ட விளம்பரத்தின் அடிப்படையில், தமிழகத்தில் அரசின் ஒப்புதல் பெறாத மழலையர் பள்ளிகள் தொடர்ந்து இயங்குவதை அரசு அனுமதிக்ககாது என்ற அறிவிப்பு மழலையர் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதாகும். ஆனால், தமிழகத்தில் அரசின் அனுமதி பெறாமல் சுமாரி 20,000 மழலையர் பள்ளிகள் உளளன. 2,100 பள்ளிகள் மட்டுமே அனுமதி பெற்றுள்ளன, அனுமதி பெறாமல் இயங்குவது சட்டப்படி குற்றமாக இருந்தாலும், ஏராளமாகப் பெருகி வரும் பள்ளிகள் மீது அரசினுடைய சீரான கண்காணிப்புத் தேவை என்பதைக் காட்டுகிறது '' என்று தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில் அதன் பொதுச் செயலாளர் செ. நடேசன் பாராட்டி எழுதியுள்ளார்.

''தமிழ்நாட்டில் மழலையர் மற்றும் ஆரம்பப்பள்ளிகளில் தமிழை ஒரு பாடமாக கற்பிக்க வேண்டுமென்றும், அடுத்த கல்வியாண்டு முதல் பூகோளம், வரலாறு, கணிதம், சமூக அறிவியல் போன்ற பாடங்களை தமிழ்வழியில் கற்பித்திட வேண்டும் என்றும், தமிழ்மொழி மழலையர் பள்ளிகளுக்குச்

சலுகைகள் அளிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளதோடு தமிழகத்தில் தமிழ் படிக்காமலேயே ஆங்கிலத்தோடு தத்தம் தாய்மொழியை மட்டுமே கற்பிக்கும் 1008 ஆரம்ப நடுநிலைப்பள்ளிகளில் தமிழாசிரியர்கள் நியமிக்கப்பட்டு அவரவர் தாய்மொழி, தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றை கற்றுக்கொடுக்க வகை செய்துள்ள மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் அவர்களுக்கும் மாண்புமிகு தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும் தமிழ்நாடு ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி இதயம் நிறைந்த நன்றியையும், பாராட்டுக்களையும் மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறது'' என்கிறது அவரது பாராட்டு மடல்,

திருவான்மியூரில் உள்ள இளங்கதிர் இலக்கிய மன்றம்

''தமிழ் நாட்டில் அடுத்த கல்வி ஆண்டிலிருந்து மழலையர் பள்ளிகள் முதல் எல்லாப் பள்ளிகளிலும் எட்டாம் வகுப்பு வரை பூகோளம், வரலாறு, கணிதம், சமூக அறிவியல் ஆகிய அனைத்துப் பாடங்களும் தமிழிலேயே கற்பிக்கப்படும் என்று தாங்களும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அன்பழகனார் அவர்களும் உடனிருக்க முத்தமிழ் அறிஞர் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பு பெரு மகிழ்ச்சியை அளித்துள்ளது,

இது சாமானியமானது அல்ல, சரித்திரம் போற்றும் சிறப்புப் பணியென்று உணர்ந்து போற்றுகின்றன தமிழ் நெஞ்சங்கள்.

இது போன்று மேலும் மேலும் தமிழ்மொழியின் சிறப்புக்கான ஆக்கப் பணிகளுக்கு தமிழ் ஆட்சி மொழி மற்றும் பண்பாட்டுத் துறையைச் சார்ந்த தாங்களும் உறுதுணையாயிருந்து தமிழ் மக்களுக்கும் பல நன்மைகளை செய்ய வேண்டுமென வாழ்த்தி வணங்குகிறோம்'' என்று (20.11.98) எழுதிப் பாராட்டியுள்ளது. து.பெ. கனகசபை, சோதிவளவன் போன்றோர் எழுதியுள்ளனர்,

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் துணைத்தலைவர் இரா. இயற்கை அரசன் குமரி மாவட்டத்திலிருந்து எழுதுகிறார் (22.11.98)

''தாங்களும் மாண்புமிகு முதல் அமைச்சரும் மற்றும் அதிகாரிகளும் இணைந்து மழலையர் பள்ளி மற்றும் நடுநிலைப்பள்ளி வரை தமிழ் வழிக்கல்வி முறையை அடுத்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்த ஆணை பிறப்பித்து உள்ளீர்கள். இந்த நடவடிக்கை மூலம் தமிழர்கள் மற்றும் தமிழ் பற்றினையுடையவர்களின் தமிழ் அறிவு, மற்றும் அறிவியல் அடிப்படையான வளர்ச்சிக்கும் பெரும் துணை ஆகும் என்பது உறுதி.

மேலும் தமிழிலேயே இயங்கும் பள்ளிகளை ஊக்குவிக்கும் வகையில் அவற்றிற்கான ஏற்புக் கட்டணம் பாதியாக குறைக்கப்படும் என்றும் இந்த பள்ளிகளுக்கான பாட நூல்கள் இலவசமாக வழங்கப்படும் என்றும் கூறியுள்ளதும் மகிழ்ச்சி அளிக்கிறது. மொத்தத்தில் தாங்கள் தமிழை வளர்க்க இப்புதிய நடவடிக்கை எடுத்ததை பாராட்டுகிறேன். தமிழ் உலகில் தங்கள் புகழ் என்றும் நிலைக்க வாழ்த்துகிறேன்'' என்பது அவரது மடலின் சாரம்.

தஞ்சை மாவட்டத் தமிழாசிரியர் கழகம் 22.11.98 அன்று பாராட்டுத் தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்பியது. சு.போசு, சுப. கோவிந்தராசு ஆகியோர் இதனை மேற்கொண்டனர்

''1. தமிழகத்திலுள்ள அனைத்து மழலையர் பள்ளிகளிலும் எட்டாம் வகுப்புவரை அறிவியல் தவிர அனைத்துப்பாடங்களையும் தமிழ் வழியாக கற்பிக்க வேண்டும் என ஆணையிட்டுள்ள தமிழக முதல்வர், கல்வியமைச்சர், தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை அமைச்சர் ஆகியோரைத் தஞ்சை மாவட்டத் தமிழாசிரியர் கழகம் நெஞ்சாரப் பாராட்டுகிறது.

2. அரசு இசைவுபெறாத பள்ளிகளில் படித்து உயர்நிலைப்பள்ளிகளில் தனிப்படிப்பு மாணவராகச் சேர்த்துக் கொள்ளலாம் என்று உள்ள விதிமுறை அரசின் நல்ல நோக்கத்தைச் சிதைப்பதாக உள்ளதால் வரும் கல்வியாண்டிலிருந்து தனிப்படிப்பு மாணவர் சேர்க்கையைத் தடைசெய்து ஆணை பிறப்பிக்கவும், அறிவியல் பாடத்தையும் தமிழில் கற்பிக்க ஆணையிடவும் இக்கழகம் தமிழக அரசை அன்புடன் வேண்டுகிறது.

தமிழக அரசு விதிவிலக்கு எனும் பெயரால் தரும் எதுவும் எப்படி அடிப்படையைச் சிதைக்கிறது என்பது குறித்து நான் சண்டைபோட்டு வருகிறேன்.

மேலும் அறிவியல் பாடம் இப்போது வேண்டாம் எனும் முடிவுக்கும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர்களது தீர்மானம் சரியான அடிப்படையில் அரசின் சறுக்கல்களைச் சுட்டிக்காட்டுகிறது என்பதே என் கருத்து. (அமைச்சரவையில் சில பேர் சொன்ன கருத்துகளின் அடிப்படையில் இந்த முடிவு எட்டப்பட்டது) அனைத்துத் தமிழ் அமைப்புகள் சென்னையில் கூடி (கதிரவன் 23.11.98)த் தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளனர். பழ. நெடுமாறன், நா. அருணாசலம், ச. செந்தில்நாதன் முதலான பலர் கலந்து கொண்ட கூட்டுக் கூட்டம் இது:

அவர்களது செய்தி:

''தமிழ் மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான தமிழ் வழிக்கல்வித் தொடர்பாக அண்மையில் தமிழக அரசு வெளியிட்டு உள்ள அறிவிப்பு, தமிழ் மக்களின் முழுமையான கோரிக்கையை நிறைவு செய்யும் வகையில் அமையவில்லை என்றாலும் தற்போது, அறிவித்து உள்ள அறிவிப்புக் குறித்த அனைத்துத் தமிழ் அமைப்புகள் மற்றும் இயக்கங்களின் போராட்ட நிலைக்குழு மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்வதோடு, முதலமைச்சர் கலைஞர், கல்வியமைச்சர் அன்பழகன், தமிழ் ஆட்சிமொழி, பண்பாட்டுத் துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் ஆகியோருக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கல்விக் கூடங்களிலும் ஐந்தாம் வகுப்பு வரை தமிழ் மட்டுமே பயிற்று மொழியாகவும், பாடமொழியாகவும் இருக்க வேண்டும் என்றும், ஆறாம் வகுப்புத் தொடங்கி அனைத்து நிலைகளிலும் ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாக மட்டுமே கற்பிக்கப்படலாம் என்றும் இவ்வுயர் நிலைக்குழு மீண்டும் வலியுறுத்துகிறது.

பொறியியல், மருத்துவம், தொழில் நுட்பம், சட்டம் உள்ளிட்ட உயர் கல்வித்துறைகள் அனைத்திலும் முன்னரே தமிழ் வழி பாடநூல்கள் அணியமாகவும் அறிமுக நிலையிலும் இருத்தலால் வரும் கல்வி ஆண்டிலேயே அவ்வுயர் கல்வித்துறைகள் அனைத்திலும் தமிழ் வழிக் கல்வியை நடைமுறைக்குக் கொணர வேண்டும் என்று இவ்வுயர் நிலைக்குழு வலியுறுத்துகிறது.

தமிழக அரசு, அரசு சார்ந்த துறைகள் அனைத்திலும் தமிழ் வழிக் கல்வி பயின்றார்க்கே வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கவேண்டும் என இவ்வுயர்நிலைக் குழு வலியுறுத்துகிறது.''

மிக முக்கியமான செய்திகள் குறித்த தீர்மானங்களை இக்குழு நிறைவேற்றி அனுப்பி உள்ளது.

தங்க வயல் உலகத் தமிழ்க் கழகம் தன் பாராட்டைத் தெரிவித்துள்ளது.

''தமிழக அரசின் இம்முடிவை எத்தகைய எதிர்ப்பிற்கும் பணிந்து பின் வாங்கக்கூடாது என்று உலகத் தமிழ்க் கழகம் கேட்டுக் கொள்கிறது. ஆங்கில அடிமைகள் சிலர் தமிழனின் அறியாமையைச் சுரண்டி கல்விக் கூடங்களை வணிக மையமாக மாற்றி வருபவர்கள் எதிர்ப்பதாக வெளியான

செய்திகள் தமிழகத் தலைநகரில் இப்படியும் குள்ளநரிக் கூட்டங்களா என எண்ணி வேதனை படுவதாகவுள்ளது''.

எனவே குள்ள நரிக்கூட்டத்தின் போக்கையும் வெளி மாநிலத்திலிருந்து தமிழன்பர்கள் கண்டிக்கின்றார்கள் என்பதை உணர முடிகிறது.

'Indian Association for Pre-School Education' எனும் அமைப்பின் கோவைக் கிளையிலிருந்து ஒரு மடல். அதில் அவர்களது அமைப்பு பற்றிய செய்திகளும் நமக்குத் தெரியவேண்டும்.

அவர்கள் எழுதுகிறார்கள்:

''மூச்சினிலும், முழங்குகின்ற பேச்சிலும் பைந்தமிழே பயிலும் தங்களது அரசு சமீபத்தில் நம் தாய்மொழியாம் தமிழ் மொழியில் பாடம் கற்பிக்கும் மழலையர் பள்ளிகளுக்கு மட்டுமே அங்கீகாரம் அளிப்பது என எடுத்திருக்கும் முடிவு கண்டு எல்லையற்ற மகிழ்ச்சி எய்தினோம். எங்கள் கல்விக்கழகம் ஏற்கனவே தங்கள் உளப்பாங்கிற்கேற்ப செயல்பட்டு வருவதை எண்ணி உற்சாகம் அடைகிறோம். எங்கள் கழகம் 20 கிளைகளுடன் தேசிய அளவில் செயல்பட்டுவருகிறது அதன் கோவைக்கிளை எங்களுடையது மேலும் இந்திய முன் பருவக் கல்விக்கழகத்தின் மத்திய அலுவலமாக 8 வருடங்கள் நாங்கள் விளையாட்டு மூலம் கல்வியைக் கற்பிக்கப் பணிமனைகள் மற்றும் பணியிடைப்பயிற்சி முகாமை தமிழ் மொழியில் நடத்தி வருகிறோம் என்பதை தங்களுக்கு மிகவும் பெருமையுடன் கூறிக்கொள்கிறோம்.

தித்திக்கும் தீந்தமிழால் எத்திக்கும் புகழ்மணம் பரப்பும் செந்தமிழ்ச் செல்வரே!

நாங்கள் சமூக நல வாரியத்தின் மூலம் தொடர்ச்சியாக ஓராண்டு ஆசிரியர் பயிற்சி தமிழில் நடத்தி இருக்கிறோம். தற்போது இந்திரா காந்தி தேசிய திறந்த நிலைப் பல்கலைக்கழகம் மூலமாக 'குழந்தைகள் நலன் மற்றும் பராமரிப்புக் கல்வியில் டிப்ளமோ படிப்பு' தமிழில் பயிற்றுவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறோம். இதற்கான பாடத்திட்டத்தினை இந்திராகாந்தி தேசிய திறந்த நிலைப்பல்கலைக் கழகத்திடமிருந்து பெற்றுள்ளோம். இதன் மூலம் தாங்கள் அறிவித்தபடி தமிழில் கற்பிக்கும் ஆசிரியர்களை உருவாக்க உள்ளோம் என்பதை எண்ணி இறும்பூது அடைகின்றோம்.

செந்தமிழுக்குச் சிறப்பு தந்து, எங்கள் நெஞ்சில் நிறைந்தவரே!

நாங்கள் தமிழில் ஆசிரியர்/குழந்தைகள் கையேடுகள் பலவற்றைத் தயாரித்து வழங்கியுள்ளோம். அவற்றை இத்துடன் இணைத்து அனுப்பியுள்ளோம். மேலும் மழலையர் பள்ளி ஆசிரியர்களுக்கான ஒலி, ஒளி நாடாக்களை வெளியிட்டு இருக்கிறோம். கேட்பவர்களுக்குக் கொடுத்துக் கொண்டும் இருக்கிறோம்.

மழலையர் பள்ளிகளுக்கு அங்கீகாரம் வழங்குவது மற்றும் அங்கீகாரம் இல்லாத பள்ளிகளை மூடுவது பற்றி அரசு முடிவெடுத்திருக்கும் இவ்வேளையில் நிறுத்தப்பட்டிருக்கும் மழலையர் பள்ளி ஆசிரியப்பயிற்சியையும் திரும்பவும் தொடங்கவேண்டும் என்று பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழ்த்தாய் ஈன்ற தனிப்பெருஞ்செல்வரே!

தமிழ்த்தாயின் சேவையில் தங்களோடு இணைந்து பணியாற்ற நாங்கள் எந்நாளும் தயாராக உள்ளோம். தமிழ்மொழிக்கு ஏற்பட்ட சீர்குலைவுகள் அனைத்தும் தங்கள் ஆட்சிக் காலத்தில் களையப்பட்டுத் தமிழ்த்தாய் மீண்டும் மங்காத புகழுடனும் தொன்மைச் சிறப்புடனும் வளர்ச்சி பெற்றுவரும் நிலை கண்டு பெருமிதம் அடைகிறோம்

வாழ்க தமிழ்! வளர்க நும் தமிழ்த்தொண்டு!''

அனைத்திந்திய அமைப்புகள் பல அவரவர் தாய்மொழி வழியில் கல்வி என்பதனை நன்கு செயற்படுத்தி வருகின்றன என்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டாகும்.

தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி சார்பில் அதன் பொதுச்செயலாளர் அப்துல் மஜீத் அறிக்கை தருகிறார்.

''தமிழக அரசு அனுமதித்து, தனியார் துறையில் தொடங்கப்பட்டுள்ள 2100 நர்சரி பள்ளிகளில் ஆங்கில வழியில் கல்வி கற்பிக்கப்படுவதை மாற்றி தமிழ்மொழி கல்வியில் கல்வி கற்பிக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதை குறித்து தமிழக முதல்வரின் அறிவிப்பு - நடவடிக்கை மாபெரும் புரட்சிகரமானது. அதை தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி வரவேற்கிறது.

தமிழகத்தில் கடந்த பல ஆண்டுகளாக தனியார் துறையில் ஆங்கில வழி கட்டண ஆரம்ப கல்வியை தொடங்க அரசு அனுமதித்துள்ளது. இவ்வாறு அனுமதிப்பதை ரத்து செய்ய வேண்டுமென்றும், ஆரம்பக்கல்வி தாய்மொழி வழியில்தான் இருக்க வேண்டுமென்றும் கோரி பல்வேறுகட்ட போராட்ட நடவடிக்கைகளை தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி

மேற்கொண்டுள்ளது. வருகிற டிசம்பர் 3-ந்தேதியும் கூட இத்தகைய கோரிக்கையை வலியுறுத்தி தமிழகமெங்கும் போராட்ட அறிவிப்பை தமிழக ஆரம்பப்பள்ளி ஆசிரியர் கூட்டணி வெளியிட்டிருந்தது.

தமிழக முதல்வரின் அறிவிப்பு தமிழக மக்களுக்கு செய்துள்ள மாபெரும் உதவியாகும். இந்த அறிவிப்பு ஆரம்ப கல்வி தாய்மொழியில்தான் கற்பிக்க வேண்டும் என்பதற்கு வழி வகுத்துள்ளது. ஏழை, எளிய மக்களுக்கு இந்த திட்டம் பெரிதும் உதவும். குறிப்பாக கிராமப்புற மக்களின் நல்வாழ்விற்கும் முன்னேற்றத்திற்கும் இது பெரிதும் உதவி புரியும்''.

எந்த அளவுக்கு ஆசிரியர் இயக்கங்கள் தமிழ்வழிக் கல்வியில் அக்கறை கொண்டுள்ளன என்பதற்கு இவை எடுத்துக் காட்டுகள் ஆகும்.

ஈரோடு வடக்கு மாவட்ட திராவிடர் கழகச் சார்பில் இராம. இளங்கோவன் தாங்கள் நிறைவேற்றிய தீர்மானங்களை அனுப்பியுள்ளனர்.

''ஒவ்வொரு பள்ளிகளிலும், அனைத்து ஆங்கில வழிக் கல்வி நிலையங்களில் அறிவியல் நீங்கலாக அனைத்தும் தமிழ்மொழி வழியாக பாடத் திட்டம் அமைய வேண்டும் என்றும், மழலையர் பள்ளிகளில் தமிழ் கட்டாயப் பாடம் ஆக்கப் பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்து உள்ள தமிழக அரசினை இக்கூட்டம் நன்றி தெரிவித்து பாராட்டுகின்றது.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு பள்ளிகளிலும் அனைத்து பாட நூல்களும், பாடத்திட்டமும் தமிழக அரசு வெளியிடும் நூல்களே கட்டாயம் இருக்க வேண்டும் என்பதை சட்டமாக்கிட அரசுக்கு இக் கூட்டம் பரிந்துரை செய்கின்றது.''

எனவே அரசியல் கட்சிகள் மட்டுமின்றி, திராவிடர்கழகம் போன்ற சமுதாய சீர்திருத்த அமைப்புகளும் தயங்காமல் தமிழ்வழிக் கல்வியை ஏற்று முழங்குகின்றன என்பதை உணர முடியும்.

தமிழ்நாடு தமிழாசிரியர் பேரவை சார்பில் வே.புகழேந்தி தீர்மானத்தை வலியுறுத்தி எழுதுகிறார்.

''குறிப்பாகத் தமிழ்வழிக் கற்பிக்காத பள்ளிகட்கு அரசு ஒப்புதல் (அங்கீகாரம்) அளிக்கப்படமாட்டாது எனவும், அங்கீகாரம் பெறாமல் எப்பள்ளியும் நடத்த அனுமதிக்கப்படமாட்டாது எனவும் தெளிவுப்படுத்தியிருப்பது மிகவும் பாராட்டிற்குரியது.

இத்தகைய அறிவிப்பு ஒன்றும் புதியதோ புரட்சிகரமானதோ இல்லை.

கேரளா, கர்நாடகா, ஆந்திரா உள்ளிட்ட பிற மாநிலங்களிலும் தம் தாய்மொழியில் முதன்மை தந்து கல்வி கற்பித்து வரப்படுகிறது, மான உணர்வோடு.

ஏன்? இரஷியா, சீனா, ஜப்பான் போன்ற பிற நாடுகளிலும் தங்கள் தாய்மொழியில் தான் தொழில் நுட்பக் கல்வி உள்ளிட்ட அனைத்துக் கல்வியும் கற்பிக்கப்படுகின்றன என்பது கண்கூடு.

தமிழ் வழிக் கல்வி குழந்தைகள் எப்பாடங்களையும் எளிமையாகப் புரிந்து கொள்ளவும், தமிழ்ப் பண்பாட்டினை இளமை முதலே கடைபிடிக்கவும் உதவும் என்பதில் ஐயமில்லை.

இதற்குக் கூட கோயில்களில் தமிழில் வழிபாடு கூடாது என நீதிமன்றம் சென்றதைப் போல சில கோமாளிகள் நீதிமன்றமும் செல்லக் கூடும்.

அதற்காக மானம் இழக்கும் நடவடிக்கையில் அரசு இறங்கக் கூடாது எனத் தமிழக அரசைப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன்'' என்று அவரது வேண்டுகோள் அமைகிறது.

தமிழ் நாடு முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர்கள் கழகம் - கோவை மாவட்டக் கிளையின் சார்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை மு. துரைசாமி அனுப்பியிருந்தார்.

''அடுத்த ஆண்டிலிருந்து முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்புவரை தமிழ்வழிக் கல்வியைக் கொண்டுவர முழுமுயற்சி செய்து அரசாணை பிறப்பிப்பதற்கு உறுதுணையாக இருந்த தங்களுக்கு இக்கழகம் தனது நெஞ்சார்ந்த பாராட்டைத் தெவித்துக் கொள்கிறது'' என்று தீர்மானம் பேசுகிறது.

மேட்டூர் அணையில் உள்ள 'திருவள்ளுவர் கல்வி குழுகப்பணி அறக்கட்டளை' 9 தமிழ் அமைப்புகளை இணைத்துக் கூட்டம் நடத்தி, தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

1. ''தாய்மொழி வழிக்கல்வி'' குறித்த அரசின் அறிவிப்பை வரவேற்று மாண்புமிகு தமிழக முதல்வர், மாண்புமிகு கல்வி அமைச்சர், மாண்புமிகு தமிழ் ஆட்சி மொழி மற்றும் பண்பாட்டுத் துறை அமைச்சர் ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கிறது.

2. ''தாய்மொழி வழிக்கல்வி'' குறித்த அறிவிப்பை விரைந்து அரசாணையாக கொண்டுவர வேண்டுமாய் தமிழக அரசை வலியுறுத்துகிறது.

குமரி மாவட்டத்தில் உள்ள தமிழ் அமைப்புகள் ஒன்று கூடித் தமிழ்வழிக்கல்வி ஆதரவு மாநாடு நடத்தி (17.3.99) "தமிழ் வழிக்கல்வி எதிர்ப்புக்குக் கண்டனக் கூட்டமும்" நடத்தின.

சாமுவேல்தாசன், பச்சைமால் போன்றோர் பங்கேற்றனர்.

திருமுதுகுன்றத்தில் உள்ள 'தமிழ்காப்பு மற்றும் தமிழ் வளர்ச்சித்துறை தமிழ் மக்கள் அறக்கட்டளை' சார்பில் (2030,மேழம்,5) ஆ. கருப்பையா.

''தாய்மொழி வாயிலாகவே மழலையர் கல்வி தொடங்கி, கலைக் கல்லூரிக் கல்வி இடைப்பட்டு, பொறியியல், தொழில்நுட்பம், மருத்துவம், சட்டத்துறைகளின் கல்வி ஈறாக உள்ள எல்லாக் கல்வி வகைகளையும் தாய்மொழியாம் தமிழ் வழியிலேயே நடைபெற உடனடியாக ஆவன செய்ய வேண்டுமென்று தமிழ்ச்சார்பில், தமிழன்பு உள்ளத்தால், தமிழின உறவு உரிமையோடு வேண்டுகின்றனம்'' என்று நீண்டதோர் அறிக்கையினைக் கல்வி அமைச்சர்க்கு அனுப்பியுள்ளார்.

Indian Association for Primary School Education சென்னைக்கிளையின் சார்பில் அதன் தலைவர் சுதந்திரா சக்திவேல் வரவேற்று மடல் எழுதியிருந்தார். இந்த அமைப்பில், ஆங்கில வழியில் பள்ளிகள் நடத்திவரும் திருவாட்டி ஒய்.ஜி. பார்த்தசாரதியும் உறுப்பினராக உள்ளார்.

இன்தாம் - தாகம் இணைந்து 21.3.99 அன்று 'தமிழ்க் கல்வி மொழி ஆண்டு' என்று வலியுறுத்தி எழுச்சி மாநாடு நடத்தினர். சென்னையில் உள்ள பல தமிழ் அறிஞர்களும், பாவலர்களும், பல கல்லூரி மாணவர்களும் கலந்து கொண்டனர்.

7.5.99 இல் 'தமிழியக்கம்' சார்பில் முனைவர் மு. இளமுருகன் எங்கட்கெல்லாம் பாராட்டுத் தெரிவித்திருந்தார்.

''கெடெலெங்கே தமிழின் நலம், அங்கெல்லாம்
தலையிட்டுக் கிளர்ச்சி செய்வீர்'

என முழங்கிய பாவேந்தர் கருத்திற்கு மதிப்பளித்துப் போற்றும் வண்ணம் தமிழகத்தில் மழலையர் கல்வி முதல் ஆராய்ச்சிக்கல்வி வரை அருந்தமிழைக் கல்வி மொழியாக்க நீதியரசர் மோகன் தலைமையில் உயர்மட்டக் குழுவை அமைத்துள்ள தமிழாய்ந்த தமிழறிஞர் கலைஞரின் அரசைப் பெரிதும் பாராட்டுகிறோம்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

தமிழகப் புலவர் குழுவின் சார்பில் அதன் தலைவர் முத்து-கண்ணப்பர் ஓர் அறிக்கை தந்துள்ளார். அதில் அவர் குறிப்பிடுவது:

‘‘தமிழ்நாட்டில் தமிழே பயிலாமல் பட்டக் கல்வி வரை பயிலலாம் என்ற இழிநிலையை நீக்கி மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகளில் அடுத்த கல்வி ஆண்டு முதல் தமிழ் மொழியை ஒரு பாடமாக நடத்திட தமிழக அரசு எடுத்துள்ள முடிவு வரவேற்கத்தக்கதாகும். ஐம்பது ஆண்டுகளாகத் தமிழ்நாட்டிற்குத் தமிழுக்கு இருந்த அவமானத்தைக் கலைஞர் போக்கி தமிழுக்கு உரிய உயர்வளித்து உள்ளதைப் பாராட்டுகிறோம்.

மேலும், மழலையர் தொடக்கப் பள்ளிகளில் குறைந்தது மூன்றில் இரண்டு பாடங்களையாவது தமிழ் வழியில் பயிற்றுவிக்க அடுத்த ஆண்டு முதல் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதையும், தமிழகப் புலவர் குழு மனமாரத் தமிழக அரசையும் முதல்வர் கலைஞர், கல்வி அமைச்சர் அன்பழகன், தமிழ் பண்பாட்டுத் துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் ஆகியோரையும் நெஞ்சம் நெகிழ்ச்சியோடு பாராட்டி மகிழ்கிறது’’

கி.ஆ.பெ.வி. அவர்களால் நிறுவப்பட்டுப் பல ஆண்டுகளாக இயங்கி வரும் புலவர் குழுவில் நானும் ஓர் உறுப்பினர். அறிஞர்கள் மு.வ., சோமசுந்தர பாரதியார், பாரதிதாசன் என எல்லோரும் ஒருங்கிணைந்து அமைக்கப்பட்ட் அமைப்பு இது. இந்தத் தொடக்க விழாவை நேரில் கண்ட அந்நாள் மாணவனாக இதனை எண்ணிப் பார்க்கிறேன்.

குடந்தையில் உள்ள ‘தமிழ்நாடு கல்வி - சமூக வளர்ச்சி மன்றம்’ சார்பில் தீர்மானங்களை நிறைவேற்றி, சு. சீனிவாசன் அனுப்பியிருந்தார். (20.1.99)

தீர்மானம் : 1

‘‘12.1.99 அன்று மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகளில் சமூகவியல், கணிதம், அறிவியல் ஆகிய மூன்று பாடங்களில் குறைந்தது இரண்டு பாடங்களையாவது தாய்மொழியாம் தமிழ் வழியில் கற்பிக்க வேண்டுமென்று தமிழக அரசு உத்தரவிட்டுள்ளதை இம்மன்றம் பாராட்டி வரவேற்பதுடன், தனி மகிழ்ச்சியையும் நன்றியையும் தமிழக அரசுக்குத் தெரிவித்துக் கொள்கின்றது.

தீர்மானம் : 2

அடுத்த கல்வி ஆண்டில் (1999-2000) இரண்டு பாடங்களை கண்டிப்பாக தமிழ் வழியில் கற்பிக்க உறுதி அளித்து விண்ணப்பிக்கும்

மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகளுக்கு அரசு விரைந்து அங்கீகாரம் வழங்கி அப்பள்ளிகளில் பயிலும் குழந்தைகளுக்கும், குழந்தைகளின் பெற்றோர்களுக்கும் உதவிட வேண்டுமென்று இம்மன்றம் மாண்புமிகு முதல்வர் அவர்களையும், கல்வித்துறையையும் கனிவுடன் கேட்டுக் கொள்கின்றது.

தீர்மானம் : 3

பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை மழலையர் பள்ளிகளில் சேர்ப்பதற்கு முக்கிய காரணம் ஆங்கிலமொழி மோகம் அன்று. அங்குள்ள தரமே காரணம். 98-99 கல்வி ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டப் பள்ளிகளில், மழலையர்ப் பள்ளிகளில் பயின்ற குழந்தைகளை சேர்த்திட பெற்றோர்கள் மிகவும் அல்லல்பட்டார்கள் என்பதை இம்மன்றம் அரசின் கவனத்திற்கு கொண்டுவருகிறது.

பல பட்டதாரிகளையும், மழலையர் பள்ளிகளில் பணியாற்றும் பல பெண்மணிகளையும் உள்ளடக்கியதாக இந்த அமைப்பு விளக்குகிறது.

வடசென்னை, தமிழ் இளைஞர் கழகம் 18.6.99 இல் ஒரு வேண்டுகோள் வைத்தது.

‘‘தமிழ்வழிக் கல்வியைப் பள்ளிகளில் நடைமுறைப்படுத்த பட்டினிப் போர் நடத்திய தமிழ் அறிஞர்கள் வேண்டுகோளின்படி, தமிழக அரசால் நியமிக்கப்பட்ட மாண்புமிகு. நீதியரசர் திரு. மோகன் அவர்கள் தலைமையில் இயங்கிய குழு அளித்த தமிழ்வழிக் கல்விக் குறித்த அறிக்கையை பெற்று தமிழக அரசு உடனடியாக அதை வெளியிட வேண்டுமென்றும், அரசு வாக்களித்தபடி அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் தமிழக அரசை வடசென்னை தமிழ் இளைஞர் கழகம் வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது’’ தி.வே. சுந்தரமூர்த்தி இதனை எழுதியுள்ளார்.

மதுரை நுகர்வோர் பாதுகாப்பு இயக்கத்தின் சார்பில் அதன் பொதுச் செயலாளர் கண. முனியசாமி‘தமிழ்வழிக் கல்வி‘யை வலியுறுத்திக் கல்வி அமைச்சர்க்கு எழுதியுள்ளார்.

‘தமிழ்ப் பற்று, பயிற்று மொழிப்பற்றாக மாறும் என நம்புகிறோம்‘‘ என்று தெளிவுபடுத்தியுள்ளனர்

‘தமிழக அரசின் நிதியுதவி பெறும் அகவை முதிர்ந்த தமிழறிஞர் பேரவை’யின் சார்பில் வீ. இராசகோபாலன் தங்கள் அமைப்பின் தீர்மானங்களை அனுப்பியுள்ளார்.

நாமக்கல் பாவேந்தர் இலக்கியப் பேரவை சார்பில் தீர்மானம் நிறைவேற்றி அனுப்பப்பட்டுள்ளது

''தமிழ் வழிக் கல்வியை நடைமுறைப்படுத்த நியமனம் செய்யப்பட்ட நீதிபதி. மோகன் குழுவின் பரிந்துரைகளை, ஐந்தாம் வகுப்பிற்கு மேல் ஆங்கிலம் ஒரு பாடமாக இருக்க வேண்டும், பொறியியல் கல்வியுடன் மருத்துவக் கல்வியும் தமிழ் வழியில் இருக்க வேண்டும் என்னும் திருத்தங்களோடு அரசு விரைவில் சட்டமாக்காவிட்டால் 102 தமிழ் உணர்வாளர்களின் சாகும்வரை பட்டினிப் போரை வரும் சனவரித் திங்களில் மீண்டும் தொடங்க வெண்டும் என்று தமிழ்ச் சான்றோர் பேரவையை இக்கூட்டம் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

தமிழ் வழிக் கல்வியை நடை முறைப்படுத்துவதில் தமிழக முதல்வர். கலைஞர் அவர்களின் தமிழ் உணர்வுக்குத் துணையாக இருக்காமல் அதற்கு மாறாக இருக்கும் அமைச்சர்கட்குக் கருப்புக் கொடி காட்டுவதென இக்கூட்டம் முடிவு செய்கிறது.

இந்த அளவுக்குத் தமிழ் நாட்டில் ஒரு வேகம் பிறந்துள்ளது எனபதனைக் காண முடிகின்றது.

தமிழர் தேசிய இயக்கத்தின் சார்பில் அ. வியனரசு (26.10.99) விரிவான வேண்டுகோள் வைத்துள்ளார்.

தாங்கள் ஆட்சிமொழித்துறை அமைச்சராக பொறுப்பேற்ற காலத்திலிருந்து தமிழ் பயிற்று மொழிக்காகவும், அரசாணைகள் தமிழில் வெளிவரவும் எடுத்துவரும் பெரும் முயற்சிகளைக் கண்டு பெரிதும் மகிழ்கிறோம். பாராட்டுகிறோம். எனினும் நமது தமிழக அரசு தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் இயற்றி நாற்பத்திரண்டு ஆண்டுகளாகியும் இன்னமும் அச்சட்டம் முழுமையாக தமிழர்களுக்கு பயன் விளைவிக்கவில்லை என்பது நம் அனைவருக்கும் மிகவும் வருந்துவதற்குரிய செய்தியாகும்.

இந்நிலையை மாற்றுவதற்கு ஒரேவழி, உறுதியான வழி தமிழ்வழிக் கல்விதான்'' என்று தெளிவு படுத்தியுள்ளார்.

வணிக நோக்கத்தில் பூற்றீசல்கள்போல் நாடெங்கிலும் பெருகியுள்ள தனியார் ஆங்கிலப் பள்ளிகள் மீது தமிழ் மக்களுக்கு அளவுகடந்த மோகம் என்பது ஆங்கிலத்தால் மட்டுமல்ல. அரசு மற்றும் அரசு உதவிபெறும் தமிழ்வழிப்பள்ளிகளின் தரக்குறைவினாலும் ஆகும். தமிழகத்தில் இயங்கும் 41,417 அரசுப் பள்ளிகளில் 600-க்கும் மேற்பட்ட பள்ளிகளில் ஓராசிரியர்

மட்டுமே பணியாற்றுகிறார். 7000 பள்ளிகளில் இரண்டாசிரியர்கள் மட்டுமே பணியாற்றுகிறார்கள். 17,000 பள்ளிகளில் மேசை, நாற்காலி, எழுது பலகை, மாணவர்களுக்கான இருக்கை பலகைகள் போன்ற அடிப்படை வசதிகள்கூட இல்லையென பல்வேறு இதழ்களில் செய்திகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. அரசுப் பள்ளிகளின் அவலநிலை இவ்வாறு இருக்கும் போது மக்களைக் குறைகூறுவது எப்படிச் சரியாகும். எனவே தமிழக அரசுப் பள்ளிக்கூடங்கள் அனைத்தையும் மறு சீரமைப்புச் செய்து தேவையான அடிப்படை வசதிகளையும் செய்து கொடுக்க வேண்டும்.

இதில் சில உண்மைகளை ஒளிவு மறைவின்றித் தெளிவு படுத்தியுள்ளார். என்பதை மறுக்க முடியாது. பள்ளிக்கல்வித்துறை, அரசு சார்ந்த பள்ளிகளுக்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்து நல்ல தரமுள்ள கல்வி தரப்படுகிறது எனும் நம்பிக்கையைத் தோற்றுவித்தாலே பல நிலைகளைச் சரிக்கட்டிவிட முடியும். எனினும் இது முழுக்க முழுக்கப் பள்ளிக் கல்வித் துறை கவனிக்க வேண்டியதொன்று என்பதை அனைவரும் மனத்திற் கொள்ள வேண்டும்.

இதற்கு முன் நான் குறிப்பிட்டுள்ள தமிழ் அமைப்புகள் அனைத்தும் தொடர்ந்து 'தமிழ்வழிக் கல்வி'யை வலியுறுத்தி வந்துள்ளன. 19.11.99 அன்று தமிழக அரசு, அரசாணை பிறப்பித்தபின் வேறு சில தமிழ் அமைப்புகளும் வரவேற்றும் பாராட்டியும் எழுதியுள்ளன.

பட்டுக்கோட்டை, தமிழ் ஒலிப் பேரவையின் சார்பில் இராம. இளங்கோவன் எழுதுகிறார். (29.11.99)

''தமிழகத்தின் வரலாற்றில் - தமிழ்மொழி வரலாற்றில் - தனிப்புகழ் எழுத்துக்களாக, தங்கள் பெயர் போற்றப்படும்!

வாழும் தமிழ்க்குடிமகனின் இவர்தம் தமிழ்! இது நடைமுறை உண்மை!

''வாழும் தமிழ், வாழும் இனி!'' என்றே கல்வியில் தமிழுக்கு முன்னுரிமை தந்துள்ள தங்களுக்கும், தமிழக முதல்வர் அவர்களுக்கும் தமிழக அமைச்சரவைக்கும் எனது நெஞ்சுகனிந்த பாராட்டுகள் பலகோடி!'' என்று பாராட்டியுள்ளார். இவரும் உண்ணா நோன்பிருந்த 100 பேரில் ஒருவர்.

13.11.99 அன்று தமிழகத் தமிழாசிரியர் கழகத்தின் சார்பில் கொங்குமண்டல, தமிழ் எழுச்சிமாநாடு நடைபெற்றது. இரா. இளங்குமரன், பிரபஞ்சன், சாலினி இளந்திரையன், தியாகு போன்றோர் 'தமிழ்வழிக் கல்வி'

யை வலியுறுத்திப் பேசியதுடன், கல்வி அமைச்சரே இதில் கலந்துகொண்டு எழுச்சியுரை ஆற்றியுள்ளார் என்பதனைப் பொதுச் செயலாளர் நஞ்சப்பன் தெரிவித்துள்ளார். தூத்துக்குடி மாவட்டத் தமிழ் அமைப்புகள் சார்பில் கு.ம. சுப்பிரமணியம், மோ. அன்பழகன் ஆகியோர் (251199) ஒரு மடல் எழுதியிருந்தனர்.

''தமிழ்நாட்டிலுள்ள அனைத்துப் பள்ளிகளிலும் ஐந்தாம் வகுப்பு வரை தமிழே பயிற்று மொழி என்று இன்று தொலைக்காட்சியில் தாங்கள் அளித்த பேட்டியைப் பார்த்துப் பரவசமடைந்தேன்.

தூத்துக்குடி மாவட்டத் தமிழ் அமைப்புகளின் சார்பில் எங்களது நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறோம்'' என்று குறிப்பிட்டுள்ளனர். இதில் 19 தமிழ் அமைப்புகள் ஒருங்கிணைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழ்நாடு டாக்டர் சிவந்தி ஆதித்தனார் நற்பணி மன்றம் சார்பில் விழுப்புரத்திலிருந்து சுயம்புதுரைபாண்டியன் எழுதுகிறார். (26.11.99)

''முதல் ஐந்து வகுப்புகள் வரை தாய்மொழி வாயிலாகவே கல்வி கற்க வேண்டும் என ஆணையிட்டு குழந்தைகளின் ஆங்கில சுமையை நீக்கிய தமிழக முதல்வருக்கும், தங்களுக்கும் நன்றியையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்'' என்று வாழ்த்துகிறார்.

திண்டிவனம் கம்பர் கழகத் தலைவர் ஆ.பொ. குமாரசாமி 27.11.99 அன்று எழுதுகிறார்.

''தாய்த்தமிழ்வழி கல்வி பயிற்றுவிப்பதற்கான அரசாணையை அமல்படுத்துங்கள். ஆங்கில வழிப் பள்ளிகள் கண்டு அஞ்சுதல் செய்யமாட்டீர் என்று நம்புகிறோம். தமிழன் தமிழ் கற்க எவ்வளவு தடைகள்! தடைகளைத் தகர்த் தெறியுங்கள்; இன்றேல் எரியுங்கள், தடைகளை! பிறகு தான் நாம் தமிழரென்று தலைநிமிரலாம்.'' என்று எழுச்சியுடன் குறிப்பிட்டுள்ளார்.

காஞ்சிபுரம் தமிழர் இயக்கத்தின் சார்பில் இரா. ந. தேவராசன், கி. உதயகுமார் ஆகியோர் (1.12.99)

''தாங்கள் எடுத்த விரைவான நடவடிக்கை மூலம் அடுத்த கல்வியாண்டில் இருந்து தமிழைப் பயிற்று மொழியாக்கி ஆணை வெளியிடப்பட்டதற்கு

எங்கள் இயக்கத்தின் நெஞ்சார்ந்த நன்றியைத் தங்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம்.

எத்தனை இடையூறுகள் வந்தாலும் தாங்கள் உறுதியுடன் நின்று தமிழ்ப் பணியாற்றக் கேட்டுக் கொள்கிறோம். தங்களுக்கு எங்கள் இயக்கம் என்றும் துணை நின்று தங்கள் கரத்தைப் பலப்படுத்துவோம் என்று கூறிக் கொள்கிறோம்.“ என்று எழுதியுள்ளனர்.

தஞ்சை, கரந்தையில் உள்ள பாவாணர் தனித்தமிழ்ப் பயிற்றகம் சார்பில் த. தமிழ்த்தென்றல் தீர்மானம் நிறைவேற்றி விடுத்துள்ளார். (28.11.99)

மழலையர் பள்ளி முதல் ஐந்தாம் வகுப்புவரை தமிழ்வழியில்தான் பயிற்றுவிக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்திருப்பதற்கும் இக்கூட்டம் தன் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

தஞ்சாவூர்த் தமிழ்ப் பேரவை சார்பில் பா. இறையரசன் (1.12.99) எழுதியுள்ளார்:

‘‘மழலையர் கல்வியும் தொடக்கக் கல்வியும் (1-ஆம் வகுப்பு முதல் 5-ஆம் வகுப்புவரை) தமிழ்வழியில் வரும் கல்வியாண்டில் (2000-2001) அனைத்துப் பள்ளிகளும் கொண்டுவர வேண்டும் என்று அறிவித்துள்ள தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களுக்கும் தமிழ் அமைச்சர் தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும் கல்விஅமைச்சர் அன்பழகன் அவர்களுக்கும் துணை நின்றோர்க்கும் நன்றி பாராட்டுகிறோம்.

மூன்று ஆண்டுக்குள் மாற்றலாம் என்று கூறியுள்ளதால் பலர் பின்பற்றாமல் போகவும் மாற்று எண்ணத்துக்கு இடம்தரவும் பெயர்ப்பலகைத் தமிழாக்கம் போல மேலும் பல ஆண்டுகள் காலம் நீட்டித்துக்கொண்டே போகவும் கூடும். எனவே,

> ‘‘வரும் கல்வி ஆண்டில் (2000-2001) தமிழ்வழியில்
> மழலையர் கல்வியும் தொடக்கக் கல்வியும்
> நடைபெறவேண்டும்’’

எனச் சட்டமியற்ற வேண்டுகிறோம்.

கால நீட்டிப்புக் கொடுத்தாலே அதற்குள் ஒவ்வொரு திட்டத்தையும் சிதைப்போர் மேலோங்குகின்றனர் என்பதனை நாம் அறிந்துள்ளோம். அதனை உணர்ந்துதான் இவர் எச்சரித்துள்ளார்.

திருவள்ளூர் மாவட்ட, மொழிப்போர் தியாகிகள் முன்னேற்ற சங்கச்சார்பில் கா.கு சானகிராமன் எழுதுகிறார்.

''ஒன்றுமுதல் ஐந்தாம் வகுப்புவரை அனைத்து பள்ளிகளிலும் தமிழ் மொழியே பயிற்று மொழியாகவும் ஆறாம் வகுப்பு முதல் வேறு ஒரு மொழி விருப்பப்பாடமாகவும் கொள்ளலாம் என்றும் தொடர்ந்து அனைத்து நிலையிலும் தமிழ் மொழியையே பயிற்று மொழியாக அமைய ஒரு தூண்டுகோலாக தாங்கள் தமிழ் பயிற்று மொழி ஆணை பிறப்பித்து தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் தமிழர்களுக்கும் நன்மை செய்துள்ள பணி.

இந்த ஆணையால் பயன் அடைந்து தமிழன் தாய்மொழி மூலம் பயின்று மிகச் சிறந்து இன்றைய வளர்ந்து வரும் அறிவியலில் உலகப் புகழ் பெறுவான் என்பது திண்ணம்.

இந்த ஆணைக்கு உடன் இருந்து உதவிய தமிழ் வளர்ச்சி பண்பாடு மற்றும் இந்து அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகன் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்வது எங்களின் கடமை. இந்த ஆணைக்கு ஒட்டுமொத்த தமிழ் சமுதாயமே மாண்புமிகு முதல்வர் கலைஞருக்கு நன்றி தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டுள்ளது.''

வடசென்னை, தமிழ் இளைஞர்மன்றம் முன்பு வலியுறுத்தி எழுதியது. அப்போதைய தலைவர் மறைந்து விட்டார் தற்போது 'முகம்' மாமணி பாராட்டி எழுதுகிறார்.

''தமிழ் அல்லது தாய்மொழி முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை வரும் கல்வி ஆண்டிலிருந்து (2000 - 2001) எல்லாப் பள்ளிகளிலும் கட்டாய மாடமாக்க வேண்டும் என்று நீதியரசர் மோகன் குழு பரிந்துரையை ஏற்றுக் கொண்ட தமிழக அரசையும், தமிழக முதல் அமைச்சர் மாண்புமிகு டாக்டர் கலைஞர் கருணாநிதி அவர்களையும், தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் மாண்புமிகு பேராசிரியர் தமிழ்க்குடிமகன் அவர்களையும் வடசென்னை தமிழ் இளைஞர் கழகம் நன்றியோடு பாராட்டி மகிழ்கிறது'' என்று எழுதுகிறார்.

தமிழ்நாடு வித்யா பாரதி அமைப்பு எழுதுகிறது பாருங்கள் (29.11.99)

''துவக்கப் பள்ளிகளில் (1-5 வகுப்பு வரை) தாய்மொழி மட்டுமே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று அண்மையில் அரசு பிறப்பித்த ஆணையை தமிழ்நாடு, வித்யாபாரதி அமைப்பு மிக்க மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றது. கல்வித் துறையில் அனுபவம் வாய்ந்த பெரியோர்கள் (மகாத்மா காந்தி, தாகூர், அரவிந்தர் போன்றோர்) மற்றும் உள இயல் நிபுணர்கள், குழந்தைகளுக்குத் துவக்க கட்டத்தில் தாய்மொழியில் மட்டுமே

படிப்பிக்க வேண்டும் என்று பல ஆண்டுகளாக வற்புறுத்தி வருகின்றனர். அந்தக் கருத்திற்கு செயல்வடிவம் தருமாறு இந்த ஆணை வெளியிடப்பட்டது மிகவும் பாராட்டத்தக்கதாகும்.

அரசின் நோக்கம் முழுமையாக நிறைவேற வேண்டுமாயின் இந்த ஆணை எத்தகைய பாகுபாடுமின்றி தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பள்ளிகளும் பின்பற்றத்தக்க வகையில் செயல்படுத்தப்பட வேண்டும்''.

பாராட்டுவதோடு, விதிவிலக்கின்றிச் செயற் படுத்தவேண்டும் என்பதையும் இந்த அமைப்பு வற்புறுத்துகிறது.

கரூர் வட்டத்தில் உள்ள புகழூர்த் தமிழ்ச்சங்கத்தின் க.நாச்சிமுத்துவும், க. துரையரசனும் (6.12.99) ஒரு பாராட்டு மடல் விடுத்தனர்.

''தாய்மொழி தமிழே பயிற்றுமொழியாக இருக்க வேண்டும் என ஆணைபிறப்பித்திருக்கும் தமிழக அரசுக்கும் மாண்புமிகு முதல்வருக்கும், மாண்புமிகு தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் அவர்களுக்கும் புகழூர்த் தமிழ்ச் சங்கம் பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

வரும் நூற்றாண்டில் தமிழ்வழிக் கல்வி அதன் இலக்கை எட்டும் என்ற நம்பிக்கை இந்த ஆணையின் மூலம் எல்லாருக்கும் பிறந்துள்ளது. தமிழ் எல்லா நிலையிலும் ஆட்சி மொழி ஆவதற்கான சூழ்நிலை இந்த அரசாணையின் மூலம் கனியத் தொடங்கியுள்ளது. தமிழ் அமைப்புகளின் நீண்ட நாள் கோரிக்கை இந்த ஆணையின் மூலம் நிறைவேறும் என்பதில் ஐயமில்லை.

பெற்றதைக் காப்போம், பெறவேண்டியதற்கு முயல்வோம்''.

உறுதுணையாக இருந்திட ஓடோடி வரும் இதுபோன்ற அமைப்புகளின் ஊக்க உரைகள் தாம் எந்தம் தமிழ்ப்பணிக்கு வாய்த்த விருதுகள் .

தமிழ்நாடு மேல்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர்கள் சங்கத்தில் (13.12.99) நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இது:

''முதல் வகுப்பிலிருந்து 5-ம் வகுப்பு வரை அனைத்து மெட்ரிக்குலேசன் மற்றும் மாநில அரசு பாடமுறை பின்பற்றும் பள்ளிகளில் தாய்மொழி அல்லது தமிழ் மட்டுமே பயிற்று மொழியாக இருக்க வேண்டுமென்று ஆணையிட்டுள்ள தமிழக முதல்வரையும் கல்வி அமைச்சரையும் பாராட்டுவதோடு இதனை செயல்படுத்துவதற்கு இக்கழகம் முழு ஒத்துழைப்பு நல்கும்'' என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணிப் பொதுச்செயலாளர் செ. முத்துசாமியின் அறிக்கை (தினகரன் 14.12.99)

"தமிழ்நாடு அரசு மழலையர் பள்ளி உள்பட உயர்கல்வி வரை தமிழ்மொழியை பயிற்று மொழியாக அறிவித்துள்ளதை தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி வரவேற்கிறது. பாராட்டுகிறது.

தமிழ் மூலம் கற்பிக்க வேண்டுமாறு தமிழ்நாடு அரசு தமிழாய்ந்த தலைவர் முதல்வர் கலைஞர் தலைமையில் தமிழின் நன்மை கருதி வெளியிட்ட இவ்வாணையை செயல்படுத்தி வெற்றி பெற தமிழ்நாடு அரசின் கரத்தை பலப்படுத்த அரசு மற்றும் உள்ளாட்சித்துறையில் பணியாற்றும் ஒவ்வொரு ஆசிரியரும் நாடெங்கும் இயக்கம் நடத்திட தமிழ்நாடு ஆசிரியர் கூட்டணி முன்னின்று போராடும்" என்று கூறியுள்ளார்.

தமிழ் வழிக்கல்விப் பேரவையின் மாநில அமைப்பாளர் பெரி. விசுவநாதன் (6.12.99) தம் பேரவைத் தீர்மானத்தை அனுப்பியுள்ளார்.

"நீதியரசர் மோகன் குழுவின் பரிந்துரைப்படி, "இரண்டாயிரம் ஆண்டுத் தொடக்க முதல்" மழலையர் முதல் ஐந்து வகுப்புவரை", தமிழே அல்லது அவரவர் தாய்மொழியே முதல் மொழியாக அதாவது மொழிப்பாடமாக அமையும் இவ்வகுப்புகளில் அனைத்துப் பள்ளிகளிலும், தமிழே அல்லது தாய்மொழியே பயிற்று மொழியாக இருக்கும். மேலும் பள்ளிகள், கல்லூரிகளில், இன்று இருந்து வரும் முதற்பிரிவுப் பாடமாக "வட்டாரமொழி அல்லது தாய்மொழி என விதி இருப்பதை மாற்றி, இம்முதற்பிரிவு மொழி, "தமிழ் அல்லது தாய்மொழியாக இருக்க வேண்டும்" என தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதன் மூலம் தமிழையே படிக்காமல் ஒருவர் பட்ட வகுப்பு முடியப் படித்து, வெளியேற முடியாது. தமிழை ஒரு பாடமாகப் படித்தே ஆக வேண்டும். என்பதை அரசு கருத்தில் கொண்டு தமிழகத்தில் தமிழ் வழிக்கல்வி வளர்ச்சிக்கு நிலையான வித்திட்டமைக்கு, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர், மற்றும் தமிழ் ஆட்சிமொழி மற்றும் பண்பாட்டுத்துறை மாண்புமிகு அமைச்சர் முனைவர் தமிழ்க்குடிமகனார் அவர்கட்கும், "தமிழ் வழிக் கல்விப் பேரவையின் சார்பில் மிகுந்த நன்றியினையும் பாராட்டினையும் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

5.12.99 அன்று சேலம் தமிழ்ச் சங்கத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இது.

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழை பயிற்று மொழியாக எல்லாப் பள்ளிகளிலும் பயன்படுத்த ஆணை பிறப்பித்த தமிழக முதல்வர்

அவர்கட்கும், இப்பணிக்கு உறுதுணையாக இருந்து செயலாற்றிய கல்வி அமைச்சர், தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் ஆகியோருக்கு சேலம் தமிழ்ச் சங்கம் பாராட்டி தனது நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறது'' இதன் செயலாளர் ச. சுகதேவன் அனுப்பியுள்ளார்.

பா. தமிழ்த் தென்றல் (8.12.99) எனும் 4 ஆம் வகுப்பு மாணவன் மடல் இது.

''ஐயா,

வணக்கம். நான் அரசு பள்ளியில் 4ஆம் வகுப்பு படிக்கிறேன். 5ஆம் வகுப்பு வரை தமிழ் வழிக்கல்விக்கு ஆணை வழங்கப்பட்டது. தமிழக பள்ளிகளில் ஒரே நிலை உள்ளது. உங்கள் ஆணைக்கு மிக்க நன்றி.''

யாரேனும் சொல்லி எழுதினாரா அல்லது அவரது தனி ஆர்வமா என்பது தெரியவில்லை என்றாலும், இந்த நிலையிலும் வாழ்த்துக் குரல் வருவது 'தென்றலாக'த் தீண்டி மகிழ்வளிக்கிறது.

பெரியகுளம் தமிழ் இலக்கிய மன்றச் சார்பில் வெ.ப. சுப்பராமன் மன்றத் தீர்மானங்களைத் தருகிறார் (15.12.99)

''தமிழ் வழிக்கல்வியை நடைமுறைப்படுத்த முயற்சி எடுத்துவரும் தமிழக முதல்வரையும், தமிழக அரசையும் பாராட்டி வரவேற்கிறது.''

கோவை, நுகர்வோர் பொது சேவை மையத்தின் தலைவர் ஆ. சுப்பையா எழுதுகிறார் (15.12.99)

''தமிழக அரசு கல்வித்துறையில் 1 முதல் 5 வகுப்பு வரை தமிழை கட்டாய பயிற்று மொழியாக அறிவித்து இருப்பதற்கு மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறோம். மேலும் இத்திட்டம் கல்வித்துறை வரலாற்றில் ஒரு மைல் கல்லாக அமைத்துள்ளது. எதிர் வரும் இளைய தலைமுறைக்கும் தமிழின் உன்னதத்தை உணர்த்தும் என்பதில் தமிழ் ஆர்வலர்களின் அசைக்க முடியாத நம்பிக்கையாகிவிட்டது.

இத்துடன் இப்பணி முடிந்து விட்டது என்ற எண்ணமின்றி அனைத்தும், அனைத்திலும் தமிழ் என்ற இமயத்தை எட்டும்வரை தமிழ்ப் பணியை இன்றியமையாப் பணியாக தொடர்ந்து செயலாற்ற வேண்டும் என்று விரும்புகிறோம்'' எனத் தன் அமைப்பின் ஆர்வத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

எம்.ஏ.எம். இராமசாமி நற்பணி மன்றத் தலைவர் சுப்ரமணியம் மகிழ்வுடன் எழுதுகிறார். (தினகரன் 17.12.99)

"தமிழகத்தில் உள்ள எல்லா பள்ளிகளிலும் கட்டாயம் தமிழ் மொழி பாடம் இடம் பெறவேண்டும் என்று முதலமைச்சர் கருணாநிதி உத்தரவிட்டு உள்ளார்.

இளம்பிராயம் முதல் பிஞ்சு உள்ளங்களில் ஊட்டப்படும் ஆங்கில மோகத்தால் தமிழ் வளர்ச்சி தடைபட்டு வருகிறது. தமிழ் பயிற்று மொழி திட்டத்தை இந்திய இந்து கோவில் சேவாசங்கம், கோமாதா சமய வழிபாட்டு மன்றம் முத்தமிழ்நகர் பொது நல சங்கங்களின் கூட்டமைப்பு ஆகிய சங்கங்களின் சார்பாக முதலமைச்சர் கருணாநிதிக்கு பாராட்டும் நன்றியும் தெரிவித்துக்கொள்கிறோம்."

இவரது மடல் நான்கு அமைப்புகளின் சார்புக் கருத்தாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

புதுப்பெருங்களத்தூர் தமிழ்மன்றத்தில் நிறைவேற்றப்பட்ட **(18.12.99)** தீர்மானம் இது.

அய்ந்தாம் வகுப்புவரையில் தமிழ் அல்லது தாய்மொழியே பயிற்று மொழியாக இருக்கவேண்டுமென்று அரசாணை வெளியிட்டு ஆணைபிறப்பித்த தமிழக முதல்வர் முனைவர் கலைஞர் அவர்களுக்கு தமிழக அமைச்சரவைக்கும் இம்மன்றம் பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது. தலைவர் இரா. கிருட்டிணன் மகிழ்வுடன் இதனை எழுதியுள்ளார்.

அரசு இசுடான்லி மருத்துவமனையில் அமைந்துள்ள தமிழ் இலக்கிய மன்றத்தின் சார்பில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இது. **(15.12.99)**

"தமிழ்நாட்டு மக்களின் உள்ளம் மகிழத்தக்க வகையில், நாட்டு மக்களின் குழந்தைகள் பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு வரை தமிழைக் கட்டாயப் பாடமாக்கி, அரசு ஆணைப் பிறப்பித்த தமிழவேள் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் அரசினர் இசுடான்லி மருத்துவமனை தமிழ் இலக்கிய மன்றத்தின் சார்பில் நன்றியும் வணக்கமும் தெரிவித்துக் கொள்கின்றோம்"

செங்கம் வட்டம், பரமனந்தலில் இயங்கும் ஆசிரியர்கள் தொகுப்புக் கருத்தாய்வு மையத்தின் சார்பில் அதன் ஒருங்கிணைப்பாளர் மா. முருகேசன் என்பவர் அனுப்பியுள்ள தீர்மானம் இது: **(11.12.99)**

"தமிழ்நாட்டில் உள்ள அரசு மற்றும் தனியார் மெட்ரிகுலேசன், மழலையர் பள்ளிகளில் அவரவர் தாய்மொழியில் அல்லது தமிழிலேயே 1 முதல் 5 வகுப்புகட்கு ஆங்கிலப்பாடம் தவிர்த்த பிற அறிவுப்பாடங்களை பயிற்றுவிக்க

வேண்டும் என தமிழக அரசு ஆணை பிறப்பித்திருப்பது பாராட்டுத்தலுக்கும், போற்றுதலுக்கும் உரியதாகும். அப்பளிகளில் கி.பி. 2000 ஆண்டு முதல் படிப்படியாக அமலுக்கு வந்து மூன்றாண்டுகளில் முழுவதுமாக தமிழ்வழிக்கு மாறிவிட வேண்டும் என கால அவகாசம் கொடுத்து ஆணை பிறப்பித்திருப்பதும் ஒரு சிறந்த நடைமுறையாகும்.

பயிற்று மொழிக்கான மோகன்குழு பரிந்துரையின் அடிப்படையிலும், தமிழக அரசின் பயிற்று மொழிக்கொள்கை ஆணைகள் செல்லும் எனும் நீதிமன்றங்களின் ஒப்புதல் தீர்ப்பும் தமிழக அரசின் பயிற்று மொழிக்கொள்கைக்கு உரம் சேர்ப்பதாய் அமைந்துள்ளது. கடந்த 08.12.99 ல் தனியார் மெட்ரிகுலேசன் பள்ளிகள் ஆங்கிலமே பயிற்று மொழியாக எல்லாநிலைகளிலும் தமிழ்நாட்டில் நீடிக்கவேண்டும் என முறையற்ற போராட்டம் மேற்கொண்டதையும் நாம் அறிவோம். ஆங்கில வழி பயிற்றுவித்தலே பிள்ளைகளின் எதிர்காலத்தை ஒளிரச் செய்யும் எனும் ஒரு பொய்யான மாயையை பெற்றோர்களிடத்தில் ஏற்படுத்தி பணம் தின்னும் பேய்களாக தனியார் மெட்ரிகுலேசன் பள்ளிகள் மாறி வருவதை தடுக்கமுயலும் செயலாக அரசின் பயிற்று மொழிக்கொள்கை ஆணை அமைந்துள்ளது பாராட்டுக்குரியதாகும். இனி வரும் காலங்களில் அரசு மற்றும் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகளின் நிலையை உயரச் செய்யும் ஆணையை நல்லதொரு ஆணையாக இம்மையம் கருதுகிறது. "பிஞ்சு நெஞ்சில் நஞ்சை சேர்க்காதீர்", "எங்கும் தமிழ் எதிலும் தமிழ்" எனும் தமிழக அரசின் கொள்கையை அமல்படுத்தும் செயலாக, வெகுமக்களுக்கு நன்மைபயக்கும் திட்டமாக பயிற்று மொழிக் கொள்கை ஆணை பிறப்பித்த தமிழக அரசுக்கும், தமிழ்நாட்டு முதலமைச்சர், கல்வி அமைச்சர், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத்துறை அமைச்சர் ஆகியோர்க்கு பரமனந்தல் தொகுப்பு கருத்தாய்வு மைய ஆசிரியர்கள் நெஞ்சார்ந்த நன்றியை கனிவோடு தெரிவித்துக் கொள்கிறோம்."

தமிழகத்தின் தொடக்கக் கல்வியில் உள்ள நிலைகளைப் பிட்டு வைத்து விளக்கிக் காட்டி, எங்கள் முயற்சிக்கான ஊக்கத்தையும் பாராட்டையும் தந்துள்ளார்.

மதுரையில் உள்ள அனைத்துத் தமிழ் இலக்கியக் கூட்டமைப்பு 11.12.99 இல் 'மெட்ரிகுலேசன் பள்ளிகளைக் கண்டித்துக் கூட்டு முழக்கம் செய்தது; விளக்கக் கூட்டத்தையும் நடத்தியது. இதில், 13 தமிழ் அமைப்புகள் கலந்து கொண்டன. இரா. சொக்கலிங்கம், மார்சல் முருகன், நவமணியன் போன்றோர் முக்கிய பங்கு வகித்தனர்.

''1 முதல் 5 வரை தமிழ் வழிக்கல்வியை நடைமுறைப்படுத்த வேண்மென்ற தமிழக அரசின் ஆணையை ஏற்க மறுத்து, தடைவாங்க முயற்சிக்கும் மெட்ரிக் பள்ளிகளின் போக்கு, ஏழுகோடி தமிழர்களை சீண்டிப்பார்ப்பதாக உள்ளது. இது, தமிழர்களையும், தமிழ் மொழியையும், அவமானப்படுத்துவதாக இருக்கிறது'' என்று கூறி இந்த அமைப்புகள் பொங்கி எழுந்தன.

''தமிழ் வழிச் சிந்தனை, படிப்பு, கற்பனை, முன்னேற்றம் அத்தனையும் தடை செய்யத் துடிக்கும் மெட்ரிக் முட்டாள்தனத்தை''க் கண்டித்து முழங்கினர்.

ஒட்டு மொத்த நிகழ்ச்சிகளையும் தொகுத்து எனக்கு விடுத்த சொக்கலிங்கம் இப்படிக் கூறுகிறார்.

''முத்தமிழறிஞர் மற்றும் தாங்கள் காட்டும் ஆர்வம் மற்றவர்கள் காட்டவில்லை என்பது வருத்தமாக உள்ளது. ஆனால் மக்கள் பெரும் அளவில் ஆதரவு தருகிறார்கள். நாங்கள் இது தொடர்பாக விழிப்புணர்வு கூட்டம் தொடர்ந்து நடத்தி வருகிறோம்''. என்று ஆர்வத்துடன் எழுதியுள்ளார்.

தமிழகத் தமிழாசிரியர் கழகத்தின் பேரணிகள் பற்றியும் பிற குறிப்புகள் குறித்தும் ஏற்கெனவே சொல்லியுள்ளேன். அவர்கள் விடுத்த அறிக்கை மிகவும் ஆணித்தரமானது (முரசொலி 30.11.99)

''தமிழ்நாட்டில் மழலைப் பள்ளி மெட்ரிக்குலேசன் பள்ளி, அரசு நிதி உதவி பெறும் பள்ளிகள், அரசுப் பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்புவரை தமிழ்மொழி அல்லது தாய்மொழி மட்டுமே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று அரசு வெளியிட்டுள்ள எண்.324 நாள் 19.11.99 ஆணையை தமிழகத் தமிழாசிரியர் கழகம் பாராட்டி வரவேற்கிறது.

ஆண்டு பல கடந்து தாய்மொழி கற்று அதன்பிறகு அயல் மொழி கற்பது என்ற இந்த நல்ல சிந்தனையை கிள்ளி எறிய சில அமைப்புகள் முரணாகின்றன. கல்வி, விலை போட்டு வாங்கவா முடியும் என்று பாவேந்தர் தொடுத்த வினாவை பொய்யாக்கி, கட்டிடங்களைக் காட்டி, பேருந்துகளைக் காட்டி, சீருடைகளைக் காட்டி காலணியையும், கழுத்துச் சுருக்கத்தையும் காட்டி நல்ல விலைக்கு கல்வி வாணிகம் நடைபெறுகிறது. இவ்வாணிகத்தில் ஆங்கிலம் வளர்க்கப்பட்டு, தமிழ் மறைக்கப்பட்டும் மறக்கப்பட்டும் வரும் சூழ்நிலையை தோற்றுவித்தும் வருகின்றன ஆங்கில வழிப்பள்ளிகள்.

குழந்தைகள் தாய்ப்பால் உண்டு, பசும்பால் உண்டு உணவு உண்ணும் நிலைக்கு படிப்படியாக வளர வேண்டியது. இயற்கையான வளர்ச்சியைப் போல

தாய்மொழியை பிழையின்றி பேசவும், எழுதவும் கற்று அதன்வழி தன் சிந்தனையை வளர்த்தபின் பிற மொழிகளைக் கற்க வேண்டும் என்பது கல்வியாளர்கள் கருத்தாகும்.

தமிழ் உணர்வாளர்கள் பிற மொழிக்கு எதிரானவர்கள் அல்ல. ஆனால் தமிழ் மண்ணில் அம்மண்ணுக்குரிய மொழியைப் புறக்கணிப்பது என்பது ஏற்றுக்கொள்ள முடியாது'' என்று விளக்கமாகவே இந்த அறிக்கையைத் தந்துள்ளார்கள்.

த.மு.எ.ச. சார்பில் 'தமிழ்வழிக் கல்வி சிறப்புமாநாடு' சென்னையில் நடைபெற்றது (தீக்கதிர் 24.1.2000) பல தமிழறிஞர்கள், ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். ஒரு பேரணியும் நடைபெற்றது. மாநிலம் முழுவதிலும் இருந்து வந்திருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர். அங்கு நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இது:

''மெட்ரிகுலேசன் பள்ளிகள் உள்ளிட்ட அனைத்துப் பள்ளிகளிலும் முதல் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரைத் தமிழ் அல்லது தாய்மொழியே பயிற்று மொழியாக இருக்க வேண்டும் என்று அண்மையில் தமிழக அரசு பிறப்பித்துள்ள ஆணையை இந்த மாநாடு மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்கிறது. தாய்மொழி வழிக்கல்வியே கற்பதற்கு எளிதானது இயல்பானது என்பது அனைத்துக் கல்வியாளர்களும் எடுத்துக்காட்டுகிற கருத்தாகும். தமிழின் வளர்ச்சியும் உழைப்பாளித் தமிழரின் வளர்ச்சியும் விழுதும், மரமுமாய் ஒன்றையொன்று சார்ந்து நிற்பவையாகும். அத்தோடு, மாணவர்கள் தங்களின் பண்பாட்டு வேர்களை இழக்காதிருக்கவும் இது தேவையாகும். இத்தகைய காரணங்களால் இந்த அரசாணையை மாநாடு உள்ளப் பூரிப்போடு வரவேற்கிறது.

இந்தியாவின் சிறப்புச் சூழலில் ஆங்கிலத்தின் அவசியம் உணரப்பட்டுள்ளது. இந்த அரசாணையில் ஆங்கிலம் புறக்கணிக்கப் படுவதாகக் கூறப்படுவதில் உண்மை இல்லை என்பதை மாநாடு சுட்டிக்காட்டுகிறது. அரசு மற்றும் அரசுசார் பள்ளிகளில் ஏற்கெனவே ஆங்கிலம் ஒரு பாடமாக மூன்றாம் வகுப்பிலிருந்துகற்றுத்தரப்படுகிறது. மெட்ரிகுலேசன் பள்ளிகளிலும் ஆரம்பக்கல்வியிலேயே ஒரு பாடமாகச் சொல்லித் தரப்படவிருக்கிறது. எனவே, மாணவர்களின் ஆங்கில அறிவு பாதிக்கப்படப் போவதில்லை. மாறாக தமிழர் வீட்டுப்பிள்ளைகள் அனைவரும் ஆரம்பக்கல்வி வரையிலாகிலும் தமிழில் படிக்கிற சமத்துவம் உருவாக்கப்படுகிறது.

தமிழகத்தில் வாழும் தமிழரல்லாதவர்களின் நலனையும் அரசாணை கணக்கில் கொண்டிருப்பதை மாநாடு எடுத்துக்காட்டுகிறது. தமிழ் மட்டுமே

பயிற்று மொழியாக இருக்கவேண்டும் என்று அது திட்டம்செய்யாமல் ''தமிழ் அல்லது தாய்மொழி'' என்று குறிப்பிட்டிருப்பது இந்த நோக்கோடுதான். எனவே, மொழிவழிச் சிறுபான்மையோர் ஐயப்படுவதற்கு ஏதுமில்லை.

இத்தகையதொரு அரசாணையை முழுமனதோடு வரவேற்பதோடு இதை எதிர்த்து மெட்ரிகுலேசன் பள்ளிகளது நிர்வாகத்தினர் தொடுத்துள்ள வழக்கில் அரசுக்கு ஆதரவாக தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் போன்ற அமைப்புகள் தங்களையும் ஒருதரப்பாகச் சேர்த்துக்கொள்ளும் படி மனு கொடுத்திருப்பதற்காக அவற்றை இந்த மாநாடு பாராட்டுகிறது.

அதே நேரத்தில் அரசாணைக்கு வந்திருக்கிற ஆபத்தை இலேசாக எடுத்துக் கொள்ளக்கூடாது என்றும் தமிழக அரசை மாநாடு எச்சரிக்கிறது. மெட்ரிகுலேசன் பள்ளிகள் பலவும் ''சிபிஎஸ்இ'' எனும் மத்திய அரசுக் கல்வி அமைப்பின் கீழ் போக முயற்சிப்பதாகத் தெரிகிறது. அப்படி அந்தப் பள்ளிகள் சென்றுவிட்டால் அவற்றை இந்த அரசாணையில் கட்டுப்படுத்த முடியாது போய்விடும். இதை எப்படி எதிர்கொள்வது என்பது குறித்து மாநில அரசு திட்டமிடவேண்டும் என்று மாநாடு கேட்டுக்கொள்கிறது.

தமிழ்வழிக் கல்விக்குப் பெற்றோர்களின் ஆதரவைத் திரட்டுவதே அனைத்து வகை எதிர்ப்புகளையும் எதிர்கொள்வதற்கான தக்க கேடயமாகத் திகழும் என்று மாநாடு எடுத்துக்காட்டுகிறது. இதற்கேற்ற சூழலை உருவாக்க வேண்டிய பொறுப்பு தமிழக அரசுக்கு உள்ளது.

பொறியியல் படிப்பு போன்ற உயர்கல்வியிலும் தமிழ்வழிக்கல்வியைக் கொண்டுவர மாநில அரசு தக்க நடவடிக்கைகளை உடன் எடுக்க வேண்டும் அங்கு தற்போதுள்ள ஆங்கில வழிக்கல்வியோடு தமிழ்வழிக் கல்வியையும் கொண்டு வந்தால் இரண்டில் ஒன்றைத் தேர்வு செய்யும் வசதி மாணவர்களுக்குக் கிட்டும். இதற்கான மத்திய அரசின் ஒப்புதலைப் பெற அனைத்து முயற்சிகளையும் தமிழக அரசு மேற்கொள்ள வேண்டும் என்று மாநாடு வலியுறுத்துகிறது. அவ்வாறே, மாநில அரசுப்பணிகளில் தமிழ்வழி படித்தோருக்கு முன்னுரிமை கொடுப்பது குறித்தும் தீவிரமாகப் பரிசீலிக்க வேண்டும்.

தமிழ்வழிக்கல்விப் பிரச்சனையை ஓர் அரசாணையோடு முடிந்து போகிறதாகக் கருதாமல், அதை நடைமுறைப்படுத்தும் அரசியல் உறுதியைக் காட்டவேண்டும் என்றும், அதற்கேற்ற அடுத்த கட்ட நடவடிக்கைகளில் உடன் இறங்கவேண்டும் என்றும் தமிழக அரசை இந்த மாநாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.''

அரசு பிறப்பித்த அரசாணையைக் கவனமாக ஆராய்ந்து அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்து, எதிரிகளுக்கு விளக்கம் சொல்லி நமது ஆணையில் உள்ள அறிவுப்பூர்வமான ஏற்பாட்டுக்குப் பாராட்டுத் தெரிவித்து, அதே நேரத்தில் 'கவனமாக இருங்கள்' என்று அரசுக்கு எச்சரிக்கையும் விட்டு இந்தத் தீர்மானம் அமைகின்றது. இந்த அளவுக்கு விளக்கமான, விரிவான தீர்மானத்தை த.மு.எ.ச. மட்டுமே போட்டுள்ளது என்பதனைப் பாராட்டியே தீரவேண்டும்.

இந்த நேரத்தில் 7.8.2000 அன்று 'தமிழ்நாடு அரசு அலுவலர் கூட்டமைப்பு' சார்பில் தலைவர் கலியபெருமாள், பொதுச்செயலாளர் வீ. தமிழன்பன் ஆகியோர் எங்கள் அனைவருக்கும் ஓர் அறிக்கை அனுப்பினர். மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு அனுமதி கொடுப்பதில் எவ்வளவு முறைகேடு நடந்துள்ளது என்பதையும், தக்க நடவடிக்கை எடுக்குமாறும் தகுந்த ஆதாரத்துடன் எடுத்துக்காட்டியிருந்தார்கள்.

நான் ஏற்கெனவே கூறியிருந்ததை இவர்களது கூற்று உறுதி செய்கிறது. கல்வி அமைச்சர் பேராசிரியர் காலத்தில்தான் அதிகமான மெட்ரிகுலேசன் பள்ளிகட்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதை இப்போது உறுதி செய்து கொள்ளலாம். அவர்கள் கொடுத்த பட்டியல் இது:

இந்த முறைகேட்டின் நாயகர்களான பி.டி.குமாரும், நெல்லைமணியும் கான்ஸிலை என்னும் வாங்கிக் கொண்டு, சட்டப்புறம்பாக அங்கீகாரம் கொடுத்ததாக சொல்லப்படும் பள்ளிகளின் லிஸ்டை கம்யூனிஸ்டுகள் நம்மிடம் சுறினர் இதோ-

1. விஜயகா மெட்ரிக் ஸ்கூல்	சிதம்பரம்
2. கலைமகள் மெட்ரிக் ஸ்கூல்	சங்கராபுரம்
3. பாரதி மெட்ரிக் ஸ்கூல்	சங்கராபுரம்
4. செயிண்ட் ஜோசப் மெட்ரிக் ஸ்கூல்	சங்கராபுரம்
5. கிரேஸ் மெட்ரிக் ஸ்கூல்	மதுரை
6. எஸ்.பி.கே.தியாகராஜ் மெட்ரிக் ஸ்கூல்	அருப்புக்கோட்டை
7. ஆட்லஸ் மெட்ரிக் ஸ்கூல்	மாடந்தட்டுவிளை
8. மாஸ்லல் மெட்ரிக் ஸ்கூல்	திருநகர், மதுரை
9. ஜோசப்மேமோரியல் மெட்ரிக்ஸ்கூல்	மயிலாடுதுறை
10. பனோஸ் மெட்ரிக் ஸ்கூல்	பசுமலை, மதுரை,
11. அமிர்தவது மெட்ரிக் ஸ்கூல்	கள்ளல், சிவகங்கை.
12. அன்னை கஸ்தூரியாய் காந்தி மெட்ரிக்ஸ்கூல்	லக்குமனாக்காடு
13. யுனைட்டெட் மெட்ரிக் ஸ்கூல்	கோபுடாச்சேரி
14. மிஸ்டஸ்மரகதவல்லி ஜெயலெஷ்மி நாடார் மெட்ரிக் ஸ்கூல்	மீனாக்ஷிபுரம், ராமநாதபுரம்
15. நியூ பாரதி மெட்ரிக் ஸ்கூல்	திருவாரூர்
16. எஸ்.எம்.எஸ். மெட்ரிக் ஸ்கூல்	புதுக்கோட்டை
17. ஜூவலர் மெட்ரிக் ஸ்கூல் கடலூர்.	சேடப்பாளையம்,
18. வி.ஓ.சி. மெட்ரிக் ஸ்கூல்	[illegible]
19. செயிண்ட் பிரான்சிஸ் அரசி மெட்ரிக் ஸ்கூல்	தே.கோபாலபுரம்
20. வெங்கடேஸ்வரா ஹும்மார், விந்யா பாரதி	[illegible]
21. ஜெய்ஹிந்த் மெட்ரிக் ஸ்கூல்	[illegible]
22. விஜய் மெட்ரிக் ஸ்கூல்	[illegible]
23. அன்னை மெட்ரிக் ஸ்கூல்	[illegible]
24. ஹோலி மதர் மெட்ரிக் ஸ்கூல்	[illegible]
25. சாரதா மெட்ரிக் ஸ்கூல்	[illegible]
26. நிஷா மெட்ரிக் ஸ்கூல்	[illegible]
27. பாலாஜி மெட்ரிக் ஸ்கூல்	[illegible]
28. ஆயிட்ரோஸ் மெட்ரிக் ஸ்கூல்	[illegible]
29. ஆல்பா மெட்ரிக் ஸ்கூல்	[illegible]
30. செயிண்ட் மைக்கேல்ஸ் மெட்ரிக்ஸ்கூல்	[illegible]
31. மங்கையர்க்கரசி மெட்ரிக் ஸ்கூல்	[illegible]
32. நேரு மெட்ரிக் ஸ்கூல்	[illegible]
33. ஜூவலர் மெட்ரிக் ஸ்கூல்	[illegible]

2003இல் நான் இந்த நூலை எழுதிக் கொண்டிருக்கும் வேளையில் சை.வே. சிட்டிபாபு குழு ஆய்வு செய்து 1000க்கும் மேற்பட்ட மெட்ரிகுலேசன் பள்ளிகள் அரசின் இசைவு பெறாமலேயே நடத்தப்படுகின்றன என்று கண்டறிந்தது.

இந்தப் பள்ளிகள் அனைத்தும் மறைமுகமாகத் தி.மு.க. கல்வி அமைச்சரின் ஆசியோடு அரங்க. தெய்வமணி - பி.டி. குமார் கூட்டணியால் தொடங்கப்பட்டவை என்பதை இப்போதாவது தமிழ் மக்கள் உணர்வார்கள் என்று நம்புகிறேன்.

எனவே தமிழ் நாடு அரசு அலுவலர் கூட்டமைப்பு அறிக்கையை அப்படியே தருகிறேன்.

‘‘வரும் 26.02.2000 அன்று, அரசின் தமிழ் வழி மொழிக் கொள்கைக்கு எதிராக கண்டன ஆர்ப்பாட்டமும், பேரணியும் நடத்தப் போவதாக தமிழ்நாடு மெட்ரிகுலேசன் பள்ளிகளின் சங்கம் அறிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் இருந்து கொண்டு, அரசின் தமிழ்வழி மொழிக் கொள்கைக்கு எதிராகச் செயல்படும், அச்சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு. பி.டி. குமார் அவர்களும், திருச்சி திரு. வெங்கடாசலபதி அவர்களும், மற்றும் சென்னை வண்ணாரப்பேட்டை சௌந்தரபாண்டியன் ஸ்டோர் நிர்வாகத்தினரும், எந்த பின்னணியில் இப்படியெல்லாம் செயல்படுகிறார்கள் என்பதை அரசு ஆராய்ந்து, உரிய நடவடிக்கை எடுக்குமாறு பணிவுன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

திரு பி.டி. குமார் என்பவர், பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. அரங்க தெய்வமணி அவர்களுக்கு பிரதான ஏஜெண்டாகச் செயல்பட்டு வருகிறார். அதனால், அரசு விதித்துள்ள நிபந்தனைகளை மீறி பல மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மாத இதழ் ஒன்றில் வெளியிடப்பட்டுள்ள செய்தியின் சுருக்கத்தை இத்துடன் இணைத்து அனுப்பிவைக்கிறோம்.

மேற்கண்ட பிரச்சனையில், அரசு உரிய இரகசிய விசாரணை நடத்தினால், பள்ளிக்கல்வி இயக்குநர் திரு. அரங்க.தெய்வமணி அவர்களும் மற்றும், திரு. பி.டி. குமார் அவர்களும் சேர்ந்து செய்துள்ள பல்வேறு முறைகேடுகளும், ஊழல்களும் வெளிச்சத்திற்கு வரும்.

திரு. பி.டி. குமார் என்பவர் செய்த பல்வேறு தவறுகளினால், அவர் ஆளும் கட்சியான மாவட்ட தி.மு.க. இலக்கிய அணிப்பொறுப்பிலிருந்து அண்மையில் நீக்கப் பட்டுள்ளார்.

அரசின் கொள்கைகளுக்கு எதிராக, தமிழ்பயிற்று மொழிக்காக பாடப்புத்தகத்தையே அச்சிட்டு வெளியிடக்கூடாது என்றும், அரசின் தமிழ்வழி மொழிக் கல்வி குறித்த அரசு ஆணையை எதிர்த்தும், நீதிமன்றம் சென்றிருப்பதுடன், வரும், 26.2.2000 அன்று கண்டன ஆர்பாட்டமும், பேரணியும் நடத்தப்போவதாகவும் அறிவித்துள்ளார். அப்படிப்பட்ட திரு. பி.டி. குமார் என்பவருடன் பள்ளிக்கல்வி இயக்குநர் திரு. அரங்க. தெய்வமணி அவர்கள் சேர்ந்துகொண்டு மேற்கண்ட முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளார்.

இப்படிப்பட்ட பள்ளிக்கல்வி இயக்குநர் திரு. அரங்க. தெய்வமணி அவர்கள், அரசுக்கு தன்னை வேண்டியவர் போன்று காட்டிக் கொண்டு, அரசுக்கு ஆதரவான தமிழ்நாடு அரசு அலுவலர் கூட்டமைப்பு மற்றும் தமிழ்நாடு கல்வித் துறை அலுவலகப் பணியாளர் சங்க நிர்வாகிகள் 5 பேரை சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்ட ஒரே காரணத்திற்காகத் தற்காலிகப் பணிநீக்கம் செய்துள்ளார். நியாயம் கேட்ட ஒரே காரணத்திற்காக சங்க மாநிலத் தலைவர் திரு. க. கலியபெருமாள் மீது பல்வேறு கடுமையான பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார். இப்படி இரட்டை வேடம் போட்டு வரும் பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்கள் மீதும், திரு.பி.டி. குமார் அவர்கள் மீதும், அரசு உரிய இரகசிய விசாரணை நடத்தி, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.''

கல்வி வணிகர்கள் அவர்கள் தொழிலில் கிடைக்கும் வருமானத்தைப் பார்க்கிறார்கள். ஆனால் இனமானப் பேராசிரியர், மொழி பேணும் மூத்தவர், கல்வி அமைச்சர் க. அன்பழகன் ஏன் இவற்றின் மீது துடித்தெழுந்து நடவடிக்கை எடுக்கவில்லை? மறைமுகமாக அவர் தந்த ஊக்கம் தானே நம் எதிரிகளைப் பலப்படுத்தி- அவர்களது பணபலத்தைப் பெருக்கிக் கொள்ள உதவியாக இருந்தது. இதை யார் மறுக்க முடியும்? என் முதல் கட்டுரையிலேயே என்ன வேகம் இந்தவேகம்? என்பதனைச் சுட்டிக் காட்டியுள்ளேன்.

ஒரு பக்கம் இவர்களை வளர்த்துவிட்டு, மறுபுறம் 'தமிழ் வழிக்கல்வி' பற்றிப் பேசுவதும், பெரிதும் பாடுபடுவதுபோல் காட்டிக் கொள்வதும் எத்தகைய போலித்தனம்? தமிழர்களே! இப்படி ஓர் நிலை தமிழாய்ந்த தமிழ்ப் பேராசிரியராலே நேரும்போது தமிழுக்கோ, தமிழினத்துக்கோ விடிவு ஏது?

தமிழக ஆசிரியர் கூட்டணி 'தாய்மொழி வழிக் கல்வி'க்கு ஆதரவு தெரிவித்து 22.11.2000 அன்று மாவட்டங்கள் தோறும் பேரணி நடத்தியது.

தமிழக மாணவர் முன்னணி 25.1.2000அன்று சென்னையில் 'ஆங்கில ஆதிக்க ஒழிப்பு - தமிழ் உரிமைக் காப்பு மாநாடு' நடத்தியது. பழ

நெடுமாறன், நா. அருணாசலம், இரா. இளவரசு, பா. கல்யாணி, கு.அரசேந்திரன், தணிகைச் செல்வன், எஸ்.வி. இராசதுரை போன்ற பலரும் கலந்து கொண்டனர்.

மாநாடு குறித்து அவர்கள் விடுத்த அறிக்கை இது.

''தமிழ்மொழியைப் பாதுகாக்க 1938 தொடங்கி மொழிப்போர் நடந்து வருகிறது. 1965ஆம் ஆண்டு நடந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க மொழிப்போர் தமிழக மாணவர்களால் நடத்தப்பட்டது. இந்தியப் படையைச் சந்தித்து மாணவர்களும் தமிழ் உணர்வாளர்களும் தியாகம் புரிந்தனர். தீக்குளித்தோர் பலர்.

இருந்தும், இந்தி ஆதிக்கத்தை எதிர்த்த அப்போராட்டங்கள் ஓரளவு இந்தி ஆக்கிரமிப்பை மட்டுப்படுத்தியிருந்தாலும் ஆங்கில ஆதிக்கத்தைக் கண்டு கொள்ளவில்லை.

இந்தி ஆதிக்கத்தை எதிர்த்திடக் கிடைத்த கருவி ஆங்கிலம்தான் என்ற அரசியல் தலைவர்களின் தவறான புரிதல் காரணமாக ஆங்கிலம் தமிழை அழித்துவருகிறது.

தமிழ்நாட்டில் தமிழ் மொழியைப் படிக்காமலே பள்ளியிலிருந்து பலகலைக்கழகம் வரை கல்வி கற்கலாம். ஆனால் ஆங்கிலம் கட்டாயம்! தாய்மொழிக் கல்விதான் சுயசிந்தனையை வளர்க்கும், வளர்ச்சியடைந்த ஜப்பான், பிரான்ஸ், ஜெர்மனி, ரஷ்யா போன்ற நாடுகளிலும் அந்த அளவுக்கு வளர்ச்சியடையாத சீனா, வியட்நாம், கொரியா மற்றும் ஆப்பிரிக்காவிலுள்ள பல்வேறு நாடுகளிலும் அந்தந்த நாட்டு தாய்மொழியே கல்வி மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் இருக்கிறது.

ஆங்கில வழியில் படித்தால் உள்நாட்டிலும் வெளி நாடுகளிலும் உடனே வேலை கிடைத்துவிடும் என்பது உண்மையல்ல. ஆங்கில வழியில் படித்தவர்கள் இந்தியா முழுவதும் கோடிக்கணக்கில் வேலையில்லாமல் இருக்கின்றனர். வேலை வாய்ப்பு என்பது ஒரு நாட்டின் சமூக அமைப்பையும் அரசாங்கத்தின் பொறுப்புணர்ச்சியையும் சார்ந்திருக்கிறதே தவிர மொழியைச் சார்ந்ததல்ல.

தமிழ்ஆட்சி மொழிச்சட்டம் 1956-ல் நிறைவேற்றப்பட்டாலும் தலைமைச் செயலகத்திலிருந்து சரக ஆய்வாளர் அலுவலகம் வரை ஆங்கிலமே இன்றும் கோலோச்சுகிறது.

மாவட்ட அமர்வு நீதிமன்றம் வரை தமிழில் வழக்காடலாம். தீர்ப்பெழுதலாம் என்றிருந்தும் அங்கு ஆங்கிலமே ஆதிக்கம் செலுத்துகிறது. அந்நீதிமன்றங்களில் தமிழில் வழக்காடும் இனம் வழக்குரைஞர்களைக் கேவலமாகப் பார்க்கும் இழிநிலை தொடர்கிறது.

ஆங்கில ஆதிக்கம் தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட மாணவர்களைத்தான் பெரிதும் பாதிக்கிறது. அதேபோல், பெண்களும் ஆங்கில ஆதிக்கத்தால் அந்நியப்பட்டு நிற்கிறார்கள்.

மழலையர் கல்வி தொடங்கி பல்கலை வரை தமிழே கட்டாய மொழிப்பாடமாகவும் பயிற்று மொழியாகவும் மாற்றப்படவேண்டும்.

ஆட்சி, நீதி, கல்வி ஆகியவற்றில் தமிழர்களுக்குரிய மொழிக் கொள்கை குறித்து விவாதித்து முடிவுகள் எடுக்கவும் முடிவுகளை செயலாக்கிட செய்ய வேண்டியவை பற்றி தீர்மானிக்கவும் இம்மாநாடு நடைபெறுகிறது'' என்று மாணவர் சமுதாயத்தின் எழுச்சிக் குரல் கேட்கிறது.

இதன் தலைவர் அருணாசலம் தலைமை தாங்கினார். முக்கிய தீர்மானம் இது. (கதிரவன் 27.1.2000)

விதிமுறைகள் மீறும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் மீது நடவடிக்கை, நீதிமன்றங்களில் தமிழில் மட்டுமே வழக்காட சட்டம் இயற்றுவது, தமிழ் பண்பாட்டுத் துறைக்கு உரிய அதிகாரம் வழங்குவது ஆகியவற்றை தமிழக அரசு உடனடியாக மேற்கொள்ளவேண்டும்.'' பொதுச்செயலாளர் ம. செந்தமிழன் போன்றோர் சிறப்பாக ஏற்பாடு செய்த மாநாடு இது.

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி இன்னும் வேகமாக இறங்கியது. அவர்கள் ஓர் அவசர சுற்றறிக்கை விட்டார்கள்.

அதில் உள்ள கருத்துகள் மிகவும் கவனத்துக்குரியவை. ஓரளவு அவற்றைச் சுருக்கித் தந்துள்ளேன்.

''ஆங்கிலப்பள்ளிகள் நடத்தி அதன் மூலம் கொள்ளை வசூல் செய்து சுகபோக வாழ்க்கை நடத்தி வரும் நர்சரிப் பள்ளி மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளி நிர்வாகங்கள் ஒன்று கூடி தமிழக அரசு அறிவித்துள்ள ஒன்று முதல் ஐந்து வகுப்பு பயிற்றுமொழி தமிழ் அல்லது தாய்மொழி வழிக்கல்வி என்பதை முறியடிக்க, பல்வேறு எதிர்ப்புகளை செய்து வருகின்றன. அதில் முதல் கட்டமாக ஒரு நாள் பள்ளிகளை மூடி வேலைநிறுத்தம் செய்துள்ளனர். வழக்கு தொடர்ந்துள்ளனர். நர்சரி மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகள் மற்றும் பெற்றோர்களிடம் அரசு

அறிவிப்புக்கு எதிராக கையொப்பம் பெற்று வருகின்றனர். இன்னும் பல எதிர்போராட்டங்களை வகுத்துள்ளனர்.

ஒன்று முதல் ஐந்து வகுப்புகளில் பயிற்றுமொழி தமிழ் அல்லது தாய் மொழி என்கிற திட்டம் நாம் பணியாற்றுகின்ற அங்கீகரிக்கப்பட்ட தமிழ் வழிப்பள்ளிகளுக்கும் தொடக்கக் கல்விக்கும் மிக சாதகமானது என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். இத் திட்டத்தை எதிர்க்கும் சக்திகளின் நடவடிக்கைகளை முறியடிப்பது நம்முன் உள்ள முதன்மையான, பிரதானமான கடமையாக உள்ளது. அதை இயக்கம் உணர்ந்து கீழ்க்கண்ட உடனடி நடவடிக்கைத் திட்டங்களை 22.12.99 அன்று சென்னையில் நடைபெற்ற மாவட்டச் செயலாளர்களின் கூட்டத்தில் முடிவெடுத்துள்ளது.

மாவட்டக்கிளைகள் அந்தந்த மாவட்ட எல்லையுறு வட்டார நகரக்கிளைகளின் தலைவர் / செயலாளர் / பொருளாளர் பெருமக்களின் கூட்டத்தை 31.12.99க்குள் கூட்டி அதில் அரசு அறிவித்துள்ள நமக்கும் சாதகமான ஒன்று முதல் ஐந்து வகுப்புகளில் தமிழ் அல்லது தாய்மொழி பயிற்றுமொழி என்ற திட்டத்தை ஆதரிக்க வேண்டிய கட்டாயத்தை, அவசியத்தை, எடுத்து விளக்கி இது குறித்து நர்சரி மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் நிர்வாகங்கள் நடத்தவுள்ள எதிர்ப்புப் போராட்டங்களைப் பற்றி பேசி இயக்கம் இதில் எப்படிப்பட்ட செயல்பாடுகளை, நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் என்பதற்கான கருத்துக்களையும் தொகுத்து மாநில அமைப்பிற்கு 8.1.2000க்குள் தர வேண்டும்.

மாநில அமைப்பின் செயற்குழுவை 8.1.2000ல் சென்னையில் கூட்டி தமிழக அரசு அறிவித்துள்ள ஒன்று முதல் ஐந்து வகுப்பிற்கு பயிற்று மொழி தமிழ் அல்லது தாய்மொழிக்கல்வி என்பதை எல்லாநிலைகளிலும் பரிசீலனை செய்து உரிய முடிவுகளை எடுத்து இப்புதிய பயிற்றுமொழி பற்றிய கொள்கையை தமிழக அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த உதவுகின்ற வகையில் முடிவெடுத்து அறிவிப்பது.

இதற்கிடையில் உடனடி நடவடிக்கையாக கீழ்க்கண்ட நடவடிக்கைகளை வட்டார / நகரக்கிளைகள் முனைப்புடன செயல்படுத்தி முழுமையாக நிறைவுபடுத்த முடிவெடுக்கப்பட்டுள்ளது.

முதல் நடவடிக்கை

மாநில அமைப்பு தயாரித்து தந்துள்ள விண்ணப்பங்களில் பொதுமக்கள் மற்றும் நம்மிடம் படிக்கும் குழந்தைகளின் பெற்றோர்களின் கையொப்பங்கள் பள்ளி வாரியாக, ஊர்வாரியாக 1.1.2000 முதல் 7.1.2000 வரை

பெற்று கையெழுத்து இயக்கம் நடத்துவது. அந்த விண்ணப்பங்களைத் தொகுத்து மாவட்டக் கிளைகள் 8.1.2000ல் நடைபெறும் மாநிலச் செயற்குழுவில் ஒப்படைப்பது.

இரண்டாவது நடவடிக்கை

நம்மிடம் படிக்கும் அனைத்துக் குழந்தைகளிடமும் ஒரு அஞ்சல் அட்டையில் தனித்தனியாக ''நான் தமிழ் மொழியில்தான் படிக்க விரும்புகிறேன்'' என்று குழந்தைகளை எழுத வைத்து கையொப்பம் பெயர், வகுப்பு பள்ளி இவைகளை எழுதி அஞ்சல் அட்டைகளை பள்ளிவாரியாக 3.1.2000 முதல் 7.1.2000 வரை சேகரித்து வட்டார / நகரக் கிளைகள் மொத்தமாகத் தொகுத்து பள்ளி வாரியாக எத்தனை அஞ்சல் அட்டைகள் என்பதற்கான அறிக்கையையும் மாவட்ட மாநில அமைப்புகளுக்கு தர வேண்டும். இந்த அஞ்சல் அட்டைகள் மாண்புமிகு, தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழக அரசு தலைமைச் செயலகம் சென்னை - 600 009 என்ற முகவரி எழுதி அந்தந்த அஞ்சலக வழிகளில் 5.1.2000, 6.1.2000 ஆகிய தேதிகளில் தவறாமல் அனுப்ப வேண்டும். அஞ்சல் அட்டை தயார் செய்ய மாதிரி இணைக்கப்பட்டுள்ளது.

மூன்றாவது நடிவடிக்கை

ஆசிரியர்கள் பொதுமக்களிடமும், பெற்றோர்களிடமும் தமிழக அரசு அண்மையில், அறிவித்துள்ள ஒன்று முதல் ஐந்து வகுப்பு பயிற்று மொழி தமிழ் அல்லது தாய்மொழி என்பதின் நன்மைகளையும், பலன்களையும் எதிர்காலத்தில் ஏற்படப்போகும் சாதகங்களையும் எடுத்து விளக்கி இப்புதிய திட்ட நடைமுறைப்படுத்தப்பட பொதுமக்கள் மற்றும் பெற்றோர்களின் ஆதரவை எந்தெந்த வழிகளில் திரட்ட முடியுமோ அந்தந்த வழிகளில் திரட்டுவது உதாரணமாக நோட்டீஸ் வெளியிடுவது விளம்பரம் செய்வது, சுவர் விளம்பரம் செய்து சினிமாக் கொட்டைகளில் சிலைடு போடுவது போன்றவைகளை மேற்கொள்ளலாம்.

குறிப்பு : - ஆங்கிலேயன் இந்த நாட்டை ஆண்டகாலத்தில் தங்களது ஆட்சிப் பணிக்கு உதவியாக ஊழியர்களையும், பணியாளர்களையும், அலுவலர்களையும் தயாரிப்பதற்காகக் கொண்டு வரப்பட்ட மெக்காலே கல்வித் திட்டத்தில் கூட ஆங்கிலம் கற்பித்தல் ஆறாம் வகுப்பிற்கு மேல் என்று இருந்தது. ஒன்று முதல் ஐந்து வகுப்புகள் முழுக்க முழுக்க அவரவர்களின் தாய்மொழிகளில் கற்பிக்கும் ஏற்பாடுகள் இருந்தன. ஆங்கிலம் பயிற்று மொழியாக கல்லூரி மட்டத்தில் உள்ள வகுப்புகளில் மட்டுமே நடைமுறையில்

இருந்தது. ஆனால் தற்போது எல்.கே.ஜி., யு.கே.ஜி. மற்றும் ஒன்றாம் வகுப்பு முதல் பயிற்று மொழி ஆங்கிலம் என்று இருக்கிறது. இது தமிழகத்தின் மொழிக் கொள்கைக்கும் தமிழகக் குழந்தைகளின் நலனுக்கும் தமிழ்மொழிக்கும் எதிரானது. ஒரு குழந்தை சிந்திப்பது பேசுவது எழுதுவது படிப்பது போன்றவை அதன்தாய் மொழிவழியில் இருப்பதுதான் இயற்கையானது, நன்மையானது. வேற்று மொழி வழிக் கல்வி குழந்தைகளின் அறிவை மட்டுப்படுத்துவது சிந்தனைக்கு முட்டுக்கட்டையானது. ஆற்றல்களையும் அறிவையும் மட்டந்தட்டுவதாகும்.

தமிழ் நாட்டில் ஆங்கில ஆட்சிக் காலத்தில் ஆங்கிலோ இந்தியப் பள்ளிகள் என்ற ஒரு சில பள்ளிகள் மட்டுமே ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்டு நடத்தப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பள்ளிகளாகும். ஆங்கில ஆட்சி அகன்று ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு தமிழகத்தில் ஆங்கிலத்தைப் பயிற்று மொழியாகக் கொண்ட மெட்ரிகுலேஷன் பள்ளிகள், நர்சரிப் பள்ளிகள் ஆயிரக் கணக்கில் அங்கீகாரம் பெற்று தெருக்கள் தோறும் ஊர்கள் தோறும் முளைத்துள்ளன. இதில் அட்மிஷன் பெறுவதற்கு ஐயாயிரம், பத்தாயிரம் படிப்புக்கட்டணமாக நூற்றுக்கணக்காக ரூபாய்கள் இது மட்டுமின்றி பல்வேறு கட்டணங்கள் என்று சொல்லி பெற்றோர்களிடம் உள்ள ஆங்கில மோகத்தை சாதகப்படுத்திக் கொண்டு மெட்ரிகுலேஷன் மற்றும் நர்சரிப்பள்ளி நிர்வாகங்கள் பகற்கொள்ளை நடத்துகின்றன. இதன் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட தமிழ் வழிப்பள்ளிகளில் படிக்கவேண்டிய குழந்தைகள் தவறாக மெட்ரிகுலேஷன் மற்றும் நர்சரிப்பள்ளிகளில் சேர்ந்ததின் மூலம் நாம் பணியாற்றுகின்ற அங்கீகரிக்கப்பட்ட தமிழ் வழிப்பள்ளிகளில் படிக்கவேண்டிய குழந்தைகள் தவறாக மாணவர் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்து ஆசிரியர் பணியிடங்களைக் குறைக்கின்ற நிலைகளை ஏற்படுத்தி, ஆசிரியர்கள் பணிவாய்ப்பு, பெறுவதை தடுக்கிறது. இது தொடக்ககப்பள்ளி ஆசிரியர் சமுதாயத்திற்கு இன்று ஏற்பட்டுள்ள ஒரு சவாலகும். இதை கணக்கில் கொண்டு தொடக்கல்வியைக் காக்கவும், தமிழ் வழி அங்கீகரிக்கப்பட்ட தொடக்கப்பள்ளிகளில் மாணவர் எண்ணிக்கை பாதிக்கப்படாமல் இருக்கவும், ஆசிரியர் பணி இடங்கள் குறைக்கப்படாமல் இருக்கவும், ஓய்வுபெற்ற ஆசிரியர் பணியிடங்களில் புதிய ஆசிரியர்கள் நியமிக்கப்படவும், புதிய ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படவும், இயக்கம் எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டியுள்ளது. மேலே கண்ட செயல்பாடுகள் இதன் வழிப்பட்டது என்பதை இயக்கப்பொறுப்பாளர்கள் இயக்க உறுப்பினர்கள் ஆசிரியர்கள் புரிந்துகொள்ளவேண்டும் என மாநில அமைப்பு விழைகிறது.''

முதல்வர்க்கு ஆதரவு தெரிவிக்கும் விண்ணப்பமும் இணைக்கப்பெற்றுள்ளது. அதனையும் காணலாம்.

பெறுவோர்:

மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்
தமிழ் நாடு அரசு, சென்னை - 600 009

மாண்புறு அய்யா,

வணக்கம். வரலாற்றுச் சிறப்புமிக்கதும், இலக்கிய இலக்கண வளம் மிகுந்ததும், தொன்மையானதுமான தாய்த் தமிழ்மொழி உலக மொழிகளில் உயர்ந்த சிறப்பைப் பெற்றது. அண்மைக் காலங்களில் தாய்த் தமிழ் நாட்டில் தாய்த்தமிழைப் புறக்கணித்து, அரசால் ஏற்பு செய்யப்பட்ட மழலையர் மற்றும் மெட்ரிகுலேஷன் பள்ளிகளில் அன்னிய ஆதிக்கம் பெற்று அனைத்துப் பாடங்களுக்கும் பயிற்று மொழியாக இருந்து வருகிறது. இது தமிழகத்திற்கும், தமிழக மக்களுக்கும் தமிழ் நாட்டின் எதிர்கால மக்களான இன்றைய குழந்தைகளின் கல்வி மற்றும் அறிவு நலன்களுக்கும் வளர்ச்சிக்கும் எதிரானது, பாதகமானது.

தங்கள் சீரிய தலைமையில் உள்ள தமிழக அரசு இதை அறிந்து ஆய்ந்து உயர்மட்டக் குழு ஒன்றை ஏற்படுத்தி அதன் பரிந்துரை வழிகளில் இன்று அரசாணை நிலை எண்.324 பள்ளிக் கல்வி (சி2) துறை நாள் 10.11.99 வெளியிட்டு, அதில் 1 முதல் 5 வகுப்புகளுக்கு பயிற்றுமொழி தமிழ் அல்லது தாய்மொழி என்ற கொள்கையை நடைமுறைப்படுத்த ஆணையிட்டுள்ளதை, நாங்கள் உளமார மகிழ்ச்சியுடன் வரவேற்கிறோம், பாராட்டுகிறோம். தங்களுக்கும் தமிழக அரசிற்கும் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்குகிறோம்.

தமிழக அரசின் இந்த நல்ல கொள்கை முடிவு அறிவிப்பை, கல்வியின் பேரால் பணம் பறிக்கும் கொள்ளையர்களான மெட்ரிகுலேஷன் மற்றும் மழலையர் பள்ளிகளின் நிர்வாகங்கள் எதிர்ப்பது போன்ற நிலை எடுத்து போலியான ஒரு எதிர்ப்பு சக்தி உருவாகியுள்ளதாக பூதாகாரமான செய்தி வெளியிட்டு செயல்பட்டு வருவதை நாங்கள் கண்டிக்கிறோம். அதை எதிர்க்கிறோம். அதை முறியடிக்கவும் தவற மாட்டோம்.

தமிழகத்தின் பொதுமக்கள், பெற்றோர்கள், ஆசிரியர்களாகிய நாங்கள் தமிழக அரசு அறிவித்துள்ள 1 முதல் 5 வகுப்புகளுக்கான பயிற்றுமொழிக் கொள்கையை முழுமையாக ஆதரிக்கிறோம்.''

பெரிய அளவில் இவர்களது முயற்சி அமைந்துள்ளது என்பதனை நாம் மனத்திற் கொள்ளவேண்டும். ஆனால் கல்வி அமைச்சரோ, பள்ளிக் கல்விச் செயலர் எம்.ஏ. கௌரி சங்கரோ, இவற்றை மனத்திற் கொண்டிருப்பார்களா? இது ஒரு கேள்விக்குறி.

7.1.2000 அன்று பரமத்தி வேலூரில் 9 தமிழ் அமைப்புகளின் சார்பில் தமிழக அரசின் தமிழ் வழிக்கல்வி ஆணையை வரவேற்று விளக்கும் தமிழ்ப் பேரணி நடைபெற்றது. மா. சின்னு, ச.கி. இராமராசன் ஆகியோர் தலைமையேற்று நடத்தினர்.

24.2.2000 அன்று காங்கயம் தமிழ்ச் சங்கச் சார்பில் ''ஆங்கில வழிக்கல்வி எதிர்ப்பு, தமிழ்வழிக் கல்வி அரசாணை ஆதரவுப் பேரணி' பெரிய அளவில் நடத்தப் பெற்றது. தலைவர் மரு.மு. தணிகாசலம், செயலாளர் சிவ. தனபால் ஆகியோர் ஏற்பாட்டில் நகரைச் சேர்ந்த அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலந்துகொண்ட பேரணி இது. 11க்கு மேற்பட்ட, சுற்று வட்டாரம் சார்ந்த பிற தமிழ் அமைப்புகளும் இதில் பங்கு பெற்றன.

ஒரு தொகுதியில் இந்த அளவுக்கு ஆர்வம் காட்டப்படுமானால் தமிழ்நாட்டில் எந்த அளவுக்குத் தமிழ் எழுச்சி ஏற்பட்டுள்ளது என்பதைக் கணக்கிடமுடியும்.

25.2.2000 அன்று சென்னையில் தமிழ்ச் சான்றோர் பேரவைச் சார்பில் பேரணி நடைபெற்றது.

அவர்களது அறிக்கை தரும் செய்தி:

''வரும் 25 மற்றும் 26-ம் தேதிகளில் சென்னையில் மெட்ரிகுலேசன் பள்ளி நிர்வாகிகள் தமிழ் வழிக்கல்விக்கும், அரசு ஆணைக்கும் எதிரான ஊர்வலம் நடத்தவும், அதில் தங்கள் பள்ளிகளில் பயிலும் மாணவர்களையும், அவர்களது பெற்றோர்களையும், ஆசிரியர்களையும் கட்டாயப்படுத்தி அழைத்து வரவும் திட்டமிட்டுள்ளனர்.

தமிழகத்தின் தமிழ் தெருவில் தமிழுக்கு எதிராக நடைபெறவிருக்கும் ஊர்வலத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், தமிழகமெங்கும் உள்ள தமிழின அமைப்புகள் ஒருங்கிணைந்து, அதே நாட்களில் தமிழ் வழிக் கல்விக்கு ஆதரவு ஊர்வலம் நடத்துவது என்று தீர்மானிக்கப்படுகிறது.''

இந்த கால கட்டத்தில் மதுரை, தமிழ் காப்புக் கழகம் ஓர் அறிக்கை வெளியிட்டது: ' எச்சரிக்கிறோம் எதிரிகளை' என்கிறது அது:

''வரும் கல்வி ஆண்டிலிருந்து தமிழகத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் 1 முதல் 5-ஆம் வகுப்பு வரையில் தமிழே பாடமொழியாக பயிற்றுவிக்கப்பட வேண்டுமென்றும் 5-ஆம் வகுப்பிற்கு மேல் ஆங்கிலத்தைத் துணைப் பாடமொழியாக பயிற்றுவிக்கலாம்'' என தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

1956-ல் தமிழ் ஆட்சி மொழியாக அறிவிக்கப்பட்டாலும், நடைமுறையில் என்னவோ ஆங்கிலத்தின் தாக்கமே அதிகரித்திருந்தது. 'இந்தி படித்தால்தான் வேலை' என்ற நிலை தமிழகத்தின் எதிர்ப்பால் ஓரளவு ஒய்ந்த நிலையில், ஆங்கிலம் படித்தால்தான் அரசுப்பணியில் சேரலாம், என்ற தாக்கம் தமிழகத்தில் தலை தூக்கியதன் விளைவாக, ஆங்கிலத்தையே பயிற்று மொழியாகக் கொண்ட, நர்சரிப் பள்ளிகளும் மெட்ரிகுலேசன் பள்ளிகளும் கடந்த பத்தாண்டு காலத்தில் தமிழகமெங்கும் பட்டி தொட்டிகளில் கூட பரவ ஆரம்பித்துவிட்டது. இதன்விளைவு அம்மாவை 'மம்மி' என்றும் அப்பாவை 'டாடி' என்றும் 'அழகு தமிழில்' நம் குழந்தைகள் கூப்பிட ஆரம்பித்தது மட்டுமின்றி, தமிழ்ப் பண்பாட்டுக்கே ஊறுவிளைவிக்கின்ற பண்பாட்டுப் புரட்சியும் அதனூடாக இழைந்தோடுவதைக் கண்ட தமிழ்ச் சான்றோர்கள் எடுத்த செயல்பாட்டின் விளைவுதான், தமிழக அரசு அறிவித்த மேற்கூறிய அறிவிப்பாகும்.

அரசின் இந்த அறிவிப்பை எதிர்த்து, ஆங்கிலவழிக் கல்வி நிறுவனங்கள், நீதிமன்றங்களை நாடியுள்ளதுடன், மற்றொரு முயற்சியையும் மேற்கொண்டிருப்ப தாகவும், தமிழக அரசு அதைத்தடுத்து நிறுத்த தக்க நடவடிக்கையை முன்னெச்சரிக்கையாக மேற்கொள்ள வேண்டுமென 23.1.2000 ஞாயிறன்று தமிழக முற்போக்கு எழுத்தாளர் சங்கம் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

த.மு.எ.ச.வின் தீர்மானம் என்ன?

''தமிழ்வழிக் கல்வி அரசாணைக்கு வந்துள்ள ஆபத்தை அரசு லேசாகக் கருதக்கூடாது. மெட்ரிகுலேசன் பள்ளிகள் பலவும், சி.பி.எஸ்.இ. என்னும் மத்திய அரசின் கல்வி அமைப்பின்கீழ் செல்ல முயற்சிப்பதாகத் தெரிகிறது. அப்படிச் சென்று விட்டால், அப்பள்ளிகளை இந்த அரசு ஆணை கட்டுப்படுத்தாது. இதை எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து மாநில அரசு திட்டமிட வேண்டும்'' என்று

இடதுசாரி பொதுவுடைமை (சி.பி.எம்.) ஆதரவாக இயங்கி வந்த தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கம் கடந்த பல ஆண்டுகளாகவே தமிழ்

வளர்ச்சியில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு செயலாற்றி வருகிறது. அதன் அடிப்படையில்தான் சென்னையில் கூட்டிய தமிழ்வழிக் கல்வி மாநாட்டில் இந்தத் தீர்மானத்தை நிறைவேற்றி முன்னெச்சரிக்கை செய்வது பாராட்டத்தக்கதாகும்.

நவோதயா பள்ளிகளை தடுத்து நிறுத்திய தமிழக அரசு, இதில் எச்சரிக்கையாக, தக்க நடவடிக்கை எடுக்கும் என்று நம்பலாம்.

தீர்ப்புகளும், செயல்பாடுகளும் எப்படியிருப்பினும் ஆங்கில வழிக் கல்வி நிறுவனங்கள் செயல்படுவது தமிழகத்தில்தான்.

''செந்தமிழ்க்கே தீமை வந்தபின்னும் - இந்தத்
தேகம் இருந்தொரு லாபமுண்டோ?''

என்ற புரட்சிக் கவிஞரின் கவிதைக்கேற்ப, தாய்மொழி காக்கத் தங்களின் தேக்குமரத் தேகத்தை தீக்கிரையாக்கிக் கொண்ட பரம்பரை அழிந்துவிடவில்லை.

ஒரு மாற்றம்.

செந்தமிழைக் காக்க தீக்குளிக்க மாட்டோம்! மாறாக எச்சரிக்கிறோம் எதிரிகளை.''

21.1.2000 அன்று தூத்துக்குடி மாவட்டத் தமிழ் அமைப்புகள் அனைத்தும் இணைந்து கண்டனப் பொதுக்கூட்டம் நடத்தின. பழ. நெடுமாறன், பேரா. செகதீசன் போன்றோர் கலந்து கொண்ட இக் கூட்டத்தை கு.ம. சுப்பிரமணியம், மோ. அன்பழகன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர். அந்த நேரத்தில் அவர்கள் விடுத்த அறிக்கை இது:

''இந்திய அரசியலமைப்புச் சட்டம் 14 வயது வரை அனைவருக்கும் கட்டாய - இலவசக் கல்வியைத் தாய்மொழி வழியில் அளிக்க வேண்டும் என்று கூறுகிறது. மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்ப மத்திய மாநில அரசுகள் பள்ளிகளைத் தொடங்கி மாணவர்களுக்குக் கல்வி தரும் கடமையைப் புறக்கணித்துவிட்டு அதைத் தனியாரிடம் தாரை வார்த்துவிட்டன.

தனியார் பள்ளி நடத்துபவர்கள் 'அலாவுதீனின் அற்புத விளக்கு' என்னும் ஆங்கிலக் கல்வியைக் கையிலெடுத்துக் கொண்டு 'மெட்ரிகுலேசன் பள்ளிகளைத் திறந்திடு சிசே' என்று நர்சரி முதல் மெட்ரிகுலேசன் பள்ளிகள் வரை தொடங்கிப் பகற்கொள்ளை அடிக்கிறார்கள்.

அரசின் கையாலாகாத்தனம் கல்வியைக் காசு கொடுத்துப் படிக்கும் அவல நிலைக்குத் தமிழக மக்களைத் தள்ளிவிட்டது. புற்றீசல் போல்

தெருவெங்கும் ஆங்கில வழிப் பள்ளிகள் முளைத்துவிட்டன. அரசு தமிழ்நாட்டில் 2020 மெட்ரிகுலேசன் பள்ளிகள் இருப்பதாகக் கூறுகிறது. தூத்துக்குடி மாவட்டத்திலேயே 2000 ஆங்கில வழிப்பள்ளிகள் உள்ளன. தமிழகமெங்கும் 50000 பள்ளிகளுக்கு மேல் உள்ளன. அரசின் இசைவு பெறாமலேயே இந்தப் பள்ளிகள் நடக்கின்றன என்பதுதான் வேதனையான உண்மை.

'தமிழ்நாட்டின் தமிழ்த்தெருவில் தமிழ்தானில்லை' என்ற அவலநிலை உருவாகிவிட்டது. தமிழ் அமைப்புகளின் கடுமையான எதிர்ப்புக்குப் பிறகு தமிழக அரசு நீதிபதி மோகன் தலைமையில் தமிழ்வழிக் கல்வி பற்றி ஆராயக் குழு ஒன்றை அமைத்தது. அந்தக் குழு அளித்த பரிந்துரை அடிப்படையில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை தாய்மொழி / தமிழ் வழியில் தொடக்கக் கல்வியை எல்லாக் கல்வி நிறுவனங்களும் வரும் கல்வி ஆண்டில் தொடங்கி மூன்று ஆண்டுகளுக்குள் கற்பிக்க வேண்டும் என்று தமிழக அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

நர்சரி முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை ஆங்கில வழியில் பாடம் நடத்தும் மெட்ரிகுலேசன் என்னும் பதின்நிலைப்பள்ளிகள் அரசின் ஆணையை எதிர்த்து 8.12.99 அன்று தமிழகம் முழுவதும் பள்ளிக்கூடங்களை மூடி ஒருநாள் முழு அடைப்பு செய்ததுடன் உயர்நீதிமன்றத்தில் வழக்கும் பதிந்துள்ளன.

மெட்ரிகுலேசன் பள்ளிகளின் இந்த அடாவடிச் செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம். தமிழ் நாட்டில் தமிழ்வழியில் பாடம் நடத்தமாட்டோம் என்று சொல்லும் துணிச்சலை இந்த மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்குத் தந்தது யார்? இந்தப் பள்ளிகள் நமக்குத் தேவையா?

தமிழ்நாட்டில் பள்ளிக்கூடம் முதல் பல்கலைக்கழகம் வரை தமிழ்வழியில்தான் பாடம் நடத்த வேண்டும். தமிழ் வழி என்னும் தாய்மொழிவழிக் கல்விதான் தமிழ் மக்களின் உயர்வுக்குப் பயன்படும்.

ஆங்கிலத்தின் வழியே கொள்ளையடிக்கும் பெரும்பணக்காரர் களுக்கும் பன்னாட்டு முதலைகளுக்கும் கூலிகளை உருவாக்கித் தரவே இங்குள்ள ஆங்கிலவழிப் பள்ளிகள் செயல்படுகின்றன. பணம் கட்டிப் படிக்கமுடியாத ஏழை எளிய மக்கள் கல்வி கற்கும் வாய்ப்பை இழந்து விடுகிறார்கள். இது அரசியலமைப்புச் சட்டத்துக்கு முரணானது.

- அரசு தாய்மொழி வழியில் கல்வி கற்கும் உரிமையை அடிப்படை உரிமையாக்க வேண்டும்

- தொடக்கக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வளர அனைத்துக் கல்வியையும் தமிழில் தரவேண்டும்.
- தமிழ் வழியில் படித்தவர்களுக்கு மட்டுமே தமிழ்நாட்டில் வேலை தர வேண்டும்.
- தமிழ்நாட்டில் அரசு நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் நடுவணரசு நிறுவனங்களும் தமிழில் செயல்பட வேண்டும்.
- ஆங்கில வழியில் படித்தவர்களை அயல்மாநிலங்களுக்கோ அயல்நாடுகளுக்கோ அனுப்பிவிடலாம். அதற்காகப் படிப்பதாகத்தானே அவர்கள் கூறுகிறார்கள்.
- மெட்ரிகுலேசன் பள்ளிகள் சங்கம் பதிந்துள்ள வழக்கைத் திரும்பப் பெறவேண்டும். அவ்வாறு திரும்பப் பெறாவிட்டால் அப்பள்ளிகளுக்கு அரசளித்த ஏற்பளிப்பை நீக்க வேண்டும். அரசுப் பள்ளிகளின் பாடத்திட்டத்திலேயே தனியார் பள்ளிகளும் செயல்படவேண்டும்.''

இதற்கிடையில் இன்றைய முதல்வர், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் ஓர் அறிக்கை விடுத்துள்ளார்.

அதனையொட்டிய வேறு சில செய்திகள் வேறு இடத்தில் இடம் பெற்றுள்ளன.

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் சங்கம் சார்பில் செந்தில் நாதனும், கதிரேசனும் கூட்டாக ஓர் அறிக்கை வெளியிட்டனர்.

''மெட்ரிகுலேசன் பள்ளிகள் உள்பட அனைத்துப் பள்ளிகளிலும் 1 முதல் 5-வது வகுப்பு வரை தமிழ்வழிக் கல்வியைத் தமிழக அரசு கட்டாயமாக்கியுள்ளது. இதை ஜெயலலிதா எதிர்த்திருப்பது நியாயம் அற்றது.

இதன் காரணமாக, மெட்ரிகுலேசன் பள்ளிகள் சி.பி.எஸ்.ஈ. எனப்படும் மத்திய அரசின் கல்வித் திட்ட முறைக்குள் போகமுயற்சிக்கும் என்பது உண்மைதான். ஆனால் அதைத் தடுக்கும் முயற்சிகளை எடுக்கச் சொல்லி தமிழக அரசை வற்புறுத்துவதற்குப் பதிலாக, தமிழ்வழிக் கல்வியையே எதிர்ப்பது சரியானது அல்ல.

பூட்டினாலும் உடைக்கப்பார்ப்பார்கள் என்றால், கூடுதல் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்கவேண்டுமே தவிர, வீட்டைத் திறந்து போடச் சொல்லக்

கூடாது. துர்பாக்கியவசமாக, ஜெயலலிதாவின் அறிக்கை அப்படித்தான் உள்ளது.

இந்தித் திணிப்பைக் காரணம் காட்டியே இவ்வளவு காலமாகத் தமிழ் புறக்கணிக்கப்பட்டு, அதனிடத்தில் ஆங்கிலத்தின் ஆதிக்கம் நிலை நிறுத்தப்பட்டது. இதே வாதத்தை இப்போதும் ஜெயலலிதா கூறியுள்ளது தமிழுக்கு எவ்விதத்திலும் நன்மை பயக்காது.

தமிழ் உள்ளிட்ட அனைத்து தேசிய மொழிகளையும் மத்தியில் ஆட்சிமொழியாக்க வேண்டும் என்ற கோரிக்கை நியாயமானதே.

ஆங்கிலத்தை ஒரு மொழியாகக் கற்பிப்பதை அரசு ஆணை தடுக்கவில்லை. பிஞ்சு வயதிலேயே அன்னிய மொழியில் பாடங்களைக் கற்கிற தேவையற்ற சுமையைத் தான் இறக்கி வைக்கிறது.

ரஷ்யா, சீனா, ஜப்பான், பிரான்ஸ் போன்ற நாடுகளில் எல்லாம் அந்தந்த நாட்டுத் தாய்மொழியில் தான் பாடங்கள் கற்பிக்கப்படுவதாக அறிகிறோம். இவற்றின் முன்னேற்றத்துக்கு இதுவும் ஒரு காரணம் என்பதும் கல்வியாளர்கள் ஏற்றுக் கொண்டுள்ள உண்மை.

தமிழுக்கு கிடைத்துள்ள நன்மையைத் தக்க வைத்துக் கொண்டு, பொறியியல் படிப்பு போன்ற உயர் கல்வியிலும் தமிழ் வழியைக் கொண்டுவர மத்திய மாநில அரசுகளை வற்புறுத்த வேண்டும் என ஜெயலலிதாவைக் கேட்டுக் கொள்கிறோம் என்று அவர்கள் கூறியுள்ளனர்.''

'நாம் மிகவும் கட்டாயப்படுத்தினால் மெட்ரிகுலேசன் பள்ளிகள் CBSC பள்ளிகளாக மாறிவிடும்' என்று புரட்சித் தலைவி விடுத்த செய்திக்கு ஏற்கெனவே விடை சொல்லியிருந்தாலும் மீண்டும் அதனை நினைவூட்ட விரும்புகிறேன்.

மாநில அரசின் ஒப்புதல் பெறாமல் எந்த ஒரு மெட்ரிகுலேசன் பள்ளியும் சி.பி.எஸ்.இ. (CBSE) பள்ளிகளாக மாற முடியாது என்பதுதான் அது.

தற்போது புரட்சித்தலைவியே ஆட்சியில் இருப்பதால் நல்லதொரு முடிவை எடுப்பார் என்றே நம்புகிறோம். வாய்ப்புள்ளபோது அவரிடத்தில் விரிவாகப் பேசிடவும் விரும்புகின்றோம்.

புதுக்கோட்டையில் 26.2.2000 அன்று தமிழ் காப்போர் கூட்டமைப்பின் சார்பில் தமிழ் வழிக்கல்வி எழுச்சிக் கூட்டம் நடைபெற்றது. தமிழண்ணல், விருத்தாசலம், பாவாணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ஈரோட்டில் அமைந்துள்ள 'தமிழ் வழிக்கல்வி ஆதரவுக் கூட்டமைப்பின் சார்பில் 24.2.2000 அன்று 'தமிழ் நாட்டில் உள்ள ஆங்கில வழிப் பள்ளிகளின் அன்னியமொழி மோகத்தை வன்மையாகக் கண்டித்தும்; தமிழக அரசின் 2000-ஆம் ஆண்டுமுதல் தமிழகத்திலுள்ள அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் தமிழே பயிற்றுமொழி என்ற அரசாணையை நிறைவேற்றக் கோரியும்' ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. கு.பெ. முருகையன், க. முருகேசன் போன்றோர் முன்னின்று நடத்தினர். அவர்களது தீர்மானம்:

''தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கல்வி நிறுவனங்களிலும் 2000-ம் ஆண்டு முதல் ஐந்தாம் வகுப்பு வரை தமிழே பயிற்றுமொழி என்ற அரசின் உத்தரவை நிறைவேற்றாத ஆங்கிலப் பள்ளிகளின் அங்கீகாரத்தை உடனே ரத்து செய்ய வேண்டும்.

தாய்த் தமிழ் பள்ளிகளுக்கு - சுய நிதியில் நடைபெறும் தமிழ் வழிப் பள்ளிகளுக்கும் தமிழக அரசு ஏற்பு வழங்குவதுடன் நிதி உதவியும் அரசு உடனே வழங்கிடல் வேண்டும்.''

இதில் அனைத்து அரசியல் கட்சியினரும் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

அவர்கள் விடுத்த அறிக்கையும் வலுவானதுதான்.

''மகாத்மா காந்தியடிகள் தாய்மொழி வழியாகவே கல்வி கற்க வேண்டும் என்பதை வாழ்நாள் முழுவதும் வலியுறுத்தி வந்தார். நான் இந்த நாட்டின் சர்வாதிகாரியாக இருந்தால், அனைவரும் தாய்மொழியிலேயே கற்க வேண்டும் என ஆணை பிறப்பிப்பேன். ஆங்கில வழிப் பள்ளிகளை உடனடியாக மூடி விடுவேன் என அவர் பிரகடனப்படத்தினார்.

நம் நாட்டு அறிஞர்கள் அனைவரும் தாய்மொழி வழியிலேயே கல்வி பயின்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. வ.உ.சி., திரு.வி.க., மூதறிஞர் இராஜாஜி, பேரறிஞர் அண்ணா, அறிவியல் அறிஞர் அப்துல்கலாம், அரசியல் வித்தகர், சி. சுப்ரமணியம், கல்வியாளர் வா.செ. குழந்தைசாமி போன்ற பலரும் தமிழ் வழியில் பயின்றவர்களே.

ஒரு நாட்டின் பண்பாடு, நாகரிகம், மேன்மை, நாட்டுப் பற்று ஆகிய மேம்பட்ட பண்புகள் தாய்மொழிக் கல்வியாலேயே உருவாக்கப்படுகிறது.

ஆங்கில வழிக் கல்வி எவ்வாறு தீமையானது?

நம் நாட்டை அடிமைப்படுத்த மெக்காலே வகுத்த வஞ்சகத்திட்டமே ஆங்கில வழிக் கல்வியாகும். ''நிறத்தால் இந்தியர்களாகவும், இரத்தத்தால் ஆங்கிலேயர்களாகவும் விளங்கக்கூடிய அடிமைகளை ஆங்கிலக் கல்வி உருவாக்கும்'' என மெக்காலே குறிப்பிட்டான்.

ஆங்கில வழியில் பயில்வதால் அறிவு வளரும். அயல்நாடுகளில் வேலை கிடைக்கும் என்பது திட்டமிட்ட பொய்ப் பிரச்சாரமாகும். ஏனெனில் வேலையில்லாத் திண்டாட்டம் என்பது உலகளாவிய சிக்கலாகும். எனவே, ஆங்கிலம் கற்பதால் மட்டுமே வேலை கிடைத்து விடாது. ஆங்கில வழியில் படித்தவர்களில் பலர் வேலையில்லாமல் இருப்பது நடைமுறை உண்மையாகும்.

ஆங்கில வழிக் கல்வி நிறுவனங்கள், மக்களின் ஆங்கில மோகத்தைப் பயன்படுத்திக் கொண்டு கல்வியை எளிதில் பெரும் இலாபம் சம்பாதிக்கும் ஒரு வணிக வழி முறையாகக் கையாண்டு மக்களின் பணத்தை கொள்ளையடித்து வருகின்றன.

ஆங்கில வழியில் தரமான கல்வி கிடைக்கும் என்பதும் ஏமாற்றுவாதமாகும். மகாகவி பாரதி, ஆங்கிலக் கல்வியை ''மண்படு கல்வி'' எனவும் ''பேடிக் கல்வி'' எனவும் கடுமையாகச் சாடியுள்ளார்.

''முன்னர்நாடு திகழ்ந்த பெருமையும்
மூண்டிருக்கும் இந்நாளின் இகழ்ச்சியும்
பின்னர் நாடுறும் பெற்றியும் தேர்கிலார்
பேடிக் கல்வி பயின்றுழல் பித்தர்கள்
என்ன கூறி மற்று எங்ஙன் உணர்த்துவேன்
இங்கு இவர்க்கு எனது உள்ளம் எரிவதே''

என்பது ஆங்கிலக் கல்வி குறித்து மகாகவி பாரதியின் அக்கினிவரிகள்.

ஆங்கில வழிக் கல்வியானது நாட்டுப்பற்று அற்ற, மொழிப்பற்று அற்ற சமூக நலனில் அக்கறையற்ற, பெரியோர்களிடம் பணிவற்ற தன்மைகளை உருவாக்குகிறது. மேலும் சமூகத்தோடு இசைந்து வாழாமல் ஒரு மேட்டிமைப் பண்பை ஆங்கில வழிக் கல்வி மாணவர்களிடம் வளர்க்கிறது.

உலகில் எந்தவொரு நாட்டிலும் தாய்மொழியைப் புறக்கணித்து, அயல் மொழியில் கல்வி கற்கும் அவல நிலை இல்லை. ஜப்பான், ஜெர்மனி, இரஷ்யா, சீனா, பிரான்சு ஆகிய முன்னேறிய நடுகள் அனைத்திலும் தாய்மொழிக் கல்வியே நடைமுறையில் உள்ளது.

தம் மொழியை இழந்த நாடுகள் அடிமைப்பட்டன என்பது உலக வரலாறு, ஸ்காட்லாந்தில் கெய்லிக் மொழி இங்கிலாந்தில் வேல்சு மொழி இப்படித்தான் அழிந்தன.

தாய்மொழியைப் போற்றும் நாடுகள் உலகில் உயர்ந்து விளங்குகின்றன. அதற்கு எடுத்துக்காட்டு - இசுரேல், ஜப்பான் மற்றும் சீனம். தமிழ்வழிக் கல்வி ஆதரவாளர்கள் ஆங்கில மொழிக்குப் பகைவர்களா?

தமிழ் வழிக் கல்வி ஆதரவாளர்கள், ஆங்கில மொழிக்கு மட்டுமல்ல எந்த மொழிக்கும் பகைவர்கள் அல்லர். ஆங்கிலத்தை ஒரு மொழிப் பாடமாகக் கற்றுத்தருவதை யாரும் எதிர்க்கவில்லை. ஆங்கிலத்தை இன்னும் சிறப்பாகக் கற்றுத்தர வேண்டும் என்றே நாங்கள் வலியுறுத்துகிறோம். ஆங்கிலத்தின் வழியாக கணிதம், அறிவியல், சமூக அறிவியல் போன்ற அனைத்துப் பாடங்களையும் கற்.றுத் தரக்கூடாது என்பதே எங்கள் கோரிக்கையாகும். ஆங்கிலத்தைக் கற்பதும், ஆங்கிலம் வழியாகக் கற்பதும் வேறு வேறு. பெற்றோர்கள் இதில் தெளிவு பெறவேண்டும்'' என்கிறது அந்த அறிக்கை.

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்றச் சார்பில் நாமக்கல்லில் தமிழ்வழிக் கல்வி பாதுகாப்புப் பேரணியும் பொதுக்கூட்டமும் நடைபெற்றன. நை. இருசப்பன், பெ. இராமசாமி ஆகியோர் ஏற்பாடுகளைச் செய்தனர்.

''தமிழ்நாட்டு குழந்தைகளின் சிறப்பான சிந்தனைக்கும், அறிவு வளர்ச்சிக்கும் தடையாக உள்ள ஆங்கில வழிக்கல்வி மூலம் கொள்ளையடித்து வரும் மழலையர் மற்றும் மெட்ரிகுலேசன் பள்ளி வணிகர்களையும், அவர்களுக்கு துணை நிற்கும் தமிழ் துரோகிகளையும் எதிர்த்தும், தமிழ் வழிக்கல்விக்கு முறையான, விரைவான நடவடிக்கை மேற்கொண்டு வரும் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அரசை ஆதரித்தும்'' இவை நடைபெற்றன.

நாகை மாவட்டத் தி.மு.க. இலக்கிய அணியின் சார்பில் ஒரு தீர்மானம் (24.4.2000)

''ஆங்கிலப் பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு வரை தாய்மொழி ''தமிழ்மொழி'' பயிற்று மொழியாக இருத்தல் வேண்டுமென தமிழக அரசு பிறப்பித்திருந்த ஆணையினை சென்னை உயர்நீதிமன்றம் ரத்து செய்து தீர்ப்பு வழங்கியிருப்பதற்கு இக்கூட்டம் வருத்தம் தெரிவித்துக்கொள்கிறது.

தொன்மையான, தேனினுமினிய தமிழ்மொழியினை தாய்மொழியாகக் கொண்ட தமிழ்நாட்டில், ஆங்கிலப் பள்ளிகளில் பயிலும் மாணவ - மாணவியரின்

பிஞ்சு உள்ளங்களின் தாய்மொழிப் பற்று வளர்ந்திடவும், இளமையில் தமிழ்மொழியினை தெளிவாகக் கற்றிடவும், பெற்றோரின் ஆங்கிலமொழி மோகம் அகன்றிடவும், கல்வியினை வர்த்தகமாக்கி பிழைக்கும் கூட்டத்தின் கொட்டம் அடங்கிடவும்,

ஒன்று முதல் ஐந்தாம் வகுப்புவரை ''தமிழ்மொழி'' தான் பயிற்று மொழியாக இருத்தல் வேண்டுமென்பதற்குரிய ''சட்டம்'' இயற்றிட வேண்டுமென தமிழக அரசினை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

உண்மையில் இது பாராட்டப்பட வேண்டும். எப்போது தமிழக அரசு பிறப்பித்த அரசாணை செல்லாது என்று தீர்ப்பு வழங்கியதோ அப்போதே சட்டமன்றத்தில் சட்டம் இயற்றியிருக்கவும் வேண்டும். ஆனால் கல்வி அமைச்சரோ சட்டமன்றத்தில் பலர் வலியுறுத்தியும் வழக்கு நீதி மன்றத்தில் இருக்கிறது என்று மழுப்பலான விடை சொன்னாரே தவிர, ஓர் அரசாணை மறுக்கப்பட்டால், அதனை மாற்றும் வகையில் சட்டம் இயற்றலாம் என்று திட்டவட்டமாகத் தெரிவிக்கவில்லை. ஏன்? மேல்முறையீட்டு வழக்கினைத் திரும்பப் பெற்றுக்கொண்டே, இங்கு சட்டம் நிறைவேற்றலாமே!

அமைச்சரவைக் கூட்டத்திலேயே சட்டம் இயற்ற வேண்டும் என்பதை ஏற்க மறுத்து அரசானை பிறப்பித்தால் போதும் என்றவர் பேராசிரியர்தான். நாங்கள் வலியுறுத்தியும் நடக்கவில்லை. காரணம் அவர்தாம் துறை அமைச்சர். கடைசியில் என்ன ஆனது? இந்த இடத்தை இலக்கிய அணித் தீர்மானம் சரியாகத் தொட்டிருக்கிறது.

உலகத் திருக்குறள் பணிக்களத்தின் சார்பில் தவத்திரு பொன்னம்பல அடிகளாரும், செயலர் மலையப்பனும் தமிழ்வழிக் கல்வி குறித்து ஓர் அறிக்கை வெளியிட்டுள்ளனர். (24.5.2000) அதில் அவர்கள் குறிப்பிட்டிருப்பது.

''கருநாடகம், ஆந்திரம் முதலிய அண்டை மாநிலங்களில் பிறந்தோர், வாழ்வோர், அந்தந்த மாநிலத்தின் தாய்மொழி வழி கட்டாயமாகக் கற்பதோடு, தொடக்கக் கல்வியை அவரவர் தாய்மொழியிலேயே கற்க வகை செய்யபெற்றுள்ளது. ஆனால் தமிழகத்தில் மட்டும் தாய்மொழியன்றி, அயல்மொழியில் கற்கலாம் என்ற அவலநிலை தோன்றியுள்ளது. தன் சொந்தத் தாய்மொழியில் பயில்வதற்குத் தடை என்பது வியப்பாகவும், விந்தையாகவும் உள்ளது. அரசு இப்பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டிய நிலையில் உள்ளது.''

மேலும் அவர்கள் கூறுவது.

''அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில், தற்போது ஏழாம் வகுப்பு முடிய தனிக்கல்வி பயின்றவர்களை (Private Study) நேரிடையாகச் சேர்த்துக் கொள்ள அரசு ஆணை வழி செய்கிறது. இதனால் அரசு அங்கீகாரம் பெறாத ஆங்கில வழிக்கல்விக் கூடத்தில் பயின்றவர்கள் அங்கீகாரம் பெற்ற பள்ளியில் எட்டாம் வகுப்பு சேர வாய்ப்பிருக்கிறது. எனவே இந்த முறையை ரத்து செய்ய வேண்டப்படுகிறது. அங்கீகாரம் பெற்ற பள்ளியில் பயின்றவர்களை மட்டுமே பிற பள்ளிகளில் சேர்க்கத்தக்க ஆணை வேண்டப்படுகிறது. தனிக்கல்வி பெற்றோர் சேர்க்கையை (Private Study) தடைப்படுத்துவதால் அங்கீகாரம் பெறாத ஆங்கிலப் பள்ளிகள் தானாகவே மூடப்படும் நிலை ஏற்படும்.''

இதைத்தான் நான் அடிக்கடி வலியுறுத்தி வந்தேன். என் அறிக்கைகளிலும் இது உள்ளது. 37A எனும் அந்த ஆணையைப் பிறப்பித்துவிட்டு 1974 முதல் தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டும் ஆணைக்கு விதி விலக்கு அளிக்கப்படுகிறது என்று அறிவித்து விடுகிறார்கள். இது 2002ஆம் ஆண்டிலும் தொடர்கிறது. விதிவிலக்கு அளிப்பதை நிறுத்திவிட்டால் போதுமானது. 'எந்தக் காரணம் கொண்டும் விதிவிலக்கு அளிக்கப்பட மாட்டாது' என்று அரசு கூறிவிட்டால் போதும். நிலைமை பெரிதும் மாறிவிடும்.

''புதியதாக எந்த ஒரு ஆங்கில வழிக்கல்விப் பள்ளிக்கும் இனி அங்கீகாரம் வழங்கக் கூடாது.''

நல்ல கருத்து. ஆனால் தமிழ்ப் பேராசிரியராகிய கல்வி அமைச்சர் க. அன்பழகனே இதைக் காதில் வாங்கிக் கொள்ளவில்லையே! அவர் காலத்தில்தானே அதிக அளவில் மெட்ரிகுலேசன் பள்ளிகளுக்கு ஏற்பு வழங்கப்பட்டது.

''தற்போது அங்கீகாரம் வழங்கப்பெற்ற ஆங்கில வழிப்பள்ளிகள், அரசு நிர்ணயித்துள்ள விதிமறைகளைக் கடைப்பிடிக்கின்றனவா, என நுணுகி ஆய்ந்து, விதிமுறைகளைப் பின்பற்றாப் பள்ளிகள் அங்கீகாரத்தைத் திரும்பப் பெறல் வேண்டும்.''

இதுவும் நல்ல கருத்து.

நல்லவேளையாக, 2002இல் தமிழக அரசால் அமைக்கப்பட்ட சை.வை. சிட்டிபாபு தலைமையிலான குழு இப்போது இந்த வேலையைச் செய்கின்றது. மெட்ரிகுலேசன் பள்ளிகளின் கலக்கத்தை மற்றோரிடத்தில் பார்ப்போம்.

''தமிழகத்தில் உள்ள பெற்றோர் பலர், போதிய கல்வி அறிவு பெறாதவர்கள். எனவே அவர்கள் ஐயத்தை தீர்க்கும் வகையிலும், தமிழ்

இதுவும் நல்ல கருத்து.

உணர்வை ஊட்டும் வகையிலும், செயல்பாடுகளை முனைப்பாக்க வேண்டும். நகரம், வட்டம், ஒன்றியம், சிற்றூர் என பல்வேறு பகுதிகளிலும் எழுச்சிக்கூட்டம் நடத்தி தமிழ் வழிக்கல்வியின் அவசியத்தை உணரச் செய்ய வேண்டும்.

தமிழ் வழிக்கல்வித் தரத்தை பள்ளிகளில் உயர்த்த உடனடி செயல் வடிவம் வேண்டும்.''

நல்ல தீர்மானங்கள் இவை:

நமது பள்ளிகளின் தரம் உயராததாலேயே இந்த அவல நிலை.

தஞ்சை அ. இராமமூர்த்தி, பா. இறையரசன் ஆகியோர் தஞ்சாவூர் தமிழ்ப் பேரவையின் சார்பில் மீண்டும் அறிக்கை விட்டனர்: (21.4.2000)

''ஆங்கிலத்தைக் காட்டி அதிகப் பணம் பெறும் பள்ளிகள் செய்வது தான் ஆங்கிலத் திணிப்பு ஆகும். நமது நாட்டில் சட்ட மரபுகளையும் பண்பாட்டையும் கெடுக்கும் செயலும் ஆகும். கல்வியை வணிகமாக்கிக் கொள்ளையடிக்கும் சிலர், சட்டங்களையும் நீதியையும் தனக்கு சாதமாக்கிக் கொண்டு மக்கள் அரசையும் அரசாணையையும் மக்கள் மொழியையும் தூக்கி எறிவது தவறு.

எனவே தமிழர்களுக்கான தமிழ்வழிக்கல்வியையும் சிறுபான்மையினர்க்கான தாய்மொழி வழிக்கல்வியையும் கொள்ளையடிக்கும் கல்வி நிறுவனங்களைக் கட்டுப்படுத்தும் முறையான ஏற்பு பெற்ற கல்வியையும் உறுதிப் படுத்த தமிழக அரசு உடனே சட்டம் கொண்டுவர வேண்டும்.

இல்லையென்றால் சென்ற ஆண்டு மூன்றில் இரண்டு பாடங்கள் தமிழில் என்று ஒரு குழப்படி ஆணையைப் போட்டது போல, கண்துடைப்புக்காக இந்த ஆண்டும் இந்த அரசாணையைப் போட்டதாக அமையும்'' என்று தமிழ்வழிக் கல்விக்கான சட்டம் கொண்டுவரப்படவேண்டும் என்று வற்புறுத்தியுள்ளனர்.

அனைத்துலக அளவிலான ''தமிழ் இனி 2000'' இலக்கிய மாநாட்டில் தமிழ்வழிக் கல்வி தொடர்பாக ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (தினமலர் 5.9.2000)

''தமிழ்வழி கல்விக்காகத் தமிழக அரசு மேற்கொண்டு வரும் முயற்சிகளை வரவேற்கிறோம். இதில் நீதி மன்றங்கள் தலையிடாதபடி அரசியல் அமைப்புச்சட்ட பாதுகாப்பினைப் பெறுவதற்கான முயற்சிகளைத்

தமிழக அரசும் மத்திய அரசும் மேற்கொள்ள வேண்டும். மருத்துவம், பொறியியல் உள்ளிட்ட அனைத்த உயர்கல்வியும் தமிழ் வழியில் கொண்டு வரப்படவேண்டும்.

தமிழ் வழியில் பயிலும் மாணவர்களுக்கு அவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப மருத்துவம், பொறியியல் போன்ற உயர்கல்வியில் விகிதாச்சார ஒதுக்கீடு வழங்க வேண்டும். பெரும் வணிக நிறுவனங்களாக செயல்படும் தனியார் கல்விக் கூடங்கள் தேர்ச்சி விகிதத்தை உயர்த்தி காண்பிக்கும் பொருட்டு பிளஸ்2 பாடங்களை இரு ஆண்டுகளிலும் நடத்துதல், காப்பியடிக்க அனுமதித்தல் போன்ற வழிமுறைகளை கையாளுகின்றனர். ஆசிரியர்களும் தவறான மதிப்பீட்டின் காரணமாக ஆங்கில வழியிலுள்ள விடைத்தாள்களுக்கு கூடுதல் மதிப்பெண்களையும் தமிழ் வழியிலுள்ள விடைத்தாள்களுக்கு குறைவான மதிப்பெண்களையும் போடுகின்றனர்.

பெரும்பாலான தமிழ் வழிப் பள்ளிகளில் போதிய ஆசிரியர், போதிய கண்காணிப்பு இன்றி மாணவர்கள் பாதிக்கப்படுகின்றனர். ஏழை மாணவர்கள் (டியுசன்) பெறுவதும் சாத்தியமில்லை. இதனால் மருத்துவம், பொறியியல் போன்ற உயர்கல்வியில் இவர்களுக்குப் போதிய பிரிதிநிதித்துவம் கிடைப்பதில்லை. 95-96ம் ஆண்டில் பொறியியல் கல்லூரிகளில் அனுமதிக்கப்பட்ட மாணவர்களில் ஆங்கில வழியில் படித்த மாணவர்கள் 77 சதம் தமிழ் வழியில் பயின்றவர்கள் 23 சதம்.

•

ஆனால் மேல்நிலைக்கல்வியில் தமிழ் வழியில் பயில்பவர்கள் 80.7 சதம் ஆங்கில வழியில் படிப்பவர்கள் 19.3 சதம் மட்டுமே. சுமார் 81 சதம் இடங்கள் பெறவேண்டிய தமிழ் வழிக் கல்வி மாணவர்கள் 23 சதம் மட்டும் தான் பெற முடிந்துள்ளது. இந்த ஏற்றத்தாழ்வு நீங்க இடைக்கால ஏற்பாடாக தமிழ்வழியில் பயிலும் மாணவர்களுக்கு அவர்களது எண்ணிக்கை ஏற்ப விகிதாச்சார ஒதுக்கீடு மருத்துவம், பொறியியல் படிப்புகளில் வழங்கப்படவேண்டும்'' என்று தீர்மானம் பேசுகிறது. தமிழ் வழிப் பயில்பவர்கள் உயர்கல்வியில் எப்படித் தங்கள் வாய்ப்பை இழக்கிறார்கள் என்பதையும் இவர்கள் புள்ளி விவரத்துடன் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

தமிழைப் பாடமொழியாக்கக் கோரித் தமிழ் அமைப்புகள் தொடர் பட்டினிப் போராட்டம் நடத்த இருப்பதாக ஒரு செய்தி.

அறிக்கையில் அதே தீர்மானங்கள்: 4.8.2001 அன்று மாலை முரசில் இதைப் பார்த்தபின் அன்றே ஒரு குறிப்பெழுதினேன். அதனை இப்போது இங்கே இணைத்துள்ளேன்.

5.8.2001 அன்று எழுதிய குறிப்பு. தமிழ்நாட்டில் வெவ்வேறு தமிழ் அமைப்புகள் உள்ளன. அனைத்தும் இல்லாவிட்டாலும், இருபது முப்பது அமைப்புகளாவது ஒருங்கிணைந்து செயற்பட்டிருந்தால் இன்னும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கும்.

96-2001இல் நான், அமைச்சர் எனும் முறையில் ஆட்சிமொழித் துறையில் பெரிய முயற்சிகளை எடுக்கும்போது இந்த அமைப்புகள் தவறு செய்கின்ற அலுவலர்களை, எதிர்த்து, தட்டிக் கேட்டிருந்தால், அதற்கெனக் களம் இறங்கியிருந்தால் பல அலுவலர்கள் திருந்தியிருப்பார்கள்.

ஆனால் அமைப்பாளர்கள் அப்படிச் செய்வதில்லை. கோரிக்கை வைப்பது, பட்டினிகிடப்பது, ஆர்ப்பாட்டம் செய்து ஒரு வாரத்துக்குள் இவற்றை முடித்துக் கொண்டு முடங்கிப் போவது என்று இவர்களே தங்களைக்கட்டுப் படுத்திக் கொண்டதால் பெரிதும் முன்னேற்றம் விளையவில்லை. அண்மைக் காலத்தில் அருணாசலம் ஏற்பாடு செய்த '100 பேர் பட்டினிப் போராட்டம்' ஒன்றுதான் உருப்படியானது; உண்மையானது.

அதனாலேயே அரசு தலையிட்டுச் சில ஆணைகளைப் பிறப்பிக்க நேர்ந்தது.

அந்த ஆணை இன்று உச்சநீதிமன்றத்தில் ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

4.8.2001 இல் 'தமிழ் அமைப்புகளின் போராட்டம்' என்ற அறிக்கையைப் பார்த்ததும் மனத்தில் ஒரு வெறுமைதான் தோன்றிற்று; உதட்டைப் பிதுக்கிக் கொண்டேன்; இதற்குமேல் எதுவும் நடந்துவிடும் என்று நான் நம்பவில்லை.

திருவாரூர் இயற்றமிழ்ப் பயிற்றகச் சார்பில் சரவணத் தமிழன் ஓர் அறிக்கை விட்டிருந்தார். அதில் அவர் குறிப்பிடுவன.

''மருத்துவக் கல்லூரிக்குத் தன் மகளோ, மகனோ செல்ல வேண்டும் என்னும் விருப்பம் கொண்ட பெற்றோர் ஆங்கில நூல் பயிற்சி எளிதாவதற்கு எல்.கே.ஜி.யில் இருந்து ஆங்கிலம் படிக்க வைக்க நினைக்கின்றனர். 2,500 இடங்களே கொண்ட தமிழக மருத்துவக் கல்லூரியில் இடம் பெறாதவர்கள் பொறியியல் கல்லூரியில் சேர்ந்து பயின்று பணிவாய்ப்பில்லாமல் இருப்பது தான் தமிழக நிலைமை. இது இந்திய ஆட்சிப்பணி (I.A.S.) தேர்வு செல்வோர் மதிப்பெண் குறைந்தால் இந்திய காவல் தறை (I.P.S.) ஆவது போல் தான். தமிழகத்தில் பொறியியலில் மட்டும் தன் நிதிக் கல்லூரி 236 உள்ளன. கருநாடக மாநலத்தில் 40 ஆண்டாக மருத்துவ தன்னிதிக் கல்லூரிகள் உண்டு.

சென்னையில் ஆங்கில மையல் கொண்ட அதிகாரிகள் 25 விழுக்காட்டினரும், தெலுங்கு தாய் மொழியினர் 25 விழுக்காட்டினரும் உயர்பதவியில் இருந்து கொண்டு ஆங்கில நடைமுறையைப் புகுத்துவதில் கண்ணும் கருத்துமாக உள்ளனர். பதின்நிலை (மெட்ரிக்) பள்ளிகளில் 10 பாடம் இருப்பதும் மாநில அரசுப் பள்ளிகளில் 5 பாடம் இருப்பதும் இயல்பே. 12-ஆம் வகுப்பில் 5 பாடம் இருப்பது இரு பள்ளியிலும் இயல்பே. பட்டப்படிப்பைப பாதியில் விட்டவர்களை ஆசிரியராக அமர்த்திக் கொண்டு 1000 ரூ. ஊதியம் கொடுத்து கடுமையாக வேலை வாங்குவது ஆங்கிலப் பள்ளிகளின் நிலைமை.

முன்னேறிய நாடுகளான ரஷியா, ஜப்பான, ஜெர்மன், பிரான்ஸ் இவற்றில் ஆங்கிலம் புழக்கத்தில் இல்லை. அங்கே செல்லும் ஆங்கிலம் தெரிந்தவர் சைகை மொழியால் பேசி விட்டுத் தான் திரும்புகின்றனர்.'' இவரும், தமிழ்வழிக் கல்விக்காகச் சட்டம் இயற்றவேண்டும் என்று வற்புறுத்துகிறார்.

200க்கும் மேற்பட்ட தமிழ் அமைப்புகள் தமிழ்வழிக் கல்விக்காகக் குரல் கொடுத்திருப்பதையும், பொதுமக்களுக்குவிளக்கிச் சொல்லியிருப்பதையும் காண்கிறோம். பல அமைப்புகள் ஆர்ப்பாட்டங்கள் செய்துள்ளன. உண்ணாநோன்பு பல இடங்களில் மேற்கொள்ளப்பட்டது. ஒருசில இடங்களில் தனி அமைப்பாகப் போராடாமல், 10க்கு மேற்பட்ட அமைப்புகளே ஒருங்கிணைந்தும் இந்தப் பணிகள் நடைபெற்றுள்ளன.

இவற்றில் எத்தனை வலிவுடையவை, எத்தனை ஆள் பலமில்லாத பலவீனமானவை என்றெல்லாம் நான் எந்த ஆராய்ச்சியும் செய்யவில்லை. மொழிப் பற்றே இல்லாமல், தாய்மொழி உணர்ச்சியே இல்லாமல் களிமண் பொம்மைகளாகப் பலர் உண்டு, உறங்கி, துய்த்து, வாழ்ந்து கொண்டிருக்கும் இந்நாளில் தமிழின் மீது பற்றும், தமிழ் வாழவேண்டுமே என்ற கவலையும், இந்தச் சூழ்நிலையில் தமிழ் காப்பாற்றப்பட வேண்டுமே எனும் பொறுப்புணர்ச்சியும் கொண்டு, தனிப்பட்ட முறையிலும், ஏதேனும் ஓர் அமைப்பின் சார்பிலும் இயங்கிய ஒவ்வொரு தமிழ் மகனுக்கும் - என் தலை தாழ்ந்த வணக்கங்கள். தமிழ்வழிக் கல்விக்காகக் குமரியிலிருந்து சென்னை வரை பல்வேறு அமைப்புகள் எழுப்பிய குரலுக்கு மதிப்பிருந்தது. தமிழக அரசும் ஆணைகளைப் பிறப்பித்தது. ஆனால், இவ்வளவு பேர் ஆதரவிருந்தும் இன்று நிலை என்ன? ஆணை என்ன ஆயிற்று? ஆங்கில வழிப் பள்ளிகளின் ஆரவாரம் சற்றாவது குறைந்திருக்கிறதா? சிந்தியுங்கள்.

இயல் இருபத்தொன்பது - அ

இதழ்களின் சார்புக் கருத்துகள்
1995 - 1996

'தினமணி'யில் ந. வேம்புசாமி என்பவரின் கட்டுரை வந்தது. அதையொட்டி ஆசிரியர்க்குப் பல மடல்கள் 2.12.1995 அன்றே இந்தக் கருத்துகள் வந்துவிட்டன. அவற்றைப் பாருங்கள்.

''ஆங்கிலத்தின் துணையின்றி ஜப்பானியர்கள் அறிவியலில் முன்னேறுவதை யார்தான் மறுக்க முடியும்? உலகின் பல மொழிகள், ஆங்கிலத்தைப் புறக்கணித்துவிட்டு, அறிவியலில் முத்திரை பதித்தவண்ணம் உள்ளன.

ஆங்கில மோகத்தை நியாயப்படுத்துபவர்கள், ஆங்கிலத்தின் தேவை இன்னும் எத்தனை நாளைக்கு என்பதையும் வரையறுத்துக்கொள்ளவேண்டும். 'அல்லவை தேய அறம் பெருகும்' என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப, ஆங்கில மோகம் குறைந்தால்தான் தமிழ் வளரும்.''

''ஆங்கில மொழியால் தமிழின் இயல்பான வளர்ச்சி தடைபட்டுப் போய்விட்டது என்பதை யாவரும் அறிவர். மொழியின் மீது குற்றமில்லை. மொழிவெறிக்காட்பட்டு, அடிமையாய் வாழ்ந்த - வாழ்கிற வாழப் போகிறவர்களால் ஏற்பட்ட விளைவிஃதே. 'மொழிக்கு மொழி தோழமை வேண்டும் - என்ற கருத்தினை யாவரும் வர வேற்கின்றோம்.

தமிழனைத் தவிர பிற மொழிக்காரர்கள் எல்லாரும் மொழிப்பற்றில் முனைப்பாக இருக்கிறார்கள். ''விழித்துக் கொண்டோர் எல்லாம் பிழைத்துக் கொண்டார்'' என்ற பாடல் வரிகள் நூற்றுக்கு நூறு உண்மை மொழியாகும்.''

''இனப் போராட்டம் நடந்து வருகிற, தமிழர் சிறுபான்மையராக உள்ள சிறிய நாடான இலங்கையில் மருத்துவம் முதலிய உயர்கல்விகளைத் தமிழ்வழியில் தரும்போது நாம் அந்த நிலையை எட்டாதது வெட்கித் தலை குனிய வேண்டிய அவலநிலையாகும்.''

''நாம் தமிழை தமிழ்நாட்டில் முதன்மைப் படுத்துவதை விட்டு ஆங்கிலமா? இந்தியா? என்ற தேவையற்ற விவாதங்களிலேயே அரை நூற்றாண்டை வீணாகக் கழித்து விட்டோம்.''

''கல்வியின் நோக்கமே அறிவியலைக் கொண்டு வருவதுதான் என்பது போலவும், அதற்காக எல்லாத் தமிழரும் எல்லா வகுப்பிலும் கட்டாயமாக ஆங்கிலத்தைக் கற்க வேண்டும் என்பது போலவும் கட்டுரை அறிவுறுத்துகிறது. இலக்கியம், வரலாறு, பொருளியல், வணிகவியல் முதலிய கலைப்பாடங்களை ஆங்கிலத்திலேயே படித்தவர்கள் அறிவியலைத் தமிழில் கொண்டு வரும் தகுதியைப் பெற்று விடுகின்றார்களா என்ன?

தமிழுக்கும் ஆங்கிலத்துக்கும் என்ன? தமிழுக்கும் இந்திக்கும்கூட எந்தப் பகையும் இல்லை. உடையவன் அமர வேண்டிய ஆட்சிக் கட்டிலில் ஏவலன் அமர்ந்திருக்கும் நிலையும், ஆங்கிலத்துக்கு முதன்மை தந்து படித்த இன்றைய படிப்பாளிகள் பலர், தமிழ் எழுத்திலும் பேச்சிலும் ஆங்கிலத்தைச் சரிபாதியாகக் கலப்படம் செய்து தமிழை அழித்துக் கொண்டிருக்கும் நிலையுமே இத்தகைய பகையெண்ணத்தை வளர்த்தவை.

இந்தக் காரணங்களை முதலில் களைய வேண்டும். கட்டுரையில் இதுபற்றிய கருத்து ஏதும் இல்லாதது ஏமாற்றம் தருகிறது.''

1996-2001க் கிடையில் தமிழக அரசின் சார்பில் தொடக்கப்பள்ளிகளில் தமிழ் வழிக்கல்வி பற்றி எடுக்கப்பட்ட முயற்சிகள் பற்றி யாவரும் அறிவோம். அந்தக் கால கட்டத்தில் நாங்கள் எடுத்த முயற்சிகளைப் பாராட்டியும், பிறப்பித்த ஆணைகளை வரவேற்றும். மேலும் ஊக்கமளிக்கக் கூடிய வகையில் தங்கள் கருத்துகளைத் தெரிவித்தும் பல இதழ்கள் எழுதின. அதே நேரத்தில் இதற்கு எதிர்ப்பான கருத்துகளையும் ஒருசில இதழ்கள் எழுதின. எதிர்ப்பாகத் தாங்கள் எழுதாவிட்டாலும், எதிர்ப்பு இருப்பதுபோல் காட்டிடவும் சில இதழ்கள் தயங்கவில்லை. தமிழுக்கு, தமிழர்க்கு நலம் சேர்ப்பதில் நாம் முனையும் போதெல்லாம் இப்படிச் சிலர் குறுக்குச் சால் அடித்து ஒரு குழப்பத்தை உண்டாக்குவது என்பது நீண்டகாலமாகவே நடந்து வருகிறது. இப்போதும் அதுதான் நடக்கிறது.

அறிஞர்கள் பலர் தமிழ்வழிக் கல்விக்குச் சார்பாகச் சொல்லியிருந்த கருத்துகளைப் பார்த்தோம். அமைப்புகள் பல அப்படியெல்லாம் எழுச்சியுடன் வரவேற்றன என்பதையும் பார்க்கப்போகிறோம். பெரும்பாலான தமிழக அரசியல் கட்சிகள் தமிழ்வழிக் கல்வியை வரவேற்றுப் பேசியிருந்த வாதத்தையும் பார்ப்போம். அந்த வகையில் தமிழ்வழிக்கல்விக்கு இதழ்களின் ஊக்குவிப்பு எந்த அளவில் இருந்தது என்பதையும் பார்த்தால்தான் ஒரு முழுமை கிடைக்கும்.

13.11.95இல் பேரா. அ. இளங்கோவன் எழுதிய திண்ம விசையியல் (Mechanics of Solid) எனும் அறிவியல் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது.

அந்த நூலை வெளியிட்டுச் சிறப்புரை ஆற்றியவர் மேனாள் அமைச்சர், மேதகு மேனாள் ஆளுநர் சி. சுப்பிரமணியம் ஆவார். அண்ணா பல்கலைக் கழகம் வெளியிடும் களஞ்சியம் இதழ் (சனவரி 96) அவரது பேச்சை வெளியிட்டுள்ளது. தமிழுக்காகக் குரல் கொடுத்த அவரது கருத்திலிருந்தே இந்தக் கட்டுரை தொடங்குவது மகிழ்ச்சிக்குரியது.

அவர்களே உரைச் சுருக்கம்தான் தந்துள்ளார்கள். எனவே, நான் மேலும் சுருக்காமல் அப்படியே தந்துள்ளேன்.

''நான் கண்ட கனவுகளில் ஒன்று நனவாகும் இவ்விழாவில் கலந்து கொள்வதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இன்று அறிவியல் வளர்ச்சிகளை மக்கள் பெற வேண்டுமெனில், சிலர் மட்டுமே உயர்நிலை அறிவைப்பெறுதல் போதாது. சமுதாயம் முழுவதுமே அறிவியல் துறைகளில் தேர்ச்சி பெற்றவர்களாக உருவாகும்போதுதான், மற்றச் சமுதாயங்களுடன் சமமாக வளரமுடியும். இந்நோக்கம் நிறைவேற வேண்டுமெனில், தாய்மொழியில்தான் இவற்றைக் கற்கவேண்டும் என்று நிறுவச் சான்றுகள் பல உண்டு. ஆனால், இன்று நாம் அந்நிய மொழியிலேயே அறிவியலைக் கற்பிக்கும் போக்கு தொடர்ந்து நீடித்தால் நமது சமுதாயம் வளர்ந்து முன்னேறுவதென்பது முடியாததொன்று என்றே தோன்றுகிறது. ஆகவே, மற்றைய சமூகங்களுடன் போட்டியிட்டு நாமும் முன்னேற வேண்டுமென்றால், தாய்மொழிவழிக் கல்வி மூலமாகத்தான் அது நிறைவேற முடியும் என்பதை நாமனைவரும் உணரவேண்டும். இல்லையேல் இக்கல்விமுறை சிலரின் தனிப்பட்ட தேர்ச்சிக்கும் வளர்ச்சிக்கும் உதவ முடியுமே தவிரச் சமுதாய முன்னேற்றத்திற்கு உதவ முடியாது. ஆகவே, நமது சமுதாயத்தின் வருங்காலத்தையெண்ணிப பார்க்கும்போது தாய்மொழி வழிக் கல்விதான் உடனடித்தேவை என்பதை உணர வேண்டும். அதற்கு முதற்படியாகப் பாடநூல்கள் வெளிவர வேண்டும்.

இன்று வெளியிடப்படும் திண்ம விசையியல் (Mechanics of Solid) என்பது ஓர் அடிப்படை நூல். உயர்நிலை அறிவியலைக் கற்பதற்கு முதற்படியாக, அடிப்படைகளைத் தமிழில் கற்கவேண்டும். தொடக்கத்திலிருந்து எல்லா வகுப்புகளிலும் தமிழ் வழியாக அறிவியல் கற்பிக்கப்பட்டால் உயரிய அரிய கருத்துகளையும் எளிதில் புரிந்துகொள்ள முடியும். இன்றைக்கு இந்நூலைப் படித்துப் புரிந்துகொள்ள வேண்டுமென்றால், ஆங்கிலம் நன்கறிந்தவர்கள்தாம் புரிந்து கொள்ள முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது. ஏனெனில், இன்று பள்ளிக் கல்வியையே பெரும்பாலோர் ஆங்கில மொழி வழியாகத்தான் பெற்றுக் கொண்டிருக்கின்றார்கள். நல்லதொரு அடித்தளம்

இல்லாமையால் மேலே வலுவான கட்டடம் எழுப்ப இயலாது என்பது போன்று, நமது பள்ளிக் கல்வியும் தாய்மொழிவழிப் பயிற்சியொன்றும் உறுதியான அடித்தளத்தின்மீது அமையாமையால், நாம் கல்வி வளர்ச்சியில் போதிய முன்னேற்றம் காண முடியவில்லை. அடிப்படையாக, ***நமது சமுதாயத்தில் இன்று நிலவும் ஆங்கில மோகம் அகல வேண்டும்.*** இன்றைக்கு நமது குழந்தைகளை ஆங்கில வழிப்பள்ளிகளில் சேர்க்க வேண்டுமென்ற மோகம் சமூகத்தின் எல்லா வகையான மக்களிடமும் காணப்படுகிறது. இதனால், மகிழ்ச்சியான அனுபவமாக அமையவேண்டிய கல்வி நமது குழந்தைகளுக்கு ஒரு பெருஞ்சுமையாகவே காணப்படுகிறது. அறிவினைப் பெறுவது மட்டுமன்றிச் சொற்களைத் தெரிந்து கொள்வதே பல குழந்தைகளுக்குத் திண்டாட்டமாகவிருக்கிறது.

ஆகவே, தாய்மொழி வழிக் கல்வியென்னும் உறுதியான அடித்தளம் அமைப்பதற்கு முதற்படியாகக் குறைந்தது தொடக்கப் பள்ளிக் கல்வியையாவது அனைவர்க்கும் தாய்மொழி வழியாகவே அளிக்கும் முயற்சியை உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இதனை அரசியலுக்கு அப்பாற்பட்ட சமூகத் தேவையான அனைவரும் உணர வேண்டும். தமிழ்நாட்டுப் பள்ளிகளில் தமிழ்தான் பயிற்று மொழியாக இருக்கவேண்டும்; ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாக இருந்தால் போதும் என்பதோர் முடிவினை நாம் உடனடியாக எடுக்கவேண்டியது அவசியம்.

தொடர்ந்து உயர்நிலையில் பல அறிவியல் பாடநூல்கள் வெளியிடும் முயற்சியையும் நாம் மேற்கொள்ள வேண்டும். இதற்கான அடிப்படைத் தேவைகளில் ஒன்று முக்கியமான கலைச் சொற்களைத் தமிழில் உருவாக்குதல். எளிய பொருத்தமான கலைச் சொற்கள் உருவாக்கப்பட்டு அனைவரும் சீராகப் பயன்படுத்தும் வகையில் பரவலாக அறிமுகப்படுத்தப்படவேண்டும். நூல்கள் எழுதுவோர்க்குத் தமது பாடத்துறையில் திறமான புலமையிருப்பதுடன் போதிய மொழிப்பயிற்சியும் தரப்பட வேண்டும். அறிவியல் கருத்துகளை ஆங்கில மொழியிலிருந்து சொல்லுக்குச் சொல் மொழி பெயர்த்துத்தரும் முயற்சிகள் நல்ல பலன் தரா; சிலபோது தவறான பொருள் மயக்கத்தையே விளைவிக்கும். அடிப்படைக் கருத்துகளைத் தெளிவாக உணர்ந்து கொண்டு நமது சொந்த நடையில் அவற்றை வெளியிடுதல் வேண்டும்.

தாய்மொழிவழியாகக் கல்வி அளித்தல் என்பது அரசின் கொள்கைகளில் ஒன்று என்று எண்ணாமல் அது சமுதாயத்தின் அடிப்படைக் கொள்கையாக உருவாகி ஆட்சிகள் மாறினாலும் தொடர்ந்து நிலவவேண்டிய

அடிப்படைத்திட்டமாக அமைக்கப்பட வேண்டும். நாம் அனைவரும் நமது தமிழ்த்தாயினைச் செயல் மறந்து வாழ்த்துவதுடன் நின்றுவிடாமல் செயல் புரிந்து வாழ்த்துபவர்களாக இருக்க வேண்டுமென்பது எனது வேண்டுகோள்.

நாடு விடுதலைபெற்று நமது நாட்டை நாமே ஆளத்தொடங்கிய காலந்தொட்டு, நமது கல்வி எல்லா நிலைகளிலும் தாய்மொழியிலேயே பெறவேண்டுமென்று கனவு கண்டோம். அது கனவாகவே இருந்துவிடுமோ என்ற அச்சந்தரும் சூழ்நிலைகள் உருவாகியது கண்டு சோர்வு கொண்டோம். உயர் நிலையிலிருக்கும் அறிஞர்கள் பலர் இங்குத் திரண்டுவந்து தமிழ்ப் பாடநூல் வெளியீட்டு ஆதரவு தருவது இன்றில்லாவிடினும் நாளை நமது கனவு நிறைவேறுமென்ற நம்பிக்கையைத் தருகிறது. இம்முயற்சி ஒரு நூலுடன் நின்றுவிடாது மேலும் ஏராளமான நூல்கள் வெளிவருவதற்கு ஒரு தொடக்கமாக அமைய வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

நமது வருங்காலத்தை உருவாக்குவதில் இளைஞர்களுக்கு மிகுந்த பொறுப்பு உண்டு. நமது சமுதாயத்தின் வளர்ச்சிக்கு எது தேவை என்பதை உணர்ந்து அதை நிறைவேற்றுதற்கு ஊக்கமும் ஒத்துழைப்பும் தருவது நமது கடமையென்பதை எல்லாரும் உணரவேண்டும்.

இன்றைய உலகத்தில் எந்தவொரு சமுதாயமும் தனித்து வாழ இயலாது. ஆங்கிலத்தை அறவே அகற்றவேண்டுமென்பது நமது நோக்கமன்று. கல்வியைத் தரமாகவும் தெளிவாகவும் பெறப் பயிற்றுமொழியாகத் தாய்மொழியைத் தேர்ந்தெடுக்கும் அதே சமயத்தில் ஆங்கிலத்தை ஒரு மொழியாகக் கற்பதன் அவசியத்தையும் நாம் உணரவேண்டும். ஆனால், ஆங்கில மொழியின் மூலமாக மட்டும் சமுதாயத்தை உயர்த்த முடியாது. அதற்கான உரிய வழி, தாய்மொழி வழிக் கல்வியே என்பதை வலியுறுத்தியமைகின்றேன்''.

1956இல் தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தைக் கொண்டுவந்தவர். முதன் முதலாக, கோவை அரசினர் கலைக் கல்லூரியில் கலைப்பிரிவுகளில் தமிழ்ப் பயிற்றுமொழியை அறிமுகப்படுத்தியவர். எனவே அவர் கருத்தினைத் தெரிந்துகொள்வது நல்லது. ஆங்கிலமோகம் கொண்டு அலையும் அடிமைத் தமிழர்க்கு, 'கல்வி'யை விற்றுக் காசாக்கும் வணிகத் தமிழர்க்குச் சி.சு.வின் கருத்து, சற்றாவது உறைக்கும் என்று நம்புகிறேன்.

ஆங்கில மோகம்

நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்ற உடனேயே (12.6.96) தினமலர் இதழ் ஒரு செய்தி வெளியிட்டது:

6ம் வகுப்பு தமிழ் மீடியம் வகுப்புகளுக்கு சேர மாணவர்கள் இல்லை

ஆங்கில கல்வி மோகம் எதிரொலி.

சென்னை, ஜூன் 12- சென்னையில் உள்ள பல பள்ளிகளில் ஆறாம் வகுப்பு தமிழ் மீடியம் வகுப்புகளில் போதிய மாணவர்கள் சேர வராததினால் தமிழ் மீடியம் வகுப்புகள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இதனால் பல ஆசிரியர்கள் வேலை இழக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

கோடை விடுமுறைக்குப் பிறகு பள்ளிகள் திறக்கப்பட்டுள்ளன. பள்ளிகளில் மாணவர்களை சேர்க்கும் பணி மே மாதம் 10ம் தேதி, கோடை விடுமுறையின் போதே துவங்கி விட்டன.

ஆறாம் வகுப்பில் தங்களது குழந்தைகளை சேர்க்க விரும்பும் பெற்றோர் அனைவரும் குழந்தைகளை ஆங்கில மீடியம் வகுப்புகளில் சேர்க்கவே பெரிதும் விரும்புகின்றனர். ஆனால் சென்னை நகரின் அனைத்து பள்ளிகளில் ஆங்கில மீடியம் வகுப்பு பிரிவுகள் ஒன்று மட்டுமே உள்ளது. ஒரு சில பள்ளிகளில் மட்டுமே ஆங்கில மீடியம் பிரிவுகள் இரண்டு உள்ளன. ஒவ்வொரு ஆங்கில மீடியம் பிரிவுகளிலும் 75 மாணவர்களுக்குக் குறையாமல் சேர்க்கப்பட்டுள்ளனர். நாற்பது மாணவர்களுக்கு மேல் ஆசிரியர்கள் பாடம் கற்றுக் கொடுப்பது கடினமான செயலாகும். மாணவர்கள் நெரிசல் அதிகமுள்ள இது போன்ற ஆங்கில மீடியம் வகுப்புகளில் மாணவர்களிடம் ஆசிரியர்கள் தனி கவனம் செலுத்த முடியாது. படிப்பில் பின் தங்கியுள்ள மாணவர்களை ஆசிரியர்கள் தனிப்பட்ட கவனம் செலுத்தி பாடம் கற்றுத் தரவும் முடியாது.

சென்னையில் உள்ள ஒவ்வொரு பள்ளியிலும் தமிழ் மீடியம் ஆறாம் வகுப்பு பிரிவுகள் மூன்று அல்லது நான்குக்குக் குறையாமல் உள்ளன. இவற்றில் மாணவர்கள் சேர ஆர்வம் காட்டுவது இல்லை. ஆறாம் வகுப்பு ஒவ்வொரு பிரிவிலும் 30 மாணவர்கள் கூட இல்லை. இதனால் தமிழ் மீடியம் வகுப்புகள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. இது போன்ற நிலை கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகவே இருந்து வருகிறது. தமிழ் மீடியம் வகுப்புகளை மூடாமல் இருக்கவும், ஆசிரியர்களின் வேலை வாய்ப்பை பாதுகாக்கவும் பல பள்ளிகளில் தலைமையாசிரியர்கள் தமிழ் மீடியம் வகுப்புகளில் தேவையான மாணவர்கள் இருப்பதாக தவறான கணக்கை கல்வித் துறைக்கு காட்டி ஆசிரியர்களின் ஊதியத்தை மான்யமாக அரசிடமிருந்து பெற்று வருகின்றன. இந்த நிலை எவ்வளவு காலம் நீடிக்கும் என்று கூற முடியாது.

ஆங்கில மீடியம் தேவையை கருதி, இப்போது உள்ள தமிழ் மீடியம் வகுப்புகள் சிலவற்றை ஆங்கில மீடியம் வகுப்புகளாக மாற்றி உத்தரவு வழங்க வேண்டும் என்று பள்ளி தலைமையாசிரியர்கள் பலர் கல்வித் துறையையும், தமிழக அரசையும் வலியுறுத்தி வருகின்றனர். இதனால் ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்குவதில் அரசுக்கு கூடுதல் செலவு ஏற்படாது என்றும், பள்ளி நிர்வாகங்கள் தெரிவித்து வந்துள்ளன. இதன் மூலம் ஆங்கில மீடியம் வகுப்புகளில் உள்ள அதிகப்படியான மாணவர் நெரிசலையும் ஓரளவு குறைக்க முடியும் என்று தலைமையாசிரியர்கள் கூறுகின்றனர். ஆனால்

எம் எல் ஏக்களும், கல்வித் துறை உயர் அதிகாரிகளும் சில சிறுவர்களை ஆறாம் வகுப்பு ஆங்கில மீடியம் வகுப்புகளில் சேர்க்கும்படி டெலிபோன் மூலமாகவும், சிபாரிசு கடிதங்கள் மூலமாக தலைமையாசிரியர்களை கட்டாயப்படுத்தி வருகின்றனர். ஒவ்வொரு வகுப்புலும் 75 சிறுவர்களை சேர்த்தப்பிறகு மேலும் சில சிறுவர்களை சிபாரிசுகளால் சேர்க்க தலைமையாசிரியர்கள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

செய்திகள் யாவுமே உண்மைதான். ஏற்கெனவே ஒன்றிய, அரசுப் பள்ளிகளில் ஒரு பிரிவில் மட்டும் ஆங்கிலப் பயிற்றுமொழியில் பாடம் நடத்தலாம் என்று அனுமதி கொடுத்ததால் வந்த விளைவு இது!

எனினும் 'தமிழ் போதனா முறைதான் தமிழக அரசின் திட்டவட்டமான கொள்கை முடிவாகும். இதில் மாற்றம் ஏதும் செய்ய முடியாது என்று தமிழக அரசு தெரிவித்துவிட்டது' என்று எழுதுவது எங்கள் அரசின் தெளிவான கொள்கை முடிவைக் காட்டும்:

ஆட்சிப் பொறுப்பேற்ற ஒரே மாதத்தில் இந்தச் செய்தி. இவற்றையேல்லாம் கல்வி அமைச்சர் கவனத்தில் கொண்டாரா? அல்லது காற்றில் பறக்கவிட்டாரா?

முழுவதும் பார்த்தால்தான் முகம் தெரியும்;

முனைவர் சாலை இளந்திரையன் பிறநாடுகளை மேற்கோள் காட்டிச் சில செய்திகளை முன் வைத்துள்ளார்.

''ஒரு காலத்தில் 'அய்ரோப்பாவின் நோயாளி' என்று இகழ்ச்சி முத்திரை குத்தப்பட்டுக் கிடந்த துருக்கி நாடு, கமால் பாட்சா என்பவரின் ஆட்சியில் தனித்த வளர்ச்சியும் சிறப்பும் பெற்றது. இந்த உயர்வுகளைத் தமது நாட்டுக்கு உண்டாக்க விரும்பிய கமால்பாட்சா, தன் நாட்டில் வேர்போட்டு விழுது ஊன்றிக் கிடந்த அயல் மொழிக் கல்வியை அடியோடு ஒழித்துவிட்டு

மக்களின் தாய் மொழியாகிய துருக்கி மொழியிலேயே அனைத்துக் கல்வியும் நடைபெற ஏற்பாடு செய்தார் என்பது வரலாறு அந்தத் தலைவர் ஆட்சி ஏற்றபோது, துருக்கியில் அரபி மொழி சமயமொழியாகவும் பாரசீக மொழி ஆட்சி மொழி மற்றும் இலக்கிய மொழியாகவும் ஆட்சி செலுத்தின துருக்கி மொழி எழுத்தக் கூட இல்லாத வெறும் பேச்சு மொழி என்ற அளவுக்குச் சீர் குலைக்கப்பட்டுக் கிடந்தது. இப்போது தமிழகத்துக்காரர்கள் சமசுக்கிருதம், ஆங்கிலம், இந்தி முதலான மொழிகளின் சொற்களைக் கலந்து தங்கள் தாய் மொழியான தமிழையே ஒரு வினோதமான கலப்பு மொழியாகப் பேசி வருவது போலவே, அந்நாள் துருக்கியர்கள் மழலைப் பள்ளி முதல் உயர் படிப்பு வரை பிற மொழிகளையே படித்து அந்த மொழிகளின் சொற்களைத் தாராளமாக அள்ளிக் கலந்து, தனித்து, இயங்கக் கூடிய துருக்கி மொழி என்பதாக ஒரு மொழியே கிடையாது' என்கிற அவல நிலையை ஏற்படுத்திக் கொண்டு இருந்தார்கள்.

இதைக் கண்ணுற்ற கமால்பாட்சா முதல் வேலையாகத் துருக்கி மொழி மீட்டுயிர்ப்புப் பணியையே தொடங்கினார். மக்களிடம், அங்கொன்றும் இங்கொன்றுமாக ஒதுக்கம் பதுக்கமாக வழங்கி வந்த துருக்கி மொழிச் சொற்களைத் திரட்டித் தொகுத்தும் அவைகளைத் துறைவாரியாகப் பகுத்தும் சொற்களஞ்சியங்களை வெளியிடச் செய்தார். அயல்மொழிக் கல்விக் கூடங்களை ஒரே நாளில் இழுத்து மூடிவிட்டு அனைத்துக் கல்வியும் துருக்கி மொழியிலேயே நடைபெறுமாறு செய்தார். அயல்மொழிக் கல்விக் கூடங்களை ஒரே நாளில் இழுத்து மூடிவிட்டு அனைத்துக் கல்வியும் துருக்கி மொழியிலேயே நடைபெறுமாறு செய்தார். அய்ரோப்பாவின் நோயாளி என்று இகழப்பட்ட துருக்கி நாடு உயர்வு பெற்ற ஒரு நாடாக உலக அரங்கில் எழுந்தது.

எபிரேய மொழியைத் தாய் மொழியாகக் கொண்ட இசுரவேலர்கள் என்னும் யூதர்கள், ஒரு காலத்தில் தங்கள் நாட்டை விட்டே பல இடங்களுக்குச் சிதறி ஓடினார்கள்; போன போன இடங்களின் மொழிகளையே தங்கள் அன்றாட மொழிகளாக்கிக் கொண்டு, தங்கள் தாய்மொழியையே இழந்து மறந்து விட்டவர்கள் போல வாழ்ந்து வந்தார்கள். இரண்டாவது உலகப் போருக்குப் பின்னால் அவர்களுக்கென்று இசுரேல் நாடு 1948இல் உருவானபோது முதல் வேலையாகத் தங்கள் தாய்மொழியாகிய எபிரேய மொழியையே அடி முதல் முடி வரை கல்வி மொழியாக்கினார். நேற்று முளைத்த அந்த இளையநாடு, இன்றைக்கு உலக நாடுகளுக்குள் உருப்படியான ஒரு நாடாகத் தலை நிமிர்ந்து நிற்கிறது என்றால், அந்த மக்கள் கல்வியைத் தங்கள் தாய் மொழி மூலம் பெற்று வளர்ந்ததே காரணம்.

டச்சுக்காரர்களுக்கு அடிமைப்பட்டுக் கிடந்த இந்தோனேசிய நாடு, 1949 இல் தான் விடுதலை பெற்றது. அந்நியரை வெளியேற்றியதும், முதல் வேலையாகத் தங்கள் தாய் மொழியாகிய இந்தோனேசிய மொழியைத் தான் அந்த நாட்டு மக்கள் கல்வி மொழி ஆக்கினார்கள். அன்று தொடங்கி, இந்தோனேசிய நாடு எல்லாப் புதிய துறைகளிலும் கனவேகமாக வளர்ச்சி பெற்று வருகிறது. கிழக்கிந்திய நாடுகளில் விரைந்து முன்னேற்றம் அடைந்து வரும் நாடு என்கிற பெருமையையும் இந்தோனேசியா பெற்றுக் கொண்டு வருகிறது.''

எனவே துருக்கி, இசுரேல், இந்தோனேசியா ஆகிய நாடுகளில் தாய்மொழி வழிக்கல்வி எந்த அளவுக்கு வெற்றி பெற்றுள்ளது என்பதை நம்மால் உணர முடிகின்றது.

தஞ்சையிலிருந்து வெளிவரும் 'முத்தமிழ் முரசு முழக்கம்' எனும் இதழ் (10.6.96) சில கருத்துகளை வெளியிட்டிருந்தது:

''அன்னைத் தமிழின் உயர்விற்காக சொந்த நாட்டிலேயே போராடவேண்டிய நிலை உலகிலேயே தமிழனைத் தவிர வேறு எவனுக்கும் இருந்ததில்லை.''

''ஆங்கில வழிக் கல்வி கற்றால்தான் உயர்மட்ட அரசுப்பணிகள் கிடைக்கும். மேட்டுக்குடி மகனாக, பகட்டோடு வாழலாம் என்பதெல்லாம் கட்டுப்பாடற்ற குமுகாயக் கூட்டத்தின் திட்டமிட்ட புனைந்துரையாகும்.

தமிழ் வழியில் பயின்ற கோடிக்கணக்கானவர்கள் பொறியியல், மருத்துவம், வேதியியல், அறிவியல் சார்ந்த பணியினை மேற்கொண்டு மிகச் சிறப்பாக வாழ்ந்துவருகின்றனர் என்பதற்கு மிகுதியான சான்றுகளை நம்மால் எடுத்துக்காட்ட இயலும்'' என்று எழுதியதுடன்

''ஆங்கில வழி 'நாற்றுப்பள்ளிகளால் நலமில்லை' என்ற நமது முரசு இதழ் 71-ல் நாம் எழுதிய தலைவாயிற் கட்டுரையின் வாயிலாக இந்நிலைகளை தெளிவுபடுத்தியுள்ளோம். எனவே - தமிழ்ப் பண்பாட்டைச் சீரழிக்கும் ஆங்கில வழி நாற்றுப் பள்ளிகளை உடனடியாகத் தடை செய்யவும். அய்ந்தாம் வகுப்புவரை பயிற்றுமொழி, பாட மொழியாக தமிழே கோலோச்சு வேண்டுமேனவும் ஒரே ஆணையின் வாயிலாக செயற்படுத்தி அன்னைத் தமிழை அரியணை ஏற்றிட வேண்டுமென'' அமைச்சரவைக்கு வேண்டுகோளும் வைத்துள்ளது.

'தினமணி கதிர்' இதழில் (21.7.1996) ஒரு வினா விடைப் பகுதி:

''தமிழ்நாட்டில் உள்ள எல்லாப் பள்ளிகளிலும் 1ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை கட்டாயமாக தமிழைப் பயிற்று மொழியாக்குவதை விட்டுவிட்டு, கடைகளின் பெயர்ப் பலகையைத் தமிழில் எழுதுவதின் மூலம் தமிழ் வளர்ச்சி பெற்று விடுமா?

பெயர்ப் பலகையினால் மட்டும் வளர்ச்சி வந்துவிடாது என்பது உண்மை. அதற்காக அது வேண்டாம் என்பது மடமை. பன்னிரு வகுப்புகளிலும் தமிழைக் கட்டாயப் பயிற்று மொழியாக்குவதும் ஆங்கிலத்தை மொழியாக மட்டும் பயிலச் செய்வதும்தான் நிரந்தரத் தீர்வு'' என்று தினமணி கதிரின் 'மனிதன் பதில்கள்' தெளிவாக அமைந்துள்ளன. இவை போன்ற கருத்துகளே எங்களுக்குப் பெரிதும் ஊக்கந் தந்தவை.

ஒரே ஒரு வினா: இந்தக் கேள்வி கேட்டவர் தந்தை இங்கிலாந்தில் பிறந்தவராக இருக்க மாட்டாரே.

தமிழ்நாட்டுக் காரராகத்தானே இருப்பார். பின் ஏன் பெயர்த்தலைப்பை 'எஸ்' என்று ஆங்கிலத்தில் போட்டுள்ளார்?

தன்னைத் திருத்திக் கொண்டபின் ஊருக்கு அறிவுரை வழங்கத் தொடங்கலாமே!

'செந்தமிழ்ச் சோலை' எனும் இதழ் (1.8.96)

''தமிழ்க்குடிமகனார்க்கு ஒரு பாராட்டு!

தமிழ் படித்தவன் தாழ்ந்தவனாகவும் - ஆங்கிலம் படித்தவன் அறிவாளியாகவும், உயர்ந்தவனாகவும் கருதும் தமிழக சமூக சூழ்நிலையாலும் -

ஆங்கிலம் படித்துவிட்டால் உலகம் முழுவதும் சுற்றி வரலாம் - எல்லா நாடுகளிலும் எளிதில் வேலை வாய்ப்பு பெறலாம் - இந்தியாவின் பிற மாநிலங்களுக்கு போகும் போது ஆங்கிலம் பயன்படும் என்று தவறாக மக்கள் முடிவு செய்வதால் -

பெற்றோர்களிடம் ஆங்கில மோகம் நிறைந்து காணப்படுகிறது. ஆனால் உண்மை நிலை என்ன?

ஆங்கிலப் பள்ளிகளின் தரம் வேறுபடுகிறது மட்டுமல்லாமல் - (ஓரிரு பள்ளிகளைத் தவிர) படிக்கும் மாணவர்கள் வெளிநாட்டவரின்

உரையாடலுக்கோ - மற்றவைகளுக்கு ஈடு கொடுக்க முடியாத நிலையை நாம் காண முடிகிறது.

மேலும் தமிழகத்தில் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாக ஏற்று படிக்கும் கோடிக்கணக்கான மாணவர்களில் எத்தனை பேர் வெளிநாடு அல்லது இந்தியாவின் பிற மாநிலங்களில் வேலை வாய்ப்பு பெறுகிறார்கள் என்றால் 2 விழுக்காடு கூட இல்லை என்கிறது புள்ளி விபரம்.

ஆக தாய்மொழி தமிழைப் புறக்கணித்து விட்டு - ஆங்கில மோகம் கொள்வதால் பெரிய பயன் எதுவும் இல்லை என்றாலும் -

ஏராளமான பொருள் செலவும், நடுத்த வருவாய் உள்ள பெற்றோர்களுக்கு பண கஷ்டமும் ஏற்படுகிறது.

தாய்மொழி தமிழ் வளர்ச்சிக்கும், மக்களிடையே நிலவும் ஆங்கில மோகம் மறையவும், நடுத்தர வருவாய் உடைய பெற்றோர்களின் குழந்தைகளின் கல்வி செலவு குறையவும் ஒரே வழி - ''தமிழில் படித்தவர்களுக்கே வேலை வாய்ப்பில் முன்னுரிமை'' என்று அரசு அறிவிக்க வேண்டுமென எங்களது செந்தமிழ் விரும்பிகள் மாமன்றம் மற்றும் பல்வேறு தமிழ் அமைப்புகளும் கோரி வந்த நீண்ட நாளைய கோரிக்கை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சரை கலந்து அரசாணை வெளியிட இருக்கிறோம் என்ற தமிழ்க்குடிமகனாரின் அறிவிப்பு ஒவ்வொரு தமிழனையும் மகிழ்ச்சிக் கொள்ளச் செய்யும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

தமிழ்க் குடிமகனாரை நெஞ்சாரப் பாராட்டுவதோடு விரைவாக, முழுமையாக செயல்படுத்தி, தமிழன் உயர வழி கண்ட - முயற்சி மேற்கொண்ட உம்மை வரலாறு என்றும் பேசும் என்பது திண்ணமே.

தொடரட்டும், உமது தமிழ் - தமிழர் பணி, என வாழ்த்துகிறோம்.

''தமிழக வணிகர்களுக்கு''

பெயர்ப்பலகைகள் பற்றி - ஓர் வேண்டுகோள்

தணிப்பரிதாம் துயரமது
தமிழ்நாட்டின் தமிழ்த் தெருவில்
தமிழ் தான் இல்லை -

- பாவேந்தர் பாரதிதாசன்

தமிழக வீதிகளில் காணப்படும் பெயர்ப்பலகைகளை பார்க்கும்போது - இது தமிழ்நாடா? அல்லது ஆங்கில குட்டிநாடோ? என்று துன்பம் ஏற்படுகிறது.

உலக நாடுகளிலும், இந்தியாவின் பிற மாநிலங்களிலும் அவரவர் இல்லங்களிலும் வணிக நிறுவனங்களிலும் தாய்மொழியில் எழுதியிருக்கும்போது நாம் மட்டும் ஏன் ஆங்கிலத்தில் எழுத வேண்டும்?

அதுவும் பெரிய அளவில் ஆங்கிலத்தில் பெயர்ப்பலகை வைத்துவிட்டு கண்ணுக்கு தெரியாத அளவில் - மிக மிக சிறிய அளவில் போனால் போகட்டும் என்பது போல் தமிழில் எழுதி வைத்திருக்கும் வணிகர்களே!

தாய்மொழி தமிழை புறக்கணித்துவிட்டு, மாற்றாந்தாய்க்கு மகுடம் சூட்டுவது சரியா?

தயவுசெய்து எண்ணி பாருங்கள். தமிழகத்தில் 90% விழுக்காடு தமிழர்களே - வணிகர்கள், வணிகம் செய்யவரும் 90% விழுக்காடு மக்களும் தமிழர்களே!

வணிகர்களும் தமிழர்கள் - வணிகம் செய்ய வருபவர்களும் தமிழர்கள், பின் யாருக்காக ஆங்கிலப் பெயர்ப்பலகை?

பிற மாநிலங்களுக்கு சென்று பாருங்கள். அவர்களது தாய்மொழியைத் தவிர ஆங்கிலத்தை பார்க்க முடியுமா? என்று -

மேலும் அமைச்சர் தமிழ்க்குடிமகனார் - அவர்கள் பெயர்ப் பலகையை பற்றி அறிவித்ததை - தமிழ் அடுத்து ஆங்கிலம் பின் அவர்களது தாய்மொழி என்ற அறிவிப்பினை மறுபரிசீலனை செய்ய வேண்டுகிறோம்.

மேலும் பெயர்ப்பலகைகள் மாற்ற ஓராண்டு அவகாசம் தந்ததையும், மறுபரிசீலனை செய்ய வேண்டுகிறோம். ஏனெனில் புதிதாக எழுதுபவர்கள்கூட இன்னும் ஓராண்டு அவகாசம் இருக்கிறது என்ற நினைப்பில் முன்போலவே ஆங்கிலத்தில் எழுதுகிறார்கள். மேலும்,

அரசு ஆணை ஒருபுறம் இருந்தாலும் -

தமிழக வணிகர்களே - நாம் தமிழன் - நம்மொழி தமிழ் - என்ற உணர்வோடு அன்னைத் தமிழை - பெயர்ப்பலகைகளில் ஒளிவிடச் செய்யுங்கள்.

மேலும் வணிக கடைகளில் - நிறுவன கண்ணாடி கதவுகளில் PUSH - PULL என்று போட்டிருக்கிறார்கள்.

அந்த கதவுகளை இழுத்து உள்ளே வருபவர்கள் 90% விழுக்காடு தமிழர்களே! ஆகவே அதை தள்ளு - இழு என தயவு செய்து மாற்றுங்கள்.

தமிழக வணிகர்களே! செய்வீர்களா?''

என்று ஒரு கட்டுரையை வெளியிட்டிருந்தது.

தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்திருப்பதுடன் அரசு என்ன செய்யவேண்டும் என்பதையும் தெளிவு படுத்தியுள்ளார்கள்.

முனைவர் ச. சாம்பசிவம் அவர்களை ஆசிரியராகக் கொண்ட தமிழ் மாருதம் (செப்டம்பர் 1996) இதழ் ஒரு பெரும் பணியையே செய்துவருகிறது.

''தமிழ் வழிக் கல்வியே நமது பேச்சு
அஃதின்றேல் வேறென்ன பேச்சு''

கொட்டை எழுத்தில் அமைந்துள்ள இந்த வாசகமே நம்மைத் தூக்கி நிறுத்துகிறது.

16.9.96 'தினமணி' இதழில் முனைவர் மு. ஆனந்த கிருட்டிணன் 'தமிழ்வழி உயர் கல்வி' எனும் தலைப்பில் கட்டுரை வரைந்திருந்தார். அந்தக் கட்டுரை பற்றி ஆசிரியர்க்கு வந்த மடல்கள் 20.9.96 'தினமணி' இதழில் இடம் பெற்றிருந்தன. அவற்றுள் சில:

ஆங்கில வழிக் கல்வி மீது மோகம் ஏன்?

''மு. ஆனந்த கிருஷ்ணன் எழுதிய 'தமிழ்வழி உயர் கல்வி; துணிவே துணை' கட்டுரை (16.9.96) மிகத் தெளிவாகவும் நடைமுறை கஷ்டங்களைப் புரிந்து கொண்டதாகவும் இருந்தது. ஆங்கில வழியில் கற்றல் என்பது சாதாரண மற்றும் நடுத்தர மக்களுக்கு மிகவும் கடினம். இருப்பினும் அவர்கள் தங்களது பிள்ளைகளுக்கு ஆங்கில வழிக் கல்வியைத் தேடி ஓடுவது ஏன்?

உயர் கல்வி சிரமமின்றி முன்னேறும் விருப்பம். உயர் கல்விக்குத் தேவையான புத்தகங்கள் தாய்மொழியில் இல்லாமை. நாளுக்கு நாள் வளர்ந்துவரும் அறிவியல் தொழில்நுட்ப அறிவை ஆங்கில நூல்கள் மற்றும் நாளேடுகளில் மட்டுமே பெற முடியும் என்ற நிலை.

வேலைவாய்ப்புப் பிரச்சினை. தாய்மொழியில் கற்பவர்களுக்கு தமிழகத்திலேயே வேலைவாய்ப்பு பிரசாகசமாக உள்ளது என்ற உத்தரவாதத்தை

யார் அளிப்பது? இந்த நிலையில் வெளி மாநிலங்களில், வெளி நாடுகளில் வேலை தேடிச் செல்ல ஆங்கில அறிவு தேவைப்படுகிறது. எனவேதான் எல்லோரும் ஆங்கிலவழி உயர் கல்வியை நாடுகிறார்கள்.

இந்த நிலையை மாற்றி, கட்டுரையாளர் கூறியிருப்பதுபோல், தமிழில் பயிலும் மாணவர்கள், ஆங்கிலத்தையும் - தனியாக பள்ளி நிலையில் தொடங்கி மிக உயர்ந்த நிலை வரை - சிறந்த முறையில் தொடர்ந்து பயில, தேவையான வசதிகளைச் செய்துதர வேண்டும்.

ஒரு மாணவன் பத்தாம் வகுப்பு அல்லது பிளஸ் டூ முடித்து வெளியில் வரும்போது ஆங்கிலத்தில் பிறருடன் சரளமாகப் பேச, எழுதும் அளவுக்கும் ஆங்கில நாளிதழ்களைப் படித்துப் புரிந்து கொள்ளும் நிலைக்கும் அவர்களைத் தயார் செய்தால் ஆங்கில வழிக் கல்வி மோகம் தானாகக் குறையும். அந்தத் தன்னம்பிக்கையையும் தரமான ஆங்கில அறிவையும் தமிழ் வழி பயிலும் மாணவர்களுக்குப் போதிக்க ஆசிரியர்களை தயார் செய்ய வேண்டும். அதற்கு அரசாங்கம் திட்டம் தீட்டி ஆசிரியர்களுக்குப் பயிற்சி கொடுத்து, குறிப்பிட்ட காலத்துக்குள் செயல்படுத்த வேண்டும். அப்படிச் செய்தால் தாய்மொழியில் கல்வி பயில அனைவரும் முன்வருவார்கள் - எம். ராமலிங்கம், பாண்டிச்சேரி -4.''

''தமிழ்வழி உயர் கல்வி: துணிவே துணை'' கட்டுரை (16.9.96) கண்டேன். ஆங்கிலவழிக் கல்வியாக இருப்பினும், நகர்ப்புறக் கல்லூரிகள் சிலவற்றைத் தவிர்த்து, இதர அனைத்துக் கல்லூரி மாணவர்களும் (80 சதவீத மாணவர்கள் பிரிவு) தேர்வுகளைத் தமிழிலேயே எழுதுகின்றனர். நல்ல மதிப்பெண்களைப் பெற்று தேர்ச்சியும் அடைகின்றனர். இவர்கள் பயன்படுத்தும் புத்தகங்கள் யாவும் எளிய வழக்கமொழியில் எழுதப்பட்டவையே. படிப்பதில் எவ்வித சிரமமும் ஏற்படுவதில்லை.

மேல்நிலை வகுப்பு வரை, ஏற்கெனவே அனைத்துத் துறைக்கான அடிப்படைக் கலைச்சொற்கள் இருப்பதால், உயர்கல்விக்குத் தேவைப்படும் மேற்கொண்டு சில நூறு சொற்களுக்கு மொழியாக்கம் செய்வதில் அவ்வளவு சிரமம் ஏற்படாது. - த. கண்ணன், பரமத்தி.''

''ஒரு மனிதன் பல்வேறு மொழிகளைக் கற்றாலும் அவனது அடிமனம் ஆய்வு செய்வது அவனது தாய்மொழியில்தான். தமிழகத்தில் பரவியுள்ள ஆங்கில மோகத்தால் தமிழர்களின் அறிவு கூர்மழுங்கிப் போய்விட்டது. இது தமிழினத்துக்கே அவமானத்தையும் அழிவையும் தரும் நிலையாகும்.

''தமிழகக் கல்விக் கூடங்களில் அனைத்து நிலைகளிலும் பயிற்று மொழி தமிழே'' என்று அரசு சட்டமியற்றினால்தான் வருங்காலத் தமிழினம் மூளை வறட்சிக்கு உள்ளாவதைத் தடுத்து சாதனையாளர்கள் உருவாக வழியேற்படும். - ஆ. அரசு, தஞ்சாவூர்-1.''

''பாடத்துக்கு, செய்யுளுக்கு கொடுக்கின்ற முக்கியத்துவத்தை இலக்கணத்துக்கும் வழங்க வேண்டும். இன்னும் சொல்லப்போனால் இலக்கணத்துக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும்.

மூன்றாவது வகுப்பில் எதற்கு இலக்கணம்? பின்னால் படித்துக் கொள்வார்கள் என அலட்சியப்படுத்தவிடக்கூடாது. காரணம், இளம்வயதில் இலக்கணத்தை முறையாகப் படித்தால்தான் மொழி சிறப்புப் பெறும். உச்சரிப்பு தெளிவாகும். ''மொழியைத் திருத்தமாகப் பேசவும் எழுதவும் பயன்படும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும் - பாரதிவாணர் சிவா, புதுச்சேரி - 4''

இவற்றை இங்கு தருவதற்குக் காரணம் தமிழ்நாட்டில் பல தரப்பினரும் எந்தக் கோணத்தில் சிந்திக்கின்றனர் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான்.

1996ஆம் ஆண்டில் நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்னும் வந்த பின்னும் சில இதழ்கள் எத்தகைய கருத்துகளை வெளியிட்டார்கள் என்பதனை இங்கே தொகுத்துத் தந்துள்ளோம். எப்படியும் இந்த ஆட்சியில் 'தமிழ்வழிக் கல்வி' வந்துவிடும் எனும் பெரும் எதிர்பார்ப்பு உள்ளதையே இந்த இதழ்கள் காட்டுகின்றன.

சிலவற்றைச் சிந்தித்து செயற்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய வேண்டியவர் கல்வி அமைச்சர் பேரா. க. அன்பழகன் ஆவார். விரும்பி எழுதும் - வந்துவிடும் என்று நம்பி எழுதும் இதழ்கள் இதனையும் மனத்திற் கொள்ளவேண்டும் என்பதே என் வேண்டுகோள்.

★ ★ ★

இயல் இருபத்தொன்பது - ஆ

இதழ்களின் சார்புக் கருத்துகள்
1997

7.1.97 'இந்து' இதழில் அன்றைய சட்டப் பேரவைத் தலைவர் பொ.தி.ரா. பழனிவேல்ராசன் பேசிய செய்தி இது. அதனை அப்படியே தருகிறேன். அரசு, ஒரு கொள்கையை முழு மூச்சாக எடுத்து செயல்படும் போது, இவரைப்போன்றவர்கள் எதைப் பற்றியும் கவலைப்படாமலும், கொள்கைக்கு ஊனம் விளைவிக்கும் வகையிலும் பேசுவதைக் காணலாம்.

''He stressed the importance of the two-language formula, i.e. Tamil and English, advocated and promoted by Annadurai. He said that people, even in the lowest strata of society, wanted to see their children educated in English medium schools, a fact which no one could deny.

Drawing attention to the recent 'Tamil only' slogan in the State and the controversies surrounding it, he claimed he was not against promotion of Tamil. Being the mother tongue of the Tamil Community, the language with its rich tradition had to be developed and there were no two views about it. But at the same time, the Government should ensure pucca Tamil curriculum for all professional courses and Tamil educated students should be given preference for employment he insisted.

He said, "I am talking about practical problems and everyone knows that English plays the role of a global language." He shrugged off the criticism by some who were accusing him of being an anti-Tamil. He denied there was any 'cold war' between him and Mr. Tamilkudimagan, Minister for Tamil Language and Culture."

3.2.97 'தினமணி'யில் வந்த செய்தி இது.

ஈரோட்டில் இந்திய குழந்தைகள் மருத்துவர் சங்கமும் சித்தார்த்தா பள்ளியும் இணைந்து நடத்திய கருத்தரங்கின் மிக முக்கியமான கருத்துகள்.

மருத்துவர் இரா. செல்வன் கூறியது.

''தாய்மொழியில் தான் மழலைக் கல்வி இருக்க வேண்டும். வீட்டிலும் பள்ளியிலும் மொழி வேறுவேறாக இருந்தால் மனப்பதிவு குறைவாக இருக்கும்'' என்கிறார் அவர்.

சென்னை மா.ச. சுவாமிநாதன் ஆய்வு மையம் சார்ந்த திருவாட்டி மீனா சுவாமிநாதன் கருத்து இது.

''6 வயதில்தான் குழந்தைகள் கற்றுக் கொள்ள வேண்டும்; பிற நாடுகளிலெல்லாம் அப்படித்தான். குழந்தையின் வளர்ச்சி இயல்பான முறையில் இருக்க வேண்டும் வெவ்வேறு அனுபவங்கள் மூலம். அறிவு வளர்வதுதான் வழி. பள்ளிக்கு அனுப்ப வேண்டாம் எனக் கூறவில்லை. குழந்தைகளுக்கு அனுபவங்கள் தேவை. குழந்தைகளின் படைப்புத் திறனை அடக்கிவைத்திருந்தால், பாடப் புத்தகங்களிலேயே முடங்கிப் போய்விடுவார்கள். குழந்தைகளை அபாயமான ஒரு நிலைக்குக் கொண்டுவந்து கொண்டிருக்கிறோம்'' என்று அடித்துச் சொல்கிறார் அவர் (LKG, UKGக்கள் கவனிக்கவும்)

காந்திகிராமம் இலட்சுமி கல்வியியல் கல்லூரி முதல்வர் முனைவர் கோ. பங்கஜம் கூறுகிறார்:

''மொழியைத் தாயிடமிருந்துதான் குழந்தை கற்றுக் கெள்ள வேண்டும்''

ஆனால் தாயோ, 3 அகவையிலேயே தன் குழந்தையை ஆயாவிடத்தில் தள்ளி விடுகிறார்.

உளவியல் அடிப்படையிலான இவர்களது கருத்துகள் கவனத்துக்குரியவை.

1997 மார்ச்சில் தரப்பட்ட வரவு செலவுத் திட்ட அறிக்கையை வரவேற்று 'தமிழன் எக்ஸ்பிரஸ்' .இதழ் ஓர் ஆசிரியுரை எழுதியுள்ளது. ஒவ்வொரு வரியும் நூற்றுக்கு நூறு உண்மை. ஆசிரியுரை இது:

''பள்ளிகளில் ஐந்தாவது வகுப்பு வரை தமிழ்மொழி கட்டாயப் பாடமாக்கப்பட்டுள்ளது. இந்த உத்தரவை தாய்மொழியை நேசிக்கும் தமிழர்கள் அனைவரும் உளமார வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை.

மொழிப்பற்று என்பது வேறு; மொழி வெறி என்பது வேறு. இந்தியாவில் வேறெந்த மாநிலத்திலும் இல்லாத அளவு, தமிழ்நாட்டில்தான் தாய் மொழியில் பேசுவது இரண்டாம் தரமாகக் கருதப்படுகிறது. தாங்கள் பெற்ற

பிள்ளைகள் பாரதி பாடலைப் பாடுவதைவிட, 'பாபா பிளாக் ஷீப்' பாடுவதையே தமிழ்த்தாய்கள் விரும்புகிறார்கள்.

இந்த நாட்டில் பல்வேறு மொழிகள் பேசப்படுவதாலும், உலகத் தரத்துக்கு கல்வியறிவு உயரவேண்டிய அவசியத்தாலும் ஆங்கிலம் படிப்பதற்கு யாரும் தடை சொல்லப் போவதில்லை.

ஆனால், தமிழ் தெரியாமலிருப்பதே கௌரவம் என்னும் அர்த்தமற்ற அழுத்தம் இங்கே நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டிருக்கிறது. இதே நிலை நீடித்தால், 'மெல்லத் தமிழ் இனிச் சாகும்' என்ற கொடுமை நிகழ்ந்துவிடும். அப்படியொரு அவல நிலை வந்தால் இடைப்பட்ட காலத்தில் சொந்த மண் இன்றி அலைந்த யூதர்களைப் போல், மொழியின்றி அலையும் கூட்டமாகத் தமிழர்கள் மாறிவிடும் அபாயம் உண்டு. தாய்மொழி தெரியாத மனிதன் முழு மனிதன் அல்ல. இவற்றையெல்லாம் மனதில் கொண்டு, ஐந்தாவது வகுப்பு வரை தமிழைக் கட்டாயப் பாடமாக்கியிருக்கிறார் முதல்வர். ஏற்கனவே ஒரு தலைமுறை, 'நர்சரி' கலாசாரத்தால் தமிழைத் தள்ளி வைத்துவிட்டது. இனியும் அது நிகழாதிருக்க வேண்டும்.

தான் இட்ட உத்தரவு சரிவர நிறைவேற்றப்படுகிறதா என்பதையும் கண்காணித்து, 'முத்தமிழ் அறிஞர்' என்று அழைக்கப்படுவதை தக்க வைத்துக் கொள்வார் முதல்வர் என்று எதிர்பார்க்கிறோம்''

'தினமணி'யில் அதே நாளில் தமிழ்நாடு அரசு கல்லூரி ஆசிரியர்கள் மாநாட்டில் பேசப்பட்ட செய்திகளும் நம் கவனத்துக்குரியவை. தனியார் கல்லூரிகள் வியாபாரக் கூடங்கள் ஆகிவிட்டன என்கிறார் துணைச் செயலாளர் ப.க. பொன்னுசாமி. அதில் நிறைவேற்றப்பட்ட முகாமையான தீர்மானம் இது: ''அனைத்துப் பட்டப் படிப்பிலும் தமிழ்வழிக் கல்விக்கட்டாயமாக்க வேண்டும்'' என்பது அது.

இதற்கிடையில் சென்னை மாநகராட்சிப் பள்ளிகளில் அடுத்த ஆண்டு முதல் தமிழ்வழியிலான மழலையர் பள்ளிகளைத் தொடங்கிட ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இதனை வரவேற்று தினமணி (28.5.1997) ஆசிரியவுரையில் இப்படி எழுதியது:

''மாநகராட்சிப் பள்ளிகளில் அடுத்த மாதம் முதல் தமிழைப் போதனா மொழியாகக் கொண்ட மழலையர் வகுப்புகள் துவங்க இருப்பது முன்னேற்றமான நடவடிக்கையாகும். ஏழைப் பிரிவினர் அதிகக் கட்டணம் செலுத்தி தனியார் மழலையர் பள்ளிகளில் தங்கள் பிள்ளைகளைச் சேர்க்க வேண்டிய கட்டாயம் தவிர்க்கப்படும். அறிவியல்கூடம், நூலகம்,

உணவுக்கூடம், கலையரங்கம், விளையாட்டுச் சாதனங்கள் என பல்வேறு சிறப்பு வசதிகளைக் கொண்ட மாநகராட்சி மழலையர் பள்ளிகள் அதிக எண்ணிக்கையில் சிறார்களை ஈர்க்கும் என்பதில் சந்தேகமில்லை'' என்கிறது அது.

எனவே, ஐந்தாம் வகுப்புவரை தமிழ் கட்டாயப் பாடம் எனும் அரசின் அறிவிப்பு; தாய்த்தமிழ்ப் பள்ளிகள் தமிழ்நாட்டில் அதிகம் தொடங்கப் படும் சூழல்கள்; மாநகராட்சிகளே தமிழ்வழி மழலையர் பள்ளியை அமைத்து நடத்தும் முயற்சி - என்று சரியான திசையில் தமிழை நோக்கி - தமிழ் வழிக்கல்வி நோக்கி இந்த அரசு நடைபோட்டது என்பதை உணரமுடியும்.

'தினமணி' இதழ் தி. சிகாமணி ஒரு கட்டுரை எழுதியிருந்தார். இப்போது எழுந்துள்ள சூழலை அவர் படம் பிடித்துக் காட்டியுள்ளார். அவரது பார்வை மிகவும் தெளிவாக உள்ளது என்பது என் கருத்து. கட்டம் கட்டி எழுதும் அவர் கூறுவது:

''தொடர்பு மொழி, பயிற்று மொழியாக ஆங்கிலம் நீடித்தால் தமிழ் வளர்ச்சி என்பது முயல் கொம்பே என்று தமிழ் ஆர்வலர்கள் உரத்துப் பேச ஆரம்பித்துள்ளனர். ஆங்கிலத்தை விரட்டி விட்டால் இந்தி வசதியாக வந்து தமிழகத்தில் உட்கார்ந்து விடும் என்ற பழைய பல்லவியை ஆங்கில மோகிகள் பாட ஆரம்பித்துள்ளனர். அரசியல் தேவைக்கும் உணர்ச்சித் தூண்டலுக்கும் மொழியைப் பயன்படுத்திய அரசியல்வாதிகள் தமிழை ஆராதனைக்குரிய பொருளாக ஆக்கி விட்டனர். அறிவியல், தொழில்நுட்பம் தமிழில் வளரவும் பயன்பாட்டு மொழியாக அது மாறவும் என்ன வழி? உலகம், கிராமமாகச் சுருங்கி வரும் காலத்தில் ஆங்கிலத்தைப் புறக்கணிக்க முடியுமா என்ற சர்ச்சை தமிழகத்தில் தீவிரமடைந்துள்ளது'' என்கிறார்.

மேலும் அவர் கூறுவது:

''தமிழ் ஆர்வலர்கள் காலம் கடந்து ஆங்கிலத்திற்கு எதிரான போர்க்கொடியை உயர்த்தியுள்ளனர். ஆட்சி மொழி, பயிற்று மொழி, நீதிமன்ற மொழியாகத் தமிழ் இருக்க வேண்டும் என்ற கோரிக்கையை அவர்கள் முன்வைக்கின்றனர். அரசியல் கட்சிகளும் இதை ஆதரிக்கின்றன. தமிழ் ஆட்சி மொழி என்று 1957-ம் ஆண்டே உத்தரவு பிறப்பிக்கப்பட்ட போதிலும் அது இன்னமும் முழுமையாக நடைமுறைக்கு வரவில்லை.

கடந்த ஆண்டு தி.மு.க. ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பின்னர் தமிழை ஆட்சி மொழியாக்கும் முயற்சி தீவிரமடைந்தது. தலைமைச் செயலகத்தில் 500 ஆங்கிலத் தட்டச்சுப் பொறிகள், தமிழ் தட்டச்சுப் பொறிகளாக மாற்றப்

பட்டுள்ளன. புதிதாக 500 தமிழ் தட்டச்சுப் பொறிகள் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் வைக்கப்பட உள்ளன.

இப்பணிகளைத் துரிதப்படுத்தி வரும் தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன், "ஆட்சி மொழியாகத் தமிழ் பயன்பாட்டுக்கு வராமல் போனதற்கு அதிகாரிகள் ஒத்துழைப்பு இல்லை என்ற காரணத்தைக் கூறுகிறார். அதிகாரிகள் மட்டுமின்றி, இதுவரை ஆட்சியில் இருந்தவர்களும் முழுமனதுடன் முயற்சித்து இருந்தால் ஆட்சி மொழி என்ற அந்தஸ்தைத் தமிழ் எப்போதோ பெற்றிருக்கும் என்பதுதான் உண்மை நிலை.

தமிழ் வழிக் கல்விக்காகத் துவக்கத்தில் நடந்த முயற்சிகள் பின்னர் தொடரவில்லை. தமிழ்வழிப் பட்டம், தமிழ் இலக்கியப் பட்டம் படிக்க மாணவர்கள் முன்வருவது அருகி விட்டது. தமிழ் ஆசிரியர்கள், தமிழ் இலக்கியம் படிக்க மாணவர்களைத் தேடிப்பிடித்துக் கொண்டு வரும் அவல நிலை உருவாகியுள்ளது.

தமிழ்நாட்டில் பெரும்பாலான பள்ளிகளில் பயிற்று மொழி இன்னமும் தமிழாகவே உள்ளது. ஆனால் பள்ளியைத் தாண்டி விட்டால் உயர்கல்வி ஆங்கிலத்தில் பயிற்றுவிக்கப்படுகிறது. திடீரென்று ஆங்கில வழியில் படிப்பதை விட, பள்ளி முதலே ஆங்கில வழியில் படிக்கும் வழக்கம் உருவானது. இதன் காரணமாகவே ஆங்கில வழிக் கல்வி தரும் பள்ளிகள் புற்றீசல் போல பெருகின.

வாழ்க்கைத் தேவை, பயன்பாட்டு அடிப்படையில் தமிழகத்தில் உள்ள மேல்தட்டு மக்கள் ஆங்கிலத்தைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு விட்டனர். இவர்கள் வழியில் ஏழை, எளிய கிராமத்து மக்களும் ஆங்கிலக் கல்வியே உயர்வானது என்று எண்ணத் தலைப்பட்டனர். இதன் விளைவு தமிழகத்தில் ஊருக்கு இரண்டு நர்சரிப் பள்ளிகளும் தோன்றியுள்ளன.

தமிழக மேன்மையை மேடைக்கு மேடை முழங்கிய அரசியல்வாதிகள் கூட, தங்கள் வாரிசுகளை ஆங்கில வழியில் படிக்க வைத்தனர். இந்த இரட்டை வேடத்தைச் சுட்டிக் காட்டி, ஆங்கில ஆதரவாளர்கள் ஆங்கிலத்துக்கு மேலும் வலு சேர்த்தனர்.

சமீபத்தில் முன்னாள் துணைப் பிரதமர் தேவிலால் ஆங்கிலத்திற்கு எதிராக இயக்கம் நடத்தினார். கழுதை மீது ஆங்கிலம் என்று எழுதிப் போராட்டத்தை நடத்தினார். இப்போராட்டத்தைக் கண்டித்து மத்திய அமைச்சர் முரசொலி மாறன் முப்பெரும் விழாவில் பேசினார்.

''ஆட்சி மொழிப்பட்டியலிலிருந்து ஆங்கிலத்தை அகற்ற தி.மு.க என்றைக்கும் உடன்படாது. ஆங்கிலம் அகற்றப்பட்டால் இந்தியாவின் ஒற்றுமை ஒருமைப்பாடு குலைந்து போகும். ஆங்கிலத்தை அகற்றி விட்டால் நாம் மறுபடியும் காட்டுமிராண்டித் தனத்துக்கு, 19-வது நூற்றாண்டுக்குப் போய் விடுவோம். ஆங்கிலத்தை அகற்றி விட்டால் தொழில் வளராது, வேலை வாய்ப்பு வளராது. இதையே தமிழகத்தின் ஆட்சி மொழித்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகனுக்கும் சொல்லிக் கொள்கிறேன். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் இருக்க வேண்டும். அதே நேரத்தில் ஆங்கிலமும் இருக்க வேண்டும்.'' என்றார்.

தமிழ்க்குடிமகனும் ஆங்கில எதிர்ப்பாளர் என்ற கருத்து மாறனின் பேச்சில் தொனிக்கிறது. ஆனால், தமிழ்க்குடிமகனோ, ''நான் ஆங்கில எதிர்ப்பாளர் அல்ல. தி.மு.க-வின் இருமொழிக் கொள்கையே என்னுடைய கொள்கை'' என்கிறார். விளம்பரப் பலகைகளைத் தமிழில் மாற்றுவதால் எல்லாம் தமிழ் வளர்ச்சி ஏற்பட்டு விடாது என்று விமர்சிப்பவர்களை நோக்கி தமிழ் வளர்ச்சி பற்றி வாதம் செய்யத் தயாரா என்று அறைகூவல் விடுக்கிறார்.

தமிழகத்தில் படிக்கும் அனைவரும் ஐந்தாம் வகுப்பு வரை தமிழைக் கற்க வேண்டும் என்ற உத்தரவு இந்த ஆட்சியில் வந்துள்ளது. வரவேற்கத்தக்க இவ்வுத்தரவும் தமிழ் வளர்ச்சிக்குப் பெரிய துணை புரிந்து விடாது.

இதே சமயத்தில் தமிழ்வழிக் கல்வி ஆதரவாளர்களின் நியாயமான கோரிக்கையை யாரும் புறந்தள்ள முடியாது. ''ஆங்கில வழிக் கல்வி நீடிக்க வேண்டும் என்று கூறுபவர்கள் சுயநலவாதிகள். ஒரு சிலருக்கே வெளிநாடுகளில் வேலை கிடைக்கிறது. இந்தச் சிலரின் வசதி வாய்ப்புக்காக மற்றவர்களும் ஆங்கிலத்திலேயே படிக்க வேண்டும் என்று கூறுவது ஜனநாயகமாகாது. கடைக் கோடித் தமிழனும் கல்வியறிவு பெற வேண்டும் என்று எண்ணுபவர்கள் தமிழ் வழிக் கல்வியையே ஆதரிப்பார்கள். தாய்மொழியில் அறிவியல், தொழில் நுட்பம் படித்தால்தான் சுயசிந்தனை வளரும். அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கும் அதுவே அடிப்படையாக அமையும் என்று அவர்கள் கூறுகின்றனர். இக்கருத்தைப் பலரும் ஏற்கின்றனர்.

இச்சூழலில் தமிழ் வழிக் கல்வியை உத்தரவு மூலம் மக்கள் மீது திணிக்க முடியாது. தமிழில் பயின்றவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை போன்ற சலுகைகள் அளித்தால் அதற்கு மக்கள் ஆதரவு பெருகும்.

தமிழ் வழியில் மேற்பட்டப் படிப்பு, தொழில் படிப்பு படிக்கும் வாய்ப்பு ஏற்படுத்தப்படுவது அவசியம். யாழ்ப்பாணத்தில் உயர்கல்வி நூல்கள் தமிழில் உருவாக்கப்பட்டிருப்பதைப் பின்பற்றி, போர்க்கால அடிப்படையில் நூல்களை

உருவாக்க வேண்டும். இக்காரியத்திற்கு திடீரென்று நிதி ஒதுக்கீடு செய்ய முடியாவிட்டால் தமிழ் வளர்ச்சியில் அக்கறையுடையவர்களிடமிருந்து நன்கொடையை அரசு கோரிப் பெறலாம். அரியணையில் தமிழை அமர்த்த அனைவரும் பாடுபட முன்வர வேண்டும்.

தொடர்பு மொழியாக ஆங்கிலத்தையோ இந்தியையோ பயன்படுத்த வேண்டியதில்லை. உலக அளவில் தொடர்பு மொழியாக வளர்ந்து வரும் ஆங்கிலத்தை ஒரு பாடமாகப் படிக்க அனுமதித்தால் போதும் என்ற கருத்தைப் பரப்ப வேண்டும். அனைத்து தேசிய மொழிகளையும் ஆட்சி மொழியாக ஆக்குவதே பிரச்சினைக்குத் தீர்வாக அமையும். தேசிய மொழிகளுக்கிடையே சமத்துவத்தை ஏற்படுத்துவது நாட்டு ஒற்றுமைக்கு வலுச் சேர்க்கும். இதைச் செய்யத் தவறுவது வரலாற்றுப் பிழையில் போய் முடியும்.''

நடுவண் அரசில் அமைச்சராக இருக்கும் முரசொலி மாறனுக்கு, தி.மு.க.வில் நான் ஒருவன் தான் எதிரி. அடிக்கடி என்னைப் பற்றிப் பேசாவிட்டால் அவருக்குத் தூக்கம் வாராது. தமிழ்நாட்டு மக்கள் இதனை மனத்தில் வைத்துக் கொள்ளுங்கள். தமிழ் வழிக் கல்வியில் நமது அணுகுமுறைகள் மிகத் தெளிவாக இருக்கும் போது எதற்காக இந்தத் திசை திருப்பும் பேச்சு? அதுவும் திராவிட இயக்க வரலாறு எழுதிய முரசொலி மாறனிடத்தில் ஏன் இந்தக் கருத்து? மாநில சுயாட்சிக்கு ஆசைப்படும் முரசொலி மாறன் சுயாட்சி வாங்கி எ.ன்ன செய்யப் போகிறார்? யாரும் தமிழே பேசக் கூடாது என்று ஆணை பிறப்பிக்கப் போகிறாரா? வேறு இடத்தில் இதுபற்றி மறுபடியும் பார்ப்போம்.

16.2.97 'தினமணிகதிரில் ஒரு வினா விடை :

''அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாட ஏற்பாடாகியுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார். வரவேற்கத்தக்கதே. ஆனால் அனைத்துப் பள்ளிகளிலும் இனிமேல் தமிழ்தான் பயிற்று மொழி என்று கூற அஞ்சுகிறார்களே, ஏன்? தனியார் ஆங்கிலப் பள்ளி உரிமையாளர்களைக் கண்டா அஞ்சுகிறார்கள்?

மனிதனுக்குக்கூட தைரியமில்லையா? - எஸ். சுப்ரமணியம், சென்னை-24.

தமிழ்நாட்டில் தமிழில்தான் கல்வி பயிற்றுவிக்கப்படும். ஆங்கிலம் முதல் மராத்தி வரை வேறு எந்த மொழியையும் மொழிப்பாடமாக மட்டுமே படிக்கலாம் என்று அறிவிப்பது அரசியல் சட்டத்துக்கு உட்பட்டதுதான். எனவே இவ்வாறு செய்வதில் எந்த சிக்கலும் இல்லை. ஆனால் ஆட்சியிலிருப்பவர்கள்

யாராக இருந்தாலும் இத்தகைய நடவடிக்கையை மேற்கொள்ளப் பயப்படுகிறார்கள். இப்படித் தொடர்ந்து பயந்து வந்ததன் விளைவாக இப்போது தமிழ்நாட்டில் தமிழை ஒரு மொழியாகவாவது பள்ளிகளில் கற்றுக் கொடுங்கள் என்று கெஞ்ச வேண்டிய கேவலமான நிலை ஏற்பட்டுவிட்டது.''

இதில் வேடிக்கை என்னவென்றால் முன்பு வினாத் தொடுத்த அதே சுப்ரமணியம்தான் கேட்கிறார். அதே 'எஸ்' சுப்ரமணியம் விடையில், தமிழ்நாட்டில் தமிழில்தான் கல்வி பயிற்றுவிக்கப்படும் என்று அறிவிப்பது அரசியல் சட்டத்துக்கு உட்பட்டதுதான் என்கிறார் மனிதன். ஆனால் சென்னை உயர்நீதிமன்றம் இது தொடர்பாகப் பிறப்பித்த ஆணையை இலதாக்கி (இரத்து) விட்டதே....ஏன்?

அரசியல் சட்டத்துக்கு உட்பட்ட ஒன்றை உயர்நீதிமன்றம் எப்படி ஒழிக்க முன்வந்தது?

சிந்தியுங்கள்.

'ஆசிரியர் கூட்டணி' எனும் இதழ் தமிழ்நாட்டு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணியால் நடத்தப் பெறுகின்றது. தமிழ்வழிக் கல்வி, தமிழ் வளர்ச்சிபற்றிய தெளிவான தீர்மானங்களை நிறைவேற்றி வெளியிட்டுள்ளது அவற்றுள் மூன்று

1. ''தமிழகத்தின் அனைத்துப் படிப்பு நிலைகளிலும் தமிழகத்தில் உள்ள அனைத்துக் கல்வி நிலையங்கள் - நிறுவனங்களில் (மொழிவழி சிறுபான்மை உள்பட) தமிழ்மொழிப் படிப்பு ''கட்டாய பாடம்'' என ஆக்கப்பட வேண்டும்.

2. இந்திய அரசியல் சட்டத்தில் உத்திரவாதம் தரப்பட்ட 1 முதல் 8 வகுப்பு வரையிலான இலவச கட்டாயக் கல்வியை நடைமுறைப்படுத்திட தமிழகத்தில் 1 முதல் 8 வகுப்புகள் வரை உள்ள படிப்புக்கான அனைத்துக் கல்வி நிலையங்களிலும் தமிழ் மட்டுமே பயிற்றுமொழி ஆக்கப்பட்டு அவற்றிற்கு மட்டுமே நடத்த அனுமதியும் - அங்கீகாரமும் தரப்பட வேண்டும். ஆங்கில நர்சரி (மழலையர்) பள்ளிகளுக்கு இதுவரை அளிக்கப்பட்ட தொடக்க நடுநிலைப்பள்ளிகளில் தமிழ் வழி நர்சரி (மழலையர்) பள்ளிகளை தொடங்கி நடத்திட அனுமதி மற்றும் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும்.

3. தமிழகத்தில் உள்ள அனைத்து உயர்நிலைப்பள்ளிகள் - மேல்நிலைப்பள்ளிகள் கல்லூரிகள் மற்றும் தொழில் நுட்ப நிறுவனங்களில் தமிழ்மொழி வழிக்கற்றல் முறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.''

ஆசிரியர் அமைப்புகள் அனைத்துமே தமிழ்வழிக் கல்வி வந்தாக வேண்டும் என்பதில் முனைப்புக் காட்டியுள்ளன என்பது கணக்கீடு.

குடந்தை ஏ.ஆர்.ஆர். கல்வி அறக்கட்டளை சார்பாக ஒரு கருத்தரங்கு நடத்தப்பட்டது. 'மழலையர் குரல் 97' எனும் மலரும் வெளியிடப்பட்டது. ம.ச. சுவாமிநாதன் ஆராய்ச்சி மையத்தின் சார்பில் வெளியிடப்பட்ட கருத்து இதில் இடம் பெற்றுள்ளது.

''தாய்மொழியைப் புறக்கணித்துவிட்டு, நமது சமுதாயத்தில் மேட்டுக்குடியினராகவும் வெளித் தொடர்புகளை உடையவர்களாகவும் உள்ள சமுதாயப் பிரிவினர் அந்நிய மொழிக்கு ஆரம்பக் கட்டம் முதல் முக்கியத்துவம் கொடுத்து வரும் அவலநிலை நீடிக்கும் வரை பாடமொழி அதிலும் குறிப்பாக வாழ்க்கையில் இளம் பருவத்தில் உள்ள சிறுவர், சிறுமியருக்கான பாடமொழி தொடர்பான பிரச்சனையை முழுமையாகத் தீர்க்கவே முடியாது'' என்று அடித்துச் சொல்கிறது அந்த ஆய்வு. இது, நூற்றுக்கு நூறு உண்மை.

மேலும் ஒரு பெட்டிச் செய்தி அந்த மலரில்:

''அந்தக் காலத்துக் குழந்தைகள் தாய்ப்பால் குடித்தார்கள். அதனால் தாய்மொழிப் பாடலை இனிமையாக பாடினார்கள். இந்தக் காலத்துக் குழந்தைகள் டப்பாபால் குடிக்கிறார்கள். இதனால் டப்பாங்குத்துப் பாடல்கள் பாடுகிறார்கள்'' நிலைமை போகிற போக்கைப் பார்த்தீர்களா? (அதே கும்பகோணத்தில் பள்ளி நிர்வாகியின் பேராசையால் பச்சிளம் குழந்தைகள் கருகி மடிந்தார்களே! அதையும் நினையுங்கள்)

13.2.97 ஆம் நாளிட்ட 'மகாசனம்' இதழில் தென்னிலை வழக்கறிஞர் இராம. கோவிந்தன் ஒரு கட்டுரை எழுதியிருந்தார். பலதரப்புலும் தமிழ்வழிக் கல்வி பற்றி என்ன கருதுகிறார் என்பதற்கு இது ஒரு சான்று:

தமிழகக் கல்வி நிலையங்களில் தமிழ் வழிக்கல்வி! ஏன் முடியாது?

பாருக்குள்ளே நல்ல நாடாகிய நம் பாரத நாடு விடுதலை பெற்று அரை நூற்றாண்டைத் தொட இருக்கிறது. 15.8.1997 இல் விடுதலைநாள் பொன் விழாவை சிறப்பாகக் கொண்டாடக் காத்துக்கொண்டிருக்கிறோம். இந்திய நாடு மாபெரும் ஜனநாயக நாடுகளில் ஒன்றாகத் திகழ்வது நமக்கு மட்டற்ற மகிழ்ச்சியை அளித்தாலும் அரசியல் கட்சிகளும், அக்கட்சியை வழிநடத்திச் செல்லும் தலைவர்களின் செயல்பாடுகளும் வழிகாட்டுதல்களும் நம்பிக்கையூட்டிடவதாக இல்லை. இந்திய நாட்டின் அனைத்து

மாநிலங்களிலும் பெரும்பான்மையோரால் பேசப்படுகின்ற மொழியே (தாய்மொழி) பயிற்று மொழியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு வருகிறது. 1956ஆம் ஆண்டில் தமிழ் ஆட்சிமொழிச் சட்டம் தமிழகத்தில் அரங்கேறியுள்ளது.

40 ஆண்டுகள் சென்ற பின்பும் அரசு அலுவலகங்களில் தமிழ் அலுவல் மொழியாக ஆக்கப்படவில்லை. தமிழே எங்கள் குறியும் நெறியும்! தமிழே எங்கள் உயிரும் மூச்சும், என இடைவிடாது உச்சரித்துக் கொண்டிருக்கும் திராவிட இயக்கக் கட்சிகளின் ஆட்சிதான் தமிழகத்தில் 30 ஆண்டுகளாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆனால் தமிழகக் கல்விநிலையங்கள் அனைத்திலும் தமிழ் வாயிலாக கல்வி கற்பிக்கப்படுகிறதா? பெரும்பாலான பெற்றோர்கள் ஆங்கிலக் கல்வி வழியே தங்கள் குழந்தைகள் கற்க வேண்டும் என விரும்புகிறார்கள்.

புற்றீசல்களைவிட மிகுதியாக ஆங்கிலவழிக் கல்விநிலையங்கள் தமிழகத்தில் தோன்றிவிட்டன. கீழ்வகுப்பிலிருந்து மேல் வகுப்புவரை (பட்ட மேற்படிப்பு) தமிழ் மொழியைப் பாடமாகவே கொள்ளாமல் ஒரு மாணவன் கற்றுத் தேர்ந்திடும் நிலைமை தமிழகத்தைத் தவிர பிற எம் மாநிலங்களிலும் இல்லை.

'செந்தமிழ் நாடென்னும் போதினிலே இன்பத் தேன்வந்து பாயுது காதினிலே' என மாகவி பாரதியும, 'தமிழுக்கு அமுதென்றுபேர். அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என புரட்சிக் கவிஞர் பாரதிதாசனும் தமிழ்நாட்டினைப் பற்றியும், தமிழ் மொழியைப்பற்றியும் உயர்வாக உவந்து பாடியதெல்லாம் வீண்தானா? எதிர்காலச் சந்ததியினரின் ஏற்றம் குறித்தல்லவா நம் செயல்திட்டம் அமைந்திட வேண்டும். வாய்த்த காலத்தில் செயற்கரிய செயல்களைச் செய்து வரலாற்றில் இடம் பெற்றிட வேண்டும்.

அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு 50 ஆண்டுகள் ஆகியும் ஆங்கில மோகத்திலிருந்து நம்மை விடுவித்தக் கொள்ள இயலவில்லை. எளிதில் கிட்டிடும் இனிய தாய்ப்பாலை விடுத்து அரிதில் கிட்டிடும் பிற பாலினை அருந்துவதற்கே ஆவல் கொள்கிறோம். இந்நிலைக்கான காரணம் எது? எவரெல்லாம் தடையாக இருக்கிறார்கள்? இவைகளை ஆராய்ந்து தடைகளைத் தகர்த்தெறிந்து அனைத்துக் கல்வி நிலையங்களிலும் 'தமிழ் வழியே கல்வி' என்னும் நிலைப்பாட்டைக் கொண்டுவரும் மனத்திட்பத்தை தமிழக அரசின் முதல்வர் கலைஞர் பெறவேண்டும், ''எனைத்திட்பம் எய்திய கண்ணும் வினைத்திட்பம் வேண்டாரை வேண்டதுலகு'' - (670) என்னும் குறளுக்கு உரை கண்டவரல்லவோ கலைஞர். தமிழ் ஆட்சி மொழி, பண்பாட்டுத் துறைக்கு தனி அமைச்சகம் ஏற்படுத்தப்பட்டு, உரிய, ***உகந்த அமைச்சராக உள்ள தமிழ்க்குடிமகனே அத்துறைக்குப் பொறுப்பேற்றிருக்கிறார்.***

பெயர்ப்பலகைகள் தமிழில் எழுதுதல், தலைமைச் செயலகத்தில் 500க்கு மேற்பட்ட தமிழ் தட்டச்சுக்கள் நிறுவுதல், வருகின்ற ஆண்டிலிருந்து தமிழ் வழியான பொறியியற்கல்லூரி தொடங்குதல் போன்ற உவகைதரும் அவரின் அறிவிப்புகள் தமிழ்மொழி வளர்ச்சியிலும், தமிழ் வழிக் கல்வியிலும் அமைச்சர் கொண்டிருக்கின்ற அழுத்தமான பற்றினைப் புலப்படுத்துவதாகும்.

இக்காலத்தில் வறுமையில் வாடிடும் ஏழைகளும், கூலிகளும் தங்கள் குழந்தைகள் ஆங்கில வழி கல்வி கற்று தங்களை 'மம்மி' 'டாடி' என அழைக்க வேண்டும் என பேரார்வம் கொண்டுள்ளனர். இப்படிப்பட்ட போலி கவுரவத்துக்கு இரையாகிய அவர்கள் தங்கள் தகுதிக்கு மிகுதியான பொருட் செலவைச் செய்து துன்பத்திற்குள்ளாகின்றனர். ஆங்கில வழிக் கல்வியே உயர்ந்தது. உகந்தது வேலைக்கு உத்திரவாதம் அளிப்பது, நாகரிகத்தின் எல்லையைத் தொடவல்லது என்ற எண்ணங்களிலிருந்து பெற்றோர்கள் விடுபட வேண்டும். ஆங்கிலத்தை ஒரு பாடமாக கல்வி நிலையங்களில் கற்றுத்தருவதை வெறுப்பார் எவருமில்லை. ஆங்கில மொழியறிவு பெறுவது உகந்ததே. ஆனால் அனைத்துக்கும் அதுவும் உதவும் என்ற தேவையற்ற உயர்ந்த மனப்பான்மையும், தமிழ்வழிக் கல்வியால் வேலை வாய்ப்பில்லையே என ஏங்குகின்ற தாழ்வுமனப்பான்மையும் நம்மை விட்டு முற்றாக நீங்கிடல் வேண்டும்.

சிந்தனைவளம், அறிவுவளம் ஆகியனவற்றை வாரிவழங்கும் ஆற்றல் தாய்மொழியான நம் தமிழ் மொழிக்கே உண்டு. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றிய இலக்கிய, இலக்கண வளங்கள் நிரம்பிய இனிய மொழி நம் தமிழ்மொழி. எனவே இம்மொழியல்லவோ பயிற்றுமொழியாக, அலுவல்மொழியாக, நீதிமன்ற மொழியாக, வழிபாட்டு மொழியாக, இசை மொழியாக அரசோச்சிடும் அனைத்துத் தகுதிகளையும் பெற்றது. தமிழில் பாடங்களை உருவாக்கிட ஒவ்வொரு துறையைச் சார்ந்த வல்லுனர்களை இனங்காணவேண்டும். அவர்களின் திறமையை நன்கு பயன்படுத்தி ஊக்குவிப்புகள் அளித்து தமிழ்மொழி வாயிலாகப் பாடங்களை இயற்றச் செய்ய வேண்டும். தகுந்த கலைச்சொற்கள் கிடைத்திடாத நிலையில் ஆங்கிலச் சொற்களை அப்படியே தமிழில் பெயர்த்துத்தரலாம். தமிழகத்தில் தமிழ் வழிக்கற்றோர்க்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை, தமிழ்வழி வாயிலாக மட்டுமே தொடக்கக்கல்வி, மழலையர்பள்ளி (ஆங்கிலவழி) க்கு அனுமதியை கட்டுப்படுத்துதல், போன்றவற்றில் தக்க கவனமும் விரைவு நடவடிக்கையும் மேற்கொண்டு ''எய்தற்கரிய இயைந்தக்கால் அந்நிலையே செய்தற்கரிய செயல்'' - 489 என்னும் குறள்வழி 'தமிழ் வழிக் கல்வி' அனைத்துகல்வி நிலையங்களிலும் கோலோச்சிடச் செய்வோம்.''

பன்னாட்டுத் திராவிட மொழியியற் கழக வெள்ளி விழாவையொட்டி உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனத்தில் கருத்தரங்கம் நடைபெற்றது. அப்போது 'தமிழ் வழிக்கல்விக்காகத் தனியாக மொழிபெயர்ப்பு நிறுவனம் அமைக்கவேண்டும்' என்று வலியுறுத்தப்பட்டது. (தினமணி 23.6.97 'இந்து' (11.4.1997) இதழில் ஏ.டி.எஸ் மூர்த்தி என்பவர் எழுதிய கட்டுரை நமக்குப் பல உண்மைகளை உணர்த்துகிறது.

1. Thirtyfive years ago the minimum age for admission to primary school was five. Now kids barely out of their infancy are sent to school and put in a class called pre-KG. And the book load and the work load on their tender shoulders continue to be increasing.

2. Thirty years ago in most schools in Tamil Nadu the medium of instruction was Tamil Nowadays, but for corporation or municipal schools, most of the schools offer only English medium instruction. While this is happening on the education front government doctors are asked to write prescriptions in Tamil.

3. English medium schools have sprung up almost everywhere and getting a child educated in one of those schools is considered a vital necessity that even parents who cannot afford it take a great deal of trouble in putting their children in them. Over the years the subjects have been so broadbased that the child carries a heavy load of books and notebooks (roughly weighing 7 kg at a time) in a bag strapped to its back. With shrinking job opportunities the emphasis on resounding success in examinations has become so great that children are literally driven from pillar to post. Home work given by the class teacher, private tution and homework given by that teacher, leave no time for the children to indulge in what they really love.

4. These children robbed of their childhood grow up with a single-track mind. It is success alone that matters starting from the English alphabet it is English all the way and they have little opportunity of knowing something of the treasures in Tamil literature unless their parents acquaint them with Kambaramayanam, Thirukkural, Naaladiar and so on.

5. It is well known that beyong Vijayawada one feels lost with knowing only Tamil and English.

6. Nowhere else is English so liberally used in the daily routine as it is done in Tamil Nadu. Even now atleast in five out of 10 instances in public places a person who talks in English (though not correctly) is treated with greater rspect than another who talks well in Tamil.

7. It is said that mastery over one's mother tongue makes the task of learning of other languages much easier. But this reality has been cast aside and the study of Tamil has become cursory. The effect of this is evident in the way Tamil is spoken in programmes broadcast over radio and about how Tamil is talked in daily routine the better.

8. Government and educationists must draw up the syllabus in such a way that students are made to understand that Tamil literature contains as unique a treasure as that of any other language.

9. Above all every effort by those concerned should be made to free the children from the crushing physical and mental burden in the name of education.

5ஆம் அகவை முதல் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பிய காலம் போய், 3 அகவை முடியும் முன்பே பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்பும் பழக்கம் வந்துவிட்டது. அவர்களது மெல்லிய தோள்களில் அவர்கள் சுமக்கும் புத்தகச்சுமையும், பாடச்சுமையும் 7 கிலோ அளவுக்குக் கூடிவிட்டது. 30 ஆண்டுகட்கு முன் பெரும்பாலான பள்ளிகளில் தமிழ்தான் பயிற்றுமொழி - பாடமொழி (1975 இல் இருந்த மெட்ரிகுலேசன் பள்ளிகள் 30தான்) இவர் சொல்லும் காலம் இதுதான்.

ஆங்கில வழிக்கல்வி என்பது ஒரு கட்டாயத் தேவை(vital necessity)என்று கருதி, அதிகம் செலவழிக்க முடியாத பெற்றோர்கள் கூட, மிக அதிக முயற்சிகள் எடுத்துப் பிள்ளைகளைப் பள்ளிகளில் சேர்க்கிறார்கள். வகுப்பாசிரியர் கொடுக்கும் வீட்டுப்பாடம், பின் தனிப்படிப்பு, அங்குள்ள ஆசிரியர் கொடுக்கும் வீட்டுப்பாடம் ஆகிய பெருஞ்சுமைகள் குழந்தைகளை அழுத்தி, அவர்கள் விரும்பும்படி இயங்கவிடாமல் முடக்கி விடுகின்றன.

எல்லாமே ஆங்கிலம் எனும் மாயைக்குள் மூழ்கி விடுவதால் தமிழில் உள்ள மிகப்பெரும் வளங்களாகிய கம்பராமாயணம், திருக்குறள், நாலடியார் போன்ற செல்வங்களை உணரும் வாய்ப்பு மிகவும் குறுகிப் போய்விட்டதாகவே இவர் கூறுகிறார்.

அப்படியே நாம் ஆங்கிலத்தில் தேர்ச்சிபெற்றாலும், விசயவாடாவைத் தாண்டிவிட்டால் தமிழும் ஆங்கிலமும் தெரிந்தால் கூட, ஒன்றும் தெரியாதவர் போல் இயங்கவேண்டியுள்ளது. இது இந்தியச் சூழ்நிலை.

தமிழ் நாட்டைப்போல் வேறெங்குமே அன்றாட வாழ்வில் ஆங்கிலம் இவ்வளவு தாராளமான புழக்கத்தில் இல்லை. இன்றைக்கும் 10 இல் 5 நிகழ்வுகளில் தமிழில் சிறப்பாகப் பேசக்கூடியவர்க்குக் கிடைப்பதை விட, ஆங்கிலத்தில் தப்பும் தவறுமாகப் பேசுபவர்களுக்கு அதிகம் மதிப்புக் கிடைப்பதாகவே சூழ்நிலை அமைந்துள்ளது.

கடைசியாக அவர் கருத்து இது: வளமும், தொன்மையும், புதுமையும் ஒருங்கே நிரம்பியுள்ள தமிழ் இலக்கியங்களைத் தெரிந்துகொள்ளும் அளவில் பாடத்திட்டம் வகுக்கப்பட வேண்டும்.

பாராட்டத்தக்க செய்திகளை நடுநிலையோடு எழுதியதால்தான் இங்கு எடுத்துக்காட்டினேன்.

இயல் இருபத்தொன்பது - இ

சார்புக்கருத்துகள்
1998

தமிழ் வழிக் கல்விக் கெனத் தனிப் பல்கலைக் கழகம் வேண்டும் என்று தமிழண்ணல் 'தினமணி'யில் எழுதினாலும் எழுதினார். பலரும் பல கோணங்களில் பிடித்துக் கொண்டனர். அதன் தொடர்பாக ஆசிரியர்களிடமிருந்து வந்த மடல்கள் சில பார்வைக்கு வைக்கப்படுகின்றன.

1. பிறப்பு முதல் தமிழ் மொழியை மட்டுமே பேசி ஆங்கில மொழியுடன் எவ்விதத் தொடர்புமின்றி வாழும் கிராமப்புற, பின்தங்கிய வகுப்புப் பிள்ளைகள், மொழித் தடை எதுவுமின்றிப் பள்ளிக்கல்வியையும் உயர்கல்வியையும் பெற தமிழ்வழிக் கல்வியே சிறந்தது; அத்துடன் தாய்மொழியே இயல்பான கல்வி மொழி. 'யாவருக்கும் கல்வி' எனும் இன்றைய சிறப்பு நோக்கினை நிறைவு செய்ய தமிழ்வழிக் கல்வியே உதவும்.

இலங்கையில் பல்கலைக்கழக நிலையில் 1960-களில் அறிமுகம் செய்யப்பட்ட தமிழ்வழிக் கல்வியால், பின்தங்கிய தமிழ் மக்கள் பெரும்பயன் பெற்றனர். அந்நாட்டில் இத்தனை வாதப்பிரதிவாதம் இருக்கவில்லை. பிளஸ் டூ நிலையில் கலை, விஞ்ஞானம், வர்த்தகவியல் எல்லாமே தாய்மொழிகளில்தான். ஆங்கில மொழியறிவு கட்டாயம் வேண்டும்; அதற்காக அதனைக் கல்வி மொழியாக்க வேண்டுமென்பதில்லை - *சோ. சந்திரசேகரன், மதுரை-2*

2. தாய்மொழி வழியே மழலையர் கல்வி அமைய அரசு வழிகாணும் என எதிர்பார்த்தோம். ஆனால் தாய்மொழி ஒரு பாடமொழியாகக் கற்பிக்கப் பெற வேண்டும் எனும் அறிவிப்பால் ஏமாந்தோம்.

நெஞ்சிற்கு நீதி எனப்படுவதை அரசு நடைமுறைப்படுத்த அஞ்சுவதற்குக் காரணம் மக்கள் ஏற்க மறுப்பாரோ என எண்ணுவதே.

தமிழ்வழிக் கல்வி வேலைவாய்ப்பிற்குத் துணை செய்யும் நிலையை அரசு உருவாக்கினால் போதும். பயன்பாட்டு மொழியாகத் தமிழ்தானே தலைநிமிரும்.

பிறகு, தமிழ்வழிக் கல்விப் பல்கலைக்கழகம் உருவாகும். தமிழ் இயக்கங்கள் அரசுக்கு வேண்டுகோள் விடுப்பதோடல்லாமல், மக்களிடையே தம் கருத்துகள் ஊடுருவிட கடுமையாக உழைத்தல் வேண்டும். நாடு தழுவி இப்பணி செய்தல் நம் கடமை - *அரிமதி தென்னகன், புதுவை-8.*

3. தமிழ்வழிக் கல்வியை மேல்மட்டத்தில் இருந்து தொடங்க வேண்டும் என்பது நடைமுறை ரீதியிலான சிறந்த யோசனை.

ஆனால் நம்முடைய மாணவர்கள் பலருக்கு ஆங்கிலம் சிம்மசொப்பனமாக இருப்பதினால்தான் அவர்கள் தமிழ்வழிக் கல்வியை விரும்புகிறார்களே தவிர, தமிழ் மேல் கொண்ட காதலால் அல்ல. ஆகவே தமிழ்மொழிக் கல்வி வளர்ந்தால், ஆங்கிலம் முற்றிலுமாகப் புறக்கணிக்கப்படக்கூடிய அபாயம் இருக்கிறது.

ஆனால் நடைமுறை ரீதியில் ஆங்கிலம் தெரியாமல் உயர்கல்வி கற்றும் பயனில்லை என்பதே உண்மை. ஆகவே தமிழ்வழிக் கல்வியை ஊக்குவிக்கும் அதே வேளையில், ஆங்கில மொழிக் கல்வி அழிந்து போய்விடாமல் பாதுகாப்பதும் நம் கடமையாகும் - *ஆர்.எஸ். ஸ்ரீனிவாசன், மதுரை-11.*

4. உலக மனப்பான்மை, ஒருமித்த சிந்தனை போன்ற தற்போதைய உலக நடைமுறைக்கு, எந்தப் பாதிப்பும் இல்லாமல் தமிழ்வழிக் கல்வி அமைய வேண்டும்.

ஏற்கெனவே பல ஆண்டுகளுக்கு முன், ஏற்படுத்தப்பட்ட தமிழ்வழிக் கல்வித்திட்டத்தை ஒருசில அரசுக் கல்லூரிகளே செயல்படுத்தின. இதனால் வேலைவாய்ப்பு, மேற்படிப்பு போன்றவற்றில் தமிழ்வழி படித்த மாணவர்கள் பின் தள்ளப்பட்டே வந்தனர்.

எனவே அனைத்துக் கல்லூரிகளிலும் அனைத்துப் பிரிவுகளிலும் ஒரே நிலையான பயிற்றுமொழி உறுதி செய்யப்பட்டு கண்காணிக்கப்பட வேண்டும்.

அதேசமயம் முழுமையான அறிவு பெறும் வகையில், ஆங்கிலப் பாடங்களைப் பயிற்றுவிப்பதிலும் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும் - *அ. பாலமுருகன், பாக்கம்பாடி.*

5. வாழ்க்கைக்கு எது உதவுகிறதோ அதனிடந்தான் பற்றும் பரிவும் ஏற்படும். அழுக்குப்படாத அலுவலுக்கு ஆங்கிலமே உதவுமென்ற நம்பிக்கை வளர்க்கப்பட்டு விட்டது.

எனவே தமிழ்வழியாகப் படித்துப் பட்டம் பெற்றவர்க்கு அரசுப் பணிகளில் முன்னுரிமை என்னும் நிலை ஏற்பட்டால் போதும், இளைஞர்கள் தமிழை மொய்க்கத் தொடங்கி விடுவார்கள். வெற்று முழக்கங்களுக்கும், வேறு முயற்சிகளுக்கும் வேலை குறைந்துவிடும். பெயர்ப் பலகைகளில் தமிழ்தானே ஏறிவிடும் - *க.பொ. இளம்வழுதி, கடலூர்-1.*

இந்த ஐந்து மடல்களும் நமக்குச் சில தெளிவுகளை உண்டாக்குகின்றன.

'தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்படவேண்டும்' என்று அறிவித்ததற்காக சிலர் சலித்துக் கொள்கின்றனர். எனினும் முதலில் 'தமிழை' ஒரு பாடமாகப் படியுங்கள் என்று கட்டாயப் படுத்தப்பட வேண்டிய சூழல் இங்கு ஏற்பட்டுவிட்டது. அதனால் இந்த முடிவு. அடுத்து, 'தமிழ் வழியில் படியுங்கள்' எனும் அரசாணை வந்து விட்டது என்பதையும் நாம் அறிவோம். அரசு படிப்படியாகக் கொண்டுவரும் எனும் நம்பிக்கைக்கு ஒரு நாளும் ஊறு நேரவில்லை.

தமிழ்வழிக் கல்வி பற்றி நாங்கள் எவ்வளவு பேசியிருக்கிறோம், நேருக்கு நேர் விவாதித்திருக்கிறோம் என்று பிறரால் கற்பனை செய்ய முடிந்தால் நல்லது. நான் இங்கே தொகுத்து எழுதிக் கொண்டிருக்கும் குறிப்புகளைக் கொண்டாவது நான் இதில் ஆழ்ந்த கவனம் செலுத்தி அன்றாடம் முடிவுகளை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தேன் என்று மட்டும் புரிந்து கொண்டால் போதும்.

அடுத்து அதே 'தினமலர்' இரண்டாண்டுகள் கழித்து மீண்டும் ஒரு கட்டுரை வரைகின்றது: கட்டுரை இதுதான்.

''தமிழக பள்ளிகளில் தமிழ் மீடியம் வகுப்புகள் மூடப்படும் அபாயம்!

பெற்றோர் ஆங்கில மோகம், அரசு அலட்சியம் காரணம்

சென்னை ஜூன் 17 -

தமிழகத்தில் பல பள்ளிகளில் தமிழ் மீடியம் வகுப்புகள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அரசுப் பள்ளிகள், மாநகராட்சிப் பள்ளிகள் மற்றும் அரசு நிதிஉதவி பெறும் தனியார் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் 10ம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பிலும் ஏ, பி, சி, டி, இ என்று ஐந்து பிரிவுகள் (செக்ஷன்) உள்ளன. ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு ஆங்கில மீடியம் வகுப்பிற்கு மட்டும்

அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஒரு சில பள்ளிகளில் மட்டும் அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஒரு சில பள்ளிகளில் மட்டும் விதிவிலக்காக ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டு 'ஆங்கில மீடியம்' வகுப்பிற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

தொடக்கப் பள்ளிகளில் ஐந்தாம் வகுப்பு முடித்து, உயர்நிலைப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பில் சேர வரும் மாணவர்களுக்கு நுழைவுத் தேர்வு நடக்கிறது. நுழைவுத் தேர்வில் அதிக மார்க்குகள் பெற்ற மாணவர்களுக்கு மட்டுமே ஆங்கில மீடியம் வகுப்பில் சேர முன்னுரிமை வழங்கப்படும். மற்ற மாணவர்கள் தமிழ் மீடியம் வகுப்பில் சேர்க்கப் படுவார்கள். ஒவ்வொரு பிரிவிலும் ஆறாம் வகுப்பில் 40 மாணவர்கள் வரை சேர்க்கப் படுவார்கள்.

ஆனால், இப்போது நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. இப்போது ஆங்கில மீடியம் நர்சரி பள்ளிகள் ஏராளமாகத் துவக்கப்பட்டுவிட்டன. சுயநிதி ஆங்கில மீடியம் மெட்ரிகுலேஷன் பள்ளிகளும் ஏராளமாகத் துவக்கப்பட்டுவிட்டன.

இதுதான் தமிழ் மீடியம் அபாயகட்டத்துக்கே போக காரணம். இந்த பரிதாப கதை வருமாறு:

தமிழக மக்களின் ''ஆங்கில மோகம்,'' தேவையை உணர்ந்துள்ள பலர், வியாபார நோக்கத்தோடு நர்சரி பள்ளிகளையும், மெட்ரிகுலேஷன் பள்ளிகளையும் துவக்கிவிட்டனர். இந்த ஆங்கில மீடியம் பள்ளிகளில் ஏராளமான மாணவர்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர். இங்கு ஐந்தாம் வகுப்பு வரை ஆங்கில மீடியத்தில் படித்து முடித்துள்ள மாணவர்கள் ஆறாம் வகுப்பில் சேர ஆங்கில மீடியம் வகுப்பிற்கு தான் வருகின்றனர். இதனால், ஆங்கிலம் மீடியம் வகுப்புகளில் நூறு மாணவர்கள் வரையிலும், அதற்கு அதிகமாகவும் சேர்க்கப்படுகின்றனர்.

அரசு பள்ளிகளில் ஒதுக்கப்பட்ட ஒரு ஆங்கிலம் மீடியம் வகுப்பில் இடம் கிடைக்காத மாணவர்கள் கல்வித்துறை உயர் அதிகாரிகள், எம்.எல்.ஏ..,க்கள் மற்றும் அமைச்சர்களிடம் சிபாரிசு கடிதங்களையும் வாங்கி வருகின்றனர். இதனால் மாணவர் எண்ணிக்கையை 100 ஆக்க வேண்டியுள்ளது.

பெற்றோரின் ஆங்கில மீடியம் மோகத்தை தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு பள்ளி நிர்வாகிகள் நன்கொடைகளை பெரிய தொகையைக் கறந்து விடுகின்றனர்.

ஆறாம் வகுப்பு தமிழ் மீடியம் வகுப்புகளுக்கு 15 மாணவர்கள் கூட சேருவது கிடையாது. இதனால் தமிழ் மீடியத்துக்கு ஒதுக்கப்பட்ட வகுப்புகள்

காலியாக உள்ளன. 10 முதல் 15 பேர் தான் உள்ளனர். இதனால் அந்த வகுப்புகள் மூடப்படும் அபாயம் ஏற்பட்டு வருகிறது. இதனால் ஆசிரியர்களுக்கு வேலை இழப்பும் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. கடந்த சில ஆண்டுகளாகவே இந்த நிலை. இதனால், ஏழு, எட்டு, ஒன்பதாம் வகுப்புகளிலும், தமிழ் மீடியம் வகுப்புகளில் மாணவர் எண்ணிக்கை பல மடங்கு குறைந்துவிட்டது. இப்போது உச்சகட்ட நிலை அபாயம் உருவாகி உள்ளது.

இதற்கு முன்பு தமிழ் மீடியம் வகுப்பிற்கு போதிய மாணவர்கள் வந்தபோது பள்ளி நிர்வாகம், பெற்றோரிடம் நன்கொடை வசூலித்தன. ஆனால், இப்போது தமிழ் மீடியம் வகுப்பிற்கு சேர மாணவர்கள் வராததை உணர்ந்துள்ள பள்ளி, நிர்வாகங்கள் தமிழ் மீடியம் வகுப்புகளுக்கு 'நன்கொடை கிடையாது,' என்று அறிவித்துள்ளனர். இருந்தாலும், தமிழ் மீடியம் வகுப்புகளுக்கு மாணவர்கள் சேர வராமல் ஆங்கில மீடியம் வகுப்புகளையே நாடி செல்கின்றனர்.

இருபதுக்கு குறைவான மாணவர்கள் மட்டுமே உள்ள வகுப்புகளுக்கு தமிழக அரசு ஆசிரியர்களுக்கு ஊதியம் வழங்காது. ஆனால், இந்த வகுப்புகளில் 35 மாணவர்கள் இருப்பதாக பொய்கணக்குக் காட்டி அரசு மானியத்தை சில பள்ளி நிர்வாகங்கள் பெற்று வருகின்றன. ஆசிரியர்களுக்கு வேலை இழப்பு வரக்கூடாது என்பதற்காக இதுபோன்ற தில்லுமுல்லுகளை சில பள்ளி நிர்வாகங்கள் செய்து வருகின்றன என்ற புகாரும் கல்வித்துறைக்கு வந்துள்ளது.

ஆசிரியர்களுக்கு ஊதியம் இப்போது கணிசமாக உயர்த்தப்பட்டுவிட்டது. அரசுக்கு வரும் வருமானத்தில் ஒரு கணிசமான பகுதி ஆசிரியர்களின் ஊதியமாகப் போய்விடுகிறது. ஆகையால், சுயநிதிப் பள்ளிகளான மெட்ரிகுலேஷன் ஆங்கில மீடியம் பள்ளிகளை அரசு மறைமுகமாக ஊக்கப்படுத்தி, ''பகிரங்கமாகவே'' அங்கீகாரமும் வழங்கி வருகிறது. எதிர் காலத்தில் மக்களின் ஆங்கில மொழி மோகத்தினால் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் அதிகமாகி, அரசு பள்ளிகளும், அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளும் மெல்ல, மெல்ல செத்துவிடும். இந்த பள்ளிகளில் பணியாற்றிவரும் ஆசிரியர்களும் ஓய்வு பெற்று விடுவார்கள். மெட்ரிகுலேஷன் பள்ளி ஆசிரியர்களுக்கு பள்ளி நிர்வாகமே குறைந்த ஊதியம் கொடுக்கும். அப்போது அரசுக்கு ஆசிரியர்கள் ஊதியம் பல கோடி ரூபாய் மிச்சப்படும். இதை நன்கு உணர்ந்துள்ள அரசு நிதிஉதவி பெறும் தனியார் பள்ளிகள் பல மெட்ரிகுலேஷன் பள்ளிகளைத் துவக்கத் துவங்கிவிட்டன.

மெட்ரிகுலேஷன் பள்ளிகளை வளர்ப்பதற்காகவே அரசுக்கு சொந்தமான தமிழ்நாட்டுப் பாடநூல் கழகம் மெட்ரிகுலேஷன் பள்ளிகளுக்கான

பாடபுத்தகங்களையும் இப்போது வெளியிடத் துவங்கிவிட்டது குறிப்பிடத்தக்கது.

தமிழக அரசு தமிழை ஆட்சி மொழியாக கொண்டுவந்துவிட்டது. ஆனால் இங்கு மாணவர்கள் படிப்பதோ ஆங்கில மீடியம் வகுப்புகளில்! தமிழ் ஆட்சி மொழியாக உள்ள தமிழக அரசில், ஆங்கில மீடியத்தில் படித்து தேறும் இப்போதைய மாணவர்கள் எதிர்காலத்தில் எப்படி அரசு கல்வி பொறுப்பினை ஏற்று பணியாற்றுவார்கள் என்பது கேள்விக்குறியாக உள்ளது.

தமிழ்ச் சான்றோர் பேரவை மட்டுமே ஆங்கில மீடியம் பள்ளிகளுக்கு தடை விதிக்கக்கோரி அவ்வப்போது போராட்டத் திட்டங்களை அறிவித்து வருகின்றது. ஆனால், ஆங்கில மோகம் கொண்ட தமிழக மக்கள் இருக்கும்வரை இதுபோன்ற போராட்டம் எதுவும் எடுபடாது.

இத்தனை ஆண்டுகளில் தமிழ் மீடியம் எடுத்து படித்தவர்களுக்கு திருப்தியாக வேலை கிடைத்துள்ளதா? அரசு தான் முன்னுரிமை அளித்திருக்கிறதா? தமிழ் தமிழ் என மேடையிலும், விளம்பரங்களிலும் தானே முழங்கப்படகிறது. இளைஞர்களின் எதிர்காலத்துக்கு என்ன பயன்?

எந்த மருத்துவ, தொழில்நுட்ப நூலாவது உருப்படியாக தமிழில் வந்துள்ளதா? அரசுதான் ஊக்குவித்ததா? அரசு, தமிழ் படித்தவர்களுக்கு உத்தரவாதம் அளிக்க தயாரில்லை. நாலு காசு சம்பாதிக்க ஆங்கிலம் தேவை என்பதை உணர்ந்து விட்டனர். இளைய சமுதாயத்தினர். இதனால், தமிழ் மீடியம் என்று நிர்பந்தப்படுத்துவதில் பலனில்லை என்று தனியார் பள்ளியில் அனுபவம் வாய்ந்த ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர் ஒருவர் பொரிந்து தள்ளினார்.

ஆங்கில மீடியம் பள்ளிகளுக்கு எதிராகவும், கல்வி தாய்மொழியிலேயே அமைய வேண்டும் என்பது பற்றியும் மக்களிடையே அரசு தீவிரப் பிரசாரத் திட்டத்தை இப்போதே துவக்க வேண்டும்.

ஆனால், 'கல்வி' என்பது சர்வதேச மயத்துக்கு போய்விட்டது. தமிழை செழிக்க வழி செய்யலாமே தவிர நிர்பந்தத்தின் மூலம் யாரையும் தமிழ் கற்க வைக்க முடியாது. தமிழ் மீடியம் மறையாமல் இருக்க உத்தரவாத திட்டம் எதையாவது தீட்டினா நல்லது. காலத்துக்கு ஏற்ப எல்லா நவீன பாடங்களும் தமிழில் கொண்டு வந்து மாணவர்களுக்கு நம்பிக்கையை ஊட்டினால் மட்டுமே தமிழ் மீடியம் பிழைக்கும். அரசு செய்யுமா? காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.''

தினமலர்க்குத் தமிழ் வழிக்கல்வியில் ஆர்வம் உண்டு. அதனால் தான்

1. 'ஆங்கில மீடியம் பள்ளிகளுக்கு எதிராகவும், கல்வி தாய்மொழியிலேயே அமைய வேண்டும் என்பது பற்றியும் மக்களிடையே அரசு தீவிரப் பிரசாரத் திட்டத்தை இப்போதே துவக்க வேண்டும்' என்று எழுதுகிறது.

மற்றோர் உண்மையையும் தோலுரித்துக் காட்டுகிறது.

2. ''ஆகையால், சுயநிதிப் பள்ளிகளான மெட்ரிகுலேஷன் ஆங்கில மீடியம் பள்ளிகளை அரசு மறைமுகமாக ஊக்கப்படுத்தி, ''பகிரங்கமாகவே'' அங்கீகாரமும் வழங்கி வருகிறது. எதிர் காலத்தில் மக்களின் ஆங்கில மொழி மோகத்தினால் மெட்ரிகுலேஷன் பள்ளிகள் அதிகமாகி, அரசு பள்ளிகளும், அரசு நிதி உதவி பெறும் பள்ளிகளும் மெல்ல, மெல்ல செத்துவிடும். இந்த பள்ளிகளில் பணியாற்றிவரும் ஆசிரியர்களும் ஓய்வு பெற்று விடுவார்கள். மெட்ரிகுலேஷன் பள்ளி ஆசிரியர்களுக்கு பள்ளி நிர்வாகமே குறைந்த ஊதியம் கொடுக்கும். அப்போது அரசுக்கு ஆசிரியர்கள் ஊதியம் பல கோடி ரூபாய் மிச்சப்படும். இதை நன்கு உணர்ந்துள்ள அரசு நிதிஉதவி பெறும் தனியார் பள்ளிகள் பல மெட்ரிகுலேஷன் பள்ளிகளைத் துவக்கத் துவங்கிவிட்டன''.

என்னுடைய குற்றச்சாட்டும் இதுதான். கல்வி அமைச்சரே இந்தக் காரியத்தைத் துணிந்தும் விரைந்தும் செய்து விடுகிறார். அரசுக்கு நிதி மிச்சப்படும் எனும் நோக்கில் அவர் அதைச் செய்யவில்லை. அவர் தரப்புக்கோ, அவரைச் சார்ந்தவர்கட்கோ 'இலாபம்' உண்டு எனும் நோக்கோடு அவர் செயற்பட்டிருப்பதாகவே நான் கருதுகிறேன். மேலும் தமிழ்வழியில் எல்லாரும் படிக்கவேண்டும் எனும் கொள்கையைக் கல்வி அமைச்சர் கடைப்பிடித்திருந்தால் அவரது செயற்பாடுகள் வேறுவகையில் அமைந்திருக்கும். ஆனால் நடந்ததா? அதனால்தான் 'தினமலர்' பலருக்கும் புரியும்படி பளிச்சென்று எழுதுகின்றது.

1998ஆம் ஆண்டு தமிழ்வழிக் கல்வி தொடர்பான பல நிகழ்ச்சிகள் நடைபெற்ற ஆண்டாகும். அவை அறிவிக்கப்படும் முன் இதழ்கள் எப்படி என்னைத் தூண்டின என்பதற்கான விரிவே இந்தக் கட்டுரை. 27.4.1998ஆம் நாள் 'தினமணி' ஓர் ஆசிரியவுரை எழுதியது. படியுங்கள்:

வேரிலேயே வெந்நீர் ஊற்றுவதா?

'தமிழை வைத்து' அரசியல் வளர்ந்திருக்கிறது. 'தமிழரை' வைத்து அரசியல் கட்சிகள் வளர்ந்திருக்கின்றன. ஆனால் தமிழ்? தேர்தல் மேடைகளில் - வாக்குகளை வசீகரிக்க ஒரு நல்ல கருவி.

அரசுப் பதவிகளுக்கான நியமனங்களிலோ, தமிழ்ப் பட்டதாரிகளுக்கு முன்னுரிமை தரப்படுவதில்லை. ஆயினும், தமிழ்நாட்டின் ஆட்சிமொழி -

தமிழே! ஹிந்தி நுழையாமல் தடுப்பதற்காக என்ற காரணம் காட்டி, தமிழக அரசினால் வடிக்கப்பட்டது - இரு மொழிக் கொள்கை. தமிழோடு ஆங்கிலம்.

ஆனால், தமிழ்நாட்டிலுள்ள மழலையர் பள்ளிகளிலோ எல்லாம் ஆங்கிலத்திலேயே. தமிழுக்கு ஒண்டிவாழக் கூட இடமில்லை. மழலைப் பருவம் - குருவியின் மனம் கருவுறுக் காலம். பச்சைக் குழந்தையின் நாவில் தமிழ் மணப்பதே இயற்கை. அதற்குப் பதில், ஆங்கிலம் செயற்கையாகத் திணிக்கப்படுகிறது. தாய்ப்பாலில் வளராத குழந்தைகளும் தாய்மொழியில் அரும்பி மலராத மனங்களும் பெருகி வருகின்றன. இரண்டுக்குமே - 'போலி நாகரிக' மயக்கமே காரணம். தாய்ப்பாலே குழவியின் அகக் கருவிகளும் புறக்கருவிகளும் செழித்து வளர்வதற்கு இயற்கையின் உயிர் அமுது. அதைப் போலவே, குழந்தையின் அறிவும் உணர்வும் பூரணப் பொலிவுடன் தழைத்து வளர - தாய்மொழியே ஏற்றது. கல்வி மேதைகளும் உளவியல் அறிஞர்களும் ஒப்புக்கொண்டுள்ள உண்மை இது. தமிழில் வேர் விட்டு எழுந்த தமிழ் உள்ளத்தக்கு மெருகு ஊட்ட ஆங்கிலம் பயன்படலாம். ஆனால், மழலையர் பள்ளிகளில் செயற்கையாகத் திணிக்கப்படும் ஆங்கிலம் பிற்காலத்தில் கான்வென்ட் பள்ளிகளில் படித்துவிட்டு வெளிவரும் மாணவ-மாணவிகளுக்கு, வெறும் உதட்டுச் சாயம் போலவே மினுக்க முடியும்!

இது ஒருபுறம் இருக்க, மழலையர் பள்ளிகளில் ஆங்கிலம் பயிற்று மொழி என்பது - தமிழ்க் குழந்தை உள்ளங்கள் உருவாகும் பருவத்தில் - வேரிலேயே வெந்நீர் ஊற்றுவதுபோல. இந்த நிலைமை குறித்து சென்னையில், தமிழ்நாடு மெட்ரிகுலேஷன் பள்ளிகளின் மாநாட்டில், தமது மனத்தை வெளிப்படுத்தியிருக்கிறார் முதல்வர் கருணாநிதி. ''ஆங்கிலம் சர்வதேச மொழி. அதைக் கற்பது அவசியமே. ஆனால், அதேசமயத்தில் தமிழுக்கு மழலையர் பள்ளிகளில் முக்கியத்துவம் அளிப்பது மிக மிக இன்றியமையாதது'' என்று வற்புறுத்தியிருக்கிறார். இது போதுமானதாகத் தெரியவில்லை. இதற்குப் பதில், குறைந்தபட்சம் ''மழலையர் பள்ளிகளில் தமிழோடு ஆங்கிலம்'' என்பதே அரசின் கொள்கை என்று திட்டவட்டமாக அறிவிக்கலாம். 'மழலைப்பருவத்தில் தமிழ்மட்டுமே; அடுத்து, துவக்கப் பள்ளிகளில் தமிழோடு ஆங்கிலம்' என்ற புதிய கொள்கையை வகுத்து, அதைச் செயற்படுத்துவது இன்னும் சரியாக இருக்கும். இதைச் செய்யாமல், தமிழின் முக்கியத்துவம் குறித்து 'உபதேசம்' செய்வதால், எந்தப் பயனும் விளையப்போவதில்லை'' அரசு என்ன செய்ய வேண்டும் என்பதை ஆசிரியர் தெளிவாகச் சொல்லிவிட்டார். அரசு செய்த்தா?...

நாம் எண்ணி வருந்த வேண்டிய ஒரு பகுதி உள்ளது. அதுதான் அரசுப்பள்ளிகளில் 6ஆம் வகுப்பு முதல் ஒரு பிரிவினை (Section)

ஆங்கிலவழிக் கல்வியாக மாற்றிக் கொள்ளலாம் என்று அரசே ஆணை பிறப்பித்ததுதான். அரசுப் பள்ளிகளிலேயே ஆங்கிலவழிக் கல்வி நுழைய இடம் கொடுத்தது யார்!

நான் 1953 முதல் 1956 வரை 9,10,11 படித்த காலத்தில் கிறித்தவ நிறுவனமான தே.பிரித்தோ பள்ளியில் எல்லாப் பிரிவுகளுமே தமிழ் வழியில்தான். எனக்குச் சொல்லித்தரப்பட்ட அறிவியல் பாடமும், கலப்புக் கணிதமும் (Composite Maths) தமிழில்தான் சொல்லித் தரப்பட்டன என்பதை நினைத்துக் கொள்ள வேண்டுகிறேன்.

ஆங்கிலவழியில் சொல்லிக் கொடுக்க மெட்ரிகுலேசன் பள்ளிகட்கு இடம் தந்துவிட்டு அரசுப்பள்ளிகளிலும் ஆங்கில வழியை வைத்திருக்கலாமா? இதைச் செய்தது யார்? 1.7.98ஆம் நாளை மக்கள் செங்கோல் இதழின் ஆசிரியவுரையைப் படியுங்கள்:

''உடலுள் மறைந்து உயிரைப் பலி கொள்ளும் புற்று நோய் போல் தமிழ் மக்களிடம் நிலை கொண்டுள்ள ஆங்கில அடிமைத்தனம், தமிழ் வழிக் கல்விக்குப் பேராபத்தை உருவாக்கி வருகிறது. 1963 ஆம் ஆண்டு கல்வி அமைச்சர் பொறுப்பேற்றிருந்த பக்தவச்சலம் - உயர்நிலைப் பள்ளிகளில் ஆறாம் வகுப்பு முதல் ஒரு பிரிவு ஆங்கில வழிக் கல்விக்கான ஆணையினை வழங்கினார். ஆங்கில வழிக்கல்விக்கு இஃது ஒரு தொடக்க விழாவாகவும், தமிழ் வழிக் கல்விக்கு - மூடு விழாவுக்கு கால்கோள் ஆணையாகவும் அமைந்தது. அதன் பின்பு தமிழகத்தில் புற்றீசல் போல் பெருகிவரும் 35000 ஆங்கில மழலைப் பள்ளிகள், 2400 மெட்ரிகுலேசன் பள்ளிகள் 200 சி.பி.எஸ்.இ. பள்ளிகள், 150 கேந்திரவித்தியாலயா பள்ளிகள், 42 ஆங்கிலோ இந்தியப்பள்ளிகள் - தமிழ் அழிப்பிற்குப் போதாது என உணர்ந்த இன்றையகல்வி அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் 1989 ஆம் ஆண்டு ஒன்றிற்கு மேற்பட்ட ஆங்கிலப் பிரிவுகளை தொடங்கலாம் என்னும் ஆணையைத் தமிழ்கூறும் நல்லுலகிற்கு அருளினார். அதன் விளைவு அரசு - நகராட்சி - மாநகராட்சி - நகரியப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு முடிய அ1 (A 1) அ2 (A 2) அ3 (A 3) என மூன்று நான்கு பிரிவுகள் ஆங்கிலப் பாடப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. மேலும் தனியார் பள்ளிகள் பலவற்றில் தமிழ் வழிக் கல்விக்கு மாணவர்கள் சேரவில்லை என்னும் காரணம் காட்டப்பட்டு தமிழ்வழிக் கல்விப் பிரிவுகள் மூடப்பட்டு - அப்பிரிவுகள் ஆங்கிலப் பிரிவுகளாக மாற்றப் பட்டு வருகின்றன. ஏன் இன்னும் ஒருபடி மேலே சென்று தமிழ் வழிப்பள்ளிகளை மூடிவிட்டு - அவ்விடத்தில் ஆங்கில வழி மெட்ரிகுலேசன் பள்ளிகள் தொடங்கப்படுகின்றன. இந்த உண்மைகள் எல்லாம் மாண்புமிகு கல்வி அமைச்சருக்கும் தெரியாது என்று தமிழ் உணர்வாளர்கள் நினைக்க இடம் இருக்காது என்று நம்புகிறேன்''.

மேலும், கல்வி அமைச்சர் க. அன்பழகன் தன் காலத்தில்தான் அதிகமான மெட்ரிகுலேசன் பள்ளிக்கு இசைவு வழங்கி அவர்களை வளர்த்துவிட்டார் என்பதையும் நான் குறிப்பிட்டாக வேண்டும். இப்படிப்பட்ட மன்ம் படைத்தவர் தமிழ்வழிக் கல்வியைக் கொண்டு வருவாரா? செயற்படுத்துவாரா? பெரிய கேள்விக் குறி இது.

அதை உறுதி செய்வது போல அவருடைய பேச்சும் அமைந்துள்ளது. 21.6.98 அன்று தமிழகப் புலவர் குழுக் கூட்டம் நடைபெற்றது. அதில் அவர் பேசிய பேச்சுகள் பற்றிய தன் கருத்தை 'மக்கள் செங்கோல்' இதழ் தருகிறது: (1.7.98)

'தமிழகக் கல்வி அமைச்சர் தமிழ் பயிற்று மொழிக் கொள்கைக்கு எதிராகத் தொடர்ந்து பேசிவருவது - தமிழ் மொழியைத் - தமிழ் மண்ணைச் சிறுமைப்படுத்துவதாகும்.

கடந்த 21.06.1998 அன்று நடந்த தமிழகப் புலவர் குழுக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய பேச்சினைப் பகுத்து ஆய்ந்து பார்த்தால் கல்வி அமைச்சர் அவர்கள் ஆங்கில மொழியின் காவலரே என்பதை அறுதியிட்டு உறுதி செய்ய முடியும்.

தமிழ் வாழ்க! இந்தி ஒழிக! என்ற முழக்கத்தை முன்னிறுத்தித் தமிழ் கிளர்ச்சியினைச் செய்து - தமிழால் ஆட்சியைப் பிடித்த திராவிட இயக்கத்தில் தலையாயதோர் இடத்தைப் பெற்ற பேராசிரியர் அன்பழகன் ''தமிழக முதல்வர் கலைஞர் அவர்களும், அறிஞர் அண்ணா அவர்களும் ஆங்கிலத்தால்தான் உயர்ந்தார்கள்'' என்று கூறுவது - தமிழ் மொழிக்கும் தமிழ் மக்களுக்கும் தலைக்குனிவை உண்டாக்கும் செயலாகும்.

ஆங்கில மழலைப் பள்ளிகளைத் தமிழ் வழிப் பள்ளிகளாக்கல், மருத்துவம், பொறியியல், சட்டம், வேளாண்மை போன்ற உயர் கல்விகளைத் தமிழ்வழியில் கற்பித்தல் போன்ற உயர்ந்த கோட்பாடுகளுக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் எந்தப் பங்களிப்பும் செய்யவில்லை. மாறாக; ஆங்கில ஆதரவாளர்களுக்குத் துணைநின்று தமிழ்மொழி வளர்ச்சிக்குப் பெருந்தடையாகவே உள்ளார்.

தமிழ் மொழியை வைத்து எதுவும் செய்ய முடியாது என்று கூறித் தன் ஆங்கில அடிவருடித் தனத்தை, ஆங்கில ஆதரவாளர்களுக்கு நன்றிக்கடனைத் தெரிவித்துள்ளார்.

பெரும்பான்மையான ஆங்கிலப் பள்ளிகளில் தமிழை ஒரு மொழிப்பாடமாகக் கூட சொல்லிக் கொடுக்கப்படவில்லை. அரசும் அதற்கான

ஆணையை வழங்கவில்லை. அங்கொன்றும், இங்கொன்றுமாகச் சில பள்ளிகளில் தமிழ் ஒரு பாடமொழியாகச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது.

''ஆங்கிலப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களால் நல்ல தமிழில் எழுத முடியாத நிலையைக் காண்கிறோம்,'' என்னும் பொன்மொழியை உதிர்த்துள்ளார். இது தமிழ் வழியில் பயிலும் மாணவர்களை இழிவுபடுத்துவதோடு தமிழ் வழிக் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை அவமானப்படுத்துவதாகும்.

மேலும் கல்வித் துறைக்குப் பொறுப்பான அமைச்சரே இவ்வாறு சொல்வது அவரது கடமையை அவரே சரியாகச் செய்யவில்லை என்பதை உணர்த்துகிறது.

பள்ளிக் கல்வியைத் தமிழ்வழியில் படித்த அறிவியல் அறிஞர் சிதம்பரம், அப்துல்கலாம், சந்தானம் ஆகிய மூவரும் உலகப்புகழ்பெற்ற அறிவியல் வல்லுநர்களாக விளங்குகின்றனர். இந்திய ஆட்சிப்பணி போன்ற உயர்ந்த பணிகளிலும் இன்று பல இளைஞர்கள் இடம் பெற்று வருவதைக் கல்வி அமைச்சர் அறியமாட்டாரா?

புலவர் குழுவில் கலந்து கொண்ட முன்னாள் துணை வேந்தர்களான வா.செ. குழந்தைசாமி, ச. முத்துக்குமரன் போன்ற உலகப் புகழ்பெற்ற அறிஞர்கள் தமிழ் வழியில் பயின்று, பின்பு ஆங்கிலம் படித்து புகழ் பெற்றவர்களே!

இவற்றையெல்லாம் நோக்கும் போது நம் கல்வி அமைச்சர் அவர்கள், தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு வேண்டுமென்றே கேடு விளைவிக்கும் செயல்களில் ஈடுபட்டுள்ளார் என்பது அய்யமற விளங்குகிறது. இவர் தமிழ்நாட்டின் கல்வி அமைச்சரா? அல்லது ஆங்கிலம் பேசும் இங்கிலாந்து நாட்டின் கல்வி அமைச்சரா? இவர் தமிழ்நாட்டில் தமிழ் வளர்ச்சிபற்றி சிந்திக்கிறாரா? அல்லது ஆங்கில அடிவருடிகளுக்குக் காவல் புரிகிறாரா?

இவரின் திசை மாறிய பேச்சுக்களால் 'கலைஞர் அரசுக்கு' அவப்பெயர் மட்டுமே மிஞ்சும். தமிழ் அமைப்புகள் மட்டுமல்ல; பொதுமக்களே கல்வி அமைச்சரின் இத்தகைய போக்கை இழிவாக நினைக்கிறார்கள்.

தமிழ்வழியில் நம்பிக்கையற்ற கல்வி அமைச்சர் அன்பழகனைவிட ''தமிழால் முடியும்'' என்பதில் நம்பிக்கையும், செயல்பாடுமுள்ள ஒருவரைக் கல்வி அமைச்சராக ஆக்க வேண்டும்.

கல்வி அமைச்சர் அவர்களின் இத்தகைய தமிழ்த் துரோகப் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறோம்''. இப்படி வருத்தப்பட்டு எழுதக் கூடிய அளவுக்குக் கல்வி அமைச்சரின் பேச்சு அமைந்துள்ளது.

11.7.98இல் தமிழ் மேம்பாட்டுக் கூட்டமைப்பின் சார்பில் பேரணியும் பொதுக் கூட்டமும் நடைபெற்றன. அதுகுறித்து 'நக்கீரன்' இதழ் பின்வருமாறு எழுதுகிறது.

''அரசு நிர்வாகத்தில்; நீதித்துறையில், கல்வித்துறையில் தமிழை அதற்குரிய இடத்தில் அமர்த்த வேண்டும்''.

''தமிழ் ஆட்சி மொழிச்சட்டத்தை உண்மையாக நடைமுறைப்படுத்த வேண்டும்!''

''வேலை வாய்ப்போடு தமிழை இணைக்க வேண்டும்!''

''ஐந்தாம் வகுப்புவரை முதற்கட்டமாக தமிழ்மொழிதான் பாடமொழியாக இருக்க வேண்டும்!''

''தமிழ் உள்ளிட்ட அரசியல் சட்ட அட்டவணை மொழிகள் அனைத்தையும் மத்தியில் ஆட்சி மொழியாக்க வேண்டும்!'' - என்ற அர்த்தமுள்ள கோஷங்களோடு, எழுத்தாளர்களும் தமிழ் ஆர்வலர்களும் ஆயிரக்கணக்கில் கலந்துகொண்ட பேரணி, மேதினப் பூங்காவிலிருந்து புறப்பட்ட போதே உணர்ச்சிகளை உசுப்பிவிட்டது.

''நிர்வாகத்தில் தமிழ் இல்லை! நீதித் துறையில் தமிழ் இல்லை. கல்விக் கூடத்தில் தமிழ் இல்லை இவற்றைச் சொல்லிக்கொள்வதில் தமிழர்களே... உங்களுக்கு வெட்கமுமில்லை!'' என்பது அணிவகுப்புக் கோஷங்களில் ஒரு சின்ன சாம்பிள்தான்.

கூட்டத்தில் பேசியோர் சிலரது கருத்துகள்:

செந்தில்நாதன் (த.மு.எ.ச.): தமிழகத்தில் பொறியியல் கல்லூரிக்கான நுழைவுத்தேர்வில் தமிழில் ஏன் வினாத்தாள் கொடுக்கப்படவில்லை என்று ஒரு மாணவர் உயர்நீதிமன்றத்திலே ரிட்மனு தாக்கல் செய்தார். அதை விசாரித்த நீதிபதி, தனது தீர்ப்பில் ''தமிழில் கேள்வித்தாள் கேட்க, மாணவருக்கு சட்டத்தில் இடமில்லை. ஏனென்றால், தமிழில் கேள்வித்தாள் கொடுக்கக்கூடாது என்பது அரசின் கொள்கை!'' என்று தீர்ப்பளித்திருக்கிறார். தமிழக அரசின் தமிழ்மொழிக்கொள்கையை எடுத்துக் காட்ட இதைவிட உதாரணம் வேண்டுமா?

வசந்திதேவி (மனோன்மணியம் பல்கலை முன்னாள் துணை வேந்தர்): தமிழ் படித்தோருக்கே வேலை வாய்ப்பில் முன்னுரிமை என்று அறிவித்தால், தனியார் பள்ளிகள் எல்லாம் தானாகவே தமிழுக்குத் தாவிவிடும்.

ச. முத்துக்குமரன் (பாரதிதாசன் பல்கலை முன்னாள் துணைவேந்தர்): இங்கிலாந்து, சீனா, ஜப்பான் போன்ற நாடுகள் இன்று உயர்ந்து நிற்க அவற்றின் தாய்மொழிக்கல்விதான் காரணம். இதை இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, ஆப்பிரிக்க நாடுகள் இன்னும் உணரவில்லை.

கதிரேசன் (த.மு.எ.ச.): அறிவியல் நிர்மாணப்பணிகளை தமிழால் புரிந்துகொள்ள முடியாது என்கிறார்களே... இதில் இம்மியளவும் உண்மையில்லை. கல்லணை கட்டிய கரிகாலன் ஆங்கிலம் படித்துவிட்டா அதைக் கட்டினான்?

தமிழுக்கு நீதி கேட்டு நடந்த பேரணியும் பொதுக்கூட்டமும் நிறைவுபெற்று, நாம் புறப்பட்டபோது, படைப்பிலக்கிய திறமையுள்ள சில இளைஞர்கள் நம்மிடம் கூறினார்கள். ''சார்! தமிழ்மொழி வளர்ச்சிக்கான நியாயமான இந்தக் கோரிக்கைகளை மாற்றாந்தாய் மனப்பான்மையோடு பார்க்காமல், ஈன்ற தாயின் பார்வையோடு முதல்வர் கலைஞர் பார்த்தால், இந்த இருபதாம் நூற்றாண்டிலேயே தமிழுக்கு தங்கச் சிம்மாசனத்தைக் கொடுத்து விடலாம்!'' - என்றார்கள்.

முனைவர் இளவரசு: தமிழுக்கும் ஆங்கிலத்திற்கும் நடைபெறும் போராட்டம், இல்லாதவருக்கும் இருப்போருக்குமான போராட்டம். 1935-ல் தொடங்கிய, தமிழ் வளர்ச்சிக்கான போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டு பயனடைந்தவர்களில் ஒருவர்தான் இன்று ஆட்சிப்பொறுப்பில் இருக்கிறார். தமிழ் வளர்ச்சிக்கான போராட்டத்தில் இந்திக்கு எதிராக அரசியல் வாழ்வை துவக்கிய முதல்வர் கலைஞரின் பவளவிழா ஆண்டில் கூட தமிழுக்கு நீதி கேட்டு போராட வேண்டியுள்ளது'' என்று எழுதியது 'நக்கீரன்' இதழ்.

இந்தப் பேரணியை ஒட்டி (14.7.98) தீக்கதிர் இதழ் ஓர் ஆசிரியவுரை எழுதியது = சரியான கோணத்தில் எழுதப்பட்ட ஆசிரியவுரை இது,

''மொழி உரிமையை புறந்தாள்ளாதீர்''

விடுதலைப் பொன்விழா ஆண்டு நிறைவுக் கட்டத்தை எட்டிக் கொண்டிருக்கும் நிலையில், தமிழுக்கு நீதி கேட்டு, அதுவும் தமிழகத்தின் தலைநகரிலேயே ஒரு பேரணி நடத்த வேண்டிய நிலைமைதான் இருக்கிறது என்பது மிகப்பெரிய வேதனை. ஆட்சி மொழிப் பிரச்சனையிலும் சரி, அனைத்து மொழிகளையும் சரிநிகராக மதிப்பதிலும் சரி மத்திய - மாநில ஆட்சியாளர்கள் எவ்வளவு அலட்சியமாக இருந்து வந்திருக்கிறார்கள் என்பதற்கான உரைகல்தான் கடந்தவார இறுதியில் நடந்த அந்தப் பேரணி.

மொழி என்பது கருத்து வெளிப்பாட்டு வாகனம் மட்டும்தானா, அதற்கு அப்பால் உணர்வோடு கலந்து ஆழமான ஒன்றா என்கிற விவாதம் ஒரு பக்கம் இருக்கிறது. ஆனால் இன்றைய நிலையில் மொழி என்பது - அதிலும் தாய் மொழி என்பது - இனத்தின் அடையாளமாக இருக்கிறது என்பதை மறுப்பதற்கில்லை. எனவேதான் மொழி உரிமைகள் மதிக்கப்படுவது என்பது குறிப்பிட்ட இன உரிமைகள் மதிக்கப்படுவதோடு நேரடியாக தொடர்புடையதாகிறது. இதை விரிவுபடுத்திப் பார்த்தால், பல்வேறு தேசிய இனங்களைக் கொண்ட நம் நாட்டின் ஒற்றுமை, மக்களின் ஒருமைப்பாடு என்பவற்றோடு சம்மந்தப்பட்டது இது. இன்னும் ஆழமாகப் பார்த்தால் நாட்டின் அனைத்துப் பகுதி மக்களின் சமத்துவமான முன்னேற்றத்திற்கும் தாய்மொழி உரிமை பாதுகாப்புக்கும் நெருங்கிய சம்பந்தம் உண்டு.

இந்தக் கண்ணோட்டத்தோடுதான், முப்பதுக்கும் மேற்பட்ட தமிழ் அமைப்புகள் கூட்டாகச் சேர்ந்து நடத்திய அந்தப் பேரணியின் முழக்கங்களும் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் அமைந்திருந்தன.

தமிழைச் சொல்லி ஆட்சிக்கு வந்த திமுக அரசு இவற்றை தமிழ் மக்களின் வளர்ச்சிக்கான அக்கறையுள்ள ஆலோசனைகளாக எடுத்துக் கொண்டு செயல்படுத்த வேண்டும். தமிழ் வளர்ச்சிக்கு என ஒரு தனி அமைச்சகம் என்ற வரவேற்கத்தக்க நடவடிக்கையை மேற்கொண்ட தமிழக அரசு, அதற்கு உரிய அதிகாரங்களை வழங்கி, அமைச்சகம் அமைக்கப்பட்டதை அர்த்தமுள்ளதாக்க வேண்டும். உயர்நீதிமன்றத்தில் தமிழே ஆட்சி செய்ய சட்டமன்றத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றுவது முதற்படி. இதிலேயும் மேற்குவங்க இடது முன்னணி அரசு வழிகாட்டியிருக்கிறது.

ஒரு அரசியல் நிர்ப்பந்தமாக, தேசிய மொழிகளை ஆட்சி மொழிகளாக்குவது தொடர்பாக ஒரு ஆணையம் அமைக்கப்படும் என தனது தேசிய செயல்திட்டத்தில் மத்திய பாஜக கூட்டணி அரசு கூறியிருக்கிறது. இன்றுவரை அப்படியொரு ஆணையம் அமைக்கப்படவும் இல்லை. கூட்டாளிக் கட்சிகள் அதை வலியுறுத்தவும் இல்லை. ஒரே தேசம் - ஒரே கலாச்சாரம் என்கிற மந்திரத்தை உச்சரிக்கிற பாஜக இதில் எந்த அளவு உண்மையாக இருக்கும் என்பது ஊகத்துக்கே விடப்பட வேண்டும்.

மொழி உரிமைக் கோரிக்கைகளைக் கடந்த காலம் போல் இனிமேலும் கண்டு கொள்ளாமல் கடத்தி விடலாம் என மத்திய - மாநில அரசுகள் கருதி விடக்கூடாது. விழிப்படைந்து வருகிற மக்கள் அத்தகைய அலட்சியங்களுக்குத் தக்க பாடம் புகட்டுவார்கள். அந்த புதிய எழுச்சியின் ஒரு அடையாளம்தான் தமிழ் மேம்பாட்டுக் கூட்டமைப்பு. அதன் பயணம் வெற்றிகரமாகத் தொடரத் தமிழ் மக்கள் வாழ்த்துகிறார்கள்.

கல்லை தே. கண்ணன் 'வள்ளுவர் வழி' இதழில் ஓர் ஆசிரியவுரை எழுதுகிறார். (தி.வ.2029,ஆடி)

தயக்கம் என்? தமிழாய்ந்த தலைமகன் தான் இன்று நம் தமிழக அரசுக் கட்டிலில் வீற்றிருக்கிறார். பைந்தமிழ்ப் பச்சையப்பன் கல்லூரிப் பேராசிரியர்தான் நம் தமிழக அரசின் கல்வி அமைச்சராக இருக்கிறார். இவர்கள் எல்லாம் 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்ற முழக்கத்தின் மூலவர்கள். இவர்களது ஆட்சி கடந்த முப்பதாண்டுகளாக (இடையிடையே சிற்சில ஆண்டுகள் விடுபட்டிருப்பினும்) நடைபெற்றுத்தான் வருகிறது.

தமிழே பயிலாமல் பட்டப்படிப்பு, ஆய்வுப்பட்டம் பெறக் கூடிய அவல நிலை நம் தமிழகத்தில்! மழலையர் பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை ஆங்கிலம் அரசோச்சுகிறது. அதுபயிற்சி மொழியாக அமைந்து சிறுகச் சிறுகத் தமிழ் இருக்குமிடம் தெரியாமல் செய்துவருகிறது. இந்நிலை மாறுவது எப்போது?

தமிழகத்தில் தமிழ் தான் பயிற்சிமொழி; கருத்துவேறுபாடு இல்லை. ஆனால் நடைமுறைப்படுத்த ஆண்டுகள் பலவாகியும் இயலவில்லை. இயலாமை என்று சொல்லமாட்டோம்!

தமிழை எல்லா நிலைகளிலும் அட்சியணையில் ஏற்ற பயிற்றுமொழியாக எப்போது வரும்? ஆங்கிலத்தையும் இந்தியையும் புறக்கணிக்காமல் அண்டை மாநில மொழிகள் ஏற்றம் பெற்றுவருவதைக் காண்கிறோம். அவர்களைவிட தாய்மொழிப்பற்றில் நம்மை ஆளுகின்றவர்கள் குறைந்தவர்கள் என்று கூறமாட்டோம், தாய்த்தமிழ் பற்றாளர்களே! சந்தேகமில்லை.

ஆனாலும் மழலைப் பள்ளிகள் முதல் பல்கலைக்கழகம் வரை பயிற்றுமொழி தமிழ்தான் என நடைமுறைப்படுத்திக் காட்டத் தயக்கம் ஏன்? அன்பு கூர்ந்து தமிழக மக்களுக்கு விளக்கம் அளியுங்கள் என நம் தமிழக அரசினைக் கேட்டுக் கொள்கிறோம்''.

இவர் அரசின் ''திருவள்ளுவர் விருது'' பெற்றவர். இவர்களது கருத்துகளெல்லாம் கவனிக்கப்படுகின்றன என்பதற்காகவே இங்குத் தந்துள்ளேன்.

'முகம்' இதழில் மாமணி (1.8.98) ஓர் ஆசிரியவுரை எழுதினார்.

''அண்ணாவின் ''இரு மொழிக் கொள்கை'' என்ன? தமிழ், ஆங்கிலமா? ஆங்கிலம், ஃபிரஞ்ச்சா?'' என்பது தலைப்பு.

மீதியைப் படியுங்கள்:

தமிழக அரசின் இரு மொழிக் கொள்கை என்பது, தமிழும் ஆங்கிலமும்தான்!'' என்று, அறிஞர் அண்ணா அவர்கள் சட்டப் பேரவையில் உறுதியாகக் கூறினார்.

ஆனால், அண்ணாவின் வாக்குறுதி சட்டமாக வரும்போது, அதில் இந்தத் தெளிவு இல்லாமல் பார்த்துக் கொண்டது ஆங்கில மோகம் கொண்ட அதிகார வர்க்கம். அதன் விளைவாக ஆங்கிலம் ஆட்சியிலும், கல்வியிலும் முதன்மை படுத்தப் பட்ட, விதிவிலக்குகளால் 'தமிழ்' பின்னுக்குத் தள்ளப்பட்டு விட்டது.

இப்போது இரண்டு ஆண்டுகளாக ஆங்கிலம் முன்வரிசையிலும் ஃபிரெஞ்ச் இரண்டாம் வரிசையிலும் இடம் பிடித்துக் கொண்டு தமிழைத் தெருத் திண்ணைக்குத் துரத்தி விட்டன. பன்னிரண்டாவது (பிளஸ் ட்டூ என்று சொல்வது கேவலம்) வகுப்புகளில் மாநிலத்திலேயே முதலாவதாக வரும் மாணவ மாணவியர் ஃபிரேஞ்ச் மொழியில் முதலாவதாகவும், ஆங்கிலத்தில் இரண்டாவதாகவும் வந்து, தமிழையே புறந்தள்ளி விடுகின்றனர்.

இந்த அவல நிலைக்கு யார் பொறுப்பு? கல்வி அமைச்சர்தானே? அண்ணாவின் இருமொழிக் கொள்கை என்பது ஆங்கிலமும் ஃப்ரெஞ்சும்தான் என்று சொல்வாரா? ஆகவே, கல்வி அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் தமிழ்ப் பற்றில்லாத ஆங்கில மோகம் கொண்டவர். அவரை, ஆங்கிலத்தை ஒரு பாடமாகப் படிக்கும் ஆங்கிலக்கல்விக்கு அமைச்சராக்கி விட்ட, தமிழ் மொழிக்கல்விக்கு தமிழ்ப்பற்றும் ஆங்கிலப் புலமையும் உள்ள தமிழ்க்குடிமகனை தமிழ்க்கல்வி எல்லாத்துறைக்கும் அமைச்சராக்குவதோடு, தமிழ் வழியில் படித்தோருக்கு வேலைவாய்ப்பிலும் முன்னுரிமை என்று அறிவிக்குமாறு தமிழக முதல்வர் கலைஞரை வேண்டுகிறோம்".


இதில் எங்களையெல்லாம் இழுத்து எழுதியிருந்தாலும், தமிழ் அறிஞர்கள், அன்பர்களின் கருத்தோட்டம் எப்படி அமைந்துள்ளது என்பதற்கு இஃதோர் எடுத்துக்காட்டாகும்.

'செந்தமிழ் முரசு' இதழில் (செப்டம்பர் 1998) ஓர் அருமையான கட்டுரை:

செந்தமிழ் முரசு • ஆவணி - புரட்டாசி • உ0உகா
(செப்டம்பர் '98)

இரு மொழிக் கொள்கையை சுமக்கும் ஏமாளித் தமிழர்கள்.

நாம் மட்டும்தான் தமிழோடு ஆங்கிலமும் கட்டாயம் படிக்கவேண்டும். இன்னும் கூட சொல்வ தென்றால் - தமிழ் படிக்காமலேயே ஆங்கிலமும் வேறு ஒரு மொழி பாடம் படித்து விட்டு, கல்லூரிவரை சென்று பட்டம் வாங்கி விடலாம் - இதுதான் தமிழ் நாட்டின் நிலை -



टाकम सिंह

कांट्रेक्टर

पी० डब्लू० टी०, जल संसाधन विभाग, एस० ए० डी० ए०, डिस्ट्रिक्ट पंटेरियस सप्लायर एवं सेवर कांट्रेक्टर।

यमना जिला इतरपुर (म0 प्र0)

क्रमांक दिनांक

प्रति

क्र०	विवरण	संख्या	दर	कीमत रु० पै०

● समस्त विवादों का न्यायालय क्षेत्र इतारपुर होगा।

● बिल का भुगतान कम्पनी १५ दिवस में अनिवार्य होगा।

हस्ता० / प्राप्तकर्ता

ஆனால் மேலே உள்ள படத்தை பாருங்கள். அவர்களது வணிகப்பற்று சீட்டு முழுவதும் இந்தியில் - எண்கள் கூட இந்தியில் - எங்கேயாவது சிறிதாவது ஆங்கிலம் இருக்கிறதா ? அம்மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ஒரு மொழியை இந்தியை. மட்டுமே கல்வி கூடம் முதல் வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் பயன்படுத்துகிறார்கள். தமிழ்நாடு இருமொழி கொள்கையினை இருக்கி பிடித்து கொண்டிருக்கிறது.

ஆனால் தமிழகத்தின் நிலை தமிழ் படிக்காவிட்டாலும் - ஆங்கிலம் அவசியம் என்கிறது. வடமாநிலங்கள் ஒரு மொழி கொள்கையில் உறுதியாக இருக்கிறது.

லட்சகணக்கான ஆங்கிலமழலையர்பள்ளிகளில் ஆங்கிலத்திற்குமுக்கியத்துவம் தந்து அனைத்து பாடங்களும் ஆங்கில வழியிலேயே சொல்லித்தரப்பட்டு தமிழ், ஏனோதானோ என்ற அளவில் சொல்லி தரப்படுகிறது.

இந்த ஆங்கிலப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்கள் எதிர்காலத்தில் கோட்டை முதல் எங்கனும் பரவி இருக்க போகிறார்கள். இவர்கள் எங்கே தமிழை கையாளப் போகிறார்கள் - இன்னும் மோசமான ஒரு நிலையினை தமிழும் - தமிழகமும் எதிர்காலத்தில் சந்திக்க இருக்கிறது.

கடைகளில் தரும் ஒரு பட்டியலையும், சில விளம்பரப் பலகையையும் தந்துள்ளனர். எல்லாமே இந்தி மொழியில்தான்.

நாம் எவ்வளவு பின்தங்கியிருக்கிறோம்? போலி வாதம் பேசிக் கொண்டிருக்கிறோம் என்பதனை மிகுந்த வேதனையுடன் இந்த இதழ் சுட்டிக் காட்டுகிறது.

'வள்ளுவர் வழி' இதழில் வள்ளுவர் வழி பேரிலேயே ஓர் ஆசிரியவுரை படியுங்கள்.

எதற்கும் எதிர்ப்பா?

தமிழ் வளர்ச்சிக்கு என்று எந்த முயற்சியை மேற்கொண்டாலும் எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது.

'தமிழ் வழிக்கல்வி' என்றால், எதிர்ப்பு.

'தமிழ் வழி இசை' என்று கேட்டால், எதிர்ப்பு.

'தமிழ்வழி வழிபாடு' வேண்டும் என்றால், எதிர்ப்பு.

'மழலைச் செல்வங்களுக்குத் தமிழ்வழிக் கல்வி பயிற்றுங்கள், என்றாலும் எதிர்ப்பு.

இவற்றையெல்லாம் வேண்டும் என்று கேட்பது தமிழகத்தில்தான்; பிறமொழி மாநிலங்களில் அல்ல. ஆனால் எதிர்ப்புகள் தமிழகத்தில் வாழ்பவர்களிடமிருந்துதான்.

'தமிழ்வழிக்கல்வி' என்கிறபோது உலக அறிவைத் தமிழால் மட்டுமே பெற முடியாதே, ஆங்கிலம் அல்லவா வேண்டும் என்ற 'சாக்குப்போக்கு' எதிர்ப்பு.

'தமிழ் வழி இசை' என்றால் இசைக்கு மொழி ஏது? ஏன் தமிழில் மட்டும் பாடவேண்டும், என்ற கேள்வி.

'தமிழ்வழி அருச்சனை' வேண்டும் என்றால், இதுகாறும் நடைமுறையில் இருந்துவரும் ஆகம விதிகளை மீறுவதா, என்ற கேள்விக்கணை.

இவ்வாறு எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள் பிற மொழிகளை அண்டை மாநில மொழிகளைப் பேசுபவர்களா? இல்லவே இல்லை!

தமிழகத்தில் வாழ்பவர்கள்; தமிழைத் தம் வீட்டிலும் பேசுபவர்கள்; தாங்களும் தமிழர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள்தான், இத்தகைய எதிர்ப்புகளை வெளிப்படுத்துகின்றனர். ஏன்?

தமிழகத்தில் தமிழ்வளம் பெறக்கூடாது.

பிறமொழிக் கலாச்சாரம் மறையக்கூடாது.

ஆங்கிலம் தமிழகத்தைவிட்டு மறையக்கூடாது.

தமிழ் என்றென்றும் இரண்டாந்தர மொழி நிலையில், இருந்து வரவேண்டும் என்று நினைப்பவர்கள். இவர்கள் தமிழ்நாட்டில் யார், எவராக இருந்தாலும் 'இனம்போன்று இனமல்லர்' என்று இவர்களை அழகாகக் காட்டுகிறார் ஆசிரியர்.

'தமிழ்வழிக் கல்வி' யை ஆதரித்து எழுதுவதிலும், மெட்ரிகுலேசன் பள்ளிகளின் அட்டூழியங்களைத் தோலுரித்துக் காட்டுவதிலும் 'தினமலர்' எப்போதும் முன்னிற்கிறது அந்த அடிப்படையில் 16.11.98ஆம் நாளைய முதல்வர் அறிவிப்புக்குப் பொதுமக்களிடம் எப்படிப்பட்ட எதிரொலி உள்ளது என்பது குறித்து உடனடியாக ஒரு கணக்கு எடுத்து அடுத்த நாளே (17.11.98) 'தினமலர்' விரிவான ஒரு தொகுப்பினை வெளியிட்டது. அவற்றை அப்படியே தருகிறேன்.

8ம் வகுப்பு வரை தமிழ் மீடியம்
பொதுமக்களிடம் ஒரு 'உடனடி' சர்வே

சென்னை,நவம்பர்17-

பள்ளிகளில் எட்டாம் வகுப்பு வரை மாணவ, மாணவிகளுக்கு இனி தமிழ் வழியில் தான் பாடம் நடத்தப்பட வேண்டும் என்று அரசு நேற்று உத்தரவிட்டுள்ளது. அரசின் இந்த புரட்சிகரமான உத்தரவு, தமிழக கல்வித்துறையில் மட்டுமின்றி, தமிழ் வளர்ச்சியிலும் முக்கிய பங்காற்றும். அரசின் இந்த முடிவு குறித்து பொதுமக்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை தெரிந்து கொள்ள, 'தினமலர்' நேற்று சென்னை நகரில் ஒரு விரைவு சர்வேயை மேற்கொண்டது. அரசின் முடிவை சகல தரப்பினரும் வரவேற்றதை காண முடிந்தது.

சாம்பிளுக்கு சில:

எனக்கு இரண்டு குழந்தைங்க இருக்காங்க. கிடைக்கிற வருமானத்திலே அவங்கள பள்ளிக்கு அனுப்பறதே ரொம்ப சிரமம். இருந்தாலும், கார்ப்பரேஷன் பள்ளிக்கூடத்திலே அவங்கள சேர்த்திருக்கேன். அப்படியிருந்து கான்வென்ட்ல இங்கிலீஷ் மீடியம் படிக்கிற புள்ளைங்களுக்கு ரொம்ப அறிவு இருக்கிற மாதிரியும், கார்ப்பரேஷன் பள்ளியில் தமிழ் மீடியம் படிக்கிற புள்ளைங்களுக்கு அறிவு குறைவா இருக்கிற மாதிரியும் இளக்காரமா போய்யிடுச்சு. எட்டாம் வகுப்பு வரை தமிழ் மீடியம் தான். அரசு இப்ப உத்தரவு

போட்டிருக்கிறது ரொம்ப நல்லதா போச்சு. இனிமே புள்ளைங்க மத்தியிலே இளக்கம் இருக்காதுங்களே. - கண்ணையா, ரிக்ஷா தொழிலாளி, சைதாப்பேட்டை.

தமிழ் மொழியில் படிப்பதே உதவாத வேலை என்று இருக்கும் நிலையில் எட்டாம் வகுப்பு வரை தமிழைக் கட்டாயப்பாடமாக்கப்படும் என முதல்வர் கருணாநிதி அறிவித்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது.

எந்த ஒரு நாடும் அதன் மக்களும் அவரவர் தாய்மொழியில் பயில்வதால் மட்டுமே முன்னேற்றம் காணமுடியும் என்பது உண்மையாகும். இன்றைக்கு ஆங்கில மொழி மோகம் சாதாரண பாமர மக்களையும் ஆட்டிப்படைக்கிறது. காரணம், தம் குழந்தைகள் ஆங்கிலத்தில் பேசவேண்டும். படிக்க வேண்டும் என்ற பெற்றோர்களின் ஆவல். ஆனால், அதிகம் செலவழித்து படிக்கும் போது மேலும் பணம் கட்ட இயலாமல் பாதியிலேயே மாணவர்கள் படிப்பை விட்டு விடும் நிலையும் உள்ளது. இது ஒருபுறமிருக்க தமிழில் படித்தால் வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் இல்லாத நிலை. இதனால்தான் பிறமொழியை நாடும் நிலை. மேலும் தமிழ் படித்தவன் என்றால் அவர்கள் சமுதாயத்தில் ஒதுக்கப்பட்டவர்கள் போல கருதப்படுகிறார்கள்.

இந்நிலையைப்போக்க தமிழ் படித்தவர்களுக்கும், படிப்பவர்களுக்கும் அனைத்துத்துறையிலும் முன்னுரிமை, வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் என்ற நிலை வருமாயின் தமிழை விரும்பி படிப்பவர்களின் எண்ணிக்கை கூடும். தமிழுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அரசின் தலையாய உடமையாகும். - பாலகுமார், சமூகநல ஊழியர், பெரம்பூர்.

ஆரம்பக்கல்வியை தமிழில் கற்றுத்தர வேண்டும் என்ற நல்ல முயற்சியை தமிழக அரசு கொண்டு வந்துள்ளது. இத்தோடு தனது கடமை முடிந்து விட்டதாக கருதாமல், உயர்கல்வியையும் தமிழிலேயே கொண்டு வருவதற்கு அறிஞர்கள் அடங்கிய குழுவை அமைத்து புதிய சொற்களையும், புத்தகங்களையும் கொண்டு வர வேண்டும். அறிவியல், பௌதீகம், ரசாயனம், தொழில்நுட்பம், மருத்துவம், பொறியியல், கம்யூட்டர் போன்ற பல்வேறு துறை உயர் கல்வியையும் தமிழிலேயே தொடர அடிப்படை வசதிகளை உருவாக்க வேண்டும். அப்படி செய்வதுதான் தமிழுக்கு இந்த அரசு செய்யும் உண்மையான தொண்டாகும். - பாண்டியன், மி.வா. ஊழியர், அண்ணாசாலை.

தாய்மொழிக்கல்வியை ஊக்குவிப்பதும், அதன் வாயிலாக கல்வி புகட்டுவதும் பாடங்களைப் புரிந்து கொள்வதற்கு எளிமையானதாகவும், வேற்று மொழி ஆதிக்கத்தைத் தணிப்பதற்கும் உதவும். அவ்வகையில் 8ம் வகுப்பு வரை தமிழ் மொழிக்கல்வி கட்டாயப் பாடமாக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதே.

மேலான பகட்டுக்காக ஆங்கிலக் கல்வியை அரைகுறையாகக் கற்றுவிட்டு தமிழிலும் அரைகுறையறிவுடன் இருப்பது மலிந்து வருகிறது.

மொழி வளர்ச்சியுடன் தமிழ் பண்பாட்டு வளர்ச்சியும் இதன்மூலம் சாத்தியப்படும். தாய் மொழியுடனான அன்னியமாதல் தவிர்க்கப்பட்டு அறிவியல் தமிழ் வளர்ச்சிக்கும், இவ்வளர்ச்சி தூண்டுகோலாய் விளங்கும்.

மொழி வளர்ச்சியும், நாட்டு வளர்ச்சியும் பிரிக்க இயலாதது.

மொழி வாழ்ந்தால் மொழி வாழ் மக்களும் நாடும் வளர்ச்சியடைவர். 'உனக்கு வந்த நலம் எனக்கு வந்ததாகும்' என்று தமிழ்த்தாயிடம் பாவேந்தர் கூறியது முற்றிலும் உண்மை. இது இந்த நடைமுறைப்படுத்தலில் சாத்தியமாகும். - பாலாஜி, தி.நகர்.

மழலையர் பள்ளிகளில் தமிழ் கட்டாய பாடமாக கற்பிக்க வேண்டும் என்ற தமிழக அரசின் முடிவு அனைவராலும் வரவேற்கத்தக்க ஒன்று.

பிறந்தது முதல் பள்ளிக்கு செல்லும் வரையிலான முதல் 3 ஆண்டுகள், குழந்தைகளுக்கு அறிமுகமான ஒரே மொழி தமிழ். தமிழிலேயே பேசி பழகிய குழந்தைக்கு, தமிழிலேயே பாடங்கள் கற்றுக் கொடுத்தால் அதிக சிந்திக்கும் திறனை கொடுக்கும். அதையே 8ம் வகுப்பு வரை தொடர வேண்டும் என்ற தமிழக அரசின் அறிவிப்பு பாராட்ட வேண்டியது.

படிப்படியாக மேல்நிலைக் கல்வியிலும், வேலை வாய்ப்பிலும் தமிழில் படித்தவர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். தமிழ் பாடத்திட்டத்தை அனைத்து மக்களும் ஏற்றுக் கொள்ளும் வகையில் சட்ட திட்டங்களை அரசு தீவிரமாக்க வேண்டும். இதன்மூலம், அரசின் திட்டங்களை தமிழகத்தில் அனைத்து மக்களும் ஏற்கும் சூழ்நிலை உருவாகும். - க.செ. அருள்மொழிசெல்வன், பாங்க் ஊழியர், மடிப்பாக்கம்.

மழலையர் பள்ளிகளில் தமிழ்மொழியை ஒரு பாடமாக சொல்லித்தர வேண்டும் என்று அரசு உத்தரவிட்டுள்ளது வரவேற்க வேண்டிய ஒன்று.

தமிழகத்தில் உள்ள மழலையர்கள் பள்ளிகளில் போதனா மொழி ஆங்கிலமாகவும், குழந்தைகளின் தாய்மொழி ஒரு பாடமாகவும் சொல்லித்தரப்படுகிறது. இதனால் தாய்மொழி தமிழ் மொழியாக இல்லாத குழந்தைகளுக்கு தமிழ்மொழி அறவே தெரியவில்லை. தமிழ்நாட்டில் வாழ்ந்து கல்வி கற்று தமிழ்மொழி தெரியாமல் இருப்பது விரும்பத்தக்கது அல்ல. தமிழ்நாட்டில் உள்ள மழலையர்கள் பள்ளிகளில் தமிழ்மொழி கட்டாயமாக்கப் பட்டுள்ளது காலம் கடந்த ஒரு செயலாக இருந்தாலும் 21ம் நூற்றாண்டுக்குள் அரசு இந்த ஒரு நல்ல முடிவை எடுத்துள்ளது வரவேற்கத்தக்க ஒரு சிறப்பு அம்சமாகும். - கே. பூமிநாதன், பத்திரிகையாளர், புரசைவாக்கம்.

தமிழ்மொழி வளர்ச்சிக்கு அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளில் இது பாராட்டத்தக்கது. நர்சரிப்பள்ளிகளிலேயே தமிழ் கற்றுத் தந்தால்தான் நமது மொழியின் மீது வருங்கால சந்ததிகளுக்கு பற்று ஏற்படும்.

துவக்கப் பள்ளிகளில் தமிழ் மொழி மூலம் அனைத்து பாடங்களும் கற்பிக்கப்பட வேண்டும் என்பதால் பள்ளிக் குழந்தைகள் அனைத்துப் பாடங்களையும் எளிதில் கற்க முடியும். தமிழ் வளர்ப்பதற்கு ஏதுவாக கல்வியில் அரசியல் கலப்பு ஏதுமின்றி உண்மையான தமிழ் இலக்கியங்களை எளிமைப்படுத்தி குழந்தைகளுக்கு கற்றுத்தர அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே சமயம் மாணவர்கள் மற்ற மொழிகளை கற்றுக் கொள்வதை ஊக்குவிப்பதும் அவசியம். - சவுந்திரநாதன், இந்தியன் ஏர்லைன்ஸ், மீனம்பாக்கம்.

தமிழக அரசின் உத்தரவு வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. எந்தக் கருத்தானாலும் அதை அவர்கள் தாய் மொழியில் கூறும்போது புரிந்து கொள்வது சுலபம். பிறமொழிகளைப் படிக்கும்போதும், பேசும்போது ஏற்படும் தடுமாற்றம் தாய்மொழியில் பேசும்போது ஏற்படாது. மேலும் தமிழக அரசின் இந்த உத்தரவால் ஆங்கில மீடியம் படிக்கும் மாணவர்கள் வசதியானவர்கள், நம்மைவிட உயர்ந்தவர்கள் என்ற எண்ணம் தமிழ் மீடியம் படிக்கும் மாணவர்களை விட்டு விலகும். - மணிவண்ணன், சிட்கோநகர், வில்லிவாக்கம்.

எட்டாம் வகுப்பு வரை இனி தமிழ்....'தமிழக' அரசின் முடிவு வரவேற்கத்தக்கது. 'தமிழ் இனிமேல் சாகாது' என்ற நம்பிக்கை துளிர்விட்டு விட்டது. எத்திசையும் புகழ்மணக்க 'இருந்த' பெரும் தமிழணங்கே என்பதில் 'இருந்த' என்ற இறந்தகால சர்ச்சை முடிவுக்கு வருகிறது. இனி 'இருக்கும்' பெரும் தமிழணங்கே என்று துணிச்சலுடன் சொல்லலாம். இனிமேல், 'கல்தோன்றி மண்தோன்றி' என்பதை உதட்டளவில் இல்லாமல், உள்ளத்தளவில் கூறலாம். தாய்மொழிக்கு அங்கீகாரம். இனி தமிழ்ச்சங்கம் வளரும் ஐயமில்லை. மனப்பாடம் போகும். புரியும். எல்லாம் புரியும். வரவேற்போம். சீரிய முறையில் செயல்படும் போது... இன்னும் வரவேற்போம். - திருமதி. கிறிஸ்டினா, ஆசிரியை, அம்பத்தூர்.

எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்று சொன்ன தி.முக.,வினர் சற்று காலதாமதமாக கொண்டு வந்தாலும் இந்த முயற்சி வரவேற்கத்தக்கதே. தாய் மொழியில் கல்வி கற்பது கேவலம் என்று எண்ணுவதே கேவலமானதாகும். ஆயகலைகள் அறுபத்து நான்கையும் நம் தாய் மொழியில் கற்று நம் எதிர்கால சந்ததியினர் தமிழுக்கு பெருமை சேர்க்கட்டும். - அருண்குமார், தனியார் நிறுவன ஊழியர், கீழ்ப்பாக்கம்.

நாம் பிறந்தது முதல் கேட்டு அறிந்து, பேசுகிற தாய் மொழியில் எந்த கருத்தையும் சொன்னால் தான் அதை தெளிவாக புரிந்து கொள்ள முடியும். கல்வியையும் தாய் மொழியில் கற்றுத் தந்தால்தான் நாம் தெளிவாக புரிந்து கொள்ள முடியும். அப்படி இல்லாமல், ஆங்கிலத்தில் கற்றுத் தருவதால், புரிந்து கொள்வதைவிட, மனப்பாடம் செய்வதற்கே பல குழந்தைகள் பழகி விடுகின்றன. உயர் கல்விக்கும், ஆராய்ச்சிக்கும் கல்வியை தாய் மொழியில் கசடற கற்பது தான் அறிவுடைமையாகும். அதை செய்த தமிழக அரசுக்கு பாராட்டுக்கள். - கார்த்திக், தென்ரயில்வே, பெரம்பூர்.

தமிழக அரசின் இந்த புதிய உத்தரவு வரவேற்கத்தக்கதே, தமிழ்நாட்டில் வசிக்கும் ஒவ்வொருவருக்கும் தமிழ் மொழி தெரிந்து இருப்பது அவசியம். ஏற்கனவே, உள்ள தமிழ்மொழி வழி நர்சரி பள்ளிகளுக்கு, கட்டணம் பாதியா குறைப்பது, எந்த விதத்தில் அப்பள்ளிக்கு உதவப்போகிறது எனத்தெரியவில்லை. இந்த பயன் பெற்றோர்களுக்கும் போய்ச்சேர வேண்டும்.

மேலும், பிறமொழியில் படிக்கும் மாணவர்களுக்கு, தமிழை ஒரு பாடமாகக் கற்பித்தால்தான் அவர்களால் எளிதில் 'பிக்-அப்' செய்து கொள்ள முடியும். - செண்பகவல்லி, (குடும்பத்தலைவி), நங்கநல்லூர்.

தமிழ்க்கல்வி எட்டாம் வகுப்புவரை கட்டாயமாகிறது என்பது வரவேற்கத்தக்கது. அங்கீகாரமற்ற பள்ளிகள், எந்த அடிப்படையில், அடுத்த ஏப்ரல் மாதத்திற்கு அங்கீகாரம் பெறும்? அரசு பள்ளிகளிலேயே பாடத்திட்டங்களை அமல்படுத்த தவிக்கும் கல்வித்துறை, இந்தப் பெரும்பணியை எவ்வளவு செலவழித்து நிறைவேற்றும்? பா.ம.க., ம.தி.மு.க., போன்ற கட்சிகள் தமிழுக்கு இந்திய அளவில் அங்கீகாரம் பெறத் துடிக்கும் போது, தேர்தலைக் கருதி மக்கள் மனதில் இடம்பெறும் காகித முயற்சியாகி விடக்கூடாது. - எஸ். எழில்மலை, ஓய்வுபெற்ற ஆசிரியர்.

தமிழக அரசின் உத்தரவு வரவேற்கத்தக்கது. எதையும் தாய்மொழியில்தான் தெளிவாக புரிந்துக்கொள்ள முடியும். தாய்மொழியை மழலையில் பேசி திரியும் குழந்தைகளுக்கு அன்னிய மொழியான ஆங்கிலம் சுமையானதுதான். இனி குழந்தைகளுக்கு அந்த சுமை இல்லை. ஜப்பான் போன்ற நாடுகளில் உயர் கல்விகூட தாய்மொழியில்தான் கற்பிக்க முடிகிறது. அந்த நாட்டின் மாபெரும் வளர்ச்சிக்கு இதுவும் ஒரு காரணம். தமிழ்நாட்டில் பயிலும் அனைவரும் தமிழ் கற்று இருக்க வேண்டியது மிக அவசியம். எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என நீண்ட நாட்களாக கூறிவரும் தமிழக அரசு இந்த உத்தரவை எப்போதோ பிறப்பித்து இருக்க வேண்டும். -பத்மினி, தண்டையார்பேட்டை.

எட்டாம் வகுப்புவரை தமிழில் பாடங்களை படிப்பது மாணவ, மாணவியரின் சுமையைக் குறைக்கும். தாய்மொழியில் கல்வியைத் துவக்குவதால், மேற்படிப்புக்கு செல்லும்போது 'எந்தவகையில்' எத்துறையில் கல்வி என்ற அணுகுமுறை எளிதாக கிடைக்கும்.

மெக்காலே கல்வி நடைமுறை இதுவரை கெடுத்துவிட்டது. இனி ஒரு நல்ல வாய்ப்பை தர இம்முயற்சி உதவிடும். மம்மி, டாடி கலாசாரத்தை முடிவுக்கு கொண்டு வருவது எதிர்கால தமிழகத்துக்கு நல்லது. - இரா. ஞானசம்பந்தம், அரசு ஊழியர், மேற்கு மாம்பலம்.

''கேரளாவில் மலையாளத்தை கட்டாயமாக்கிவிட்டனர். ஆறு மாதம் முன்பு கர்நாடகாவிலும் இது போல ஒரு சட்டம் வந்தது. தமிழகம் மட்டும் ஏன் விட வேண்டும். தமிழிலேயே நம் குழந்தைகள் படிக்கட்டுமே. குழந்தைகள் இன்று மம்மி,டாடி என்று பேசுவதை விட இனிமேல் அம்மா, அப்பா என்று இனிமையாக கொஞ்சும். அதேநேரம் தமிழில் கலைச்சொற்களை அதிகரிக்க வேண்டும். ரஷ்யாவிலும், ஜப்பானிலும், சீனாவிலும் ஆங்கில ஆதிக்கமில்லை. அவர்களால் முன்னேற முடியவில்லையா என்ன?''-ந. எம்பெருமான், பேராசிரியர், மடிப்பாக்கம்.

இதனை ஒட்டி 'தினமணி' (18.11.98) ஓர் ஆசிரியவுரை எழுதியுள்ளது. படியுங்கள்:

மழலை நாவில் தமிழ்

திராவிட இயக்க அரசுகளின் இருமொழிக் கொள்கைக்கு அபூர்வப் பின்னணி உண்டு. பள்ளிகளில் தமிழோடு ஆங்கிலம் என்பதே அக்கொள்கை. சமூக நீதி, மாநில சுயாட்சி, இந்தி எதிர்ப்பு ஆகிய மும்முகப்புக் கொள்கைத் திட்டத்தின் மூலம், தமிழகத்தில் பெரிய அரசியல் சக்தியாக இந்த இயக்கம் வேகமாக வடிவெடுத்தது. 'தமிழ் மண்ணில் இந்தி நுழை முடியாதபடி தடுப்பதற்காகவே ஆங்கிலம்' என்பதே இருமொழிக் கொள்கையின் உத்தியாக வர்ணிக்கப்பட்டது.

ஆனால், கல்விக் கூடங்களில் உண்மை நிலவரம் இப்பொழுது எப்படி இருக்கிறது? தொடக்கக் கல்வியால், மழலையர் பள்ளிகளில், குறிப்பாகத் தனியார் நடத்தும் கல்வி நிலையங்களில் ஆங்கிலத்துக்கு முதலிடம் மட்டுமல்ல - முழு இடமும் கூட. அரசின் அங்கீகாரம் பெறாமலே மாநிலமெங்கும் இத்தகைய பள்ளிகள் ஏராளமாக இருந்து வருகின்றன. அமைச்சர் தமிழ்க்குடிமகன் தந்துள்ள தகவலின்படி இத்தனியார் பள்ளிகளின் எண்ணிக்கை 20 ஆயிரம்.

இது ஒருபுறமிருக்க, மழலையர் பள்ளிகளில் தமிழுக்கே இடமிருப்பதில்லை. எல்லாம் ஆங்கிலத்திலேயே. பால்மணம் மாறாத மழலைகளின் நாவில் ஆங்கிலம் திணிக்கப்படுகிறது. தாய்மொழி அமர்ந்திருக்க வேண்டிய நாவில் ஆங்கிலமா? இந்த நிலைக்குத் தமிழரிடையே வளர்ந்து வரும் போலி நாகரிகத்துக்கும் பொய்க்கௌரவத்துக்கும் ஓரளவு பங்கு உண்டு என்பதை மறைக்கத் தேவையில்லை. 'இப்போக்கு நீடித்தால், நீடிக்க அனுமதிக்கப்பட்டால், அது தமிழின் எதிர்காலத்துக்கே ஆபத்தாகிவிடும்' என்று தமிழறிஞர்கள் அவ்வப்போது கவலை தெரிவிக்கத் தவறியதில்லை. இந்த ஆபத்தை எதிர்த்து அறிவார்ந்த இயக்கம் ஒன்றையே, தமிழ் உலகம் துவக்கி இரண்டாண்டுகளுக்கு மேல் ஆகிறது. தொடக்கப் பள்ளிகள் வரை தமிழே பாடமொழியாக வேண்டும் என்பது இந்த இயக்கம் எழுப்பிய பலமான கோரிக்கை.

அதற்கு இப்பொழுது பலன் விளைந்திருக்கிறது. 'மாநில அரசின் பாடத்திட்டத்தை அனுசரித்து நடைபெற்று வரும் மழலையர் பள்ளிகள் மற்றும் தொடக்கப்பள்ளிகள் அனைத்திலும் தமிழே பாடமொழியாக இருக்க வேண்டும்' என்ற ஆணையைத் தமிழக அரசு பிறப்பித்துள்ளது. அது மட்டுமல்ல. 'அறிவியலைத் தவிர்த்து, புவியியல், வரலாறு, கணிதம், சமூகவியல் போன்ற பாடங்கள் தமிழில் கற்பிக்கப்பட வேண்டும்' என்று ஆணை கூறுகிறது. மழலையர் பள்ளிகளிலும், தொடக்கப்பள்ளிகளிலும் தமிழுக்கு உரிய இடம் அளிப்பதற்கு இப்பொழுதாவது திட்டவட்டமான உத்தரவைப் பிறப்பித்த முதல்வர் பாராட்டுக்குரியவர்.

'தமிழை வைத்தே அதிகாரத்தைப் பிடித்த கழகத்தினரின் ஆட்சியில்-பள்ளிகளில், தமிழுக்கு இந்த அவல நிலையா?' என்று கோவையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேராசிரியர் சிற்பி பாலசுப்பிரமணியம் மனம் குமுறிக் கேள்விக் கணை தொடுத்த மறுநாளே தமிழக அரசு இந்த மகத்தான கொள்கையை வெளியிட்டிருக்கிறது. தமிழரின் நாடியைப் பிடித்துப் பார்த்து, அதற்கு ஏற்ற வகையில் அரசின் போக்கைத் திருத்தி அமைத்துக் கொள்வதில் தமக்குள்ள சாதுரியத்தை, முதல்வர் வெளிப்படுத்தியிருப்பது குறிப்பிடத்தக்கது. இதன் மூலம், மழலைப் பள்ளிகளில் இதுவரை இருந்து வந்த களங்கம் மறைகிறது.

அறிவிப்பினை மகிழ்வோடு ஏற்று தமிழாசிரியர் கழகம் கலைஞர்க்குப் பாராட்டைத் தெரிவித்திருக்கிறது. (கதிரவன் 18.11.98)

8-ம் வகுப்புவரை தமிழ் வழி பாடம்: தமிழ் ஆசிரியர்கள் கழகம் கருணாநிதிக்கு பாராட்டு

சென்னை, நவம்பர்18-

எட்டாம் வகுப்புவரை தமிழில் பாடங்கள் நடத்தப் படும் என்று அறிவித்த முதல்வர் கருணாநிதிக்கு தமிழகத் தமிழாசிரியர் கழகத்தினர் நன்றி தெரிவித்து உள்ளனர்.

தமிழகத் தமிழாசிரியர் கழக தலைவர் தில்லைவளவன், பொருளாளர் செய்யது கமால், இணைச் செயலாளர் நரேந்திரன், பொதுச்செயலாளர் நஞ்சப்பன் ஆகியோர் விடுத்து உள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

எட்டாம் வகுப்பு வரைத் தமிழ் வழியில் கற்பிக்கப்படும் என்ற முத்தான அறிவிப்பை வெளியிட்ட தமிழக முதல்வர், தமிழகக் கல்வி அமைச்சர் தமிழ் ஆட்சிமொழி, பண்பாட்டுத் துறை அமைச்சர் அகியோருக்கு தமிழகத் தமிழாசிரியர் கழகம் பாராட்டையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

வரலாற்று சாதனை

தமிழ் நாட்டில் தமிழ் படிக்காமலே பட்டம் பெறலாம் என்ற இழிநிலை நீக்கப்பட்டு, தமிழ் படிக்காமல் எவரும் இனி பட்டம் பெற இயலாத நிலையை ஏற்படுத்திய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் வரலாற்று சாதனை படைத்து உள்ளார்.

'சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்' என்ற பாரதியின் வாக்கிற்கும், 'தமிழ்த் தெருவில் தமிழ்தான் இல்லை' என்ற பாவேந்தரின் வேதனையை நீக்கிடும் வகையிலும் வந்து உள்ள இவ்வறிவிப்பைத் தமிழகம் மகிழ்வோடு ஏற்றுக் கொள்கிறது.

எத்தனையோ சாதனைகளைப் படைத்து மக்கள் மனதில் இடம் பெற்ற தமிழக முதல்வரின் சாதனைகளிலேயே இது மிகப்பெரிய வரலாற்றுச் சாதனையாகும்.

'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை' என்ற புரட்சிக் கவியின் வாக்கைப் போல் முதல்வர் கலைஞர் தமிழ் போல் செழித்து, நிலைத்து வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

தமிழாசிரியர் கழகத்தின் நீண்ட கால கோரிக்கை வெற்றி பெற்றுள்ளதற்கு தமிழாசிரியர் கழகம் நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது.

இவ்வாறு அறிக்கையில் குறிப்பிட்டு உள்ளனர்.

ஏ.பி.வி.பி. எனும் அமைப்பும் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

ஏ.பி.வி.பி.வரவேற்பு

மழலையர் கல்வி முதல் 8-ம் வகுப்பு வரை தமிழை கட்டாய பாடமாக்கவும், மழலையர் கல்வி தமிழ் வழியில் அமைக்கவும் தமிழக அரசு முடிவு செய்திருப்பதை ஏ.பி.வி.பி.யின் மாநில இணைச்செயலாளர் ஆர். ரகுபதி வரவேற்று அறிக்கை வெளியிட்டு உள்ளார்.

எட்டாம் வகுப்புவரை 'தமிழ்' என்றதும் எல்லா இடங்களில் இருந்தும் பாராட்டு குவிந்து கொண்டுள்ளது. அதனை ஏற்றுப் பலருடைய பாராட்டினைத் 'தினமலர்' (18.11.98) வெளியிட்டுள்ளது.

''எட்டாம் வகுப்பு வரை தமிழை கட்டாயப் பாடமாக்கி அரசு வெளியிட்ட அறிவிப்பு, மக்களிடையே பெரும் வரவேற்பை பெற்றுள்ளது. பல்வேறு அரசியல் கட்சிகளும், இயக்கங்களும் அரசுக்கு பாராட்டு தெரிவித்து அறிக்கை வெளியிட்டுள்ளன.

அனைத்திந்திய மாணவர் பெருமன்ற மாநிலச் செயலாளர் லெனின் விடுத்துள்ள அறிக்கை:

தமிழகம் முழுவதும் புற்றீசல் போல் ஆங்காங்கே முளைத்த கல்வி நிறுவனங்களில், ஆங்கிலத்தில் மட்டுமே பாடம் நடத்தப்படுகின்றன. இந்தக் கொடுமைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் நோக்கில், தமிழக அரசின் அறிவிப்பு வெளிவந்துள்ளது. இதேபோல், அங்கீகாரம் பெறாமல் நடைபெற்று வரும் மழலையர் பள்ளிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கவும், கட்டுப்படுத்தவும், அரசு முன்வர வேண்டும்.

இவ்வாறு லெனின் கூறியுள்ளார்.

தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி வெளியிட்டுள்ள அறிக்கை:

எங்கள் கூட்டணியின் சார்பில், கடந்த ஆண்டு நடைபெற்ற பொதுக் குழுவில், எட்டாம் வகுப்பு வரை தமிழிலேயே பாடம் நடத்த வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இந்த தீர்மானத்திற்கு உருவம் கொடுக்கும் வகையில், அரசு அறிவிப்பு வெளிவந்துள்ளது மகிழ்ச்சியை அளிக்கிறது.

இவ்வாறு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி கூறியுள்ளது.

குமரி அனந்தன் வெளியிட்டுள்ள அறிக்கை:

தமிழை ஒரு பாடமாகச் சொல்லிக் கொடுக்கும் மழலைப் பள்ளிகளுக்கு மட்டுமே அங்கீகாரம் வழங்கப்படும் என்றும், தமிழில் வரலாறு,

சமூகவியல், கணிதம் போன்ற பாடங்களை தமிழில் தான் போதிக்க வேண்டும் என்றும் தமிழக முதல்வர் கருணாநிதி அறிவித்துள்ளதை காந்தி பேரவை சார்பில் வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

இவ்வாறு குமரி அனந்தன் கூறியுள்ளார்.

மக்கள் சக்தி இயக்கத் தலைவர் எம்.எஸ். உதயமூர்த்தியின் அறிக்கை:

தமிழருக்கு இருக்கும் ஒரே சொத்து அவர்களுக்கு இருக்கும் புத்திசாலித்தனம் தான். அவர்களது சுயசிந்தனை தான். அதை மீட்டு, மீண்டும் தமிழை நிலை நிறுத்திய முதல்வரை எவ்வளவு பாராட்டினாலும் தகும். ஆங்கில மோகத்தால், பல பள்ளிகளில் அறவே தமிழ்ப்பாடம் இல்லாத காரணத்தால், தமிழ் நாட்டுக் குழந்தைகள், தமிழ்ப் பாரம்பரியங்களை அறியாத நிலைமை ஏற்பட்டு வந்தது. அதை தடுத்து நிறுத்தியது நல்ல காரியம். இந்த அறிவிப்பு, வரும் தலைமுறைகளின் வாழ்வை மலர வைக்கும் என்பதில் மக்கள் சக்தி இயக்கம் பெருமை கொள்கிறது. இவ்வாறு உதயமூர்த்தி கூறியுள்ளார்.

அது மட்டுமல்ல, 'தினமலர்' மற்றொரு நல்ல முடிவினையும் எடுத்து அனைவரும் செயற்பட அழைத்தது.

'தமிழுக்குத் தனி மரியாதை
குவியட்டும் வாழ்த்துத் தந்திகள்

என்று அறிவித்து அழகுபடுத்தியது 'தினமலர்'

''தமிழுக்கு தனி மரியாதை குவியட்டும் வாழ்த்து தந்திகள்!

தமிழ்நாட்டில் அடுத்த கல்வி ஆண்டு முதல் நர்சரி பள்ளிகள் முதல் எல்லா பள்ளிகளிலும் எட்டாம் வகுப்பு வரை தமிழ் மீடியம் வகுப்புகள் கட்டாயமாக்கப்படும் என்று தமிழக அரசு நேற்று முன் தினம் முடிவு செய்தது. தமிழக அரசின் இந்த முடிவுக்கு மக்களிடம் அமோக ஆதரவு கிடைத்ததை நேற்று முன்தினம் தினமலர் மேற்கொண்ட விரைவு சர்வே நிரூபித்தது. நேற்றும் தினமலர் அலுவலகத்துடன் ஏராளமானோர் நேரிலும், போனிலும் தொடர்பு கொண்டு தமிழக அரசின் முடிவிற்கு தாங்களும் ஆதரவு தெரிவிப்பதாக கூறினர்.

தமிழ் மொழி வளர்ச்சிக்கு மக்கள் மத்தியில் உள்ள இந்த ஆதரவு அரசுக்கும் தெரிய வேண்டும் அல்லவா? அப்போதுதானே இந்த திட்டத்தை இன்னும் வேகமாக, ஊக்கத்துடன் செயல்படுத்த முடியும். எனவே, தமிழக அரசின் இந்த திட்டத்தை பாராட்டி முதல்வருக்கு வாழ்த்து தந்திகளை

அனுப்புங்கள். தமிழிலேயே வாழ்த்து தந்திகளை அனுப்பலாம். வாழ்த்து தந்திகள் குவியட்டும். தமிழ் மொழி வளரட்டும்.

தந்திகள் அனுப்ப வேண்டிய முகவரி:

மாண்புமிகு மு. கருணாநிதி அவர்கள்,
முதல் அமைச்சர்,
புனித ஜார்ஜ் கோட்டை, சென்னை.''

'தினமணி' வெளியிட்ட ஆசிரியவுரையை ஒட்டியும், அரசின் அறிவிப்பை ஒட்டியும் ஆசிரியர்க்குப் பலமடல்கள் வந்துள்ளன. அவற்றைப் பார்க்கலாம். (தினமணி 30.11.98)

விருப்பப்பாடமாக ஆங்கிலம்

'தமிழ் கற்பிக்கும் பள்ளிக்கே இனி அனுமதி' என்ற தமிழக முதல்வரின் அறிவிப்பு (17.11.98) அக மகிழ்வைத் தருகின்றது.

மழலையர் பள்ளி, தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி ஆகியவற்றில் விருப்பப் பாடமாக மட்டுமே ஆங்கிலம் அமைதல் வேண்டும். சாதனை புரிந்தவர்கள் எல்லாம் தாய்மொழியில் கற்றவர்கள்தான். ஆங்கிலம் கற்பதிலும் தேர்ச்சி பெறுவதிலும் இந்தியக் குழந்தைகள் பெரிதும் அல்லல் படுகின்றனர்.

ஆங்கிலப் பாடத்தில் தேர்ச்சி பெற முடியாத ஒரே காரணத்தால் பலரது வாழ்வு ஒளி பெறாது கிரகணம் சூழ்ந்த நிலையில் உள்ளது. - இராம. ஜயப்பிரகாசம், மகுடஞ் சாவடி.

தமிழை ஏற்க வேண்டியவர்கள்

மழலையர் பள்ளிகளில் தமிழ்வழிப் பாடங்கள் கற்பிக்கச் செய்ய ஒரே வழி இதுதான்: அரசு அங்கீகாரம் பெறாத பள்ளிகளில் படித்த மாணவர்களை 7-ம் வகுப்புவரை 'பிரைவேட் டியூஷன்' சான்றிதழுடன் தேர்வு வைத்துச் சேர்க்கும் முறையை ஒழித்தாலே போதும்.

பெரும்பாலான அரசியல்வாதிகள், தமிழறிஞர்கள், தமிழ்ப் பேராசிரியர்களின் குழந்தைகள் ஆங்கிலம்வழி படித்து வெளிநாடுகளில் வேலைசெய்யும் முன்னுதாரணத்தால் ஏற்பட்டதே ஆங்கில மோகம். முதலில் 'தமிழ், தமிழ்' என்போர் குடும்பங்கள் தமிழை ஏற்கட்டும். தமிழில் படித்தோர்க்கு வேலை கிடைக்கட்டும். - கு. அரிகிருஷ்ணன், வேட்டவலம்.

அலுவல் மொழி

ஆங்கிலத்தை உயர் வகுப்புகள் வரை ஒரு பாடமாக வைத்தாலே போதும். பள்ளிகளில், அலுவலகங்களில் இன்றும் நடைமுறைப் பணிகள்

ஆங்கிலத்திலேயே நடைபெறுகின்றன. இந்நிலை மாறவும் கண்டிப்பான ஆணையை வெளியிட வேண்டும். - இரா. செயபால் சண்முகம், மதுரை-16.

எதிர்ப்புக் கூடாது

நீண்ட காலமாகத் தமிழ் அன்பர்கள் வலியுறுத்தி வரும் கொள்கையை அரசு ஏற்றுள்ளது. அரசின் இந்நடவடிக்கைகளுக்கு அனைத்து அரசியல் கட்சியினரும் ஆதரவு அளிக்கவேண்டும். எவரும் எதிர்க்கக்கூடாது. - நா. திருமலை, மதுரை-16.

தாய்மொழிக் கல்வி

கர்நாடகம், கேரளா, ஆந்திரம், ஒரிசா ஆகிய மாநிலங்களில் தாய் மொழிவழி பாடம் கற்பிக்கும் நிலை பல ஆண்டுகளுக்கு முன்பே நடைமுறைக்கு வந்துவிட்டது. தமிழ்நாட்டிலும் இந்த நிலை உருவாக அரசு வழி வகுக்க வேண்டும். - மலையமான், சென்னை-18.

செய்யவேண்டிய பணி

தாய்மொழியைப் புறக்கணித்து விட்டு ஆங்கில மொழியின் மேல் தமிழர்கள் மோகம் கொள்ள உண்மையான காரணம் என்ன என்பதை நல்ல அறிஞர்களைக் கொண்டு ஆழ்ந்து ஆராய்ந்து தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

எந்த ஒரு மொழியிலும் இலக்கிய வளம் இருந்தால் மட்டும் போதாது. மனிதனின் அறிவை வளர்க்கவும் மனிதவாழ்க்கை வளம் பெறவும் தாய்மொழி பயன் பட வேண்டும். தமிழ்வழி படித்து டாக்டர், பொறியாளர், விஞ்ஞானியாக வளர வேண்டும். இதற்கு அரசு வழி வகுக்க வேண்டும். - டி.எஸ். மூர்த்தி, சென்னை-102.

வேலை உத்தரவாதம்

செம்மொழியாம் தமிழ்மொழியை வழிபாடு, கல்வி, நீதி, நிர்வாகம், அறிவியல் என அனைத்துத் துறைகளிலும் வளர்த்தெடுக்க தமிழறிஞர்களுக்கு அரசு உதவிடவேண்டும். தமிழில் கல்வி கற்றோரின் வேலைவாய்ப்பிற்கு உத்தரவாதம் தரவேண்டும். மத்திய அரசின் இந்தித் திணிப்பை எதிர்த்துவிட்டு, நமக்கு நாமே ஆங்கிலத்தைத் திணித்துக் கொள்வது சரியாகாது. - சு. ஜனார்த்தனன், சென்னை-75.

தமிழ்வழி தொழிற்கல்வி

தொழிற்கல்வியும் தமிழ்வழி கற்பிக்கப்படுவதற்கான இனிய சூழல் உடனடியாக உருவாக்கப்பட வேண்டும். ஐந்து விழுக்காட்டினர் பிற

மாநிலங்களிலும் பிற நாடுகளிலும் வேலைவாய்ப்புப் பெறுவதைக் காரணம் காட்டி, 95 விழுக்காட்டினர், தமிழ்வழி தொழிற்கல்வி மறுக்கப்பட்டு, ஆங்கிலவழி தொழிற்கல்வி பெறச் செய்வது என்ன நியாயம்? தமிழ்வழி தொழிற்கல்வி பெற விழைவோர்க்கு எதிராயுள்ள தடைக்கற்களைத் தகர்த்தெறிய முதல்வர் முயலவேண்டும். புது வரலாறு படைக்க வேண்டும். - மணவை முஸ்தபா. சென்னை-40.

பெற்றோரின் கடமை

தாய்ப்பாலை உண்டு வளர்ந்த சிறுவன் எப்படி ஆரோக்கியமாக இருப்பானோ அதேபோன்று தாய்மொழிவழி கல்வி பயின்ற சிறுவனும் நல்ல அறிவுக்கூர்மையும் சிந்தனை வளமும் உடையவனாக இருப்பான்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட பெற்றோர்கள், மாநில அரசின் பாடத்திட்டத்தை ஏற்று நடத்தும் தனியார் பள்ளிகளில் தங்கள் குழந்தைகளைச் சேர்த்து அவர்களின் எதிர்காலத்தை ஒளிமயமாக்காலம் - வ.எ. ஏழுமலை, வயலாமூர்.

எதிர்மறையான விளைவு

வேலூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களில் உள்ள நகராட்சி. ஊராட்சி ஒன்றியம் மற்றும் தனியாரால் நடத்தப்படும் உருது பயிற்றுமொழி தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் 1957ம் ஆண்டு முதற்கொண்டே தமிழாசிரியர்கள் அமர்த்தப்பட்டு தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டு வருகிறது.

வழக்கமான பள்ளி வேலை நேரத்திலேயே ஒருங்கிணைந்த முறையில் தமிழ் வகுப்புக்கு நேரம் ஒதுக்கப்படுகிறது. இம் மாவட்டங்களில் இத் திட்டம் வெற்றிகரமாகச் செயல்படுத்தப்பட்டு வருவதால் இதையொட்டிய தமிழக முதல்வரின் தமிழ் கற்பித்தல் திட்டத்தை அமல்படுத்துவதில் எவ்விதச் சிரமமும் இருக்காது.

ஆனால் ஆங்கில வழி மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகளில் தமிழ் மொழியை ஒரு கட்டாயப் பாடமாகச் சொல்லித்தர வலியுறுத்தலாமே ஒழிய பெரும்பாலான பாடங்களையும் தமிழ் வழியிலேயே கற்பிக்க வேண்டுமென்று வலியுறுத்துவது எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தும். - டி. பஷீருத்தீன். மாநிலப் பொதுச் செயலாளர், தமிழ்நாடு உருதுபள்ளி ஆசிரியர் கூட்டணி.

மின்னலின் ஒளி போதவே போதாது

தமிழ் மொழிக்கு உரிய இடத்தை வழங்கும் நெடும் பயணத்தில் தமிழக அரசு இப்போதுதான் முதலடி எடுத்துவைத்திருப்பது போல் தோன்றுகிறது. அதுவும் மழலையர் பள்ளிகளிலும் தொடக்கப் பள்ளிகளிலும் மட்டுமே அரசின் கவனம் படிந்திருக்கிறது. அங்கும் அறிவியல் பாடங்கள் கற்பிப்பது ஆங்கில வழியில்தான் என்பதை உறுதி செய்திருப்பதைக் கல்வியாளர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும். கல்விக் களத்தின் அடிநிலையில்கூட விஞ்ஞானத்தைத் தமிழில் கற்பிக்க முடியாது என்பதை அரசின் அறிவிப்பு மறைமுகமமாகச் சுட்டுகிறதாக ஐயப்பட இடம் இருக்கிறது.

இனி, மேல் நிலைகளில் விஞ்ஞானத்தைத் தமிழ் வழியில் கற்பிப்பதற்கு அரசின் இந்த 'மகத்தான கொள்கை' எந்தக் காலத்தில் இடம் கொடுக்கப்போகிறதோ தெரியவில்லை. தமிழிலே விஞ்ஞானத்தைக் கற்பிக்கவே முடியாது என்று முதலைப்பிடி பிடித்துக் கொண்டிருக்கிறவர்கள் இனி வெறும் வாயை மெல்ல வேண்டிய தேவை இல்லை. ஏனென்றால், தொடக்கப்பள்ளி விஞ்ஞானத்துக்கே தமிழ் தகுதியற்றது என்று தமிழக அரசே - தமிழ் மொழிப் பற்றை மூலதனமமாகக் காட்டி வளர்ந்த இயக்கத்தின் அரசே- மறைமுகமாகப் புலப்படுத்தியிருக்கிறது. இனி மேல்தட்டு மேலாண்மையாளர்களும் நகரவாசிகளும் மாறுதல் வேண்டாக் கல்வி மேதைகளும் ஆங்கிலத்துக்குப் பல்லாண்டு பாடித் திளைக்க நல்வாய்ப்பை அரசின் அறிவிப்பு வலிய உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. என்றென்றும் ஆங்கிலம் (ENGLISH EVER) என்ற முழக்கத்துக்கு இடம் கொடுத்த அறிவிப்பு ஒரு காலத்தில் பச்சையப்பர் கல்லூரி முதல்வராக இருந்த ரோலோ என்ற வெள்ளையரின் கருத்துக்குப் புத்துயிர் கொடுப்பதுபோல் தோன்றுகிறது. 'சொல்லும் திறமை தமிழ்மொழிக்கு இல்லை என்றந்தப் பேதை உரைத்தான்' என்ற சாபச் சொல் மகாகவி பாரதியிடம் பிறக்கக் காரணம் இருந்த வெள்ளைக் கருத்தே இன்னமும் ஆக்கப் பெறுவதென்றால்..... தமிழன்னையின் தவப் புதல்வர்களைப் பற்றி என்ன சொல்லக் கிடக்கிறது!

தமிழுக்கு உரிய இடம் கொடுப்பதற்குத் தொடக்கமாக ஒரே ஆண்டில் உயர்நிலைப் பள்ளிகளில் தமிழே பயிற்சி மொழி என்று ஆணையிட்ட தி.சு. அவிநாசிலிங்கம் திருப்பணியை இப்போது நினைவுகூர வேண்டும். தொடர்ந்து நடந்து பல்கலைக் கழக எல்லையிலும் பரவியிருக்க வேண்டிய தமிழ்வழிக் கல்வி. வளர்வதற்குப் பதிலாகத் தளர்வுற்றுத் தேய்ந்துபோனது யாரால்? ஏன் இந்தக் கீழ்நோக்கிய அவலம்? இப்படிச் சிந்திக்க வேண்டியுள்ளது.

இன்றைய அரசின் அறிவிப்பு இருட்செறிவிலே பளிச்சிடும் ஒரு மின்னல்தான். ஆனால், மின்னலின் ஒளி போதுமா? போதாது. போதவே போதாது. - ம.ரா.போ. குருசாமி, கோவை-45.

சாலினி இளந்திரையன் ஒரு மடல் எழுதியிருந்தார். தினகரனில் (20.11.98) வெளி வந்த அதனைப் படியுங்கள்.

தமிழ்நாட்டிலுள்ள பிறமொழியினர் தமிழுக்கு தடையாக இருக்கலாமா?

ஐயா,

முதல்கட்டமாக சில பாடங்களை தமிழ்நாட்டில் உள்ள எல்லாப் பள்ளிகளும் தமிழிலேயே கற்பிக்கவேண்டும் என்று சரியான திசையில் நடை எடுக்கத் தொடங்கியுள்ள தமிழக அரசை மனிதகுல வளர்ச்சியில் அக்கறை கொண்ட அறிஞர்கள் அனைவரும் மனமுவந்து பாராட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை. என்றோ நடந்திருக்க வேண்டிய ஒன்று இப்போதாவது நடைபெறுகிறதே என்று நினைத்து முடிப்பதற்குள்ளாகவே, இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று தமிழ்நாட்டில் வாழுகின்ற மொழி சிறுபான்மையினர் கேட்டுக்கொண்டிருப்பதான செய்தியும் வருவது வியப்பையும், வேதனையையும் தருகிறது.

மறுபரிசீலனை செய்ய வேண்டியது யார்? இந்திய நாடு மொழிவழி மாநிலங்களாக பிரிந்தது எதற்காக? அந்தந்த மாநில மக்கள் தங்கள் தாய்மொழியிலேயே கற்று முழுமைபெற்ற அறிஞர்களாக வளர்ந்தால்தான் சாதனைகளை படைக்க முடியும் என்பதற்காகத்தானே? அந்த அடிப்படையில் தமிழ்நாட்டு மக்கள் தமிழில் கற்க முடிவெடுக்கும்போது அதை தடுக்க இவர்களுக்கு உள்ள உரிமை என்ன?

இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் தமிழர்கள் வாழ்கிறார்கள். தாங்கள் சிறுபான்மையினர் என்பதை உணர்ந்து அந்தந்த மாநில மொழியில் தங்கள் குழந்தைகளை படிக்க வைக்கிறார்கள். சுற்றுப்புறம் முழுவதும் அந்தந்த மாநிலத்து மொழியே பேசப்படுவதால் குழந்தைகளுக்கு அது பாரமாக இருப்பதில்லை. எங்காவது ஓரிடத்தில் கூட்டமாக இருக்கும் வாய்ப்பு இருந்தால் சிறுபான்மையினர் நலச்சட்டப்படி தங்களுக்கென்று தனி பள்ளிகளை ஏற்படுத்திக்கொண்டு தங்கள் தாய்மொழியில் தங்கள் குழந்தைகள் கற்க வழிசெய்கிறார்கள். இதுதான் ஒவ்வொரு பகுதியிலும் இருக்கும் மொழி சிறுபான்மையினர் கடைப்பிடிக்க வேண்டிய நேரான, சீரான நடைமுறை.

எனவே, தமிழ்நாட்டிலுள்ள பிறமொழியினர் தாம் தாங்கள் இதுவரை தடுத்து வந்துள்ள நிலையை மறுபரிசீலனை செய்து, தமிழுக்கு தடையாக நிற்கும் தங்கள் போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும்.

எப்படி இருக்கும் எதிர்காலத் தமிழ்? என்ற வினாவோடு சிறு கட்டுரையாகத் 'தினகரன்' (20.1.98) வெளியிட்டுள்ளது.

''இனிமையிலும் இனிமை பயப்பது நம் தாய்மொழியாம் தமிழ்மொழி. இயல், இசை, நாடகம் என முத்தமிழும் சுவைக்க சுவைக்க இன்பம் சேர்ப்பது. தாய்மை, தொன்மை வளமை என மூன்றையும் பெற்று, செவ்வியல் மொழியாக தகுதி பெற்றிருக்கிறது. 'கல்தோன்றி, மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்தக்குடி' என்று மார் தட்டிக் கொள்ளும் நம்மை மெல்ல தமிழ் இனி சாகும்' என்ற மகாகவியின் கூற்று அச்சுறுத்துகிறது. தமிழ்மொழி அரசியல் பொருளாதாரம், கல்வி, சமுதாயம், இறை, இசை, கலை என ஒவ்வொரு துறையிலும் அதன் செம்மை குறைந்து வருகிறது என்பது வருத்தத்திற்குரிய ஒன்றாகும்.

கல்வியும் வேலைவாய்ப்பும்

இந்த தலைமுறையை சேர்ந்த ஏறத்தாழ அனைத்து பெற்றோர்களுமே குழந்தைகளை ஆங்கிலப்பள்ளியில் படிக்க வைக்க விரும்பி அதிலேயே சேர்க்கின்றனர். அரசு சலுகையில் ஆதாயம் தேடும் இத்தகைய தனியார் வியாபார பள்ளிகள் காளான்களாக முளைத்துவிட்டன. கிராமங்களில் கூட ஊராட்சி தமிழ் பள்ளிகளில் குழந்தைகளை சேர்ப்பதை கவுரவகுறைச்சலாக கருதுகின்றனர். ஆங்கில கல்வியோடு இந்தியும் பிஞ்சு மூளையில் திணித்து அடிப்படை தாய்மொழியையே மறக்கச் செய்கின்றனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மருந்து என்ற ஒரு அதிகாரத்தை வள்ளுவர் படைத்தும் இன்று மருத்துவம், பொறியியலில் தமிழுக்கு இடமில்லை. மற்ற மொழிக்கல்வி இருந்தால்தான் உலகத்தின் எல்லா பக்கமும் சென்று வேலைவாய்ப்பை பெறமுடியும் என்று பரவலான கருத்து உள்ளது. நம் அரசு ஒன்று முதல் ஐந்து வயது வரைக்குள் உட்பட்ட குழந்தைகளுக்கு கட்டாய மழலையர் பள்ளி அமைக்க முன்வரவேண்டும். தமிழ்படித்தால்தான் வேலை வாய்ப்பில் முன்னுரிமை போன்ற சட்டங்களை இயற்றவேண்டும்.

சமுதாயமும் பொருளாதாரமும்

இன்றைய பெற்றோர்கள் சிலர் குழந்தைகளுக்கு பெயரிடுவதிலே கூட தமிழ்மொழியை புறக்கணிக்கின்றனர். சிலர் தமிழ் கையொப்பம் இடும்போதும் கூட அடையாள முதல் எழுத்தைக்கூட ஆங்கிலத்தில் எழுதி 'இரண்டுங்கெட்ட' தனமாய் செய்கின்றனர். தமிழனுக்குள்ளே தரும் திருமண அழைப்பிதழில் கூட அந்நிய மொழிப் புகுத்தி விடும் அநாகரிகம் வளர்ந்து கொண்டே இருக்கிறது.

பிறந்த நாள் பாடலிலும், திருமண இல்லத்திலும், நீத்தார் நினைவு நாளிலும் அந்நியமொழியே அங்கு ஆட்சி செய்கிறது.

இன்றைய இளைஞர்களிலேயே வேட்டி ஒரு அவப்பொருளாக காட்சி தருகிறது. பெண்கள் சேலையை தவிர்த்து அந்நிய உடையை அணிவது போற்றப்படுகிறது. பொருளாதாரம், வாணிபம், வங்கி போன்ற சூழலில் தமிழுக்கு உரிய இடமில்லை. தொலைக்காட்சி, மிதிவண்டி, மோட்டார் வாகனங்களுக்கு உரிய பாகங்களின் பெயர்களுக்கு சரியான தமிழ்ச்சொற்கள் ஆராயப்படவில்லை. இதை மாற்றி புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள், பொருட்களுக்கு பொருத்தமான தமிழ்வார்த்தைகளை தேர்ந்தெடுக்க தமிழ் அறிஞர்கள் முன்வர வேண்டும்.

இறையியலும் இசையும்

பக்தி இலக்கியத்தில் அசுரவளர்ச்சி என்ற பெருமை தமிழ்மொழியை விட வேறு எந்த மொழிக்கும் கிடைத்து விட முடியாது. பெருமை வாய்ந்த தமிழ் இன்று கோவில் வாசலில் தவம் கிடைக்கிறது. தமிழில் அர்ச்சனை செய்யவேண்டும் என்ற இன்றைய அரசின் உத்தரவு மகிழ்ச்சிக்குரியதாகும். இது குறித்த சர்ச்சைகள் இன்றும் நடக்கின்றன. இந்த சந்தர்ப்பத்தில் அனைத்து தமிழ் அமைப்புகளும், இயக்கங்களும் ஒன்று சேர்ந்து போராட வேண்டும். தெய்வத் தமிழில் தேவாரமும், திருவாசகமும் பாடப்பட்டபோது இறைவன் ஏற்றுக்கொள்ளவில்லையா? 'உலகெலாம்' என்று தமிழில் சிவபெருமானே அடியெடுத்து கொடுத்தார் என இலக்கியம் சொல்லவில்லையா? மந்திரம் என்பது மாயத்தை குறிப்பதல்ல! அது ஒரு வாழ்த்து சொல் வாழ்த்தை தமிழில் சொல்வதை விட வேறு என்ன இனிமை இருக்க முடியும்.

தாலாட்டு, ஒப்பாரி போன்ற மற்ற கிராமிய பாடல்கள் சுருங்கிப் போய் ஏட்டளவுக்கு வந்துவிட்டது. பட்டி தொட்டிகளிலெல்லாம் இன்றைய சினிமா பாடல்கள் புகுந்துவிட்டன. ஆனால், அத்தகைய சில சினிமா பாடல்களில் ஆங்கிலம் புகுந்து பாமர நெஞ்சங்களிலும் அந்நிய மொழி நஞ்சை கலந்துவிட்டன. எங்கும் ஒலிக்கும் சினிமா பாடல்களில் அழுதத் தமிழ்வார்த்தைகளை புகுத்த கவிஞர்கள் முன் வரவேண்டும்.

அரசியலும் பத்திரிகைகளும்

ஒருசில உயர்தர அரசியல்வாதிகள் ஆங்கில பள்ளிகளில் மெத்த படித்த மேதாவிகள் என்பதை காட்டுவதற்காக, தமிழ்நாட்டில் தமிழனுக்காக, ஆங்கிலத்திலேயே பேட்டி அளிப்பது கேலிக்குரியதாக இருக்கிறது. தாய் தமிழ்மொழிக்கே துரோகம் செய்யும் இவர்கள் எப்படி தமிழகத்தையும், தமிழர்களையும் பாதுகாக்க முடியும்?

இதுபோன்ற அரசியல்வாதிகளின் அறிக்கையும், பேட்டிகளையும் ஒட்டு மொத்த தமிழர்கள் புறக்கணிக்க வேண்டும். அரசு சம்பந்தப்பட்ட கடிதங்களிலும், கோப்புகளிலும் முழுக்க தமிழ் இருக்கும் படி அரசு ஆவன செய்ய வேண்டும்.

இன்றைய பத்திரிகைகளில்தான் தமிழ் மொழியை காக்கும் கடமை அதிகமாக இருக்கிறது. தமிழ் சிறுகதைகளும், நாவல்களிலும் யதார்த்தம் வேண்டும் என்பதற்காக வெளிமொழி உரையாடல்களை கலப்பது பெரும்பாலான ஒன்றாகிவிட்டது. இதை கதாசிரியர்களும், நாவலாசிரியர்களும் உணர்ந்து இதனை தவிர்த்தால் தமிழ் சாகாவரம் பெற்றுவிடும். பத்திரிகைகள், தொலைக்காட்சி, வானொலி போன்ற மக்கள் தொடர்பு சாதனங்கள் வரலாற்று நாடகங்களுக்கும், கதைகளுக்கும் முக்கியத்துவம் தரவேண்டும்.

இன்று நம் மக்களின் கவனம் முழுவதும் வருவாயையும், போலி நாகரிகத்தையும் நம்பியே இருக்கிறது. ஆனால் ஒருதாய் மொழியின் வளர்ச்சிதான் ஒருசமுதாயத்தின் உண்மையான வளர்ச்சியை பறைசாற்றுகிறது. வெளிமொழிகளின் ஆதிக்கம் நம்தாய்மொழி மீது கண்ணுக்கே தெரியாத, மெல்ல கொல்லும் நஞ்சாக பரவி வருகிறது. இப்பொழுதாவது நம் ஒட்டுமொத்த தமிழ் சமுதாயம், தமிழின்பால் அக்கறை கொண்ட அமைப்புகள், தமிழ் அறிஞர்கள் ஒன்றுசேர்ந்து போராடினால்தான் வெற்றி முழுமையாக கிடைக்கும். இல்லையேல் அடுத்த நூற்றாண்டின் இறுதிக்குள் தாய்மொழி இறுதிக்கட்டத்தை நோக்கி நகர்ந்த ஒரு ஆராய்ச்சி பொருளாக ஆகிவிடும்.

தமிழ்ப் பற்று

முதியவர் : அந்த பெண் உன்னை காதலிக்க மறுத்து விட்டாளாமே?

இளைஞன் : ஐ லவ் யூ என எழுதி நீட்டினேன் தாய்மொழியை மறந்துபோன உனக்கு காதல் ஒரு கேடா? என கிழிந்து போட்டுவிட்டாள்.

28.11.98 'தினகரனில்' ஆசிரியர்க்கு வந்த இரு மடல்களை வெளியிட்டுள்ளனர்.

மெல்ல தமிழ் இனி வாழும்

ஐயா,

தமிழ் மக்களின் காதில் இனிமையான செய்தி ஒன்று தேனாய் பாய்ந்தது. மழலையர் கல்வி கூடங்களில் கணிதம், வரலாறு, சமூக அறிவியல் போன்ற பாடங்கள் தமிழிலேயே இருத்தல் வேண்டும் என்பதுதான் அது. பிறமொழி மோகத்தால் தாய்மொழியின் பெருமை மற்றும் தேவையை மறந்து

தமிழக மக்கள் திளைத்த வேளையில் தாய்மொழி கல்வியே உகந்தது என்று அரசு கருதியது அவசியமான ஒன்றே. குழந்தைக்கு தாய்ப்பால் எப்படி முக்கியமோ அதுபோல் மழலை செல்வங்களுக்கு தாய்மொழியின் வரியே தரமான கல்வியை கல்வியே தரவேண்டும்.

தமிழ்நாட்டின் தமிழ் தெருக்களில் தமிழ்தான் இல்லை என்று பாவேந்தர் வேதனையுடன் கூறியதை நினைத்து தமிழக அரசு இன்னும் இதுபோன்ற பல்வேறு தமிழ் பணிகளை செய்ய முன்வரவேண்டும். ஊர் பெயர், கடை பெயர் பலகை இப்படி எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற நிலை தமிழகத்தில் வர வேண்டும். இந்த அரிய பணியை செய்ய முன்வந்த முதல்வர் கலைஞர், தமிழ் வளர்ச்சி பண்பாட்டுத் துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன், கல்வி அமைச்சர் அன்பழகன் ஆகியோருக்கு தமிழ் உலகம் நன்றி கூறும். மேலும் இதுபோன்றே கோவில்களிலும் தமிழ் வழிபாடு வேண்டும் என்பதை தமிழக மக்கள் வலியுறுத்தி வந்தனர். அதையும் தமிழக அரசும், தமிழ் துறை அமைச்சரும் செவ்வனே செய்து வருகிறார்கள்.

தமிழ் தெரியாத கடவுள் தமிழருக்கு தேவை இல்லை. அதுபோல் தமிழ் வேண்டாம் என்னும் மக்களும் தமிழகத்தில் வாழ தகுதி உள்ளவர்கள்தானா என்று சிந்திக்க வேண்டும். சரியான நேரத்தில் சரியாக செய்து தமிழக மக்களுக்கு மகிழ்ச்சி செய்தி அளித்த தமிழக அரசுக்கு நன்றிகள்! பாராட்டுக்கள். - சி. சுந்தரபாண்டியன், கோனான்குப்பம் - 606104

தமிழில் அர்ச்சனை

இடஒதுக்கீடேகூடாது என்று சிலர் பாடுபடுகிறார்கள். அவர்கள்தான் தமிழில் வழிபாடு நடத்துவதையும் எதிர்க்கிறார்கள். தமிழில் கடவுளை வழிபடலாம் என்று கூறியதற்காக அமைச்சர் ''தமிழ்க்குடிமகனை அவர்கள் எதிர்க்கிறார்கள்'' தமிழில் அர்ச்சனை வேண்டாம் என்பவரின் தாய்மொழி என்ன? என்று அவர் கேட்டிருப்பது நியாயமான வார்த்தை. இவ்வாறு அவர் கூறினார்.

அதேநாளில் (28.11.98) 'தினமணி'யில் சாலினி இளந்திரையனின் மடல் வந்துள்ளது. அவர் எழுதுகிறார்.

''முதல் கட்டமாகச் சில பாடங்களைத் தமிழ்நாட்டில் உள்ள எல்லாப் பள்ளிகளும் தமிழிலேயே கற்பிக்க வேண்டும் என்று சரியான திசையில் நடை எடுக்கத் தொடங்கியுள்ள தமிழக அரசை மனிதகுல வளர்ச்சியில் அக்கறை கொண்ட அறிஞர்கள் அனைவரும் மனமுவந்து பாராட்டுவார்கள் என்பதில் ஐயமில்லை. என்றோ நடந்திருக்க வேண்டிய ஒன்ற இப்போதாவது நடைபெறுகிறதே என்று நினைத்து முடிப்பதற்குள்ளாவே, 'இதை மறு பரிசீலனை செய்ய வேண்டும்' என்று தமிழ்நாட்டில் வாழுகின்ற மொழிச்

சிறுபான்மையினர் கேட்டுக்கொண்டிருப்பதான செய்தியும் வருவது வியப்பையும் வேதனையையும் தருகிறது.

மறு பரிசீலனை செய்ய வேண்டியது யார்? இந்திய நாடு மொழி வழி மாநிலங்களாகப் பிரிந்தது எதற்காக? அந்தந்த மாநில மக்கள் தங்கள் தாய்மொழியிலேயே கற்று முழுமை பெற்ற அறிஞர்களாக வளர்ந்தால்தான் சாதனைகளைப் படைக்க முடியும் என்பதற்காகத்தானே?

இந்தியாவின் எல்லா மாநிலங்களிலும் தமிழர்கள் வாழ்கிறார்கள். தாங்கள் சிறுபான்மையினர் என்பதை உணர்ந்து அந்தந்த மாநில மொழியில் தங்கள் குழந்தைகளைப் படிக்க வைக்கிறார்கள். சுற்றுப்புறம் முழுவதும் அந்தந்த மாநிலத்து மொழியே பேசப்படுவதால் குழந்தைகளுக்கு அது பாரமாக இருப்பதில்லை. எங்காவாது ஓரிடத்தில் கூட்டமாக இருக்கம் வாய்ப்பு இருந்தால் சிறுபான்மையினர் நலச் சட்டப்படித் தங்களுக்கென்று தனிப்பள்ளிகளை ஏற்படுத்திக் கொண்டு, தங்கள் தாய்மொழியில் தங்கள் குழந்தைகள் கற்க வழி செய்கிறார்கள். இதுதான் ஒவ்வொரு பகுதியிலும் இருக்கும் மொழிச் சிறுபான்மையினர் கடைப்பிடிக்கவேண்டிய நேரான, சீரான நடைமுறை.

எனவே, தமிழ்நாட்டிலுள்ள பிறமொழியினர்தாம் தாங்கள் இதுவரை தடுத்து வந்துள்ள நிலையை மறுபரிசீலனை செய்து, தமிழுக்குத் தடையாக நிற்கும் தங்கள் போக்கை மாற்றிக் கொள்ள வேண்டும். - சாலினி இளந்திரையன், சென்னை-86.

மாலைக் கதிர் (19.11.98) எங்கள் பணிகளைப் பாராட்டி ஒரு கட்டுரையே எழுதியுள்ளது. தலைப்பு இதுதான்.

தமிழ் மொழி வாழும்வரை வாழ்ந்திடும் பேறுபெற்ற முதல்வரும், அமைச்சரும்

தமிழகம் முழுவதும் உள்ள நர்சரிபள்ளிகளில் தமிழ்மொழி இனி கட்டாயப் பாடமாக போதித்திட இன்றைய அரசு முடிவெடுத்து, வரும் கல்வியாண்டிலேயே அமல்படுத்த உள்ளது. இந்தி மொழியை தமிழ் மண்ணின் மீது திணிப்பதை தடுத்திட முயன்று, வெற்றி பெற்றது தான் திராவிட கட்சிகளின் பெரு வெற்றி. ஆனால் அந்த வெற்றியை தொடர்ந்து தமிழ்வளம் பெறாமல், நம்மை அடிமைப்படுத்திய ஆங்கிலேயரின் தாய்மொழி வளமை பெற்றுவிட்டது. அம்மொழியில் பள்ளிகள் நடத்தினால் நல்ல லாபம் ஈட்டிட முடியும் என்கிற நிலை உருவாகிவிட்டது.

மேலும் ஆங்கில வழிக் கல்வியில் பயிலச் செய்திடும் மோகமானது, பிறமாநிலங்களைவிட, நம் தமிழகத்தில் அதிகரித்துவிட்டது. இதன் பயனாக

தமிழைக்கற்பது என்பது கௌரவக்குறைவு என்ற எண்ணமும், தமிழ் மொழியில் பொது இடத்தில் பேசுவது என்பது கூட குறைந்துவிடத் தொடங்கிவிட்டது. இதை தமிழ்ச்சான்றோர்கள் சுட்டிக் காட்டினாலும், சரி செய்திட முடியாத நிலை தொடர்ந்து வந்தது.

ஆலயங்களில் தமிழை நுழைத்திட தடை செய்திடும் ஆரியர்களின் போராட்டத்தை தொடரும் தமிழ்க்குடிமகன், தலைவர் கலைஞரிடம் முறையாக ஆலோசனை பெற்று கல்விக் கூடங்களில் தமிழை நுழைத்துவிட்டார். இதை தொடர்ந்து ஆலயங்களிலும் வெற்றி தமிழ் மொழிக்கே என்ற நம்பிக்கை வளர்ந்து வருகிறது.

கோவில்களில் தமிழ்த் தாயை நுழைய விடுவதை எதிர்த்திடும் ஆரிய ஆதரவாளர் 'சோ' தமிழ்க்குடிமகனை, ''தமிழ் வெறிகொண்டவர்'' என்று வர்ணித்து துக்ளக்கில் எழுதியுள்ளார். அவர் பாணியில் நாம் பதில் சொல்வது நமக்கு தகுதியல்ல. ஆனால் உலக வழக்கில் நடைமுறையில் இல்லாத ஒரு மொழி சமஸ்கிருத மொழியாகும். அந்த சமஸ்கிருதம் வாழ்ந்திட தனிப்பாசத்தையும், பரிவையும் காட்டிடும் ஆரியகுணம் எதார்த்தமானதாம், ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதாம். ஆனால் நம் தமிழ் மன்னர்களும், செல்வந்தர்களும், பெரும் செலவு செய்து, தமிழ் கலை வல்லுனர்களும் பாடுபட்டு தம் கலை உணர்வை, உழைப்பை கொட்டி, பல்லாயிரம் தமிழ் பணியாட்கள் பணிபுரிய கட்டி முடித்து, விண்ணுயர எழுப்பிய ஆலயத்தில் தமிழ் மட்டும் நுழையக் கூடாதாம். சமஸ்கிருதம் அங்கு வாழ வேண்டுமாம். அதை குறிவைத்து தாக்கும் தமிழ்க்குடிமகன் தமிழ் வெறியர் என்றால் ''அதையே தனித் தகுதியாக கொண்ட தம் பணிகளில் வெற்றி பெரும்வரை தமிழ்க்குடிமகன் ஓயாத வெறியராகவே அனைத்து தமிழர்கள் சார்பாகவும் பணி புரியட்டும்''.

தமிழார்வமும், அறிவும் கொண்ட தமிழ்க்குடிமகன் அமைச்சரான அன்றே, ''தமிழ் கூறும் நல்லுலகம் ஆலயங்களிலும் மட்டுமின்றி சாலைகளில் உள்ள நிறுவனப் பெயர் பலகையிலும் தமிழ்மொழி ஆட்சி செய்திட செய்வார்'' என்று எதிர்பார்த்தது. அவர் தமிழ் வெறியராக இருந்திருந்தால், பதவி ஏற்ற அன்றே, இவை அனைத்தையும் செய்திருப்பார். ஆனால் பண்பாளர் அவர். முறைப்படி மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதி. ஜனநாயக தத்தவப்படி மாநில அமைச்சர் பொறுப்பில் இருப்பவர். முறைப்படி பணியாற்றுகிறவர். அவரின் செயல் திட்டத்தைத் தகர்க்க முடியாத காரணத்தால் அவரை மொழி வெறியர் என்று ஏசுகின்றனர் 'சோ' போன்றவர்கள்.

உண்மையில் நடைமுறை வழக்கில் இல்லாத மொழியின் புகழுக்கு இவர்கள் அடிபோடும்போது தன் தாய்மொழி வளம் இழந்து போவதை எந்தத்

தமிழ்மகனும் கண்டு அமைதியுற மாட்டான். தாய் மொழியின் பெருமையை உணர்ந்த தமிழ்க்குடிமகனுக்கு அத்தாய் மொழியை பரப்பிடும் அரிய வாய்ப்பு கிடைத்துள்ளது. சோ போன்றவர்களின் ஏச்சும் பேச்சும் சில நாட்களில் ஓயப்போவது நிச்சயம். இனி தமிழ்க்குடிமகனின் பெயரும் அவரை தமது அமைச்சரவையில் பெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் பெயரும், தமிழ் வாழும்வரை வாழ்ந்து நிற்கும் பேறு பெற்றவர்களாகி விட்டனர்.''

'தினமலரில்' ஒரு வினாவிடைப் பகுதி. (29.11.98) படியுங்கள்

✉ ★ **எஸ்.முரளி, குறிஞ்சிப்பாடி:**
அடுத்த ஆண்டு முதல், எட்டாம் வகுப்பு வரை, எல்லா பள்ளிகளிலும், அனைத்து பாடங்களும் தமிழ் மொழி வழி பயிற்று விப்பை கட்டாயமாக்கும் அரசின் முடிவை வரவேற்கிறீர்களா?



நிச்சயம் வரவேற்கிறேன், அரசைப் பாராட்டுகிறேன். மம்மி... டாடி கலாச்சாரம் கண்டிப்பாக ஒழிக்கப்பட வேண்டும். ஆங்கில மீடிய நர்சரி ஸ்கூலில் கற்பிக்கும் டீச்சர்களுக்கே ஆங்கிலம் உருப்படியாகத் தெரியாது... அவர்களிடம் கற்கும் குழந்தைகளுக்கு, ஆங்கிலமும் தெரியாமல், தமிழும் தெரியாமல் போய்விடும் அவலம்தான் இப்போது நடக்கிறது.

இதோடு அரசு நின்று விடக் கூடாது... அரசு துறைகளிடையே நடைபெறும் தகவல் தொடர்புகள் அனைத்தையுமே அதிரடியாக தமிழில் மாற்றியே ஆக வேண்டும்; இதில் என்ன சிரமம் தமிழ்க் குடிமகனுக்கு என்பதுதான் தெரிய வில்லை!

'தினமணி' (1.12.98) இதழில் ஆசிரியர்க்கு வந்த மடல்கள் சில. இதோ உங்கள் பார்வைக்கு.

பிற நாட்டினரின் வழி

'தமிழ் கற்பிக்கும் பள்ளிக்கே இனி அனுமதி' என்ற தமிழக முதல்வரின் அறிவிப்பை (17.11.98) படித்தேன்.

தமிழ், ஆங்கிலம், கணித இயல், அறிவியல், சமூக அறிவியல், பொருளாதார இயல் மற்றும் மனை இயல் போன்ற பாடங்களைப் படித்த மாணவர்கள் அரசுத் தேர்வு எழுத வேண்டும்.

அதில், வெற்றிக்கு நிர்ணயிக்கப் பட்ட மதிப்பெண்களுக்குக் குறைவாக ஆங்கிலத்தில், மற்றுமுள பாடங்களில் பெற்றால் மாணவன் தோல்வி அடைந்ததாகக் கருதப்படுகிறது. இந்த நடைமுறையில், பிற நாட்டினர் பின்பற்றும் வழியை நாமும் பின்பற்றினால் என்ன?

இலங்கையில் தாய்மொழிக் கல்விதான் அடிப்படையாக இருக்கிறது. ஆங்கில மொழி துணைப்பாடமாக இருக்கிறது. ஆனால் மாணவர்களின் தேர்வுக்குரிய பாடமாக ஆங்கிலம் இல்லை. - ஆ.பெ. அரசு, மதுரை-16.

பயிற்சி பெற்ற ஆசிரியர்

போதிய இடவசதியும் ஆசிரியர்களும் இல்லாத அங்கீகாரமற்ற மழலைப் பள்ளிகளை அரசு நீக்கவேண்டும்.

அறிவியலும் கணக்கும் ஆங்கில வழியிலும் இதரப் பாடங்களைத் தமிழ் வழியிலும் பயிற்றுவிக்கும் பள்ளிகளை மட்டும் அரசு அங்கீகரிக்கவேண்டும். மழலைப் பள்ளிகளுக்குப் பாடநூல்களை இலவசமாக வழங்கும் அரசின் யோசனையை உடனே கைவிடவேண்டும்.

கல்விக் கட்டணம், நன்கொடைக் கட்டணத்துக்கு அரசு உச்சவரம்பு நிர்ணயித்து, தணிக்கைக்கு உட்படுத்தவேண்டும். மழலையர் பள்ளியில் 30 மாணவர்க்கு ஒரு பயிற்சி பெற்ற ஆசிரியர் வீதம் அரசே நேரடி நியமனம் செய்து அவர்களுக்கு ஊதியமும் வழங்கவேண்டும். - எம்.கே. லலிதாபாபு, மாதவரம் - பொன்னேரி.

தாய்த்தமிழ்ப் பள்ளிகள்

'மழலை நாவில் தமிழ்' தலையங்கம் (18.11.98) படித்தேன். ஆங்கிலம் படித்தால்தான் அதிமேதாவிகளாக விளங்கமுடியும் என்ற போலியான நம்பிக்கை பெற்றோர் இடையே இருப்பதால் கிராமப்புறங்களிலும் ஆங்கில நர்சரிப் பள்ளிகள் புற்றீசல்களாகத் தோன்றுகின்றன.

ஜப்பான் போன்ற முன்னேறிய நாடுகளில் தாய்மொழிக்கு வழங்கப்படும் முக்கியத்துவத்தை உணரவேண்டும். அம்பத்தூர், திருப்பூர்,

கோபிசெட்டிபாளையம் போன்ற இடங்களில் தொடங்கப்பட்டு, மிகச் சிறப்பாக செயல்பட்டுக் கொண்டிருக்கும் தாய்த் தமிழ் தொடக்கப்பள்ளிகள் போல நாடு முழுவதும் தொடங்கப்பட வேண்டும். - பி. சண்முகம், குருசிலாப்பட்டு

வரலாற்று முத்திரை

தமிழைக் காத்து வளர்ப்பதற்கு வழிவகுக்கும் ஆணையால், தமிழக அரசுக்குச் சேரும் பெருமை ஒரு வரலாற்று முத்திரையாகும்.

இந்த ஆணையின் நல்ல நோக்கத்திற்கு, முன்னைத் துணைவேந்தர் வ.சுப. மாணிக்கம் கண்ட 'தமிழ்வழிக் கல்வி இயக்ககம்' ஓர் அடித்தளமாக அமைந்தது. இதனைத் துணையாகக் கொண்டு, மழலைப்பள்ளி முதல் பல்கலைக்கழகம் வரை எல்லாத் துறைகளிலும் 1988 முதல் தமிழொன்றே பயிற்று மொழியாதல் வேண்டும் என்று அவர் பெரு முயற்சி செய்தார்.

1988ம் ஆண்டின் பிற்பகுதியில் அந்த இயக்கத்தின் கொள்கை விளக்கமும் நலங்களும் குறித்த கருத்துகளின் பரவலுக்கு அவர் பெரும்பாடுபட்டார். காலநிலை நோக்கில், பத்து ஆண்டுகளுக்குப் பின்னே இப்போது அது வெற்றி கண்டுள்ளது. - இர. குழந்தைவேலு, கோவை-14.

கோலோச்சும் ஆங்கிலம்

இரு மொழிக் கொள்கை, இந்திக்கு இடமில்லாமல் செய்வதில் வெற்றி கண்டது. ஆனால் தமிழுக்கு உரிய முதன்மை இடத்தைப் பெற்றுத் தருவதில் அது தோல்வி கண்டுவிட்டது. தமிழின் இடத்தை ஆங்கிலம் பலமாக ஆக்கிரமித்துக்கொண்டு கோலோச்சுகிறது.

தமிழ்க் கலாசாரம், தமிழர் நாகரிகம், தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றையும்கூட ஆங்கில மோகம் புறந்தள்ளிவிட்டது. தமிழ் படிக்காமலேயே அரசுப் பணிகளில் அமர இயலும் எனும் நிலையும் தமிழ் நாட்டில்தான் நிலவுகிறது. இதையும் மாற்ற திமுக அரசு நடவடிக்கை எடுத்து தனது தமிழ்ப்பற்றை வெளிப்படுத்தவேண்டும். - ல. ரோஹிணி, திருச்சி-17.

மக்களின் மொழி

மழலைகளின் நாவில் மட்டுமல்லாது, (தமிழ்) மக்கள் பயன்பாட்டு மொழியாகவும் தமிழ் விளங்க வேண்டும்.

அன்னிய நாட்டில் இருப்பதைப் போன்ற உணர்வை ஆங்கில மோகம் மக்களிடையே ஏற்படுத்தி வருவதைத் தவிர்க்க அனைவரும் முயற்சி செய்யவேண்டும். தமிழ், தேசியத்தை வளர்த்துள்ளது; தேசியத்தால் தமிழ் வளர்ந்துள்ளது என்பதை உணர்வது நமது கடமையாகும்.

அரசின் வரிப்பணத்தில் படிப்பவர்கள் அயல் நாடுகள் சென்றுவிடும் அவலம் மாறிட, தமிழ்வழி படித்தவர்கள் மூலம் தமிழ்நாட்டு மக்களுக்குச் சேவை கிடைக்கச் செய்யவேண்டும். - பூவை இளந்திரையன், சென்னை-56.

தமிழ் இனி மெல்ல வளரும்

வகுப்பறைகளில் சக மாணவர்களிடம் தப்பித்தவறி தமிழ் பேசினால்கூட தண்டனை தருகிற பள்ளிகளும் இருக்கிறதென்பதை நினைத்தால், வேதனை ஏற்படுகிறது. அரசின் புதிய அணுகுமுறையால் 'தமிழ் இனி மெல்ல வளரும்' என்று நம்பலாம். - எம். பாலாஜி, செங்கோட்டை.

தமிழ் அறிவியல் மொழி

மழலையர் பள்ளிகளில் பயிற்று மொழி குறித்த தமிழக அரசின் அறிவிப்பு மகிழ்ச்சியளிக்கிறது.

ஆயினும் அறிவியல் தவிர்த்து பிற பாடங்களை மட்டுமே தமிழில் கற்பிக்க வேண்டுமெனச் சொல்லியிருப்பதுதான் நெஞ்சை நெருடுகிறது. தமிழ் அறிவியல் மொழியாய்த்தான் உள்ளது.

புதுப்புது அறிவியல் கலைச் சொற்கள் நாள்தோறும் பெருகிவருகின்றன என்பதை நாம் உணர வேண்டும். கரையில் நின்று நீச்சல் குறித்து விவாதிப்பதைவிட நீரில் விழுந்தால் நீந்தவா இயலாது! - சு. அழகுமன்னன், மேட்டூர் அணை-1.

(2.12.98) 'தினமணி' இதழில் வந்த 'ஆசிரியர்க்கு மடல்கள்' குறிப்பிடத்தக்கவையாக அமைகின்றன. அவற்றைக் காண்போம்.

நேர்முகத் தேர்விலும் தமிழ்

'மழலை நாவில் தமிழ்' தலையங்கம் (18.11.98) படித்தேன். தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், வங்கிப் பணியாளர் தேர்வாணையம், ரயில்வே தேர்வு வாரியம் மற்றும் மத்திய அரசின் பணியாளர் தேர்வுக்குழு போன்றவை தமிழகத்திலுள்ள காலியிடங்களுக்காக நடத்தும் நேர்முகத் தேர்வுகள் ஆங்கிலத்தின் மூலமே நடைபெறுகின்றன. இவற்றையும் தமிழிலேயே மேற்கொள்ள முதல்வர் நடவடிக்கை எடுத்தால் ஆங்கில மோகம் குறைந்து தமிழ் மூலம் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை பெருகும். தேவையானால் பயிற்சியின்போது ஆங்கிலத்தை ஒரு பாடமாக வைக்கலாம். - கோ. இராஜசேகரன், குத்தாலம்.

அலுவலகங்களில் தமிழ்

இன்றும் பல அரசு அலுவலகங்களில் 90 சதவீதம் ஆங்கிலம்தான் இணைப்பு மொழியாக, தொடர்பு மொழியாகப் பயன்படுத்தப்படுகிறது. முதலில் அரசு அலுவலகங்களில் தமிழை அலுவல் மொழியாக்கியபின் ஆலயத்துக்கும் ஆரம்பக் பள்ளிகளுக்கும் செல்லலாம். - கோ. மூர்த்தி, சென்னை-92.

ஒற்றுமை உணர்வு

மின்னணுத் தொழில் நுட்பத்தில் முன்னேறிக் கொண்டிருக்கும் ஜப்பானில் தாய்மொழியிலேயே கல்வி போதிக்கப்படுகிறது. வளர்ந்த நாடுகளான ரஷியா, பிரான்ஸ் போன்ற நாடுகளிலும் தாய்மொழியிலேயே பாடங்கள் நடத்தப்படுகின்றன. நமது அண்டை மாநிலங்களான கர்நாடகம், கேரளம் போன்றவற்றிலும் தாய்மொழிகளே ஆட்சி மொழிகளாக உள்ளன.

இளம் இதயங்களில் தாய்மொழிப் பாடங்களைப் போதிப்பதால், தமிழுணர்வு வளரும்; ஒற்றுமை உணர்வும் ஓங்கும். - கோ. தாமோதரன், அரக்கோணம்.

தமிழறிஞர்களின் பொறுப்பு

தமிழில் அறிவியலைக் கற்பிக்க முடியாதென்பதைப் போன்ற கருத்து அரசின் முடிவில் தொக்கி நிற்கிறதே! அறிவியலுக்குத் தமிழ் அன்னியப்பட்டதாக முத்திரை குத்துவது சரியல்ல. அறிவியல் பாடத்திற்குரிய சொல்லாக்க முயற்சிக்கு அது வழிகாண வேண்டும். தமிழைப் பயிற்று மொழியாக்க வேண்டுமேன்று குரல் கொடுத்த தமிழறிஞர்களின் பொறுப்பைச் சுட்டிக்காட்டுவதாகக்கூட இது இருக்கலாம். அறிவியல் சொல்லாக்கத்திற்கான அவர்கள் உழைக்க வேண்டிய காலக் கட்டாயம் ஏற்பட்டுள்ளது. இப்பணியை அவர்கள் ஏற்றுச் செயற்படுத்த முன்வரவேண்டும். - க.பொ. இளம்வழுதி, கடலூர்-1.

10 ஆண்டுப் போராட்டம்

கோவையில் நடைபெற்ற கருத்தரங்கம் ஒன்றில் சிற்பி பாலசுப்பிரமணியம் மனம் குமுறிக்கேட்ட மறுநாளே அரசின் இந்த அறிவிப்பு வந்தது என்று தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பது, 'காக்கை உட்காரவும் பனம் பழம் விழுந்தது' என்ற கதை போன்றது. பேராசிரியர் சிற்பி பாலசுப்பிரமணியம் தமிழ் உணர்வாளரே! ஆனால் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ் அறிஞர்கள் தமிழ் வழிக் கல்விக்காகப் போராடி வந்தனர்.

கடைசியாக ஆயிரக்கணக்கான தமிழ் உணர்வாளர்கள் கலந்து கொண்ட தமிழகப் பெருவிழாவில் கெடுவிதிக்கப்பட்டது. 'வரும் கல்வி

ஆண்டிலிருந்து மழலையர் வகுப்பிலிருந்து ஐந்தாம் வகுப்பு வரை எல்லாப் பள்ளிகளிலும் தமிழ்தான் பயிற்சிமொழி என்னும் ஆணை வர வேண்டும். இல்லாவிடில் 100 தமிழறிஞர்கள் சிலம்பொலி செல்லப்பன் தலைமையில் சாகும்வரை உண்ணா நோன்பு இருப்பர்' என்று தீர்மானம் நிறைவேற்றியிருப்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும். - 'முகம்' மாமணி, சென்னை-78.

யாதும் ஊரே (திசம்பர் 98) இதழில் ஓர் ஆசிரியவுரை:

தமிழால் மீள்வோம்!

''தமிழ் வாழ்ந்தால் தான்
தமிழர் வாழ்வார்
தமிழ் மீண்டால் தான்
தமிழ்நாடு மீளும்''

என்றார் புரட்சிக் கவிஞர்.

பொதுவாழ்வில் பொன்விழா கண்டவர், பவழவிழா நாயகராம் தமிழக முதல்வர். கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக தமிழ், தமிழர் குறித்து எதைப் பேசி, எழுதி வந்தாரோ அதனையே அடித்தளமாக்கி தமிழகத்தின் ஆட்சிப் பீடத்தைப் பிடித்தவர், அவரே.

தமிழறிஞர்கள், உணர்வாளர்கள், ஆர்வலர்கள் யாவரும் வேண்டுவதும் அவைகளைச் செயல்படுத்த வேண்டுமென்பதே. ஆட்சி மொழி, பயிற்று மொழி, நீதி மன்ற மொழி, வழிபாட்டு மொழியாக நம் தாய்மொழிக்கு இடமளியுங்கள். உதவிக்கு தமிழ்க்குடிமகன்கள் பலர் உள்ளனர்''.

'குமுதம்' (3.12.98) ஓர் ஆசிரியவுரை எழுதி வரவேற்றுள்ளது:

ஒரு ஷொட்டு! ஒரு குட்டு!

தமிழைச் சொல்லி ஆட்சிக்கு வந்தவர்கள் அந்தத் தமிழே பெருமைப்படும் இனிய திட்டம் ஒன்றைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

தமிழை ஒரு பாடமாகச் சொல்லித்தரும் மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகளுக்குத்தான் இனி அரசு அனுமதி மற்றும் சலுகைகள் வழங்கப்படும் என்று முதல்வர் அறிவித்திருக்கிறார்.

'மம்மி டாடி'க்குச் சமமாக 'அம்மா, அப்பா'வும் இனி திசையெங்கும் ஒலிக்கப் போகிறது. மெல்லத் தமிழ் இனி சாகும்? என்ற ஐயப்பாட்டிற்கு அழகான சாவுமணி அடிக்கப்பட்டிருக்கிறது.

அதே நேரத்தில் பள்ளிகளில் காலம் காலமாக இருந்துவரும் கல்வி முறைத் திட்டமே தவறு என்று சில அறிஞர்கள் கூறிவருகிறார்கள். பொன் குடமாக இல்லாவிட்டாலும் மெக்காலே காலத்து மண் குடமாகவாவது இருந்துவரும் இந்த தேர்வு முறையிலும் சமீபகாலமாகச் சில ஓட்டைகள்.

+2 அக்டோபர் தேர்வில் அசல் விடைத்தாள்களை மாற்றிவிட்டு, வெளியே தனியாக எழுதப்பட்ட போலி விடைத்தாள்களைச் சிலர் சேர்த்துள்ளனர். சமீபத்தில் விமான நிலையத்தில் ஒருவர் கைது செய்யப்பட்ட பிறகுதான் விஷயமே வெளியில் வந்துள்ளது என்று எழுதிவிட்டுத் தேர்வுத் தாள்களில் ஏற்படும் முறைகேடுகள் குறித்து எழுதி ஒரு 'குட்டு' வைத்திருக்கிறது.

'குங்குமம்' இதழில் மாலன் சில துணுக்குச் செய்திகளைத் தொகுத்துத் தந்திருக்கிறார், அவற்றுள் சில:

1. 1998

தமிழ் பயிற்று மொழி. தனியார் பள்ளிகள் சங்கம் எதிர்ப்பு. - தினமணி செய்தி, (நவம்பர் 21, 98)

2. 1890

மகாகவி சுப்ரமணிய பாரதியும், நாவலர் சோமசுந்தர பாரதியும் சிறுவர்களாக இருந்தபோது திருட்டுத் தனமாகக் கோவில் பல்லக்குகளின் நடுவே உட்கார்ந்து கொண்டு தமிழ் படித்தார்களாம். ''எங்கள் இருவருடைய வீட்டிலும் தமிழ் படிக்க அவ்வளவு தடை இருந்தது. தமிழ் படித்துக் கெட்டுப் போகிறான்களே என்ற வசவு கிடைக்கும்'' என்று சோமசுந்தர பாரதி சொல்கிறார். - சித்திர பாரதி

3. எம்.எல்.ஏ.க்கள், எம்.பி.க்கள், அமைச்சர்கள் தங்கள் குழந்தைகளையும், பேரக்குழந்தைகளையும், கட்டாயமாக தமிழ் வழிப் பள்ளிகளில்தான் சேர்க்க வேண்டும். அப்போதுதான் அவை பிரபலமடையும். இந்த வி.ஐ.பி.க்களின் முழுமையான ஆதரவு இருந்தால்தான் அரசு தமிழ் வழிக் கல்வியைப் பரப்புவதில் நம்பிக்கை கொள்ள முடியும். - ஹிந்து நாளிதழில் வாசகர் கடிதம் (நவம்பர் 23, 1998)

4. தமிழ் வழிக் கல்வி பற்றிய அரசு அறிவிப்பு வந்தவுடன் எழுந்த சில அழுகுரல்களைக் கேட்டுக் கொண்டே, கால இயந்திரத்தில் பயணம் செய்து கண்டெடுத்த தடயங்கள் இவை. கடந்த நூறு வருடங்களில் தமிழ் மாறியிருக்கிறது. தமிழ்நாடு மாறியிருக்கிறது. ஆனால் - தமிழர்கள் மாறியிருக்கிறார்களா?

'தினமணி கதிர்' (6.12.98) இதழில் 'மனிதன்' பதில் ஒன்று

வினா எட்டாம் வகுப்புவரை அறிவியல் தவிர்த்த பாடங்களைத் தமிழில்தான் நடத்த வேண்டும் எனத் தமிழக அரசு உத்தரவிட்டுள்ளதே? - எஸ். கோபிகுமார், குடந்தை.

விடை அறிவியல் போன்றவற்றைக் கற்பிக்கத் தமிழால் இயலாது என்ற வாதத்தை அரசு ஏற்றுக் கொள்வதாகவே இதற்குப் பொருள். இது சரியல்ல. தவிர, எட்டாம் வகுப்பு வரையிலான எளிமையான அறிவியல் பாடங்களையே தமிழில் கற்பிக்கப் போவதில்லை என்றால், எப்படி உயர் கல்வியில் தமிழைக் கொண்டு வரப் போகிறார்கள்?

சரியான விடை : பாராட்டும்படி கொக்கிபோட்டிருக்கிறது 'கதிர்'

16.11.98 இல் முதலமைச்சரின் அறிவிப்பு வெளியாகியது. அது இதுதான்:

''கல்வி அமைச்சர் பேராசிரியர், தமிழ் வளர்ச்சித் துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் மற்றும் அதிகாரிகளுடன் கலந்து பேசி மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள் குறித்து பின்வரும் முடிவுகள் அறிவிக்கப்படுகின்றன. அதன் விவரம்:

1. தமிழை ஒரு பாடமாகச் சொல்லித் தரும் பள்ளிகளுக்குத் தான் ஏற்பளிக்கப்படும்.

2. அடுத்த கல்வி ஆண்டு முதல் (1999-2000) பூகோளம், வரலாறு, கணிதம், சமூக அறிவியல் போன்ற பாடங்களைத் தமிழ் வழியில் கற்பிக்க வேண்டும்.

3. தமிழ் மொழி வழியில் பல மழலையர் பள்ளிகள் இயங்குகின்றன. அவற்றிற்குப் பின்வருமாறு சலுகைகள் வழங்கப்படும்.

அ. ஏற்புக் கட்டணம் பாதியாகக் குறைக்கப்படும். ஆ. இப்பள்ளிகளுக்கும் அரசின் பாடநூல்கள் இலவசமாக வழங்கப்டும்.

4. ஏற்கெனவே உள்ள விதிகள் 37 (அ) பிரிவின்படி, அரசின் ஏற்பு பெறாத பள்ளிகளில் கல்வி பயிலும் குழந்தைகளை அரசு ஏற்புப் பெற்ற பள்ளிகளில் சேர்க்கக் கூடாது என உள்ளது. இந்த விதியின் எந்த வகையான தளர்வும் செய்யாமல் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும். 1-1-98ல் வெளியிட்ட விளம்பரத்தின் அடிப்படையில் தமிழகத்தில் அரசின் ஒப்புதல் பெறாத மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகள் தொடர்ந்து இயங்குவதை அரசு அனுமதிக்காது.

5. தமிழகத்தில் தமிழ் படிக்காமலேயே ஆங்கிலத்தோடு தத்தம் தாய்மொழியை மட்டுமே படிக்கும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் மொத்தம் 1008. இப்பள்ளிகள் அனைத்துக்கும் தமிழ் ஆசிரியர்கள் அமர்த்தப்பட்டு அவரவர் தாய்மொழி, தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றைக் கற்றுக் கொள்ள வகை செய்யப்படும். இவ்வகுப்பு நேரங்களை அனைத்துத் தரப்பினரின் கலந்துரையாடலுக்குப் பின்னர் முடிவு செய்யப்படும்.

சம்பந்தப்பட்ட கல்வியாளர்களோடு கலந்து பேசுவோம். எப்போது பேசுவோம் என்பது பேசிய பிறகு தெரியும். இந்த அறிவிப்பு வரும் கல்வியாண்டிலிருந்து அமலுக்கு வரும். ஆனால் இப்போது முதலே அதற்கான கண்காணிப்புப் பணிகள் எல்லாம் தொடங்கும்''.

இந்த அறிவிப்பு வந்ததும் கல்வி உலகத்தில் கலகலப்பு; இதழ்கள் உலகத்தில் படு சுறு சுறுப்பு; இதழ்கள் பலவும் துடித்தெழுந்து செயலாற்றின. தமிழகத்தில் மட்டுமல்ல, பிற மாநிலங்களில் வெளியாகும் இதழ்களும் தங்கள் கருத்துகளை வெளியிட்டன. முதலமைச்சரின் அறிவிப்புகளில் உள்ள விறுவிறுப்பைக் கவனியுங்கள். இச்செய்திகளை வெளியிட்ட 'தி இந்துஸ்தான் டைம்ஸ், புது தில்லி (The Hindusthan Times 17.11.98) என்ன எழுதுகிறது பாருங்கள்.

அறிவிப்பை அப்படியே வெளியிட முடியவில்லை இந்த இதழால், நமக்கு ஓர் எதிர்ப்புக் குறிப்போடுதான் வெளியிடுகிறது.

"In a controversial decision that could stir up linguistic trouble, the DMK Government today announced....."

கணிதம் முதலிய எல்லாப் பாடங்களும் தமிழிலேயே நடத்தப்பட வேண்டும் எனும் முதல்வர் அறிவிப்பினை எப்படி வெளியிடுகிறது பாருங்கள்:

'The State Government's insistence could spell trouble for numerous State Board institutions ' என்கிறது.

மொழி வாரியான குழப்பத்தைக் கிளப்பிவிடுமாம், மாறுபட்ட கருத்துகளுக்குரிய இந்த அறிவிப்பு.

மாநில அரசுக் கல்விக் கொள்கையைப் பின்பற்றும்- ஆங்கிலப் பயிற்றுமொழியில் நடந்துவரும் பல கல்வி நிறுவனங்களில் சிக்கல்கள் வர வாய்ப்பு இருக்கிறது என்கிறது இதழ்.

முதல்வர் நேற்றுத் தான் அறிவிப்புச் செய்தார். மொழி சார்ந்த குழப்பங்கள் வருமென்று, குழப்பங்களை முதலில் தொடங்கி வைக்கின்றது புதுதில்லியில் வெளியாகும் இந்த இதழ்.

பேராவூருணியிலிருந்து கௌதம் சீனிவாசன் எழுதுகிறார். (18.11.98) மடல் எனக்குத்தான். செய்தி இது:

3. ''தங்கள் அனைவர்க்கும் என் உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து நன்றிகளை காணிக்கையாக தருகின்றேன். நீங்கள் மறைந்தாலும் உமது இந்த தமிழ் மொழி தொண்டு என்றும் மறையாது. எப்படி உங்களை பாராட்டுவது என்றே புரியவில்லை. இருப்பினும் நீங்கள் பல்லாண்டு வாழ்க! உமது தமிழ் தொண்டு வளர்க. 8-ம் வகுப்பு மெட்ரிகுலேஷன் பள்ளியில் பயிலும் ஒரு மாணவனுக்கு தமிழில் கடிதம் எழுதத் தெரியவில்லை. இந்த அவல நிலையைப் போக்கிய தாங்கள் பல காலம் வாழ வேண்டும். 8-ம் வகுப்பு வரை என்பதை பள்ளி இறுதி வகுப்பு வரை நீடிக்க வேண்டும். ஒருவன் தான் நினைப்பதை, பார்ப்பதை மற்ற மொழியில் சொல்வதை விட, எழுதுவதை விட தாய்மொழியில் தான் சிறப்பாக பேச, எழுத முடியும் இதை நான் அனுபவ பூர்வமாக உணர்ந்தவன். வளர்ந்து முன்னேறிய நாடுகள் (ரஷியா, சப்பான்) எல்லாம் தாய்மொழி கல்வியில் தான் வளர்ந்து உள்ளன'' எவ்வளவு துடிப்போடு பலர் இருக்கிறார்கள் என்பதற்கு இந்த மடல் ஒரு சான்று.

ஆனந்த விகடனில் (6.12.98) ஒரு செய்தி.

குடந்தை இராசமாணிக்கம் என்பாரின் நூற்றாண்டு விழா. முதல்வர், மூப்பனாரெல்லாம் கல்ந்து பேசினர். நான் எதிரில். டி.டி. வாசு பேசினார். அதுபற்றித்தான் விகடன் எழுதுகிறது

''எந்த விழா மேடையாக இருந்தாலும் ஸ்டைலான ஆங்கிலத்தில் பிளந்துகட்டுவார் டி.டி. வாசு. அன்று மேடையில் முதல்வரும் கீழே முன்வரிசையில் அமைச்சர் தமிழ்க்குடிமகனும் உட்கார்ந்து இருக்கும்போது ஆங்கிலத்தில் பேசினால் 'அர்ச்சனை' கிடைக்குமோ என்று பயந்து தமிழில் பேசி, அது சரளமாக வராமல் பாவம், தடுக்கி விழுந்துகொண்டு இருந்தார் வாசு! தியாகுவை ராஜேஷ் என்று பெயர் மாற்றி வாசு விளிக்க இந்த மொழித்தடுமாற்றமும் ஒரு காரணம்!'' என்கிறது விகடன்.

டி.டி.வாசுவின் தாய்மொழி ஆங்கிலமாக இருக்குமோ? அதனால்தான் சரளமாக வருகிறது. ஆனால் பிறமொழியாகில் தமிழில் பேசும் போது தடுமாற்றமோ? நாங்களும் அதைத்தான் சொல்கிறோம். தாய்மொழியில் பேசினால்தான் சரளம் எல்லாம். பிற மொழியில் பேசினால் அந்தச் சரளம் குறையத் தான் செய்யும். புரிந்து கொண்டால் சரி!

பாராட்டு

பலரும் பாராட்டிய செய்திகளையும் இந்தியன் எக்சுபிரசு (18.11.98) வெளியிட்டுள்ளது. அதனை அப்படியே தருகிறேன்.

"Chennai, Nov17: Teachers associations in the state and political parties have welcomed Chief Minister M. Karunanidhi's announement yesterday that recognition will be granted to primary schools that impart education in Tamil in four subjects.

The Tamil Nadu Elementary School Teachers' Ferderation, in a statement, pointed out that in its general committee meet in kodaikanal in 1997, it had passed a resolution that all subjects must be taught in Tamil.

Thanking the Government for implementing the suggestion, the Federation said that it was for the education Department to implement the decision properly.

The All India Students Council, in a statement, said that the move will provide opportunities for the growth of Tamil and the system of education.

It has also sought action against the nursery schools that have sprung up all over the state without recognition.

The Tamil Nadu Tamil Teachers Association has thanked the Chief Minister, the Education Minister and Minister for Tamil Official Language and Culture for the announcement.

The move will end the sad situation of graduates passing out of the state without having learnt Tamil"

பல்வேறு ஆசிரியர் இயக்கங்களும் உணர்ந்து இந்தப் பாராட்டுகளை வழங்கியிருக்கின்றன.

* * *

அறிவிப்பு வந்தவுடனேயே ஒரு சிலர் எப்படிக் கடுப்படிக்கத் தொடங்கியுள்ளனர் என்பதைப் பாருங்கள். இவர்களின் கடுப்புக்கு இடமளிக்க இருக்கவே இருக்கிறது 'இந்து இதழ்' (29.11.98) மடல்களைப் படியுங்கள்.

"Making Tamil Compulsory

Sir, - As a measure of compelling schools to adopt the language of the soil as the medium of instruction, the Tamil Nadu Government has decided to give recognition to nursery and primary schools only if they come forward to teach Tamil not only as a subject, but also as the sole medium of teaching subjects such as geography, history, mathematics

and social studies. The Government has also offered to reduce by 50 percent the recognition fee and to supply textbooks free. But one feels the most potent factor in popularishing such schools would be to make it compulsory for the MLAs, MPs and Ministers to have their offspring and their offspring's offspring admitted to the Tamil medium schools. Only with the solid support of these VIPs can the Government hope to popularise Tamil medium. At present, the English medium schools are popular because the VIPs admit their wards only in such schools thought for public consumption they shout from house-tops that we should encourage the language of the soil. - *G.K.S. Kandasubramanian, Sivagangai.*

Sir, - What an irony that, while asking the Centre to declare all Indian Language the official languages of the country, the Tamil Nadu Government is not prepared to allow primary and nursery schools to teach in the language of their choice. Of course, there can be no objection to making compulsory the teaching of Tamil as a language. But the Government cannot deny the right of every child to learn th subjects in its mother tongue. That will amount to denial of minority rights enshrined in the Constitution, People speaking different languages are living in Tamil Nadu, particularly in cities. They should have the freedom to get their wards educated in the language of their choice. The DMK, which led a fierce agitation against the imposition of Hindi, should not impose Tamil on the non-Tamils. Education being in the Concurrent List, the Centre should intervene and protect the minority rights, if necessary by giving financial assistance and official recognition to such of those schools that are denies recognition by the State Government. - *A. Kalyanaraman, Chennai.*

முதலில் சட்டமன்ற நாடளுமன்ற உறுப்பினர்கள், மற்றும் அமைச்சர்களின் பிள்ளைகளும் பேரப்பிள்ளைகளும் தமிழ்வழிப் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டுமாம். இவர்களது பிள்ளைகள் சேர்ந்து படிப்பதனால்தான் சில பள்ளிகளே 'பெயர்' பெற்றுள்ளன என்கிறார் ஒருவர்.

சரிதானே!

மத்தியில் எல்லாமொழிகளும் ஆட்சிமொழிகளாக இருக்க வேண்டுமென்பவர்கள், இந்தித்திணிப்பை எதிர்ப்பவர்கள் தமிழர் அல்லாதவர்கள் மீது தமிழர் திணிக்கலாமா? என்கிறார் ஒருவர். உங்களுக்காகத்தானே 1008+194+41 பள்ளிகள் இருக்கின்றனவே! அங்கே சேர்ந்து விடலாமே!

நாகபுரியில் உள்ள பாரதீய விகார் மஞ்ச் தலைவர் பேரா. காசிகர் 'Place of English in Education' எனும் தலைப்பில் கட்டுரை எழுதியுள்ளார். அதில் நமது தமிழ்வழிக் கல்வி பற்றிய அறிவிப்பினை ஒட்டிச் சில செய்திகளை எழுதுகிறார்.

"And, What is most regrettable, English has created a cleavage between the ruled and the rulers. This is a big blow to democracy, responsible for the many ills that have crept into our political system. The present Tamilnadu Government seems to have been awakened by these ill effects of the dominance of English, as Tamil, a rich language, is itself suffering diminution. To his great chagrin, the Tamilnadu minister for Tamil language and culture, M. Tamilkudimaghan, has noted that Tamil has 'slipped from its literary level', that 'even the TV announcers in Tamil spoke bad Tamil and that people were 'ashamed' about using Tamil in day-to-day life. (Times of India, Mumbai; 6-12-98.) The state of th other Indian languages is not any different.

The Tamilnadu Chief Minister has, therefore, recently announced that from the next academic year Tamil would be made the compulsory medium of instruction in all state government schools and the lucrative incentives like 50 percent concessions in recognition fee and free supply of books would be offered to other schools that opt for Tamil medium. The plan is undoubtedly well-thought-out and pragmatic. But by itself, it gives no assurance of success. It is likely that most vocal opposition to it would come from the same Tamil people who were and are opposed to Hindi, as they hae vested interest in the continuance of English. Opposition parties, though they themselves would have, if in power, favoured a similar policy, would most probably find fault with the plan as they would see some 'hidden agenda' in it. If, therefore, the Tamilnadu government and the party in power really want to ensure success of their policy, they should necessarily associate with their work all Tamil-loving people and parties and share credit with them. It would also be necessary to start movement for introduction of regional languages as mediums of instruction in all states simultaneously and make it a truly national movement to ensure its success. Isolated efforts will not be able to face resistance by vested intersts. Tamil Nadu should take up leadership in this matter even for ensuring success of its plan in the state.

ஆங்கிலம் ஆள்பவர்கட்கும், ஆளப்படுபவர்கட்கும் இடையில் ஓர் இடைவெளியைத் தோற்றுவித்து விட்டது என்றும் நமது அரசியல் முறையில் பல தீமைகட்கு ஆங்கிலம் இடமளித்து விட்டது என்றும் கூறுகிறார்.

முதல்வரின் அறிவிப்பினைப்பற்றியும் குறிப்பிட்டுள்ளனர். 'The plan is undoubtedly well-thought-out and pragmatic' என்று கூறுவதைக் கவனியுங்கள். இந்திக்கல்வியை மறுத்தால், ஆங்கிலத்தின் மீது சார்ந்து நிற்கும் தமிழர்களே சிலர் இதனை எதிர்ப்பார்கள் என்கிறார். எதிர்க்கட்சிகள், இந்த அறிவிப்பில் ஏதோ உள் நோக்கம் இருப்பதாக எண்ணி எதிர்க்கக்கூடும் என்கிறார். ஆனால் தமிழகக் கட்சிகள் நம் அறிவிப்பினை வரவேற்றுள்ளன என்பதை அறிவோம்.

தாய்மொழி மூலம் கல்வி என்பதனை நிலைநாட்ட இந்தியாவின் எல்லா மாநிலங்களையும் ஒருங்கு திரட்ட வேண்டும் என்கிறார்.

சரியாக எழுதியுள்ளார் பேராசிரியர் காசிகர்.

திண்டிவனம் இராமமூர்த்தியின் கருத்துக்குக் கல்வியாளர் எஸ்.எஸ். இராசகோபாலன் விவரமான விடை தருகிறார். ஒரு வரலாற்றுக் குறிப்பாக அமையும் அவரது கருத்தினை நாம் தெரிந்து கொண்டே ஆகவேண்டும்.

யாரால் கெட்டது தமிழ்வழிக் கல்வி?

'திமுக ஆட்சியில்தான் தமிழ்வழிக் கல்வி கெட்டுவிட்டது' என்ற திண்டிவனம் ராமமூர்த்தியின் கூற்று (23.11.98) உண்மைக்கு மாறுபட்டது. ஆங்கில ஆட்சியின் பொழுதுகூட, பல பள்ளிகள் தாய்மொழி வழிக் கவி அளித்து வந்தன. 1937 - 39-ல் ராஜாஜி முதல்வராக இருந்தபொழுது தாய்மொழிவழிக் கல்வி ஊக்குவிக்கப்பட்டது. விடுதலைக்குப் பின்னர், சென்னை இராஜதானியின் முதல் கல்வி அமைச்சரான தி.சு. அவிநாசிலிங்கம் வெளியிட்டுச் செயல்படுத்திய கல்விக் கொள்கை தாய்மொழிவழிக் கல்வியைப் பரவலாக்கியது மட்டுமின்றி ஆங்கிலவழிக் கல்விக்கும் சில தடைகள் போடப்பட்டன. தாய்மொழி வட்டார மொழியாக இல்லாமிலிருந்தாலோ, பெற்றோர் பிற மாநிலங்களுக்கு மாறுதலுக்கு உட்படுபவர் ஆனாலும்தான், அரசின் முன் அனுமதி பெற்று ஒரு மாணவன் ஆங்கிவழி வகுப்பில் சேர இயலும், 1947-62 ஆண்டுகளில், 5,6 பள்ளிகளில் மட்டுமே தமிழ்வழி வகுப்புகளுடன் ஆங்கில வழி வகுப்புகள் நடத்த புதியதாக அனுமதி அளிக்கப்பட்டது. 1962-67 ஆண்டுகளில் இக் கொள்கையில் மாற்றம் கொண்டுவரப்பட்டு, தாய்மொழி தமிழாக இருந்தாலும் ஆங்கில வழி வகுப்புகளில் சேரலாமென்றும் சேர்க்கைக்கு அரசின் முன் அனுமதி

வேண்டாமென்றும் ஆணையிடப்பட்டது. எவ்விதக் கோரிக்கையோ, விண்ணப்பமோ இல்லாமலேயே, பள்ளிகளில் ஆங்கிலவழிக் கல்வி அளிக்க அரசு மற்றும் தனியார் பள்ளிகள் தேர்வு செய்யப்பட்டன. இவற்றில் மாணவர் சேர முன்வரவில்லை என்பது இன்றைக்கு வேடிக்கையாக இருக்கும்.

பல்கலைக்கழகங்கள் தம்மோடு இணைந்திருந்த 34 மெட்ரிகுலேஷன் பள்ளிகளை மத்திய அல்லது மாநிலக் கல்வி வாரியங்களுடன் இணைத்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டன. தங்களின் தனித்தன்மை காப்பாற்றப்பட வேண்டுமென்ற அவர்களது கோரிக்கை, 1976-ம் ஆண்டில் குடியரசுத் தலைவர் ஆட்சியின்பொழுதுதான் ஏற்கப்பட்டது. மெட்ரிகுலேஷன் பள்ளி ஆய்வாளர் நியமிக்கப்பட்டது 1978-ம் ஆண்டில் முதல் அதிமுக ஆட்சியில்தான். அதனைத் தொடர்ந்து தமிழ்வழிக் கல்விக்கு முரணாக மெட்ரிகுலேஷன் பள்ளிகள் அனுமதிக்கப்பட்டன. இக் கொள்கையின் உச்சகட்டம் 1991-96 காலகட்டத்தில் என்பதை நினைத்துப் பார்க்க வேண்டும். இப்போக்கினை மாற்றிட காலந்தாழ்த்தியாவது தற்பொழுது எடுக்கப்படும் முயற்சிகளுக்கு ஆதரவும் பாராட்டும் தருவதற்கு மாறாக, தி மு க அரசைச் சாடுவது முறையல்ல. தற்பொழுது அறிவித்துள்ள கொள்கையை மேலும் சீர்படுத்தி தமிழ்வழிக் கல்வியை வலிமையும் ஆழமும் பயனும் உள்ளதாக ஆக்கவேண்டிய பொறுப்பு அனைவர்க்கும் உண்டு.'' - *எஸ்.எஸ். இராஜகோபாலன், சென்னை-93, (தினமணி 7.12.98)*

'கல்கண்டு' இதழ் சிலரது நேர்காணல்களை வெளியிட்டும் தன் கருத்தைத் தெரிவித்தும் சில செய்திகளை வெளிக்கொணர்ந்துள்ளது. படியுங்கள்.

''வட மாநிலங்களில் பொதுவாக இந்தி அதிகமாகப் பேசப்படுகிறது. கணக்கு எடுத்துப்பார்த்தால் இந்திய மக்களில் இந்தி பேசுபவர்கள்தாம் மிக அதிகம். இதனால்தான் மத்திய அரசு இந்தியை அரசு மொழியாக ஏற்றுக் கொண்டது. இந்தி தெரியாத தென்மாநிலங்களில் உள்ளவர்கள் கூச்சல் போட்டதன் விளைவாக, ஆங்கிலத்தை அவசிய மொழியாக ஏற்றுக் கொண்டிருக்கிறது.

தமிழ் கற்றவர்கள் கூட, தமிழகத்தைவிட்டு மற்ற மாநிலங்களுக்குப் போய் வேலை செய்ய வேண்டும் என்றாலோ, ஆங்கிலம் தெரிந்தால்தான் எளிது என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம்.

ஒவ்வொரு மாநிலத்திலும் ஆங்கிலம் தெரிந்தவர்கள் ஒரு சிலராவது இருப்பதைக் காணலாம். ரயில்வே ஸ்டேஷன்களில் பெயர்களைக் கூட, மற்ற

மாநிலங்களுக்குப் போகும்போது ஆங்கிலம் தெரிந்தவர்கள்தாம் தெரிந்துகொள்ள முடியும்.

ஆக, இன்றைய உலகில், ஆங்கிலம் எப்படியும் தெரிந்திருக்க வேண்டும் என்ற நிலை உருவாகியிருக்கிறது. அதே நேரத்தில், தமிழ் நாட்டில் படிக்கும் பல மாணவர்கள் கொஞ்சம் கூட தமிழ் தெரியாதவர்களாக இருப்பதைப் பார்க்கும்போத அரசு உத்தரவு எந்த அளவுக்கு வரவேற்கத்தக்கது என்பது புரிகிறது.

கேரளாவில் மலையாளத்தைக் கட்டாயப் பாடமாக்கிவிட்டார்கள். கர்நாடகத்திலும் கன்னடத்தில் பாடங்கள் படிக்க வேண்டும் என்ற சட்டம் வந்துவிட்டது. தமிழகத்திலும் இப்படி ஒரு சட்டம் வந்திருப்பது வரவேற்கத்தக்கதே.

தமிழக அரசின் கடிதங்கள் தமிழில் வருகின்றன. நீதி மன்றங்களில் நீதிபதிகள்கூட தமிழ் தெரிந்திருந்தால், வழக்கின் முடிவைத் தமிழில் அறிவிக்கிறார்கள். ரேஷன் கார்டுகள் தமிழில் வழங்கப்படுகின்றன. ஆகையால் தமிழ் நாட்டில் வாழ்பவர்கள் தமிழைக் கற்காமல் இருக்க முடியாது என்ற நிலை உருவாகியுள்ளது.

ஆங்கிலத்தில் பிள்ளைகள் பாடங்களைப் படிக்கும்போது எளிதில் புரிந்து கொள்ள முடிவதில்லை. ஆனால் அதே பாடங்களைத் தமிழில் கற்கும்போது எளிதில் புரிந்து கொள்கிறார்கள் என்பது அனுபவம் பெற்ற ஓர் ஆசிரியரின் கருத்து.

'மம்மி - டாடி' என்று அழைப்பதை விட்டு பிள்ளைகள் இனியாவது 'அம்மா - அப்பா' என்று அழைக்கட்டுமே என்று தமிழ் படித்தவர்கள் கூறுகிறார்கள்.

ரஷ்யாவில், ஜப்பானிலும், சீனாவிலும் ஆங்கில ஆதிக்கம் இல்லை. அவரவர் மொழிகளிலேயே பேசுகிறார்கள். எழுதுகிறார்கள். கம்ப்யூட்டர்களை இயக்குகிறார்கள். இவர்கள் மட்டும் முன்னேற முடியவில்லையா என்று வலியுறுத்தும் நிபுணர் ஒருவர், தமிழில் கலைச் சொற்களை அதிகரிக்க வேண்டும் என்று யோசனை சொல்கிறார்.

நடுநிலைப் பள்ளிகளில் மட்டுமின்றி, உயர்நிலைகளிலும்கூட தமிழையே பாடங்களாக நடத்தவேண்டும் என்று சிலர் கருதுகிறார்கள்.

பொறியியல், கம்ப்யூட்டர், மருத்துவம் என்று போனபிறகு, முற்றிலும் தமிழில் பாடங்களை நடத்த முடியுமா என்பது ஒரு பெரிய பிரச்னை. இதற்கான அடிப்படை வசதிகள் இங்கே இல்லை.

இப்படிப்பட்ட நிலையில் தமிழ் கட்டாயம் படித்தாக வேண்டும் என்று அரசு நினைப்பதற்கு உரிய காரணங்கள் ஒரு சில உண்டு.

முதலாவதாக, திராவிட இயக்க அரசுகளின் இரு மொழிக் கொள்கைக்கு பின்னணி உண்டு. அதாவது, தமிழோடு ஆங்கிலம் என்பதே அந்த கொள்கை. மாநில சுயாட்சி, இந்தி எதிர்ப்பு என்ற திட்டத்தினால் பெரிய சக்தியாக மாறிய இயக்கம் வேகமாக வடிவெடுக்க முடிந்தது. தமிழ் மண்ணில் இந்தி நுழையக் கூடாது என்பதற்காகவே ஆங்கிலம் என்றார்கள். அதன் விளைவால் ஆங்கிலம் பெரிதும் மதிக்கப்பட்டு வேகமாக வளர்ந்துவிட்டது.

இப்போதும் தமிழ் வேண்டும் என்று சொல்லும் அரசு, ஆங்கிலத்தைப் பின்னால் தள்ளப் பார்க்கிறது. தமிழை வளர்க்கத் துடித்த தி.மு.க. இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு விழித்துக் கொண்டதற்கு அரசியல் ஆதாயமும் ஒரு காரணம் என வலுவாக நம்ப இடமிருக்கிறது.

தமிழ் படிக்க வேண்டும். கட்டாயம் படிக்க வேண்டுமா என்று சொல்லும் பிரபல பேராசிரியர் மா. நன்னனின் கருத்து என்னவென்று பார்ப்போம்.

மா. நன்னனைத் தெரியாதவர்கள் தமிழ் நாட்டில் இருக்க முடியாது. இவரை டெலிவிஷனில் பார்த்தவர்கள் மறக்கமுடியாது. தமிழ்ப் பாடங்களை மிக எளிமையாக, தமிழே கொஞ்சம் கூட தெரியாதவர்களுக்காகக் கற்றுக் கொடுத்த போது, தமிழ் கற்பது இவ்வளவு சுலபமா என்று எண்ணும்படி செய்தவர். இவருடைய முகபாவங்கள், பார்ப்பவர்களை ஊக்குவிக்கும். குழந்தைகளிடம் பேசுவதைப்போல் பேசுவார்.

திராவிட இயக்கம் வந்த பிறகுதான் மொழி உணர்வு ஏற்பட்டது. தமிழ் மொழிக்கு, தமிழ் இலக்கியத்துக்கு செல்வாக்கு ஏற்பட்டதே தி.மு.க.வால்தான் என்பது இவர் சொல்லும் முதல் செய்தி.

திருக்குறள், சிலப்பதிகாரம், சங்க இலக்கியங்கள் ஆகியவற்றை மக்களுக்கு கொண்டு சென்றவை திராவிட இயக்கங்கள்தாம் என்று விளக்குகிறார்.

1967ல் தமிழ் மூலம் பாடப்படிப்புக் கொண்டு வந்த தி.மு.க. அரசு மீதும் பெரிய எதிர்ப்பு ஏற்பட்டதால் பின்வாங்கிவிட்டது. 1967ல் விட்டுப்

போனதை இப்போது தொடர்ந்து செயல்படுத்துகிறார் முதல்வர் என்பது இவர் கருத்து.

சி. குமாரி என்னும் குடும்பத்தலைவி கூறுவதைக் கொஞ்சம் கேட்போம். 'நல்ல முயற்சி என்றுதான் சொல்லவேண்டும். ஆனால், வேலைவாய்ப்பு போன்றவை இதனால் கெட்டுப் போகுமோ என்று பயமாக இருக்கிறது என்கிறார்.

அரசின் அறிவிப்பு முழுமையாக வெளிவராததால் சரியாகச் சொல்ல முடியவில்லை. இனி தமிழ்க் கல்வி என்றால், எதிர்காலம் எப்படியிருக்குமோ என்று அஞ்சுகிறார். இப்போது ஆங்கிலத்தில் படிப்பவர்களே முன்னேறுகிறார்கள் என்ற நிலை இருந்து வருகிறது என்பது இவர் கருத்து.

அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளி ஒன்றின் முதல்வர் ஸ்வர்ணலதா கூறுவது மிகவும் தெளிவாக இருக்கிறது.

பெற்றோரே தமிழைக் கட்டாயப் பாடமாக்க வேண்டும் என்ற கொள்கையை ஏற்கமாட்டார்கள் என்று நினைக்கிறார்.

ஆங்கில மீடியத்தில் படித்தால், மேல் படிப்புப் படிக்கும் போது எளிதாக இருக்கும். வெளிநாடுகளில் கல்வி கற்பது எளிது. முன்னேற முடியும். இதன்மூலம் இந்தியாவும் முன்னேறும். பிறநாடுகள் நம் நாட்டைவிட முன்னேறியிருக்கும் நிலையில் இந்த முடிவு கல்வியின் தரத்தைப் பாதிக்கும்! என்கிறார்.

தமிழ்மொழி ஒரு பாடமாக இருக்க வேண்டும் என்ற சட்டம் கொண்டுவரலாம். தமிழ்மொழியைக் கண்டிப்பாக கற்கவேண்டும். ஆனால், எல்லாப் பாடங்களையும் தமிழில்தான் கற்கவேண்டும் என்று திணிப்பது முன்னேற்றத்தைப் பாதிக்கும் என்பதைத் தெளிவாக்குகிறார்.

மாநில அரசு பள்ளிகளில் தமிழில் படித்து வரும் மாணவர்களை விட, சென்ட்ரல் போர்டு பள்ளிகளில் ஆங்கிலத்தில் படித்து முடித்து வரும் மாணவர்களுக்கே வேலை வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். இதனால் சென்ட்ரல் போர்டு பள்ளிகளில் மாணவர்களைச் சேர்க்கப் போட்டியிடும் பெற்றோர் அதிகமாவார்கள். அதே நேரத்தில் சென்ட்ரல் போர்டு பள்ளிகளில் தமிழைக் கட்டாயப் பாடமாக்க முடியாது.

இந்த நிலையில் அரசு எடுத்த முடிவுக்குப் பலத்த ஆதரவு இருப்பது போன்ற ஒருமாயை உருவானால்கூட பெற்றோர் தங்கள் பிள்ளைகள் ஆங்கிலத்தை பயிலவேண்டும், ஆங்கில மீயத்தில் படிக்கவேண்டும் என்றே எண்ணுவார்கள்.

ஆனால், அதற்காக தமிழையே படிக்காமல் இருப்பது என்பத எதிர்காலத்துக்கு ஏற்றதல்ல, மாநில அரசு தமிழில் செயல்படுவதால் தமிழ் நாட்டில் வாழ்பவர்கள் தாய்மொழியான தமிழை ஒரு பாடமாகவாவது கற்கவேண்டும். வெளி உலகத் தொடர்புக்காக ஆங்கிலத்தையும் கற்றாக வேண்டும். 21 ஆம் நூற்றாண்டின் கட்டாயச் சூழல் இது.''

சட்டப்பேரவை முன்னாள் தலைவர் க. இராசாராம் அரசின் அறிவிப்பினை மதித்து, எதிர்ப்பாளர்களுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார்.

அரசு உத்தரவிட்டுள்ளதை எதிர்த்து ஒருநாள் பள்ளிகளை மூடி எதிர்ப்பு தெரிவித்தார்கள் என்ற செய்தியை படித்ததும் திடுக்கிட்டேன்.

மம்மி, டாடி கலாச்சாரம்

உலகில் எங்கும் நடக்காத ஒன்று இது. நமது பிள்ளைகள், 'மம்மி-டாடி' கலாச்சாரத்துக்கு மாறிக் கொண்டிருப்பதை தடுக்க அரசு போட்டுள்ள உத்தரவை தமிழ் உணர்வுள்ள எவரும் வரவேற்கவே செய்வார்கள்.

நான் உலகம் முழுவதும் சுற்றியுள்ளேன். வெளிநாட்டில், மற்ற மொழிக்காரர்கள், ஒருவரையெருவர் சந்தித்துக் கொண்டால் தங்கள் தாய்மொழியில்தான் பேசிக் கொள்வார்கள். பிரெஞ்சுக்காரன் தன் தாய் மொழியைத் தவிர வேறெந்த மொழியிலும் பேசமாட்டான்.

நான் மொரீஷியஸ் நாட்டிற்குப் பலமுறை சென்றுள்ளேன். அங்குள்ள தமிழர்கள் தங்கள் தாய்மொழியையே மறந்து விட்டார்கள். பெயர்கள் மட்டும்தான் தமிழ்ப்பெயர்களாக உள்ளன.

தமிழ் எப்படி வளரும்?

அங்கே, பீகார் மாநிலத்தவரும் வசிக்கிறார்கள். அவர்கள் தங்கள் தாய் மொழியான இந்தியை மறக்கவேயில்லை. காரணம், அவன் அலுவலகத்தில் ஆங்கிலம் அல்லது பிரெஞ்சு மொழியில் எழுதுகிறான். அவரவர்கள் தங்கள் வீட்டிற்குப் போனவுடன் குடும்பத்தாருடன் தங்கள் தாய்மொழியில் அளவளாவுகிறான். நம் தமிழனோ ஒன்று ஆங்கிலத்தில்

அல்லது உள்ளூர் மொழியான கிரியோவில் பேசுவான். குடும்பத்தாருடனே தமிழைப் பேச மறந்தால் தமிழ் எப்படி வளரும்.

இன்றைக்கு உலகத்தில் தமிழில் யாராவது பேசினால், அவன் கட்டாயம் இலங்கையில் பிறந்த தமிழனாகத்தான் இருப்பான். இதுதான் இன்றைய தமிழின் நிலை, தமிழை நாம் வீடுகளில் பயன்படுத்தவும், பள்ளிகளில் படிக்கவும், மறந்தோமானால் தமிழ்ச்சமுதாயமே பூண்டற்றுப் போய்விடும். இந்த நிலை நம் காலத்தில் வளரவிடவே கூடாது.

ஆங்கிலப் பள்ளிகளை மூடிவிட அரசு உத்தரவிடவில்லை. இன்றைய அரசுக்கு அங்கு நடக்கும் கூத்துகள் தெரியுமோ, தெரியாதோ?

நான், சபாநாயகராக இருந்தபோது அந்தப் பள்ளிகளின் ஆண்டுவிழா, ஆபட்ஸ்பரி மாளிகையில் நடந்தது. கேலிக்கூத்து என்னவென்றால், ஆங்கிலம் படிக்கப் போன சிறுவர்கள் பெண் குழந்தையும், ஆண் குழந்தையும் ஒருவரை, ஒருவர் ஆங்கில நாட்டுப் பாணியில் கட்டிப்பிடித்துக் கொண்டு, ஆங்கில இசைக்கேற்ப நடனமாடிக் கொண்டிருந்தார்கள்.

நான் அன்றைக்கு பள்ளி ஆசிரியர்களை கடுமையாக கண்டித்தேன். பிள்ளைகள் ஆங்கிலம்தான் படிக்க வருகிறார்களே, தவிர அவர்கள் கலாச்சாரத்தையும் கற்றுக்கொள்ள வரவில்லை. மேல்நாட்டுப் பண்பாட்டையும், கலாச்சாரத்தையும் சிறுவயதுக் குழந்தைகளுக்கே கற்றுக் கொடுத்து விடாதீர்கள், என்றேன்.

தமிழ் கலாச்சாரத்திலேயே தமிழ் நாட்டு மக்கள் தற்போது ரூ.1,400/- கோடிக்கு மேல்நாட்டு மது குடிக்கிறார்கள். இன்னும் ஆங்கிலக் கலாச்சாரம் வந்து புகுந்துவிட்டால், தமிழ்ச்சமுதாயமே வறுமை கோட்டிற்கு கீழ் வேகமாக செல்லுவதை யாரும் தடுக்க முடியாது' என்கிறார் அவர்.

'முகம்' இதழில் ஒரு கேள்வி-பதில். (திசம்பர் 1998)

"கேள்வி: 9. தமிழ்க்குடிமகன் தமிழ் வழிபாட்டில் தீவிரமாக இருக்கிறாரே?

பதில்: அதனால்தான் என் மனம் திக்...திக்... என்று வேகமாக அடித்துக் கொள்கிறது இதேபோல் முன்பு, தமிழ்ப்பெயர்ப்பலகையில் தமிழ் இடம் பெறவேண்டுமென்று தீவிரமாக இருந்தபோது நான் சொன்னேன். 'தமிழ்க்குடிமகனை இழுத்துப் பிடிக்காமல் இருக்கவேண்டுமே!' என்று.

நான் அஞ்சியது போல அவரை மடைமாற்றி அறநிலையத் துறைக்கு விட்டார்கள். இப்போது இதிலும் அவர் தீவிரமாக இருப்பதைப் பார்த்து, அவருக்கு உறுதுணையாக இருந்த மெய்கண்ட தேவனை திடீரென்று மாற்றிவிட்டு, அந்த இடத்தில் ஒரு வேதியரைப் போட்டிருக்கிறார்கள்.

இந்த மாற்றத்துக்குக் காரணம் கலைஞரோ, அவர் வீட்டுப் புழக்கடை பக்கமிருந்து யாரோ?''

அவரே தெளிவாக விடை சொல்லிவிட்டார். புதிய விளக்கம் தேவையில்லை.

'வாசுகி' இதழ் இருதரப்பிலும் சிலரைக்கண்டு கருத்துகளைக் வெளியிட்டுள்ளது. சார்பாகப் பேசும் முனைவர் மா. செல்வராசன், மருத்துவர் சொக்கலிங்கம் கருத்துகள் இவை.

சற்றே காலங்கடந்த அறிவிப்பு என்றாலும் அரசின் இந்த ஆணை முற்றிலும் வரவேற்கத்தகுந்த ஒன்று. உலகிலுள்ள எல்லா நாடுகளும் தங்கள் தாய்மொழி வழியே கல்வி கற்கும் போது, நாம் மட்டும் ஏன் ஓர் அயல் மொழியின் உதவியை நாட வேண்டும்? மொழி, அறிவு இல்லை என்பதை நாம் புரிந்துக் கொள்ள வேண்டும். ஆங்கிலம் இல்லையென்றால் அறிவு இல்லை என்ற எண்ணம் தவறானது. அப்படிப்பார்த்தால் ஆங்கில மொழி அறிமுகமில்லாத நாடுகள் பல இருக்கின்றன. அங்கெல்லாம் கல்வி இல்லையா? அறிவு இல்லையா? இல்லை வளர்ச்சிதான் இல்லையா? விண்வெளி ஆய்வில் சிறந்து விளங்கும் ரஷ்யா ஆங்கிலத்தை நம்புகிறதா? இல்லை. அதிவேக ரயில்களை கண்டுபிடித்திருக்கும் பிரான்சு, ஜெர்மனி போன்ற நாடுகள் ஆங்கிலத்தை நம்புகிறதா? இல்லை; பல புதிய பொருட்களை கண்டு பிடிப்பதில் முன்னணி வகிக்கும் ஜப்பான்தான் ஆங்கிலத்தை நம்புகிறதா?

1968-ல் முதல்வராக இருந்த அண்ணா அவர்கள் நம் தமிழ்நாட்டில் தமிழ், ஆங்கிலம் என்ற இரண்டு மொழி கொள்கை இருந்தாலும், ஐந்து ஆண்டுகளுக்குள் தமிழை கல்விமொழியாக ஆக்கவேண்டுமென்றார்.

ஆங்கிலேயர்கள் இருந்தவரை ஆங்கிலவழி கல்வியை போதிக்கும் மெட்ரிக்குலேஷன் பள்ளிகள் 30 தான் இருந்தது. ஆனால் எப்போது இந்தப் பள்ளிகள் அங்கீகாரம் பெற்றனவோ அப்போதுதான் ஆங்கிலமோகம் வளர்ந்தது.

தமிழில் படிப்பதால் வெளிநாடு செல்லமுடியாது என்கிறார்கள். எதற்காக நாம் வெளிநாடு செல்ல வேண்டும்? அரசாங்கம் செலவழித்து

இவர்களுக்கு கல்வியை வழங்குகிறது. ஆனால் பயனெல்லாம் வெளி நாட்டிற்குத்தான் கிடைக்கிறது.

பழம்தேடும் பறவைகள் போல் வெளிநாடு வெல்லும் இவர்களை நம் நாட்டு வளர்ச்சிக்கு பயன்படுத்த வேண்டுமெனில் தமிழ் வழிக்கல்வி அவசியம்.

எட்டாவது வரை தமிழ் மீடியம் அதுவும் அறிவியலை தவிர்த்து என்றில்லாமல், மேல்நிலைப்பள்ளி, கல்லூரி, பல்கலைக்கழகம் வரை தமிழில்தான் பயிற்றுவிக்கப்படும் என்ற நிலை வந்தால்தான் இந்த திட்டம் முழுமையடையும். மேலும் அரசு பள்ளிகள், மெட்ரிக்குலேஷன், ஆங்கிலோ இந்திய பள்ளிகள் மூன்றுக்கும் வெவ்வேறு பாடதிட்டங்கள் உள்ளன. அப்படியெல்லாம் இந்த மூன்றிலும் தமிழ் வழிக்கல்வி அறிமுகப்படுத்தப்பட்டால் தான் இந்த திட்டம் வெற்றி பெறும். ஆகவே அரசின் இந்த ஆணை விரிவுப்படுத்தப்பட வேண்டும்.

தமிழ்நாட்டிலுள்ள பள்ளிகளில் தமிழில்தான் பாடங்கள் நடத்தப்படும் எனும் நிலை வரவேண்டும். அதற்கு தொடக்கமாக அமைந்த அரசின் இந்த ஆணை மிகவும் வரவேற்கத்தக்கது.

டாக்டர் கே. சொக்கலிங்கம் (குற்றவியல் துறைத் தலைவர், சென்னைப் பல்கலைக்கழகம்)

ஆங்கில அறிவு கட்டாயம் வேண்டுமென்றாலும் தமிழை நாம் உதாசீனப்படுத்தக் கூடாது. பிறரோடு நம் கருத்துக்களை பகிர்ந்துக்கொள்ள ஆங்கில அறிவு நிச்சயம் உதவும். ஆனால் கல்வி என்று வரும்போது நாம் ஏன் தமிழில் பயிலக்கூடாது? உலகிலுள்ள பல நாடுகளுக்கு நான் உரை நிகழ்த்தச் சென்றிருக்கிறேன். அங்கு பலர் ஆங்கிலத்தில் புலமை பெற்றவர்கள் அல்ல. ஜெர்மனியில் குற்றவியல் சட்டம், ஒன்று கூட ஆங்கிலத்தில் இல்லை. எல்லாமே அவர்கள் தாய்மொழியான ஜெர்மன் மொழியில்தான் இயற்றப்பட்டுள்ளது.

ஆங்கிலம் தெரிந்திருந்தால்தான் அறிவிருக்கிறது என்றெல்லாம் இல்லை. மொழி தெரிந்து வைத்திருப்பது என்றும் அறிவாகாது. அரசின் இந்த ஆணை வரவேற்கத்தக்க ஒன்றாகும்.“

எட்டாம் வகுப்பு மாணவி சு. சுபப்பிரதா கூறுகிறார்:

“தமிழ்மொழியை தமிழ் மக்களாகிய நாமே புறக்கணிப்பது முறையா? நம் மொழியை நாம் மதிக்காவிட்டால் பிறமொழியினர் எப்படி

மதிப்பார்கள்? ஆங்கிலம்தான் உயர்ந்தமொழி; ஆங்கிலம் பேசுவோர்தான் உயர்ந்தவர் என்று நம்மை நாமே தாழ்த்திக் கொள்வது ஏன்? பலர் ஆங்கிலப்புலமையுடன் இருந்தால்தான் வேலை கிடைக்கும் என்று நம்புகிறார்கள். ஜப்பான் நாட்டில், ரஷ்ய நாட்டில் அந்த நாட்டு மொழியின்றி ஆங்கிலத்தில் பேசி வேலை பார்க்க முடியாது.

அதுபோல் தமிழ்நாட்டில் தமிழில் கற்றவர்களுக்கே வேலை வாய்ப்பு என சட்டம் இயற்றி தமிழில் படிப்பவர்களுக்கு வேலை பாதுகாப்பு கொடுக்க வேண்டும். இணைப்பு மொழியாக ஆங்கிலம் கற்றுக்கொள்ள வேண்டியதுதான். ஆனால் தமிழ் புறக்கணிக்கப்படக் கூடாது. தமிழ்நாடு அரசும் கம்ப்யூட்டர் மற்றும் விஞ்ஞான நூல்கள் அனைத்தும் உடனே தமிழில் கிடைக்கவும், தமிழ்வழி கற்போருக்கு வேலை முன்னுரிமை கிடைக்கவும் வழி செய்ய வேண்டும்'' என்கிறார்.

மாநகராட்சி நடு நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பெ. வேணுகோபால் கருத்து இது.

ஆங்கிலத்தை ஒரு தொடர்பு மொழியாக பயன்படுத்தலாமே தவிர, தமிழுக்குதான் முக்கியத்துவம் தர வேண்டும். ஜப்பான் நாட்டில் அவர்கள் தாய்மொழியைத் தான் பேசுகிறார்கள். இந்த அறிவிப்பு ஏற்கனவே செய்திருக்க வேண்டிய ஒரு விஷயமாகும். கொஞ்சம் காலதாமதம் ஆகி விட்டது. மேலும் வேலை வாய்ப்பு, மேல்கல்வி என அனைத்திலும் தமிழ் கற்போருக்கு முன்னுரிமை அளிக்க வேண்டும். இது பாராட்டத்தக்க ஒரு அறிவிப்பாகும்.

தொழிலதிபர் கே. நாகராசன் கூறும் கருத்து சிறப்பாக உள்ளது:

''நாங்கள் இப்போது 5,6 ஆண்டுகளாக சிறு தொழில் செய்வோர், சைக்கிள் ஷாப் வைத்திருப்பவர்கள், வல்கனைசிங் ஷாப் வைத்திருப்பவர்கள், குடிசைத் தொழில் செய்வோர் என்று எங்கள் நிறுவனம் சார்பாக இந்த சிறிய தொழிலதிபர்களை தொடர்பு கொள்ளும்போது தமிழ் கடிதங்கள் அனுப்பி தொடர்பு கொள்கிறோம்.

இதில் எதிர்பாராத வரவேற்பு கிடைத்துள்ளது. முன்பு நாங்கள் ஆங்கிலத்தில் கடிதங்கள் அனுப்பினோம். ஆனால் இந்த அளவு வரவேற்பு அப்போது இல்லை. காரணம் அவர்கள் வெறும் எட்டாம் வகுப்பு வரை மட்டுமே படித்தவர்கள். தமிழிற்கு உள்ள முக்கியத்துவத்தை இப்போது தெரிந்து கொள்ளலாம்.

எனவே பெற்றோர்கள் இதை உணர்ந்து குழந்தைகளை 8-ம் வகுப்பு வரை கட்டாயமாக தமிழ்ப் பாடம் கற்க செய்ய வேண்டும். இது தேடி வந்துள்ள

ஒரு நல்வாய்ப்பு. இதை ஒரு பிள்ளையின் அப்பா என்ற முறையில் நான் கூறுகிறேன். நான் ஜப்பான் போயிருந்தேன். அங்கு என்னுடன் சுமார் ஐம்பது தொழிலதிபர்கள் வந்திருந்தார்கள். நாங்கள் சந்தித்த ஜப்பானியத் தொழிலதிபர்கள் சுத்தமான ஆங்கிலம் கலக்காத அவர்களது ஜப்பானிய மொழியில்தான் பேசுகிறார்கள். இதற்காக மொழி பெயர்ப்பு கருவி ஒன்றையும் வைத்திருக்கிறார்கள். அக்கருவிக்கு மொழிபெயர்ப்புக்கு மட்டும் ஒரு மணி நேரத்திற்கு 12 ஆயிரம் ரூபாய் செலவாகும் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள்.

நான் பி.யு.சி. வரை தமிழ் மீடியத்தில்தான் படித்தேன். ஆனால் பின்பு நான் ஆங்கிலமீடியத்தில் சேர்ந்து பல பட்டங்களைப் பெற்றேன். இப்போது ஆங்கிலத்தில் எல்லா விவரங்களையும் அறிவேன். எனவே எட்டாம் வகுப்பு வரை தமிழ் கற்பதால் நமக்கு வருங்காலத்திற்கு மிகவும் நல்லது.''

இதுதான் உண்மையான நிலை. பல நாடுகளில் சென்று பழகியவன் என்பதால் என்னால் இதனை உணர முடிகின்றது.

ஆனால் ஒரு மெட்ரிகுலேசன் பள்ளித் தலைமையாசிரியை வசந்தா செயராம் என்ன சொல்கிறார் என்று பாருங்கள்:

''ஆங்கிலம் எளிமையான ஒரு மொழியாக இருப்பதோடு மட்டுமல்லாமல் பலரால் பேசப்படும் மொழியாகவும் இருப்பதால் இதை கற்பதால் பல நாடுகளுக்கு செல்லலாம் என்பதோடு ஒரு குழந்தையின் அறிவுத்திறன் நன்கு வளர்கிறது. அப்படியிருக்க எட்டாவது வரை தமிழ்வழிக்கல்விதான் அளிக்கப்பட வேண்டுமென்றால் எதிர்காலத்தில் இவர்களால் தமிழ்நாட்டில் மட்டும்தான் பணிபுரிய முடியும். வெளிநாடு என்றில்லாமல் நம் நாட்டின் பிற மாநிலங்களில் கூட இவர்கள் பணிபுரிய முடியாமல் போகும்.

தமிழை ஒரு கட்டாய பாடமாக நாம் கற்கவேண்டுமென்பதில் நான் ஒத்துப்போகிறேன். ஆனால் புவியியல், வரலாறு போன்ற பாடங்களை தமிழில் படிப்பது அவ்வளவு சுலபமான ஒன்றல்ல. இதைத் தமிழில் படிக்க மாணவர்கள் நிச்சயம் திணறுவார்கள். அதனால் அந்தப்பாடங்களை ஆங்கிலத்தில் படிப்பதுதான் எளிதான ஒன்றாகும். மேலும் ஆங்கில அறிவு தங்கள் குழந்தைகளுக்கு வேண்டுமென்று பெற்றோர்கள் நினைப்பதால்தான் அவர்களை ஆங்கில பள்ளிகளில் சேர்க்கிறார்கள். அதையும் நாம் யோசித்துப் பார்க்க வேண்டும்.

ஆகவே ஆங்கிலப் பள்ளிகளில் படித்து ஆங்கிலம் கற்பதில் எந்த தவறுமில்லை என்பது என் எண்ணம்.''

இவர் தலைமை ஆசிரியைதான். ஆனால் அடிப்படை அறிவே இல்லாதவர் என்பதை என்னால் அடித்துச் சொல்ல முடியும். உயர்நிலைப்பள்ளியில் கணிதம் கற்பித்தவன்- அதுவும் தமிழில். கல்லூரியில் பேராசிரியர், முதல்வர். கல்லூரியிலேயே ஆங்கிலத்தில் தேர்வெழுத முடியாமல் தமிழில் விடை எழுதும் பலரைப் பார்த்தவன் நான். அதனால் இவர் கூறுவது (சற்றுக் கடுமைதான்; மன்னிக்கவும்) அடிமுட்டாள்தனம் என்பதே என் கருத்து

புவியியல், வரலாறு போன்ற பாடங்களை தமிழில் படிப்பது அவ்வளவு சுலபமான ஒன்றல்ல. இதைத் தமிழில் படிக்க மாணவர்கள் நிச்சயம் திணறுவார்கள். அதனால் அந்தப்பாடங்களை ஆங்கிலத்தில் படிப்பதுதான் எளிதான ஒன்றாகும்.

நமது மன்னர்களின் வரலாற்றினையும் போர் வெற்றி, தோல்விகளையும், தமிழில் படிக்க மாணவர்கள் திணறுவார்கள் என்பது எவ்வளவு பெரிய. .. .?

வேதநாயகம் பிள்ளை கருத்துப்படி இவர்கள்தான் வெளிநாட்டுக்கு அனுப்பப் பட வேண்டியவர்கள்.

நந்தன் (திசம்பர்98) 'அரசுக்குச் சவால்விடும் ஆங்கிலப் பள்ளிகள்' எனும் தலைப்பில் சில கருத்துகளைத் தெரிவித்திருந்தது. படியுங்கள்:

"நீண்ட இடைவெளிக்குப்பின் தமிழகத்தில் மீண்டும் 'எங்கும் தமிழ் எதிலும் தமிழ்' என்ற குரல் ஓங்கி ஒலிக்கத் தொடங்கி இருக்கிறது. இந்த வெற்றிக்குக் காரணிகளாக, நிறுவனமயமாகிப்போன பெரிய அரசியல் கட்சிகளைச் சொல்லிவிட முடியவில்லை. நகரங்கள் தோறும், கிராமங்கள் தோறும்- தெருமுனைக் கூட்டங்கள் போட்டும், உண்ணாவிரதங்கள் இருந்தும் இந்த நெருப்பை அணையாமல் காத்துவந்த சிறு சிறு தமிழ் அமைப்புகளையே சொல்லவேண்டும்.

அண்மையில் தமிழக அரசு 'மழலையர் பள்ளி மற்றும் தொடக்கப் பள்ளிகளில் கட்டாயம் தமிழ் கற்பிக்கப்பட வேண்டும்' என்று உத்தரவிட்டுள்ளது. நெடுங்காலமாக தமிழ் அமைப்புகள் இக்கோரிக்கையை வலியுறுத்தி வந்திருக்கின்றன. என்றாலும், சான்றோர் பேரவை எடுத்த தமிழகப் பெருவிழாவில் 'தமிழுக்காக சாகும் வரை உண்ணாவிரதம்' என்ற ஒற்றைத் தீர்மானம், அரசின் கவனத்தைத் திருப்பியிருக்கிறது. அதன் பலன்தான்-

'தமிழை ஒரு பாடமாக சொல்லித்தரும் பள்ளிகளுக்கே அனுமதி தரப்படும்', 'அடுத்த கல்வியாண்டு முதல் பூகோளம், வரலாறு, கணிதம், சமூக

அறிவியல் ஆகிய பாடங்களை, மழலையர் பள்ளிகளில் தமிழ் வழியில்தான் கற்பிக்க வேண்டும்' போன்ற உத்தரவுகள்.

இந்தச் செயல்பாடு காங்கிரஸ் மற்றும் தி.மு.க. அரசிற்கு ஒன்றும் புதிதல்ல. ஏற்கனவே முயன்றதுதான்.

"நமது அரசாங்கம் தமிழ் மொழியில் ஆட்சி நடத்த வேண்டுமென்று ஏற்படும்போது, போதனா முறையும் தமிழில் இருக்க வேண்டும். அதிகாரம் வகிக்கக் கூடியவர்களுக்கு எல்லோருக்கும் பயிற்சி கிடைக்கும் படியான காலம் பால்ய காலமேயாகும். பள்ளிகளில் ஆங்கிலத்தில் பயின்று விட்டு நிர்வாகத்திற்கு வரும்போது ஆட்சிமொழி தமிழில் இருந்தால் வேலைமுடிக்க முடியாமல் திணறல் மிகப் பெரிதளவில் ஏற்படும். ஆகவே, தமிழ் ஆட்சி மொழியாகி நிர்வாகம் நடக்கவேண்டுமெனில் இன்றைக்கிருக்கக் கூடிய கல்வி போதனா முறையை மாற்றியமைக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்கிறேன்"

என்ற குரல் ஐம்பத்து ஆறிலேயே தமிழக சட்டமன்றத்தில் ஒலித்திருக்கிறது. பல்வேறு முயற்சிகளுக்குப் பின் நடைமுறைக்கும் வந்திருக்கிறது. ஆனால் காலப்போக்கில் நிலமை மாறி, இந்தியை எதிர்க்கிறேன் என்று ஆங்கிலத்தைத் தலைமேல் தூக்க, பிற்பாடு ஆங்கிலமே தலையாகப் போனது. பிறகு வந்த காலங்களில் ஆங்கிலத்தை அகற்ற வேண்டும் என்ற குரல் ஒலித்த போதெல்லாம் பொதுமக்கள் எதிர்க்கிறார்கள் என்ற காரணம் காட்டி திட்டத்தை கை கழுவினர். ஆனால் தற்போது நிலைமை வேறு.

உத்தரவு வந்த நவம்பர் 17 அன்றே நாளிதழ் ஒன்று மக்களிடம் கருத்துக்கணிப்பு நடத்தியிருக்கிறது.

ரிக்ஷா தொழிலாளி முதல், வங்கி ஊழியர் வரை எல்லோரும் தமிழ் வழிக் கல்வியை வரவேற்றிருக்கின்றனர். "கான்வென்ட்ல இங்கிலீஷ் மீடியம் படிக்கிற புள்ளைங்களுக்கு ரொம்ப அறிவு இருக்கிற மாதிரியும், கார்பரேஷன் பள்ளியில தமிழ் மீடியம் படிக்கிற புள்ளைங்களுக்கு அறிவு குறைவா இருக்கிற மாதிரியும் இளக்காரமா போயிருச்சு. அரசு இந்த உத்தரவு போட்டிருக்கிறது நல்லதா போச்சு. புள்ளைங்க மத்தியில இளக்காரம் இருக்காதுங்களே" - இது அந்த ரிக்ஷா தொழிலாளியின் மகிழ்ச்சிக் குரல்.

பொது மக்கள் மத்தியில் மட்டுமல்ல எந்த ஒரு அரசியல் கட்சியும் எதிர்க் கருத்து வைக்கவில்லை. இனி முழு முயற்சியுடன் செய்ல்படவேண்டியது அரசின் வேலை.

அதோடு முழுமையாகச் செய்யவேண்டும் என்பதே நம் எதிர்பார்ப்பு. தற்போது வெளியிட்டுள்ள ஆணை முழுமையானதா எனில், பழ. நெடுமாறன் அவர்களின் வார்த்தையில் சொல்ல வேண்டுமானால் 'அரைக்கிணறு தாண்டுகிற முயற்சி' யாகும்.

தமிழ் வழிக்கல்வி குறித்து அனைத்துத் தமிழ் அமைப்புகள் மற்றும் இயக்கங்களின் போராட்ட உயர் நிலைக்குழு சமீபத்தில் முதல்வரைச் சந்தித்தது. அமைப்புகள் கூடி அரசின் அறிவிப்பு குறித்து கலந்தாலோசித்து ஓர் அறிக்கையைத் தயார்செய்து முதல்வரிடம் தந்தது அக்குழு.

அண்மையில் வெளியான அரசின் அறிவிப்பு முழுமையானதாக அமையவில்லை எனினும் இந்த முன்முயற்சிக்காக மகிழ்ச்சி தெரிவித்தும்,

தமிழ்நாட்டிலுள்ள அனைத்துக் கல்விக்கூடங்களிலும் ஐந்தாம் வகுப்புவரை தமிழ் மட்டுமே பயிற்று மொழியாகவும் பாடமொழியாகவும் இருக்கவேண்டும். ஆறாம் வகுப்பு தொடங்கி அனைத்து நிலைகளிலும் ஆங்கிலம் ஒரு மொழிப் பாடமாக மட்டுமே கற்றிபிக்கப்படலாம் என்றும்,

உயர்நிலைக் கல்விக்குரிய தமிழ்வழி பாடநூல்கள் அணியமாக இருப்பதால் வரும் கல்வியாண்டிலேயே தமிழ்வழிக் கல்வியை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும் என்றும்,

தமிழ்வழியில் பயின்றோர்க்கே வேலை வாய்ப்பில் முன்னுரிமை அளிக்கவேண்டும் என்றும்,

இவ்வுயர்நிலைக்குழு வலியுறுத்தி இருக்கின்றது.

தமிழக அரசின் அறிக்கை மொழிக் கொள்கை என்ன என்பதைத் தெளிவு படுத்தி இருக்கவேண்டும். பயிற்று மொழி பற்றியும், பாட மொழி பற்றியும் தமிழக அரசின் முடிவுபற்றி தெளிவாக உணர்த்தல் வேண்டும்.

எல்லா நிலைகளிலும் பாடங்களை தமிழிலேயே பயிற்றுவிக்க வேண்டும் என்பதும் வேண்டுமானால் ஆறாம் வகுப்பு முதல் மொழிப் பாடமாக ஆங்கிலத்தை பயிற்றுவிக்கட்டும் என்பதும் தமிழ் அமைப்புகளின் தெளிவான வாதம்.

இதை தமிழகத்தில் உள்ள எல்லா பள்ளிகளிலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அமைப்புகள் கேட்டுக்கொள்கிறது.

ஆனால் தமிழக அரசு, மெட்ரிகுலேஷன் பள்ளிகளை கவனத்தில் கொள்ளாமலேயே விட்டிருக்கிறது.

அதோடு, ஆங்கிலம் மற்றும் அறிவியல் தவிர அனைத்து பாடங்களையும் தமிழில் சொல்லித்தரல் வேண்டும் என்று அரசு சொல்கிறது.

பொறியியலை தமிழ் வழியில் கொண்டுவர அனுமதித்த அரசு மழலைகளுக்கு அறிவியலைத் தமிழில் சொல்லிக்கொடுக்க முடியாது என்கிறது.''

படிப்படியாக வர வேண்டும் என்பதற்காகத்தான் மெட்ரிகுலேசன் பள்ளிகள் 13.1..99 அரசாணையில் இடம் பெற வில்லையே தவிர, அவர்களுடன் கொஞ்சிக்குலாவிக் கொண்டிருக்க வேண்டுமென்பதற்காக அல்ல. 19.11.99 ஆணையில் இதனைக் காணலாம்.

சில அமைச்சர்கள் அமைச்சரவையில் கூறினார்கள் என்பதை வைத்து முதல்வர் எடுத்த முடிவு. அறிவியலை அடுத்து எடுத்துக் கொள்ளலாம் என்பதே தவிர, அறிவியலை அறவே விட்டு விடலாம் என்பதற்காக அல்ல)

''மற்றுமொன்று. தமிழ்வழிப் பள்ளிகளுக்கு அரசு தருகின்ற சலுகைகள் போதுமானது அல்ல என்று அதன் நிறுவனர்கள் கூறுகிறார்கள். பதிவுக்கட்டணம் முழுமையாக நீக்கப்பட்டிருக்க வேண்டும், இடம் இலவசமாக அரசு தரவேண்டும், ஆசிரியர்களுக்குச் சம்பளத்தை அரசே தரவேண்டும் என்று அவர்களும் கோரிக்கை வைத்தின்றனர். திரைப்படச் சங்கத்தின் கடனை அடைக்க மனசு வருகிற தமிழக அரசிற்கு தமிழ்ப் பள்ளிகளுக்கு கருணை வைக்க நேரமில்லையா என்கின்றனர்''

(விளக்கம்: கல்வித்துறைக்கு ஏற்கெனவே தலா 5000 கோடி ஒதுக்கீடு. பல அரசினர் பள்ளிகட்கே இன்றும் போதுமான இடவசதி, கழிப்பறை வசதி, கட்டிட வசதி இல்லை. எனவே புதிதாக அரசு உதவிபெறும் பள்ளிகளுக்கு இசைவளிக்க முடியாத இக்கட்டான நிலை. இதைப் புரிந்து கொள்ளாமலேயே வைக்கப்படுகின்ற கோரிக்கை இது. அரசு இலவசமாக இடம் தரவேண்டுமாம்; ஆசிரியர்களுக்கான சம்பளத்தை அரசே தர வேண்டுமாம். அப்படித் தருவதாக இருந்தால் அரசினர் பள்ளிகள் இன்னும் மேம்பட்டிருக்குமே/ அரசுப்பள்ளிகளுக்கே இடமும் தந்து விடலாமே/ தமிழ்ப் பள்ளிகள் நடத்துபவர்கள் சிலவற்றைச் சிந்தையில் கொள்ள வேண்டும்.)

''பணந்தின்னி மிருகங்களாக அலையும் ஆங்கில வழிப் பள்ளிகளைக் கட்டுப்படுத்த இதுவரை எந்த ஒரு உருப்படியான காரியமும் இல்லை.

அரசின் அனுமதி பெறாத மழலையர் ஆங்கிலப் பள்ளிகளே சுமார் இருபதாயிரம் இருக்கும் என்று அரசு கணக்கு சொல்கிறது. அனுமதி பெற்றவை வெறும் இரண்டாயிரமே.

அடுத்த கல்வியாண்டிலும் இவைகளின் ஆயுள் தொடருமா அல்லது முடியுமா என்பது அரசின் உறுதியில்தான் இருக்கிறது.

சந்திக்கச் சென்ற உயர்நிலைக் குழுவிடம் முதல்வர் ''போராட்டக் குழு பாராட்ட வரவில்லை'' என்று கூறினாராம்.

எல்லா நிலைகளிலும் தமிழ்தான் கல்வி மொழியாக இருக்கும் என்று அரசின் நிலைப்பாடு முழுமையானதாக இருக்கட்டும். அன்றைக்கு தமிழகமே பாராட்டும்.''

'செந்தமிழ்ச் செல்வி'யில் அருமையான ஓர் ஆசிரியவுரை: கல்வி வாணிகர்களை அடையாளம் கண்டு ஒதுக்கிட, இவ்விதழின் செய்திகள் நமக்குத் துணையாக இருக்கும்.

''வெல்ல தமிழ் இனி வாழும்''

'எங்கும் தமிழ் எதிலும் தமிழ் என்று ஏட்டளவில் இருந்த முழக்கத்திற்கு மெல்ல மெல்ல தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அவர்களும் பேராசிரியர். க. அன்பழகனாரும், முனைவர் தமிழ்க்குடிமகனாரும் ஒவ்வொரு முயற்சியாலும் படிப்படியாக உயிரூட்டி வருவது தமிழகத்தில் தமிழால் வாழும் சிலருக்கு எரிச்சலூட்டுவதாக உள்ளது. ''பெயர்ப் பலகை, அலுவலகங்கள், ஆலயங்கள்... தற்போதைய இலக்கு ஆரம்பப் பள்ளிகள்'' என்று குமுறத் தொடங்கியுள்ளனர்.

எந்தவித முயற்சியுமில்லாமல் பேருந்துகளில் தத்தம் மொழிப் பெயர்கள், எழுத்துகள், அரசு நடவடிக்கை அனைத்திலும் தத்தம் மொழிகள், ஆரம்பப் பள்ளிகள் முதல் பல்கலைக் கழகங்கள் வரை படிப்பில் மட்டுமல்ல தொடர்புக்குரிய கடிதங்களில்கூட தத்தம் மொழிகளைப் பயன்படுத்தி வரும் கேரள, கர்நாடக, ஆந்திரா அரசுகளின் செயல்முறைகள் இவர்கட்கு ஏற்புடையதாக உள்ளன. பிழைக்கப்போன இடங்களில் வாயை மூடிக் கொண்டு 'அச்சா, அச்சா' என்று வாய்க்கு வாய் உதிர்க்கும் பச்சோந்திகட்குத் தமிழகத்தில் எடுக்கப்பெறும் ஒவ்வொரு செயலும் இவர்கட்கு நெஞ்சக் குமுறலை ஏற்படுத்துகின்றன.

இவர்கள் குமுறலுக்குக் காரணம் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் தமிழே பயிலாது பட்டம் பெறும் வாய்ப்பு இதுவரை தமிழகத்தில் இருந்த

நிலையை மாற்ற அரசு எடுத்துள்ள முயற்சியே. 'அடுத்த கல்வி ஆண்டிலிருந்து தமிழ்நாட்டிலுள்ள மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகளில் (8ஆம் வகுப்பு வரைகட்டாயமாக தமிழை ஒரு பாடமாகவும், புவியியல், வரலாறு, கணிதம்; சமூக அறிவியல் போன்ற பாடங்களைத் தமிழ் வழியிலும் கற்பிக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் செய்தியாளர்களிடையே பேசும்போது அறிவித்திருக்கிறார்.

நல்ல வேளை சட்டமாகவோ அரசு ஆணையோ வெளியிடவில்லை. வெளியிட்டிருந்தால் இதற்குள் புல்லுருவிகள் நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை கேட்டிருப்பார்கள். நீதியே வழுவாத நீதியரசர்களும் உடனே தடையாணையை வழங்கியிருப்பார்கள். தடையாணையைத் தலையணையாக வைத்துக் கொண்டு புல்லுருவிகள் தூங்கப் போயிருப்பார்கள். இவ்வாறு நிம்மதியாகத் தூங்கவிடாமல் முதல்வர் அவர்கள் வெறும் அறிவிப்பு மட்டுமே செய்துள்ளார்கள்.

இப்போது என்ன நிலை. முதல்வரின் அறிவிப்பைப் பெரும்பாலான அரசியல் கட்சிகளும் கல்வியாளர்களும் வரவேற்றிருக்கிறார்களாம். மகிழ்ச்சி. பிறகு! "தனியார் பள்ளி நிர்வாகங்கள் இதைக் கடுமையாக எதிர்க்கின்றன"வாம். ஏன் எதிர்க்கிறார்கள். படிக்கும் மாணவர்களின் எதிர்காலம் சீரழிந்து விடும் என்று எதிர்க்கிறார்களா? அப்படித்தான் அவர்கள் கூறுகிறார்கள். ஆனால் உண்மை நிலை என்ன? ஆங்கிலத்தை வணிகப் பொருளாக்கி அதன்வழி பெரும்பொருள் ஈட்டி வரும் அவர்கள் தங்கள் பிழைப்பில் மண் விழுந்து விடுமோ என்று அஞ்சி எதிர்க்கிறார்கள்.

அரசும், அரசு சார்ந்ததும், தனியாரும் நடத்தும் 38,000 பள்ளிகள் தமிழைப் புறக்கணிக்கவில்லை. அரசு சாராத மழலையர் பள்ளிகள் 20,000மும் மெட்ரிகுலேசன் பள்ளிகள் 3000மும் தமிழைப் புறக்கணிக்கின்றன. இவை ஆங்கிலத்தை வணிகப் பொருளாக்கும் மறநிலை வணிக நிலையங்கள். இவர்கள்தான் 'கடுமையாக எதிர்க்கின்றார்கள்' இவற்றிலுள்ள ஆசிரியர்கள் மற்றும் கல்வியாளர்கள் எதிர்க்கவில்லை. 'பள்ளி நிர்வாகங்கள்'தான் கடுமையாக எதிர்க்கின்றன. இதில் இவர்களுக்கு என்ன அக்கறை. உலகில் யாருக்கும் இல்லாத அக்கறை? பிழைப்பில் மண்விழுந்தால் எதிர்க்கமாட்டார்களா என்ன?

கல்வி மாணவர்களுக்கா, தனியார் நிர்வாகங்களுக்கா? மாணவர்களுக்கு என்றால் அவர்களுக்கு அளிக்க வேண்டிய கல்வி, கல்விமுறை பற்றி அக்கறை காட்ட வேண்டியது அரசாங்கமா? அல்லது தனியார் நிர்வாகங்களா? அரசுதானே நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உப்பும் பருப்பும் விற்கும் கடைகளில் கூட அயோடின் கலந்த உப்பைத்தான் விற்க வேண்டும். கலப்படமில்லாத பருப்பைத் தான் விற்க வேண்டும் என்று அரசுதானே வற்புறுத்துகிறது. நாங்கள் வணிகர்கள். எதை வேண்டுமானாலும் விற்போம். மக்கள் வாங்கிச் செல்லும் போது அரசு ஏன் தலையிட வேண்டுமென்றோ அல்லது அரசு தலையிடக்கூடாது என்றோ வணிகர்கள் கூறமுடியுமா. மக்கள் உடல் நலத்தைக் கருத்தில் கொண்டு அரசுதான் முடிவெடுக்கிறது. அதுபோலவே மக்கள் உள்ள நலத்தைக் கருத்தில் கொண்டு அரசுதான் கல்வித் துறையில் முடிவெடுக்க வேண்டுமே தவிர தனியார் நிர்வாகங்கள் அல்ல.

1971ல் அன்றைய கலைஞர் அரசு ஆரம்பக் கல்வி முதல் பட்டப் படிப்பு வரை கட்டாயமாகத் தமிழ் கற்றுத் தர வேண்டும் என்று ஆணை பிறப்பித்தது. ஆனால் செயல்படுத்தாமல் விடப்பட்டது. அதுபோலவே இம்முறையும் நடக்குமென்று கல்வி வாணிகர்கள் விரும்புகிறார்கள். எதிர்பார்க்கிறார்கள்.

இதற்குத் தமிழ்வழிக் கல்வி வேண்டுமென்று போராடுபவர்களே மறைமுகமாகத் துணை போவது போல் தோன்றுகிறது. அரசு சில நடவடிக்கைகளைச் சட்டவழியில் உடனடியாகச் செயல்படுத்துவது கடினம். அப்படிச் சட்டங்கள் வந்தால் தடையாணைகள் பெற்றுத் தடை போட்டு விடுவார்கள்.

'தமிழ்வழிக் கல்வியைப் படிப்படியாக அறிமுகப்படுத்த தமிழக அரசு இப்படி செய்திருக்கலாம்' என்று முன்னாள் துணைவேந்தர், முனைவர் வா.செ. குழந்தைசாமி அவர்கள் கூற்றையும் கருதிப் பார்க்க வேண்டும்.

இப்போதைய அறிவிப்பை எதிர்த்து எடுக்கும் நடவடிக்கைகள் நிழலோடு செய்யும் போர் போலவேயாகும். நிழல் படிந்துள்ள சுவர் மீது ஓங்கிக் குத்தினால் குத்துபவர் கைதான் வலிக்கும். ஒளிக்குப் பின் இருந்து நிழலாட்டம் நடத்துபவர்க்கு எந்தவிதத் தீங்கும் ஏற்படாது.

1971இல் மாணவர்களைத் தூண்டிவிட்டுப் போராட்டத்தை நடத்தி அரசு ஆணை செயல்படுவதைத் தளர்த்திவிட்ட பெருமக்கள் இப்போது அவர்களை நம்பிப் பயனில்லை என்று பெற்றோர்களை மறைமுகமாகத் தூண்டிவிடுகிறார்கள்.

'தமிழக அரசு அறிவிப்பின் வெற்றி தோல்வி பள்ளிகளில் படிக்கும் லட்சக்கணக்கான மாணவர்களின் பெற்றோர்கள் கையில்தான் இருக்கிறது. பெற்றோர்களில் பெரும்பாலானவர்கள் ஆங்கிலவழிக் கல்வியை

விரும்புகிறார்கள்' என்று பெற்றோர்களைத் தூண்டிவிட முயற்சி நடைபெறுகிறது.

பெற்றோர்கள் போராட்டக் களத்தில் இறங்கினால் 'தனியார் நிர்வாகங்கள்' அவர்கள் பின்னால் நின்று, மறைந்திருந்து போராட்டம் வெற்றி பெறப் பாடுபடுவார்கள். இப்படிப் பெற்றோர் போராட்டக் களத்தில் தாமாகக் குதிக்கவில்லையென்றால் 'என்ன நடக்கும்' தமிழக அரசு தமிழ் வழிக் கல்வி அறிவிப்பைத் திரும்பப் பெறாவிட்டால் தனியார் ஆங்கில வழிப் பள்ளிகளை மூடவும் தயங்கமாட்டார்களாம்! தமக்கு ஒரு கண் (வணிக இலாபம்) போனாலும் போகட்டும். எதிராளிகளின் (மாணவர்களின்) இரண்டு கண்களும் (எண்ணும் எழுத்துமாகிய இரு கல்விக் கண்கள்) போகட்டும் என்கிறார்கள். இவர்களுக்குத்தான் மாணவர்களின் எதிர்காலத்தில் எவ்வளவு அக்கறை?

இவை அனைத்துக்கும் மேலாக ஒரு கண்டுபிடிப்பு. தி.மு.க. தலைமையின் வேர்களைத் தேடும் முயற்சியே தமிழ்வழிக் கல்வியாம். ஏற்றுக்கொள்வோம். அக்கட்சியல்லாத மற்றக் கட்சியின் வேர்களெல்லாம் எங்கே படர்ந்திருக்கின்றன. மற்ற மாநிலங்களிலா? அல்லது ஆங்கிலம் பேசப் பெறும் மற்ற நாடுகளிலா? ஒருவேளை அவை வேர்களே இல்லாத 'விருட்சங்களோ' என்னவோ. 'இன்றைய இந்தியா'வுக்குத்தான் வெளிச்சம். இவர்களை வெல்ல, தமிழ் இனி வாழும்.''

இவரைப் பற்றி . . .

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்

மேனாள் சட்டப் பேரவைத் தலைவர்
மேனாள் தமிழ் ஆட்சிமொழி - தமிழ்ப் பண்பாட்டுத்துறை
மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர்

27.6.1939ஆம் நாள் சாத்தனூரில் பிறந்தார். (இன்றைய சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டம்).

கல்வி

தேவகோட்டை தேபிரிந்தோ உயர்நிலைப் பள்ளிப் படிப்பிற்குப் பின் திருச்சி, தூயவளனார் கல்லூரியில், அறி.இ.(பி.எசி.,) கணக்குப்பட்டமும், சென்னை பச்சையப்பன் கல்லூரியில்,தமிழ் முதுகலைப் பட்டமும் பெற்றவர்.

பணி

1963-1964ஆம் ஆண்டில் திருப்பாதிரிப் புலியூர் வளனார் உயர்நிலைப்பள்ளிக் கணக்கு ஆசிரியராகவும், 'தென்மொழி' துணையாசிரியராகவும் பணியாற்றியவர். அடுத்த இரண்டு ஆண்டுகள் பறம்புக்குடி ஆ.வை. உயர்நிலைப்பள்ளியில் கணக்கு ஆசிரியராகவும், பின் மூன்று ஆண்டுகள் நேரடி அரசியல் வாழ்க்கையிலும் இருந்தவர். 1969 முதல் மதுரை, யாதவர் கல்லூரியில் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றியவர். 1979 முதல் 1988 திசம்பர் வரை கல்லூரி முதல்வராகப் பணியாற்றியவர்.

பிற பணிகள்

இளமையில் இருந்தே முற்போக்கு உணர்வும், துடிப்பும் செயலாற்றும் திறமையும் மிக்கவர். 1963இல் எம்.ஏ. பட்டம் பெற்றும் தமிழ்த் தொண்டும் பொதுத் தொண்டும் ஆற்றும் வகையில் நிலையான வேலையை நாடாமல் இயங்கி வந்தவர். சிறந்த தமிழ்த் தொண்டராக இருந்த இவர் சிறந்த அமைப்பாற்றலும் (ORGANISING CAPACITY) -உடையவர். 1969இல் மதுரையில் கல்லூரியில் வேலை பார்த்துக் கொண்டே பறம்புக்குடியில் உலகத் தமிழ்க் கழக மாநாட்டை நடத்திப் பெரும் பாராட்டுக்குரியவரானார்.

ஐயாயிரம் உருபாய் செலவில் 63 பேச்சாளர்களை வரவழைத்து மிகப் பெரும் தமிழ் விழாவை நடத்திக் காட்டிய ஆற்றல் உடையவர்.

தனித்தமிழ் இயக்கத்தைச் சார்ந்த இவர் இன்றளவும் தன்னுடைய இலக்கியப் படைப்புகளிலும், மேடைப் பேச்சிலும், தனித்தமிழ் நடையைக் கையாளுவது இவரின் தனிச்சிறப்பு. இச்சிறப்பால், இவர் பாவாணரின் பாராட்டுதலைப் பெற்றார். 1957 முதல் இத்தனித் தமிழ் இயக்கத்திலிருந்து தமிழுக்கு அரும்பணியாற்றி வருகிறார்.

அறிஞர் தேவநேயப் பாவாணரின் அன்பராக, அவரது உலகத் தமிழ்க் கழக முகவை மாவட்ட அமைப்பாளராக இருந்து பணியாற்றியவர். பின்னர் தமிழகத் 'தமிழ் இயக்கத்தின்' தலைவராக இருந்து சிறப்பித்தவர்.

தந்தை பெரியாரின் பற்றாளர். அவர் கொள்கைகளின் வழி நின்று தமிழுக்கும்,தமிழ்ச் சமுதாயத்திற்கும் பணியாற்றி வருபவர். மாநிலப் பகுத்தறிவு எழுத்தாளர் மன்றத் தலைவராக இருந்தவர். உறுதியான கொள்கைப் பிடிப்பு, தரமான இலக்கியப் புலமை ஆகியவற்றால் அனைவரது அன்புக்கும் ஆளானவர்.

நாடகத்துறையில் பெரிதும் ஈடுபாடு உடையவர். 'முதல் பரிசு,' 'வாழவிடு', 'போராட்டம்' எனும் சமூக நாடகங்களை எழுதி இயக்கி நடித்தவர். சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பச்சையப்பனாக நடித்து திரு. சிதம்பரம் செயராமன் இவருக்குப் பின்னணி பாடும் வாய்ப்பைப் பெற்றவர். 'மனமாற்றம்', 'மணிமுடி' என்ற வரலாற்று நாடகங்களையும் எழுதி இயக்கி நடித்தவர்.

1977, 1981, 1985 மற்றும் 1987 இல் ஆறாவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொள்ள, 1994இல் ஐக்கிய முசுலீம் தமிழ் மாநாட்டில் கலந்துகொள்ள 1997, 2000, 2002 ஆண்டுகளில் தமிழ் இணைய மாநாட்டில் கலந்துகொள்ள, பாவாணர் நூல்கள் வெளியீட்டு விழாவிற்காக எனப் பலமுறை மலேசியா, சிங்கப்பூர் நாடுகட்கும், 1985, 1988, 1990 ஆகிய மும்முறை அந்தமான் நிகோபார் தீவுகளுக்கும் 1982இல் 'பாயும் புலி' பண்டாரக வன்னியன் சிலை திறப்பு விழாவுக்காக இலங்கைக்கும் இலக்கியச் சுற்றுப்பயணம் சென்றார்.

1989 செப்டம்பரில் காமன்வெல்த் பாராளுமன்றச் சங்க மாநாட்டுக்காகப் பேரவைத் தலைவர் எனும் முறையிலும், தமிழ்நாடு கிளையின் தலைவர் எனும் முறையிலும் மேற்கிந்தியத் தீவுகள் (பார்படோஸ்), இலண்டன், பாரிசு, நியூயார்க், வாசிங்டன், சிக்காகோ, துபாய் ஆகிய நாடுகட்கும் நகரங்கட்கும் சென்று வந்தார்.

1993இல் செர்மன் நாட்டின் பெர்லின்,இத்தாலி நாட்டின் உரோமபுரி, பாரிசு ஆகிய நகரங்களில் உரையாற்றி மீண்டார். 2002இல் சீனமொழி ஆய்வுக்காகச் சீனநாட்டுக்குச் சென்று வந்தார்.

இனிய குரலில் மெல்லிசை பாடவும் வல்லவர். எல்லாவற்றுக்கும் மேலாக மிகச் சிறந்த பேச்சாளர். இன்று தமிழகத்தில் பேச்சுலகில் அனைவருக்கும் அறிமுகமானவர். பட்டிமன்றங்களிலும், வழக்காடு மன்றங்களிலும் அரசியல் மேடைகளிலும் ஏராளமாகப் பங்கு கொண்டு, ஆணித்தரமாகத் தருக்கமிடக்கூடிய இவர் காட்சிக்கு எளியவர். பழகுவதற்கு இனியவர், இவரது காலத்தில் இவரது கல்லூரியில் காந்தியம், மார்க்சியம், பகுத்தறிவுச் சிந்தனைகள் ஆகியவற்றில் மாலைநேர வகுப்புகள் நடைபெறுவது இவரது கொள்கை உணர்வுகளைக் காட்டுவது. மதுரைக்காமராசர் பல்கலைக்கழகத்தின் ஆட்சிப் பேரவை (SENATE), கல்விப் பேரவை (ACADEMIC COUNCIL) - ஆகியவற்றில் சிறப்பான பங்காற்றும் உறுப்பினராக இருந்தவர்.

சமுதாயப் பணிகள்

'பரிசுச்சீட்டு', 'திரைப்படக் கீழ்மை', 'வரதட்சணை' முதலியவற்றால் விளையும் சமுதாயத் தீங்குகளைக் களையும் நோக்கில் சமுதாயச் சீர்திருத்தப் பேரவையின் பொதுச் செயலாளராகவும் இருந்தவர். மதுரை நுகர்வோர் உரிமைப் பாதுகாப்புக் குழுவின் தலைவராக இருந்து பணியாற்றியவர்.

இதழ்ப்பணி

துணை ஆசிரியர் 'தென்மொழி' 1963 - 1966

ஆசிரியர் 'அறிவு' 1970 - 1971, 'கைகாட்டி' 1971-1974

அரசியல் பணி

1989 - தமிழகச் சட்டமன்றத் தேர்தலில் சிவகங்கை மாவட்டம் இளையான்குடித் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

1989 பிப்ரவரி திங்கள் 8ஆம் நாள் முதல் 1991 ஆம் ஆண்டு வரை தமிழகச் சட்டமன்றப் பேரவையின் தலைவராகச் செயலாற்றி வந்தவர்.

1996 முதல் 2001 வரை இளையான்குடித் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக மீண்டும் வென்று தமிழ் வளர்ச்சித் துறை, அற நிலையத்துறை அமைச்சராகப் பணியாற்றியவர்.

குடும்பம்

இவரது துணைவியார் வெற்றிச் செல்வி. சமுதாயப் பணிகளில் ஈடுபாடுள்ள குடும்பத் தலைவி.

மூத்த மகன் மெய்ம்மொழி வரலாற்றில் எம்.ஏ., எம்.பில். பட்டங்கள் பெற்றவர். இவர் தமிழில் இ.ஆ.ப. (I.A.S.) தேர்வெழுதி இந்தியப் படைக்கலத்துறை (I.O.F.S.) க்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, ஆவடி தின் ஊர்தித் தொழிற்சாலையில் இணைப் பொதுமேலாளராகப் பணிபுரிகிறார். மகள் கோப்பெருந்தேவி தமிழிலக்கியத்தில் எம்.ஏ., எம்.பில். பயின்றவர். திருமணமானவர். இளையமகன் பாரி வரலாற்று முதுகலை பயின்று 'இணையம்' தொடர்பான தொழில் செய்து வருகிறார்.

இவர் தமிழக அரசின் சிறந்த விருதான 'திருவள்ளுவர்' விருதினைப் பெற்றுள்ளார்.

மறைவு

இவர் 21.9.2004 அன்று இயற்கை எய்தினார்.



2

தமிழ் வழிக் கல்வி

முனைவர் மு. தமிழ்க்குடிமகன்